# தமிழரசு

ஜனவரி - மார்ச் ௨௦௦௩

©

P.S.
226200


சிறப்பு ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
1 3 மே 2003
எழும்பூர், சென்னை 600 008

# அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா

**அண்ணா பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா, 14.12.2002 அன்று சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் வெள்ளி விழாவினையும் தமிழகப் பொறியியல் கல்லூரிகளுடன் அறிவு சார் இணைத்தலைத் தொடங்கி வைத்தார். மேதகு ஆளுநர் அவர்கள் அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரியின் நிறுவனர், டாக்டர் அழகப்பச் செட்டியாரின் திருவுருவச்சிலையைத் திறந்துவைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொலை மருத்துவ (டெலிமெடிசின்) வசதியைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு...**

"மறக்க முடியாத இந்த நிகழ்ச்சியில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதிலும் இன்று இங்கு கூடியிருக்கும் தலைசிறந்த பெருமக்கள் மத்தியில் உரையாற்றுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவின் மிகச் சிறந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான அண்ணா பல்கலைக்கழகம் ஒரு புகழ் மிக்க பாரம்பரியத்தையும் நீண்ட வரலாற்றையும் பெற்று விளங்குகிறது.

கடந்த காலத்தில் 1794ஆம் ஆண்டில் ஒரு சிறிய நில அளவை பள்ளிக்கூடமாக துவக்கப்பட்ட இப்பள்ளியுடன் கிண்டி பொறியியல் கல்லூரியும், குரோம்பேட்டையில் இருந்த சென்னை தொழில்நுட்ப நிலையமும், கிண்டி – அழகப்பா பொறியியல் கல்லூரி மற்றும் திட்டமிடல் மற்றும் கட்டடவியல் கல்லூரி ஆகிய நான்கு நிறுவனங்கள் இத்துடன் இணைக்கப்பட்டு 1978ஆம் ஆண்டில் இது ஒரு ஒருங்கிணைந்த தனிப் பல்கலைக்கழகமாக உருமாறியுள்ளது.

இந்த உருமாற்றம் நமது உன்னத தலைவரான புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையிலான அப்போதைய அரசால் கொண்டுவரப்பட்டது.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உயரிய தொலைநோக்கு கொண்ட இலட்சியப் பார்வையால்தான் இன்று தமிழ்நாட்டு தொழில்நுட்ப






226200

கல்வியின் விதியை நிர்ணயிப்பதில், அண்ணா பல்கலைக்கழகம் ஓர் உயரிய பரந்த அளவில் பங்காற்றி வருகிறது.

**சர்வதேசப் பல்கலைக்கழகமாக உருவாக்கவேண்டும்**

அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆளுகை தமிழகத்திலுள்ள அனைத்து 240 பொறியியல் கல்லூரிகளிலும் இன்று கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவாகிய அண்ணா பல்கலைக்கழகத்தை சர்வதேசப் புகழ் பெற்ற தொழில்நுட்பக் கல்வி மையமாக உருவாக்க வேண்டும் என்பதும், நாட்டில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலேயே, மிகச் சிறந்த ஒன்றாக விளங்க வேண்டுமென்பதும் இன்று நிறைவேறியுள்ளது.

அகில உலகிலும், மிகப் பெரியதான ஒரு தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக விளங்கும் ஒரு பொறாமைப்படத்தக்க தனிச் சிறப்பை அண்ணா பல்கலைக்கழகம் பெற்றுள்ள நிலையில் அதனுடைய வெள்ளி விழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தொழில்நுட்பக் கல்வியைப் பயிலும், நமது மாணவர்களுக்கு, அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில், அவர்களுக்கு இன்றைய நவீன தொழில்நுட்பத்தை வழங்க வேண்டும் என்பதுதான் எனது அரசின் முக்கிய நோக்கமாகும்.

எப்போதும் விரிவடைந்து வளர்ந்து கொண்டே இருக்கும் உலகின் உயர் தொழில்நுட்ப தொழிலகங்களின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் அவர்களை மேன்மைப்படுத்த இது உதவி செய்யும். சமூகத்துக்கும் பயனளிக்கும்.



தேவை அடிப்படையிலான பணிகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமூக உறுப்பினர்களுக்கு தேவைப்படுபவைகளை, மிகக் குறைந்த செலவில் அவர்களால் வழங்க முடியும்.

இன்றைய தமிழகத்தின் தொழில்நுட்பக் கல்வி அமைப்பின் முக்கிய கவனம் இதையே அடிப்படையாக கொண்டிருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டே அண்ணா பல்கலைக்கழகம் தனது ஆளுகைக்குள் கொண்டுவந்துள்ள – இணைக்கப்பட்ட ஒவ்வொரு 240 பொறியியல் கல்லூரிகளையும், உயர்ந்த உலக தரத்துக்கு எடுத்து செல்லும் ஒரு கடமையை தானாகவே மேற்கொண்டுள்ளது.

விரைவாகச் செயல்படுவதுதான் அண்ணா பல்கலைக்கழகத்தின் தாரக மந்திரமாக இருக்கிறது. போட்டிகள் நிறைந்த இத்துறையில், புகழ் ஏணியின் உச்சிக்கு செல்வதற்கு புதுமையும், கண்டுபிடிப்பும் அதன் அடையாளச் சின்னங்களாக இருக்க வேண்டும்.

இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக, கல்வியாளர்கள், அறிவியலறிஞர்கள், தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் ஆகிய பல்வேறுபட்ட சிந்தனையாளர், ஒன்றிணைந்த உயரிய பங்களிப்பும் உறுதியான ஒற்றுமையும் தேவைப்படுகிறது.

நாட்டை உருவாக்கும் பணியில் தொழில்நுட்ப அறிஞர்களின் சுறுசுறுப்பான பங்காற்றலுக்கு நான் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறேன். சமூக பயன்பாட்டிற்கான பணிக்கு அவர்கள் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்க முடியும்.

இந்த போற்றுதலுக்குரிய நோக்கில்தான், அண்ணா பல்கலைக்கழகத்தை ஓர் இணைப்பு வடிவமைப்பிலான, பல்கலைக்கழகமாக உருமாற்றி இருக்கிறோம். 240 பொறியியல் கல்லூரிகள் இதனுடைய அங்கமாகக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் விரைவாக வளரும் உலகத் தேவைகளின் சவால்களை எதிர்கொள்ள முடியும்.

# மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு

9.12.2002, 10.12.2002 மற்றும் 11.12.2002




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
மார்கழி – தை
ஜனவரி 2003

மலர் : 34 இதழ் : 13 & 14

விலை ரூ.10


இந்த இதழில்


- அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா ........ 2
- தரிசு நில மேம்பாட்டு ஆணையம் ........ 8
- மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் மன்றம் ........ 13
- இந்தியாவிலே முதன்முதலாக பெண் கைதிகளுக்கு கல்வித்திட்டம் ........ 14
- சுற்றுலாத்துறை – அமைச்சர் ஆய்வு ........ 16
- கட்டடத் தொழிலாளர்களுக்கு நிதியுதவி ........ 17
- ஏழைகளின் கண்ணீரை துடைப்பதே எனது இலட்சியம் ........ 18
- இராமநாதபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு ........ 23
- தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டம் ........ 25
- புல்லாங்குழல்களே பாடுங்கள் (கவிதை) ........ 37
- தாய்க்கு நன்றி கூறும் தலைசிறந்த திருநாள் ........ 38
- அன்னை தெரசா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ........ 40
- பெரம்பலூர் மாவட்டத்தில் ஊனமுற்றோர் சிறப்பு மறுவாழ்வுத்திட்டங்கள் ........ 47
- மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு ........ 49
- பூமி பாரத்தைச் சுமக்கும் காளை மாடு (கதை) ........ 66
- நிலாப்பள்ளி ........ 71
- காவல்துறை அதிகாரிகள் மாநாடு ........ 74
- மழையால் பாதிக்கப்பட்ட சென்னை சாலைகள் சீர் செய்யப்பட்டன ........ 79


*முதல் பக்க அட்டையில்...*

சென்னைக்கு 14.12.02 அன்று வருகை புரிந்த மேதகு குடியரசுத்தலைவர் அவர்களை சென்னை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆகியோர் வரவேற்கிறார்கள்.

*இரண்டாம் பக்க அட்டையில்...*

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் – காவல்துறை அதிகாரிகள் மாநாடு.

*கடைசிப் பக்க அட்டையில்...*

அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா






அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்த பற்பல பணிகளின் வல்லுநர்கள் அடங்கிய குழு தமிழக அரசுடன் இணைந்து பணியாற்றி தமிழ்நாட்டை தொழில்நுட்ப கல்வி உலகில் சிறப்புடையதாகவும் புகழ்மிக்கதாகவும் கொண்டுவர வேண்டும்.

## குடியரசுத் தலைவர் முன்னிலையில்

குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு புகழ் பெற்ற தொழில்நுட்பப் பேரறிஞர் மற்றும் ஓர் உயரிய இலட்சியப் பார்வை கொண்டவர். அத்தகைய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் முன்னிலையில், அண்ணா பல்கலைக் கழகத்தில் தொலை மருத்துவத் திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகமும் சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையும் இணைந்து தொழில்நுட்பக் கருவிகள் வாயிலாக தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமப்புற மக்களுக்கும், மருத்துவ உள்கட்டமைப்பும், மருத்துவ ஆலோசனையும் வழங்க ஓர் ஆரம்ப கட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது திருப்தி அளிப்பதாக உள்ளது –

தொலை மருத்துவம் என்பது உடல் நலம் பேணுவதை அனைவருக்கும் வழங்குவது என்பதை குறிக்கிறது. இதில் மருத்துவர்களின், தொலைக் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதன் வழியாக, எங்கோ தொலைவில் இருக்கிற நோயாளிகளை உடல் பரிசோதனை செய்கிறார்கள்.

இது ஒரு அகன்ற வழியிலான அனைத்து வகை சேவைகளையும் அதாவது ரேடியாலஜி மனநல சேவைகள் மற்றும் பல வகையிலான மருத்துவ கிளைகளான நரம்பு நோயியல், இதய மருத்துவயியல், மகப்பேறு மருத்துவம், தோல் நோயியல் போன்றவற்றை நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஆகிய இரண்டிலும் இருக்கிற வசதியற்ற தனி நபர்களுக்கும், வசதிகளற்ற சமூக இன மக்களுக்கும் வசதிகளை கொண்டு சேர்க்கிறது.

தொலை மருத்துவம், கிராமப்புறத்தில் உள்ள உடல்நல மருத்துவர்களை அங்கேயே இருத்தி வைத்தலை, மிகப் பெருமளவில் ஊக்குவிக்கிறது. தேவையான பயிற்சியை மேலும் பெற முடியும். மேலும் பிற துணை மருத்துவர்களின் கூட்டு முயற்சியையும் இத்தகைய தொலை மருத்துவ ஊற்றின் மூலம் பெற முடியும்.

## இரண்டாவது கருத்துக்கு வசதி

தொலை மருத்துவமானது, இரண்டாவது கருத்துடன் ஒரு முடிவுக்கு வர நல்வாய்ப்பினை



ஏற்படுத்திக் கொடுக்கிறது என்பதை நிரூபித்துள்ளது. மேலும் தொலை மருத்துவம் பல நேரங்களில், கிராமப்புற மருத்துவர்களை பல முக்கிய நெருக்கடியான நேரத்தில் முடிவு எடுக்கவும் – உயிர் காக்கும் மருத்துவ முடிவுகளை உரிய நேரத்தில் எடுக்கவும் இது உதவி செய்கிறது என்பதையும் நான் தெரிந்து கொண்டேன்.

தொலை மருத்துவ அமைப்பு இந்த வகையில் மாநில, பூகோள எல்லைகளைக் கடந்து மருத்துவ அறிவையும், உடல்நல மருத்துவ தகவலையும், பரிமாறிக் கொள்ளும் ஒரு தேசிய மையத்தையும் வழங்குகிறது. இதன் மூலம் தொலை மருத்துவம் எல்லா வகை மருத்துவப் பிரிவுடனும் உடல நலன் பேணும் மைய மருத்துவமனையும், தொலைதூர பிரதேசங்களையும் இணைத்துச் செயல்படுகிறது.

## கிராமத்தவர்களுக்கு அரியவாய்ப்பு

மருத்துவ உலகில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், நாடு முழுவதிலுமுள்ள இலட்சக்கணக்கானமக்களுக்குதேவையான சரியான உடல்நல மருத்துவ சேவைகள் யாவும் பூகோள ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தனித்துவிடப் பட்ட மக்களுக்கு இவ்வசதிகள் மறுக்கப்படுகின்றன என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். போதுமான சரியான பரிசோதனையும், கவனமும் கிடைக்காததால் துன்பப்படும் அனைத்து தேவையான மனிதர்களுக்கும், தொலை மருத்துவம் ஓர் உன்னதமான சக்தி மிகுந்த மருத்துவ வசதியை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

## பெண்களுக்கு வரப்பிரசாதம்

அதற்கும் மேலாக தொலை மருத்துவம் கிராமப்புற பெண்களுக்கு போதுமான தகவலை பெருமளவில் வழங்கி உதவி செய்ய முடியும். குறிப்பாக –

★ பிள்ளைப்பேறுக்கு முந்தைய உடல் நலன் பேணல்.

★ சிக்கல் மிகுந்த மகப்பேறுகளை அடையாளம் காணுதல்.

★ பிறந்த குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பு திட்டங்கள் –

நோயாளிகளுக்கு தொலை மருத்துவம் வாயிலாக மருத்துவ நிபுணர்களின் சேவையை வழங்கி உதவி செய்யும் இக்கருத்துரு இந்தியாவில் இன்னும் அதனுடைய குழந்தைப் பருவ நிலையில்தான் உள்ளது.

## மாணவர்களை சமுதாய நோக்கோடு பணியாற்றச் செய்யும்

அண்ணா பல்கலைக்கழகம் அப்பல்லோ மருத்துவமனையுடன் ஒருங்கிணைந்து தொலை மருத்துவத்தை தமிழ்நாட்டில் நடைமுறையில் நிறைவேற்றிவைக்கும் ஒரு சரியான பாதையில் செல்லும் ஒரு முன்னோக்கிய அடியை எடுத்து வைத்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகமும் அப்பல்லோ மருத்துவமனையும் இணைந்து ஏற்படுத்தியுள்ள தொலைமருத்துவத் திட்டம் இந்தப் பொறியியல் கல்லூரி மாணவர்களை உற்சாகப்படுத்தும். இந்த ஊக்கமானது தொலைதூரப் பகுதிகளுக்கு எய்ட்ஸ் பற்றிய விழிப்பு மற்றும் சமூகநலன் இணைந்த பணிகளில் சமுதாய நோக்கோடு பணியாற்றும் கொள்கைகளில் மாணவர்களை ஈடுபட வைக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

## அடித்தள மக்களுக்கு மருத்துவ உதவி வழங்க வேண்டும்

மின் அணு தொழிலகங்கள் மற்றும் தொலை தகவல் தொழிலகங்கள் ஆகியவைகளின் ஈடுபாட்டையும் அவர்கள் காட்டும் ஆர்வத்தையும் உடல்நலம் பேணும் துறையினர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்களது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் இருக்கும் ஏழை மற்றும் அடித்தட்டு மக்களுக்கு மருத்துவ உதவி வழங்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களை ஒளி பரப்புவதற்கும் – உடல்நலன் பேணும் சேவைகளை வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள துணை மருத்துவ அலுவலர்களுக்கு அவர்களது மருத்துவ அறிவை மேலும் கூர்மையாக்குவதற்கும் – இந்தப் படக்காட்சி கருத்து பரிமாற்ற அமைப்பாக பயன்படும்.

தொலைமருத்துவம் சிறப்பு நிலை சேவை தேவைப்படும்போது உடனடியாக வழங்குவதன் மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அது பயன் அளிப்பதாக உள்ளது.

## சேவையின் தரத்தை மேம்படுத்த முடியும்

அரசு மருத்துவமனைகளும் மற்றும் முதன்மை மருத்துவ மையங்களும் மின்னணு கருவிகள் மூலம்

**டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உயரிய தொலைநோக்கு கொண்ட இலட்சியப் பார்வையால்தான் இன்று தமிழ்நாட்டு தொழில்நுட்ப கல்வியின் விதியை நிர்ணயிப்பதில், அண்ணா பல்கலைக்கழகம் ஓர் உயரிய பரந்த அளவில் பங்காற்றி வருகிறது.**

பெறப்படும் வழிகாட்டுதல் மற்றும் நிபுணத்துவ அறிவின் துணையுடன் தங்களது சேவையின் தரத்தை பெருமளவில் மேன்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

அண்ணா பல்கலைக்கழகம் தனது மாணவர்களுக்கு மிகவும் நேர்த்தியான கல்வி கற்பதற்கான வசதிகளை வழங்குகிறது. அதனுடன் கூடவே மேலும் அது தமிழ்நாடு முழுவதும் வெவ்வேறு இடங்களில் உள்ள பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள மாணவர்களுக்கு உடல்நலன் பேணும் பயன்களை வழங்குவதிலும் அதிக ஆர்வம் கொண்டுள்ளது.

தற்போது அது 25 தொலை மருத்துவ ஆலோசனை மையங்களை நிறுவியுள்ளது. இந்த உதவியை மேலும் அனைத்துப் பொறியியற் கல்லூரிகளுக்கும் வழங்க நம்பிக்கையும் கொண்டுள்ளது.

### 240 பொறியியல் கல்லூரிகளிலும் மருத்துவ இணைப்பு

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தங்களது உண்மையான ஒத்துழைப்பை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்க வேண்டும் என அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் தொலை மருத்துவ வசதிகளை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவரவர்களது வளாகங்களில் நிறுவிட முடியும்.

அண்ணா பல்கலைக்கழகம் அப்பல்லோ மருத்துவமனையின் ஆதரவுடன் அனைத்து 240 பொறியியற் கல்லூரிகளிலும் தொலை மருத்துவ இணைப்பை உருவாக்கி கொடுக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த தொலை மருத்துவ இணைப்பு முழுமையாக முழு வீச்சில் செயல்பட துவங்கும்போது ஒவ்வொரு 240 பொறியியல் கல்லூரிகளும் தனது மருத்துவ இணைப்பு உதவியுடன் செயல்படும் சமுதாய நல மையங்களை தனது எல்லைக்குள் பெறும்.

இந்த அனைத்து பொறியியற் கல்லூரிகளும், தமிழகம் முழுவதிலும் பரவலாக இருப்பதால் அருகாமையில் உள்ள கிராம மக்களை இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ள – தங்கள் கல்லூரிக்குள் அனுமதிப்பார்களேயானால், தமிழ்நாட்டின் 95 சதவீத மக்களை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக்கு உடனுக்குடன் உட்படுத்திய ஒரு தனித்த பெருமையை தமிழகம் சாதிக்கும். இதன் மூலம் அனைத்து தமிழகத்தின் ஒட்டுமொத்த சமூகநலனை உயரிய நிலைக்கு இட்டுச் செல்லும் பாதையை அமைத்துக் கொடுக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டில் உள்ள 35 சிறப்பு நிலை பொறியியற் கல்லூரிகளை நான் பாராட்டுகிறேன். ஏனெனில் இவர்கள் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் தங்களது நிபுணத்துவ அறிவை கடந்த 6 மாதங்களில் ஏறக்குறைய 6 ஆயிரம் காவல்துறை அலுவலர்களுக்கு கணினி பயிற்சி கொடுத்து உதவுவதில் தமிழக அரசுக்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் கொடுத்துள்ளார்கள்.

இதுபோன்ற ஒத்துழைப்பை அனைத்து பிற கல்லூரிகளிடம் இருந்தும் நான் எதிர்பார்க்கின்றேன்.

### ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கும் எடுத்துச் செல்ல ஆதரவளிக்க வேண்டும்

எல்லா மட்டங்களிலும், மாநிலத்தின் தொடர்ந்த வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், மற்றும் அனைத்து ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கும் இதனை எடுத்துச் செல்லும் அரசின் முயற்சிக்கு அவர்கள் ஆதரவு அளிக்க வேண்டும்.



தமிழகத்திலுள்ள அனைத்து உடல்நலம் பேணும் மருத்துவ நிபுணர்கள் முன்பு, இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். தொலை மருத்துவ அமைப்பின் உயர்நோக்கங்களுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும், பொருளாதார அடிப்படையைப் பொருட்படுத்தாது அனைத்துப் பிரிவினருக்கும், சமீபத்திய கண்டுபிடிப்பு வசதிகளை, அவர்களிடம் எடுத்துச் சென்று வழங்கும் லட்சியத்தை எட்டும் வகையில் பணிபுரிந்திட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

மிகப் பெருமளவில் பயன்படும் இத்தகைய திட்டத்தை மேற்கொண்டமைக்காக, துணைவேந்தர் டாக்டர் பாலகுருசாமியையும், அவருடன் இணைந்து உற்சாகத்துடன் செயல்படும் குழுவினரையும், நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசு, இப்படிப்பட்ட சேவையை அடித்தளமாகக் கொண்ட அனைத்து செயல்பாடுகளுக்கும் தேவையான உதவிகளையும் வழங்கும் என்கிற உறுதியை இந்த சமயத்தில் உங்கட்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கடின உழைப்பு லட்சியத்தை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்

கடின உழைப்புதான் வெற்றிக்கான ஆதாரகருவாக விளங்குகிறது என ஒரு புகழ்பெற்ற மூதுரை தெரிவிக்கின்றது. கடின உழைப்பு ஓர் உன்னதமான லட்சியத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அந்த லட்சியத்தை நீங்கள்தான் அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனெனில், அது உங்களை உற்சாகப்படுத்துகிறது. அது உங்களுக்கு ஒரு சவாலாக இருந்து உதவுகிறது. அதைத் தொடர்ந்து முன்னேறும் போது அது உங்கட்கு அளப்பரிய மனநிறைவை அளிக்கிறது.

### தளர்வடையாத முயற்சியும் உறுதியும் வேண்டும்

நீங்கள் தேர்ந்தெடுக்கும் லட்சிய நெறி, மனித இனத்துக்கு சேவை செய்வதாக இருக்கட்டும். இந்த லட்சியத்தை தளர்வடையாத முயற்சியுடனும், உறுதியுடனும் ஒருமுனைப்படுத்தப்பட்ட மனதுடனும், நீங்கள் பின்பற்றி செல்ல வேண்டும்.

திருக்குறளில், திருவள்ளுவர் இதுகுறித்து கூறியுள்ள கருத்தை இங்கே உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

பொருத்தமான நேரத்தில், பொருத்தமான ஒரு செய்கையை செய்வதன் மூலம், நீ இந்த உலகத்தையே வெல்ல முடியும் என்பதே அவரது உயரிய கருத்தாகும்.

### தமிழகம் அறிவு பெற்ற மாநிலமாக உருவாகியுள்ளது

தொழில்நுட்ப கல்வித்துறையில் அண்ணா பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு, தமிழகத்தை நாட்டிலேயே மிகவும் சக்தி வாய்ந்த தொழில்நுட்ப அறிவு பெற்ற மாநிலமாக உருவாக்கியுள்ளது.

தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்ட சிறப்புப் பாடப்பிரிவில் அதிசயிக்கத்தக்க திறமை பெற்றுள்ள மாணவர்களுக்கும், உதவிய ஆராய்ச்சி அறிஞர்களுக்கும் துறை அறிஞர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களது அதிசயிக்கத்தக்க முயற்சியின் விளைவாக, அண்ணா பல்கலைக் கழகம், மேன்மேலும் உயரிய நிலைக்கு வளர்ந்து கொண்டே போகும் என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் பங்கு கொள்ள என்னை அழைத்தமைக்கு துணைவேந்தருக்கும் இந்தப் பல்கலைக்கழக வேந்தராக விளங்கும் மேதகு ஆளுநர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### உயரிய எதிர்காலம் அமைய வாழ்த்து

இந்திய குடியரசுத்தலைவராக பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்ட பின் தமிழகத்திற்கு, தனது சொந்த மாநிலத்திற்கு முதல் தடவையாக வருகை தரும்போது, அண்ணா பல்கலைக் கழகத்தின் இந்த விழாவில் பங்கு கொள்வது எனக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுத்தமைக்காக நான் மிகவும் மனமகிழ்வு பெறுகிறேன்.

உங்களது அனைத்து முயற்சிகளிலும், வெற்றியும், வளமும் சிறந்த ஒரு உயரிய எதிர்காலம் அமைய எனது வாழ்த்தை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்".

★ ★ ★

# மாநில தரிசுநில மேம்பாட்டு ஆணையத்தின் முதல் ஆலோசனைக் கூட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை**

“தமிழ் நாட்டின் மாநில தரிசுநிலங்கள் மற்றும் நீர்நிலை மேம்பாட்டு ஆணையத்தின் முதல் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துவதிலும், தலைமை உரை ஆற்றுவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள தரிசு நிலங்களின் மேம்பாட்டிற்கான தங்களது அரிய கருத்துகளை



வழங்குவதற்காக வருகை தந்திருக்கிற அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்பதிலும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

### ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வேளாண்மையே காரணம்

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை, தொடர்ந்து பெரும் பங்கு வகிக்கும் ஒரு பிரிவாக இருந்து வருகிறது. மக்கள் தொகையில் 3–இல் 2 பங்கினருக்கு இது வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது. மாநில நிகர பொருள் உற்பத்தியில் இதன் அளவு 5–இல் ஒரு பங்காக உள்ளது.

வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழும் இலட்சக் கணக்கான மக்களின், ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கும், அவர்களுக்கு உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்கும் வேளாண்மை மேம்பாட்டு வளர்ச்சி முக்கிய இடத்தை வகிக்கிறது.

மேலும் இது கிராமப்புற மக்களின் வருமானத்தை உயர்த்துவதற்கும், வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும், தொழில் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி முன்னேற்றத்திற்கும் வேளாண்மை முக்கியக் காரணமாக இருக்கிறது.



மாநில அளவில், விதை – உரம் – நீர் தொழில் நுட்ப முன்னேற்ற வளர்ச்சி – உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கு பங்கு ஆற்றியுள்ள போதிலும் விவசாயவளர்ச்சியின் போக்கு, பலதரப்பட்ட விவசாயிகளின் மத்தியிலும் பயிர் விளைவிப்பதிலும், பிரதேச அளவிலும் ஒரே வாரியான – மாதிரியாக இல்லை.

### புன்செய் நிலப்பகுதியில் குறைவான வளர்ச்சி

புன்செய் நிலப் பகுதிகளிலும் மற்றும் மானாவாரிப் பயிர் விவசாயத்திலும் அடிமட்டம் வரை புதிய தொழில் நுட்பங்கள் சென்றடையவில்லை. இது காரணமாக பலவகைப் பயிர்களும் குறைவாகவே பயிரிடப்பட்டன. மற்றும் இதனால் புன்செய் நிலப் பகுதிகள் குறைவாகவே வளர்ச்சி பெற்று பின் தங்கிய ஒரு பகுதியாகவே தொடர்ந்து இருந்து வருகிறது.



மாநிலத்தின் மொத்த பயிர் விளையும் நிலங்களில் புன்செய் நில விவசாயம் 52 சதவீத இடத்தைப் பெற்றுள்ளது. இதனால் தானிய உற்பத்தியைப் பொறுத்தவரையில் திறமையற்றதாகவே தொடர்ந்து இருந்து வருகிறது.

மழையை நம்பியுள்ள பகுதிகள் நீர் ஆதாரத்திற்கு மழையை மட்டுமே சார்ந்து இருப்பதால், இங்கு தானிய உற்பத்தி பெருமளவில் நிரந்தரமற்றதாக இருக்கிறது.

புன்செய் நிலத்திற்கான விவசாயத்தில் நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டுவர வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது, இதன் மூலம் வறட்சியைத் தாங்கும் புதிய கலப்பின தானிய வகைகளை மேம்படுத்துவதற்கும், அதனை விவசாயிகளிடையே பிரபலமாக்குவதற்கும் அழுத்தமும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டும்.

மழைநீர் சேகரிப்பு என்பதும், அதிக செலவில்லாத எல்லோரும் மேற்கொள்ளக்கூடிய ஒரு எளிய வழியில் நிலம் மற்றும் நீர் ஆதாரங்களைப் பயன்படுத்திக் கொள்வதில்தான் நீர்நிலை மேம்பாட்டுக்கான முக்கிய சார்ந்திருத்தல் அணுகுமுறை அடங்கியுள்ளது.

### தனி மனித வருவாயை உயர்த்துவதே எதிர்கால லட்சியம்

மாநில தனி மனித வருவாயை 2010 – க்குள் இரண்டு மடங்காக உயர்த்துவதுதான் தமிழக மக்களுக்காக நான் மேற்கொண்டுள்ள எதிர்கால லட்சியமாகும்.

இதற்காக மழைபெய்யும் பிரதேசங்களில் ஒன்றிணைந்த முழுமையான வளர்ச்சி, மழைநீர் அறுவடை, நுண்உயிர் பொருள் அதிகரிப்பு போன்ற ஏற்பாடுகள் ஆகியவற்றை அக்கறையுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட ஏற்பாடுகளில் மழை மறைவு பிரதேச மக்களை, வேளாண் சார்ந்த காடுகள், தோட்டப் பயிர்கள் மற்றும் வேளாண் வணிகம், தரிசுநில மேம்பாடு ஆகிய பணிகளில் அவர்கள் இணைத்து செயல்படவேண்டும்.

2001–2002 வரவு செலவுக் கூட்டத் தொடரின்போது அரசு, ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்தது. அத்திட்டத்தின்படி, அறிவார்ந்த பலநோக்குத் தரிசுநில மேம்பாடு திட்டத்தின் மூலம் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை சீர்மைபடுத்தி–பயிரிடத்தக்கதாக விளை நிலங்களாகப்பட வேண்டும் எனவும்–அதுவும் 5 ஆண்டு காலத்தில் இது நிறைவேற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

### நில நீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்

தரிசுநில மேம்பாடு மூலம் சிறிய மற்றும் எளிய விவசாயிகளின் சிறு அளவிலான விவசாயத்தை முன்னேற்றுதல், தரிசு நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புற விவசாயம் சாராத பணிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில்தான் இப்புதிய திட்டம் கவனம் செலுத்துகிறது.

நிலம், நீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவத்தை கொடுப்பதுடன் கூடிய, நுண்நீர்நிலை மேம்பாட்டு அணுகுமுறையையும் இத்திட்டம் இணைத்து செயல்படும்.

இந்த நோக்கத்திற்காக சங்க சட்டத்தின் கீழ், ஒரு சங்கமாக தமிழ்நாடு நீர்நிலை மேம்பாட்டு முகமை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகமை பொருத்தமான செயல் திட்டங்களை உருவாக்கியும், செயல்படுத்தியும் அதன் சரியான முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் செய்யும்.

இத்திட்டத்திற்கு வெளியிடத்திலிருந்து நிதி கிடைக்க ஏற்பாடு செய்வது பற்றி ஒரு கருத்து குறித்த ஆய்வு தற்போது பரிசீலனையில் உள்ளது.

ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் இரண்டு அம்சங்களை உள்ளடக்கியது.

பங்கு கொள்ளும் நீர்நிலை ஆதார மேம்பாடு ஓர் அம்சமாகும்.

மற்றொன்று, கூட்டுறவு, சிறு குழுமங்கள், பெரிய குழுமங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்திய அரசு தரிசுநிலங்களின் மேம்பாடு.

## உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வு

முதல் அம்சம். அதாவது பங்கு கொள்ளும் நீர்நிலை ஆதார மேம்பாட்டுத் திட்டம் என்பது, பங்கு கொள்ள வைக்கும் அணுகுமுறையைச் சார்ந்தது.

இதன்படி, பொருத்தமான நீர்நிலை பத்திகளைத் தேர்ந்தெடுத்தல், உள்ளூர் மக்களுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தல், நீர்நிலைக் குழுக்களை அமைத்தல், பயனாளிகளின் குழுக்கள் அமைத்தல், பயனாளிகளின் பங்கைப் பெற்று அதன்மூலம் அனைத்து நீர்நிலை மேம்பாட்டை வளர்க்கும் திட்டத்தைத் தயாரித்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியதாக இருக்கும்.

மேலும் மண் மற்றும் ஈரப்பதம் பாதுகாப்பு தொடர்பான பொருத்தமான செயல்பாடுகளை எடுத்துக் கொள்வதும் இதில் அடங்கும்.

இந்தச் செயல்பாட்டிற்கான முழு நிதிச் செலவினையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ளும்.

## 55 ஆயிரம் ஹெக்டேர் நிலத்திற்கு ரூ. 25 கோடி செலவு

இது தற்போது 10 மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது. முதல்கட்டமாக 2002– 2003இல் 55 ஆயிரம் ஹெக்டேர் நிலம் எடுத்துக் கொள்ளப்படும்.

வனம் மற்றும் தோட்டப் பயிர் துறையானது, மேலே குறிப்பிட்ட அரசு நிதிஉதவி பெறும் திட்டத்தின் கீழ், 67 இலட்சம் மரக்கன்றுகள், பழச்செடிக் கன்றுகள், நாற்றுகள் ஆகியவற்றை வளர்த்திருக்கிறது.

இத்திட்டத்தில் 29 வட்டத்தில் 360 கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக ரூ.25 கோடி செலவிடப்படும்.

7.12.2002 வரையில் தற்போது 16,968 ஹெக்டேர் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், தற்போது நிலவும் சாதகமான பருவநிலையை பயன்படுத்தி மரக்கன்று நடும் பணியை 31.12.2002க்கு முன்பாக நிறைவேற்ற அவர்களை கேட்டுக் கொண்டுள்ளேன்.

## தரிசு நில மேம்பாட்டில் தனியார் துறையும் பங்கு பெறும்

இரண்டாவது அம்சத்தில், தரிசு நில மேம்பாட்டில் தனியார் துறையையும் ஈடுபடுத்தி பங்கு கொள்ள வைப்பதாகும்.

பரஸ்பரம் இருவருக்கும் பயன்படும் வகையிலான கூட்டுமுயற்சியில் தனியார் துறையை இணைத்து செயல் படுத்துவது என்கிற ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தை அமல் படுத்தும் கொள்கையை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

அரசு நிலங்களை, சலுகைத் தொகையில் குத்தகைக்கு விட வழிகாட்டு நெறிகள் ஏற்படுத்தப்பட்டு வழங்கப் பட்டுள்ளன.

உயர்மதிப்பு மிகுந்த தோட்டக்கலைப் பயிர்களை வளர்த்தல், விவசாய – காடுகள், நுண்உயிர் பொருள் தொழிற்சாலைகள், விவசாயம் சார்ந்த தொழில் அலகுகளுடன் இணைப்பு ஆகியவைகளை ஏற்படுத்தி



வளர்க்கத் தேவையான மிகப்பெரிய அளவிலான தரிசுநிலங்களை அடையாளம் காணும் நிகழ்வுகள் முடிந்துள்ளன.

## தரிசு நில மேம்பாட்டிற்கு உற்சாக வரவேற்பு

மேலும் சரியான வேளாண் – வணிகத் திட்டங்களுடன் கூடிய தகுதியான பெரிய நிறுவனக் குழுமங்களைத் தேர்ந்தெடுக்கும் பணியும் தற்போது நடைபெற்று முன்னேறி வருகிறது.

இந்தத் திட்டத்திற்கான வரவேற்பு உற்சாகம் தருவதாக உள்ளது. இதுவரை 4,112 மனுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 1,597 மனுக்கள் சரியான விவரங்களுடன் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளன.

இதில் 224 பெரிய குழுமங்கள் வேளாண் சார்ந்த வணிகத்திற்காக நிலங்களை எடுத்து செயல்பட ஆர்வம் கொண்டுள்ளன.

8 எக்டேருக்கும் கீழான நிலத் தொகுப்புகளை அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட குழுவே பரிசீலிக்கும்.

## தலைமைச் செயலாளரின் தலைமையில் உயர்மட்டக் குழு

8 எக்டேருக்கு கூடுதலான நிலத்தொகுப்பைக் கொண்ட பகுதியும் மற்றும் 40 எக்டேருக்கும் கூடுதலான நிலப்பரப்பை உள்ளடக்கிய தொகுப்பைக் கொண்ட நிலப்பகுதியும், மாவட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, தலைமைச் செயலாளரின் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும். பிறகு அதன் அடிப்படையில் அரசு உரிய உத்தரவு வழங்கும்.

இதுவரை இரண்டு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. 4 மாவட்டங்களை உள்ளடக்கிய மொத்தம் 459 எக்டேர் நிலத்திற்கு மட்டும் தற்போது உயர்மட்டக் குழு ஒரு வரைவுத் திட்டத்தைப் பரிந்துரைத்துள்ளது. விரைவில் அரசு இதன்மீது உத்தரவு பிறப்பிக்க உள்ளது. இந்த நடைமுறை விரைவில் முடிக்கப்பட்டு எதிர்வரும் 2003 பொங்கலுக்குள் எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டம் செயலுக்கு வந்துவிட வேண்டும் என நான் அறிவுறுத்தியுள்ளேன். தரிசுநில மேம்பாட்டுத் திட்டமானது பிற துறைகளின் திட்டங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

எனது அரசு சமீபத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை துவக்கியுள்ளது. அதன்படி மாநிலத்தின் அனைத்து 385 ஒன்றியங்களிலும் வேளாண் தொழிற்சாலைகளையும், ஒன்றிணைக்கும் கருத்தில் இது செயல்படும்.

நபார்டு மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்றவற்றின் நிதி ஆதரவுடன் புதிய வேளாண் தொழில் அலகுகள் இன்னும் 6 மாதத்திற்குள் தமது பணியை துவங்கி நடத்த உரிய ஊக்குவிப்பு கொடுக்கப்படும்.

வெவ்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதில் தான் இந்த திட்டத்தின் வெற்றி சார்ந்திருக்கிறது.

## அனைவரும் அறியும் வகையில் பிரச்சாரம்

மாவட்டங்களில் இந்த ஒருங்கிணைந்த பணிகளின் குவிப்பு குறித்தான கருத்தை அனைவரும் அறியும் வண்ணம் பிரச்சாரம் செய்து பரப்புவது மிக முக்கியமான ஒன்றாகும். இதன்மூலம் வெவ்வேறான களப்பணியாளர்கள் ஒன்றிணைந்த ஒரே குழுவாக வேலை செய்வதை உறுதிப்படுத்த வேண்டும். மாவட்ட மட்டத்தில் நுண்திட்ட மேம்பாட்டு வளர்ச்சியையும், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்–திட்ட முறைகளுடன் தரிசு நில மேம்பாட்டை இணைத்தலையும் உறுதிப்படுத்த வேண்டும்.

எல்லா கிராமங்களிலும் இத்தகைய தரிசு நிலங்களையும், கரம்பாக விடப்பட்ட நிலங்களையும் கண்டுபிடிக்க வருவாய் மற்றும் விவசாயத் துறையின் அலுவலர்களை உள்ளடக்கிய ஒரு தீவிர முனைப்பை உருவாக்க வேண்டும். அப்போது தான் உற்பத்திசார் பொருளாதாரச் செயல்பாட்டுடன் கூடிய தரிசுநிலத்தை உயிருள்ளதான விளைநிலமாக கொண்டுவரும் முயற்சியில் நாம் வெற்றி பெற முடியும்.

## புதிய வேலை வாய்ப்புகள்

தனியார் குழுமங்களை உள்ளடக்கிய இந்தத் திட்டம் வேளாண் வணிகம், குளிர்பாதுகாப்பகம் மற்றும் சந்தையுடன் முன்னோக்கிய இணைப்புகளைப் பெற்றிருக்கும்.

சிறுநில உடைமையாளர்கள், தனியார் குழுமங்கள் இருவரிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதன் மூலம் வேளாண் வணிகம் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டங்கள் கிராமப்புறப் பகுதிகளில் புதிய வேலைவாய்ப்புகளை வழங்க முடியும்.

இத்திட்டத்தை பலன் அளிக்கத்தக்கதாகச் செய்ய, வேளாண் விளை பொருளுக்கும், அதே போன்று, வேளாண் தயாரிப்பின், மதிப்புக் கூட்டப்பட்ட, பொருளுக்கும் சந்தையுடனான இணைப்பை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இதை நோக்கமாகக் கொண்டுதான், வேளாண் ஏற்றுமதி மண்டலங்களாக, 3 உயர் ஆதாரப் பகுதிகளை அரசு தேர்ந்தெடுத்து அறிவிப்பு செய்துள்ளது.

### ரூ.64 கோடியில் ஏற்றுமதி மண்டலம்

கூட்டு முயற்சி ஏற்பாடாக, ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் ஓசூரில், மலர்களுக்கான, ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரியில், ரூ 15.89 கோடி மதிப்பீட்டில் மலர்கள் உற்பத்திக்காக, வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படுகிறது. அதே போன்று மாம்பழ ஏற்றுமதியை கருத்தில் கொண்டு தேனியில், வேளாண் ஏற்றுமதி மண்டலமும் மற்றும் 5 தென் மாவட்டங்களிலும் ரூ.24.60 கோடியில் அமைக்க, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், மேம்பாட்டு ஆணையத்தால் சமீபத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதே போன்று குளிர்பாதுகாப்பு அறை, மாதிரிப் பண்ணை, குளிரூட்டப்பட்ட வாகனம் ஆகிய வற்றிற்கான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும். மேலும் இதனுடன் கூடியதும், இதன் விரிவாக்கமுமாக ஆராய்ச்சி நிலையம், நிலக்கோட்டையில் சுற்றுச்சூழல் தொழில் முனைவுப் பூங்கா ஏற்படுத்தப்படும். இதனால் ஓர் உயிருள்ள வேளாண்மை முன்னேற்றம் ஏற்படுத்தப்படும்.

### அடுத்து 4 ஆண்டுகளில் முன்னேற்றத்திற்கான பாதை

முதலமைச்சரின், 15 அம்ச திட்டம் தமிழக மக்களின், வளமான வாழ்வுக்கும் அனைத்து சமூக – பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையான ஒரு நோக்கத்தை கொண்டு விளங்குகிறது. இது தலைசிறந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சாமிநாதன் போன்றோர் களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டதாகும்.

இந்தத் திட்டம், இந்த அரசின் அடுத்து வரும் 4 ஆண்டுகளுக்கான முன்னேற்றும் பாதையாக இருக்கும். நம்முடைய 10–ஆவது திட்ட அறிக்கையின் முன்னேற்றத்திற்கான பாதையாக இது அமைந்துள்ளது என, மத்திய திட்ட கமிஷனால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### 2006–க்குள் நிறைவேற்றுவதே இலட்சியம்

இந்த இலட்சியப் பார்வையை, 2006 மார்ச் இறுதிக்குள் நிறைவேற்றுவதே, இந்த அரசின் முழு முயற்சியாக இருக்கும். நம்முடைய நோக்கமெல்லாம், இந்த தமிழகத்தில் உள்ள, மழை சார்ந்த மற்றும் விளிம்பு நிலை பகுதிகளில் உற்பத்தியை உயர்த்துவதுதான். அதையும் நீர் நிலை ஆதாரத்துக்கேற்ப அணுகுமுறையை பயன்படுத்தி தரிசு நிலத்தை மேம்படுத்துதல், மழைநீர் அறுவடை மற்றும் நீர் ஒருங்கிணைத்தல் தொழில் நுட்பம் ஆகியவற்றையும் பயன்படுத்தி மேம்படுத்துதல் ஆகும்.

வேளாண் முறையிலான தொழிலகங்களின் தொடர்புடன் கூடிய, விவசாய பொருள்களுக்கான கட்டுபடியாகும் வகையில் இலாபம் தரக்கூடிய வழியை உறுதி செய்வதும் இதில் அடங்கும்.

### வளமான சகாப்தத்திற்கு உறுதி

இத்திட்டம் கிராமப்புற வருவாயை நாமே கண்டுகளிக்கும் வகையில் உயர்த்தும், இதே போன்று விவசாயம் சார்ந்த, மற்றும் விவசாயம் சாராத இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே பிற மாநிலங்களைக் காட்டிலும் எல்லாவற்றிலும் முதன்மையான மாநிலமாக உயர்த்துவது தான் எனது கனவாகும்.

உங்களுடைய மதிப்பு மிகுந்த யோசனைகளாலும், உங்களுடைய ஒத்துழைப்புடனும், நாம் வறுமையை ஒழித்துக் கட்ட முடியும் என்றும்; தமிழகத்தில் ஒரு வளமான சகாப்தத்தை கொண்டு வர முடியும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தப் பொருள் தொடர்பாக, உங்களது தகவல் நிறைந்த கருத்துகளைக் கேட்டறிய விரும்புகிறேன்".

*– மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*தரிசு நில மேம்பாட்டு ஆய்வுக் கூட்டத்தில்*
*13.12.2002 அன்று ஆற்றிய உரை.*



# தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும் தமிழ் மன்றம்! தமிழக முதல்வர் ஆணை!

*தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மேனிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தமிழ்க் கவிதை, கட்டுரை மற்றும் சொற்பொழிவு ஆகியவற்றில் ஊக்கமளித்து, அவர்களின் படைப்பாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்த்திட ஏதுவாக மாவட்டங்கள் தோறும் 'தமிழ் மன்றம்' என்னும் புதிய அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.*

*பள்ளிப் பருவத்திலேயே மாணவ மாணவியர்கள் தமிழ் மொழியில் படைப்பாற்றலும், பேச்சாற்றலும் பெற்றவர்களாக வளர்க்கப்பட வேண்டும். அவர்கள் தமிழ் உணர்வு பெற்று வளர வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பமாகும். இதன் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் அமைத்து மாவட்டங்களிலும் 11,12ஆம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளைத் தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக நடத்திப் பரிசுகளை வழங்க அறிவுறுத்தியதின் பேரில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 2002–2003ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது "பள்ளி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும்" என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் "தமிழ் மன்றம்" திட்டத்தை 2002–2003 நிதி ஆண்டு முதல் ஆண்டுதோறும் சிறப்புடன் செயல்படுத்த ஆணையிட்டு உள்ளார்கள். இந்தத் திட்டத்தின்படி, தமிழகத்தில் உள்ள 29 மாவட்டங்களிலும் 11–12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சு ஆகியவற்றில் போட்டிகள் நடத்தி, ஒவ்வொரு பிரிவிலும் முதல் நிலையில் உள்ள மாணவர்க்கு ரூபாய் 500/–ம், இரண்டாம் நிலையில் உள்ள மாணவர்க்கு ரூபாய் 250/–ம், பரிசுத் தொகையாக வழங்கப்படும். மேலும், வெற்றி பெறும் மாணவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். இதன்படி,கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு என ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆறு பரிசுகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ரூபாய் 2 இலட்சத்து 10ஆயிரத்து 250 ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்.*

*இந்தப் போட்டிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்திட வேண்டி மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த ஆலோசனைக் குழுவின் தலைவராக செயல்படுவார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியரால் அமர்த்தப்படும் உள்ளூர்த் தமிழறிஞர்கள் இருவர், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் ஒருவர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டலத் துணை இயக்குநர்கள், மாவட்ட உதவி இயக்குநர்கள் இந்தக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் களாகச் செயல்படுவார்கள்.*



## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்

# இந்தியாவிலேயே முதன்முதலாக பெண் கைதிகளுக்கு கல்வியறிவுத் திட்டம்

சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், காலச்சூழலாலும், கல்வி அறிவு பெற்று, வாழ்க்கை வளத்தைச் சரி செய்து கொள்ள முடியாமல், அதன் காரணமாக வறுமையில் வாழும் பெண்கள், தங்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைக்காக சில தவறுகளைச் செய்கிறார்கள். அவர்கள் தவறுகளை அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும், சட்டத்தினால் அதற்குரிய தண்டனை வழங்கப்பட்டு சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

அறிந்தும் அறியாமல் செய்யும் தவறுகளுக்கு அடிப்படைக் காரணம் கல்வி அறிவு போதாமை. பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க வேண்டிய காலத்தில் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதும் அல்லது பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி விடுவதும் தான். இந்தக் குறைபாட்டினால் தாங்கள் செய்வது சரியானதா, நியாயமானதா, சட்டத்திற்குட் பட்டதா என்று சிந்தித்துச் செயல்பட இயலாத காரணத்தால் சட்டத்தினால் தண்டிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். அவர்கள் சிறைவாசம் அனுபவிக்கும் காலத்திலாவது அவர்களது உள்ளம் பண்பட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள். அதற்கு கல்வி அறிவு தேவை. கல்வி அறிவினால்தான் உள்ளம் பண்படும்.

பெண் கைதிகள் தங்கள் தண்டனைக் காலத்தை முடித்துவிட்டு விடுதலையாகி வெளியே வரும்போது கல்வி அறிவினால் உள்ளம் பண்பட்டு திருந்திய நல்வாழ்வு வாழ வேண்டும் என்கிற நோக்கத்தில் 8.11.2002 அன்று திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் உள்ள பெண் கைதிகளுக்குக் கல்வி அறிவு வளர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.பி.தங்கராஜ், இ.கா.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., சிறைத்துறைத் துணைத்தலைவர் திரு.க.சந்திரசேகரன், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்ட இயக்குநர் திரு.பீர்முகைதீன், மாநில பள்ளிசாரா கருவூலப் பெருந்தலைவர் சேவை.கே.கோவிந்தராஜன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் திரு.வி.ஆர்.வீரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





இக்கல்வி அறிவுத்திட்டம் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் அதுவும் திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையில் தான் முதன்முதலாக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கல்வி அறிவுத்திட்டம், அறிவொளி வளர்கல்வி திட்டத்தின் தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 6 மாதங்கள் நடைபெறும் இக்கல்வி அறிவுப் பயிற்சியில் 240 பெண் கைதிகள் பயன்பெற உள்ளார்கள். இதற்காக மனிதவளமேம்பாடு மையத்தின் மூலம் அறிவொளி வளர்கல்வித் திட்டத்தைச் சார்ந்த 8 ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் பெண் கைதிகளுக்குக் கல்வி அறிவு அளிக்கப்படுகிறது. ஒரு வகுப்புக்கு 30 பேர் வீதம் 8 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு காலையில் நான்கு வகுப்புகளும், மாலையில் நான்கு வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பெண் கைதிகளுக்கு எழுத்தறிவு கற்பிப்பதுடன் சமூகக் கல்வியும் மனதைப் பக்குவப்படுத்தும் வகையில் நீதிபோதனையும், பொது அறிவும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆர்வமுடன் கல்வி பயின்று வரும் இப்பெண் கைதிகள் தாங்கள் விடுதலையாகி செல்லும்போது கல்வி எனும் அழியாச்சொத்து தமக்கு அவசியம் தேவை என்பதை உணர்ந்து, கல்வி பயின்று வருகின்றனர். பயிற்சிக்குத் தேவையான புத்தகங்கள், சிலேட்டுகள் மற்றும் எழுதுபொருள்கள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும் அவர்கள் கல்வி அறிவு பெற்று வெளியே வரும் போது தங்கள் வாழ்க்கை வசதிக்கு ஏதாவது ஒரு தொழில் தேவை என்பதற்காக தையல் தொழில், பின்னல்வேலை மற்றும் பொம்மைகள் செய்தல் போன்ற தொழில்களில் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

**– கோ. பன்னீர்செல்வம்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சி.

# ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதே எனது இலட்சியம்!

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா**

"வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியம் சார்பில் நடைபெறும் கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு இங்கே சிறப்புரை ஆற்றுவது எனக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டுக்கும் சென்னைக்கும் வருகை தந்துள்ள வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியத்தின் (IFAD) தலைவர் லெனார்ட் பேஜ் அவர்களுக்கும் அவரது குழுவிற்கும் எனது மனமுவந்த வரவேற்பை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மகளிர் முன்னேற்ற திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தியதில் ஐ.எப்.ஏ.டி.யுடன் எமது அரசுக்குள்ள நல்ல இணக்கத்தை கருதும்போது தமிழ்நாட்டிற்கு அவர்களது இன்றைய வருகை காலங்கடந்த ஒன்றாகவே நான் கருதுகிறேன்.

## பன்னாட்டுப் போட்டி

நமது சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பிரிவினரிடையே உள்ள வறுமை, பசி, ஏழ்மை சார்ந்திருத்தல் ஆகியவற்றை ஒழிக்கும் ஒரு பொதுவான நோக்கத்தில், தமிழக அரசும் வேளாண்மை மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியமும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த நோக்கத்தில் வெற்றிபெற புதிய கூட்டுறவு முறையிலான பாதையைக் கண்டுபிடிக்கவும் இந்த முயற்சியை மேலும் புதுப்பித்துக் கொள்ளவும் தங்களது இந்த வருகை எங்களுக்கு ஒரு வாய்ப்பை கொடுத்திருக்கிறது.

உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் முறையின் கீழ் சந்தைச் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் 1980களிலும் மற்றும் 1990–களிலும் பெரும்பாலான வளரும் நாடுகள் ஈடுபட்டன. பல நாடுகளின் பொருளாதார நிலைமைகளை இந்தப் புதிய நூற்றாண்டு வியக்கத்தக்க அளவுக்கு மாற்றியுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் நேரடி ஈடுபாடு குறைக்கப்பட்ட நிலையில் உள்நாட்டுச் சந்தைகள் யாவும் பன்னாட்டுப் போட்டிக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட பலனை இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் கொடுத்தனவா? இந்த அமைப்பு மாற்றங்களால் ஏழைகளுக்கு ஏதாவது பலன் கிடைத்ததா?

## ஏழைகளின் பலவீனங்களால் ஆபத்து

உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் நடைமுறையில் சராசரியாக தடுமாற்றத்தையே உருவாக்கியுள்ளது என நாடு முழுக்க நடத்தப்பட்ட கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் நாடுகளிலும் மற்றும் ருமேனியா, போலந்து போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட இந்த சீர்திருத்த நடவடிக்கைகளால் துன்பங்களும் துயரங்களுமே தொடர்ந்து வந்துள்ளன. இதில் ஒரு நல்ல படிப்பினை காணக் கிடைக்கிறது.





புதிய பொருளாதார அமைப்பில் சீர்திருத்தத்திற்கு ஓர் அவசிய இடம் இருக்கிறது. ஆனால், இந்த சீர்திருத்த நடவடிக்கையினால் ஏழைகளின் குறிப்பிட்ட பலவீனங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஆபத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

## திட்டமிடும் திறன் வகுக்க வேண்டும்

1991–ஆம் ஆண்டில் இருந்த கடுமையான கடன் இருப்பு – சூழ்நிலையில் இந்தியா, பொருளாதார மற்றும் நிதி வருவாய் கொள்கைச் சீர்திருத்த நடவடிக்கையில் இறங்கியது. ஆரம்ப ஆண்டுகளில் தென்பட்ட உற்சாகம் விரைவான வளர்ச்சியை எட்ட முடியாமையால் கவலையாக மாறிவிட்டது.

10–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம். இந்த மேற்கண்ட பின்புலத்தில் தான் நமது எதிர்கால திட்டமிடும் திறன் வகுக்கப்பட வேண்டும். சில அடிப்படை கேள்விகளை நான் எனக்குள்ளேயே எழுப்பிக் கொள்வேன்.

இந்த பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்குதல் நடவடிக்கைகள் மூலம் நாம் என்ன சாதிக்க முயற்சி செய்கிறோம்?

தமிழகத்தில் மனித வளர்ச்சி குறியீடுகள் நாட்டிலேயே முதன்மையாக இருப்பதாலும்; ஆசியாவின் சிறந்த குறியீட்டிற்கு இணையாக இருப்பதாலும்; இந்த நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டுவர நான் விரும்புகிறேன். இந்த நோக்கங்களை நிறைவேற்ற எவ்வகையில் முடியும்? இழந்ததை ஈடுகட்டும் முழு முயற்சியில் நான் முயன்று வருகிறேன்.

## சத்துணவுத் திட்டம்

பொருளாதார மற்றும் நிதி வருவாய் கொள்கை சீர்திருத்த நடவடிக்கைகள் தொடக்கத்தில் பின்னடைவைத் தரும் என எதிர்பார்த்து பொருளாதார சீர்திருத்த எதிர்விளைவுகளில் இருந்து ஏழைகளைப் பாதிக்காத ஒரு பொருந்துகிற சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கும் அவசியத்தை ஆரம்பத்திலேயே உறுதியாக மேற்கொண்டுள்ளேன்.

ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக பொருத்தமான ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை 1991–1996–ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் உருவாக்கினோம். தமிழக அரசின் இந்தத் திட்டத்தை கருத்துருவாகவும், ஆதாரமாகவும் கொண்டு மத்திய அரசு 1995ஆம் ஆண்டில் தேசிய சமூக செயல் திட்டம் ஒன்றை கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்டுவதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

20 ஆண்டுகளுக்கு முன்பு எனது அரசியல் ஆசான் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது பள்ளிக் கூடங்களில் பள்ளி மாணவர்களுக்கு ஒரு நல்ல சத்துள்ள மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தினார்.

அதனையே ஓர் ஆதாரமாக எடுத்துக் கொண்டு தான் இந்திய மாட்சிமைக்குரிய உச்சநீதிமன்றம் எல்லா



# தமிழக சுற்றுலாத்துறைப் பணிகள் முன்னேற்றம்! சுற்றுலா அமைச்சர் ஆய்வு!

தமிழக சுற்றுலாத் துறையின் பணி முன்னேற்ற ஆய்வுக்கூட்டம் 12.12.2002 அன்று முற்பகல் 11.00 மணி அளவில் தமிழ்நாடு சுற்றுலா வளாகத்திலுள்ள மாநாட்டுக்கூடத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்கள் சுற்றுலா இயக்கப் பணியின் முன்னேற்றம் பற்றிய ஆய்வை மேற்கொண்டார்கள். 2002–2003 ஆம் ஆண்டு நிதி நிலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 30.11.2002 வரையிலான செலவின விவரங்களை ஆய்வு செய்தார்கள். சில இனங்களில் இன்னும் அதிகமாகச் செலவு செய்தல் வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மாநில சுற்றுலாத் திட்டப்பணிகள் மைய அரசு சுற்றுலாத் திட்டப்பணிகள், போன்றவைகளின் தற்போதைய நிலை என்ன என்பதையும் ஆய்வு மேற்கொண்டார்கள். அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்திக் கூறினார்கள்.

சுற்றுலா அலுவலகங்கள் / சுற்றுலாத் தகவல் மையங்களில் எப்போதும் சுற்றுலா பற்றிய வழிகாட்டி வெளியீடுகள் சுற்றுலாப் பயணிகளுக்கு கிடைக்கவும், விடுமுறை நாட்களிலும் சுற்றுலா தகவல் பெறுகின்ற வகையில் அலுவலகங்கள் செயல்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலா இயக்கக அலுவலர்கள், தலைமைச்செயலக சுற்றுலாத்துறை அலுவலர்கள், சுற்றுலா ஆணையர் திரு சி.பி.சிங், இ.ஆ.ப., மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு வி. இராமதாஸ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

• • •



# கட்டடத் தொழிலாளர்களுக்கு நிதி உதவி! தமிழக முதலமைச்சர் வழங்கினார்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்லாட்சியில் கட்டடத் தொழிலாளர்கள் நலனைக் காக்க 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபடும் சித்தாள், கொத்தனார், எலக்ட்ரிஷன் போன்ற 38 வகையான தொழில்களைச் செய்யும் தொழிலாளர்கள் ரூ.25/- பதிவுக் கட்டணத் தொகையாக செலுத்தித் தங்களை உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு கட்டுமானத் தொழிலாளிக்கும் அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் 2 ஆண்டிற்கொரு முறை ரூ.10/- செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர் களின் திருமணத்திற்கும் மகன்/மகள் திருமணத்திற்கும், திருமண உதவி நிதியாக ரூ.2,000/-மும், கல்வி உதவி நிதியாக ரூ.1,000/- முதல் ரூ.6,000/- வரையிலும், பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவி நிதியாக ரூ.2,000/-மும் வழங்கப் படுகிறது.

விபத்தில் மரணமுற்றால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ரூ.1,00,000/- விபத்துக் காப்பீட்டுத் தொகையும், விபத்தில் காயமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.1,00,000/- வரை காப்பீட்டுத் தொகையும் வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்தில் பதிவு பெற்ற ஒரு தொழிலாளி இயற்கை மரணமடைந்தால், இத்தொழிலாளியின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10,000/-உதவி நிதியும் ரூ.2,000/-ஈமச்சடங்கு உதவி நிதியும் வழங்கப் படுகிறது.

191 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் களுக்கு 28.11.2002 அன்று இவ்வாரியத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கல்வி, திருமணம் மற்றும் மகப்பேறு உதவி நிதிகள் ரூ.3,23,500/- வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுக் கிணங்க 12.12.2002 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு.ஏ. அன்வர் ராஜா அவர்களால் விபத்தில் மரணமுற்ற திரு.ஏ.சீனிவாசன்,மற்றும் திரு.என்.பழனி, ஆகியோர்களின் குடும்பத்தாருக்குத் தலா ரூ.1,02,000/-மும் இயற்கை மரணமுற்ற திரு.ஜி.மனோகரின் குடும்பத்தாருக்கு ரூ.12,000/-மும், திருவாளர்கள் திரு.எம்.துரை மற்றும் திரு.எம்.செல்வராஜன், ஆகியோர்களின் வாரிசுகள் திருமணத்திற்கு உதவி நிதி தலா ரூ.2,000/- வீதமும் ஆக மொத்தம் ரூ.2,20,000/- வழங்கப்பட்டது.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் இந்த அரசால் சுமார் 6,000 உடல் உழைப்புத் தொழிலாளர்கள் அரசின் நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர். முந்தைய ஆட்சியுடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது இது ஒரு அளப்பரிய சாதனையாகும். ★

மாநிலங்களும் பள்ளி மாணவர்களுக்கு ஒருவேளை சத்து நிறைந்த மதிய உணவு வழங்க வழிகாட்டி, அண்மையில் உத்தரவிட்டுள்ளது.

1991–96ஆம் ஆண்டுகளில் வேளாண்மை மேம்பாட்டுப் பன்னாட்டு நிதியத்தின் உதவியுடன்தான் பெண்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் திட்டங்களை நிறைய கொண்டுவந்து நிறைவேற்றியது. அந்த சமயத்தில்தான் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நிறுவப்பட்டன. வறுமைக்கு எதிரான போராட்டத்தில் இந்தத் திட்டம் முன்னோடித் திட்டமாகும்.

எதிர்பார்த்த அளவில் வளர்ச்சி ஏற்படாத அந்த காலகட்டத்தில் அமைப்பு மாற்ற நடவடிக்கையின் கடும் நெருக்கடிகளை மாநிலத்தின் ஏழைகளும் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களும் ஏற்றுக் கொண்டு சமாளித்தனர் என்பதில் சந்தேகமில்லை.

வளர்ச்சி மட்டுமே வறுமையைப் போக்கும் அருமருந்து ஆகாது. வறுமையை எதிர்க்கும் நமது போராட்டத்தில் வளர்ச்சி நமக்கு ஒரு நல்ல முன்னோடியாக இருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தின் முக்கிய துறைகளில் வளர்ச்சியே இல்லை என்பது என்னைமிகவும் கவலைக்குள்ளாக்கியது.

மக்கள் தொகையின் 62 சதவீத மக்களின் வாழ்க்கை விவசாயத்தையும் மற்றும் பிற ஆதார துறைகளின் ஆதரவிலும் தான் நடைபெறுகிறது. இதன் பங்கு 17 சதவீதமாகத்தான் உள்ளது.

கிராமப்புற ஏழ்மை நிலையில் தொடர்ந்து நிச்சயமற்ற தன்மையையும்; கிராமப்புற பகுதிகளில் தொடர்ந்து வறுமை ஆட்டிப் படைப்பதையும் இது நமக்கு காட்டுகிறது.

தமிழ்நாட்டில் வேலை இல்லாதோர் நிலை நாட்டின் 3வது இடத்தை வகிக்கிறது. அதாவது 15 சதவீதம் அளவில் உள்ளது.

கடந்த காலங்களில் வளர்ச்சிப் பாதை ஏழைகளை உள்ளடக்கியதாக இல்லை என்கிற கருத்தையே இவைகள் உறுதிப்படுத்துகின்றன. உண்மையில் வருமானச் சமச்சீரின்மையை இவை மேலும் ஆழமாக்கிவிட்டன.

## வறுமை ஒழிப்புக்கு புதிய உத்வேகம்

கடந்த 5 ஆண்டு இடைவெளியில் நாங்கள் ஆட்சியில் இல்லாததால் அதற்கு முன்பு நாங்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து அவைகளைத் தேடி கஷ்டப்பட்டு கண்டறிந்து துவக்க வேண்டியுள்ளது.

மேலும் வறுமை ஒழிப்பு திட்டத்துக்கு ஒரு புதிய உத்வேகத்தை கொடுக்க வேண்டியுள்ளது. முந்தைய ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளினாலும் மோசமான நிதி நிர்வாகத்தினாலும் சரிந்துள்ள சொற்ப நிதியை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. இந்நிலையில்தான் சமூக நலத்துறைத் திட்டங்களையும் சுகாதாரத்துறை மற்றும் தொடக்கக் கல்வித் துறைகளின் செயல்பாட்டுக்கான திட்டங்களை மனம் பொறுக்காமல் வெட்டிக் குறைக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளானேன்.

இதுபோல் இனி நேராமல் இருக்க நான் தற்போது உறுதி எடுத்துள்ளேன். நலவாழ்வை நசுக்குவதில் ஏழ்மை பெரும் பங்கு வகிக்கிறது என்கிற கருத்தை நானும் ஏற்கிறேன்.

தேர்ந்தெடுத்தல்; செயல்படுத்துதல் ஆகிய அடிப்படைச் சுதந்திரம் ஏழைகளுக்கு மறுக்கப்படுகிறது. மேலும் சமூகத்தில் தனிமைப்படுத்துவதிலும் பிறரைச் சார்ந்து நிற்கும் அவமானமும் அதிகாரமின்மையும் பலவீனங்களும் பொருளாதார பாதுகாப்பின்மையும் ஏழ்மை சுற்றிவளைத்து தனக்குள் வைக்கிறது.

## ஏழையின் தேவை

ஏழ்மை ஒழிப்பு நல்ல ஆட்சியை வழங்குவதிலும் பொருளாதார பாதுகாப்பை உறுதிபடுத்துவதிலும்; அதிகாரத்தை பயன்படுத்துவதை எளிமை ஆக்குவதிலும்; வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் தான் உள்ளது; ஏழ்மையை முற்றிலும் ஒழிப்பதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் நாம் அடைகிற வெற்றி, நிரந்தர வறுமை மிகுந்த வாழ்க்கையில் இருந்து விடுதலைபெற பொருள் தேடும் வாய்ப்பையும் அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதும் தான் ஓர் ஏழையின் தேவையாகும்.

வறுமையை முற்றிலும் குறைக்கும் வழிமுறையில் நான்கு முனைகளிலும் அதாவது அரசு மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும், நகராட்சிக்குழு மூலமாகவும், ஏழைகளே முன்வருவது மூலமாகவும் ஆகிய நான்கு வழி முறைகளும் அடங்கிய ஓர் உறுதியான, ஒன்றை ஒன்று நிரப்புகிற திட்டமும் இதற்குத் தேவைப்படுகிறது.

## தனிமனித வருவாய் இரட்டிப்பு

2010ஆம் ஆண்டிற்குள் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்கும் ஒரு வருங்காலப் பார்வையே எனது இலட்சியம்.

இதை மனதில் கொண்டுதான் வறுமை எனும் விலங்கை உடைத்தெறியும் வழிமுறை திட்டமாக ஒரு பல்முனைத் திட்டத்தை எனது அரசு உருவாக்கியுள்ளது.



"ஒருவர் தான் மதிக்கிற வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான சுதந்திரத்தை தான் அனுபவிப்பது மூலமாக அதாவது ஒருவருக்கு உள்ள தகுதி திறனை அவர்களுக்கு நாம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்" என பேராசிரியர் அமார்தியா சென் குறிப்பிடுவதற்கு ஏற்ப அதனை ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்படுத்தி கொடுப்பதும் எனது அரசின் நோக்கமாகும். எங்களது திட்டத்தில் கீழே குறிப்பிட்டவைகளும் அடங்கும்.

## மக்கள் வாங்கும் சக்தி அதிகரிக்கும்

★ மக்களின் தொடர்ச்சியான பயன்தரத்தக்க வாழ்க்கை பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில்; விவசாயம் மற்றும் தொழிற்துறைகளின் செயல்பாட்டைப் புதுப்பிப்பது மூலம் வளர்ச்சியைத் தூண்டிவிடுவது,

★ மக்களின் வாய்ப்புக்களை அதிகப்படுத்தும் நோக்கத்தில் தெளிவான நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சியை வளர்த்தல். அதிக அளவிலான வாய்ப்பு கிராமப்புற மக்களிடையே வாங்கும் சக்தியை அதிகரிக்க வைக்கும். அதன் விளைவாக வேளாண் மற்றும் தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படும்.

★ ஏழைக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு கொடுக்கும் அரசின் திறனை மிகப்பெரிய ஏற்க முடியாத வருவாய் பற்றாக்குறையும் மற்றும் பொதுநிதி வருவாய் பற்றாக்குறையும் மோசமடையச் செய்து பாதிக்கவைக்கும்.

★ ஒன்று திரண்ட நிதி ஆதாரம் ஒரு முக்கிய அம்சம்.

★ நல்லாட்சி நெறிமுறைகள், ஜனநாயக அதிகாரப் பகிர்வு கவனமுள்ள நிர்வாகம் ஆகியன தவிர்க்கக்கூடிய பேரவிலைக் கூடுதலை போக்கும்; இது மேலும் நிர்வாகத்தை மக்கள் சார்ந்ததாகவும் மக்கள் பங்குகொள்கிறதாகவும் ஆக்கும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2002–2007) வேளாண் விளைபொருள் வளர்ச்சியை 4 சதவீதத்திற்கு உயர்த்த அரசு உறுதி கொண்டுள்ளது.

முக்கிய உற்பத்தித் துறைகளைப் பொறுத்தவரையில் எங்களது அணுகுமுறை கீழ்க் குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடக்கியதாக இருக்கும்.

## சிறிய மற்றும் எளிய விவசாயிகளை ஊக்குவித்தல்

1. மழைநீர் அறுவடை மற்றும் நீர்நிலை அதிகரிப்பு மூலம்; தரிசு நில மேம்பாட்டை உள்ளடக்கிய வேளாண்மை நிலப் பரப்பை அதிகப்படுத்துதல் – சிறிய மற்றும் எளிய விவசாயிகள் பல காரணங்களால் தங்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டு விடுகின்றனர். இந்த வகை நிலங்களைக் கண்டுபிடித்து வளர்ச்சி ஈடுபாட்டில் பங்குகொள்ள அவர்களை ஊக்குவிப்பது இப்பொழுது நம்முடைய முயற்சியாக இருக்கிறது.

2. அதேவேளையில் விரைவில் பலனைப் பெறும் வகையில் கிராமப்புறங்களில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில் விவசாய – வியாபார அடிப்படையில் தரிசு நில மேம்பாட்டை எடுத்து செயல்படுத்திட பெரிய நிறுவனங்கள் முன்வர நாங்கள் ஊக்கம் அளிக்கிறோம்.

3. விவசாய அடிப்படையிலான தொழிற்சாலைகள் மற்றும் கிராமப்புறத்தில் உள்கட்டுமானத்தை ஊக்குவித்தல் மற்றும் நில உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் இந்த மாநிலத்தில் உள்ள பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத விவசாயிகளுக்கு வருமானம் ஈட்டித் தருவதை உறுதிப்படுத்துதல்.

4. பிரதான உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களைக் கூடுதலாக பிற வேலைவாய்ப்பை எடுத்து செய்ய ஊக்குவிக்கும் வகையில் மக்களை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கூடுதல் வருவாயை பெருக்கச் செய்தல்.

பொருளாதார இழப்பீட்டில் மட்டிலும் கவனம் செலுத்துவதோடு நிற்காமல், பலவீன நிலை மற்றும் ஆபத்து பாதிப்பு போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

## ரூ. 164 கோடி திட்டம்

காவிரி நீரில் நமக்குச் சட்டப்படி உரிமையுள்ள பங்கு நீரை கர்நாடக அரசு கொடுக்க மறுத்ததனால், காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி செய்யப்படவில்லை. இதனால் விவசாயத் தொழிலாளர்களின் வருமானம் பாதிக்கப்பட்டது. விவசாய விளைபொருட்களும் பாதிக்கப்பட்டது. இவ்வளவும் சமீபகாலத்தில் நடந்தது. இந்த நிலைமையில், வருமானத்தை ஈடுகட்டும் வகையில், ரூ.164 கோடியில் என்னால் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

# ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம் இடமாற்றம்

– மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள்
கட்டடத்தைத் திறந்து வைத்தார்

**ஊ**ழல் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்செயல்களை ஆய்வு செய்து, கண்டுபிடித்து, நடவடிக்கை மேற்கொள்கின்ற பணியைச் சிறப்புடன் ஆற்றி வரும் தமிழ்நாடு அரசின் ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலகம் கடந்த 38 ஆண்டுகளாக தனியார் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வந்தது. மேலும், அண்மையில் உருவாக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, சென்னை அண்ணா சாலையில் உள்ள வீட்டு வசதி வாரியக் கட்டடமான பெரியார் மாளிகையில் இயங்கி வந்தது. இதுவன்றி தமிழ்நாட்டின் பல்வேறு பணிகளுக்காக சென்னைக்கு வரும் இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் தங்கும் விருந்தினர் இல்லம் அண்ணாநகரில் ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.12.2002 அன்று திறந்து வைத்தார். விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெஜெயலலிதா அவர்களைப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநரும், கூடுதல் காவல் துறை இயக்குநருமான திருமதி ஜி. திலகவதி, காவல் துறை தலைவர்கள் திரு.அசோக்குமார், திரு.கே. ராதாகிருஷ்ணன், ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இணை இயக்குநர் திரு. எஸ். ஜார்ஜ் ஆகியோர் மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றனர். பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



இவ்வாறு ஒரே இயக்குநரகத்தைச் சார்ந்த பிரிவுகள் மூன்று இடங்களில் தனியார் கட்டடங்களில் மொத்தம் 1,67,591 ரூபாய் மாத வாடகையில் இயங்கி வந்தன. இந்த மூன்று பிரிவுகளும் ஒரே இடத்தில், அதுவும் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் வகையில், பிஎஸ். குமாரசாமி ராஜா சாலை (கிரீன்வேஸ் சாலை)யில், மொத்தம் 29,488 சதுர அடி கொண்ட, தொடர்ச்சியாக அமைந்த 8 பொதுப்பணித்துறை புதிய கட்டடங்களை ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 27.11.2002 அன்று ஆணையிட்டார்.

இதன் படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலக புதிய வளாகத்தை

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரிப்பன் வெட்டி ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை அலுவலக பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்கள். மேலும், 4.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் புதிய வளாகத்தை குத்துவிளக்கேற்றி வைத்து, உரிய கல்வெட்டுகளைத் திறந்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இதனை அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய அலுவலகத்தின் பார்வையாளர்கள் குறிப்பேட்டில் தமது கருத்துக்களைப் பதிவு செய்த பின்னர், ஊழல் தடுப்பு, கண்காணிப்புத் துறை இயக்குநர் மற்றும் அலுவலர்களுக்கு தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.






# தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டம்

"2002–2007 ஆம் கால அளவிற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை குறித்து விவாதித்து முடிவு எடுப்பதற்காக கூட்டப்பட்டுள்ள இந்த தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வது எனக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் நீண்ட கடும் முயற்சிகள் இருக்கையில், நம்முடைய வளர்ச்சிக்கு கடந்த காலங்களில் தடையாக இருந்தவற்றை நீக்கிவிட்டு, ஒரு வளர்ச்சிப் போக்கினை உயர்ந்த கொள்கை– குறிக்கோள்களை வகுத்துக் கொள்ள இந்த சகாப்தத்தில் இது ஒரு புதிய தொடக்கமாக இருக்கும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நம்முடைய பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள், அண்மையில் சென்னை வந்திருந்த போது, நாம் அனைவரும் கனவுகள் காண வேண்டும் என்றும், அத்தகைய கனவுகளை எண்ணங்களாகக் கொண்டு வந்து, அவற்றைச் செயலாக்கமாகக் கொண்டு வர வேண்டும் என்று நமக்கெல்லாம் உற்சாகம் ஊட்டிச் சென்றுள்ளார்.

இந்தியா சக்திவாய்ந்த ஒரு நாடாக ஆக வேண்டுமென்றும், வலுவான, வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா திகழ, அதற்கான வழித்தடத்தை நோக்கி வீறுநடைபோட வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும்.

இந்தியாவை, பசிப்பிணி, வறுமை இல்லாத ஒரு நாடாகவும், வாய்ப்புகள் நிறைந்த, இளைஞர்கள்

இந்த திட்டம் முழு வெற்றியைக் கொடுத்தது. இதனால் ஓரளவு இவர்களது தேவைகளையும், இழப்பீட்டையும் போக்க முடிந்தது. மறுபடியும் நிதி வருவாய் நிலை கடுமையாகவும், தாங்க முடியாததாகவும் ஆனபோது, மானிய உதவியை வெட்டி குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுகூட, பொது விநியோக திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு அரிசி கிடைக்க ஏற்பாடு செய்தோம்.

பிற எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மிகக் குறைந்த விலையில், ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை கொடுத்துவர எனது அரசு தொடர்ந்து ஈடுபட்ட உண்மை, பலவீனமான ஏழைகளைப் பாதுகாப்பதில் எமக்குள்ள உறுதியை வெளிப்படுத்துகிறது.

பலமுனை சமூக – பொருளாதார முன்னேற்றத் திற்கான ஒரு 15 அம்ச திட்டத்தை நாங்கள் துவக்கி செயல்படுத்தினோம். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற தலைசிறந்த விஞ்ஞானிகளுடன் ஆலோசனை கலந்து தமிழக மக்களின் வளத்திற்காக இதனை துவக்கினோம்.

இந்த செயல்பாடுகள் மேலும் ஒருங்கிணைக்கப் பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும். நாங்கள் என்ன செய்ய முயற்சித்தோமோ, அவைகளெல்லாம் வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியத்தின் செயல்திட்ட பட்டியலில் அடங்கி உள்ளது என்று நான் அறிகிறேன்.

ஒரு புதிய தொடக்கத்தை தமிழ்நாட்டில் ஆரம்பித்து வைக்க, ஐ.எப்.ஏ.டி. தலைவர் லெனார்ட் பேஜ் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தரிசு நிலங்களை மாற்றுதல், சிறிய மற்றும் நலிந்த விவசாயிகளின் விவசாயத்தை மேம்படுத்த உதவுதல் விவசாயம் சாரா கிராமப்புற நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ஆகிய புதிய திட்டங்களில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மாநிலத்தில் செயல்படும் பல்வேறு நடவடிக் கைகளில் நம்மிடையே போதிய விவரம் பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ளது.

### சுயஉதவிக் குழுக்கள் செயலில் முன்னோடி

சுயஉதவிக் குழுக்களைச் செயல்படுத்தியதில் நாம் முன்னோடிகளாக விளங்குகிறோம். அவர்களும் இப்பொழுது உற்சாகத்துடன் செயல்பட்டு கொண்டிருக்கின்றனர். தமிழ்நாட்டில் வறுமை ஒழிப்பிற்கு எதிரான நமது அணியை, கடைசி மைல்வரை வழிநடத்திச் செல்ல வேண்டும். இந்த பயணத்தில் ஒரு கூட்டு முயற்சியை ஏற்படுத்தி மறுபடியும் நாம் ஏன் பங்குகொள்ளக் கூடாது?

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், ஒரு புதிய வெற்றிகரமான முன்னேற்றப் பாதையை ஏற்படுத்தி வழிநடத்தி செல்ல வேண்டும் என லெனார்ட் பேஜ் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற இடங்களில் ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தியதில் இருந்து, தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட இந்த முயற்சி மற்ற பகுதிகளில் எடுக்கும் முயற்சியைவிட வித்தியாசமாகத்தான் இருக்க வேண்டும். வெறும் மக்களோடு மட்டும் நாம் உறவாடவில்லை. அவர்களுடைய ஏழ்மை, அச்சம், ஆசை, நிராசை எளிதில் பலவீனப்படுத்தப்படும் நிலை ஆகியவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறோம்.

ஒரு நல்ல ஆட்சி என்பது மக்களை நேரில் ஈடுபடுத்துவதும், அவர்கள் எதிர்பார்க்கும் வாழ்க்கையை வாழ உதவி செய்வதும்தான்.

### மக்களின் கண்ணீரைத் துடைப்பதில் உறுதி

தமிழ்நாட்டிலுள்ள, ஏழைகளின் கண்களில் இருந்து வடிகிற கண்ணீரைத் துடைத்தெறிவதிலும்; அவர்களது முகத்தில் புன்னகையை வரவழைப்பதுமான எனது பணியில் நான் உறுதியாக இருக்கிறேன்; அதுவே எனது முதல் இலட்சியம்.

தமிழ்நாட்டிலும், சென்னையிலும் உங்களது தங்குதல் மகிழ்ச்சியாக அமைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.

மிக நல்ல சிறந்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள தங்களை வாழ்த்துகிறேன்.

நமது உள்ளுணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலம், வறுமையை ஒழிப்பதில் ஒரு புதிய, பயனுள்ள, முன்னேற்ற வழிமுறையை வகுத்து கொடுக்கும் என நான் நம்புகிறேன்".

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*வேளாண்மை மேம்பாட்டிற்கான*
*பன்னாட்டு நிதியம் சார்பில் 1.12.2002 அன்று*
*சென்னையில் நடைபெற்ற கிராமப்புற*
*வறுமை ஒழிப்பு கருத்தரங்கில் ஆற்றிய உரை.*



## மழைநீர் கடலில் கலந்து வீணாகாமல் தடுத்து ஊருணி, கோவில் குளத்தில் நீரை நிரப்பிய மழைநீர் சேகரிப்புத் திட்டம்!

### இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி மக்கள் மகிழ்ச்சி!

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், திருப்புல்லாணி ஊராட்சியில் உள்ள ஊருணிகள், தெப்பக்குளம், கிணறுகள் தண்ணீர் இன்றி வறண்டு கிடந்தன. ஊரில் உள்ள கிணறுகளில் நல்ல நீர் கிடைப்பது அரிதாகிவிட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் வெற்றிகரமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்படி நடைபெற்று வருகிறது. திருப்புல்லாணி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சுப. முனியசாமி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் திரு. ரமேஷ் ஆகியோரும், தங்கள் கிராமத்தை ஒட்டி மழைகாலங்களில் ஓடைகளில் ஓடிவரும் ஆற்றுநீர் வீணாகக் கடலில் சென்று விடுவதைத் தடுத்து நிறுத்தினால், திருப்புல்லாணி கிராமத்தின் குடிநீர் பிரச்சினையும், மக்கள் பயன்பாட்டுக்கான தண்ணீர்ப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று எண்ணி, மழைநீர் செல்லும் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பு அணைகட்டி, அதன் மூலம் நீரை ஊருணிக்கும், தெப்பக்குளத்துக்கும் கொண்டு செல்லலாம் என்ற கருத்தை மாவட்ட ஆட்சியர் திரு.ச.விஜயகுமார், இ.ஆ.ப., அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்களும், திருப்புல்லாணி ஊரின் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்திடவும், மழைநீரைச் சேகரிக்கும் திட்டத்துக்கும் சேர்த்து ரூபாய் 3 இலட்சத்தை சமன்பாடு மற்றும் ஊக்க நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்தார்கள்.

இந்த மூன்று இலட்சம் ரூபாய் மதிப்பில் ஓடையிலிருந்து நீரைத் திசை திருப்பி குழாய் மூலம் பிள்ளையார் குட்ட ஊருணி அருகே 14 அடி ஆழத்தில் தொட்டி கட்டி அங்கே நீர் தேக்கப்பட்டு, 10எச்பி (குதிரைத்திறன்) இரண்டு மோட்டார் மூலம் பம்பு செய்து, 350 மீட்டர் நீளமுள்ள கால்வாய் வெட்டி, தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, 12 ஏக்கர் பரப்புள்ள மதகு ஊருணி முழுதும் நிரப்பப்பட்டது. இது நிரம்பியதும் 6 ஏக்கர் பரப்பு உள்ள சக்கரைத் தீர்த்தத் தெப்பக்குளத்தில் தண்ணீர் விடப்படுகிறது.

12 அடி ஆழம் உள்ள இந்த தெப்பக்குளம் 1 வார காலத்தில் நிரம்பி விடும். இதன் பின்னர் தண்ணீர் தேக்கப்படும் தொட்டிக்கு அருகேயுள்ள பிள்ளையார் குட்ட ஊருணிக்குத் தண்ணீர் திருப்பிவிடப்பட்டு, நிரப்பப்படும்.

சுமார் 6 ஆண்டு கழித்து இப்போதுதான் மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ரூபாய் 1.5 இலட்சம் மதிப்பில் மதகுகுட்ட ஊருணி தூர்வாரப்பட்டுள்ளது. இதன் வழியாக வரும் நீரால் இந்த தெப்பக்குளம் நிரம்பியதும், ஊரைச் சுற்றியுள்ள 117 கிணறுகளிலும் நல்ல ருசியான குடிநீர் கிடைக்கும் என்று மக்கள் கூறுகிறார்கள். பல ஆண்டுகளாக நல்ல குடிநீர் இல்லாது தவித்த இம்மக்களின் குடிநீர் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டுள்ளது. சுமார் 4,000 மக்கள் தொகை கொண்ட இந்த ஊர் இம்மழைநீர் சேகரிப்பால் நல்ல பலனைப் பெற்றுள்ளது.

மேலும் விரைவில் நடைபெறவுள்ள திருப்புல்லாணி கோவில் கும்பாபிஷேகத்திற்கும், வரும் பக்தர்களுக்கும் இந்தத் தெப்பக்குளமும், ஊருணியும் நிரம்புவதால் அதிகப் பயன் ஏற்படும் என்றும் மக்கள் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள்.

இனி எந்தக் காலத்திலும் இப்பகுதியில் குடிநீர் பிரச்சினையே வராது என்றும், இனிவரும் மழைகாலங்களில் பெய்யும் மழைநீர் கூட வீணாகாமல் தடுக்கப்பட்டு, ஒவ்வொரு முறையும், இந்த ஊருணிகளில், தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தேக்கி வைக்க முடியும் என்று ஊராட்சி மன்றத் தலைவரும், ஒன்றிய கவுன்சிலரும் தெரிவித்தனர்.

ரூபாய் 4.5 இலட்சம் மதிப்பில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் மூலம் ஒரு கிராமத்தின் குடிநீர் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டது என்று எண்ணும் போது, இத்திட்டம் ஒவ்வொரு கிராமத்திற்கும், சிற்றூர்களுக்கும் சென்று அடைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

*– ரெ. இராவணன்,*
*செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,*
*இராமநாதபுரம் மாவட்டம்.*

* * *

நம்பிக்கையோடு வாழும் ஒரு நாடாகவும் மாற்ற வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும். இந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை முடிவு செய்வதானது, நம்முடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் செயல்வடிவாக்கும் வகையில் இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரிப்பதில் கணிசமான கவனம் செலுத்தப்பட்டுள்ளதால், நம்முடைய பயணம் இதிலிருந்து தொடங்குகிறது.

பத்தாவது திட்ட காலத்தில் வளர்ச்சி வீதம் 8 சதவீதமாக இருக்க வேண்டுமென சில விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கலாம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சாதனையில் தொய்வு ஏற்பட்டிருந்தது என்பதை அவர்கள் அவர்களுடைய வாதத்தில் குறிப்பிடலாம். அந்தக் காலத்தில் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி வீதம் 5.35 சதவீதமாக இருந்தது. 8 சதவீதம் என்ற பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சி வீதத்தை அடையக் கூடியதுதானா என்று விவாதத்திற்கு நான் வர விரும்பவில்லை. இத்தகைய குறிக்கோள் நம்முன் இல்லையாயின், நாம் ஓர் உற்சாகம்கூட இன்றி அப்படியே இருந்துவிடுவோம்.

## தடைகளை எதிர்த்துப் போராட வேண்டும்

நாம் தைரியத்துடன் வீறுநடை போட வேண்டியது அவசியமானதாகும். நம்முடைய வளர்ச்சிப்பாதையில் தடங்கல், தடை, இடர்பாடு ஏற்படுமாயின் அவற்றை எதிர்த்துப் போராடி சமாளிக்க நாம் தயங்கக் கூடாது. இதற்கு, நம்மிடையே ஒன்றுபட்ட முயற்சியும், மக்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளும் இத்தகைய ஒன்றுபட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 சதவீத வளர்ச்சி வீதத்தை அடைய வேண்டுமென்ற தேசியக் குறிக்கோளை, தமிழ்நாடும் அதன் குறிக்கோளாக கொண்டுள்ளது. இந்தக் குறிக்கோளை அடைவதோடு மட்டுமல்லாமல், அதைவிட அதிகமாக அடைய நாம் பாடுபட வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென மதிப்பிட்டு பிறகு அதற்கேற்ப செயல்பட நான் உறுதிபூண்டுள்ளேன்.

## தனிநபர் வருமானம் இருமடங்காகும்

தமிழ்நாடு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 15 அம்ச சாதனை திட்டத்திற்கு வகை செய்கிறது. அதனை நான் வகுத்துள்ளேன். இந்த ரூ. 40,000 கோடி என்ற மொத்த திட்ட ஒதுக்கீட்டுடன், இது, தேசியக் குறிக்கோள் நிறைவேறுவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் 2010 ஆம் ஆண்டில், தனிநபர் வருமானத்தை, இரு மடங்காக்க வேண்டுமென்ற திட்டவட்டமான குறிக்கோளுடன், இந்த மாநிலத்தை வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் செல்கிறது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட சாதனையை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்தபோது, இந்த வளர்ச்சி வீதமானது குறிப்பாக வேளாண்மை மற்றும் உற்பத்தித் துறைகளில் தான் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. இது மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒன்றாகும். 1991 ஆம் ஆண்டின் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கை விரைவான வளர்ச்சியை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் என்ன பாதகமான அம்சம் நடந்ததோ அது ஒன்பதாவது திட்ட காலத்தில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படவில்லை.

எனவே இதனை நாம் கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. கடந்தவற்றை நாம் சரி செய்ய வேண்டிய நிலை இல்லை. எனவே, கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை நாம் கவனமாகப் பரிசீலித்து இனி ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு, நம் முன் உள்ள பத்தாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கை, பத்தாவது ஐந்தாண்டு காலத்தில் நாம் வகுத்துக் கொண்டுள்ள உயர் குறிக்கோள்களை எய்த போதுமானவையாக இருக்கின்றனவா என பார்த்துக்கொள்ள வேண்டும்.

**இந்தியாவை, பசிப்பிணி, வறுமை இல்லாத ஒரு நாடாகவும், வாய்ப்புகள் நிறைந்த, இளைஞர்கள் நம்பிக்கையோடு வாழும் ஒரு நாடாகவும் மாற்ற வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும்.**



முதன்மை துறை குறிப்பாக வேளாண்மை துறையின் வளர்ச்சிவீதம் குறைந்திருந்ததை கண்டறிந்து அவற்றை உன்னிப்பாக மதிப்பிட்டிருந்ததை நான் அறிகிறேன். கிராமப்புற ஏழைகளுக்கு அதிக வாய்ப்புகளை நல்கும் அதே நேரத்தில், வறுமையைப் போக்க சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை நம்முன் உள்ளது.




## வேளாண் வளர்ச்சியை அதிகரிக்க உத்தி

தனிநபர் நில அளவு வீதம் குறைந்து வருவது, நீர் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் பாதிப்பு ஆகிய அம்சங்கள், இந்தத் துறையில் நாம் அதிக அளவு கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களாக உள்ளன. வேளாண்மை விளைபொருள் கிடைப்பதற்கான நிலம் மற்றும் நீர் குறைவாக இருப்பதும், வேலைவாய்ப்பு குறைவாக இருப்பதும் இந்தத் துறையின் வளர்ச்சியை அதிகரிக்க உரிய உத்திகளை வகுக்க வேண்டிய அவசியத்தை உருவாக்கியுள்ளது.

ஆகையால், தமிழகம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இப்பிரச்சினையை சமாளிக்க நான் வகை செய்துள்ளேன். விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். இது வேளாண்– வளர்ச்சி அணுகுமுறை, நடப்பு நிலையில் உள்ள தரிசுநிலங்களையும் நிரந்தரமான தரிசு நிலங்களையும் கண்டறிதல், அவற்றைத் திரும்பவும் உற்பத்தி நிலைக்கு கொண்டுவருதல், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

## தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் நல்ல பலன்

தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள நிறுவன அமைப்புகள் அழைக்கப்பட வேண்டியுள்ளது. இவற்றிடம், புதிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து, புதிய அங்காடிகளை சென்றடையக்கூடிய வகையிலான வேளாண்–வணிக

உத்திகளை உருவாக்கும் பணியை ஒப்படைக்கலாம். அனைத்திற்கும் மேலாக, நீர்வரத்துப் பகுதி அணுகுமுறையைப் பின்பற்றி, சுற்றுச்சூழல் நிலைப்பாட்டை உறுதிசெய்ய நாம் விரும்புகின்றோம். இந்த முழு திட்டம், கடந்த ஆண்டு கவனமாக உருவாக்கப்பட்டுள்ளது. இப்போது இதனை மேற்கொள்ள இது தயாராக உள்ளது. இந்த நிலைப்பாட்டுத் திட்டம், நல்ல பலனை அளிக்கும் என நான் நம்புகிறேன்.

ஒன்பதாவது திட்ட காலத்தில், வேளாண்மை துறையில் வளர்ச்சி அதிகரிக்காதது குறித்து நான் ஏமாற்றம் அடைகிறேன். பத்தாவது திட்ட காலத்தில், வேளாண்மைத் துறையில், புதிய தொழில்நுட்ப உத்திகளையும், மேம்பட்ட பணிகளையும் மூலதன முதலீடுகளை அதிகமாக செய்யவும், சரியான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. விவசாயிகளுக்கு குறிப்பாக சிறிய, சொற்ப நில விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப சக்திகள் கிடைக்கச் செய்து, அவற்றை அவர்கள் பயன்படுத்துமாறு செய்ய, திட்டவட்டமான முயற்சிகளை எடுக்க வேண்டுமென நான் விழைகிறேன்.

## நவீன உற்பத்தி சக்திகள்

தானியங்கள், சிறு தானியங்கள், பயிறுகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் நவீன உற்பத்தி சக்திகளைப் புகுத்த நாம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. இதனை மிக விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. 60 ஆம் ஆண்டுகளில், இருந்த பசுமைப் புரட்சி குறித்து, தேசிய முயற்சி தேவைப்படுகிறது. மத்திய அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர் மதிப்புடைய பயிர்களை பல்திறப் படுத்துவதன் மூலம் உற்பத்தி மதிப்பைக் காட்டும் நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டமைப்பின்கீழ் உள்ள உலகச் சந்தைகளின் நிலையை நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கக் கூடாது. வேளாண்மையில் குறைவாக முதலீடு செய்திருப்பதுதான் மிகவும் கவலை அளிக்கக் கூடிய அம்சமாகும். இது நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஏற்பட்ட ஓர் அம்சமாகும். முழுவதும் பாதகமான சூழ்நிலை நிலவுகிறது. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. பிரதமர் அவர்கள் பண்ணைத் துறையில் முதலீட்டிற்கான கடன் தேவை குறித்து கருதிப்பார்த்து ஆவன செய்வார் என்று நான் கருதுகிறேன். இந்த முக்கியமான கொள்கைப் பிரச்சினை குறித்து மத்திய நிதி அமைச்சர் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் ஆகியோர் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முதன்மைத்துறை குறித்து கவனம் செலுத்து கையில், நம்முடைய நீர் ஆதாரங்கள் குறித்து கையாளுவதில் தேசிய கண்ணோட்டம் இருக்க வேண்டிய அவசியம்பற்றி அனைவரின் கவனத்தை ஈர்க்க நான் விரும்புகிறேன்.

பத்தாவது திட்ட அறிக்கையில் சரியாகக் குறிப் பிட்டவாறு அண்டை மாநிலங்களிடம் கையேந்த வேண்டிய சூழ்நிலை எங்களுக்கு இல்லை. நதிகளை இணைப்பது குறித்து, பணிக்குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

## மகாநதி–காவிரி இணைப்பு

நதிகளை இணைக்கும் திட்டத்தை முடிப்பதற்கு மிக நீண்டகாலம் ஆகும் என்று, அதாவது 12.12.2016 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டு திட்ட கோட்பாட்டில், மகாநதியையும், காவிரியையும் இணைக்கும் முதல் கட்டப்பணி சேர்க்கப் பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இதுபோன்று மேற்கு நோக்கி ஓடும் பம்பா, அச்சன்கோயில் ஆற்றை வைப்பாறுடன் இணைத்தல் போன்று, தென் தீபகற்பத்தில் நதி இணைப்புகள் தமிழ்நாட்டிலுள்ள வறண்ட பகுதிகளுக்கு உயிரூட்டும் ஆதாரமாக விளங்கும் என்பதால் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவை முடிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலம் என்பதால், இம் மாபெரும் திட்டத்தை பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக



**நம்முடைய வளர்ச்சிப்பாதையில் தடங்கல், தடை, இடர்ப்பாடு ஏற்படுமாயின் அவற்றை எதிர்த்துப் போராடி சமாளிக்க நாம் தயங்கக் கூடாது. இதற்கு, நம்மிடையே ஒன்றுபட்ட முயற்சியும், மக்கள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளும் இத்தகைய ஒன்றுபட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.**

மேற்கொண்டு விரைந்து இப் பணியை முடிக்க எண்ணியுள்ளோம்.

மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியை பகிர்ந்தளிப்பதற்கான முறையில் உள்ள முரண்பாடுகள் குறித்து கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நடுத்தர, பெரும் பாசனத் திட்டங்கள் உள்ள மாநிலங்களுக்கு திட்டங்கள் ஒதுக்கப்படுகிறது. தன் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் முழுவதையும் பயன்படுத்தி விட்டு, சட்டப்படி சேர வேண்டிய பங்கு கூட மறுக்கப்பட்டு விட்டதால், தற்போது மிகவும் பற்றாக்குறை நிலையிலுள்ளது.

## மழைநீர் சேகரிப்புக்கு நிதி ஒதுக்க வேண்டும்

தமிழகம் இந்த அளவு முறையால் இரட்டிப்பாகப் பாதிக்கப்படுகிறது. நதிகளை இணைப்பதற்கான தேசியத் திட்டம் வகுக்கப்படும் இச்சூழ்நிலையில் மாநிலம் பொறுப்பேற்கும் பாசனத் திட்டங்களுக்குப் பதிலாக தரிசு நில மேம்பாடு, நீர்வரத்து மேம்பாடு, மழை நீரைச் சேகரித்தல் போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்க இயலும் வகையில் திட்டக் கூறு திருத்தப்படலாம் என்று நான் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். நீரைத் திறமையாகப் பயன்படுத்துவது குறித்து உறுதியான தகவல் அனுப்பப்பட வேண்டும். இதுதான் சிறந்த வழியாகும்.

## ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏமாற்றம்

இரண்டாவதும், மிக முக்கியமானதுமான தயாரிப்புத்துறை பற்றி நான் தற்போது கூற விரும்பு கிறேன். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டச் சாதனை ஏமாற்றமளிப்பதாக உள்ளது. சீரமைப்பின் முதல் கட்டப்பணி முடிவடைந்து விட்டது. தற்போது மாநிலங்கள் இரண்டாம் கட்ட சீரமைப்புப் பணியைத் தொடங்கியுள்ள நிலையில் மத்திய அரசிடம் ஆர்வமற்ற போக்கு காணப்படுகிறது.

தாராளமயமாக்கலுக்குப் பின்னர், தயாரிப்பு துறையில் வியக்கத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் நினைத்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. பல்வேறு காரணங்களினால் இந்திய தயாரிப்புப் பொருள்கள் போட்டி போடக் கூடிய அளவுக்கு இல்லை என்பதை அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

## மாநிலங்கள் ஆவலாக உள்ளன

மத்திய அரசும், மாநிலங்களும் எடுத்துரைக்க வேண்டிய பிரச்சினைகளும் இதில் அடங்கும். புதிய உலக மயமாக்கல் கொள்கையில் இந்திய தயாரிப்பு பின்னடைந்துள்ள நிலையில் மத்திய அரசும், மாநிலங்களும் எடுத்துக் கொள்ள வேண்டிய இரண்டாவது சீரமைப்பு பற்றிய விவரங்களைப் பெற நான் விரும்புகிறேன். ஏற்றுமதி வாயிலாக தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல நான் கருதுகிறேன். இதனை அடைய நாங்கள் மிகவும் ஆர்வமுடன் உள்ளோம்.

1.4.2002–இல் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட வரியை மாநிலத்தில் செயற்படுத்துவதால் ஏகமனதாக முடிவு செய்ததிலிருந்து தெரிய வருகிறவாறு

முதலீடு குறைவாக இருந்தாலும் கொள்கை அளவிலும், நடைமுறைகளிலும் சீர்திருத்தங்கள் செய்து, சிறந்த நிருவாகத்தின் மூலம் இத்துறைகளில் நாம் இன்னும் முன்னேறிச் செல்வது அடிப்படைத் தேவையாகும் என்பதை இது குறிக்கிறது.

ஏற்றுமதியின் வளர்ச்சி வீதம் அதிகரித்துக் கொண்டே போகும் தமிழகம் போன்ற சில மாநிலங்களில், இப்போக்கினை ஊக்குவிக்க அதிக அளவில் முதலீடு செய்வது அவசியமாகலாம்.

அடுத்து நான் குறிப்பிட வேண்டியது நாட்டின் முக்கிய அம்சமான உயர் அளவு சேமிப்பு பற்றியதாகும். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக அளவு முதலீடு செய்ய அடிப்படை தேவையாதெனில், சேமிப்புத் திறனை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிப்பதேயாகும். பொதுத் துறைகளில் செலவை வெகுவாகக் குறைப்பது அவசியமாகும். நாம் சேமிப்பை ஊக்குவித்து தேவையான முதலீடுகள் வகையில் இலக்கிடப்பட்ட அளவிற்கு இச்சேமிப்பை நாம் பெற வேண்டும்.

### பணிக்குழுவின் அறிக்கை அதிர்ச்சி அளிக்கிறது

சிறுசேமிப்பிற்குரிய வரி விலக்குகள் அனைத்தையும் மத்திய அரசு நீக்க வேண்டும் என்று, நேரடி வரிகள் குறித்த பணிக்குழு தன்னுடைய அறிக்கையில் பரிந்துரை செய்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

இது மாநிலங்களின் வளர்ச்சியை தடை செய்வதோடு, தொடக்க நிலையிலேயே பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல்பாடுகளை நிறைவு செய்ய இயலாமல் போகும். மாநிலங்களின் முதலீடுகள் கணிசமான அளவிற்கு அதிகரிக்க வேண்டும் என்று நாம் ஒருபுறம் எதிர்பார்த்திருக்க, இதுபோன்ற திட்டங்களுக்குரிய நிதியுதவியை செய்யாமல் மாநிலங்களுக்கு கிடைக்கக்கூடிய நிதியையும் கிடைக்கச் செய்யாமல் விடுவது சற்றும் பொருத்தமற்றதாகவுள்ளது.

சிறுசேமிப்பு வரி விலக்குகளை ரத்து செய்யவேண்டும் என்ற செயற்குறிப்பை கைவிட்டு, இனி வரும் வரவு-செலவுத் திட்டத்திலும், தற்போதுள்ள பயன்களை நீட்டிக்கச் செய்ய வேண்டும் என்று பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வரி விதிப்பை எளிமையாக்குவது குறித்து பணிக்குழு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நான் முழு ஆதரவை அளிக்கிறேன்; ஆனால், மாநிலத் திட்டங்களில் அதிலும், பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் தொடக்க நிலையில், இந்த அளவிற்கு பொறுப்பேற்க வேண்டாம் என்று நான் கருதுகிறேன்.

### கூடுதல் வேலைவாய்ப்பை அளிப்பதே லட்சியம்

எந்தவொரு திட்டத்தின் வெற்றியும், அதனால் கிடைக்கக்கூடிய பயனை பொறுத்தே அமையும். கூடுதல் வேலைவாய்ப்பு அளிப்பதே நம்முடைய அடிப்படை கொள்கையாகும் என்பதை இத்திட்டம் குறிப்பிடுகிறது. 12.05 சதவீதம் என்ற அளவில் வேலைவாய்ப்பு இல்லாத மாநிலமான நம் தமிழ்நாடு மாநிலமும், மாநிலங்களிடையே மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

இது இம்மாநிலத்தின் கடுமையானப் பிரச்சினையாகும். சமூக ரீதியில் பார்த்தால் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு வாய்ப்பு வளத்தையும் நாம் மறுப்பது, கடுமையான விளைவுகளை ஏற்படுத்துவதோடு விரும்பத்தகாத வகையில் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எளிமையாக வழிகோலி விடும் வாய்ப்புகள் வழங்கும் இக்கொள்கை, கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்று நான் கருத்து தெரிவிக்க விழைகிறேன்.

மேலும், கூடுதல் வேலை வாய்ப்பு தொடர்பாக நாம் திட்டமிட்டுள்ள கொள்கையை நாம் எய்த இயலாமல் போனால், இந்நிலையைச் சீரமைக்க மீண்டும் நாம் இங்கு கூடிப் பேச வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் நான் கருதுகிறேன். கிராமப்புறத்தை விட நகர வறியோர்கள் சதவீதம் அதிகம்.

### வறுமை குறைப்பு

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மற்றொரு அடிப்படை கொள்கை, வறுமையை ஒட்டுமொத்தமாக



**சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, நகர்ப்புறப் பணிகள், துறைமுகங்கள் ஆகியவை அடங்கிய உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாட்டின் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் தனி முன்னுரிமை அளித்துள்ளோம்.**

குறைப்பதேயாகும். மாநிலத்தின் குறிப்பிடத்தக்க இலக்கான வறுமை குறைப்பு, நம்முடைய வரைவுத் திட்ட அறிக்கையிலேயே சேர்க்கப்பட்டுள்ளது என நான் அறிகிறேன். வறுமை சதவீதத்தை இந்த அளவிற்கு குறைப்பதற்கு நாம் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லாத இந்நிலையில், அடிப்படைத் துறைகளைப் பாதித்துக்கொண்டிருக்கும் நிலம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நம் தமிழகத்திற்கு இந்த வறுமை குறைப்பு பெரும் பிரச்சினைக்குரிய முயற்சியாக இருக்கும் என நான் இங்கு சுட்டிக்காட்ட விழைகிறேன். நம்முடைய திட்டவட்டமான இந்த வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு தன்னுடைய முழு ஆதரவை அளிக்க வேண்டும். ஊரகப் பகுதிகளிலுள்ள வறியவர்களின் சதவீதத்தைக் காட்டிலும், நகர்ப் பகுதிகளிலுள்ள வறியவர்களின் சதவீதம் மிக மிக அதிகமாகும்; எனவே, இதுகுறித்தும் நாம் இங்கு வலியுறுத்துவது அவசியமாகும்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் கூறின் ஒரு பகுதியாக, மாநிலத்தின் குறிப்பிடத்தக்க வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கென உலக வங்கி போன்ற வெளிநாட்டு முகவரமைப்புகள் மூலம் நிதியுதவி பெறுவது பேருதவியாக அமையும்.

வளர்ச்சி என்பது அவசியமான நிலைமையாக இருக்கும்போது, நமது மக்கள் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தை எய்துவது என உறுதியாக சொல்ல முடியாது. மனித மேம்பாடு, வறுமை ஒழிப்பு குறித்து உள்ள விரிவான விவரங்கள், குறைவான வளர்ச்சி வீதத்தைக் கொண்டு ஏழை மக்களுக்கு வாழ்க்கை எவ்வாறு செழுமையாக இருக்க முடியும் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன.

### மனித மேம்பாடு தமிழகம் 3ஆவது இடம்

தொன்று தொட்டு தமிழ்நாடு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மனித மேமபாடு குறியீட்டெண்ணில் 3ஆவது இடம் வகிக்கிறது. 1991இல் தொடங்கப்பட்ட தாராளமயமாக்கும் நடைமுறையில், கட்டுமான சரிக்கட்டல் நடைமுறையிலிருந்து ஏழை மக்களைப் பாதுகாக்க திறமையான சமூக பாதுகாப்பு வலையின் அவசியம் குறித்து நான் இந்த அமைப்பில் பேசியுள்ளேன். 1995 முதல் இது தேசிய சமூக நிதியுதவித் திட்டமாக உள்ளதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வி, சுகாதாரம், சத்துணவு சமூக நலன், வீட்டு வசதி, உடல்நலன் போன்ற சமூக அடிப்படை வசதியில் நான் மேம்பாட்டைக் காண்கிறேன். வாழ்க்கைத் தரத்தில் இது உண்மையான மேம்பாடு ஆகும். இதற்கு உயரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வீட்டு வசதி முதலீடு செய்வதால் அதிக வேலைவாய்ப்புகள் உருவாகும். வரி சீர்திருத்தம் காரணமாக நாம் வீட்டு வசதிக்கான ஊக்குவிப்பை விட்டு விடக்கூடாது. ஏனெனில், வீட்டு வசதியில் ஏற்படும் சேமிப்பு வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தும்.

வறுமை குறைப்பு, கல்வியிலும், ஊதியத்திலும் ஆண் பெண் அளவு இடைவெளியைக் குறைத்தல், மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தில் குறைப்பு, கல்வி அறிவு உயர்வு, சிசு மரணம் வீதம் குறைப்பு, மகப்பேறு மரணம் குறைப்பு ஆகியவை உட்பட சில குறிப்பிடத்தக்க குறியீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் விரும்பத்தக்கதும்,

இரண்டாம் கட்ட சீர்திருத்தப் பணிகளைத் தொடங்க மாநிலங்கள் ஆவலாக உள்ளன.

நடைமுறைகளை எளிமையாக்கல், பண்டமாற்றுச் செலவுகளை நீக்குதல், ஒழுங்கற்ற நிலையைச் சீராக்குதல், துறைமுகங்களிலும், சுங்கத் துறையிலும் பொருள்களை கையாளும் நேரத்தைக் குறைத்தல், வட்டி வீதங்களைச் சீராக்குதல், தொழிலாளர் நலச் சீர்திருத்தங்கள், தொழிலாளர் உற்பத்தித் திறன், எரிசக்தி விலையை சீராக்குதல், வழங்கப்படும் எரி சக்தியின் தரத்தை மேம்படுத்தல் நம்மிடம் இவ்வாறு விரிவான பணிகள் உள்ளன.

இவற்றைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் செய்து முடிக்க வேண்டும். நிகழ்ச்சி நிரலில் தயாரிப்புத் துறையை மீண்டும் முன்னுரிமை இனமாக குறிப்பிடலாம்.

## உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதி

சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, நகர்ப்புற பணிகள், துறைமுகங்கள் ஆகியவை அடங்கிய உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாட்டின் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் தனி முன்னுரிமை அளித்துள்ளோம்.

தக்க சட்டமியற்றுவதன் மூலம் இத்துறையில் தனியாரையும் ஈடுபடுத்த உள்ளோம். இப்பெரும் பணிக்கு போதுமான மூலதனத்தை நாம் கண்டறிய வேண்டியுள்ளது. மத்திய அரசால் இப்பணிக்கு உதவி செய்ய இயலும்.

## சிறுதொழில் வளர்ச்சிக்கு ஊக்கம்

சிறு தொழில்களுக்கு உரிய கொள்கை இல்லாதது கண்டு நான் மிகவும் கவலைப்படுகிறேன். சிறுதொழில் மூலம் சீனா, அபரிமிதமான வளர்ச்சி அடைந்தது என்று நான் அறிகிறேன். துரதிருஷ்ட வசமாக இந்தியாவில் சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க முயற்சி ஏதுமில்லை. நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டால்தான் இத்தகைய வளர்ச்சியை அடைய இயலும். இத்துறையில் புதிதாக வேலை வாய்ப்பை ஏற்படுத்த இயலும் என்பதோடு, தொழில் வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. தொழில்நுட்ப மேம்பாடு, உலகத் தரத்திற்கேற்ப பொருள்களின் தரத்தை மேம்படுத்தல், கடன்வசதி ஆகியவை அடங்கிய புதிய தொழில் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

இதனைக் குறுகிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும். இத் திட்டம் ஆக்கபூர்வமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. சிறுதொழில் முனைவர்களின் உண்மையான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வங்கிகளிடம் கடன் பெறும் வசதியை ஏற்படுத்த மத்திய நிதியமைச்சர் நடவடிக்கை எடுத்து பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இதுவே உரிய தருணமாகும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அறிக்கையில் சேவைத்துறை குறித்து போதிய கவனம் செலுத்தவில்லை என்பதை அறிந்து நான் வியப்படைகிறேன்.

## சேவைத்துறையில் தமிழகம் கடுமையான முயற்சி

உண்மையில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத் துறையில் தான் வளர்ச்சி வீதம் அதிகமாக இருந்தது. அடுத்த பத்தாண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட முக்கிய வேலைவாய்ப்பு இலக்கு கூட இத்துறையில்தான் அடையப்பெற்றது. பிரதமர் அறிவித்தவாறு அடுத்த பத்தாண்டுகளில் 100 மில்லியன் வேலை வாய்ப்புகளை இத்துறை மூலம் ஏற்படுத்த இயலும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இருப்பினும், இலக்கிடப்பட்ட வளர்ச்சி வீதங்களை எய்தினால் இந்த அளவுக்கு புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த இயலும் என்று ஊகிக்கிறோம். அடிப்படை வசதிகளில் முதலீடு செய்தல், மூலதனப் பயன்பாட்டை மேம்படுத்தல், முதலீடு செய்வதற்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தல், சிறந்த நிருவாகம் ஆகியவை சேவைத்துறையில் ஆரோக்கியமான வளர்ச்சி வீதத்துக்கு வழி வகுக்கும் என்பது வெளிப்படை.

நாட்டிலே தொழில் நுட்ப கல்வி பெற்றவர்கள் அதிகமாக உள்ள தமிழ் நாட்டில், சேவைத் துறைகளில் அதிக வாய்ப்புடன், அறிவாற்றல் மிகுந்த சமுதாயத்தை ஏற்படுத்த இம் மாநிலம் கடுமையாக முயற்சி செய்யும்.



## வளர்ச்சிப் பாதை தொலைவில் இல்லை

தகவல் தொழில் நுட்பத்துறையில் மூலதனம் குறைந்ததால், அண்மை ஆண்டுகளில் வளர்ச்சி வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் செலுத்தும் நாள் தொலைவில் இல்லை.

எனவே மாறிவரும் உலக சூழ்நிலைக்குத் தக்கவாறு தங்களை மாற்றிக் கொள்ளும் தொழில் நுட்பாளர்களுக்கு போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாங்கள் முனைப்பாக உள்ளோம்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறையை சேவைத் துறையாக கருதுகிறோம்.

இத்துறையில் பாரம்பரியமாக உள்ள பிரிவுகளுடன் இப்பகுதி குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம். சேவைத் துறையில் விரைவு படுத்தப்பட்ட வளர்ச்சி பெற ஏதுவான, சரியான சூழ்நிலையை அளிக்கும் நமது திறமையைப் பொறுத்தே, பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் வெற்றி உள்ளது.

> **பத்தாவது ஐந்தாண்டு திட்டக் கோட்பாட்டில், மகாநதியையும், காவிரியையும் இணைக்கும் முதல் கட்டப்பணி சேர்க்கப்பட வேண்டும்.**

பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சி தொடர்பான முக்கிய அம்சங்கள் சிலவற்றையும் நான் இங்கு சுருக்கமாகத் தெரிவித்துள்ளேன். நாம் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. உலகப் பொருளாதார வீழ்ச்சியும், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார நிலை வளமாக இல்லாதிருப்பதும் கவலையளிப்பதாக உள்ளது.

இருப்பினும், இந்த அளவிற்கு வீழ்ச்சியும் பாதகமான பருவநிலையிலும் அடுத்தடுத்து வரும் இந்த இருண்ட சூழ்நிலையிலும் நம் இந்தியப் பொருளாதாரம் மீட்சி பெறும் நிலையில்தான் உள்ளது என்பது நம்பிக்கை அளிப்பதாகவே இருக்கிறது.

## நம் நாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டும்

மேலும், நம் நாட்டினை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டும்; நம்முடைய இச்சூழ் நிலையை சீர்படுத்தவும் வேண்டும்; இது நம்மால் இயலும் என்ற நம்பிக்கை நிலையை நம்மிடையே ஏற்படுத்துகின்றது.

பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்குவதற்கு தேவையான முக்கிய பொருளாதார அம்சங்கள் குறித்துதான் நான் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறதே தவிர உலக அளவிலான பிரச்சினைகளை நான் இங்கு ஆராய விரும்ப வில்லை. சில முக்கியப் பிரச்சினைகள் பற்றி மட்டுமே நான் கவனம் செலுத்த விழைகிறேன்.

மதிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சி வீதத்தைப் பெருக்குவதற்குத் தேவையான முதலீடு குறித்து பரிசீலிப்பதே நம்முடைய அடிப்படை கருத்தாகும். திறமையான ஆதாயத்தைப் பெறுவதன் மூலம் மூலதனத்தைப் பயன்படுத்தி அதிக அளவு உற்பத்தித் திறனை பெறுவதே அடிப்படை கொள்கையாகும்.

## தமிழகத்தில் ஏற்றுமதியில் முன்னேற்றம்

இக்கருத்திற்கு எவரும் மறுப்பு தெரிவிக்க மாட்டார்கள் என நான் கருதுகிறேன். தேவைப்படும்

பின்பற்றப்பட வேண்டியதுமாக இருப்பதால், இந்த உண்மையான பயன்களின் அடிப்படையில்தான் நல்ல நிருவாகம் மிக முக்கியமான அம்சமாக திகழ்கிறது.

இந்த 10ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், முன்பிருந்ததைவிட, மீதம் குறித்த ஆக்கபூர்வ அனுமானத்துடனும், மூலதன விகிதாச்சாரத்துடனும் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள இடைவெளி, நல்ல நிருவாகத்தின் மூலம் கிடைக்கக்கூடிய பயனால் நிரப்பப்பட முடியும்.

### நல்ல நிர்வாகத்திற்கு ஒருமித்த முயற்சி

நல்ல நிருவாகத்திற்கு என்ன தேவை என்பது பற்றியும் அதனைச் செயல்படுத்த உள்ள செயல் திட்டம் பற்றியும் நான் ஒருமனதாக முயற்சி எடுத்துள்ளேன்.

அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில் நான் இதுபற்றி திட்டவட்டமாகவும், தெளிவாகவும் விளக்கியுள்ளேன். திட்டங்களுக்காக நாம் செலவிடும் வழிமுறை அல்லது திட்டங்களுக்காக நாம் எவ்வளவு செலவு செய்யப் போகிறோம் என்பதைவிட திட்டங்கள் குறித்து நாம் எவ்வாறு செலவு செய்யப் போகிறோம் என்பது பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட உத்தி குறித்த என்னுடைய கருத்தாகும்.

இங்கு நல்ல நிருவாக நடவடிக்கைகள் முன்னிலை வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நல்ல நிருவாக முறையில் ஆக்கபூர்வமான மற்றும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நாங்கள் நம்புகிறோம். தடைகள் எவையேனும் இருந்தால் அவை அகற்றப்படும்.

மதிப்புக் கூட்டப்பட்ட மின்னியல் நிருவாக நடைமுறைகளை உருவாக்குவதில் தகவல்–தொழில்நுட்ப ஆற்றலைப் பயன்படுத்தி நாமும் வேகமாக முன்னேறி வருகிறோம்.

நான் இதுகுறித்து விரிவாக எடுத்துரைக்க நேரம் செலவிட விரும்பவில்லை. ஆனால், நல்ல நிருவாக நடைமுறைகளுக்கு உறுதி அளிப்பதில் தமிழ்நாடு முன்னேறி வருகிறது என்று மட்டுமே நான் கூறுவேன்.

கடைசியாக, வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து களைய வேண்டும் என்று நான் விழைகிறேன். மத்திய அரசின் திட்டங்களுக்கும், மாநிலத் திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்குவது சிக்கலான பிரச்சினையாகும்.

மத்திய அரசின் நிதியுதவி என்பது மாநிலங்களின் வசதிக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய காரணங்களுள் ஒன்றாகும். மத்திய நிதி அமைச்சர் இதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். மத்திய வருவாயும் வலுவானதாக இல்லை. இது பெரிதும் வருந்தத்தக்க ஒன்றாகும். பிரதமர் அவர்களே, இது சிக்கலான பிரச்சினையாகும். இதை உடனடியாக கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 8.6 சதவீதம் என்று குறைவாக உள்ள மத்திய வரி வருவாயை அடுத்த ஆண்டிலிருந்து 10 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்க வேண்டும்.

### மாநில நிதிப் பிரச்சினையை தாராள மனதுடன் கருத வேண்டும்

மாநிலங்களைப் பொறுத்த வரையில் அவற்றுக்குப் பெருமளவிலான நிதிப் பிரச்சினைகள் உள்ளன. 2002 அக்டோபரில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் பிரச்சினைகள் யாதொன்றுக்கும் தீர்வு காணப்படவில்லை. பிரதமர் அவர்களே! மாநிலங்கள் சந்தித்துள்ள கடுமையான நிதிப் பிரச்சினையை தாராள மனதுடனும் பரந்த மனப்பான்மையுடனும் கருதிப் பார்த்து மாநிலங்களுக்கு கடன் நிவாரணமும் கடனை மாற்றுவதற்கான உதவியும் அளிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத் திட்டக் கடன்கள் குறித்த வட்டி விகிதத்தை 4 சதவீதப் புள்ளிகளாவது குறைக்க வேண்டியது அவசியமாகும். இல்லையெனில், பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை, நோக்கம் எதுவும் இல்லாத உயர்ந்த எண்ணம் மட்டுமே உள்ள ஓர் அறிக்கையாக ஆகிவிடுகின்ற பேராபத்தை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சிறிது முயற்சி மேற்கொண்டால், மத்திய அரசும் மாநில அரசுகளும் நிதிச் சீர்திருத்தங்கள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாம் ஒருமித்த முடிவுக்கு வரலாம். நம்மை மேம்பாட்டுப் பாதை நோக்கி முன்னேறச் செய்யக் கடுமையான–



இங்கு நல்ல நிருவாக நடவடிக்கைகள் முன்னிலை வகிக்கின்றன. தமிழ்நாட்டில் நல்ல நிருவாக முறையில் ஆக்கபூர்வமான மற்றும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நாங்கள் நம்புகிறோம். தடைகள் எவையேனும் இருந்தால் அவை அகற்றப்படும்.

ஆனால் அவசியமான முடிவுகள் குறித்து 2002 அக்டோபரில் நடைபெற்ற கூட்டத்தில் நான் எடுத்துக் கூறினேன்.

நம்மைத் தடுமாறி ஓடச் செய்யும் ஒரே நோக்கத்துடன் நிதிச் சீர்திருத்தங்கள் பற்றி வினா எழுப்பி எதிர்க்கட்சிகளிடமிருந்து சலசலப்பு எழுந்துள்ளதையும் நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

பிரதமர் அவர்களே! நிதிச் சீர்திருத்தங்கள் குறித்த குறைந்தபட்ச திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும், அதை மத்திய அரசும், அனைத்து மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியின் அளவில் கடுமையான முரண்பாடுகள் உள்ளதை நான் காண்கிறேன்.

திறமையற்றவர்களுக்கும், அலட்சியமாக நடந்து கொள்பவர்களுக்கும் மத்திய அரசின் நிதியுதவி அதிக அளவு செல்கிறது.

அதிக அளவு நிதியுதவி அளிப்பது சிறந்த சாதனைக்கு உத்தரவாதமளிக்கும் என்ற தவறான கருத்திலிருந்து இது எழுந்துள்ளது. சாதனை படைப்பவர்களுக்கு மட்டுமே வெகுமதிகளும், ஊக்கத் தொகைகளும் வழங்கப்பட வேண்டும். இதுவே மெய்யான கருத்தாகும். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இது குறித்து ஆராயப்பட வேண்டும். இந்தக் கொள்கை உறுதியாகப் பின்பற்றப்படா விட்டால், நல்ல நிருவாகம் என்ற பேச்சு பொருளற்றதாகிவிடும்.

மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். மாநிலங்கள் ஒருபோதும் பின்தங்கிய நிலையில் இருக்கக் கூடாது.

### நிதியுதவிக் குறைப்பால் தமிழகம் பின்னோக்கும் வாய்ப்பு

பதினோராம் மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலம், அதன் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவி குறைக்கப்பட்டதால் மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது. நன்றாகச் செயல்படுகின்ற ஒரு மாநிலத்தை, பின்னோக்கி இழுப்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

பதினோராம் மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளையடுத்து நிதிச் சீர்திருத்த வசதிகள் போதிய அளவுக்கு செய்யப்படாததை நான் ஏற்கெனவே கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

மாநிலங்கள் பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்த இயலும் வகையில் செய்யப்படுவதற்கு கணிசமான அளவுக்கு நிதிச் சீர்திருத்த வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். அது, நிதிச் சீர்திருத்தங்களை முழுவதுமாக மேற்கொள் வதற்கு முன், மாநிலத்தின் நிதிநிலையை நிலைப்படுத்தத் தேவையான நிதியை வழங்கும்.

நிதிச்சீர்திருத்தங்கள் குறித்த குறைந்தபட்ச திட்டம் ஒன்றை உண்மையில் செயல்படுத்தியுள்ள மாநிலங்களுக்கு, நடப்பு நிதியாண்டில் இத்தகைய வசதியை அளிக்கும்படி மத்திய நிதியமைச்சரை நான் கேட்டுக் கொள்ளலாமா?

இடைப்பட்ட காலத்தில் மாநிலங்களுக்குக் கட்டமைப்பு சரிக்கட்டல் வசதி மூலம் நிதியுதவி

வழங்கலாம். அதனால் நீண்ட காலத்தில், அதிக அளவில் சீர்திருத்தங்கள் ஏற்படலாம்.

மாநிலங்கள் எதிர்நோக்கியுள்ள சில கடுமையான இடர்ப்பாடுகள் குறித்தும் நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். 1.4.2003லிருந்து மதிப்பு கூட்டப்பட்ட வரிமுறைக்கு நாம் மாறுகிறபோது, பெருமளவிலான வருவாய் இழப்பை நாம் எதிர்நோக்க வேண்டிய இடர்ப்பாடு உள்ளது.

இதனை 3 ஆண்டுகால அளவில் 100 சதவீதம் ஈடு செய்ய வேண்டும். அவ்வாறே மத்திய விற்பனை வரியிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையில் ஏற்படும் குறைவு 100 சதவீதம் ஈடு செய்யும் நிரந்தரமான ஏற்பாடு ஒன்றின் மூலம் ஈடு செய்யப்பட வேண்டும்.

துணைக்குழுக்கள் கவனிக்க வேண்டிய 4 விரிவான பிரச்சினைத் தொகுப்புகளை பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினைகள் குறித்து ஒருமித்த முடிவு எடுக்க வேண்டிய அவசியம் குறித்து நான், என்னுடைய உரையில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இந்தத் துணைக்குழுக்கள் அமைப்பது பற்றிய செயற்குறிப்பை நான் வரவேற்கிறேன். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையில் கொண்டுவரப்பட்டுள்ள மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான சில பிரச்சினைகள் குறித்து நான் கவனம் செலுத்தியுள்ளேன்.

**மூலதனத்திற்குப் பதிலாக வளர்ச்சியின் முக்கியக் கருவியாக மனித ஆற்றலைப் பயன்படுத்தி வேகமாக வளரும் பொருளாதாரத்தில் புதிய இலக்குகளை அடைவதற்கு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் கோட்பாட்டினை நாம் வகுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.**

திட்ட அறிக்கை ஒன்று, உயர்ந்த எண்ணமும், குறைவான நடவடிக்கையும் உள்ள அறிக்கையாக மட்டுமே ஆகிவிட அனுமதிக்க இயலாது. இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதில் மக்கள், மத்திய அரசு மாநில அரசு ஆகிய மூவருக்குமே பொறுப்பு உள்ளது. மக்களும் இந்நடைமுறையில் பங்கேற்க வேண்டியுள்ளது. வளர்ச்சி மேம்பாட்டை எய்துவதற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

நாம் மிகவும் போட்டிபோடும் உலகச் சூழலில் இருப்பதால், இந்நிலை நீடிப்பதற்குக் கூட நாம் வெகு விரைவாகச் செயல்பட வேண்டிய..... நம்முடைய பொருளாதார நிலை பற்றி நாம் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது.

## பொருளாதாரப் புரட்சிக் கோட்பாடு

ஆசியாவில் இந்தியா மேலும் ஒரு ஏழை நாடாக இருக்க இயலாது. இந்தியாவில் மனிதவள ஆற்றலைப் பொறுத்தவரையில் உயர் பொருளாதார சக்தி வாய்ந்த நாடாக உருவாவதற்கு வாய்ப்பு உள்ளது.

மூலதனத்திற்குப் பதிலாக வளர்ச்சியின் முக்கிய கருவியாக மனித ஆற்றலைப் பயன்படுத்தி வேகமாக வளரும் பொருளாதாரத்தில் புதிய இலக்குகளை அடைவதற்கு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் கோட்பாட்டினை நாம் வகுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இவ்வாறு செய்வதற்கு, அறிவார்ந்த பொருளாதாரத்தை நாம் விரைவில் அடைய வேண்டும். இதுதான் நம்முடைய புதிய தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவ்வளர்ச்சியை அடைய இயலும் வகையில் நாம் ஒருங்கிணைந்து கூட்டாக செயல்பட வேண்டும்.

*– புதுடெல்லியில் 21.12.2002 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*



# புல்லாங்குழல்களே பாடுங்கள்!



புல்லாங் குழல்களே! புல்லாங் குழல்களே!
பூபாள ராகம் பாடுங்கள்! – எங்கள்
புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சிக்குப்
பொங்கல்நல் வாழ்த்துக் கூறுங்கள்!

எல்லா நலங்களும் எல்லா வளங்களும்
எல்லார்க்கும் வந்து சேரட்டும் – தினம்
ஏழ்மைத் துயர்தனில் ஆழ்ந்து கிடப்பவர்
இன்னல்கள் யாவும் தீரட்டும்!

கானக் குயில்களே! கானக் குயில்களே!
காவியம் நீங்களும் பாடுங்கள்! – சுவைக்
கன்னல் நிகர்த்தஎம் அன்னை பெயர்சொல்லிக்
கலாப மயில்களே ஆடுங்கள்!!

வானம் அளந்திடும் வையம் முழுவதும்
வாழ்கென்று மேகம் முழங்கட்டும்! – அது
மாதம் மும்மாரி மாறாமல் பெய்து
வளம்பல வாரி வழங்கட்டும்!!

நீலக் கடல்களே! நீலக் கடல்களே!
நீங்களும் கைகொட்டி ஆடுங்கள்! – மாந்த
நேயம் மிகுந்தஎம் தூய தலைவிக்கு
நித்தமும் வாழ்த்துப் பாடுங்கள்!



பாலை வனங்களைச் சோலை வனங்களாய்
மாற்றிடும் திட்டத்தைப் போற்றுங்கள்! – இந்தப்
பாரில் உயர்ந்தது செந்தமிழ் நாடென
ஆக்கிடும் சேதியைச் சாற்றுங்கள்!

பொங்கல் பிறந்தது ! பொங்கல் பிறந்தது
நாட்டின ரேஒன்று சேருங்கள் ! – நம்
புரட்சித் தலைவியின் திட்டங்கள் வென்றிட
ஆதர வாய் இங்கு வாருங்கள்!

கங்கை வழிந்திடல் போலநம் நாடெலாம்
பொங்கி வழியட்டும் இன்பங்கள்! –இங்கு
காணும் பலப்பல பேதம் ஒழியட்டும்
முற்றும் தொலையட்டும் துன்பங்கள்!

புலவர் **புலமைப்பித்தன்**




# கல்விக்காக சிறப்பான பங்களிப்பை நல்கிய பெண்களுக்கு விருது

**மாண்புமிகு முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பு**

அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகத்தின் 12வது பட்டமளிப்பு விழாவில் 2.12.2002 அன்று கலந்து கொண்டு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு உரை :

**சிறப்புமிக்க பல்கலைக்கழகம்**

அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகத்தின் 12வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதும், என் முன்பாக கூடியுள்ள தனிச் சிறப்பு மிக்கவர்கள் மத்தியில், பட்டமளிப்பு உரை நிகழ்த்துவதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. பெண்கள் சம்பந்தப்பட்ட உயர் கல்வி தேடலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிறப்புமிக்க பல்கலைக்கழகம், மிகப் பொருத்தமாக, நம் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த சிறந்த மனிதாபிமானியும், நோபல் பரிசு பெற்றவருமான அன்னை தெரசா என்கிற பெருமைக்குரியவரின் பெயரில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது.

**தொலைநோக்குப் பார்வையின் விளைவு**

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் விளைவுதான், இந்த மதிப்புமிகு பல்கலைக்கழகம் தோன்றி நிலை பெற்றிருப்பதற்குக் காரணம். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1977–1987ல் இருந்தபோதுதான், தமிழ்நாட்டு பெண்களின் முன்னேற்றத்திற்கும், அதிகாரம் பெற்ற பொறுப்புகளில் அமரவுமான பல்கலைக்கழகமாக இதனை உருவாக்கினார். அந்த சமயத்தில் பாரதியின் நூற்றாண்டு விழா 1981–82ல் கொண்டாடப்பட்ட நேரம். அதே நேரத்தில்தான் டாக்டர் எம்.ஜி.ஆர்.அவர்களுக்கு தமிழ்நாட்டில் பெண்களுக்கெனத் தனித்த பெண்கள் பல்கலைக் கழகத்தை துவக்கும் எண்ணம் மனதில் வித்தூன்றியது. 1984ஆம் ஆண்டில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்னை தெரசாவுடன் கொடைக்கானலுக்கு சென்றார். சென்ற இடத்திலேயே இந்த சிறந்த பல்கலைக்கழகத்தை அமைப்பதாக அறிவிப்பு செய்தார்.






**உலகில் இதற்கு இணை இல்லை**

கல்வியின் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தலும் மற்றும் முற்றிலும் பெண்களின் மேம்பாட்டிற்காகவே, இப்பல்கலைக்கழகம் இருக்க வேண்டும் என்றும், உலகில் இதற்கு இணையான தொரு பல்கலைக் கழகம் இல்லை எனச் சொல்லும் அளவிலும் இது ஒரு சிறப்பு மிக்க தனித்த பல்கலைக் கழகமாக விளங்கும் என அவர் அன்று தனது மனக்கண்ணில் கண்டார்.

அவரின் அந்த தீர்க்க தரிசனம் இன்று தமிழ் நாட்டில் பெண்களின் தகுதியை மேம்படுத்தும் ஒரு பல்கலைக்கழகமாக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இந்தப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது.

**சிறந்த அடையாளம்**

இந்த பல்கலைக்கழகம், சமுதாயத்தின் பல நிலைகளையும் சார்ந்த பெண்களுக்கு அதிகாரத்தை தேடிக் கொடுக்கிறது. இது புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுத்திறனுக்கும், உயர்ந்த நோக்கத்திற்கும் கிடைத்த வெற்றி மட்டும் அல்ல; இது அவரது ஆழ்ந்த அக்கறைக்கும், சமூகத்தின் நலிந்த பிரிவினர் மீது அவருக்குள்ள பரிவுக்கும், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மீது அவருக்குள்ள பரிவுக்கும், இப்பல்கலைக்கழகம் ஒரு சிறந்த அடையாளமாக விளங்குகிறது.

மகாகவி பாரதி கண்ட கனவான 'சரிநிகர் சமானம்' என்பதின் உண்மை வடிவமாக அன்னை தெரசாவின் பெண்கள் பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது. ஆண்களுக்கு சமமாக பெண்களின் நிலையை உயர்த்தும் மகாகவியின் எதிர் பார்ப்பையும், அவரது தொண்டின் ஆர்வத்தை உள்ளடக்கியதாகவும் இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது.

இந்தியா ஓர் இந்திய தேசியமாகப் பிறப்பெடுத்து வாலிபவயதைத்தான் அடைந்திருக்கிறது. ஆனால் நாகரிகம், பண்பாட்டு அடிப்படையில் நாம் பல நூற்றாண்டுகளின் பாரம்பரியத்தை பெற்றிருக்கிறோம்.

இந்தியாவில் பெண்களின் தகுதியும், நிலையும் தளர்வு உடையதாகவே உள்ளது. பாரம்பரியத்திற்கும், புதுமைக்கும் இடையில் சிக்கி அவர்கள்

# தைத் திருநாள், தமிழர்களின் திருநாள்!

தரணியிலுள்ள அனைவருக்குமே உரிய தலைசிறந்த பொன்னாள் இந்தப் பொங்கல் திருநாள்!

அகிலத்தில் ஆண்டுதோறும் வருகின்ற திருநாட்களுக்கு அளவே இல்லை.

மற்றத் திருநாட்களையெல்லாம் மனிதர்கள்தான் நாட்காட்டியில் குறித்துக் கொள்கிறார்கள். ஆனால், இந்தத் திருநாளோ இயற்கையே அமைத்துக் கொடுக்கிற இனிய திருநாளாகும்.

உலகெங்குமுள்ள ஒரு சாரார், இந்தியாவில் இருக்கின்ற ஒரு சாரார், சில பகுதிகளில் மட்டுமே வாழ்கின்ற ஒரு சாரார், வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட வெவ்வேறு வகையினர் என்று பல்வேறு மக்கள் கொண்டாடுகிற பல்வேறு திருநாட்கள் ஒவ்வோராண்டும் வருகின்றன.

மனிதர்கள் தாங்கள் வகுத்துக் கொண்ட கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகிய உணர்வுகளின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் இத்தகைய திருநாட்களைக் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

ஆனால், இவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தலைசிறந்த திருநாளாகத் தைத் திருநாள் திகழ்வதற்குக் காரணம் இதனை எல்லாருமே கொண்டாடுகிறார்கள் என்பது தான்.

இந்தத் திருநாள் ஒன்றுதான் இயற்கைத் தாயை வழிபடுகிற இன்பத் திருநாளாகும்.

தமிழகத்தில் பொங்கல் திருநாள், கேரளத்தில் ஓணம் பண்டிகை, வடக்கே பஞ்சாப், கல்கத்தா, ஒரிசா போன்ற பகுதிகளில் பைசாகி என்று அறுவடைத் திருநாளை அனைவருமே கொண்டாடு கிறார்கள்.

இந்தியாவில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலுமே இந்தத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இது, அறுவடைத் திருநாள்!


மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர்
டாக்டர் **கா. காளிமுத்து**


பூத்துக் குலுங்கும் இயற்கையன்னை, காத்துக் கிடக்கின்ற கணக்கிலா உயிரினங்களுக்கு நெல்லையும், கோதுமையையும், தானியங்களையும், கரும்பையும், மஞ்சளையும் புதிதாய் வழங்குகின்ற புனிதப் பொன்னாள் இந்தப் பொங்கல் திருநாள். இவற்றை அறுவடை செய்து அகம் மகிழ்வது தமிழர் மட்டுமல்ல, தரணியிலுள்ள அனைவருமே தான்.

இது, நன்றி நவிலும் நன்னாள்!

வயிற்றுப் பசிக்கும், வாழ்க்கை வசதிக்கும் வாரி வழங்குகின்ற இயற்கைத் தாய்க்கு இதயம் பொங்க நன்றி கூறும் நல்லதோர் திருநாள் தான் இந்த நன்னாள்!

இயற்கை தந்த பச்சரிசியைப் புதுப்பானையில் பொங்கல் வைத்து கரும்பு, மஞ்சள், இஞ்சியோடு இயற்கைத் தாய்க்குப் படைத்து இதயம் பொங்கும் நன்றியை இனிப்பாக இயம்புவது இனிய தமிழர்களின் இணையிலாப் பண்பாகும்.







இது, உழவர் பெருநாள்!

உலகத்தோரெல்லாம் உண்ணவும், உடுத்தவும் உழுது பயிரிட்டு உழைத்து, வியர்வை சிந்தி விளைத்துத் தருகிற விவசாயிகள் தங்களின் உழைப்பைக் கொண்டாடுகிற உன்னதத் திருநாள். தங்களின் உழைப்பிற்கு உறுதுணை புரிந்த மாடுகளைக் கூடப் பெருமைப்படுத்தும் மாண்புமிக்க மனிதன் தமிழன் மட்டுந்தான்.

மஞ்சுவிரட்டு என்றும், ஏறு தழுவுதல் என்றும் இலக்கியம் காட்டும் இன்பத் தமிழனின் வீர விளையாட்டுகள் கூட இந்தப் பொங்கல் திருநாளில் இன்றும் தொடர்கின்றன.

நண்பர்களையும், உறவினர்களையும், பெரியவர் களையும் வாழ்த்தி வணங்குகிற நல்லதோர் பண்பை நமக்குள் வளர்க்கிற பண்டைத் திருநாள் தான் இந்தத் தைத்திருநாள்.



இயற்கையோடு இயைந்த
இனிய வாழ்வுக்கு
இலக்கணம் வகுத்திட்ட
இன்பத் தமிழனின் இந்தப்
பொங்கல் திருநாள்
இயற்கைத் தாய்க்கு நன்றி
கூறி வழிபடுகிற எழிலான
பொன்னாள்!

ஆம், இந்தத் 'தாய்'க்கு
நன்றி கூறும் தங்கத்
தமிழர்கள் வாழ்வாங்கு
வாழ்ந்திடவும், வளமோடு
திகழ்ந்திடவும் இதயம்
பொங்க வாழ்த்தி
மகிழ்கிறேன். ★

துதுதளிக்கிறார்கள். மாற்றத்தை கொண்டு வருவதில், பெண்களுக்கு ஓர் உயரிய மேலான பங்கு உள்ளதாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் பல பெண்கள் இருப்பதைக் காண முடிகிறது.

### முடங்கி கிடக்கும் பெண்கள்

பெண்கள் அரசியலில், நிர்வாகத்தில், காவல் பணியில், அதேபோன்று பெருமளவிலான, பாரம்பரியம் சாராத பணிகளிலும் அவர்கள் பணி புரிகிறார்கள். பெண்கள் கல்வியைத் தேடிச் சென்று கற்கிறார்கள். இப்படித் தேடிச் சென்று கற்கும் எண்ணிக்கை நாள் தோறும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இருந்தபோதிலும், இந்தியாவின் பெருவாரியான கிராமங்களில் வசிக்கும் பெண்கள், வறுமையில் வாழ்கின்றனர். ஆதார ஆரம்பக் கல்வி இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றனர். நேரான வழியில் ஒரு தரமான கல்வி கிடைக்காததால் இந்திய பெண்கள் தொடர்ந்து அடிமைகளாகவே இருந்து வருகிறார்கள்.

நமக்கெல்லாம் நன்கு தெரியும்; அதாவது, இந்திய அரசியலமைப்பு சட்டம், அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமைக்கு உத்திரவாதம் வழங்கியுள்ளது என்று. ஆனால் இப்பொழுதுகூட பல வீடுகளில் பெண்களுக்கென எந்தவொரு தேர்ந்தெடுக்கும் உரிமையோ, முடிவெடுக்கும் உரிமையோ இல்லை. சோர்வு அடையச் செய்யும் வீட்டு வேலைகளின் மோசமான பிடியில் அவர்கள் சிக்கி உள்ளனர். வீட்டில் உள்ள சின்னஞ்சிறு சிறுமியின் கல்விகூட மறுக்கப்பட்டு, அவளுடைய வீட்டில் இதர குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள, அவள் கட்டாயப்படுத்தப்படுகிறாள். சமூகத்தின் இப்படிப்பட்ட எளிய உரிமை மறுக்கப்பட்ட சிறுமிகளின் நிலைமை குறித்து எனது அரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது.

பொருளாதார முன்னேற்றத்திலும், கல்வியிலும் பெருமளவில் பெண்கள் பயன்படுத்திக் கொள்வதற்கும் முன்னேற்றத்துக்கும் நான் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தை அறிவிப்பு செய்தேன். இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு ஒரு பெருந்தொகை ஒதுக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. அவர்கள் 20 வயதை அடையும்போது இத்தொகை அவர்களுக்கு கிடைக்கிறது. பள்ளிக்கூடத்தில் அதிக எண்ணிக்கையில் பெண்களை சேர்க்கவும், தங்களுடைய படிப்பை மேலும் தொடர்ந்து படிக்கவும், தங்களுடைய முழு ஆற்றலை உணர்ந்து கொள்ளவும், எனது அரசால் முழு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

### 5 இலட்சம் பெண்களுக்கு மாபெரும் திட்டம்

பல்வேறு திட்டங்கள், செயல்பாடுகள் மூலம் பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குவதை மேலும் ஊக்குவிக்க, எனது அரசு உறுதி பூண்டுள்ளது. 5 இலட்சம் கிராமப்புறப் பெண்களுக்கு தொழில் முனைவோருக்கான பயிற்சியை வழங்கும் ஒரு மாபெரும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இதுவரை பாதி வழி சென்றுள்ளது. பொருளாதார ரீதியிலும், நிதி வருவாயிலும் பெண்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்கும் நிலையிலிருந்து விடுதலை பெறும் வகையில் எனது அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், இலவச மதிய உணவுத் திட்டத்தை தொடர்வதிலும், பிளஸ் 1 மற்றும் பிளஸ்2 படிக்கும் கிராமப்புற ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மாணவிகளுக்கு இலவச மிதிவண்டியை வழங்குவதிலும் தொடர்ந்து செயல்பட அரசு உறுதி பூண்டுள்ளது.

இலவசக் கல்வி கற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவிகள் தொடர்ந்து இலவசமாகவே, கல்லூரிகளில் பட்டமேற்படிப்பு வரை படிக்க வகை செய்யும் உத்தரவை அரசு வழங்கியுள்ளது.

### 970 பெண்களுக்கு தனிச் சிறப்பு

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு இன்று 970 பெண்கள் இந்த தனிச் சிறப்புப் பெற்ற பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று செல்கின்றனர். பெண்களுக்கான திட்டங்கள் நல்ல பலனை கொடுத்துள்ளதை நேரில் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது அரசு அறிமுகப்படுத்திய சிலவகை திட்டத்தின் பயனாளிகளாக இவர்கள் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

நலத் திட்டங்களின் பலன்களைப் பெறுபவர்களாக பெண்களைப் பார்ப்பதிலிருந்து மாற்றி; உற்பத்தியாளர்களாக குடும்பத்திற்கு பெரும் பங்களிப்பவராக, மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெரும் பங்களிப்பவராக, சமுதாய புனரமைப்பிற்கான முகவர்களாக, அவர்களை அடையாளம் கண்டு ஏற்கக் கூடியதாக நிலை உருவாக வேண்டும்.




எனவே, பெண் கல்விக்கு அதி முக்கியத்துவ முன் உரிமை அளிக்க வேண்டும். இதன் மூலம் பெண்களின் நிலையில் ஒரு முன்னேற்றத்தை கொண்டு வரமுடியும்.

இந்தியாவின் சிறந்த மகானாகிய சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:

"பெண்களுக்கு மரியாதை கொடுப்பதன் மூலம்தான் எல்லா நாடுகளும் பெருமையை பெறுகின்றன. எந்த நாடு, எந்த தேசம் பெண்களுக்கு மரியாதையைத் தரவில்லையோ, அது ஒருபோதும் உயர்ந்த நிலையை அடையாது. எதிர்காலத்திலும் அது உயர்ந்த நிலைக்கு வராது" என்கிறார். இதை நான் உறுதியாக நம்புகிறேன்.

### கல்வி கற்பிப்பதில் முதலிடம் பெண்கள்

மனித இனத்தின் முதல் கல்வி கற்பிப்பவராக பெண்களே இருந்திருக்கிறார்கள். ஆனால் யுனெஸ்கோவின் 1995ஆம் ஆண்டின் அறிக்கையின் படி, பெண்களும், சிறுமிகளும்தான் "இன்றைய உலகில் கல்வி வாய்ப்பில் சம உரிமை மறுக்கப்பட்ட ஒரு பெரிய தனித்த வகையினராக" இருக்கிறார்கள் என அறிய முடிகிறது. எழுத்தறிவு சதவீதத்தைப் பொறுத்த வரையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஒருபெருத்த இடைவெளி இருப்பதை பார்க்கும் போது வருத்தத்தை அளிக்கிறது.

2001ல எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை உயர்ந்த அளவில் உள்ளது. அதாவது, 73.47 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. ஆனால் அகில இந்திய அளவிலான எழுத்தறிவு வளர்ச்சி 65.38 சதவீதம்தான். ஆண், பெண் இடையிலான எழுத்தறிவு வேறுபாடு இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறது.



1951ல் ஆண், பெண் இடையிலான எழுத்தறிவு இடைவெளி 21.67 சதவீதமாக இருந்தது. இந்த பெரிய நீண்ட இடைவெளி 2001ல் 17.78 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை, அரசும், கல்வி நிலையங்களும் ஆற்ற வேண்டிய கனமான பொறுப்பைச் சுட்டிக்காட்டுகிறது. வயதான பெண்கள் மற்றும் படிக்கும் வயது பெண்கள் இடையே எழுத்தறிவு கொண்டு வரப்பட வேண்டிய பொறுப்பையும் இவை உணர்த்துகின்றன.

## வயதான பெண்ணுக்கும் கல்வி

இதனை எனது அரசு நன்கு புரிந்து கொண்டு, தமிழகத்தின் ஒவ்வொரு வயதான பெண்ணுக்கும், படிக்கும் வயது பெண்ணுக்கும் கல்வியை கொடுக்கும் உறுதியை எனது அரசு ஏற்றுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் பொதுக் கல்வி பெற்ற பெண்களின் சதவீதம் உயர்ந்துள்ள போதிலும், 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள், உயர் கல்வியின் வாயிற்படியை அவர்கள் மிதிக்கவில்லை.

அதிகார உயர்மட்டத்தின் உயர்ந்த பதவிகளில் பெண்கள் இன்னும் அமரவில்லை. கொள்கை முடிவு எடுக்கும் நிலையிலும் அவர்கள் பதவி வகிக்கவில்லை. நமது நாட்டின் அரசியல் களத்திலும் நிர்வாக, கல்வித்துறை மட்டத்திலும், கொள்கை முடிவு எடுத்து அதனை நிறைவேற்றும் பதவியில் யாரும் இல்லை. இதற்கு ஒரு சிலர் விதிவிலக்காக இருக்கலாம்.

## நீடிக்கக் கூடாது

உயர் கல்வி கற்பது என்பது தற்போது, பணம் படைத்த ஒரு சிலரின் உரிமைகளாக மட்டுமே உள்ளது. இது இனி நீடிக்கக்கூடாது. ஆண்கள், பெண்கள் யாரெல்லாம் உயர் கல்வி பெற விரும்புகின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் இது ஒரு அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும் என்பதே எனது தீர்க்கமான முடிவாகும். இதில் சாதி, இனம், சமூகம் பொருளாதார நிலை எதுவும் குறிக்கிடக்கூடாது.

இந்த சூழ்நிலை அடிப்படையில்தான் பெண்களுக்கான பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய பங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

உயர்மட்டக் குழுவாக, இந்த பல்கலைக்கழகம் இருந்து கொண்டு, எல்லா மட்டத்திலும் பெண்கள் கல்வி பெறுவதை இது கண்காணிக்க வேண்டும். மேலும், இந்த உயர்மட்டக்குழு நிலையில், எந்த உரிமையும் இல்லாத நிலையில் இருக்கும் பெண்கள், பள்ளிக்கு வெளியே பரந்து வசிக்கும் பெண்கள் ஆகிய இவர்கள் பயனடையும் வகையில், கல்வி கொள்கையை வகுக்க உதவி செய்வதிலும் ஒரு முடிவு எடுக்கலாம்.

எல்லா மட்டத்திலும் உள்ள பெண்கள் கல்வியின் நற்பயன்களை பயன்படுத்துவதில், அவர்கள் ஈடுபடுத்தி அதனை கண்காணிக்கும் பணியில் அன்னை தெரசா பல்கலைக்கழகம் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

## பெண்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி

தனது 3 செயல்பாடுகளான, கற்பித்தல், ஆராய்ச்சியில் ஈடுபடுதல், விரிவாக்க சேவைகள் ஆகியவற்றின் மூலம் பெண்களைக் கல்வியில் ஈடுபடுத்துவதுடன் கூட, அதற்கும் பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழங்கி வருவதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்னை தெரசா பெண்கள் பல்கலைக்கழகம் தனது அஞ்சல் வழிக் கல்வித் திட்டத்தின் மூலம், நாட்டின் மூலை முடுக்கிலுள்ள அனைத்து பெண்களையும் சென்றடையும் நோக்கில் செயல்படுவதை நான் அறிவேன்.

இதனால், உயர்கல்வி கற்கும் வாய்ப்பை அவர்களுக்கு அது ஏற்படுத்தி தருகிறது. உண்மையிலேயே இது ஓர் உயர்ந்த பாராட்டப்படக் கூடிய பணியாகும்.

இந்தப் பல்கலைக்கழகம் 19 துறைகளில் ஆண்டுக்கு 500 பட்டதாரிகளையும், பட்ட மேற்படிப்பாளிகளையும் உருவாக்குவதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

## சர்வதேச அளவில் வெற்றி

இந்தப் பல்கலைக்கழகமானது பல துறைகளில் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் குறிப்பிடத் தகுந்த வெற்றியைப் பெற்றிருப்பது கண்டு பூரிப்படைகிறேன்.

இந்த பல்கலைக்கழகத்தில் பயின்ற இருவர் தமிழ்நாட்டிலுள்ள பிற பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களாக ஆகியிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

உலக மயமாக்கலின் கீழ் உலகம் முழுவதிலும் ஏற்படும் வளர்ச்சியையும் முன்னேற்றங்களையும் அறியமுடிகிறது.



கல்வி என்பது மனித வாழ்க்கையோடு ஒன்றிணைந்த ஒரு பகுதியாக மிக வேகமாக மாறி வருகிறது. ஆனால் இந்தியாவில் மனித வளத்தில் 50 சதவிதமாக இருக்கக்கூடிய பெண்களை இன்னமும் கல்வியறிவற்றவர்களாக வைத்திருக்கிறோம்.

தகவல் தொழில்நுட்ப யுகம் இது. இண்டர்நெட் வளர்ச்சி பெற்றுள்ள இந்த காலகட்டத்தில் அவற்றை எதிர்கொள்ளத்தக்க அளவுக்கு நமது பெண்களைத் தயார்படுத்த வேண்டும்.

## தொழில்நுட்ப அறிவை தர வேண்டும்

21ஆம் நூற்றாண்டின் சவால்களை சந்திக்கக் கூடிய அளவுக்கு நவீன மற்றும் தொழில்நுட்ப அறிவைத் தரவேண்டும்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தடைகளைக் கடந்து அந்த அளவுக்கு பெண் பட்டதாரிகளை உயர்தரத்துடன் உருவாக்க வேண்டும்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் போதிக்கப்படும் பாடங்கள் பற்றிய விவரங்களை அறிந்து பெருமைப்படுகிறேன்.

சாதாரண மூலிகை விஞ்ஞானம் முதற்கொண்டு நட்சத்திர அந்தஸ்து பெற்ற கல்வியான வானவெளி இயற்பியல், தகவல் தொடர்பு, கணினி, உயிரி தகவல் தொழில்நுட்பம், வர்த்தகக் கல்வியான எம்.பி.ஏ., உணவு மற்றும் சத்துணவு போன்ற மிக முக்கியமான துறைகளில்,கல்வி அளிக்கப்படுகிறது.

வலிமை மிக்க நாட்டை உருவாக்குவதில் பங்கு கொள்ளும் அளவுக்கும், கொள்கைகளை உருவாக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் அதிகமான பெண்களை இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கும் என நம்புகிறேன்.

## சமநீதி வழங்க உறுதி

எனது அரசானது அனைத்துத் துறையினருக்கும் சமநீதி வழங்க உறுதி பூண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 188 போலீஸ் கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. தீயணைப்புத்துறை, இந்து அறநிலையத்துறையிலும் பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தலைமைப் பதவியையும் வக்பு வாரிய தலைமைப் பதவியையும் இஸ்லாமிய சகோதரிகளுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. இன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளராக ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டுள்ளார். இவையெல்லாம் புதிய பாதை வகுக்கும் நடவடிக்கைகளாகும்.

## இமாலய இலக்கு

மேலும் ஆண்–பெண் பிரச்சினை சம்பந்தப்பட்ட அம்சங்களில் காவல்துறைக்கு போதிய நடைமுறை விழிப்புணர்வு அறிவை கொடுக்கும் இமாலய இலக்கை எட்டும் முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்ணிய உரிமைகள் சம்பந்தப்பட்ட விழிப்புணர்வுத் திட்டத்தை, பிற மாநிலங்கள் மட்டுமல்ல, பிற நாடுகளும் வரவேற்றுள்ளன. இதில் இந்த பல்கலைக்கழகத்திற்கும் முக்கிய பங்கு உண்டு.

அன்னை தெரசா பல்கலைக்கழகம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரை இனம் கண்டு அந்தப் பிரிவினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சமத்துவ சமூகம் அமைய பாடுபடவேண்டும்.

தமிழக அரசுடன் இணைந்து தமிழகத்தில் உள்ள பெண்களின் நிலை உயரப் பாடுபட வேண்டும். உங்களுடைய ஆராய்ச்சி முயற்சிகள் சமுதாய விழிப்புணர்வுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

அதோடு உங்களுடைய கண்டுபிடிப்புகள் பெண்கள் முன்னேற்றத்துக்கான கொள்கைகளை வகுக்க அரசுக்கு உதவி புரியும் வகையில் அமைய வேண்டும்.

பெண்கள் தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் கண்காணிப்பதாக இந்தப் பல்கலைக்கழகம் விளங்க வேண்டும். குறிப்பாக அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு கல்வி அளிக்க உதவ வேண்டும்.

## பெண்களுக்கு விருது

கல்விக்காக சிறப்பான பங்களிப்பை நல்கிய பெண்களைக் கண்டுபிடித்து விருது வழங்கப்படும். பொதுவாக சமுதாயத்துக்கும் குறிப்பாக பெண்களுக்கும் சேவை செய்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தப் பல்கலைக்கழகம் சர்வதேச தரம் மிக்கதாக அமைய வேண்டும் என்றும் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள பிற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பெண் கல்விக்கான ஆய்வில் ஈடுபடவேண்டும் என்றும் விரும்பினார்.

கிராமப்புறப் பெண்களின் நன்மைக்காக இந்தப் பல்கலைக்கழகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தரம்மிக்க கல்வியைத் தருவதோடு ஆராய்ச்சித் துறையிலும் முன்நிற்க வேண்டும் என அவர் கனவு கண்டார்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்ட கனவை நனவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

## தாராளமாக நிலம்

அதன் அடிப்படையில் இந்தப் பல்கலைக் கழகத்துக்கு தாராளமாக நிலம் ஒதுக்கினேன்.

அமெரிக்காவிலுள்ள ஃபோர்டு பவுண்டேசன் போன்ற அமைப்புகளின் நிதி உதவியுடன் சிறந்த பல்கலைக்கழகமாக உருவாக உள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் எனக்கு தனி அக்கறை உண்டு. சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்ற பல்கலைக்கழகமாக மாறத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

இங்கு பட்டம் பெறும் நீங்கள் எல்லாருமே உங்கள் தாய்நாட்டுக்கும் நீங்கள் சார்ந்துள்ள சமுதாயத்துக்கும் பயனுள்ளவர்களாக இருப்பீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தொண்டு செய்யுங்கள்.

அன்னை தெரசா சொன்னதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

"எந்த அளவுக்கு செய்தோம் என்பதல்ல, நாம் செய்தவற்றில் எந்த் அளவுக்கு அன்பையும் கலந்தோம், எவ்வளவு கொடுத்தோம் என்பதல்ல; நாம் கொடுப்பவற்றில் எந்த அளவுக்கு அன்பையும் கலந்தோம் என்பதே முக்கியம்'' என்றார் அன்னை தெரசா.

## சகோதரிகளுக்கு செலவிடுங்கள்

உங்களது அறிவையும், திறமையையும், சக்தியையும் பரந்து விரிந்த இந்த மாநிலத்தில் உள்ள உங்களைச் சார்ந்தவர்களை குறிப்பாக உங்களை விடவும் குறைந்த வாய்ப்புள்ள சகோதரிகளுக்காக செலவிடுங்கள்.

பிரகாசமான எதிர்காலம் அமையவும், அனைத்துத் துறைகளிலும் வெற்றிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் குடும்ப விளக்கில் குறிப்பிட்டுள்ள சில கவிதை வரிகளை சுட்டிக்காட்டி என் உரையை முடிக்கிறேன்.

"பெண்கட்குக் கல்வி வேண்டும்,
குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்,
மக்களைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்,
உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்,
கல்வியைப் பேணுதற்கே!

என்று கூறி, உங்கள் கல்விப் பணி சிறக்க, உளமாற வாழ்த்துகிறேன்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்ற அழைத்தமைக்காக ஆளுநர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *



பெரம்பலூர் மாவட்டத்தில்

# உடல் ஊனமுற்றோர்களுக்கான சிறப்பு மறுவாழ்வுத் திட்டங்கள்

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உடல் ஊனமுற்றோர்களுக்கான மறுவாழ்வுத் திட்டப்பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் 10,165 நபர்கள் உடல் ஊனமுற்றோர்களாக கணக்கிடப் பட்டுள்ளது. இவர்களின் மறுவாழ்விற்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் மறுவாழ்வு உதவிகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பு முயற்சியில் இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டோர்களுக்கு இலவச அறுவை சிகிச்சை, மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பாதுகாவலர் சான்றிதழ் வழங்குதல், கண் பார்வையற்றவர்களுக்கு மாற்று கண் பொருத்துதல், ஊனமுற்றோர் களுக்கான விளையாட்டுப்போட்டிகள், ஊனமுற்றோர்களுக்கான ஓவியப் போட்டிகள் ஆகிய பணிகள் ஊனமுற்றோர் மறுவாழ்விற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



இம்மாவட்டத்தில் இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டு அவர்களில் விருப்பம் உள்ள 27 நபர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதே போல் மனவளர்ச்சி குன்றியவர் களுக்கு அரசு வழங்கும் நல உதவிகளைப் பெற்று வழங்கிட நிரந்தரப் பாதுகாவலர் சான்றிதழ் வழங்கும் திட்டத்தில் 262 நபர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மனவளர்ச்சி குறைந்தவர்களின் நிரந்தரப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

முற்றிலும் கண்பார்வையற்றவர்களுக்கு மாற்றுக்கண் அறுவைச் சிகிச்சை இதுவரை 8 நபர்களுக்கு தனியார் கண் மருத்துவமனைகள் மூலம் கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கண்தானம் செய்பவர்களை ஊக்கப்படுத்திட அவர்கள் இறந்த பிறகு மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்று கண் எடுக்கப்படுவதற்குப் பதிலாக அவர்கள் இறந்த இடத்திலேயே கண்களை எடுத்திட இம்மாவட்ட மருத்துவர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர் களை ஊக்கப்படுத்திட பெரம்பலூர் மற்றும் அரியலூரில் ஊனமுற்றோர் களுக்கான சிறப்பு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 360 நபர்கள் கலந்து கொண்டு மூன்று சக்கர சைக்கிள் ஓட்டும் போட்டி, ஓட்டப் பந்தயம், குண்டு எறிதல், தட்டு எறிதல் போன்ற போட்டி களில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.



உடல் ஊனமுற்றோர்களுக்காக அரியலூரில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் 167 நபர்கள் கலந்து கொண்டு தங்களின் ஓவியத் திறமையை வெளிக் காட்டினார்கள். இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டம் அம்மா பாளையம் கிராமத்தைச் சேர்ந்த இளங்கோவன் என்பவர் விமானப் படையில் பணியாற்றும் போது நடைபெற்ற விபத்தில் தனது உடல் முழுவதும் செயல் இழந்தும், அவரது திறமையை வெளிக் காட்டிட சிறப்புப் பயிற்சி பெற்று வாயினால் ஓவியம் வரைந்து வருகிறார். அவர் தனது ஓவியங்களை உலக அளவில் நடைபெறும் பல்வேறு போட்டிகளுக்கு அனுப்பி வைத்து சிறப்புப் பரிசுகள் பெற்றுள்ளார். அவர் இளம் உடல் ஊனமுற்ற ஓவியர்களுக்கு வழிகாட்டியாக இப்போட்டியின் போது பங்கேற்றுச் சிறப்பித்தார். உடல் ஊனமுற்றோர்களுக்கான ஓவியப் போட்டியைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக் காக ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் 1,210 நபர்களுக்கு பல்வேறு நல உதவிகள் பெற்று வழங்கப்பட்டுள்ளன. இதில் 30 நபர்களுக்குச் சுய வேலை வாய்ப்பிற்காக மானியத்துடன், கடனுதவியும், 320 நபர்களுக்கு கடும் ஊனமற்றோர்களுக்கான பராமரிப்பு மானியமாக ரூ.5.76 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தில் இரு ஜோடிகளுக்கு ரூ.20 ஆயிரமும், கைகால் ஊனமுற்றோர் திருமண உதவித் திட்டத்தில் 4 ஜோடிகளுக்கு ரூ.28 ஆயிரமும், காது கேளாதோர் திருமண உதவித் திட்டத்தில் 10 ஜோடிகளுக்கு ரூ.70 ஆயிரமும் பெற்று வழங்கப்பட்டுள்ளன. ஊனமுற்றோர் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 350 நபர்களுக்கு ரூ.2.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 5 நபர்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர்களுக்கான கருவிகள் வழங்கும் திட்டத்தில் 116 நபர்களுக்கு காதொலிக் கருவியும், 30 நபர்களுக்கு 3 சக்கர வண்டியும், 3 நபர்களுக்கு சக்கர நாற்காலியும், 10 நபர்களுக்கு பார்வையற்றவர்களுக்கான கடிகாரமும், 100 நபர்களுக்கு சூரிய ஒளியினால் சக்தி பெறும் பேட்டரிகளும், 20 நபர்களுக்கு கருப்புக் கண்ணாடி மற்றும் ஊன்று கோலும், 35 நபர்களுக்கு காலிபர் கருவியும், 19 நபர்களுக்கு ஊன்றுகோலும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 156 நபர்களுக்கு ஊனமுற்றோர்களுக்கான இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் தனியார் நிறுவனங்கள் மூலம் 7 சிறப்புப் பள்ளிகள் உடல் ஊனமற்றோர்களின் மறுவாழ்விற்காக நடத்தப் பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்விற்காக சிறப்புத் திட்டங்களை 2002–2003 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்து செயல்படுத்திய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வு சிறப்புப்பணிக்கு முதலமைச்சர் விருது இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**– திரு.எம். ஏ. லாரன்ஸ்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*பெரம்பலூர் மாவட்டம்.*



# மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உரை




மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆண்டு மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இம்மாநாடு நாட்டுநடப்புகளை நிதர்சனமான நிலைமைகளை அறியவும், எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பை நமக்கு அளிக்கும் என்று நான் நம்புகிறேன். இது மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி; மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய நடவடிக்கைகளை எந்த அளவுக்கு விரைவுபடுத்த வேண்டுமென்பதை நமக்கு நினைவூட்டும் ஒரு காலக் கருவி ஆகும். இந்த நடவடிக்கைகளின் விளைவுகளை மதிப்பிடும் உரைகல்; புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஒரு உந்துவிசை ஆகும்.

**மக்களின் துயரை குறைக்க உதவின**

எங்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் – காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் முதல் மாநாட்டை 2001 ஆகஸ்டில் நான் நடத்தினேன். இம்மாநாட்டில் நாங்கள் பல்வேறு புதிய திட்டங்களையும் திட்டப் பணிகளையும் அறிவித்தோம். தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக 2002 ஆகஸ்டில் கூட்டப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்பு மாநாட்டில், நாங்கள் எடுத்த பல்வேறு முடிவுகள் பருவ மழை பொய்த்ததால் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்பட்ட கடும் துயரை பெரிதும் குறைக்க உதவின.

கடந்த 15 மாதங்களாக நாங்கள் எடுத்த நடவடிக்கை குறித்து ஆய்வு செய்வதற்கு உகந்த தக்க தருணம் இது ஆகும். இம்மாநாட்டில் மூன்று பொருள்கள் குறித்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

முதலாவது சட்டம் – ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சிப் பணிகள், சிறந்த நிர்வாகம் ஆகியவை குறித்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றுநான் விரும்புகிறேன்.



**பிரிவினை சக்திகளை முற்றிலும் ஒழிக்க உறுதி**

பொது அமைதி பேணப்பட்டு சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டாலொழிய வளர்ச்சிப் பணி இலக்குகளை எய்துவது என்பது அர்த்தமற்றதாகும்.

உண்மையிலேயே தற்போது நாம் மிகவும் இடர்ப்பாடான காலகட்டத்தில் பயங்கரவாதம் என்பது வெறும் நெடுநோக்கிலான நடவடிக்கை மட்டுமல்ல. அது குழப்பத்தைத் தோற்றுவிக்கும் ஒரு நச்சரவம் ஆகும். நாடு முழுவதிலும் மரணத்தையும், பேரழிவையும், பீதியையும், தீவிரவாதத்தையும் அது உருவாக்கும். பிரிவினை சக்திகளையும் முற்றிலும் ஒழித்துக்கட்டுவது என உறுதி பூண்டுள்ளேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

எல்.டி.டி.இ.மீதான தடையை மேலும் நீட்டிப்பதை எங்களுடைய அரசு உறுதி செய்துள்ளது. மேலும் இரு முக்கியமான பயங்கரவாத அமைப்புகளான தமிழ்நாடு விடுதலைப்படை (TNLA), டி.என்.ஆர்.டி.யும் (TNRT) 1908ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழும், 2002ஆம் ஆண்டின் பொடா சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளன. 2001ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்த அமைப்புகளை தடை செய்வதில் காட்டப்பட்ட தயக்கம், செயலின்மை ஆகியவற்றுக்கு மாறாக நாங்கள் எடுத்த உறுதியான, தீர்க்கமான நடவடிக்கை இந்த போராளி மற்றும் அழிவு சக்திகளைப் பெருமளவுக்கு அடக்கியுள்ளது.

**விழிப்புணர்வுடன் செயல்படும் மாவட்ட அதிகாரிகளுக்குப் பாராட்டுக்கள்**

தீங்கும், பெரும் கேடும் விளைவிக்கும் இச்சக்திகளை அடக்கி, தமிழ்நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலவச் செய்வதில் அரும்பணியாற்றி வளர்ச்சிப் பாதையில் நாம் விரைந்து செல்ல ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், ஏனைய உயர் காவல்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் எச்சரிக்கையாக இங்கு ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மெத்தனத்திற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. நாம் உறுதியுடனும், தயக்கமின்றியும் நடவடிக்கை எடுக்கும்போது செயலற்றிருந்து அல்லது பாதுகாப்பாக புகலிடத்தில் மறைந்திருந்து, பின்னர் மீண்டும் ஒன்று சேர்ந்து புது அமைப்பாக உருவெடுப்பது போராளிகள் மற்றும் பயங்கரவாதக் குழுக்களின் வழக்கமாகும். நாம் எப்போதும் விழிப்புடன் கண்காணித்துக் கொண்டிருக்க



வேண்டும். தொடர்ந்து உளவுத் தகவலைச் சேகரித்து வந்து அவர்களுக்கு ஒரு நெருக்குதலை ஏற்படுத்த வேண்டும்.

தற்போதைய தீவிர பாதுகாப்பு சோதனைகளை தளர்த்தக்கூடாது.

தீவிரவாதம் எந்த நேரத்திலும் தன் கோர முகத்தைக் காட்டக் கூடும் என்பதையும், எச்சரிக்கையின்றி தனித்தனியாகவும் குழுவாகவும் வன்முறையில் அவர்கள் ஈடுபடக்கூடும் என்பதையும் தருமபுரி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அடிப்படை மதவாத குழுக்களுக்கும் இது பொருந்தும். இந்த அமைப்புகளுக்கு வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவி கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எந்த நேரத்திலும் நாம் ஆயத்தமாக இருப்பதும் உளவுத் தகவலை திரட்டுவதுமே நம்முடைய தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

*எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்*

– திருக்குறள்

வரப் போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**காவல்துறையை நவீனமாக்க ரூ.272 கோடி**

இப்போது உள்ள நிலையில் நிலவும் தீவிரவாதம், பயங்கரவாதம், அடிப்படைவாதம் ஆகிய சவால்களைக் காவல்துறை எதிர்கொள்ளும் வகையில் நவீன ஆயுதங்கள், தகவல் தொடர்பு, முற்றிலும் தேவையான பாதுகாப்பு ஆகிய செயல் வல்லமையுடன் காவல்துறையை, முற்றிலும் ஒரு தொழில் முறையில் செயல்படும் துறையாக, அத்துறையை நவீனமயமாக்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டங்களுக்காக, ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளில் ரூ.272 கோடிக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், ஏற்கெனவே சீர்மிகு புகழுடன் விளங்கும் தமிழ்நாடு காவல்துறை, நாட்டிலேயே முதல் தரமான காவல்துறையாக விளங்கும் என்று நம்புகிறேன்.

காவல்துறையின் செம்மையான செயல்பாட்டிற்கு நமது ஆண் மற்றும் பெண் காவலர்களின் கட்டுப்பாட்டுணர்வு இன்றியமையாததாகிறது. தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலை அதிகாரிகளிடையே தனிப்பட்ட வகையில் உற்சாகத்தை ஏற்படுத்தவும், அவர்கள் பணிபுரியும் துறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வகையிலும், அவர்களுக்குள்ள குறைகளை அறிந்து கொள்ளவும் அவர்களுடன் விரிவான ஐந்து கூட்டங்களை நடத்தியுள்ளேன்.

**காவல்துறை வரலாற்றில் தனித்தன்மை**

ஒரு முதலமைச்சர் என்ற அளவில், காவல்துறையினருடனான இந்த நேரடியான சந்திப்பு, காவல்துறை நிருவாக வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்ததாகும். பணியில் உங்களுக்கு உள்ள பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுகளை மேம்படுத்திக் கொள்வதில் நல்ல பயன் கிட்டியது.

காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், ஏனைய முதுநிலைக் காவல்துறை அதிகாரிகளும், அத்தகைய துறை சார்புக் கூட்டங்களை தொடர்ந்து கூட்டி, காவல்துறைப் பணியாளர்களின் குறைகளை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். காவல் துறையினரின் நீண்டகால மன உளைச்சல், ஏமாற்றங்கள், தனிப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றைத் தணிப்பதற்கு இது வழி வகுக்கும் என்பதோடு, காவல்துறையினரின் ஒட்டுமொத்தத் திறமையை முடுக்கிவிடவும் உதவும்.

**கசப்பு மருந்தை உட்கொள்வது அவசியமாகும்**

தற்போது நாட்டில் உள்ள வளர்ச்சிப் பணிகள் குறித்து விவாதிக்க விரும்புகிறேன். குறிப்பிட்ட சில வளர்ச்சிப் பணிகள் குறித்து நான் உரை நிகழ்த்துவதற்கு முன்னர், நீங்கள் எத்தகைய சூழ்நிலைகளில் வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்த இருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய அரசு, 2001, மே மாதத்தில் பதவியேற்றபோது, மாநிலத்தின் நிதி நிலை எப்போதும் இல்லாத அளவுக்கு சீர்குலைந்து இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதிலிருந்து மீண்டு மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இயலும் வகையில், மாநில நிதி நிலையை ஒழுங்கு

சென்னை-600 008

படுத்தும் ஒரு நடவடிக்கையாக, பெரும் நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள, நாங்கள் ஒருமித்த முயற்சி மேற்கொண்டுள்ளோம். மாநில அரசின் நிதிநிலையைச் சீரமைத்து முன்னிருந்த நிலைமைக்கு கொண்டுவர, நிதிச் சீர்திருத்தங்கள் என்ற கசப்பு மருந்தை நாம் உட்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். தேவையான நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பயன் விளைவிக்கக் கூடிய ஒரு பயனுள்ள வளர்ச்சிப் பணியை மேற்கொள்வதற்கு தேவையான நிதி வசதி நமக்கு கிட்டாது.

### 15 அம்சத் திட்டம்

ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாட்டை சிறந்த மாநிலமாக்குவதே எனது நோக்கமாகும். இதற்காக 15 அம்சத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதில், பசுமைப்புரட்சி, உணவுப் பாதுகாப்பு, கால்நடை பாதுகாப்பு, குடிநீர்ப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, வாழ்க்கைத் தொழில் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு, உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, மேம்பாட்டிற்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதி, எழுத்தறிவு, தனித்துறை நுட்பக் கோட்பாடு, நாட்டுப்புற கருநாடக இசை, நவீன கலை, பண்பாடு, நாடகம், ஆண், பெண் என்ற பாகுபாடின்மை, ஒடுக்கப்பட்டவர்களுக்கான புதிய திட்டம், தொழில் நுட்பம் ஆகியவை அடங்கும், அடுத்த மூன்றரை ஆண்டு காலத்தில் இந்த அரசின் திட்டங்களில் இவை இடம் பெறும் இந்த 15 அம்சத் திட்டம் ஒவ்வொன்றின் கீழும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நுண்திட்டங்களை வகுத்து, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு அயராது பாடுபட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

### வறுமை போக்க புதிய உத்வேகம்

1998–2001ஆம் ஆண்டுகளுக்கு இடையே வேளாண்மையிலும் வேளாண்மை சார்ந்த துறைகளிலும் பின்னடைவு ஏற்பட்டிருப்பது குறித்து பெரிதும் வருந்துகிறேன். இதுவே முதன்மையான துறையாகும். மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் இது 17 சதவீதமாகும். ஆனால், இவ்வுற்பத்தி 62 சதவீதம் மக்களுக்கு ஆதரவளிக்கிறது. 2001–2002 ஆண்டிலும், மற்றும் நடப்பாண்டிலும் நமது ஊரகப் பொருளாதாரம் மேலும் பாதிப்புக்குள்ளாகும் வகையில் மோசமான பருவநிலைமையை நாம் சந்திக்க வேண்டியிருந்தது. ஆகவே, ஊரகப் பகுதிகளில் காணப்படும் வறுமையைப் போக்க நாம் முக்கிய துறையின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகம் அளிக்க வேண்டியுள்ளது என்பது தெளிவாகிறது. இதற்கென மூன்று முக்கியத் திட்டங்களை நான் தெரிவித்துள்ளேன்.





முதல் திட்டம், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் மேம்பட்ட வளர்ச்சிக்கு, நில, நீர் ஆதாரங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நோக்குடன், தரிசு நிலங்களைப் பயனுடையதாகச் செய்வதற்கு, விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். முதற்கட்டமாக, பெரிய அளவிலான வளர்ச்சி வட்டாரங்களிலும், கூட்டுக் குடியிருப்பு பகுதிகளிலும் தக்க வேளாண்மை பணித் திட்டத்துடன் தரிசு நிலங்களைக் கண்டறியும் பணியினை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டியுள்ளது.

2002–ஆம் ஆண்டு டிசம்பருக்குள் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டங்களைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் குறுகிய காலத்தில் அவற்றை பயனுக்குள் கொண்டுவர முடியும்.

### தரிசு நிலங்களைச் சாகுபடியின் கீழ் வருவதில் வெற்றி காணலாம்

இரண்டாவது அம்சம், தனிப்பட்ட விவசாயிகள் மூலம் தரிசு நில மேம்பாட்டினை மேற்கொள்வது தொடர்பானதாகும். பல்வேறு காரணங்களுக்காக, விவசாயிகள் தங்களுடைய சொந்த நிலங்களைத் தரிசாக போட்டு வருகின்றனர். அனைத்து கிராமங்களிலும் உள்ள அத்தகைய நிலங்களைக் கண்டறிவதற்கு கிராம நிருவாக அதிகாரிகள், உதவி வேளாண்மை அலுவலர்களைக் கொண்டு முழுமையான ஆய்வினை மேற்கொண்டு, அவற்றை விவசாயத்திற்குக் கொண்டுவர தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும். நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களை ஒருங்கிணைப்பது நம் முயற்சியாக இருக்க வேண்டும். அப்போதுதான் தரிசு நிலங்களை, சாகுபடியின்கீழ் கொண்டு வருவதில், நாம் வெற்றி காணலாம்.

### நிதியுதவியுடன் புதிய வேளாண் தொழில் திட்டம்

மூன்றாவது அம்சம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தையொட்டி புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் வரும் வேளாண் செயல் திட்டமாகும். இரு திட்டங்களையும் ஒருங்கிணைப்பதே இதன் நோக்கமாகும். வணிக வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் கூடிய புதிய வேளாண் தொழில் திட்டம் அடுத்த ஆறுமாத காலத்திற்குள் செயல்படுத்தப் படுவதற்கு ஊக்குவிக்கப்படும்.

அனைத்து பருவநிலைகளுக்கும் ஏற்ற ஊரக சாலைகள், ஒருங்கிணைந்த ஊரகத் துப்புரவு வளாகங்கள் ஏற்படுத்தல், கிராமப்பகுதி ஏரிகளைத் தூர்வாரி சீரமைத்தல், கதிரடிக்கும் களங்கள், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உட்பட ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பல இனங்கள் எங்கள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய, ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு உள்ளாட்சி மன்றங்கள் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றன.

### பணியின் தரத்தை நேரடியாகப் பார்வையிட வேண்டும்

ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரைந்து செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நேரடியாக தாமே ஈடுபட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பணியின் தரத்தை உறுதிப்படுத்துவதிலும் விரைந்து செயல்படுவதிலும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இச்சேவைகளின் பயனை மக்கள் உரிய நேரத்தில் பாராட்டுவார்கள்.

இத்தகைய ஊரக வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்ந்து அளிக்கப்படும். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இயன்ற அளவு விரைவில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சுற்றுச் சூழலை தொடர்ந்து மேம்படுத்தல், சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் ஆகிய இரண்டையும் இணைந்தே செயல்படுத்த வேண்டும். ஒன்றாகவே செய்ய வேண்டும். எனவே, வீசி எறியக்கூடிய பிளாஸ்டிக்குகளைப் பயன்படுத்துதல் அதிகரித்து

வருவது குறித்தும், அவற்றை முறையாக அழிக்க இயலாமை குறித்தும் அதன் காரணமாக நமது மாநகரங்கள், மாநகராட்சிகள் மற்றும் சிறிய நகரங்களிலும் அனைத்து சாலை ஓரங்களிலும் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளிலும் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் கிடக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது குறித்து நான் மன வருத்தம் அடைகிறேன்.

### பிளாஸ்டிக் கழிவுகளை அகற்ற வேண்டும்

இவை கடுமையான சுகாதார கேட்டிற்கும் சுற்றுச்சூழலைத் தீவிரமாகப் பாதிக்கும் வகையில் பார்க்கும் போதே அருவருப்பைத் தோற்றுவிப்பதாகவும் உள்ளது. உள்ளாட்சி மன்றங்கள் அரசு சாரா அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து தனியானதோர் நிலப்பகுதியில் அவற்றை கொட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் செயல் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். நம்முடைய இல்லங்களில் உள்ள வேண்டாத பொருட்களை அகற்றி விடுவதை (பழையன கழிவது) பொங்கல் பண்டிகைக்கு முன்பாக மேற்கொள்வது தொன்று தொட்டு வழக்கத்திலுள்ள மரபு ஆகும்; அதைப் போலவே அடுத்துவரும் பொங்கல் பண்டிகைக்குள் இதனைச் செய்து முடிக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படும் முதல் நிலையிலேயே தரம் குறைந்த உயிரினக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகள் ஆகியவற்றைப் பிரிக்க வழிவகை செய்ய மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### முன்னோடித் திட்டம்

நம்முடைய மக்களுக்காக முனைப்பான சமூகப் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி கொடுப்பது மிகவும் அவசியம் என்று நான் உணர்கிறேன். நமது அரசுக்குப் பொருளாதாரம் மற்றும் நிதிநிலையில் இடர்பாடுகள் இருந்தாலும் வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதையே இவ்வரசு உறுதிபூண்டு நிலை நிறுத்தி வருகிறது. நான் பதவியில் இருந்த 1991–1996க்கும் இடைப்பட்ட காலத்தில் என்னால் ஏற்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு அமைப்பு 1995இல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய சமூக நிதியுதவித் திட்டத்திற்கான முன்னோடி ஆகும்.

இந்த சமூகப் பாதுகாப்பு அமைப்புத் திட்டத்தின் கீழ்,.நலத் திட்டங்கள், தொடக்கக் கல்வித் திட்டங்கள், பொது விநியோக முறை, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றை நாம் பெற்றுள்ளோம்; தமிழ்நாட்டில் பசிப்பிணியற்ற மற்றும் சத்துக் குறைவற்ற நிலையை ஏற்படுத்துவதற்கு வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு சத்துணவு அணுகுமுறையை நாம் பின்பற்றியுள்ளோம். ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுப் பணிகள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தேசிய சத்துணவு அமைப்பு கோயில்களில் அன்னபூர்ணா, அந்தோதியா (Antyodaya) திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பாராட்டத்தக்க அன்னதானத் திட்டங்கள் ஆகிய தொடர் திட்டங்கள் மேற்சொன்ன கருத்தை மெய்ப்பிக்கின்றன. பள்ளிக்குழந்தைகளுக் காகவும், சர்வ சிக்சா அபியானுக்காகவும் சிறப்பு மருத்துவ முகாம்கள், நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு, சத்துள்ள மதிய உணவுத் திட்டம் போன்ற புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளோம்.

குழந்தைகள் இறப்பு வீதம் குறைந்ததால் 1996–2001ஆம் ஆண்டுகளில் குடும்பநலத் திட்ட இலக்கைத் தமிழ்நாடு எட்டவில்லை. இது சரி செய்யப்பட வேண்டும். குடும்ப நலத் திட்டத்தில் சிறந்த நாட்டம் செலுத்துவதன் மூலம் பிறப்பு– இறப்பு வீதத்தில் விரைவில் மாற்றத்தை நாம் அடைய இயலும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில், மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

எந்தவொரு மக்கள் சமுதாயத்திலும், குழந்தைகளை இழிவாகவும், தவறாகவும் பயன்படுத்துகின்ற பிரச்சினையை களைய முதல் இடம் கொடுக்கப்பட வேண்டும்.

பல துறைகளில் நாம் முதலாவது இடத்தை வகித்து வருவது போல் 2001– ஆம் ஆண்டு இளங்குற்றவாளிகள் நீதி (குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு) விதிகளைத் தமிழ்நாடு மாநிலம்தான் முதன்முதலாக இயற்றியுள்ளது. குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தல் மற்றும் தவறாக பயன்படுத்தல் போன்ற கொடுமைகளை ஒடுக்கும் பெரும் முயற்சியில் மாவட்ட ஆட்சியர்கள், அரசு சாரா அமைப்புகளை ஊக்குவித்து அவற்றில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

"எய்ட்ஸ்" என்பது, வெடிகுண்டிற்கு ஒப்பானது என்று விளக்கப்பட்டுள்ளது. தீவிரமாகப் பிரச்சாரம் செய்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் நோய்க்கான சிகிச்சைக்குப் பின்னர் கவனம் செலுத்துதல் போன்றவற்றின் மூலமாகவே, இதனைத் தீவிரமாகத்



தடுத்து நிறுத்த முடியும். தமிழ்நாட்டில், நாங்கள் தன்னார்வ ஆலோசனை மற்றும் சோதனை மையங்களை ஏற்கெனவே பரவலாக நிறுவியுள்ளதோடு, மிகச் சிறப்பான முறையில் நோய்க் கண்காணிப்பு ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பொது விழிப்புணர்வுடன், மேற்சொன்ன நடவடிக்கைகளும் இணைந்து, இப்பிரச்சினையை மட்டுப்படுத்துவதற்காக முனைப்பாக வழிமுறைகளை வகுக்க தமிழ்நாடு அரசுக்கு ஏதுவாகியது. நோயினைக் கண்டறிதல், கண்காணித்தல் ஆகியவற்றைக்கூட செய்ய இயலாத பல மாநிலங்களை ஒப்பிடுகையில், நம்முடைய இத்தகைய முனைப்பான நடவடிக்கைகளினால் எய்ட்ஸ் நோயாளிகளின் உண்மை எண்ணிக்கை விவரத்தை நாம் கண்டறிய முடிந்துள்ளது.

தமிழ்நாட்டில் பெண்களிடையே பேறு காலத்திற்கு முந்தைய எச்.ஐ.வி. கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நாட்டில் ஐந்தாவது இடத்தில் தற்போது உள்ளது; அதாவது மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அடுத்ததாக உள்ளது. தொடர்ந்து நாம் விழிப்புடன் செயல்பட்டு, மேற்சொன்ன அனைத்து தேர்வுகளையும் உடனடியாகக் கண்டறியவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

குறிப்பாக ஊரகப் பகுதிகளில் இப்பிரச்சினை தொடர்புடையதாகவே உள்ளதென்பதே நமக்கு கவலையளிப்பதாக உள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட "எய்ட்ஸ்" ஆலோசனைக் குழுக்கள், "எய்ட்ஸ்" நோய்க் கட்டுப்பாட்டுப் பிரச்சார முகாம்கள் அனைத்திலும் முனைப்பான கவனம் செலுத்த வேண்டும்.

சுயஉதவிக் குழுக்கள் மூலமாக மகளிருக்கு அதிகாரமளிக்கும் முக்கியத் திட்டம் ஒன்று 1992–இல் என்னால் தொடங்கிவைக்கப்பட்டது. இது, மாபெரும் வெற்றியைத் தேடித்தந்துள்ளது. தற்போது 20 இலட்சம் பெண்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்துள்ளனர்; அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக இவ்வியக்கத்தில் பங்காற்றி வருகின்றனர்.

அடுத்து வரும் நான்காண்டுகளில், இந்த இயக்கத்தின் ஓர் அங்கமாகச் சேர்ந்து கொள்ளும் வகையில், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள, மேலும் 15 இலட்சம் குடும்பங்களை இதில் சேர்க்கக் கருதியுள்ளோம். இந்த இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர்கள் பெரும் பங்காற்ற வேண்டும்.

இத்தகைய சுயஉதவிக் குழுக்களை பெருமளவு எண்ணிக்கையில் ஏற்படுத்த இயலும்போது, அவற்றின் மூலம் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. விற்பனைத் தொடர்பை ஏற்படுத்துவது மிகவும் கடினமான பணியாகும். உடனடியாக விற்பனையாகக் கூடிய அத்தகைய பொருட்களைச் செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்கள், தங்களை நேரடியாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

### 50,000 மகளிருக்கு தேர்ச்சித் திறன் பயிற்சி

விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தேர்ச்சித்திறன் பயிற்சியினை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இந்த ஆண்டில், 50,000 மகளிருக்கு தேர்ச்சித் திறன் மேம்படுத்துவதற்கும், வாழ்க்கைத் தொழில் பயிற்சியளிப்பதற்காகவும் மாவட்ட ஆட்சியர்கள் உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 1.25 இலட்சம் மகளிரை நடப்பாண்டில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது. சுயஉதவிக்குழுக்கள் அவர்களுடைய நடவடிக்கைகளை மேலும் சிறப்பாக செய்வதற்கு உதவும்.

நியாயவிலைக் கடைகளின் மூலம், கொள்முதல் ஏற்பாட்டு முறை வழங்கல் விலை போன்றவற்றில் மாற்றங்களைச் செய்து பொது விநியோக ஏற்பாட்டு முறையை அரசு அண்மையில் மாற்றியமைத்துள்ளது. மிகுந்த நிதி நெருக்கடியில் நாட்டில் குறைந்த விலையில், அரிசியை இவ்வரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. எனவே, ஒவ்வொரு குடும்பமும் முதல் 10 கிலோ அரிசியை கிலோ ரூ. 3.50 விலையில் பெறுவதற்கு உறுதி செய்ய வேண்டும். பொது விநியோக ஏற்பாட்டு முறையைத் திறமையுடன் நிருவகிக்க வேண்டுமென்பதே மிகமுக்கியமான பொறுப்பாகும். விநியோகிக்கப்படும் அளவு, உரிய நேரத்தில் பொருட்கள் வழங்கப்படுதல், சரியான எடை மற்றும் சரியான விலை; ஆகியவை குறித்த புகார்களைக் கவனிக்கின்ற புகார் தீர்வு சேவை ஒன்றை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

### பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திற்கும் குடிநீர்

தென்மேற்குப் பருவமழை நடப்பாண்டில் சாதகமாக இல்லை. நல்ல முறையில் தொடங்கிய வடகிழக்குப் பருவமழை விரைவில் முடிந்துவிட்டது. இதன் காரணமாக, பல மாவட்டங்களில் ஒட்டுமொத்த மழை பொழிவில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பருவமழை மீண்டும் தொடங்கியிருந்தாலும், எத்தனை நாள் மழை நீடிக்கும் என்பதை நாம் உறுதியாக

கூற முடியாது. நிலைமையை உன்னிப்பாக கவனித்து, ஏற்படக்கூடிய குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க போர்க்கால நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திற்கும் குடிநீர் வழங்கும் பணிகளுக்குத் தேவையான நிதி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு ஊரக மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் கிடைக்கும் நிதிகளைப் பயன்படுத்தியும், வறட்சி நிவாரணப் பணிகளுக்கான சிறப்பு அரிசி ஒதுக்கீட்டைக் கொண்டும் நீங்களும் நல்ல திட்டப் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்.

அங்குள்ள பெரிய மற்றும் சிறிய ஏரிகள் மற்றும் கிராமப்புற குளங்கள் மேம்படுத்தப்படுவதையும் இத்தகைய நீர்நிலைகளுக்குத் தண்ணீர் வழங்கும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் தீட்ட இந்தச் சந்தர்ப்பத்தை மாவட்ட ஆட்சியர்கள் பயன்படுத்த வேண்டும். இது நமது நீர் ஆதாரங்களை முடிந்த அளவுக்குப் பயன்படுத்த வகை செய்யும்.

நல்ல நிருவாகத் திறன் பற்றி இப்போது நான் உங்களிடம் பேச விரும்புகிறேன். நல்ல நிருவாக நடைமுறைகள் மட்டுமே திறமையை மேம்படுத்தி அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகளிலும் அதனைக் காண இயலும். வரையறையற்ற தகவல் தொழில்நுட்ப வாய்ப்புகள் திறமையான பணிகளை அளிப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த நோக்கத்துடன் தான், வட்டாட்சி அலுவலகங்களில் தொடு திரை தகவல் மையங்களையும் ஊரகப் பகுதியில் இணையதள அடிப்படையிலான தகவல் மையங்களையும், நான் தொடங்கி வைத்தேன். சாதாரண மனிதர்களுக்கும் எவ்வித தகவல் பரிமாற்றச் செலவுமின்றி திறம்படவும் விரைந்தும் பணிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காகவே நான் கணினி வரி நிருவாக வசதியை வலியுறுத்துகிறேன். ஆவணங்களைப் பதிவு செய்தல், பட்டா மாற்றுதல் ஏனைய பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற வட்டாட்சி அலுவலக நடவடிக்கைகளையும் உரிமை மாற்றங்கள் பயன்பாட்டுக்குத் தொகை செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும் இவ்வசதியின் மூலம் சிறப்பாகச் செய்ய இயலும் விரிவான கணினி வழி நிர்வாக பணி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் அதன் நற்பணிகளை பெறும் வகையில் இவற்றை நாம் விரைந்து செயல்படுத்த வேண்டும்.

**காலதாமதத்தைக் குறைக்க பணிகள் ஒருங்கிணைப்பு**

பல்வேறு துறைகளின் மூலமாக மேற்கொள்ளப்படும் பணிகளை ஒருங்கிணைப்பது மிகவும் முக்கியமானதாகும். இது ஒரு பணி, இரண்டு முறை செய்யப்படுவதைத் தவிர்ப்பதோடு மட்டுமல்லாமல், நடைமுறை கால தாமதத்தைக் குறைத்து உரிய அளவிற்கு வள வாயில்களைப் பயன்படுத்த ஏதுவாகும். எடுத்துக்காட்டாக, நல்ல பயனை அளிக்கும் வகையில் பல்வேறு இயக்கங்களில் சுகாதாரம், கல்வி, சமூக நலம் ஆகிய துறைகளை ஒருங்கிணைக்கலாம். இதேபோன்று, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களில் நல்ல பலன் ஏற்பட்டதை போன்று வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், குடிநீர் வழங்கல் மற்றும் சிறுதொழில்கள் ஆகிய துறைகளையும் ஒருங்கிணைக் கலாம்.

இவ்வாறு பணிகளை ஒருங்கிணைக்கும் நடைமுறை ஏற்பாட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்களின் மாவட்டங்களில் செயல்படுத்தி, பல்வேறு களப் பணிகள் ஒன்றிணைந்த முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த வகையில் பணிகளை மேற்கொள்வதே இலக்கிடப்பட்ட பிரிவினருக்கு நன்முறையில் பணிகள் சென்றடைய ஏதுவாக இருக்கும்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்காத வரையில், நல்லாட்சி என்பது பயனில்லாத கற்பனையாகவே இருக்கும். இந்த அரசு, ஊழலுக்கு எதிராக அனைத்து நிலைகளிலும் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் அரசு துறைகள், அதன் முகவரமைப்புகளாக அமைந்து பணிகளை நிறைவேற்றுகின்றனவா என்பதை கவனிக்க வேண்டும். அரசுப் பணியாளர்கள் மக்களில் ஒருவராகச் செயல்படுகின்ற மனப்போக்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் நிருவாகம் மக்களிடமும், மக்களுக்காகவும் நெருங்கிச் செயல்படுவதற்கு ஜனநாயக பரவலாக்கம், பல திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை ஒரு நடைமுறையாகும். இது வலுப்படுத்தப்பட வேண்டும். ஒரு நாள் எழும்பும் ஒரு பிரச்சினை என்னவெனில் பல பொறுப்புகளை நாம் ஒப்படைத்துள்ள உள்ளாட்சி மன்றங்கள் தரமான பணியை திருப்திகரமாக மேற்கொண்டுள்ளனவா என்பதே ஆகும்.



**உள்ளாட்சிப் பணிகளைக் கவனிக்க வேண்டும்**

அரசு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கணிசமான அளவிற்கு நிதிகளையும் மானியங்களையும் பகிர்ந்தளித்துள்ளது. அவை தங்கள் பணிகளைச் சரிவர செய்திருப்பார்களேயானால், ஊரகப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும். உள்ளாட்சி மன்றங்கள் திறம்படச் செயல்படுவதைக் கண்காணிப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும். மக்களாட்சி பரவலாக்கம் என்பது சிறப்பு வாய்ந்த ஒரு முறையாகும். இது, மக்களுக்குரிய நீடித்த பயன்களை உண்மையாக அளித்து மக்களையும் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வதாகும். உள்ளாட்சி மன்றங்களின் சட்டப்பூர்வமான நற்பணிகள் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உள்ளாட்சி மன்றங்களின் ஆய்வாளர்களாகச் செயல்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

விவாதத்திற்கான நிகழ்ச்சி நிரல் தற்போது உங்கள் முன்னர் வைக்கப்பட்டுள்ளது. நமக்கு வாக்களித்து நம்மை ஆட்சியில் அமரச் செய்துள்ள மக்கள் நம்மேல் சுமத்தியுள்ள கடமைகளை இந்த நிகழ்ச்சி நிரலில் அளிக்கப்பட்டுள்ள மூன்று கருப்பொருள்களை தெரிவு செய்து அதன் வாயிலாக சுருக்கமாகக் கூறலாம்.

தெரிவு செய்யப்பட்டுள்ள அவை அமைதி, மேம்பாடு, நல்லாட்சி ஆகியனவாகும். இவற்றில் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும் என்ற இந்த அரசின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில், நீங்களாகவே மிகுந்த தரமான நடைமுறைகளை மேற்கொள்வதை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.



நிர்வாகம் என்பது ஒரு சாத்தியமான கலை என்ற பெரு மதிநுட்பத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

முடியாதவற்றையும் சாதித்துக் காட்டுவதற்காக நான் ஒவ்வொரு நாடி நரம்புகளையும் அர்ப்பணிக்கின்றேன். மாவட்ட ஆட்சித்தலைவர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் அதை தலைமையேற்று நடத்த வேண்டும். நான் பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்களை எதிர் பார்க்கிறேன்.

*– மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*9.12.2002 அன்று, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் கூட்டு மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.*

> **‘‘தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் ஒத்துழைக்க வேண்டும்’’**
>
> மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா

இம்மாநாட்டின் வளர்ச்சி பற்றிய நிகழ்சசி நிரலின் இறுதி அமர்வில் நாம் இருக்கிறோம். இம்மாநாடு கடந்த 3 நாட்களாக பல்வேறு புதிய கருத்துக்களை – உந்துதலைப் புதிய முயற்சிகளை வெளிக்கொணர்ந்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் அடிப்படையான உண்மை நிலவரங்களை நான் நன்கு அறிந்து கொள்ள உதவும் வகையில் உங்களது விவாதம் அமைந்திருந்தது.

இம்மாநாட்டின் இறுதிக்கட்ட அறிவிப்பின் மூலம் அரசு என்ன எதிர்பார்க்கிறதோ அதுவே நமது நிகழ்ச்சி நிரலாக முன்னுரிமையாக – வரப்போகிற மாதங்களில் இருக்க வேண்டும் என்பதில் உங்கள் கவனத்தைக் குவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அக்கறை கொண்ட திறமையான, நியாயமான உடனுக்குடன் பதிலளிக்கிற ஒரு நிர்வாகத்தை வழங்குவதில்தான் நமது கவனம் இருக்க வேண்டும். இந்த பொறுப்பின் மையமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் இருக்கிறீர்கள். எனவே மக்கள், அரசாங்கத்தின் முகமாகவே உங்களைப் பார்க்கிறார்கள்.

**வெற்றியின் சோதனை**

இறுதியாக, மக்கள் நம்மைப் பற்றி என்ன அபிப்பிராயத்தை வைத்திருக்கிறார்கள் என்பதில்தான் நமது வெற்றியின் சோதனை அடங்கியிருக்கிறது. எனவே, தயக்கத்திற்கோ – பிறகு பார்த்துக் கொள்ளலாம் எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என்கிற எண்ணத்திற்கோ, குறைகூறலுக்கோ, சலித்துக் கொள்வதற்கோ அல்லது வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்பன போன்ற அணுகுமுறைக்கோ இங்கே இடமில்லை.

மாவட்ட ஆட்சியர்கள், பிரச்சினைகளையும் – இடர்ப்பாடுகளையும் தேடிக் கண்டறிய வேண்டும். அவைகளுக்கான தீர்வை புதிய முறையில் – மிக நுட்பமாகத் தீர்த்து வைப்பதில் இடைவிடாது சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் ஓர் அம்சம் தெரிய வந்துள்ளது. அதாவது தீவிரவாதத்தை வலியுறுத்தும் – சில குறிப்பிட்ட தவறான வழியில் செல்லும் குழுக்களின் இலட்சியக் கோட்பாட்டு வழியே செல்லும் பலவீனம், சில பகுதி வாழ்மக்களிடம் இருப்பது என்பதுதான்.

**தீவிரவாதத்தை எதிர்க்க சிறப்புத் திட்டங்கள்**

இவர்களை உதாசீனப்படுத்தி ஒதுக்குவதால் தான் தீவிரவாதத்தில் பற்று வைக்கிறார்கள். நிதியைக் கையாளும் அதிகாரம் உங்கள் கையில் உள்ள நிலையில், சரியான அணுகுமுறையைக் கையாண்டு, அதன் மூலம் அவர்களின் குறைகளைக் களைவதில் உங்களுக்கு எந்தத் தயக்கமும் இருக்கக்கூடாது.

ஆரம்ப நிலையில் உள்ள சவால்களைத் தீர்த்து வைப்பதில் எந்தத் தயக்கமும் காட்டக்கூடாது. தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் மாவட்ட ஆட்சியர்கள் இதற்கென சிறப்புத் திட்டங்களை வகுத்து – சிறப்புக் கவனத்துடன் தீவிரவாதத்தை எதிர்த்துச் செயல்பட வேண்டும்.

இன்றைய விவாதங்களில் வளர்ச்சித் திட்டங்கள் முழுப் பங்கினைப் பெற்றுள்ளது. திட்டங்களை – அதன்



குறிப்புகளை – அவற்றை அமல்படுத்துவது தொடர்பாக பயனுள்ள யோசனைகளை உங்களில் சிலர் தெரிவித்துள்ளீர்கள். இந்த அரிய யோசனைகளில் ஒரு பகுதி வர இருக்கிற வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் வகையில் அவற்றை கவனமுடன் பரிசீலிக்க வேண்டும்.

**குடிநீர்**

தென்மேற்குப் பருவமழை தவறியதால் ஏற்பட்ட பாதிப்புகளையும், வடகிழக்குப் பருவமழையால் ஏற்பட்டுள்ள நன்மைகளையும் பற்றி நாம் இங்கே விவாதித்தோம். அவற்றில் சில, அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சார்ந்தவை. அவற்றில் தலையாயது குடிநீர் வழங்குவது.

எதிர்மாறான பருவநிலைமையினால் பாதிக்கப் பட்ட மாவட்டங்களில், குடிநீர் வழங்கும் பணியை மேற்கொள்ள ரூ.30 கோடி ஒதுக்கி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து ஏற்பட்ட மூன்று பருவ காலங்களும் பொய்த்து விட்ட நிலையில் பல மாவட்டங்களில் நிரந்தர வருவாய் ஈட்டும் தேங்காய் விளைச்சல் பெரும் பாதிப்புக்கு ஆளானது. எனவே, பேரழிவு துயர் துடைப்பு காலத்தில் வழங்கப்படும் நிவாரண நிதிக்கான விதிகளை ஒட்டி ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.4,000 வழங்கி – உதவிட முடிவு செய்துள்ளேன்.

**தென்னை விவசாயிகளுக்கு ரூ.8 கோடி நிவாரணம்**

இந்தத் தொகை, தென்னை விவசாயிகள் தங்களது புதிய தென்னங்கன்றுகளை நடவும் வளர்க்கவும் அவர்களுக்கு கைகொடுக்கும். இவ்வகை நிவாரண உதவி அளிப்பதன் மூலம் அரசுக்கு ரூ.8.9 கோடி கூடுதலாகச் செலவாகும்.

எனவே நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் பருவநிலை தவறியதன் காரணமாக பாதிக்கப்பட்ட நிலம் மற்றும் விவசாயிகளின் நிலைமையைச் சரியாக கண்டறிந்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதுதான்.

இதில் கூடுதலாக தொகை ஏதேனும் தேவைப்பட்டால் அரசின் கவனத்துக்கு கொண்டுவந்து கூடுதல் மானிய உதவி கோரலாம் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**வரும் பருவத்துக்குள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கம்**

அடுத்தப்படியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்று தரிசுநில மேம்பாட்டுத் திட்டம். தரிசு நிலங்களை உடைய விவசாயிகளை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி தீவிர பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். வரும் விவசாயப் பருவ காலத்துக்குள் அனைத்துத் தரிசு நிலங்களையும் ஏர்முனைக்குக் கீழ் கொண்டுவரும் ஓர் புதிய வேளாண் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் விவசாயத்துக்கு மருத்துவ சிகிச்சை என்ற புதிய அணுகுமுறையுடன் அணுகி, நோயைக் கண்டறிந்து – தேவையான சிகிச்சைகளை வழங்க வேண்டும். அத்துடன் அந்த மண்ணுக்கு தேவைப்படும் விவசாயத்தை – அதன் விதைகளை வழங்குவதிலும் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறாக தரிசு நிலங்களை – விளைநிலங்களாக மாற்றுவதற்கு அதனை எடுத்துக் கொள்ளும் – பெரிய குழுமங்களை அடையாளம் கண்டு தெரிந்து கொள்வதிலும் – சிறிய தொழிற்சாலைகள் அல்லது வேளாண் வணிகத்தை துவக்குவதிலும் – தாவரங்களை எரிப்பதன் மூலம் ஏற்படும் சக்தியை பயன்படுத்தும் தொழிலகங்களை உருவாக்குவது போன்றவற்றிலும் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

**புதிய வேளாண் திட்டம்**

இந்த வகையான புதிய வேளாண் திட்டம் வரும் தைப்பொங்கல் அன்று துவக்கப்பட வேண்டும்.

இந்த மாநாட்டில், மழைநீர் அறுவடை குறித்த பல்வேறு வெற்றிகரமான நிகழ்வுகளையும், அதன் காரணமாக பற்றாக்குறை நீர்வள ஆதாரத்தை மேலாண்மை செய்வதில் ஏற்பட்ட நல்ல பயன்களையும், நான் இங்கே கேட்டுக் கொண்டிருந்தேன்.

இத்திட்டம் ஓர் இயக்கமாக உருவெடுக்க வேண்டும். இதனை ஒரு சவாலாகவும் ஏற்க வேண்டும். மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு கட்டடங்களிலும் மழைநீர் அறுவடை கட்டமைப்பை

ஏற்படுத்தித் தர ரூ.25 கோடி தொகையை ஒதுக்கீடு செய்து அளிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாநிலத்தின் ஒவ்வொரு நகரத்திலும் மழைநீர் சேகரிப்பு வசதியில்லாத கட்டடங்களோ, வீடுகளோ இல்லை என்னும் நிலையை உருவாக்குவதில் உங்களிடையே ஆரோக்கியமான ஒரு போட்டியை கொடியசைத்து துவக்கி வைக்கிறேன். மாவட்ட ஆட்சியர்களிடையே துவங்கி உள்ள இந்தப் போட்டியில் யார் வெல்லப் போகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

**பிளாஸ்டிக் கழிவைப் பிரித்து**
**கழித்தலுக்கு முன்னுரிமை**

மற்றுமொரு முக்கிய முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ள வேண்டிய துறை ஒன்று உண்டென்றால் அது திடக் கழிவு பராமரிப்புதான். இதிலும், பிளாஸ்டிக் கழிவை முற்றிலுமாகப் பிரித்துக் கழித்தலுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

ஆரம்ப நிலையிலேயே, குப்பைக் கழிவுகளை வேறுபடுத்தி பிரிக்கும் புதிய தீர்வுகளை அமல்படுத்துவதிலும்; பிளாஸ்டிக் கழிவுகளைத் தனியாகக் கொட்டுவதற்கென நிலத்தை உருவாக்குவதிலும்; இந்த முயற்சியில் பங்கு பெற உள்ளாட்சி அமைப்புகளையும், அரசு சாரா நிறுவனங்களையும், ஒருங்கிணைப்பதிலும் இதனை அமல்படுத்துவதில் உங்களில் பலர் மிகுந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

இந்தப் பிரச்சாரமும், மக்கள் சார்ந்த இயக்கமாக மாற்ற வேண்டும்.

பொது சுகாதாரமும், சுத்தமும் பராமரிக்கப் படுவதன் மூலம், பொது சுகாதாரத்தை மேன்மைப்படுத்தும் போராட்டத்தில் நாம் பாதி வெற்றியடைந்ததாக எடுத்துக் கொள்ளலாம்.

எனவே, கிராமங்களையும், நகரப் பஞ்சாயத்துக் களையும், நகராட்சிகளையும், மாநகராட்சிகளையும் தூய்மைப்படுத்தும் ஒரு சிறப்புத் திட்டத்தை நீங்கள் துவக்கி நடத்த வேண்டுமென நான் விரும்புகிறேன்.

2003 தைப் பொங்கலுக்குள் இதன் விளைவு அனைவருக்கும் கண்களால் பார்க்கும் வண்ணம் வெளிப்பட வேண்டும். அதற்குப் பிறகும் இந்த இயக்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

**மதிய உணவுப் பயனாளிகளுக்கு**
**35 பைசாவாக அதிகரிப்பு**

ஊட்டச்சத்து மற்றும் மதிய உணவு திட்டத்திலும், சுகாதார முறைகள் கடைபிடிக்கப்படுவதிலும் தயவு செய்து கவனம் செலுத்துங்கள். அதில், சுகாதார மற்றும் சமூக நலத்துறை அலுவலர்களையும் இணைந்து பணியாற்றும் அணுகுமுறையை கடைபிடியுங்கள். கடுமையான நிதி தட்டுப்பாடு உள்ள சூழ்நிலையிலும்; ஒரு நாளைக்கான காய்கறிக்காகவும்; பிறவற்றிற் காகவும், தற்போது ஒதுக்கப்பட்டு செலவிடப்படும் பயனாளி ஒருவருக்கான செலவு 23 பைசா என்பதை மேலும் 12 பைசா என உயர்த்தி வழங்கும் அறிவிப்பை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதன் மூலம் இது 35 பைசாவாக அதிகரிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 81.50 இலட்சம் பயனாளிகள் பயன்டைகின்றனர். இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.20.98 கோடியாகும்.

ஒவ்வொரு நாளும் தரமான பசுமையான கூடுதல் காய்கறிகளை, விலை கொடுத்து வாங்க இது உதவி செய்யும்; இதனால் ஒவ்வொரு பயனாளிக்கும் உயர் ஊட்டச்சத்து மிகுந்த உணவு கொடுக்க முடியும்.

**நெசவாளர்களுக்கு ரூ.48 கோடியில்**
**புதிய திட்டம்**

இலவச வேட்டி–சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், ஆரம்பத்தில் வேட்டி–சேலைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்த கைத்தறி நெசவாளர்களுக் கான, ஓர் ஆக்கப்பூர்வமான ஆதரவு தரும் வகையில்; இந்தத் திட்டத்தை முற்றிலும், சந்தை சார்ந்த உற்பத்தித் திட்டமாக மாற்றி அமைத்துள்ளோம்.

நடப்பு ஆண்டில் ரூ.47.41 கோடி செலவில் இந்தப் புதிய திட்டம் அமல்படுத்தப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும், வேட்டிகளும் – சேலைகளும், நியாய விலை கடைகள் மூலம் ஒரு நிரந்தர அடிப்படையில், எல்லோரும் பணம் கொடுத்து வாங்கும் வகையில் விற்கப்படும்.



புதிய வடிவமைப்பும், புதிய உற்பத்தித் தொழில்நுட்பமும் கொண்டு தயாரிக்கப்படும் துணி வகைகளுக்கு, பொதுமக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருக்கும்.

இந்தச் சேலை–வேட்டிகளின் விற்பனையை அதிகப்படுத்துவதிலும், மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

1996–2001ஆம் ஆண்டு காலகட்டத்தில், போதிய கவனத்தை பெறாத அல்லது கவனத்திற்கே எடுத்துக் கொள்ளப்படாத, சாலைகளின், பரிதாப நிலைகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பல மாவட்ட ஆட்சியர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான நிதி நெருக்கடி நிலைமை, நம்மீது சுமத்தப்பட்ட நிலையில், பெரிய அளவிலான எந்த ஒரு திட்டத்தையும் எடுத்து, செயல்படுத்திட முடியாத நிலையில், இப்பொழுது நீங்கள் இந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். ரூ.90 கோடி மதிப்பில், 2,500 கி.மீ. தூரமுள்ள சாலைகளை மறுபடியும் போடும் ஒரு மாபெரும் திட்ட நடைமுறையை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

2003–ஜனவரி 1ஆம் தேதி முதல், இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்றப்படும்.

எனவே, எதிர்வரும் நிதி ஆண்டில், அதாவது 2003–2004இல் கூடுதலாக மேலும், ரூ.180 கோடியில் 5 ஆயிரம் கி.மீ. தூர சாலைகள் மறு சீரமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட ஆட்சியர்கள் நெடுஞ்சாலைத் துறையினருடன் இணைந்து பொதுமக்கள் திருப்தியுறும் அளவில் முன்னுரிமை அடிப்படையில், இந்தச் சாலை சீரமைப்புப் பணியை மேற்கொள்ள நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## நீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க வழி

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உடனடியாக 50 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி முதல் கட்டமாக மாவட்டங்களுக்கு வழங்கப்படும். தேவையைப் பொறுத்து கூடுதலாகவும் அரிசி வழங்கப்படும். இந்த ஒதுக்கீட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியாயமாக தேவையான இடத்திற்கு வழங்க வேண்டும். குறிப்பாக வறட்சி நிவாரணப் பணிகளாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, கால்வாய் சீரமைப்பு, உபரித் தண்ணீரை பஞ்சாயத்து குளங்களுக்கு திருப்பி விடுவது, சிறிய குளங்கள், ஏரிகள். பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள பெரிய ஏரிகள் ஆகியவற்றைச் சீரமைக்க முன்னுரிமை அளிக்கவேண்டும். இதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க வழி கிடைக்கும்.

நல்ல நிர்வாகம் என்பதுதான் நமது தாரக மந்திரம். உங்கள் மாவட்டத்தில் நல்ல நிர்வாகத்தைக் கொடுக்க ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். இதற்காக உள்ளாட்சிகளின் மேலாண்மைத் திறமையை அதிகப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும. குறிப்பாக பணியில் திறமையை காட்டுவதன் மூலம் சேவையைச் செழுமையாக்க முடியும். தகவல் தொழில்நுட்பத்தையும், மக்களின் கூட்டு முயற்சிகளையும் மேலாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும். தகவல்களை ஒருங்கிணைப்பது, தகவல் பரிமாற்ற செலவினங்களை குறைப்பது, சுயஉதவிக் குழுக்களைப் பயன்படுத்திக் கொள்வது ஆகியவை அனைத்தும் உங்கள் மாவட்டத்தில் நல்ல நிர்வாகத்தை உருவாக்கும் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் நாம் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைக் கண்காணிப்பதை விட நாம் எப்படி செலவு செய்கிறோம் என்பதைத்தான் கண்காணிக்கிறார்கள். இதுதான் அவர்களின் முக்கிய பிரச்சினையும்கூட. இதனை நீங்கள் பிரதானமாக உங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## ரூ. 4 கோடியில் தொடுதிரை கணினி

தகவல் தொழில்நுட்பம் மேலாண்மை விஷயத்தில் அடுத்த ஆண்டில் மீதமுள்ள 177 தாலுகா அலுவலகங்களிலும் மக்கள் தாங்களாகவே தகவல் அறிந்து கொள்ள பயன்படும் தொடுதிரைக் கணினி நிறுவப்படும். இவை அனைத்தும் இணையதளத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். இந்த திட்டம் ரூ.4 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

மக்களுக்கு திறமையான, அவர்கள் மீது அக்கறை கொண்ட ஒரு நிர்வாகத்தை அளிப்பதில் அரசு மாவட்ட ஆட்சியர்களைத்தான் நம்பியுள்ளது.

அடித்தட்டு மக்களுக்காக நீங்கள் அக்கறையெடுக்கிறீர்கள் என்பதும் நீங்கள் அவர்கள் விஷயங்களில் கவனம் செலுத்துகிறீர்கள் என்பதும் உங்கள் நடவடிக்கைகளில் வெளிப்பட வேண்டும். நாம் இங்கே கூடியிருப்பது, நடைபெற்றுள்ள திட்டங்களின் முன்னேற்றம் குறித்துப் பரிசீலிப்பது, இலக்குகளைத் தீர்மானிப்பது அடுத்து 'கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பகுதிகள் குறித்து முடிவு செய்வது இவை அனைத்தும் மக்களுக்கு சேவை செய்வதற்குத்தான். ஒவ்வொரு கோப்புக்கு பின்னாலும் ஒரு மனித முகம் இருக்கிறது. ஒவ்வொரு வளர்ச்சி அறிக்கையின் பின்னாலும் ஒரு மனிதன் இருக்கிறான். ஒவ்வொரு அறிக்கைக்குப் பின்னாலும் மக்களின் பிரச்சினை இருக்கிறது. இன்று இந்த மாநாட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக விருதுகள் பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அவர்களைப் போல் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 3 நாட்களாக நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள்– போலீஸ் அதிகாரிகளுடன் நடந்த ஆலோசனையின் அடிப்படையில் சில புதிய திட்டங்களை இங்கு அறிவிக்கின்றேன்.

### தருமபுரி மாவட்டத்தில் புதிய மின் நிலையம்

1. ரூ. 2 கோடி செலவில் தருமபுரி மாவட்டம் தென்கனிக்கோட்டை தாலுகாவிலுள்ள அஞ்செட்டி கிராமத்தில் புதிய துணை மின்நிலையம் அமைக்கப்படும்.

2. டிசம்பர் மாத இறுதிக்குள், தருமபுரி மாவட்டம் தென்கனிக்கோட்டை தாலுகாவிலுள்ள கெம்பக்கரை குடியிருப்பு பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்.

3. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் ரோந்து காவல்படை மற்றும் போக்குவரத்து சீரமைப்பு காவல் மையங்கள் மாற்றியமைக்கப்பட்டு நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து ஒழுங்கு மேம்படுத்தப்படும்.

4. கடலில் மீன்பிடிக்க செல்லும் விசைப்படகு மற்றும் பாரம்பரிய கட்டுமரம் கட்டுப்பாடுகளை மாற்றியமைத்து தமிழக கடல் மீன்பிடி பகுதியில் சீரமைப்பு சட்டம் 1983 திருத்தி அமைக்கப்பட்டு வரும் (அடுத்த) பட்ஜெட் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும்.

5. தேனி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் உடல் ஊனமுற்ற சிறுவர்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் மறுவாழ்வுக்காகவும் புதிய சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

6. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூடுவதற்கும், கூட்டம் நடத்துவதற்கும் அரசின் குழந்தை நலக் காப்பகங்கள் நடக்கும் கட்டடத்தில் இடம் அளிக்கப்படும். மாலையில் குழந்தைகள் வீட்டிற்கு சென்றபின் இந்த இடங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூடவும், கூட்டம் நடத்தவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

### திருச்சி மலைப்பகுதிகளுக்கு மின் இணைப்பு

7. திருச்சி மாவட்டத்தில் பச்சமலை தொடர்ச்சியில் உள்ள குண்டூர், சின்னப்பாலமலை, பெரியபாலமலை ஆகிய ஊர்களில் உள்ள மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு, வரும் பொங்கல் பண்டிகைக்கு முன்பு மின் இணைப்பு கொடுக்கப் படும்.

8. திருச்சி மாவட்ட எல்லையில் இருந்து பச்சமலைக்கு செல்லும் 16 கி.மீ. நீளமுள்ள மலைப்பாதை உடனடியாக மேம்படுத்தப்படும்.

9. தாத்தையங்கார்பேட்டையை ஒட்டி உள்ள விடுபட்ட 94 குடியிருப்பு பகுதிகளும் திருச்சி மாவட்டக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படும்.

10. திருச்சி அரசு பொது மருத்துவமனை மேலும் விரிவாக்கப்பட்டு நவீனப்படுத்தப்படும். இந்த மருத்துவமனையில் டயாலிசிஸ் மற்றும் பிளாஸ்மா நீக்கும் நவீன உபகரணங்கள் நிறுவப்படும்.

11. திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.78.70 கோடி செலவில் உடனடியாக செயல் படுத்தப்படும்.

12. கல்குவாரிகள் மழைநீர் சேகரிப்புக்கு பயன்



படுத்தப்படும். அதன் மூலம் கிடைக்கும் நீரை அருகில் உள்ள நகரங்களுக்குக் குடிநீராக விநியோகிக்கப்படும். அவ்வாறு பயன்படுத்த முடியாத கல் குவாரிகளை குப்பைகள் மூலமாக அவற்றை நிரப்பி, மக்கள் பயன்படுத்தும் வகையில் செப்பனிடப்படும்.

### எரிசக்தித் தேவைக்கு காட்டாமணக்கு பயிர்

13. தாவர எரி எண்ணெய் கொடுக்கும் காட்டாமணக்குப் பயிரை மாற்றுப் பயிராக பயிரிட மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு எண்ணெய் பிரித்தெடுக்கும் மையம் அமைக்க வழிவகை செய்யப்படும். இதன் மூலம் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

14. மேற்கு மாவட்டங்களில் சர்க்கரை வள்ளிக்கிழங்கை விவசாயிகள் அதிகம் பயிரிட ஊக்குவிக்கப்படும். இந்த கிழங்கில் இருந்து கிடைக்கும் எத்தனால், பெட்ரோலுடன் கலந்து பயன்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல் மாசின்றிப் பாதுகாக்கப்படுகிறது. இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.

15. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு புதிய உந்துதல் சக்தியும் அளிக்கப்படும். குறிப்பாக ஆண்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ள ஊக்குவிக்கப்படும்.

16. கட்டுப்பாடுகள் இல்லாமல் வெண்கருவேல் மரங்கள் வெட்டப்படுவதை தடுக்க, மரம் வணிக கட்டுப்பாட்டுச் சட்டத்திற்குள் இந்த மரவகையும் சேர்க்கப்படும்.

17. வைகை அணை நீர்பிடிப்புப் பகுதிகள் தூர்வாரப்பட்டு அதன் சரியான கொள்ளளவு பராமரிக்கப்படும்.

18. வைகை அணையில் சுற்றுலாப் படகுகள் விடப்படும்.

19. பெரியகுளம் மாவட்ட மருத்துவமனைக்கு பல்வேறு துறை சார்ந்த மருத்துவ வல்லுநர்கள் உடனடியாக நியமிக்கப்படுவார்கள்.

### ரூ.4 கோடியில் சோத்துப்பாறை குடிநீர் திட்டம்

20. தேனி மாவட்டத்தில் சோத்துப்பாறை குடிநீர்த் திட்டம் ரூ.4.85 கோடி செலவில் செயல்படுத்தப் படும்.

21. தேனி மாவட்டத்தில் ரூ.95 இலட்சம் செலவில் மீனாட்சிபுரம் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் படும்.

22. ஈரோடு மாவட்ட அரசு தலைமை பொது மருத்துவமனையில் புதிய லிப்ட் வசதி உடனடியாக அமைக்கப்படும்.

23. விருதுநகர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் ஆனைக் குட்டை அணையின் பழுதடைந்த பகுதிகள் உடனடியாக சரி செய்யப்படும்.

### நாகைத் துறைமுகத்தில் விரைவில் சரக்குக் கப்பல்

24. நாகப்பட்டினம் துறைமுகத்தில் சரக்குதளம் அமைக்க உடனடியாக நிதி ஒதுக்கப்படும். விரைவில் சரக்கு கப்பல்கள் கையாள நடவடிக்கை எடுக்கப்படும்.

25. நாகப்பட்டினத்தில் மக்கள் வளர்த்துள்ள மரக்கன்றுகளை மாற்று இடத்தில் பிடுங்கி நடும் பணியை ரூ.5.29 இலட்சத்தில் வனத்துறை மேற்கொள்ளும்.

26. வேதாரண்யம் தாலுக்காவில் உள்ள நாலுவேதபதி என்ற இடத்தில் சுற்றுலா பூங்கா அமைக்க சுயசார்பு திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் ஒதுக்கப்படும்.

27. திண்டுக்கல் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் ரூ.91.35 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

28. எல்லா தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளிலும் தொலைபேசித் தொடர்புகள் உடனடியாக வழங்கப்படும்.

29. 385 ஒன்றிய ஆரம்ப சுகாதார மையங்களும் 30 படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றி

அமைக்கப்பட்டுத் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும்.

30. திண்டுக்கல் மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் பழுதடைந்து செயல்படாமல் இருக்கும் அறுவைச் சிகிச்சை அரங்கு உடனடியாக சீர்படுத்தப்படும்.

31. கொடைக்கானல் நகராட்சிக்கு சந்தை மதிப்பில் பேருந்து நிலையத்தில் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்த இடம் ஒதுக்கப்படும்.

32. ஆற்காடு நகரத்தில் உள்ள கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் சேதமடைந்து உள்ளதை ரூ.45 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும்.

33. கும்பகோணம் மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிகளுக்குப் புதிய பிரிவு துவக்கப்படும்.

**500 மருத்துவர்கள் நியமனம்**

34. மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கையை தேவையான அளவிற்கு அதிகரிக்க சுமார் 500 பல்வேறு துறையைச் சேர்ந்த பொது மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

35. திருவண்ணாமலை மாவட்டத் தலைமை மருத்துவமனையில் தற்போது உள்ள 294 படுக்கை வசதியுடன் கூடுதலாக 50 படுக்கை வசதி ஏற்படுத்தப்படுவதுடன் நோயாளிகளின் தேவைக்கு ஏற்ப கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

36. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெண்கள் கல்லூரி கட்டட வளாகம் கட்டும் பணிக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.

37. இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 15 கிராமங்களை இணைப்பதற்காக ரூ.4 கோடி செலவில் கரந்தல் அருகிலும், மற்றொன்று ஆலங்குளம் அருகே உள்ள நாத்திபாலத்திலும் இரண்டு பாலங்கள் அமைக்கப்படும்.

38. அனைத்து மாவட்டங்களிலும் நில ஆவணங்களைக் கையாளுவதற்கு வசதியாக, கணினி, பிரிண்டர்கள், ஸ்கேனிங் உபகரணங்கள் வாங்க ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.

39. மாவட்டங்களில் உள்ள கிராம நலச் செவிலியர்கள் வாடகைக்கட்டடங்களில்இருந்து பணியாற்றும் இடங்களில் அதன் அருகில் ரூ.70 ஆயிரம் செலவில் மகப்பேறு மருத்துவ மையம் தேவைப்படும் கிராமங்களில் உடனடியாக அமைக்கப்படும்.

40. பெரம்பலூர், தேனி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக இளம் பெண்களை பாதிக்கும் 'ருபெல்லா' நோயை அழிக்க தடுப்பு ஊசிகள் போடப்படும்.

**29 மாவட்ட ஆட்சியர்களுக்கு லாப்டாப் கம்ப்யூட்டர்கள்**

41. 29 மாவட்ட ஆட்சியர்களுக்கும் லாப்–டாப் கம்ப்யூட்டர்கள் வழங்கப்படும்.

42. அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தொழில் தொடங்க முதலீட்டு உச்ச வரம்பு ரூ.35 இலட்சத்தில் இருந்து ரூ.25 இலட்சமாக குறைக்கப்படுகிறது. இதன் மூலம் பஞ்சாயத்து ஒன்றியங்களில் அதிகப்படியான தொழில் நிறுவனங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படும்.

43. கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக ஆண்களுக்காகத் தனிக் கழிவறை திட்டம் செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.

44. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை அணையின் மதகுகள் ரூ.23 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

45. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 37 நகரியங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களாக நிலை குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் திட்ட நிதி அதிகமாகப் பெற ஏதுவாகும்.

46. மதுராந்தகம் உயர்நிலை வாய்க்கால் ரூ.1 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

மேலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் லட்சியத்தை மேற்கொண்டு வருகிறேன். பல்வேறு தடைகள் உள்ள போதும் எனக்கு தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் நம்பிக்கை இருக்கிறது. எனவே நீங்கள் முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

*– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*
*11.12.2002 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள்*
*மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை*



# தமிழக இளம்மகளிர் கூடைப்பந்து அணிக்கு தமிழக முதலமைச்சர் பாராட்டு!

அண்மையில் பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் நகரில் தேசிய அளவிலான இளம் மகளிர் கூடைப் பந்து போட்டி கடந்த 2002 அக்டோபர் திங்கள் 13 முதல் 19 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்கேற்ற தமிழக இளம் மகளிர் அணி, வலிமை மிக்க வட மாநில அணிகளை வென்று சாம்பியன் பட்டம் பெற்றது. தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த இந்த கூடைப்பந்து வீராங்கனைகள் 13.12.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, இளம் மகளிர் கூடைப்பந்து அணி கேப்டன் எல். பிரியா தலைமையில், அமலஜோதி, ரேவதி, விஜயலட்சுமி, காயத்ரி, சோபியா தாமஸ், தீபிகா, அபிநயா, சந்தானலட்சுமி, மகாலட்சுமி, காவியா, கிருத்திகா ஆகிய வீராங்கனைகளும், பயிற்றுநர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, மேலாளர் திரு.பி. என். சபாநாயகம், ஆகியோரும் சந்தித்தனர்.

தமிழக இளம் மகளிர் கூடைப்பந்து அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டம் பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெகுவாகப் பாராட்டி வீராங்கனைகள் அனைவருக்கும் தமது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

# பூமி பாரத்தைச் சுமக்கும் காளைமாடு

☐ குல்வந்த் சிங் விர்க்

தாதிகார கிராமம் அமிர்தசரஸிலிருந்து அதிகத் தொலைவில்லை. நன்கு சமனிடப்பட்ட சாலைக்கருகில் உள்ளதால் அது வசதி உடைய கிராமங்களில் ஒன்றாகும். ஆனால் மான்சிங்கின் பயணத்தைத் தூண்டிய உற்சாகம் எவ்வளவு தூரத்தையும் எளிதானதாகச் செய்துவிடும். மாலை நேர நிழல் பரவ ஆரம்பித்தது. டாங்கா வண்டியின் குதிரை களைத்திருந்தாலும் மான்சிங் சிறிது கூடக் கவலைப்படவில்லை.

இராணுவக்காரனான இளைஞன் மானசிங் விடுப்பில் தனது நண்பனான கரம்சிங்கின் கிராமத்துக்குச் சென்று கொண்டிருந்தான். மனித உறவுகள் இராணுவ சேவையில் வளருவது போல வேறெங்கும் ஆழமாக வளருவதில்லை. மான்சிங்கும் கரம்சிங்கும் ஒரே படைப்பிரிவு மையத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் இணைந்து பர்மா போர் முனையில் போரிட்டார்கள். முன்னதாகவே சேர்ந்தவன். இப்போது ஹவில்தாராக இருக்கிறான். மான்சிங் சற்று முன்புதான் நாயக்காக உயர்ந்திருந்தான்.

கரம்சிங் எப்போது விடுப்பில் வரப்போகிறான் என்று கரம்சிங்கின் கிராமத்தார் அவனுடைய தந்தையிடம் கேட்ட வண்ணமே இருந்தனர். அவன் அனைவருக்கும் அவ்வளவு வேண்டியவன். அவன் பேச்சு பிடிக்காதவர் கிடையாது. அவன் பக்கத்திலேயே அமர்ந்து அவனுடைய போர் அனுபவங்களைக் கேட்ட வண்ணமே இருப்பார்கள். அந்தக் கிராமத்தில் அவன் ஒருவன் தான் இராணுவத்தைச் சேர்ந்தவன் என்றில்லை. வேறு சிலரும் இருந்தனர். ஆனால் அவர்கள் கிராமத்துக்கு வரும் போது ஊர்க்காரர்களிடம் பேசுவதற்கு விஷயமே இல்லாதது போலிருக்கும். சம்பிரதாய உபசரிப்புக்கு மேல் ஏதும் நேராது. ஆனால் கரம்சிங் விஷயமே வேறு. அவன் கிராமத்திலிருக்கும் போது அவனுக்காக காலைக்குளியல் கிணற்றருகே நிறையப் பேர் காத்திருப்பார்கள். குளிர்காலத்தில் நள்ளிரவு வரை நிலக்கடலைக்காரன் அடுப்பு தணியும் வரை கரம்சிங்கோடு பேசிக் கொண்டிருப்பார்கள். கரம்சிங்கன் பேச்சுக்கும் உற்சாகத்துக்கும் முடிவே இல்லாதது போல இருக்கும்.

கரம்சிங் அவனுடைய அணியில் நன்கு துப்பாக்கி சுடுபவன் என்று பெயர் பெற்றிருந்தான். துப்பாக்கி சுடும் போட்டிகளில் அவனுடைய குண்டுகள் குறி தவறாது வட்ட இலக்கின் நடுவில் தையல் இட்டது போலத் துளையிட்டிருக்கின்றன. மரக் கிளைகளில் ஒளிந்து கொண்டிருந்த பல ஜப்பானியச் சிப்பாய்கள் அவனுடைய துப்பாக்கிக்கு வீழ்ந்திருக்கிறார்கள். ஜப்பானிய குண்டுகளுக்குப் பலியான தனது நண்பர்களுக்கு அவன் இவ்வாறு ஈடுகட்டி அவனுடைய அணியின் காயமுற்ற இதயத்தைத் தேற்றினான். ஒரு முழு இயந்திரத் துப்பாக்கியின் தோட்டாக் கொத்து தவறவிட்டதை அவனுடைய ஒரு குண்டு அடித்துவிடும். அவனுடைய கைகால்கள் இளமைக்குரிய இணக்கத்தை இழந்திருந்தாலும் அவனுடைய உடற்பயிற்சி வித்தைகள் மக்களை இன்னமும் வியப்பிலாழ்த்திக் கொண்டிருந்தன.

போர் நாட்களில் கசரத்து மற்றும் இதர விளையாட்டுகள் தடை செய்யப்பட்டிருந்தன. விரைத்த சீருடையில் இசைக்கேற்ற ஊர்வலம் எல்லாம் கிடையாது. சாதாரண உடையில் வெளியில் சென்று ஏதாவது வாங்குவதற்குக் கடை கண்ணி ஏதும் அருகில் கிடையாது. எவனும் தன் ஊர்க்காரர்கள் யாரையும்



சந்திக்க இயலாது. விடுப்பு எடுத்துச் செல்ல மான்சிங்கின் முறை வந்தபோது கரம்சிங் சிறிது பொறாமைப்பட்டான். அவனும் உடன் செல்ல ஆசைப்பட்டான். விடுப்பு கிடைத்தாலே அது சாத்தியம். இருவரும், சேர்ந்தே விடுப்பு நாட்களைக் கழிக்கலாம். கஹர்கான் அமிர்தசரஸிலிருந்து அதிகத் தொலைவில்லை. ஐம்பது மைல்தான் இருவர் ஊர்களையும் பிரித்தாலும் ஒன்று பழமையில் வேரூன்றியுள்ள மஜ்ஹா என்ற பகுதியிலும் இன்னொன்று அண்மையில் உருவான பார் என்ற பகுதியிலும் இருந்தது



விடுப்பு கிடைப்பது சிரமமான காலம் எப்படி அதிசயமாகச் சில அதிர்ஷ்டசாலிகளுக்குப் பராக்கிரமத்தைக் காட்டியப் பதக்கங்கள் வெல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றதோ அவ்வாறுதான் சிலருக்கே விடுப்புக் கிடைத்தது. மான்சிங் இராணுவ வண்டியில் ஏறிக்கொண்டு கிளம்புகிற தருணத்தில் கரம்சிங் அவனுக்கு விடையளிக்கும் போது சொன்னான் : நீ திரும்பி வருவதற்குள் என் கிராமத்துக்குச் சென்று என் மனிதர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டும். நானே வந்தது போல நினைத்துக்கொள்வார்கள். நான் உன்னை மறுபடியும் பார்த்த என் மனிதர்கள் பற்றித் தகவல் அறியும்போது அவர்களை நானே நேரில் பார்த்து போல இருக்கும்".

மான்சிங்குக்கு தன் ஊர் இருக்கும் இடத்தைப் பற்றி அறிய வைப்பது போல அவன் கேட்டான், "நீ அந்தப் பக்கம் போயிருக்கிறாயா ?"

"இல்லை, அமிர்தசரஸ் வழியாகச் சென்றிருக்கிறேனே தவிர, அதற்கப் பால் போனது இல்லை".

"ஓ, அங்கே நிறையக் குருத்வாராக் களாக இறைந்து கிடைக்கும் தன் தரன், காதுர் சாஹப்,வீட்டு மனிதர்களையும் பார்த்துவிட்டு வரலாம். நான் அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்..." கரம்சிங் அவன் சிந்தனையாகவே உற்சாகமாகப் பேசிக் கொண்டே போனான்.

மான்சிங் அவனுடைய விடுப்பு நாட்கள் முடியும் தருவாயில் அக்காரணத் திற்காகத்தான் கரம் சிங்கின் கிராமம் நோக்கிக் குதிரை வண்டியில் போய்க் கொண்டிருந்தான்.

கரம்சிங் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த பெரியவரைப் பார்த்து, "நான் தான் மான்சிங், ஐயா, கஹர்கானிலிருந்து வருபவன்," என்று கூறி வணங்கினான்.

''வா, இப்படி உட்கார்'', என்று அந்தப் பெரியவர் சொன்னாலும் அவர் வேறேதோ நினைவில் இருப்பது போலத் தோன்றியது.

மான்சிங் சென்று ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது உட்கார்ந்தான். அவன் வருகையால் பெரியவர் எதோ சங்கடப்படுவது போலிருந்தது. அவர் கண்கள் மான்சிங்கை நோக்காமல் எங்கெங்கோ அலைந்தன. அதன் பிறகு அவை தரையைப் பார்த்த வண்ணம் உறைந்தன.

மான்சிங் சாதாரணமாகப் பொறுமையுடையவன் தான். ஆனால் இந்த வரவேற்பு விசித்திரமாயிருந்தது. இப்பெரியவர் கரம்சிங்கின் தகப்பனார் அல்லவோ என்றும் நினைத்தான்.

பெரியவர் கவனத்தைத் தன் மீது திருப்பும் வகையில்,"தாங்கள் தானே கரம்சிங்கின் அப்பா ? நான் இங்கு வருவது பற்றி எழுதியிருந்தானா ?" என்று கேட்டான்.

''ஆமாம், நீ எங்களை வந்து பார்ப்பாய் என்று எழுதியிருந்தான்." இதைச் சொல்லிவிட்டுப் பெரியவர் எழுந்து முற்றத்துக்குச் சென்றார். அங்கிருந்த எருமைக் கன்றை ஓரிடத்திலிருந்து அவிழ்த்து இன்னோர் இடத்தில் கட்டினார். கன்றைத் தட்டிக் கொடுத்துக் கையை நக்கக் கொடுத்தார். பிறகு வீட்டினுள் சென்று மான்சிங் வந்திருப்பதை அறிவித்த அவனுக்குத் தேநீர் அனுப்பச் செய்தார். வீட்டின் முன்புறம் செல்ல அஞ்சுவது போல முற்றத்திலேயே தயங்கினார். இம்முறை குதிரைக் குட்டியிடம் சென்றார். அதன் முன் வைத்திருந்த தீவனத்தைக் கிளறிவிட்டு இன்னும் கொஞ்சம் கொள்ளு அதில் தூவினார்.

கடைசியாக விருந்தாளியிடம் வந்து சேர்ந்தார். ஆனால் எதையோ இழந்து போயிருந்தார்.

அச் சங்கடமான நிசப்தத்தை முடிவுக்குக் கொண்டு வர எண்ணி, "ஜஸ்வந்த்சிங் எங்கே ?" என்று மான்சிங் கேட்டான். கரம்சிங்குக்கு ஒரு தம்பி உண்டு என்று அவனுக்குத் தெரியும்.

"வைக்கோல் வண்டி அழைத்து வரப்போயிருக்கிறான். இதோ வந்து விடுவான்".





"சத் ஸ்ரீ அகால், பேஜி", மான்சிங் ஒரு மகனுக்குரிய அன்போடு அவளை வணங்கினான்.

ஏதோ சொல்ல விரும்பியது போல அந்த முதியவளின் உதடுகள் துடித்தன. ஆனால் அவள் பேசவில்லை. மான்சிங் தேநீர் குவளையையும் கோப்பையும் வாங்கிக் கொள்ள அவள் உள்ளே சென்றுவிட்டாள்.

இந்த மஞ்ஹாக்காரர்களே விநோதமானவர்களாக இருக்கிறார்களே என்று மான்சிங் கூறிக்கொண்டான். அவனுக்கு அவமானமாக இருந்தது. ஆனால் இப்போது வேறு வழியில்லை. இன்றிரவு இங்கே தங்கித்தான் ஆக வேண்டும். ஆனால் நாளை பொழுது விடிந்தவுடனேயே போய்விட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

ஆனால் இரவில் ஜஸ்வந்த்சிங் வந்த பிறகு பேச்சு சிறிது தளர்ந்தது.

"கரம்சிங்கின் குறி இந்த பர்மாப் போரிலேயே மிகவும் புகழ் பெற்றுவிட்டது. அவன் துப்பாக்கி விரையைத் தட்டி விட்டால் போதும், உடனே ஒரு ஜப்பானியன் கீழே விழுவான். எங்கே எப்படி என்று யாருக்கும் தெரியாது. அவனோடு தான் போவோம். ஆனால் எப்படி அவனுக்கு மட்டும் இந்த ஒளிந்திருப்பவர்களைக் கண்டு பிடிக்க முடிகிறதோ.."

மான்சிங் பேச்சை சிறிது நிறுத்தினான். கரம்சிங் பற்றியும் ஜப்பானியரைப் பற்றியும் யுத்தத்தைப் பற்றியும் நிறையக் கேள்விகள் இருக்கும். அவனுக்குச் சொல்ல நிறைய சேதிகள் இருந்தன. அப்போதுதான் அவனுடைய நெஞ்சின் பளு குறையும். ஆனால் அவன் பேசுவதை யாருமே காது கொடுத்துக் கேட்கவில்லை போலிருந்தது. யாருக்குமே விருப்பமில்லை.

நீண்ட உப்புச்சப்பற்ற மௌனம். "எப்போது பாசனத்துக்குத் தண்ணீர் விடுகிறார்களாம் ?" என்று பெரியவர் ஜஸ்வந்தைக் கேட்டார்.

"நாளை மறுநாள், காலை மூன்று மணிக்கு".

ஜஸ்வந்த் இப்படி நேரம் பற்றிச் சொன்னது மான்சிங்குக்கு அவனுடைய பேச்சைத் தொடர ஒரு வாய்ப்புக் கொடுத்தது. "பட்டாளத்தில் இருப்பதால் கரம்சிங் இப்படி அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியதில்லை. காலை நேரத்தில் தூங்குவது அவனுக்கு மிகவும் பிடிக்கும். எங்கள் கோஷ்டியில் அவன் தான் கடைசியாக எழுந்திருப்பான்".

அவனுடைய நண்பன் பற்றி மான்சிங்கான் களைப்பேயில்லாமல் பேசிக் கொண்டேயிருக்க முடியும். ஆனால் அவன் இப்போது பேசியது கூட இவர்கள் யாரிடமிருந்து எவ்வித ஆர்வமும் எழுப்பவில்லை.

சாப்பாட்டு நேரம் வந்தது. விருந்தாளிக்காக விசேஷச் சமையல். மான்சிங் உணவருந்துகையில் ஜஸ்வந்த் அவனுக்கு விசிறிக்கொண்டிருந்தான். ஆனால் ஏனோ கவனிப்பு போதாது என்று மான்சிங்குக்குத் தோன்றியது.

சாப்பிட்டு முடிக்கும் நேரத்தில் கரம்சிங்கின் குழந்தை தவழ்ந்து கொண்டுவந்தான். வேறு யாரிடம் பேச முடியாது போனாலும் குழந்தையிடமாவது பேசலாமல்லவா ? குழந்தையை மடி மீது வைத்துக் கொண்டு மான்சிங் அவனோடு கொஞ்சினான். "அப்பாகிட்டே போகலாமா ? அப்போ என்னோடு வா. அங்கே ஒரே மழையாயிருக்கிறது. நீ தண்ணீரில் தொப்பலடித்து விளையாடலாம்".

மான்சிங் கூறியது பெரியவரைத் துன்புறுத்தியது போலிருந்தது. "குழந்தையைத் தூக்கிக் கொண்டு போ! அமைதியாகச் சாப்பிடவிட மாட்டான்!" பெரியவர் கத்தினார். அவர் மனைவி உடனே வந்து குழந்தையை தூக்கிப் போனாள்.

மான்சிங் வாயில் இட்ட உணவு அப்படியே தொண்டையில் அடைத்துக் கொண்டது. அந்த வீட்டில் நிலவிய இறுக்கத்தை அவனால் இனியும் தாங்க முடியாது. காலைப் பயணம் பற்றி விசாரித்தான்.

"இங்கிருந்து தரன்தரன் எவ்வளவு தூரம் ?"

"நான்கு மைல்"

"காலையில் டாங்கா கிடைக்குமா ?"

"கவலைப்பட வேண்டாம். ஜஸ்வந்த் கூட வருவான். நீங்கள் இருவரும் எல்லா இடங்களையும் பார்க்கலாம்".

மான்சிங்குக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. ஜஸ்வந்த் ஓர் உம்மணாமூஞ்சி அல்ல.

ஆனால் மான்சிங்கோடு வெளியே செல்லும்போது அவன் வாயும் ஏனோ மூடிக் கிடந்தது. வழியில் யாராவது தெரிந்தவரையோ நண்பரையோ பார்த்தால் கூடத் தூரத்திலிருந்து கையசைத்துவிட்டு நகர்ந்து விட்டான். மான்சிங்குக்கு நின்று அவர்களோடு எல்லாம் பேச வேண்டும் போலிருந்து. அவன் இடங்களுக்கு அடிக்கடி வந்து போகிறவன் அல்ல.

"கரம்சிங்குக்கு ராணுவத்தில் ரொம்ப நல்ல பெயர். நீயும் ஏன் பட்டாளத்தில் சேரக்கூடாது ?" மான்சிங் பேச்சைத் துவக்கினான்.

ஜஸ்வந்த்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. "பட்டாளத்தில் ஒருவன் போதாதா ?" என்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு பதில் சொன்னான். பேச்சை மாற்றி, "உங்கள் ஊரில் கரும்பு எவ்வளவு பெரியதாக வளரும் ?" என்று

கேட்டான். அவர்கள் அப்போது ஒரு பண்ணையைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தார்கள்.

"ஆளுயரத்திற்கு மேலாகவே வளரும்".

பதில் சொன்னாலும் மான்சிங்கின் மனது எங்கோ இருந்தது. அவனுக்கு அவனுடைய நண்பன் பற்றித்தான் பேச வேண்டும். வேறு எதைப் பற்றியும் அல்ல.

மறுபடி வீடு வந்தவுடன் மான்சிங் தன் கிராமத்துக்குத் திரும்பிச் செல்வது பற்றி எண்ணத் தொடங்கினான். அமிர்தசரஸிலிருந்து இரவு ரயிலைப் பிடிக்கவேண்டும். அவர்கள் அவனை நன்கு கவனித்துக் கொண்டாலும் அவன் விஜயம் அவன் எதிர்பார்த்திருந்த அளவு மகிழ்ச்சி அளிக்கவில்லை. இப்போது கூட அவனுக்காகத்தான் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவனைத் தன்னந்தனியாக விட்டிருந்தார்கள். அவன் தெருவில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது தோளில் பையோடு தபால்காரன் வருவதைப் பார்த்தான். தபால்காரன் அந்த வீட்டைத் தாண்டிப்போவது போலத்தான் இருந்தது. ஆனால் திரும்ப வந்து மான்சிங் அருகில் அவனும் கட்டிலில் உட்கார்ந்தான்.



''என்ன கொண்டு வந்திருக் கிறீர்கள் ?'' என்று மான்சிங் கேட்டான்.

"எப்படிச் சொல்வது ? பாவம், அந்தக் கரம்சிங்கின் பென்ஷன் காகிதங்கள் தான்".

"கரம்சிங்கின் பென்ஷனா ? என்ன சொல்கிறாய் ?"

உங்களுக்குத் தெரியாதா ? இங்கிருக்கும் காக்கை குருவிகூட கரம்சிங்குக்காகத் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனவே ? அந்தக் கடிதம் வந்து பதினைந்து நாளாகிறது"

மான்சிங்குக்கு மூச்சடைத்தது. அவனுடைய உடல்துவண்டது. அவன் தன்னிலை அடைந்தவுடன் கண்ணீர் அருவியாகப் பெருகியது. அது கரம்சிங்கின் வீடாக இருந்து கரம்சிங்குடைய தகப்பனாரும் குழந்தையும் வீட்டினுள் இருந்ததும் நல்லதாகப் போய்விட்டது.

கரம்சிங்குடைய தகப்பனார் தபால்காரனைப் பார்த்துவிட்டார். கரம்சிங்குடைய நண்பனிடம் இனியும் தகவலை மறைத்து வைக்க இயலாது எனத் தெரிந்து கொண்டார். ஒரு முழு நாளாக அடைத்துக் கிடந்த இறுக்கம் கட்டவிழ்த்துக் கொண்டு வெடித்தது. அவர்களிருவரும் நெடு நேரம் பொங்கி எழுந்த கண்ணீரோடு உட்கார்ந்திருந்தார்கள்.

"என்னிடம் ஏன் சொல்லவில்லை ?" என்று மான்சிங் துக்கத்துடன் கேட்டான்.

"சிறு வயதுக்காரன் விடுப்பில் வந்திருக்கிறான், அதை ஏன் பாழ்படுத்த வேண்டும் ? அவன் திரும்ப அவனுடைய அணிக்குச் செல்லும்போது எப்படியும் தெரியப்போகிறது. வகுப்பில் வருவது கரம்சிங்குக் எவ்வளவு மகிழ்ச்சியோ அவ்வளவு உனக்கும் இருக்கும். ஏன், அதிகமாகக் கூட இருக்கும் உங்களூர்க்காரர்கள் வசதியாகவே இருந்து பழகி விட்டார்கள். இச்செய்தி உனக்குத் தெரிய வேண்டாமே என்று தான் பார்த்தோம். மிகவும் வருத்தமா யிருக்கிறது".

"அங்கிருந்து திரும்புகையில் கரம்சிங்கின் தகப்பனார் வளர்த்த அந்தச் சுற்றுவட்டாரத்தை மான் சிங்கின் கண்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டன. நாட்டின் மீது படையெடுத்து வந்தவர்களோடு வீர யுத்தம் புரிந்து இறவாப் புகழ் பெற்றவர்களின் சமாதிகளும் நினைவுச் சின்னங்களுமாக இருந்தன. பெரும் அதிர்ச்சிகளைத் தாங்கும் பண்பும் வன்மையும் அப்பெரியவர் கொண்டிருப்பதன் ரகசியம் இதுதான் போலும். இன்னொருவரை வருந்தவிடக் கூடாது எனத் தானாகவே மேலும் பளுவைத் தாங்கிக் கொள்ளக்கூடியவர் பூமியின் அனைத்துப் பளுவையும் ஒரு காளை தன் கொம்புகளில் சுமந்து கொண்டிருப்பதாக மான்சிங் கேள்விப் பட்டிருக்கிறான். அதேகுணம் தான் கரம்சிங்கின் தகப்பனாரிடம் இருந்தது. ஏற்கெனவே பெரும் சுமையிருப்பினும் இனனொருவனின் சுமையும் தாங்க முன்வரும் ஆத்மா அவர்.

*– 'தற்கால இந்தியச் சிறுகதைகள்' நூலிலிருந்து*

*வெளியீடு : சாகித்திய அகாதமி*



மக்களின்
விருதைப் பெறும்

# நிலாப்பள்ளி

கே. கோபால், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்

அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதே அடிப்படை நோக்கம். குறிப்பாகப் படிக்கின்ற வயதில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டுமே தவிர பணிக்குச் செல்லக்கூடாது என்பதே அடிப்படைத் தத்துவம். இதை மையமாக வைத்துத்தான் நிலவொளி எப்படி குளிர்ச்சியைத் தருகிறதோ அது போல குழந்தைகள் கல்வியின் வாயிலாகப் பெற்றோருக்கும், சமுதாயத்திற்கும் குளிர்ச்சியைத் தரவேண்டும் என்பதை மையமாகக் வைத்துத்தான் ''நிலாப் பள்ளி'' எனும் பெயரை என் மனம் தேர்ந்தெடுத்தது.

விருதுநகர் மாவட்டத்தில் அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும். குழந்தைகளைப் படிக்கின்ற வயதில் வேலைக்கு அனுப்பக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்தில் செயல்படும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஐ.எல்.ஒ. பள்ளிகள் சிறப்பாகச் செயல் பட்டு வருகின்றன.

## நிலாப் பள்ளி

அந்தக் குழந்தைகளின் திறமைகளை பெற்றோர்கள் நேரடியாகக் காண்பதற்கும், பொது மக்கள் பார்வை யிடுவதற்கும், அவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள் அக்கறை காட்டவும் இதனைப் பார்த்து தொழிற்சாலை உரிமையாளர்கள் எந்தக் காலத்திலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தாமல் இருக்கின்ற மனநிலையை வளர்ப்பதற்கும், குழந்தைகள் கற்றலின் இனிமையோடு பாடங்களைக் கற்பதற்கும், கனிவான நிலவொளி போன்று அறிவொளி பெறுவதற்கும் ஆக்கப்பூர்வமாக உருவாக்கப்பட்டதுதான் ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி நன்நாளில் கூடும் சிறப்பான இந்த ''நிலாப் பள்ளி'', விருதுநகர் மாவட்டத்தில் 150 நிலாப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

வழக்கமாக குழந்தைகள் காலையில் பள்ளிக்குச் செல்வார்கள்; பெற்றோர்கள் வேலைக்குச் செல்வார்கள். சாதாரணமாக வாழ்க்கை நடத்தும் தொழிலாளர்கள் பகலில் ஆற்றிய கடும் பணியால் இல்லம் வந்து களைப்பால் தூங்கி விடுவார்கள். இதனால் குழந்தையின் கல்வியில்



அவர்களால் அக்கறை காட்ட முடியாமலும், குழந்தைகள் கல்வி பெறுவதை உணர்ச்சிபூர்வமாக நேரடியாக அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலையிலும் சிக்கிக் கொள்கிறார்கள்.

இந்த அவல நிலை மாற மாதத்தில் முழு நிலாவாம் பௌர்ணமி நன்நாளில் திருவிழா போன்று கிராமமே கூடி நிலவொளியில் இயல்பான சூழ்நிலையில், பொதுவான ஒரு இடத்தில் குழந்தைத் தொழிலாளர் திட்ட மாணவர்கள், பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், வளர்கல்விப்பணியாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள் ஒன்று திரண்டு கூடியிருப்பார்கள். நிலவொளியில் பள்ளிக் குழந்தைகளின் திறமைகளை ஆசிரியர்கள் வினா எழுப்பி விடை கேட்பார்கள்; தடையேதுமின்றி குழந்தைகள் அருவியென விடைகளை அள்ளித் தருவார்கள். பார்க்கும் பெற்றோருக்கு பரவசம்; ஊர்மக்களுக்கு உற்சாகம்; குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

மாசற்ற அந்தப் பிஞ்சு உள்ளங்களில் மறைந்து கிடக்கும் திறமைகளை எழுத்து, பேச்சு, கலையார்வம், இசை, நாடகம் இன்னும் எத்தனையோ திறமைகளை பெற்றோர்கள் முன்னிலையில் வெளிப்படுத்துகின்ற திறமை. இவையெல்லாம் நிலாப் பள்ளியின் பணிகளில் ஒரு சில. இந்த நிலாப் பள்ளியில் பெற்றோர்களும் பேச வைக்கப்படுகிறார்கள். பெற்றோர்களையும் ஈடுபடச் செய்து கல்லாதவர்களும் கற்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு ஈடுபாடு ஏற்படுத்துகின்ற இணையில்லா நிலவொளிப் பள்ளி. கல்வி மேம்பாடடைய நீந்தி வருவதில் நீச்சல் வீரராகத் தென்படுகிறது. இதன் மூலம் அவர்களின் குழந்தைகளை வீடுகளில் குழந்தைகளுக்கு கல்வி தருவதில் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற உணர்வையும் நிலாப் பள்ளி ஏற்படுத்துகின்றது.

இந்த நிலாப் பள்ளியில் குழந்தைகளின் கல்வித் திறனை வளர்க்க வினாடிவினா நடத்துதல், கற்றலின் இனிமையோடு பாடங்களை நடத்துதல், ஆடல், பாடல், விளையாட்டு ஆகியவற்றை கற்றுத் தருதல், பெற்றோருக்கு முன்பு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துதல், பெற்றோருக்கு கல்வியில் ஈடுபாட்டை வளர்த்தல், குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் கண்டிப்பாகப் பெற்றோர்களை ஈடுபடச்செய்தல், தொழிற்சாலை உரிமையாளர்களைப் பேச வைத்து தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தாமல் இருக்கச் செய்கின்ற வகையில் அவர்களது மனநிலையில் மாற்றம் ஏற்படுத்துதல், நிலவொளியில் அமர்ந்து ஒவ்வொரு குழந்தைகளிடத்தும் இருக்கின்ற திறமைகளை வெளிப்படுத்தி அனைவரையும் காணச்செய்தல், பெற்றோர்களின் திறமைகளையும் வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை. மேலும் நிலாப் பள்ளி மாதம் ஒரு முறை பௌர்ணமி முழுமதி நன்நாளில் மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும். நடைபெறுவதற்கு முன்னரே கிராம மக்களிடையே நிலாப் பள்ளியில் பொதுமக்கள் உட்பட அனைத்து பெற்றோர்களையும் பங்கேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பேரணியும் நடத்தப்படும். இதில் குழந்தைகள், ஆசிரியர்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பலர் பேரணியில் பங்கேற்பர்.

## பள்ளியின் மூலம் புகுத்த விரும்பும் கருத்துக்கள்

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வரும் கல்வி பற்றி சிந்திக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில் நிலாப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. மேலும் பள்ளி மாணவர்களின் பொது அறிவுத் திறனை அதிகரித்தல், கல்வி ஆர்வத்தைத் தூண்டுதல், பெற்றோர்கள் எதிரே குழந்தைகள் பாராட்டப்பட்டால் பெற்றோரின் ஆர்வம் அதிகரிக்கும். எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோர்கள் கல்வி கற்க அரிய வாயப்பளித்தல், பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் இடையே நல்ல இணக்கத்தை வளர்த்திட ஒரு சந்தர்ப்பம். குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்களுக்கு அரசு நலத் திட்டங்களைக் கூறி அவர்களுக்கு தெரிய வைத்தல். இதன் மூலம் அவர்களின் அறிவுத்திறனை அதிகரிக்கின்ற உலக நடப்பைப் புரிந்து கொள்கின்ற, எதிர் காலத்தை நிர்ணயம் செய்து கொள்கின்ற தன்னம்பிக்கை பெற்றவர்களாக உருவாக்குவதற்கு இது பெரிதும் உதவும்.

## பொருளாதார அடிப்படையிலான கருத்துக்கள் :

சிறப்புப் பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்பாடு அடையச் செய்ய சிறப்பு





குழந்தைகளின் அதிக ஆர்வத்தாலும் நிச்சயம் நிலாப் பள்ளி தொய்வின்றி நடக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் நடைபெறும்போது உரிய கண்காணிப்பும் இருக்கும்.

## கண்காணிப்பு

நிலாப் பள்ளிகள் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள களப்பணியாளர்கள், ஊக்குனர்கள், தொண்டு நிறுவனங்கள், கல்வித்துறை அலுவலர்கள், வளர்கல்வி மையப்பொறுப்பாளர்கள், சமுதாயக்குழு உறுப்பினர்கள், இவர்களின் முழு ஈடுபாட்டோடு உரிய கண்காணிப்போடு நிலாப் பள்ளி

சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசுத்துறைகளில் இவர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.



## நிலாப் பள்ளியை தொய்வு இல்லாமல் நடத்துதல்

நிலாப் பள்ளியைத் தொய் வில்லாமல் நடத்த முடியும். நிலாப் பள்ளி ஆசிரியர்களுக்கு கற்றலின் இனிமை குறித்து மாநில கருத்தாளர்களைக் கொண்டு மூன்று நாள் கற்றலின் இனிமை உறைவிடப்பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது. இவர்களை மேலும் உற்சாகப்படுத்தும் முகமாக 250 ஆசிரியர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கிராமங்களுக்கு நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு கற்றலின் இனிமையோடு நிலாப் பள்ளி நடத்துவதற்கு நேரடியாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. மக்களின் ஈடுபாட்டோடும், மாவட்ட நிர்வாகத்தின் முழு ஈடுபாட்டுடனும், ஆசிரியர்களின் தன்னார்வ மிக்க சேவையாலும், பொதுமக்களின் பேராதரவோடும் இயங்கி வருகிறது. இதில் முறையாக நிலாப் பள்ளியில் பங்கேற்கும் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இவை பற்றிய முழு விபரங்களும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நிலவொளியில் நடைபெறும் நிலாப்பள்ளி குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் ஒரு பெரிய பரிணாமத்தைப் படைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

• • •

# இந்த ஆண்டு தமிழ்நாடு காவல்துறைக்கு சாதனைகள் மிகுந்ததோர் ஆண்டாகும்

**காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்!**



காவல்துறை நிருவாகம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக காவல் துறை அதிகாரிகளுக்கான தனிக் கூட்டத்தில் இன்று நாம் சந்திக்கின்றோம்.

இந்த ஆண்டு தமிழ்நாடு காவல் துறைக்கு சாதனைகள் மிகுந்ததோர் ஆண்டாகும். பயங்கர தீவிரவாதியான இமாம் அலியைப் பிடிப்பதில் தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், ஆண், பெண் காவலர்களும் கடமையுணர்வுடனும் பாராட்டத்தக்கத் துணிச்சலுடனும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, திடீர்த் தாக்குதல் நடத்தி அவனை ஒழித்தும் கட்டியுள்ளனர். சமுதாயத்தில் காவல் துறை பணியில் புதுமைகள் புகுத்தியமைக்காக நமது காவல் துறையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் பன்னாட்டு விருதுகளைப் பெற்றுள்ளனர். அனைத்திந்திய காவலர் அணி வகுப்பில் நமது காவல்துறைப் பணியாளர்களும், அதிகாரிகளும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி யுள்ளனர்.

காவல் துறைப் பணி பற்றிய கோட்பாடு, அதனுடைய பொருள் விளக்கம், பயன்பாடு, செயல் நோக்கம் ஆகியவகையில் கணிசமான அளவுக்கு மாறுதல் அடைந்துள்ளது. பாதுகாப்பான சமுதாயத்தை உருவாக்குவதற்கு சுயஉதவி, ஒரு மைல் கல்லாகும் என்று வளர்ந்துவரும் சமுதாயம் எடுத்துக் காட்டியுள்ளது.

**பன்னாட்டு அங்கீகாரம்**

சமுதாயக் காவல் படை பணி உலகெங்கிலும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. நான் முதலமைச்சராக முதல்முறையாக பதவியில் இருந்த 1994 ஆம் ஆண்டு காவலர்கள் உங்கள் நண்பர்கள் என்று கூறி தொடங்கிவைத்த திட்டம் இன்று பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்று நமது காவல்துறை





அதிகாரிகளுக்கு விருதுகளைப் பெற்றுத் தந்துள்ளது என்பதை இங்கு நினைவு கூறுவதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன். இந்தக் கோட்பாடு பரிட்சார்த்த நிலையைத் தாண்டி கொண்டு செல்லவேண்டும். நமது மாநிலத்தின் பாதுகாப்பு சூழலை பேணுவதற்கான ஒரு முக்கிய அம்சமாக மாநிலம் முழுவதும் இதனை செயற்படுத்த வேண்டும்.

கடந்த காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில், அச்சமில்லாமலும், பாரபட்சமில்லாமலும் காவல்துறை தனது கடமைகளை ஆற்ற இயலும் வகையில், காவல்படையில் கொண்டுவரப்பட வேண்டிய பல்வேறு சீர்திருத்தங்களை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். காவல்துறையைப் பற்றி பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிகையைச் சீர்குலைக்கும் வகையில், காவல்துறை பாதுகாப்பில் இருக்கும்போது ஏற்படக்கூடிய வன்முறை, சித்திரவதை, லாக்கப்பில் இருக்கும்போது ஏற்படக்கூடிய மரணங்கள் குறித்த தொடர் நிகழ்வுகள் நடந்திருப்பது குறித்து நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக நடைபெற்ற மாநாட்டிற்குப் பின்னர் கடந்த ஒரு வருடம் மூன்று மாதங்களில் தங்களுடைய மாவட்டங்களில் காவல்துறை பாதுகாப்பில் எவரும் இறக்கவோ அல்லது லாக்கப் மரணங்களோ ஏற்படவில்லை என்று காவல்துறை கண்காணிப்பாளர்கள் பலரிடமிருந்து தெரியவந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**பொதுமக்களின் நண்பன்**

கடந்த மாநாட்டின்போது நான் அறிவித்த பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலம், சில முக்கியமான காவல்துறை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், மாநிலத்தில் ஒரு கடுமையான எதிர்க்கும் சக்தி என்று காவல்துறையைப் பற்றி இன்னும் நிலவி வருகின்ற ஒரு எண்ணத்தை பொதுமக்களின் மனதிலிருந்து நாம் அகற்ற வேண்டும். சமுதாயக் காவல்படை என்பது தமிழ்நாட்டில் 1994ஆம் ஆண்டில் காவல்துறை "பொதுமக்களின் நண்பன்" என்ற திட்டமாக தொடங்கப்பட்டது. காவல்துறை பொதுமக்களின் நண்பனாகச் செயல்படும்

வகையில், திறன் நுட்பமான எண்ணிப் பார்க்கக்கூடிய வகையிலான காவல்துறையை அமைக்க வேண்டும்.

பாலின நிகர்நிலைப் பயிலரங்கம், மனிதாபிமான அடிப்படையில் செயல்படுதல், போன்ற சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் மூலம் காவல்துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க பல பயிற்சி முறைகள் செயலிலிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். இந்நடவடிக்கைகள் சிறந்த பயனை அளிக்கும் என்றும், காவல்துறைக்கும் மக்களுக்கு மிடையே உள்ள உறவு சுமூகமாகவும், இணக்கமாகவும் இருக்கும் என்றும் நான் நம்புகிறேன். மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நிவாரணம் காணுவதற்காக காவல் துறையினை எளிதில் அணுகும் வகையாக இருக்க வேண்டும். இவ்வகையில் நாம் எடுத்த நடவடிக்கைகளுக்குப் பலன் கிட்ட வேண்டுமாயின், திட்டத்தைச் செயல்படுத்தும் காவலர்களை அணுகுவதில் உள்ள தடைகளை நீக்குவதே முதன்மையான முக்கியமான பணியாகும் என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்.

காவல் நிலைய அளவில் உள்ள காவல் துறையினரின் போக்கு மாற்றப்பட வேண்டும். புகார்கள் மற்றும் புகார் கொடுப்பவர்களிடம் மனிதாபிமானத் துடனும், மரியாதையுடனும் நடந்துகொள்ளுமளவுக்கு அவர்கள் பக்குவப்படுத்தப்பட வேண்டும். காவல் நிலைய அளவில் வழக்குகளைப் பதிவு செய்ய மறுக்கும் போக்கு மாறவேண்டும். மேற்பார்வை அதிகாரிகள் என்ற வகையில், இதில் உங்களுடைய பணி மிகவும் முக்கியமானதாகும்.

ஒரு அவசர நேர்வில் காவல் நிலையத்திற்குப் போகவேண்டும் என்ற எண்ணமே, பெரும் பான்மையான மக்களுக்கு வெறுப்பாக உள்ளது. இப்போக்கு மாறவேண்டும். அனைத்து புகார்தாரர்களும் குறிப்பாக பொருளாதார வகையில் நலிவுற்றப் பிரிவினர், சாதிக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், மகளிர் போன்றோர் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண காவல்நிலையத்தை நம்பிக்கையுடன் அணுகுமாறு செய்வதே உங்களுடைய பணியாக இருக்கவேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை உருவாக்குவதால் மட்டுமே கூட்டுச் சதி, தன்னிச்சையாக முடிவு செய்யும் முறைகள் சட்டச் செயலாக்கத்தில் குற்றவாளிகளின் தலையீடு, போன்றவற்றை தடுக்க இயலும். திட்டமிட்ட குற்றம், தலைமறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு இவை ஊக்கமளிக்கின்றன.

### காவல் பணி கோட்பாடு

நம் மாநிலத்திற்கு விரிவான காவல் பணி கோட்பாடு வகுக்கவேண்டிய நேரம் வந்துள்ளது. சமூக விரோத சக்திகளை உறுதியாக அடக்குவதன் மூலம் பொது அமைதியைப் பேணுதல், திட்டமிட்டு செய்யப்படும் குற்றங்கள், வாலாயமான குற்றவாளிகள் ஆகியோர் மீது தனிக் கவனம் செலுத்தி குற்றங்களைக் குறைப்பதை உறுதி செய்தல், குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கும் பணிகளை மேம்படுத்தல் ஆகியவை குறித்து கவனம் செலுத்துவதே இக்கோட்பாட்டின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். பொதுமக்களின் மனதில் குற்றங்கள் பற்றிய அச்சத்தைப் போக்குவதற்கும் சட்டத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைக்கவும் இந்நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகும்.

குற்றத்தைக் குறைக்கவும் கட்டுப்படுத்தவும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். செம்மையான குற்றத் தடுப்பு கோட்பாடுகளை வகுத்து, உண்மையுடன் இவற்றை காவல்துறை மேற்பார்வை அதிகாரிகள் செயற்படுத்த வேண்டும். குற்றங்களைக் கண்டு பிடிப்பதை, தொழில்முறையிலும், அறிவார்ந்த முறை யிலும் செய்ய வேண்டும். இதில் மனித உரிமைகளைப் பாதிக்கும் சட்டமீறல் முறைகளைப் பயன்படுத்தக் கூடாது. குற்றங்களைக் கண்காணித்து வருவது தொடர் பணியாகும்.

காவல் மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டவுடன் மண்டலக் காவல் துறைத் தலைவர் இம்முக்கிய காவல் பணியை நுணுக்கமாகவும் முறையாகவும் கண்காணிப்பார் என்று நான் நம்புகிறேன்.

அனைத்து துறைப் பணிகளிலும் ஊடுருவி மக்கள் மனதில் பீதியை ஏற்படுத்தும் திட்டமிட்ட குற்றங்கள் குறித்து கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். கள்ளச்சாராயம், மகளிர் மற்றும் குழந்தைகளை அச்சுறுத்தி பணம் பறித்தல் இழி தொடர்பு போன்றவற்றில் ஈடுபட்டுள்ள குற்றக் கும்பலையும், பயமுறுத்தி பணம் பறிப்பவர்களையும் கண்டுபிடிப்பதில் காவலர் கவனம் செலுத்த வேண்டும். பன் மாநிலத் தொடர்பு உள்ள திட்டமிட்ட கடுமையான குற்றங்களைக் கண்டுபிடித்து குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் மாநிலத்தில் ஏற்கெனவே திட்டமிட்ட குற்றத் தடுப்பு பிரிவுகள் அமைக்கப் பட்டுள்ளன.

### கள அதிகாரிகளின் முதன்மைப் பணி

இருப்பினும் தங்கள் அதிகார வரம்பின் கீழுள்ள குண்டர்களையும், கொள்ளையர்களையும் திறம்பட



கண்டுபிடிப்பதே கள அதிகாரிகளின் முதன்மைப் பணியாகும். குற்றக் கட்டுப்பாடுப் பணியின் அளவைப் பார்க்காமல், தரத்தைப் பார்க்க வேண்டும். குற்றங்களைக் கண்டுபிடித்தது மற்றும் தீர்த்து வைத்தது தொடர்பாக என்னிடம் அளிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மலைப்பூட்டுவனவாக உள்ளன.

ஆனால், உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் இத்தகைய பெருவாரியான எண்ணிக்கை மற்றும் அவற்றின் விவரப் படங்களை எல்லாம் கடந்து செல்லவேண்டும். புலன் விசாரணை, குற்ற நிகழ்வுகளைக் கண்டறிதல், இறுதியாக தண்டனை பெற்றுத் தருதல் ஆகியவற்றின் எண்ணிக்கையை வைத்து குற்ற நிகழ்வுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனவா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இந்த விவரங்களைக் கணினிமயமாக்குவதன் மூலமாகவே, காவல் வாரியான ஆய்வினை நாம் மேற்கொள்ள முடியும் என்று ஆய்வுத் தகவல் தொகுப்பு விரிவான முறையில் கொண்டு வரமுடியும் என்று நான் கருதுகிறேன். இத்தகைய ஓர் ஆய்வுத் தகவல் தொகுப்பு வாயிலாகவே, குறிப்பாக கடுமையான குற்றங்கள் குறித்த ஆய்வுத் தொகுப்பின் மூலமாகவே, சாதாரண குற்றங்களைப் புரிகின்ற சிறு குற்றவாளிகளைக் கைது செய்து அவர்களை நீண்டகாலம் சிறையில் அடைத்து வைக்க அனுமதிக்கின்ற போக்கு தடுத்து நிறுத்தப் படும். இது, கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் புள்ளி விவரங்களை பெருக்கிக் காட்டலாம்.

### உறுதியான நடவடிக்கையில் கவனம்

ஆனால், காவல் துறையின் மீதான தவிர்க்கக் கூடிய விமர்சனத்தை தவிர்க்க முடியாமல் போய் விடும். எனவே, குற்றங்களில் ஈடுபடுவோரை பிடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தொடர்ந்து குற்றங்களில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளையும் கூட்டாகச் சேர்ந்து குற்றங்களில் ஈடுபடுகின்ற கும்பல்களையும் பிடித்து மிக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

சமுதாயத்தில் மகளிருக்குரிய உண்மையான மதிப்பையும் சிறப்பையும் பாதுகாக்க இயலாத ஓர் சமுதாயம், சமுதாயமாகக் கொள்ளப்படமாட்டாது; காவல்துறையை நம்பிக்கையுடனும் நெறியுடனும் மகளிர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, காவல் துறையில் பாலினப் பாகுபாடு இல்லை என நாம் கருதலாம்.

மகளிர் நியாயமாக நடத்தப்பட வேண்டுமென்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். தீங்கிழைக்கும் குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனை அளிப்பதற்கு வகை செய்து, தற்போதுள்ள சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு வந்தது உட்பட பல்வேறு நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன். ஏற்கெனவே 109 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. முறையான காவல் நிலையங்கள் 287லும் கூடுதலாக ஒரு பெண் உதவி ஆய்வாளர், 2 பெண் காவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

ஆயினும், வரதட்சணைச் சாவுகள், கற்பழிப்பு, கணவன் மற்றும் உறவினர்களால் கொடுமைப் படுத்தப்படுதல் போன்ற மகளிருக்கெதிரான குற்ற நிகழ்வுகள் குறித்த வழக்குகளில் கடினமான பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். மகளிருக்கெதிரான குற்ற நிகழ்வுகள் அதிகரித்துள்ளதை அறிந்து நான் வேதனையடைகிறேன்.

கூட்டுறவுத் துறையில் காவல்துறையின் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலம் புலன் விசாரணை செய்யப்பட்டு பல நிதி முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் கூட்டுறவு நிறுவனங்களின் நிதி முறைகேடுகள் குறித்த வழக்குகளை முடிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் வேதனையளிக்கக்கூடிய மற்றொன்றாகும். குற்றப் புலன் விசாரணைப் பிரிவிற்கு அனுப்புவதிலும் அவர்களின் மீது வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்வதிலும் அசாதாரண காலதாமதம் காணப்படுகிறது.

இதன் விளைவாக, கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்த நலனையும் பாதிக்கும் வகையில், விரும்பத்தகாதவர்கள் தொடர்ந்து சங்கங்களைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்து வருகின்றனர். இத்தகைய காலதாமதங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து விரிவாக விவாதித்து இதனை ஒழுங்குப்படுத்த நல்லதீர்வு ஒன்றைக் காண்பது அவசியத் தேவையாகும்.

### நவீன மயமாக்க ரூ.722 கோடி

நான் 2001இல் பதவியேற்ற பின்னர், காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவது முடுக்கி விடப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ. 136.20 கோடியும் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து நான் மன நிறைவு கொள்கிறேன். மத்திய அரசின்

செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 833 கி.மீ. சாலைகளைப் புதிதாக அமைப்பதற்கு மொத்தம் ரூ.104 கோடி ஒதுக்கீடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார். பணிகள் வருகிற ஜனவரி மாதத்தில் தொடங்கி மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மழையின் போதே சாலைகளைச் சீரமைக்கத் தற்காலிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மழை பெய்து கொண்டிருக்கும்போது சாலைகளில் ஏற்பட்டிருந்த பள்ளங்கள், செங்கல் மற்றும் சிறு கற்களால் நிரப்பி மூடப்பட்டன. இவ்வாறு உடனடியாக 1.34 இலட்சம் சதுர மீட்டர் பரப்புள்ள பேருந்துச் சாலைகள் பழுதுபார்க்கப்பட்டன. உட்புறச் சாலைகளைப் பொறுத்தவரை உடனடியாக 3.28 இலட்சம் ச.கி.மீட்டர் பரப்பளவில் செங்கல் மற்றும் சிறு கற்களை நிரப்பி பழுதுபார்க்கப்பட்டன.

அடுத்தகட்டமாக தற்போது பேவர் இயந்திரங்களைக் கொண்டு பேருந்து சாலைகள் பழுதுபார்க்கப்படுகின்றன. இதில் சாலை சந்திப்புகளில் உள்ள பள்ளங்களைப் பழுதுபார்க்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் அனைத்து சாலைகளிலும் மழையினால் ஏற்பட்ட பள்ளங்களைத் தார்க் கலவை மூலம் பழுதுபார்க்கும் பணி மிக விரைவாக நடைபெற்று வருகிறது. மழையால் சேதமடைந்த 230 பேருந்துச் சாலைகளில் இதுவரை 1.54 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் தார்க்கலவைப் பயன்படுத்தி பழுதுபார்க்கும் பணி போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றப் பட்டுள்ளது. மேலும் 190 பேருந்துச் சாலைகள் முழுவதுமாக தார்க் கலவைப் பயன்படுத்தி மறுபடியும் போடப்பட்டுள்ளது. பேருந்துச் சாலைகளைப் பொறுத்தவரை மழையால் சேதமடைந்த சாலைகளில் 90 சதவிகித சாலைகள் பழுது பார்க்கப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். உட்புறச் சாலைகளைப் பொறுத்தவரை சேதமடைந்த 1,880 சாலைகளில், 1.29 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் தார்க்கலவையைப் பயன்படுத்தி பழுதுபார்க்கப் பட்டுள்ளன. மேலும் 1,071 உட்புறச் சாலைகள் முழுவதுமாக தார்க்கலவைப் பயன்படுத்தி மறுபடியும் போடப்பட்டுள்ளன. மீதியுள்ள சாலைகளில் விரைவான முறையில் பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த காலத்தில் தரமான முறையில் சாலைகள் போடாததன் காரணமாகத்தான் மழையினால் அவைகள் சேதமடைந்தன. எனவே எதிர்காலத்தில் சாலைகள் போடும்போது அவற்றின் தரத்தை உறுதிபடுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் எதிர்காலத்தில் சாலைகள் அமைக்கப்படும் போது பின்வரும் நடவடிக்கைகளைச் சென்னை மாநகராட்சி மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

1. சாலை அமைத்த ஒப்பந்ததாரரே அச்சாலையை ஐந்து ஆண்டுகள் அவர்களது செலவிலேயே பராமரிக்க வேண்டும்.

2. அமைக்கப்படவிருக்கும் சாலைகள் தரமுள்ளதாக அமைக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக பொறியாளர்களைக் கொண்ட தனியார் ஆலோசனைத் தரநிர்ணய நிறுவனங்களை கொண்டு ஆய்வு செய்யப்படும்.(Quality Control Consultancy).

3. சென்னை நகரில் அடிக்கடி சாலைகள் பழுது ஆகாமல் தடுக்க நீண்டகால நிரந்தரத் தீர்வாக தார்ச் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் அடிப்படையில், தண்டையார்பேட்டை, மணலி சாலை, சத்தியமூர்த்தி நகர் சாலை, கணேசபுரம் சாலை ஆகிய இடங்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று நகரில் மிக கனரக வாகனங்கள் மற்றும் குடிநீர் வாகனங்கள் செல்லுகின்ற 13 சாலைகளில் ரூ.26 கோடியில் கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25384906 தொலையச்சு : 25368926




| வ.எண் | மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (3+4) ரூ. | அரசு தள்ளுபடி * ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள், காவல் துறையினருக்கான வீட்டுவசதிகள், புதிய வண்டிகள் வாங்குதல், நவீன வகையிலான தரம் வாய்ந்த ஆயுதங்களை வாங்குதல், தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்குதல், கணினி மயமாக்கும் பணிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டில், சுமார் ரூ.136.20 கோடி செலவில் மற்றொரு தொகுதி திட்டப் பணிகளை மேற்கொள்ளக் கருதியுள்ளோம். நமது காவல்துறையை நவீனமயமாக்கவும் மிகவும் பயனுள்ள வகையில் உருவாக்கவும் இவ்விரண்டு ஆண்டுகளில் நாம் ரூ. 272.40 கோடி முதலீடு செய்துள்ளதன் மூலம் நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களில் நாம் முன்னணியில் உள்ளோம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளோம்.

நமது ஆண்கள் மற்றும் பெண்களின் ஒழுங்குணர்வு உயர்நிலையில் இருப்பதையும் சட்டம் ஒழுங்கை நன்முறையில் வளர்த்தல் என்ற உயர் எதிர்பார்ப்பினைக் கொண்ட பணியைச் செய்வதில் அவர்கள் முழுமையான கடமை உணர்வுடனும் மிகுந்த ஆர்வத்துடனும் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதையும் உறுதிப்படுத்த அவர்களது குறைகளைத் தீர்த்து வைப்பதில் முழுக் கவனம் செலுத்தப்படவேண்டும். மாநிலத்திலுள்ள நான்கு காவல்துறை மண்டலங்களைச் சேர்ந்த காவல்துறை பணியாளர்களுக்காகவும், சென்னை மாநகர காவல்துறை பணியாளர்களுக்காகவும், 5 நாட்கள் குறை கேட்கும் நாள் கூட்டங்கள் நடத்தியதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

## இந்தியாவிலே நடைபெறாத ஒன்று

பணியாளர்களை நேருக்கு நேர் சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு புரிந்து கொண்டு அவற்றைத் தீர்த்து வைத்த இச்செயல் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஒன்றாகும். காவல்துறைப் பணியாளர்கள் என்னிடம் அளித்த மனுக்கள் மீது எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளை நான் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து வருகிறேன். அத்தகையவர்கள் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு உங்களைப் போன்ற முதுநிலை அதிகாரிகள் உண்மையாகவும், விரைவாகவும் உரிய தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நான் எதிர்பார்க்கிறேன்.

காவல் துறைக் கண்காணிப்பாளர் நிலை யிலிருந்து காவல் துறைத் தலைவர் வரையில் குறைகளைத் தீர்த்து வைப்பதற்கான நல்லதோர் அமைப்பை உருவாக்குமாறு நான் கட்டளைகள் பிறப்பித்துள்ளேன். காவல் துறைத் தலைவர் முதல் காவல்துறை கண்காணிப்பாளர் வரையிலுள்ள முதுநிலை அதிகாரிகள் அனைவரும் அர்ப்பணிப்பு டனும் பொறுப்புணர்வுடனும் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களை நடத்துவீர்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன். இவ்வாறு கூட்டங்களை நடத்துவது காவலர்களுக்கிடையே உள்ள மனச் சோர்வு மற்றும் மன நிறைவின்மையையும் போக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளரும், இந்த அரசின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களின் பிரதிநிதியாகத் திகழ்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் மாவட்டத்தின் காவல்துறை நிருவாகத்தை முடுக்கிவிட்டு என்றும் உங்களின் கீழ் பணிபுரியும் அதிகாரிகளுக்கு முன்மாதிரியாக இருப்பீர்கள் என்றும், சட்டத்தைச் செயல்படுத்துவதிலும், பொதுமனிதனின் உரிமை களைப் பாதுகப்பதிலும் எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். இத்தகைய தலைமைப் பொறுப்பேற்பது மிகக் கடினமான ஒரு பணியாகும்.

## சோர்வின்றிப் பணியாற்ற வேண்டும்

தமிழ்நாடு காவல்துறையின் மதிப்புமிக்க பாரம்பரியத்தைப் பேணிக்காப்பதும் உங்களின் உயர்பதவியின் நன்மதிப்பையும் கண்ணியத்தையும் காப்பதும் உங்களின் உயரிய கடமை ஆகும். நம்முடைய குடிமக்கள் அனைவரின் சுதந்திரத்திற் காகவும் பாதுகாப்பிற்காகவும் நீங்கள் சோர்வின்றிப் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எட்வின் மார்க்ஹாம் அவர்களின் வார்த்தை களை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*"எல்லோருக்கும் சுதந்திரம் இல்லாமல்*
*உண்மையான தனிமனித சுதந்திரம்*
*அமையாது; எல்லோருக்கும்*
*பாதுகாப்பு இல்லாமல், உண்மையான*
*தனிமனித பாதுகாப்பு அமையாது"*

அனைவருக்கும் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் அளிப்பதே, தமிழ்நாடு காவல்துறையின் உயரிய நோக்கமாக இருக்கட்டும்.

*மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*10.12.2002 அன்று நடைபெற்ற*
*காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்*
*ஆற்றிய உரை.*



# மாண்புமிகு முதலமைச்சர் ஆணைப்படி விரைந்த நடவடிக்கை!
# சென்னை நகரில் மழையால் சேதமடைந்த சாலைகள் மாநகராட்சியால் பழுதுபார்க்கப்பட்டன



சென்னை நகரில் கடந்த அக்டோபர் திங்கள் கடைசி வாரத்திலிருந்து நவம்பர் திங்கள் முதல் வாரம் வரை தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக, தாழ்வான பகுதிகளிலும், சாலைகளிலும் மழைநீர் தேங்கியிருந்த சூழ்நிலை ஏற்பட்டது. தீயணைப்புத் துறை, காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற சேவைத் துறைகளின் உதவியுடன் சென்னை மாநகராட்சி, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக பல்வேறு துறைகளின் அதிகாரிகளை அழைத்துப்பேசி வெள்ள நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் இத்தகைய நிலையைத் தவிர்ப்பதற்காக பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

மேலும் 11.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வடசென்னை பகுதியில் காக்ரெயின் பேசின் சாலை, மணலிசாலை, எழில்நகர், கொடுங்கையூர், சத்தியமூர்த்தி நகர், எருக்கஞ்சேரி, கணேசபுரம், பெரம்பூர், வியாசர்பாடி, ஒட்டேரி ஆகிய பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு பொதுமக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்கள். மறுநாள் 12.11.2002 ஹெலிகாப்டர் மூலமாக சென்னை நகர் மற்றும் புறநகரப் பகுதிகளில் ஏற்பட்டிருந்த பாதிப்புகளைப் பார்வையிட்டார்.

தற்போது சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் 222 கி.மீ. நீளமுள்ள 301 பேருந்துச் சாலைகளும் 2,475, கி.மீ. நீளமுள்ள 14,567 உட்புறச் சாலைகளும் உள்ளன. மேலும் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட சாலைகள் சென்னை மாநகராட்சிப் பகுதியில் 137 கி.மீ. நீளத்திற்கு உள்ளன.

சென்னை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள 133 கி.மீ. நீளமுள்ள 230 பேருந்துச் சாலைகளும், 2,475 நீளமுள்ள 1,880 உட்புறச் சாலைகளும் மழையால் பழுதடைந்தன. இந்தச் சாலைகளில் மாநகராட்சியைச் சார்ந்த 750 கி.மீ. சாலைகளைப் புதிதாக அமைக்க ரூ.75 கோடி ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். மேலும் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட 83 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் புதிதாகப் போடுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ரூ.29 கோடி ஒதுக்கீடுச்






ANNA UNIVERSITY
SILVER JUBILEE CELEBRATIONS
LAUNCHING THE KNOWLEDGE CONNECTIVITY
WITH ENGINEERING COLLEGES
Dr A P J ABDUL KALAM
HIS EXCELLENCY THE
UNVEILING THE STATUE OF
ALAGAPPA CHETTIAR
THIRU P S
MOHANRAO
HIS EXCELLENCY THE
LAUNCHING THE
SELVI J
HONOURAB
25




**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2034
தை–மாசி பிப்ரவரி 2003
மலர் : 34 இதழ் : 15 & 16
விலை ரூ.10

## இந்த இதழில்...


- இந்த அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு அனைத்தும் கிடைக்கச் செய்வதில் வெற்றி பெறும் ..... 2
- மக்களின் நம்பிக்கையே நமக்கு வலிமை தரும் சக்தி ..... 19 & 49
- குடியரசு நாள் விழா ..... 33
- 36 மகளிர் காவல் நிலையங்கள் ..... 35
- மக்கள் பாதுகாப்பே தலையாய பணி ..... 37
- நீரிழிவு நோயை ஒழிக்க ஒரு மருந்தை கண்டு பிடிக்க வேண்டும் ..... 41
- நாமக்கல் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு ..... 47
- சென்னை – பொது மருத்துவமனையின் சில சிறப்பு அம்சங்கள் ..... 57
- ஈரோடு மாவட்டம் – தாளவாடி மலைப்பகுதியில் மக்கள் பணி ..... 61
- **தமிழகத் தொழில் வளர்ச்சியில் தருமபுரி மாவட்டம்** ..... 63
- **மலைகளின்** அரசி உதகையில் பரவசமூட்டும் தாவரவியல் பூங்கா ..... 65
- நூதன முறையில் வீடு கட்டும் திட்டம் ..... 68
- மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபக் கலைக்கூடம் ..... 70
- உள்நாட்டு மீன்வளர்ப்பு ..... 71
- உதயகிரி கோட்டையில் புல்லுயிரினப் பூங்கா ..... 73
- தேனி மாவட்டத்தில் திட்ட வளர்ச்சிப் பணிகள் ..... 75
- ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவிகளுக்கு அரசு சார்பில் இலவச சைக்கிள்கள் ..... 77
- சேலம் மாவட்டத்தில் 'தாட்கோ'வின் தடையில்லாப் பணிகள் ..... 79


முதல் பக்க அட்டையில்

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுகிறார்.**

இரண்டாம் பக்க அட்டையில்

**மகளிர் காவல் நிலையங்கள் - திறப்பு விழா**

கடைசிப் பக்க அட்டையில்

**குடியரசு நாள் விழா**

# இந்த அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு அனைத்தும் கிடைக்கச் செய்வதில் வெற்றிபெறும்

மேதகு ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ் அவர்கள் உறுதி

**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

2003ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் நல்வாய்ப்புகளையும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் அளவற்ற வளங்கள் அனைத்தும் வாய்க்கப் பெறும் தனது உன்னத இலட்சியத்தை நோக்கி இந்த 2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீறுநடைபோடும் என்று நான் உறுதிபட நம்புகிறேன்.

2. அண்மையில் நிறைவுற்ற ஆண்டு பல கொந்தளிப்பான சம்பவங்கள் நம் நாட்டில் நடந்துள்ளதைக் கண்டது. மும்பை மற்றும் ஹைதராபாத் வரை பரவியதோடல்லாமல் கோயம்புத்தூரிலும் எதிரொலித்த பயங்கர வாதத்திற்கு பாகிஸ்தான் அளித்துவரும் தொடர் ஆதரவினால், 2002 ஆம் ஆண்டில், இந்தியா, பாகிஸ்தானுடன் கிட்டத்தட்ட போரிட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. பயங்கரவாதம் வளர்த்துவிடும் வன்முறையின் கோரம், தற்போதைய உண்மை நிலையை உணர்த்துவது மட்டுமன்றி, அனைத்து மாநிலங்களிடையேயும் பரந் தோடியுள்ளது. இத்தகைய அச்சுறுத்தலை எதிர்த்து சமாளிக்க மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த அணுகுமுறையும், அனைவருடைய நிலையான விழிப்புணர்வுகளும் அவசியமாகின்றன. பகைவர்களின் தாக்குதல்களிலிருந்தும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற தங்களின் இன்னுயிரை ஈந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசின் உதவியையும், ஆதரவையும் அளிக்க இந்த அரசு நிலையான உறுதிபூண்டுள்ளது. இத்தகைய உன்னதப் பணிக்காகத் தங்களின் உயிரை அர்ப்பணித்தவர்களுக்கு நாம் வீரவணக்கம் செலுத்துகிறோம்.



**"நமது மாநிலத்தின் நிதி நிலைமையைச் சீரமைக்கவும், நம்பகத் தன்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை மிகத்துணிச்சலுடன் எடுத்துள்ளார்கள். இந்த மாநில அரசு, நிலை குலைந்துபோகாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்த நிதி சீர்திருத்தங்கள் அவசியமானதே ஆகும்."**

3. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் கொடிய நிழல், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை அண்டவிடக்கூடாது என்று இந்த அரசு உறுதியுடன் தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தின்மூலம், பயங்கரவாத தடுப்பு (POTA) சட்டத்தை இயற்றுவதில் இந்த அரசு மத்திய அரசுக்குத் தன்னுடைய முழு ஆதரவை அளித்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அமைப்பு (LTTE) மீதான தடை, தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மீட்புப் படை(TNRT) மற்றும் தமிழ்நாடு விடுதலைப்படை(TNLA) ஆகிய அமைப்புகள், இந்த அரசினால் 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழும், அதைத் தொடர்ந்து மத்திய அரசினால், 2002 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பயங்கரவாத தடுப்புச் (POTA) சட்டத்தின் கீழும் தடைசெய்யப்பட்டுள்ளன. நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப் பாட்டையும் பாதுகாக்க, மத்திய அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும், இந்த அரசு தன்னுடைய முழு ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும்.

4. 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், சட்டம், ஒழுங்கு திறமையாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். சிறுபான்மையினரின் சமய விழாக்கள் உள்பட அனைத்து சமய விழாக்களும், அமைதியான முறையில் நடைபெற்றன. பல ஆண்டுகளுக்குப் பிறகு, சிவகங்கை மாவட்டத்தில், கண்டதேவி தேர்த்திருவிழா வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்பது இந்த அரசு, நிலைமையை எவ்வாறு திறமையாகக் கையாண்டுள்ளது என்பதற்கு ஒரு சான்றாகும். தருமபுரி மற்றும் வேலூர் மாவட்டங்கள், 1970 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில், நக்ஸலைட்டுகளின் தீவிர நடவடிக்கைகளுக்குட்பட்ட இடமாக இருந்தன. இந்த அரசு, தனது முந்தைய ஆட்சி காலத்தில், அதாவது, 1991–1996 ஆம் ஆண்டுகளில் எடுத்த திடமான, கடுமையான நடவடிக்கைகளினால் தான், மாநிலத்தின் இப் பின்தங்கிய பகுதிகளில் அமைதி மீண்டும் திரும்பியது. 1999ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசு, இக்கண்காணிப்புப் பணியில் காட்டிய தொய்வு காரணமாக, இப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியது. தருமபுரி மாவட்டத்தில், ஒரு ரகசிய இடத்தில் நக்ஸலைட்டு கும்பல் கூடியபோது, சேதம் எதனையும் அந்தக் கும்பல் விளைவிப்பதற்கு முன், அந்தக் கும்பலை இந்த அரசு செயலிழக்கச் செய்தது. இத்தகைய கும்பல்கள் மாவட்டத்தில் நிலவிவரும் சமூகப்

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சாதகமாக்கிக் கொண்டு குழப்பங்களை விளைவிப்பதைக் கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கையுடன் கூடிய தயார் நிலையைத் தொடர்ந்து பேணுவதோடு, இத்தகைய ஏற்றத் தாழ்வுகளைச் சீரமைக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்திற்கான ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் பரவலாக நடைமுறையில் உள்ள கந்துவட்டி முறையை ஒழிக்க புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான இந்த அரசின் முடிவை முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளார்கள். சமூக அளவில் நிலவும் பதட்டத்தைத் தீர்க்க இது பெரிதும் உதவும். உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கை எடுத்ததன் மூலம், கோயம்புத்தூரில் தவறாக வழிநடத்தப்பட்ட மதவெறியர்களின் வகுப்புவாத மோதல் முயற்சிகள் தகர்க்கப்பட்டன. தீவிரவாதம், பிரிவினைவாதம், மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தனது தீர்மானத்தை இந்த அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

5. காவல் துறையை நவீனமயமாக்குவது, சட்டம்–ஒழுங்கை திறமையாகப் பராமரிப்பதற்கு இன்றியமையாத தேவையாகும். இவ்வரசு, இரண்டாண்டுகளில், ரூபாய் 272 கோடி செலவில் காவல் படையை நவீனமயமாக்குவதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. ஒப்பற்றதும், முன்னெப்போதும் இருந்திராத புதிய நடவடிக்கையாகக் காவல் துறையினரின் குறைகளைத் தீர்ப்பதற்காக, தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் மற்றும் பிற பதவித் தரங்களைச் சார்ந்தவர்களுடன் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஐந்து நாட்களில் ஐந்து விரிவான கூட்டங்களை நடத்தினார்கள். காவல்படையின் மனஉறுதியைப் பேணுவதில் உள்ள சிக்கல்களை நான் நன்கு அறிந்துள்ளதால், நாட்டில் இதற்குமுன் எந்தவொரு முதலமைச்சரும் எடுத்திராத மனஉறுதியூட்டும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்ட விழைகிறேன். தமிழ்நாட்டில் முதன் முறையாக அனைத்து மகளிர் காவல்படை ஒன்றை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முன்னோடித் திட்டமாகும். பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக, அனைத்து மகளிர் அதிரடிப் படைப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு காவல் துறை, நாட்டிலேயே சட்டத்தை நிலைநாட்டுவதில் மிக ஆயத்தப்படுத்தப்பட்ட உரிய பயிற்சி பெற்ற அமைப்பாகத் திகழ அனைத்து மகளிர் காவல் நிலையங்களை வலுப்படுத்துதல், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் நவீன ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்குதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

6. இவ்வரசு, கருநாடக அரசின் முன்னாள் அமைச்சரான திரு. ஹெச். நாகப்பா அவர்கள், சந்தனமரக் கடத்தல் வீரப்பனால் கொடுமையான முறையில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கிறது. அவருடைய பிரிவால் வாடுகின்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவிக்க விழைகிறேன். வீரப்பனைப் பிடிப்பதற்காக, இரு மாநிலங்களின் சிறப்பு பணிப் படையினரும், விரைவான மற்றும் தொடர் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனால் திரு. நாகப்பா கடத்தப்பட்டதையடுத்து, கருநாடக அரசு, அனைத்துத் தேடுதல் பணிகளையும் காலவரையறையின்றி நிறுத்திவைத்தது. தமிழ்நாட்டின் சிறப்புப் பணிப்படையின் அனைத்து தேடுதல் நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்குமாறும் கருநாடக வனப் பகுதியிலிருந்து அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் கருநாடக அரசு, தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையை அதிகாரப்பூர்வமாகக் கேட்டுக்கொண்டது. இவையனைத்தும் பயனளிக்கவில்லை என்பது திரு.நாகப்பா கொலையுண்டதிலிருந்து தெரிய வருகிறது. சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் கொடுமையான நடவடிக்கைகளுக்கு விரைவில் முடிவுகட்டப்பட வேண்டும். தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையினர், கருநாடக சிறப்புப் பணிப்படையினருடன் நெருங்கி ஒத்துழைத்து, தமிழ்நாடு சிறப்புப் பணிப்படையினரின் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. பயங்கர கொள்ளைக்காரனான வீரப்பனின் கொடுஞ் செயல்களுக்கு இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க, கடுமையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**“அரிதாகக் கிடைக்கும் நம்முடைய நீர் ஆதாரங்களைத் திறம்பட நிருவகிப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொருத்தமான முறையில் நகரப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் மழை நீர் சேமிப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டைக் கொண்டுள்ள சிறிய ஏரிகள், கிராமக் குளங்கள், நீர் வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றில் தூர்வாரும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது”**





7. தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தருவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேற்கொண்ட இடையறா முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டுக்கு, நாளொன்றுக்கு 1.25 டி.எம். கன அடி நீரைத் திறந்துவிட வேண்டுமென்று உச்சநீதிமன்றம் கருநாடக மாநிலத்திற்கு உத்திரவிட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக இந்த உத்தரவையோ, விநாடிக்கு 9,000 கன அடி நீரைத் திறந்து விட வேண்டும் என்ற காவிரி நதிநீர் ஆணையம் தொடர்ந்து பிறப்பித்த உத்தரவையோ கருநாடகம் மதித்து நடக்கவில்லை. உத்தரவுகளைத் தொடர்ந்து மீறும் கருநாடக அரசின் இத்தகைய செயல்பாடுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் கூட்டாட்சி அமைப்புகளின் சாரத்தையும், வலிமையையும் கேள்விக் குறியாக மாற்றும் வண்ணம் அமைந்துள்ளன. அதன் விளைவாக, நீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் நீரைப் பங்கிட்டுக் கொள்ளும் கோட்பாட்டின்

பயன்படுத்த வேண்டியுள்ளது. புதிய வீராணம் திட்டம் போன்ற நடுத்தரக்கால தீர்வுகளையும் இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அப்போதுதான், இனி வருங்காலத்தில் இம்மாதிரியான கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க இயலும்.

13. தமிழ்நாட்டை ஊட்டச் சத்து குறைவற்ற மாநிலமாகவும், பசிப்பிணியற்ற மாநிலமாகவும் மாற்றுவது என்பது வெறும் வாய் வார்த்தையாக மட்டுமே இருந்து விடலாகாது. முன் எப்போதும் ஏற்பட்டிராத வறட்சியும், தண்ணீர்ப் பற்றாக்குறையும் உள்ள இத்தகைய கால கட்டத்தில்தான், இத்தகைய இடர்ப்பாடும், தேவையும், வெளிப்படையாக நமது கவனத்திற்கு வருகின்றன. வறுமையில் வாடுகின்ற சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இலவச மதிய உணவுத் திட்டத்தினைத் துணிச்சலாகத் தொடங்கியுள்ள முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நான் பாராட்டியே ஆகவேண்டும். இது, பசிப்பிணியற்ற தமிழ்நாட்டை உருவாக்குதல் என்ற கொள்கைக்கு உண்மையான அர்த்தத்தையும் உட்பொருளையும் அளித்துள்ளது. எவரொருவரும் பசிப்பிணியின் கொடுமைக்கு ஆளாக்கப்பட மாட்டார்கள். மக்களின் நலனைப் பேணிக்காக்க உறுதிபூண்டுள்ள, மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள ஒரு மாநிலம் என்பதற்கு இதைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு வேறு எதுவும் இருக்க இயலாது.

14. தமிழ்நாடு போன்ற முன்னணி மாநிலங்களை, அடுத்தடுத்து வந்த நிதிக்குழுக்கள் கடுமையாக தண்டித்துள்ளன. நியாயமான மறுபகிர்வை நிலைநாட்டுவதில் தவறான அணுகுமுறையை இந்த நிதிக்குழுக்கள் தொடர்ந்து கடைப்பிடித்தது, நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வில் பாதகமும் பின்தங்கிய மாநிலங்களின் செயலாக்கமின்மை, நிதிக்கட்டுப்பாடின்மை மற்றும் செயல்திறன் இன்மைக்கும் பரிசளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. மாநிலங்களின் பெருகிவரும் அதிக வட்டியுடன் கூடிய கடன் சுமை போன்ற கடுமையான பிரச்சினைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. இது, நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களையும் நிதி இடர்ப்பாடு என்ற ஆழமான படுகுழியில் தள்ளியுள்ளது. நன்றாகச் செயல்படுகின்ற மாநிலங்களுக்கு இத்தகைய இடர்ப்பாடான நிலை முன் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. பதினோராம் நிதிக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதன் விளைவாக,





2000–2005ஆம் ஆண்டு வரையிலான காலஅளவிற்கு, தமிழ்நாட்டுக்கு, ரூபாய் 2,946 கோடி அளவுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்தகால நிதிச் சீர்குலைவாலும், கடன் நிவாரணத்திற்கான யாதொரு திட்டமும் இல்லாததினாலும், கடனில் மூழ்காமல் சமாளிப்பதற்கு, தமிழ்நாடு கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. புகழ்பெற்ற பொருளாதார வல்லுநரான டாக்டர் சி.ரெங்கராஜன் அவர்களின் தலைமையில் பன்னிரெண்டாவது நிதிக்குழு அமைக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். பழைய பாதையிலேயே செல்லாமல், தங்களுடைய நிதிநிலைமையைப் பேணிக்காத்துள்ள மாநிலங்களுக்குப் பயனளிக்கும் வகையில், பன்னிரெண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் அமையும் என்று நம்புகிறோம்.

15. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் ஆற்றிய அவருடைய உரையில், நேரடி வரிகள் குறித்த பணிக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை ஏற்பதில் உள்ள கடுமையான இடர்ப்பாடுகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். உயர் சேமிப்பு வீதம், அதிக முதலீட்டிற்கு வழிவகுக்கும் என்ற உள்ளார்ந்த ஊகத்தின் பேரில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சிறு சேமிப்புக்கான அனைத்து ஊக்கத் திட்டங்களையும் திரும்பப் பெறும்படி இப்பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரை, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கவே முடியாமல் செய்துவிடும். வீட்டுவசதிக்காகச் செய்யப்படும் முதலீட்டுக்கான ஊக்கத் தொகைகளையும் கணிசமாகக் குறைத்துவிடும்படி இப்பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. வீட்டுவசதித் துறையில் காணும் முன்னேற்றம், பொருளாதாரத்தின் பல நிலைகளில் பரிணமிக்கிறது என்பதை யாவரும் அறிவர். அத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, சிறுசேமிப்பு மற்றும் வீட்டுவசதித் துறைக்கான ஊக்குவிப்புத் திட்டங்களைத் தக்க வைக்கும்படி இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்துகிறது.

16. இந்த அரசு, 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, என்றும் இல்லாத அளவிற்கு நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒருமுறை மானியமாக ரூ.3,000 கோடி நிதியுதவி வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டார்கள். இது கிடைக்கவில்லை. உடனிகழ்வாக, உலகவங்கி போன்ற வெளிநாட்டு முகவரமைப்புகளும், 2001 ஆம் ஆண்டிற்கு முன் மாநில அரசு நிதி சீர்திருத்தங்களை மேற்கொள்ளாததால், திட்டம் அடிப்படையிலான கடன்களைக் கூட நிறுத்திவைத்தன. எனவே, நிதி சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாதவையாக ஆகியுள்ளன. நிதி நெருக்கடி என்பது புதியதொன்றும் அல்ல என்ற ஒரு தவறான கருத்து பரவலாக நிலவுகிறது. துரதிர்ஷ்டவசமாக, இந்த மாநிலம் சந்தித்துவரும் நிதி இடர்ப்பாடானது, முன்பு எப்போதும் இல்லாத தன்மையுடையதாகும். மிகையான கடன் சுமையாலும், நடப்புச் செலவுகளுக்குப் போதாத நடப்பு வருவாயாலும், தமிழ்நாடு தனது, வளர்ச்சிப் பாதையை முற்றிலும் விட்டுவிட்டு தனது கடமைகளை ஆற்றுவதிலிருந்து தவறுகின்ற அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

17. நமது மாநிலத்தின் நிதி நிலைமையைச் சீரமைக்கவும், நம்பகத் தன்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மிகத்துணிச்சலுடன் எடுத்துள்ளார்கள். இந்த மாநில அரசு, நிலை குலைந்துபோகாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்த நிதிச் சீர்திருத்தங்கள் அவசியமானதே ஆகும். நாம் நலமுடன் இருக்க வேண்டுமாயின், இத்தகைய கசப்பான மருந்துகளை உட்கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது. தற்போதுள்ள நிதிச் சீர்குலைவின் தன்மையையும், கடுமையையும் பார்க்கும்போது, இந்த நிதிச் சீர்திருத்த திட்டம், பல்வேறு துறைகளில் பல்வேறு நடவடிக்கைகளைக் கொண்ட நடுத்தர காலத் திட்டமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. மாநிலத்தின் நிதி நிலைமையை மீண்டும் சீர்படுத்த கடும் முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்நின்று எடுத்து வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நிதிநிலைமையை முழுமையாக சீர்படுத்த மேலும் பல நடவடிக்கைகள்

அடிப்படையிலும் கூட, 2002 டிசம்பர் திங்கள் இறுதியில் உள்ள நிலவரப்படி 60.22 டி.எம். கன அடி அளவுக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 13.1.2003 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி, 4.9.2002–லிருந்து பற்றாக்குறையாக உள்ள 18.80 டி.எம். கன அடி தண்ணீரைக் கூட திறந்துவிட கருநாடகம் தற்போது தயாராக இல்லை. அதன் விளைவாக, காவிரி டெல்டா பகுதியில் இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு உள்ள நடப்பு நெற்பயிர் நம் கண்களுக்கு எதிரிலேயே வாடிக் கருகி வருகின்ற அவலமான நிலை உருவாகியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால், கருநாடகம் தற்போது சிறிதளவு நீரைத் திறந்துவிட்டுள்ளது. துரதிஷ்டவசமாக, இந்த சொற்ப அளவு நீர், காவிரி டெல்டா பகுதியிலுள்ள நடப்பு சம்பா பயிருக்கு ஒரு தடவை பாசனம் அளிப்பதற்குக் கூட போதுமானதாக இராது. நிலமையை உணர்ந்து, நல்லெண்ணத்துடன் நடப்புப் பயிர்களுக்கு மேலும் ஒரு தடவை பாசனம் அளிப்பதற்கு ஏதுவாக, போதுமான அளவுக்கு நீர் திறந்துவிடப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

8. காவிரி நதிநீர் தாவாவினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் களையவும், காவிரி டெல்டா பகுதியில் முன் எப்போதும் காணாத அளவுக்கு வறட்சியினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளைத் தணிக்கவும், இவ்வரசு பெருமளவிலான நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2002, ஜூன் திங்களில் தஞ்சைக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மூன்று டெல்டா மாவட்டங்களிலும் ரூபாய் 164.18 கோடி செலவில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளித்தார்கள். இந்த நிவாரணத் திட்டம், நன்கு வரவேற்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களிலுள்ள சுமார் 10 இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ரூபாய் 21 கோடி செலவில் தீபாவளி பரிசுப் பொருட்கள் அடங்கிய பைகள் விநியோகிக்கப்பட்டன. நடவு செய்த சம்பா பயிர்களில் 40 சதவீத அளவிற்கு மட்டுமே தற்போது காப்பாற்றப்படலாம் என்பது தெளிவாகியுள்ளது. இது பேரிடராகும். மத்திய அரசு, இதை, முன் எப்போதும் ஏற்பட்டிராத தேசிய அளவிலான இயற்கைச் சீற்றமாகக் கருத வேண்டும். டெல்டா பகுதி விவசாயிகள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. விளைச்சலை இழந்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 5,000 வீதம் ரூபாய் 400 கோடி அளவுக்கு நிவாரண உதவி வழங்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலுவாக எடுத்துரைத்துள்ளார்கள். டெல்டா பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அசல் தொகையை கடன் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வது உள்ளிட்ட கடன் நிவாரணத் திட்டம் ஒன்றையும், விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கான மதிய உணவுத் திட்டத்திற்காக 2 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். கோரப்பட்டுள்ள நிவாரணம், மத்திய அரசினால் உடனே வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

9. தமிழ்நாடு, தண்ணீர் பற்றாக்குறையுள்ள ஒரு மாநிலமாகும். பல நூற்றாண்டுகளாகப் பெற்றுவந்த தண்ணீரின் அளவைத் தற்போது பெறுவதற்குக்கூட அது கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. கேரள அரசு, பவானி ஆற்றின் குறுக்கே சிற்றணை ஒன்றைக் கட்டி, அதன் நீரைத் திருப்பிவிட மேற்கொண்டுள்ள நடவடிக்கை, தமிழ்நாட்டின் மீது விழுந்துள்ள மற்றுமொரு அடியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பிரச்சினையை, கேரள முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, சிற்றணை கட்டுவதை கைவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இவ்வரசு, இந்தப் பிரச்சினை தொடர்பாக, காவிரி நீர் தாவா நடுவர் மன்றத்தை அணுகி, சிற்றணை கட்டுவதற்கு எதிராகத் தடையாணை பிறப்பிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

10. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலம் முதற்கொண்டு, அனைத்து பெரிய நதிகளையும் நாட்டுடைமை ஆக்குவதன்மூலம், நீர்வள வாயில்களை நிருவகித்து, நீர் வளத்தினைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள, ஒரு தேசியத் தொலைநோக்கு பின்பற்றப்பட வேண்டுமென்று, இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1984 ஆம் ஆண்டிலேயே, மாநிலங்கள் அவையில் உரையாற்றியபோது, கங்கை காவிரி இணைப்புத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்ற தனது உணர்ச்சிமிகுந்த கோரிக்கையை வலியுறுத்தினார்கள். நதிகளை இணைப்பதற்கான பணிக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளதை இந்த அரசு வரவேற்கிறது. முதலமைச்சர் அவர்கள், 2002 ஆம் ஆண்டு டிசம்பரில், புதுடில்லியில் நடைபெற்ற ஐம்பதாவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் உரையாற்றுகையில், பத்தாவது திட்டகாலத்திலேயே, மகா நதி மற்றும் காவிரி நதிகளை இணைக்கும் வகையில் நதிகளை இணைக்கும் இத் தொடர் பணியை முடிக்க வேண்டுமென மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தினார்கள். அவ்வாறே, தென்னக தீபகற்பத்தில், மேற்கு நோக்கிப் பாயும், பம்பா அச்சன் கோயில் நதியை, வைப்பாறு நதியுடன் இணைப்பது போன்ற நதிகளை இணைக்கும் பணியையும் பத்தாவது திட்ட காலத்திலேயே மேற்கொண்டு முடிக்க வேண்டுமென மத்திய அரசிடம் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

11. தமிழ்நாடு, தன்னுடைய வரலாற்றிலேயே, மிகக் கடுமையான வறட்சி நிலையைச் சந்தித்து வருகிறது. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததும், கருநாடகம் விடாப்பிடியாக நீரைத் திறந்துவிடாததும் ஆகிய இரண்டும் சேர்ந்து காவிரி டெல்டாப் பகுதியை வறண்ட பூமியாக மாற்றியுள்ளது. இந்த அரசு அளித்த வறட்சி நிலைமை குறித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில், மத்திய அரசு, சில வறட்சி நிவாரண செலவிற்கு ஒப்புதல் அளித்தது. நடப்பு ஆண்டில், இதுவரை, வறட்சி நிவாரணம் குறித்து செய்யப்பட்ட செலவு ரூபாய் 142.80 கோடி ஆகும். வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் 50,000 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டு அப்பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. முந்தைய மதிப்பீடு, தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் பின்னணியில் செய்யப்பட்டதாகும். நன்கு தொடங்கிய வடகிழக்குப் பருவ மழையும், நம்மை ஏமாற்றியது. இது நிலைமையை மேலும் மோசமாக்கி யுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி இவ்வரசு சென்னை நீங்கலான அனைத்து 28 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்க முடிவு செய்துள்ளது. 28 மாவட்டங்களிலும் ஒட்டுமொத்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இது உதவும். மேலும் கூடுதலான நிவாரண உதவி அளிக்க வேண்டுமென நாம் மத்திய அரசை மீண்டும் அணுகுவோம். கூடுதல் உணவு தானிய ஒதுக்கீட்டைப் பெற்று, கோடைக்காலம் முழுவதும் ஊரகப்பகுதிகளில் போதுமான அளவிற்கு வேலைவாய்ப்புகள் அளிக்கும் வண்ணம் பணிகள் நடப்பதை உறுதி செய்வோம்.

**"எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைக்க வகை செய்யும் பொருட்டு, ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2003-2004ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்."**

12. வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனது, சென்னைக்குக் குடிநீர் வழங்குவதில் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள குடிநீர் வழங்கலை சிக்கனப்படுத்த, அரசு, விரைவாக நடவடிக்கை எடுத்துள்ளது. அண்மையில் ஹைதராபாத் சென்றிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்து, சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரை விரைவில் திறந்துவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார். பருவமழை பொய்த்ததால் ஆந்திரப் பிரதேச நீர்த்தேக்கங்களிலுள்ள நீரின் சேமிப்பு அளவும் மிகவும் குறைவாக உள்ளது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து விரைவில் தண்ணீரைத் திறந்து விடுவதாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரும் உறுதியளித்துள்ளார். அதுவரையில், நாம், இருப்பில் உள்ள நீரை, அறிவார்ந்த முறையில் சிக்கனமாகப்

எடுக்க வேண்டியுள்ளன. இது, நிதி மேலாண்மையில் கையாள வேண்டிய பொறுப்புணர்வை முன்னிலைப்படுத்துகிறது. மாநில அளவில், வலுவான நிதி நிலைமையில் எந்தெந்த கோட்பாடுகள் உள்ளடங்கியுள்ளன என்பது பற்றிய பரவலான ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இவைகளை, நிதி மேலாண்மையில் பொறுப்புணர்வு பற்றிய ஒரு சட்டத்தில் வழிகாட்டு கொள்கைகளாக தொகுக்க முடியும். இந்தக் குறிக்கோளை நோக்கி நாம் பணியாற்றவும் இயலும். அப்போதுதான், மாநிலத்தின் நிதி நிலையைப் பாதிக்கக்கூடிய இத்தகைய பிரச்சினைக்குரிய நிலை, மீண்டும் ஏற்படாமல் அமையும்.

18. மாநிலத்தின் நிதி இருப்புகளில் காணும் மோசமான நிலையைக் கருதிப் பார்க்கையில், ஐந்தாண்டு திட்டம் ஒன்றை வகுப்பதற்கான வாய்ப்புகள் கூட எட்டாத கனவாகத் தோன்றலாம். நிதிச் சீர் திருத்தங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமது ஒருமித்த கவனத்தை செலுத்தியிருப்பதால், இம்மாநிலத்திற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை (2002–2007) மாபெரும் அளவில் ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீடு கொண்டதாக மாநில அரசால் எடுத்துரைக்கப்பட்டு, அதற்கு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலையும் பெற முடிந்துள்ளது. சிறப்பானதும், செயலாக்கக் கூடியதுமான வளர்ச்சித் திட்ட பொருள் நிரல் ஒன்றினை வகுத்ததற்காக நான் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த மாநிலத்தில் நிலவும் நிதிப் பிரச்சினைகளின் அளவைப் பார்க்கும்போது இதை ஒரு சாதாரணமான வெற்றியாகக் கருத இயலாது.

**இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை, சந்தை அடிப்படையில் அமைந்த புதிய திட்டமாக முழுமையாக மாற்றி மறுவடிவமைத்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்கள்**

19. தமிழ்நாட்டு மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணிவுடன் மாபெரும் கனவு கண்டுள்ளார்கள். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 8 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்த வேண்டுமென்ற இலக்கை இந்த அரசு வகுத்துக் கொண்டுள்ளது. தேசிய இலக்கிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது 2010 ஆம் ஆண்டிற்குள், மாநிலத்தின் நபர்வாரி வருமானம் இருமடங்காக உயரவேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குத் திட்டத்தை வகுத்துள்ளார்கள். நான்குவழி அணுகு முறை ஒன்றைப் பின்பற்றுவதன்மூலம், இதனை எய்த இயலும். இதில், புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்; சிறப்பான நிருவாகம்; சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் நிதி சீர்திருத்தங்கள் ஆகியவை அடங்கும். மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சி முழுமையையும் உள்ளடக்குகிறது. 2002 டிசம்பரில், தேசிய வளர்ச்சி குழுவின் ஒப்புதலுடன் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப் படுவதானது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

20. முதன்மைத் துறைகளின் செயல்பாட்டில், குறிப்பாக வேளாண்மைத் துறையின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாபெரும் இலக்குகளை எய்துவதில் முக்கிய காரணியாக விளங்குகிறது. முதன்மைத் துறைகளில் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும், புதிய வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் அரசு நன்கு வடிவமைக்கப்பட்ட திட்ட அணுகுமுறைகளை வகுத்துள்ளது. நீர்வரத்துப் பகுதி அணுகுமுறை அடிப்படையில் அமைந்த ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இது மூன்று கூறுகளைக் கொண்டது. முதலாவதாக, அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்களை, வேளாண்–ஆய்வு அடிப்படையிலான (Agri-clinical) அணுகுமுறை மூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கையின் கீழ் கொண்டுவரவேண்டும். இரண்டாவதாக, தரிசு நில மேம்பாட்டுப் பணிகளிலும், அவற்றுடன் இணைந்த பதப்படுத்தும் தொழில்களிலும், தொழில் கூட்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்யவேண்டும். இதற்கான துவக்கப் பணிகள் 7 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தைச் சேர்ந்த 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ரூபாய் ஒரு கோடி முதலீட்டுடன் வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தனிக் கவனம் செலுத்துவது மூன்றாவதாக அமையும். இத்திட்டத்தின்படி ரூபாய் 227.41 கோடி திட்டச் செலவில், 182 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தவிருக்கும் 258 செயற்குறிப்புகள், பரிசீலனையில் உள்ளன. ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாடு குறித்த இந்த அணுகுமுறை, முதன்மைத் துறைகளில் வளர்ச்சி வேகத்தை மீளக் கொண்டுவரும். மேலும், இது மாநிலத்தின் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஏற்ற பயனுள்ளவகையில் மதிப்பு கூட்டும் புதிய நடவடிக்கைகளை ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்தும்.

21. தொடர்ந்து காணப்படும் நீர்ப் பற்றாக்குறைகள், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் மந்தநிலை, முதன்மைத் துறைகளில் வருவாய் தேக்கநிலை ஆகியவை ஊரகப் பொருளாதாரத்தை கடும் நெருக்கடி நிலைக்கு உட்படுத்தியுள்ளன. அரிதாகக் கிடைக்கும் நம்முடைய நீர் ஆதாரங்களைத் திறம்பட நிருவகிப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொருத்தமான முறையில் நகரப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் மழைநீர் சேமிப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டைக் கொண்டுள்ள சிறிய ஏரிகள், கிராமக் குளங்கள், நீர் வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றில் தூர்வாரும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், வேலைக்கு உணவு திட்டத்தின் (Food for Work) ஓர் அங்கமாக இந்த கோடைகாலத்தில் போர்க்கால அடிப்படையில் செயற்படுத்தப்படும். அதேபோன்று, 100 ஏக்கருக்கும் அதிகமான ஆயக்கட்டினைக் கொண்ட பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஏரிகளை தூர்வாரி, நிலை உயர்த்தும் பெரும் திட்டமொன்றும் தொடங்கப்படும். ரூபாய் 2,900 கோடி செலவில் செயற்படுத்தப் படவுள்ள நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்–II ஐ தொடங்குவதற்கு அனுமதி கோரியும், அனுமதி வழங்கப்படும்வரை தற்போதுள்ள திட்டத்தைத் தொடர அனுமதிக்குமாறும், உலக வங்கியை, இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது.

22. நமது மாநிலம் தொடர்ந்து தண்ணீர் பற்றாக்குறை உடைய மாநிலமாக அமைந்துள்ளது தற்போதுள்ள உண்மை நிலை. எனவே, அதிக அளவு நீர் தேவைப்படும் பயிர்களை உழவர்கள் தொடர்ந்து பயிரிட இயலாது. அதிக அளவு நீரைப் பயன்படுத்தும் உழவர்களின் நடைமுறைகளையும் இந்த வகையில் அவர்களிடையே மலிந்துள்ள பழமைவாதக் கருத்துக்களையும் மாற்றி உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு, கூடுதல் விலை மதிப்புள்ள பயிர்களையும், குறைந்த அளவு நீர் மட்டுமே தேவைப்படும் வணிகப் பயிர்களையும் பயிரிடச் செய்வதற்கும், தோட்டக்கலையை மேம்படுத்து வதற்கும், மூலிகைச் செடிகளைப் பயிரிடச் செய்வதற்கும் தேவையான ஒரு முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர்காப்பு மேலாண்மையில் அதி நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன் படுத்துதல், திறமையான முறையில் நீரைப் பயன்படுத்துதல், சிக்கனமான செலவில் பண்ணை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் உழவர் சமுதாயம் ஊக்குவிக்கப்படும். புன்செய் வேளாண் மண்டலங்களில், செம்மறி ஆடு வளர்ப்பு ஊக்குவிக்கப்படுவதுடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணை நிருவாகத்தை ஊக்குவிக்க, பல்வகை கூட்டு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அதிக அளவு நீரைப் பயன்படுத்தும் போக்கிலிருந்து உழவர்களைக் காத்து, அவர்களுக்கு துணை வருமானம் ஈட்டுவதற்கு வகை செய்வதன் மூலம், பருவ மழையின் போக்கினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைத் தவிர்ப்பதே முக்கிய நோக்கமாகும்.

23. முதன்மைத் துறைகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், புதிய வாய்ப்பு வளங்களைப் பெருக்குவதற்கும், ஒட்டுமொத்தமாக ஊரக

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாத அம்சமாகும். எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளை அமைக்க வகை செய்யும் பொருட்டு, ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப் படும். ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீட்டுவசதி செய்துதரும் பொருட்டு, இந்த ஆண்டில், ரூபாய் 19.14 கோடி செலவில் 19,142 கச்சா வீடுகள் மேம்படுத்தப்படுவதுடன், மொத்தம் ரூபாய் 141.46 கோடி செலவில் 43,580 வீடுகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். அடுத்துவரும் ஐந்தாண்டுகளில், மொத்தம் ரூபாய் 40 கோடி செலவில், பீடித் தொழிலாளர்களுக்கு ஏறக்குறைய 10,000 வீடுகள் கட்டித்தரப்படும். மகளிருக்கான, எஞ்சியுள்ள 6,309 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டும் பணியை 2003ஆம் ஆண்டில் அரசு செய்து முடிக்கும். இத்திட்டத்திற்கு அதிக அளவு ஆதரவு இருப்பதைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னோடி அடிப்படையில், ஆண்களுக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகம் கட்டும் பணியும் மேற் கொள்ளப்படும்.

**"உலகத் தரம் வாய்ந்த சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, வீட்டுவசதி, நகரப் பகுதிப் பணிகள், துறைமுகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போதிய அளவிலான மற்றும் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், இம்மாநிலத்தில் பெருமளவில் தொழில் முதலீடுகளைக் கவருவதற்கான திறவுகோலாக அமைகின்றன."**

24. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் இரண்டாம் வகை துறையைப் பொருத்தவரை ஏற்றுமதி வளர்ச்சி நோக்கில் அமைந்த முன்னேற்றம் என்கின்ற தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வரசு, உற்பத்தித் துறையில் நீடித்த வளர்ச்சியைப் பெறுவதற்காக இரண்டாம் நிலை சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்ற முனைந்துள்ளது. நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், தொழில் நடத்தலில் தேவையற்ற செலவுகளைக் களைதல், கட்டுப்பாடுகளை அகற்றுதல், துறைமுகங்கள் மற்றும் சுங்கத்துறை ஆகியவற்றில் தொழில்முறை கால விரயத்தைக் குறைத்தல், வட்டி வீதங்களைக் குறைத்தல், தொழிலாளர் துறை சீர்திருத்தங்கள், தகுந்த எரிசக்தி விலை நிர்ணயம் முதலியவை இதில் அடங்கும். இம்மாநிலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பொதுத் துறையுடன் தனியார் துறை இணைந்து செயல்படுவதை எளிதாக்க இயலும் வகையில் சட்டமொன்றை இயற்ற இவ்வரசு கருதியுள்ளது என்று உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்வரசின் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Special Economic Zone) குறித்த புதுமைக் கொள்கை ஒன்று உருவாகும் நிலையில் உள்ளது. அக்கொள்கை, ஏற்றுமதி நோக்கில் அமைந்த தொழில் பிரிவுகளுக்கு தனி ஊக்கம் அளிக்கும் வகையில், எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி போன்ற புதிய பகுதிகளுக்குப் பொருந்தியதாக அமையும். சென்னை மற்றும் திருப்பூரில் ஆடைப் பூங்காக்கள் (Apparels Park) அமைப்பதற்குத் தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளது. இவை, இம்மாநிலத்தில் துணித் தொழிலுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும்.

25. தேசிய பொருளாதாரக் கொள்கை தாராள மயமாக்கப்பட்டிருப்பதால், தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்கள், உள்நாட்டு அளவிலும், பன்னாட்டு அளவிலுமுள்ள போட்டியாளர்களுக்கிணையாக, தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ளும் பெரும் சவாலை எதிர் நோக்கியிருக்கின்றன. தொழில்நுட்பத்தை நிலையுயர்த்துவதற்கும், சிறுதொழில் துறைகளின் தரத்தை மேம்படுத்து வதற்கும் ஏற்றதொரு புதிய கொள்கைத் திட்டத்தை வகுக்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அரசுக் கொள்முதல் நடவடிக்கைகளில், சிறு



தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கும் கொள்கையை இந்த அரசு ஏற்கெனவே அறிவித் துள்ளது. போட்டியாளர்களுக்கு இணையாக அமையும்படி சிறுதொழில்களின் அனுகூலங்களை வலுப்படுத்தி, தாராளமயமாக்கப்பட்ட பொருளா தாரச் சூழ்நிலையில் சிறுதொழில்கள் தமக்கு உரிய இடத்தை பெறுவதற்கு உதவும் வகையில் கடும் முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

26. நீலகிரி மாவட்டத்தில், சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களின் துயரைத் தணிக்கும் நோக்கத்துடன், பொதுவிநியோக முறையின் மூலம், "ஊட்டி தேயிலை" என்ற பெயரில், தேயிலை விற்பனை செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களிடமிருந்தும், தேயிலை நுகர்வோரிடமிருந்தும் இத்திட்டத்திற்கு பெருமளவு வரவேற்பு கிடைத்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "ஊட்டி தேயிலை" விற்பனை 4,075 மெட்ரிக் டன் அளவையும் விஞ்சி, ரூபாய் 30.56 கோடி வருமானத்தை ஈட்டியுள்ளது. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர்களுக்கு நல்ல வருமானம் ஈட்டித்தருவதை உறுதி செய்வதற்கும், ஒளிவு மறைவற்ற விற்பனையை உறுதி செய்யவும், குன்னூரில், "டீசெர்வ்" (Teaserve) என்றழைக்கப் படும் ஏல விற்பனை மையம் விரைவில் செயல்படத் துவங்கும். தேயிலை பயிரிடுவோர்க்கு நியாய விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டு, 'விலை நிலைப்பாட்டுத் திட்டத்தைச்' செயல்படுத்துமாறு, இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தும். தேயிலைத் தோட்டங்களில் விளைச்சலைப் பெருக்கவும், தேயிலை உற்பத்தியை மேம்படுத்தவும், பொருத்தமான ஏனைய ஊடு பயிர்களை மதிப்புக்கூட்டு அம்சங்களாக, பயிரிட வகைசெய்யும் படியாகவும் இருமுனை அணுகுமுறை ஒன்று பின்பற்றப்படும்.

27. துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கியிருந்ததன் மூலமும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவிய கடும் நிதி நெருக்கடிப் பிரச்சினைகளினாலும் தமிழ்நாட்டில் கைத்தறித் துறை, முன் எப்போதும் இருந்திராத நெருக்கடியைச் சந்தித்தது. இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை, சந்தை அடிப்படையில் அமைந்த புதிய திட்டமாக முழுமையாக மாற்றி மறு வடிவமைத்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்கள். இத்திட்டம், மாநிலத்திற்குள்ளேயும், வெளியேயும் பொதுமக்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அரசு, வேட்டி, சேலை வாங்கி, விற்பனை செய்வதற்காக இதுவரை, ரூபாய் 79.84 கோடி அனுமதித்துள்ளது. 1998 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கவேண்டிய ரூபாய் 27.50 கோடி வட்டி நிலுவை உதவித் தொகையை இந்த அரசு கொடுத்துள்ளது. இது, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியுள்ளது. பழைய இருப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. துணிகளின் இருப்பு அளவு குறைந்துள்ளது. விற்பனை வாய்ப்புகளுக்கு ஏற்ற நவீன மயமாக்கும் திட்டம் குறித்த நடவடிக்கைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

28. பணிகள் துறையை மேம்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு இலக்குகள் குறித்த இவ்வரசின் முக்கிய நோக்கங்களை எய்தப் பெறலாம். இவ்வகையில் விரைந்த வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பவியல் தகுந்ததொரு உந்து விசையாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இம் மாநிலம், கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான மையமாக, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தகவல் தொழில்நுட்பவியல் வாயிலாக உருவாகி வருகிறது. சிறுசேரியில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா, ஓர் அறிவுத் திறன் சார்ந்த தொழில்நகரியமாக (Knowledge Industry Township) விளங்கும் வகையில் விரிவாக்கப்படும். சென்னையில் உள்ள காந்தி மண்டபம் சாலையை சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவுடனும், கிழக்குக் கடற்கரைச் சாலையுடனும் இணைப்பதற்காக உலகத் தரம் வாய்ந்த நெடுஞ்சாலை ஒன்று, விரைவில் அமைக்கப்படும். இது, புதிதாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிருவாக நகரம் வரையிலும் உள்ள ஒட்டுமொத்தப் பகுதியையும் முக்கியமான தகவல் தொழில்நுட்பவியல் மையமாக உருவாக்குவதற்கு ஏதுவாக அமையும். புதிய

தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இது, தகவல் தொழில் நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES) மற்றும் நிறுவனங்கள் தங்களது தொழில்முறை தேவைகளை, கொள்முதல் வாயிலாகப் பெறுவது (Business-Process Outsourcing) போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும். உலக வங்கி, ஸ்டேண்டர்டு சார்ட்டர்டு வங்கி, "ஏபிஎன்–ஆம்ரோ வங்கி" (ABN-AMRO Bank) போன்ற நிறுவனங்கள், தங்களுடைய உலகளாவிய செயல்பாடுகளை இங்கே மேற்கொள்ள தெரிவு செய்துள்ளது, சென்னை, ஒரு விருப்பத் தேர்வு இடமாக ஆகிவருகிறது என்பதைக் காட்டுகிறது. இந்த வலுவான கொள்கைத் திறன்களின் அடிப்படையில் நாம் மேலும் செயல்படுவோம்.

29. உலகத் தரம் வாய்ந்த சாலைகள், குடிநீர் வழங்கல், எரிசக்தி, வீட்டுவசதி, நகரப் பகுதிப் பணிகள், துறைமுகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போதிய அளவிலான மற்றும் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், இம்மாநிலத்தில் பெருமளவில் தொழில் முதலீடுகளைக் கவருவதற்கான திறவுகோலாக அமைகின்றன. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உலகத் தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தனிக் கவனம் செலுத்தப்படும். ரூபாய் 1,900 கோடி மதிப்பீட்டுச் செலவில், உலக வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் அனுமதி வழங்கப்படும் இறுதி நிலையில் உள்ளது. இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்படும். உலகத் தரம் வாய்ந்த சாலைகளை உருவாக்குவதில் பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் வகையில் சாலை மேம்பாட்டு நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். 2001 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் சாலைகளைச் சீரமைப்பதில் ஏற்பட்ட பின்னடைவுகளை சரி செய்வதற்காக, 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்கு முன்னர், ரூபாய் 90 கோடி செலவில் 2,500 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டமொன்றையும், 2003–2004 ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 180 கோடி செலவில், மேலும், 5,000 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். சேதுசமுத்திரம் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

**"சென்னைப் பெருநகர்ப் பகுதியை அனைத்து வகையிலும் மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். புதியதொரு நிருவாக நகர் உருவாக்கத் திட்டம், மெரினா நகர்ப்பகுதி புதுப்பிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பது இவ்வகையில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும்."**

30. பருவமழைகள் பொய்த்ததால், புனல் மின் நிலையங்களுக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கங் களிலுள்ள நீரின் அளவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், அனைத்து வகையைச் சேர்ந்த நுகர்வோருக்கும் மின்சக்தி சீராக வழங்கப்பட்டு வருகிறது. மின்சாரம் வழங்கும் தரமும் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப் பட்டுள்ளது. பத்தாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மின் ஏற்பாட்டு முறையை மேம்படுத்துவதற்கும், மின் சக்தி வழங்கும் தரத்தை உயர்த்துவதற்கும் ரூபாய் 8,000 கோடி மூலதனச் செலவில், தமிழ்நாடு மின் வாரியம், திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும். பெருகிவரும் மின் தேவையை நிறைவு செய்யும் வகையில், தனியார் துறையில் புதிய மின் உற்பத்தித் திறன்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தனியார் துறையில், 250 மெகா வாட் திறன் கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம், 2002ஆம் ஆண்டு டிசம்பரில் செயல்படத் தொடங்கியுள்ளது. எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மற்றொரு 100 மெகா வாட் திறனுடைய தமிழ்நாடு மின்வாரியத்தின் புதிய மின் உற்பத்தி நிலையம், 2003ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலிருந்து செயல்படவுள்ளது.



31. இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு, தனி கவனம் செலுத்தப்படும். பணிகள்சார் துறைகளில் சுற்றுலாத் துறையை ஒரு முக்கிய உந்துசக்தியாக நாம் கருதுகிறோம். முக்கிய சுற்றுலாப் பாதைகளில் தகுந்த அடிப்படை வசதிகள் செய்தல், பொதுத் துறையோடு தனியார் துறையைப் பங்கேற்கச் செய்வதன் மூலம் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விளம்பர உத்திகளை கையாளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி சுற்றுலாத் தொழில் மேம்படுத்தப்படும். ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் மீதான ஆடம்பர வரிகளையும், கேளிக்கையுடன் இணைந்த அறிவுப் பூங்காக்கள் (Amusement and Theme Parks) மீதான கேளிக்கை வரியையும் குறைக்க அண்மைக் காலத்தில் அரசு எடுத்த முடிவு, மாநிலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவினை ஊக்குவிப்பதாக அமைகிறது.

32. சென்னைப் பெருநகர்ப் பகுதியை அனைத்து வகையிலும் மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். புதியதொரு நிருவாக நகர் உருவாக்கத் திட்டம், மெரினா நகர்ப்பகுதி புதுப்பிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டிருப்பது இவ்வகையில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். ஓராண்டு, மூவாண்டு மற்றும் பத்தாண்டு கால அட்டவணை கொண்ட சென்னை அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை தயாரிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பது அறிந்து நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் இத்திட்டம், சென்னை மாநகரம் தென் மாநிலத்தின் முன்னோடி நகரம் என்ற நிலையை மீண்டும் எய்தச் செய்யும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பருவமழைக் காலத்தில் கடந்த ஆண்டு இந்நகரம் எதிர்நோக்கிய எல்லாப் பிரச்சனைகளுக்கும், குறைபாடுகளுக்கும் முழுத் தீர்வு கிடைக்கும்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

33. சுற்றுச்சூழல் வளம் காக்கும் அதே நேரத்தில் வளர்ச்சிப் பணிகளுக்கான அத்தியாவசியத் தேவைகளையும் அடையும் ஒருங்கிணைந்த உத்தி ஒன்றை இவ்வரசு உருவாக்கி வருகிறது. நீடித்த வகையிலான மேம்பாடு, நமது கோட்பாடாக இருக்கவேண்டும். மழைநீர் சேமிப்பு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் முயற்சிகள் நகரப் பகுதிகளில் ஒரு சமூக இயக்கமாகவே உருவாகியுள்ளது. நீரை மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தும் வகையில், அதிக அளவில் நீரைப் பயன்படுத்தும் பொதுக் கட்டடங்கள் அனைத்திலும் சவ்வூட்டின் மூலம் நீரைச் செறிவூட்டும் செயல்முறைக் கலன்களை (reverse osmosis plants) அமைப்பதையும் இவ்வரசு ஊக்குவிக்கும். நமது நகர மற்றும் ஊரகப் பகுதிகளின் இயற்கை வனப்பைக் கெடுக்கின்ற வகையிலும், சுகாதாரத்திற்குக் கேடு ஏற்படுத்தும் வகையிலும், பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பைகளையும், ஏனைய பொருட்களையும் வெளியே தூக்கி எறிவதைத் தடுப்பதற்காக எளிய அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்ட சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும். இம்மாநிலத்தில் அரிதாகக் கிடைக்கின்ற நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கும், அரசு தொடங்கிய இந்த இயக்கத்தில் பங்கேற்குமாறு நான் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

34. சீர்திருத்த நடைமுறைகளினாலும், நிதி மற்றும் நிர்வாக மேலாண்மையில் மாறுதல் நடவடிக்கைகளினாலும், ஏற்படக்கூடிய கடுமையான பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு, முனைப்பானதொரு சமூகப் பாதுகாப்புத் திட்டம் அவசியமாகும். இம்மாநில அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டம், வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை கண்ணியத்துடன் சமாளிக்க, தரமான சுகாதார வசதி, கல்வி வசதி ஆகியவற்றை அனைவருக்கும் கிடைக்கச் செய்து, பாதிக்கப்பட்ட, ஏலாமையுற்ற, வயது முதிர்ந்த மற்றும் முதியோருக்கு பாதுகாப்பு அளிக்க, ஊட்டச் சத்து மற்றும் உதவித் தொகை வழங்கல் திட்டம் போன்ற மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் கொண்டுள்ளது. நம்மை எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதித் தட்டுப்பாடு களையும் பொருட்படுத்தாமல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை வலுவுடன் செயல்படுத்த, இந்த அரசு நிலைமாறாத வகையில் முடிவு எடுத்துள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

35. 2001ஆம் ஆண்டிற்கு முன்னர் பிறப்பு வீதம், சிசு இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம் போன்ற முக்கிய சுகாதாரக் குறியீட்டு அளவுகள் தேக்கநிலையை அடைந்துள்ளது குறித்து இம்மாநில அரசு, அதிக கவலை கொண்டுள்ளது. இப்போக்கு சரி செய்யப்பட்டு விரைவான முன்னேற்றம் உறுதிசெய்யப்பட வேண்டியுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் ரூபாய் 650 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ள சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம், விரிவான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம், வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். தரமான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் தற்போதுள்ள சுகாதாரத் துணை மையங்கள் நிலையுயர்த்தப்படும். ஊரகப் பகுதிகளில், பயன்தரும் வகையில் சுகாதார நலப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், கிராம சுகாதார செவிலியர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். தொடக்கச் சுகாதார மையங்களை நிலையுயர்த்துவதற்குரிய திட்டம், படிப்படியாக செயல்படுத்தப்பட்டு இந்த ஆண்டில் இத்தகைய 58 மையங்கள் நிலையுயர்த்தும் பொருட்டு, எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தேனி, வேலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொலைசாதன மருத்துவச் சிகிச்சைத் திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது, தொலைதூர மையங்களிலுள்ள நோயாளிகள் தரமான மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற உதவும்.

36. ஒரே சமயத்தில் தலைமைச் செயலாளர் மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், வஃக்ப் வாரியத் தலைவர், சிறுபான்மை வகுப்பினர் நல ஆணையத் தலைவர், ஆகிய முக்கிய பதவிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பது முன் எப்போதும் இல்லாதது. மேலும், உண்மையான இரு பாலினர் நேர்மை நெறியை நிலைநிறுத்துவதிலும் மகளிருக்கு அதிகாரம் வழங்குவதிலும் அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டினை எடுத்துரைப்பதற்கு இது ஒரு மாபெரும் சான்றாகும். திருக்கோயில்களில் பெண்கள் நிருவாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் முதல் முறையாக அனைத்து மகளிர் அதிரடிப்படைப் பிரிவு ஒன்று இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள, நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்ட மன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்ட முன்வடிவை, விரைவில் நிறைவேற்ற இந்த அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தும்.

37. தமிழ்நாட்டில், மகளிருக்கு அதிகாரம் அளிப்பது என்பது அரசின் உயர் பதவிக்கு நியமனம் செய்தல் என்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. சுமார் 20 இலட்சம் மகளிரைக் கொண்ட, 1.15 இலட்சத்திற்கும் அதிகமான மகளிர் சுயஉதவிக் குழுக்களின் திறம்பட்ட செயல்பாடும், நிதி நடவடிக்கைகளில் நம்பகத்தன்மையும், நாம் மேற்கொண்ட மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களின் மகத்தான வெற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், சென்னைக்கு அருகில் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட, மகளிர் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, திண்டுக்கல் மாவட்டத்தில் தொடங்கக் கருதியுள்ள சுற்றுச்சூழலுடன் இணைந்த தொழில் நிறுவனங்களடங்கிய பூங்கா ஆகியவை மகளிர் தொழில் முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை அளிக்கும். மகளிர் உதவி அமைப்புகளைத் தொடங்குதல், நடமாடும் ஆலோசனை மையங்களைத் தொடங்குதல், மகளிர் நீதிமன்றங்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மகளிரிடையே சமூக மற்றும் சட்டப் படிக்கான பாதுகாப்பை அதிகரிப்பதில் பேருதவியாக அமையும். தமிழ்நாட்டில் மகளிருக்கு அதிகாரம் அளிப்பது என்பது உண்மையிலேயே நிறைவேறியுள்ளது என்று இங்கே குறிப்பிடுவது சரியாகும்.

38. குழந்தைகள் பிழைத்திருப்பதை உறுதி செய்வதுடன் அவர்கள் வலுவான, ஆரோக்கியமான மனநிலையுடன், உடல் வளர்ச்சியடைவதையும் உறுதிசெய்வதில் தமிழ்நாடு பீடுநடைபோடும் தயார்நிலையில் உள்ளது. நிதி நெருக்கடிகள் சுமையாக இருந்தபோதிலும், ஆண்டொன்றுக்கு ரூபாய் 20.98 கோடி கூடுதல் செலவில், காய்கறிகள், சுவையூட்டும் பொருட்கள் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டை, பயனீட்டாளர் ஒருவருக்கு 23 பைசாவிலிருந்து 35 பைசாவாக அதிகரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதோடு, அதைச் செயற்படுத்தியும் உள்ளார்கள். சமூகநலத் துறைகள் குறித்த நடப்பு ஒதுக்கீடுகளைக் கூட குறைக்க வேண்டிய தவிர்க்க இயலாத சூழ்நிலை உள்ளபோதும், ஊட்டச் சத்துமிகுந்த உணவு அளிப்பதற்கான நிதியொதுக்கத்தை அதிகரித்துள்ளதன் மூலம் இவ்வரசு தன் அரிய துணிவை வெளிப் படுத்தியுள்ளது. பெண் சிசுக்கொலை எனும் கொடிய பழக்கத்திற்கு எதிராக சமூக உணர்வைத் தட்டி எழுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற ஒப்பற்றத் திட்டங்கள் மூலம் பெண் குழந்தைகளுக்கு சிறந்ததொரு வாழ்க்கை அமைய வாய்ப்பை அளிப்பதில் அரசின் முயற்சிகள் சரித்திரத்தில் சிறப்பு முத்திரைகளாக அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளன.

39. அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்கிற இலக்கை எய்துவதற்காக, 1994 ஆம் ஆண்டு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 33/1995) இயற்றிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையேச் சாரும். இன்று, தமிழ்நாடு, மக்கள்தொகை வளர்ச்சியில் நிலையான தன்மையை நோக்கி முன்னேறுங்கால், புதிய பள்ளிகளைத் தொடங்குதல் என்பதிலுள்ள முக்கியத்துவம் மாறி, 100 சதவீதக் குழந்தைகள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும் அக்குழந்தைகளை தொடர்ந்து பள்ளிகளில் தக்கவைத்துக் கொள்வதற்குமாக முக்கியத்துவம் மாற்றி அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் தொடர்ந்து செயல்படும் பள்ளி மதிய உணவுத் திட்டம், பள்ளிப் படிப்பில் குழந்தைகளைத் தக்கவைப்பதை உறுதிசெய்கிறது. பாலர்பள்ளி சிறார்கள் மற்றும் பள்ளி செல்லும் வயதுடைய சிறார்களுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கான மொத்த முதலீடு நடப்பாண்டில் ரூபாய் 645.76 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டம் முழுவதையும் தேசிய திட்டமாகக் கருதி 100 சதவீத நிதியுதவியை மானியமாக அளிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் தரமான கல்வி அளிக்கப்படுவதை உறுதிசெய்ய, இவ்வரசு, ஒரு பெருந்திட்டத்தை வகுத்துள்ளது.

40. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு பட்டமேற்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்க இந்த அரசு, தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த கல்விக்கடன் உதவியை 2002–2003 ஆம் ஆண்டிலிருந்து மானியமாக மாற்றுவது என்ற அரசின் முடிவு அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டம் அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது என்பது பெரும் மன நிறைவை அளிக்கக்கூடிய ஒன்றாகும். அவர்களுக்கு தரமான கல்வி அளிப்பதற்கான ஏற்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மாணவரில்லங்கள் கட்டுவதற்கான பெருந்திட்டம் ஒன்றை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இது, 2003ஆம் ஆண்டிலும் தொடரும்.

41. இவ்வரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கான திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இந்த பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 5,000 பயனீட்டாளர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 10,000 வீதம் மொத்தம் ரூபாய் 5 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பிரிவுகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் பெண்களுக்கு, சிறு வியாபாரம் தொடங்குவதற்காக, சிறுகடனாக ரூபாய் 20 கோடி வழங்கப்பட்டு வருகிறது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 1000 இளைஞர்களைத் தொழில் முனைவோர்களாக மேம்படுத்த ரூபாய் 2.50 கோடி நிதியுதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

**"வளர்ச்சித் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், அவைகள் பரவலாக்கப்படுவதற்கும், சிறந்த நிருவாக நடைமுறைகள் பெரிதும் பயனளிக்கும் என்று இவ்வரசு உறுதியாக நம்புகிறது."**

42. வளர்ச்சித் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், அவைகள் பரவலாக்கப் படுவதற்கும், சிறந்த நிருவாக நடைமுறைகள் பெரிதும் பயனளிக்கும் என்று இவ்வரசு உறுதியாக நம்புகிறது. தூய்மையான, ஒளிவு மறைவற்ற பங்கேற்பு ரீதியிலான நிருவாகத்தை ஏற்படுத்த, தகவல் தொழில்நுட்பவியலின் அளப்பரிய வாய்ப்புகள் பயன்படுத்திக் கொள்ளப்படும். 2003 ஆம் ஆண்டில் அனைத்து வட்ட அலுவலகங்களிலும் தொடுதிரை தகவல் மையங்கள்(Touch Screen Kiosks) ஏற்படுத்தப்படும். இவ்வரசு, ஊழலுக்கு எதிரியாக தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளதுடன், தவறிழைக்கின்ற அதிகாரிகளுக்கு இடமளிக்காது செயல்படும். வெளிப்படையான மற்றும் பங்கேற்பு ரீதியிலான நிருவாகத்தை நிலைநாட்ட வழிசெய்யும், புதியதொரு, தகவல் பெறும் உரிமை சட்ட முன்வடிவு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

43. தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு குறித்து அரசு உரிய கவனம் செலுத்தும். மாண்புமிகு முதலமைச்சர், 1,008 ஏழை தம்பதியினரின் திருமணத்தை முன்னின்று நடத்திவைத்து, அவர்களுக்கு அடிப்படை வீட்டு உபயோகப் பொருட்களையும் வழங்கினார்கள். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலை, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை எடுத்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள், மாநில அரசு உரியகாலத்தில் தலையிட்டதால் கைவிடப்பட்டன. திருக்கோயில்களில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த அன்னதானத் திட்டம், மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டம், தற்பொழுது 144 திருக்கோயில்களில் செயற்படுத்தப் பட்டு வருகிறது. இந்த அன்னதான திட்டத்தை, மேலும் பல திருக்கோயில்களுக்குப் படிப்படியாக நீட்டிக்க இவ்வரசு திட்டமிட்டு வருகிறது.

44. 2002 அக்டோபர் திங்களில் அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தை, முறையாகவும் மதிநுட்பத்துடனும் கையாண்டதற்காக இவ்வரசைப் பாராட்ட வேண்டும். மாநில அரசு எதிர்த்துப் போராட வேண்டியுள்ள கடுமையான நிதி இடர்பாட்டினைச் சமாளிப்பதில் தங்களுடைய முழு ஒத்துழைப்பை நல்குமாறு அனைத்துப் பணியாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

45. இந்த அரசு, 2001 மே திங்களில், ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, பல்வேறு பிரம்மாண்டமான பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வந்துள்ளது. நிதிப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள கடும் இடர்பாடு, தொடர்ந்து இரு பருவமழை பொய்த்ததாலும், கருநாடக மாநிலம், காவிரி நீரில் நமக்கு உரிமை உள்ள பங்கைத் தர மறுத்ததாலும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பு ஆகியவை, எந்த அரசின் உறுதிப்பாட்டையும் குலைத்து, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் எஃகினையொத்த உறுதியும், கடும் இடர்பாடுகளை எதிர்கொண்ட நிலையிலும், அவரின் அயர்ந்து தளர்ந்துவிடாத தன்மையும், மாநிலத்தில் வளர்ச்சி நிருவாகம் சீரழியாமல் தடுத்துள்ளன.

46. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வலுவான, செயல்துடிப்புமிக்க தலைமையின் கீழ் இந்த அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு மிகச் சிறந்தவைகள் அனைத்தும் கிடைக்கச் செய்வதில், வெற்றிபெறும் என்று நான் உறுதிபட நம்புகிறேன். இம் மாநில மக்களின் நலனுக்காகப் பணியாற்றும் உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– மேதகு தமிழக ஆளுநர்*
*திரு.பெ.ஶ்ரீ.ராமமோகன் ராவ் அவர்கள்*
*23.1.03 அன்று சட்டமன்றப் பேரவையில்*
*ஆற்றிய உரை.*



# மக்களின் நம்பிக்கையே நமக்கு வலிமைதரும் சக்தி



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்
மீது நடந்த விவாதத்திற்கு பதில் அளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை 31.1.2003

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கடந்த 3 நாட்களாக நடைபெற்ற விவாதத்திற்கு இப்போது எனது பதிலுரையை அளிக்க விழைகின்றேன்.

இன்றைக்கு இங்கே ஒரு விந்தையான காட்சியை காண்கின்றேன். எதிர்க்கட்சி வரிசைகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. இப்படி அவைக்கு வராமல் புறக்கணித்து விட்டால் காலியாக எதிர்க்கட்சி வரிசைகளைப் பார்த்தால் நான் கவலை கொள்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கருதுவார்களேயானால் அவர்கள் ஏமாந்து தான் போவார்கள். ஏமாற்றம் தான் அடைவார்கள். இங்கே காலியாக இருக்கின்ற இந்த வரிசைகளைக் கண்டு நான் சிறிதும் கவலைப்படவில்லை. காலியாக இந்த எதிர்க்கட்சி வரிசைகள் எதனைக் காட்டுகின்றன. இரண்டு விஷயங்களை எல்லோருக்கும் காட்டுகின்றன. ஒன்று நம்மை எதிர்ப்பதற்கு தமிழ்நாட்டில் யாருமே இல்லை என்பதை காட்டுகின்றன. நம்மை எதிர்க்கும், திறமையோ, திராணியோ, துணிவோ யாருக்கும் இல்லை என்பதை இந்த காலியான வரிசைகள் காட்டுகின்றன. இரண்டாவதாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு வாக்களித்து அனுப்பிய தொகுதி மக்களுக்கு துரோகம் இழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த காலியான வரிசைகள் காட்டுகின்றன. இங்கே நான்

எனது உரையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் யாருக்காக இந்த உரையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன். நம் மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக இந்த உரையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே வந்து அமர்ந்தால் என்ன அமராவிட்டால் என்ன எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்தால் என்ன வராவிட்டால் என்ன. இவர்களுக்காக நான் இங்கே பேசவில்லை. நான் தமிழ்நாட்டு மக்களுக்காக பேசுகிறேன். என்னுடைய பேச்சு தொலைக்காட்சி மூலமாக மக்களுக்குப் போய்ச் சேரும். தொலைக்காட்சி மூலமாக என்று ஏன் சொல்லுகிறேன். பத்திரிகைகளில் பல வகை உண்டு. பத்திரிகைகளில் அவர்களுடைய உரிமையாளர்களின் பாலிசி – கொள்கை என்னவோ அதற்கேற்ப தான் செய்திகளை வெளியிடுவார்கள். நான் நிருபர்களைக் குறை சொல்லவில்லை. நான் நிருபர்களை குறை சொல்வதே கிடையாது. பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? நிருபர்கள் பல பேருக்கு இந்த அரசு மீது நல்லெண்ணம் உண்டு. என் மீது நல்ல மதிப்பும் உண்டு. அவர்கள் நல்ல செய்திகளை உண்மையான செய்திகளை உள்ளபடியே எழுதிக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பத்திரிகை அலுவலகத்தில், எடிட்டோரியல் டெஸ்க்கில் எல்லாம் மாறிவிடுகிறது. ஆகவே பத்திரிகைகள் மீது நான் என்றைக்கும் நம்பிக்கை வைத்தது இல்லை. இப்போதும் வைக்கவில்லை.

தொலைக்காட்சி இருக்கின்றது. அந்தத் தொலைக்காட்சி மூலமாக இங்கே நான் ஆற்றுகின்ற உரைகளும் கருத்துக்களும் மக்களுக்குப் போய்ச் சேரும். அது தான் எனக்குத் தேவை. அது எனக்குப் போதும். இந்த சட்டமன்றப் பேரவை கூடுகிறது என்று சொன்னால் அது யாருக்காகக் கூடுகிறது என்பதை அனைத்து உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும், உணர வேண்டும். குறிப்பாக எதிர்க்கட்சி வரிசையில் அமரக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இந்த அவைக்குச் செல்லாவிட்டால் முதலமைச்சர் வருத்தப்படுவார். ஏமாற்றம் அடைவார். கவலை கொள்வார் என்று நினைக்கிறார்கள். இந்த அவை எனக்காகவா கூடுகிறது? இந்த அவை எனக்காகவும் கூடவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவும் கூடவில்லை. அமைச்சர்களுக்காகவும் கூடவில்லை. எந்தத் தனிப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்காகவும் கூடவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்களுக்காகவும் கூடவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காகத்தான் இந்த அவை கூடுகிறது. மக்கள் பிரச்சினைகள் இங்கே விவாதிக்கப்பட வேண்டும். மக்கள் பிரச்சினைக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். மக்களுக்காகத் திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் இந்த அவை கூடுகிறது. அண்மைக்காலமாக – குறிப்பாக இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல், நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்க்கின்றபோது ஒரு ஆழமான சந்தேகம் எழுகிறது. தமிழ்நாட்டில் ஒரு பிரதான எதிர்க்கட்சி இருக்கின்றதா? இந்த சட்டமன்றப் பேரவையில் ஒரு பிரதான எதிர்க்கட்சி இருக்கின்றதா? என்ற ஐயம் எழுகிறது. பிரதான எதிர்க்கட்சி என்று தங்களைத் தாங்களே கூறிக் கொள்பவர்கள், இந்த அவையின் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கிறார்கள். நாம் கேட்கின்ற கூர்மையான கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாத போது இந்த அவையையே புறக்கணித்துவிட்டு ஓட்டம் பிடிக்கிறார்கள் – வெளி நடப்பு செய்கிறார்கள். இந்த அவைக்குள்ளே இருந்து அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்ற மறுக்கிறார்கள். இந்த சட்டப் பேரவைக்குள்தான் அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றத் தவறுகிறார்கள் என்றால், வெளியே கூட அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றத் தவறிவிட்டு தேர்தலில் கூட நிற்கமாட்டோம் என்று தேர்தலையும் புறக்கணிக்கிறார்கள்.

நாங்களும் எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறோம்.

> “இந்த அவை எனக்காகவா கூடுகிறது? இந்த அவை எனக்காகவும் கூடவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவும் கூடவில்லை. அமைச்சர்களுக்காகவும் கூடவில்லை. எந்த தனிப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்காகவும் கூடவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்களுக்காகவும் கூடவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காகத்தான் இந்த அவை கூடுகிறது. மக்கள் பிரச்சனைகள் இங்கே விவாதிக்கப்பட வேண்டும். மக்கள் பிரச்சனைக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். மக்களுக்காக திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் இந்த அவை கூடுகிறது.”

குறிப்பாக 1996 முதல் 2001 வரை நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஒரு தேர்தலைக் கூட நாங்கள் புறக்கணித்தது இல்லையே... ஒரு தேர்தலைக்கூட சந்திக்கப் பயந்து நாங்கள் ஓட்டம் பிடித்தது இல்லையே... வெற்றியோ தோல்வியோ அதைப்பற்றி கவலைப்படாமல் தேர்தல் என்று வந்தால், இடைத்தேர்தல் என்று வந்தால் தவறாமல் ஒவ்வொரு தேர்தலிலும் நாங்கள் போட்டியிட்டு இருக்கிறோம். தேர்தலைக் கண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே பயந்தது இல்லை. தேர்தலைச் சந்திக்கப் பயந்து ஓட்டம் பிடித்தது இல்லை.



ஆனால் இன்றைய தினம் திமுக நிலையை பார்க்கின்றபோது உள்ளபடியே சொல்லவேண்டுமானால் பரிதாபமாக இருக்கிறது. இன்றைக்கு திமுக சட்டமன்றத்திற்குள்ளேயும் செயல்படமுடியவில்லை. சட்டமன்றத்திற்கு வெளியேயும் செயல்படமுடியவில்லை. ஒரு அரசியல் கட்சி என்று சொல்லிக் கொள்கிற ஒரு இயக்கம், ஆற்ற வேண்டிய எந்தக் கடமையையும் அவர்கள் செய்யவில்லை என்று சொன்னால் அதற்கு என்ன காரணம்? தலைமை சரியாக இல்லை. தலைமை சரியில்லை.

திமுக தலைவர் என்ன சொல்கிறார். அவர் பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார். இனிமேல் இலக்கியத்திற்கு தான் முதலிடம் அளிப்பேன். அரசியலுக்கு இரண்டாவது இடம் தான் என்று கூறிவிட்டார். இதை நான் சொல்லவில்லை. திமுக தலைவர் கருணாநிதியே சொல்லியிருக்கிறார். பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். இனிமேல் இலக்கியத்திற்குத் தான் முதலிடம் என்று சொன்னால் அவர் ஏன் இன்னும் எம்.எல்.ஏ பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்?

இன்னும் ஏன் திமுக கட்சித் தலைவர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார். அரசியலில் ஈடுபடுபவர்கள் அரசியலில் இருப்பவர்கள்குறிப்பாக ஒரு இயக்கத்திற்கே ஒரு கட்சிக்கே தலைவராக இருப்பவர்கள் அரசியலுக்குத்தான் முதலிடம் தர வேண்டும். அது தான் அவர்களுடைய கடமை. அதைத்தான் அவர்களிடம் இருந்து இந்த நாடு எதிர்பார்க்கிறது. அதைத்தான் அவருடைய தொண்டர்கள் அவரிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், கட்சித் தலைவராக இருப்பவர் வெளிப்படையாகவே சொல்கிறார். எம்எல்ஏ ஆக இருந்து கொண்டு அவர் சொல்கிறார். தொகுதி மக்களை மறந்து விட்டு அவர் சொல்கிறார். இனிமேல் எனக்கு இலக்கியம் தான் முக்கியம். என்னைப் பொறுத்தவரை இலக்கியத்திற்குத் தான் முதலிடம். அரசியலுக்கு இரண்டாமிடம் என்கிறார். இந்த சட்டமன்றத்திற்கு வருவது இல்லை. தொகுதி மக்கள் பிரச்சினைகளைப் பற்றி இங்கே பேசுவது இல்லை. அப்போது அவருக்கு வாக்கு அளித்து வெற்றி பெறச் செய்த தொகுதி மக்களை யார் கவனிப்பது.

சரி கட்சித் தலைவரே இப்படி என்று சொன்னால், அவருக்கு அடுத்தபடியாக அந்தக் கட்சியின் தலைவர் என்று யாரைக் கருதுகிறார்கள். அவருடைய மகனை தளபதி என்று அழைக்கிறார்கள். தளபதி என்பவர் யார்– தளபதி என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன ஒரு படைக்கு தலைமை ஏற்று படைக்கு முன்னால் நின்று, அந்தப் படையை நடத்துபவர் தான் தளபதி. ஆனால் இங்கே பார்க்கிறோம். அந்தத் தளபதி எப்போதாவது தான் இந்த அவைக்கு வருகிறார். வந்தால் முன்னால் அவருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமருவது இல்லை. ஒதுங்குகிறார். பதுங்குகிறார். எங்கோ பின் வரிசையில் அமர்கிறார். இந்தத் தளபதி எங்கே இருக்கிறார் என்று தேடி தேடி கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்தத் தளபதி இங்கே நடைபெறுகின்ற விவாதங்களில் பங்கு பெறுவதே இல்லை. அவருடைய அரசைப் பற்றி அவர்களுடைய முன்னாள் முதல்வரைப் பற்றி அவர்களுடைய தலைவரைப் பற்றி இங்கே குற்றச்சாட்டுகள் சொன்னால் கூட கட்சியில் உள்ள மற்றவர்கள் எழுந்து பதில் சொல்கிறார்களே தவிர, தளபதி எந்நேரமும் மவுனம் சாதிக்கிறார்.

தளபதி என்று சொல்லிக் கொண்டால் போதுமா படைக்கு முன்னால் நின்று எதிரிகளுக்கு முன்னால் நின்று தைரியமோடு வீரமாக படைக்கு வழி காட்டி வழி நடத்துபவர் தான் தளபதி.

அடுத்து வேறு யார் இருக்கிறார்கள். பேராசிரியர் அன்பழகன் அவர்கள். இந்த அவையில் பிரதான எதிர்க்கட்சியின் தலைவர். எதிர்க்கட்சித் தலைவர். அவர் பாவம் சாந்தமானவர். இப்படி சதா கூச்சல் போடுவது. குழப்பம் விளைவிப்பது. காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வது, ரகளை செய்வது இதெல்லாம் அவருக்கு பிடிக்காது ஒத்துவராது. சொல்லிப் பார்த்தார் அவர்கள் கேட்கவில்லை. திருந்தவில்லை. நமக்கு இந்த வம்பே வேண்டாம் என்று அவர் ஒதுங்கிவிட்டார். எப்போதாவது வருகிறார். ஒரு சடங்கு சம்பிரதாயம் போல, முன் வரிசையில் அமர்ந்து இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு ஒரு கும்பிடு போட்டுவிட்டு போய்விடுகிறார்.

அதனால் அவரும் இங்கே தலைமையேற்க வருவதில்லை. அடுத்து அங்கு இருக்கின்ற மூத்த தலைவர் யார். திரு ஆற்காடு வீராசாமி அவர்கள். அவர் பாவம் அவருக்கு என்ன பிரச்சினையோ தெரியவில்லை. இந்த அவைக்கு வருவதே இல்லை. 2001இல் இந்த அரசு புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட புதிதில் சில நாட்கள் இந்த அவைக்கு வந்து, சரியான விவரங்களைப் படித்துக் கொள்ளாமல், தவறான விளக்கங்களை எல்லாம் இங்கே தந்து, அதற்கான உரிய பதிலை வாங்கிக் கட்டிக் கொண்ட பிறகு, இங்கு வராமலேயே இருந்து விடலாம் என்று உடல் நிலையைக் காரணம் காட்டி அவர் ஒதுங்கிக் கொண்டார்.

அடுத்து இருக்கின்ற பெரியவர் அங்கு இருக்கின்ற முன்னாள் அமைச்சர் திரு கோ.சி மணி அவர்கள். அவரும் எப்போதாவது வருகிறார். அதிக நேரம் இங்கே அமருவது இல்லை. அதிகம் பேசுவதும் இல்லை. முடிந்தவரை மௌனமாக இருந்து விட்டு, சிறிது நேரம் இருந்து விட்டு அவரும் ஒதுங்கிச் சென்று விடுகிறார்.

அப்படியானால் அங்கு எஞ்சியிருக்கின்ற மூத்த தலைவர் வேறு யார். அவர்தான் பிரதான எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் திரு. துரைமுருகன். திரு துரைமுருகனுக்கு பாவம் பல சங்கடங்கள் இருக்கின்றன. அவர் மனதில் என்ன இருக்கின்றதோ தெரியாது. ஆனால் எதிரிலேயே அமர்ந்து இருப்பதால், நான்

பார்க்கிறேன். அவருக்குப் பல உபாதைகள், பல சங்கடங்கள் அவருக்கு நிறைய ஓய்வு தேவைப்படுகிறது. அதனால் அவர் என்ன நினைக்கிறார். தலைவரும் வர மாட்டேன் என்கிறார். தளபதியும் ஒதுங்கி ஓடி விடுகிறார். பேராசிரியரும் வரமாட்டேன் என்கிறார். ஆற்காடு வீராசாமி அவர்களும் ஒதுங்கி விடுகிறார். கோ.சி. மணியும் பேசமாட்டேன் என்கிறார். நான் மட்டும் ஏன் இங்கே நின்று மாட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதுகிறார்.

A Leader must lead from the front, A Leader must lead by example ஒரு தலைவர் என்று தன்னை சொல்லிக் கொள்பவர் முன்னால் நின்று ஒரு படையை வழி நடத்த வேண்டும். ஒரு தலைவர் என்று தன்னைத் தானே சொல்லிக் கொள்பவர் உதாரணத்தால் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். தானே ஒரு உதாரணமாக மற்றவர்களுக்கு திகழ வேண்டும். நான் காலை முதல் மாலை வரை இந்த அவையிலேயே அமர்ந்திருப்பதால் தான், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த அவையிலேயே இருக்கிறார்கள். என்னுடைய அமைச்சர் களும் இங்கேயே இருக்கிறார்கள். நானே இந்த அவைக்கு வரவில்லை என்று சொன்னால், நானே ஒதுங்கிக் கொண்டால், என்னுடைய அமைச்சர்களும், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே வந்து நாள் முழுவதும் அமர வேண்டும் என்று நினைப்பது எப்படி நியாயமாகும்.

ஆகவே இது தான் திமுகவினருக்கு இருக்கின்ற சங்கடம். குறிப்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு இருக்கின்ற சங்கடம். ஆட்சியில் இருந்த போது அவர்களுடைய தலைவர் திரு. கருணாநிதி பல தவறுகளைச் செய்து இருக்கிறார். அவற்றை எல்லாம் வரலாறு கூறுகிறது. அந்தத் தவறுகளை நாம் சுட்டிக் காட்டுகின்ற போது அதற்கு திரு. துரைமுருகன் அவர்களால் பதில் சொல்லமுடியவில்லை. தன்னுடைய தலைவர் செய்த தவறுகளை நியாயப்படுத்த முடியவில்லை. அவர் செய்தது தவறு என்று அவருக்கே தெரிகிறது. ஆனால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. அதனால் என்ன சொல்கிறார். என்ன செய்கிறார். ஏதாவது ஒரு சின்ன வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, ஒரு சின்ன காரணத்தைப் பிடித்துக் கொண்டு, அதைப் பெரிதாக்கி வெளிநடப்பு செய்கிறோம் என்று அறிவித்து விடுகிறார். இன்னும் அங்கே இருக்கின்ற சில இள ரத்தங்களுக்கு வெளி நடப்பு செய்ய விருப்பம் இல்லை. இவருக்கு என்ன என்று சொன்னால் வெளி நடப்பு என்று அறிவித்துவிட்டால் வெளியே போய் விடலாம். ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். திரும்ப இங்கே வரவேண்டியது இல்லை. எவ்வளவு சீக்கிரம் இடத்தைக் காலி செய்து போகலாம் என்று அவர் பார்க்கிறார். அதனால் தான் பல முறை இந்தக் காட்சியைக் காணுகிறோம். எதிர்க்கட்சி துணைத் தலைவர் வெளிநடப்பு என்று அறிவித்த பிறகும் மற்றவர்கள் இங்கே நின்று வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போக விருப்பம் இல்லை. ஆனால் இவர் வெளி நடப்பு என்று அறிவித்துவிடுவதால், வெளி நடப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.



“நீங்கள் ஒரு முயற்சி செய்து அதில் தோல்வி அடைந்தால், உங்களுக்கு ஏற்படக்கூடியது ஏமாற்றம் அல்லது வருத்தம் அவ்வளவுதான். அதோடு போய்விடும். ஆனால் நீங்கள் முயற்சியே செய்யவில்லை என்றால் உங்களுக்கு எதிர்காலமே கிடையாது. அழிவுதான்.”

இன்னும் சில நேரங்களில் என்ன செய்கிறார்கள். வேண்டுமென்றே ரகளை செய்து, விதிமுறைகளுக்கு மாறாக, பேச கூடாதவைகளை எல்லாம் பேசி மாண்புமிகு பேரவைத் தலைவரை சூழ்ந்து கொண்டு, இந்த அவையின் நடவடிக்கைகளை நடைபெற விடாமல் இடையூறு செய்து கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களே அவர்களை வெளியேற்றியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்துகிறார்கள்.

ஒரு நாள் வெளிநடப்பு அடுத்த நாள் ரகளை. அப்போது பேரவைத் தலைவர் வெளியேற்றியே ஆக வேண்டும். பத்திரிகைகளில் விளம்பரம் குண்டுகட்டாக தூக்கி வெளியே போட்டார்கள் என்ற செய்தி. இதை தவறாமல் உங்களுக்கும் போரடிக்காமல் பத்திரிகைகள் வெளியிட்டு கொண்டே இருக்கின்றன.

ஆகவே, திமுகவின் சங்கடம் இன்றைக்கு சரியான தலைமை இல்லை என்பது தான்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் திரு எஸ்.ஆர்.பி அவர்கள் அவர்களுடைய கட்சியின் பேரவைத் தலைவர். எப்படி அரசியல் நடத்துவது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே சிறு சிறு விஷயங்களை எல்லாம் பெரிதாக்கி, அவரும் இங்கே கூச்சல் போடுகிறார். எடுத்ததற்கெல்லாம் வெளி நடப்பு செய்கிறார்.

நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசிய பேச்சிற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தார். அதற்கு வெளி நடப்பு செய்கிறேன் என்று சொன்னார். ஒரு காலத்தில் எல்லோரும் ஒரே இயக்கத்தில் இருந்தார்கள். ஆரம்பத்தில் எல்லோரும் காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் த.மா.கா.விற்கு சென்றார்கள். அன்றைய தினம் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசிய பேச்சு அவர்களுக்கு எல்லாம் தேனாக இனித்தது. இன்றைக்கு அவர் பேசுகிற பேச்சு வேம்பாகக் கசக்கிறது. டாக்டர் குமாரதாஸ் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, ஒரு வேடிக்கையான காட்சி இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது அவைக் குறிப்பில் இடம் பெறவில்லை. பேரவைத் தலைவர் அதைக் கவனித்தாரோ இல்லையோ தெரியவில்லை. எதிரிலே நின்று கொண்டு இரண்டு பேர், ஒருவர் திமுகவைச் சேர்ந்த பரிதி இளம்வழுதி இன்னொருவர் காங்கிரசைச் சேர்ந்த ஞானசேகரன். அதில் குறிப்பாக பரிதி இளம் வழுதி என்னைப் பார்த்து, இவர் முன்பு உங்களைப் பற்றி இந்த அவையில் என்னென்ன பேசினார் தெரியுமா? அவைக்குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். உங்களைப் பற்றி என்னவெல்லாம் பேசியிருக்கிறார் என்று தெரியுமா? என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார். இதையே ஞானசேகரனும் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்களுக்கு என்னுடைய பதில் இது தான். அன்றைய தினம் டாக்டர் குமாரதாஸ் என்ன பேசியிருந்தாலும், அது அவருடைய சொந்தக் கருத்து, இன்றைய தினம் டாக்டர் குமாரதாஸ் என்ன பேசினாலும், அதுவும் அவருடைய சொந்தக் கருத்து. அதற்கும் நான் காரணமல்ல. இதற்கும் நான் காரணமல்ல. எந்த உறுப்பினருக்கும், எந்த மாண்புமிகு உறுப்பினருக்கும் இந்த அவையில் அவருடைய கருத்தைச் சொல்ல உரிமை உண்டு. சுதந்திரம் உண்டு. அந்த சுதந்திரத்தை டாக்டர் குமார தாஸ் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அதற்காகத்தான் சொல்கிறேன். அன்றைய தினம், திரு எஸ்.ஆர்.பி அவர்களும், திரு ஞானசேகரன் அவர்களும் ஒரே இயக்கத்தில் இருந்த போது, அன்றைய தினம் டாக்டர் குமாரதாஸ் பேசிய பேச்செல்லாம், எப்படிப்பட்ட பேச்சாக இருந்தாலும் அன்றைக்கு அவர்களுக்கு இனித்தது. இன்றைக்கு அரசியல் ரீதியாக மாறுபடுவதால் அவர்கள் பேசுகிற பேச்சு வேம்பாகக் கசக்கிறது.

நான் எல்லோருக்கும் அறிவுரை சொல்லக் கூடிய தகுதியுடையவள் என்று என்னை நானே கருதிக் கொள்ளவில்லை. இருந்தாலும், எனக்கும் ஓரளவுக்கு இப்போது பொது வாழ்க்கையில் அனுபவம் ஏற்பட்டு இருப்பதால், சிலருக்கு சில அறிவுரைகளை கூறுவது தவறில்லை என்று கருதுகிறேன். திமுகவினருக்கு இந்த அவையின் வாயிலாக நான் கூற விரும்புகிற அறிவுரை என்னவென்றால்,

“You may be disappointed,
if you FAIL,

You are doomed, if you
don't TRY என்பதே ஆகும்.

நீங்கள் ஒரு முயற்சி செய்து அதில் தோல்வி அடைந்தால், உங்களுக்கு ஏற்படக்கூடியது ஏமாற்றம் அல்லது வருத்தம் அவ்வளவுதான். அதோடு போய்விடும். ஆனால் நீங்கள் முயற்சியே செய்யவில்லை என்றால் உங்களுக்கு எதிர்காலமே கிடையாது. அழிவுதான்.

இன்னும் சொல்கிறேன். இதெல்லாம் பெரிய மேதைகள் அறிவாளிகள் சொன்னது,

Failure is not the worst thing in the world, The very worst is not to try.

உலகிலேயே மோசமான ஒன்று இழிவான ஒன்று என்னவென்றால், அது தோல்வி அல்ல. முயற்சியே செய்யாமல் இருப்பது தான். இழிவான ஒன்று. அதனால் சட்டபேரவையின் விவாதம் ஆனாலும், வெளியே ஒரு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் ஆனாலும், முயற்சியே செய்யாமல் ஒதுங்கி பதுங்கி ஓடி விட்டால், ஓட்டம் பிடித்தால் உங்கள் இயக்கத்திற்கு எதிர்காலமே இருக்காது. ஆகவே நானும் ஒரு கட்சியின் தலைவர் என்ற முறையில் அந்தக் கட்சியின் தலைவருக்கு நான் சொல்கின்ற அறிவுரை. உங்கள் இயக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், முயற்சி செய்யுங்கள் ஓட்டம் பிடிக்காதீர்கள்.

திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே டாக்டர் குமாரதாஸ் பேச்சுக்கு ஆட்சேபம் தெரிவித்தபோது வேண்டுமென்றே என் மனதைப் புண்படுத்த வேண்டும் என்று இப்படி எல்லாம் பேசுகிறார். வேண்டுமென்றே ஆத்திரம் ஊட்டுவதற்காக இப்படியெல்லாம் பேசுகிறார் என்று சொன்னார். அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஒரு நிபந்தனை போட்டார். அதாவது, டாக்டர் குமாரதாஸ் எஸ்.ஆர்.பியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம். அதற்குப் பேரவைத் தலைவர் ஒத்துக்கொள்ளாததால் வெளிநடப்பு என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

எஸ்ஆர்பி அவர்களுக்கு இரண்டு விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்று எனக்கு ஆத்திரமூட்டுவதற்காகவே மாண்புமிகு உறுப்பினர் இப்படி பேசுகிறார் என்று சொன்னாரே, ஏன் எஸ்ஆர்பிக்கு இவ்வளவு அனுபவம் இருக்கிறதே, இவ்வளவு மூத்தவராக இருக்கிறாரே, இன்னும் ஏன் அவர் அந்த அளவுக்கு பக்குவப்படவில்லை. அவருக்கு ஏன் ஆத்திரம் வருகிறது?

இங்கே வருகின்ற எத்தனையோ எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வருவதே எனக்கு எப்படியாவது ஆத்திரமுட்டவேண்டும் என்பதற்காகத் தான். அவர்கள் தொகுதிப் பிரச்சினைகளையோ, மக்கள் பிரச்சினைகளையோ பேசுவதற்காக இங்கே வரவில்லை. எப்படியாவது முதலமைச்சரைத் தூண்டிவிட்டு அவருக்குக் கோபம் வரவழைக்க வேண்டும் என்பதற்காகவே பேசுகிறார்கள்.

தினந்தோறும் இங்கே சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெறும் போதெல்லாம், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு ஆத்திரமூட்டவேண்டும் என்பதற்காகவே சில செய்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் பேரவைத் தலைவரும் ஆத்திரப்படவில்லை. நானும் ஆத்திரப்படவில்லை. எஸ்ஆர்பி அவர்களால் ஆத்திரப்படாமல் ஏன் இருக்க முடியவில்லை.

நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு. இந்தத் திட்டம் சத்துணவு மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

30.1.2003 அன்றைய நிலவரப்படி 12,11,176 நபர்கள் இத்திட்டத்தில் பதிவு செய்து கொண்டு, 10,02,424 நபர்கள், அதாவது 83% பேர் உணவு உண்டுள்ளனர்.

ஏற்கெனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மதிய சத்துணவு திட்டம் மற்றும் குழந்தைகள், தாய்மார்கள், முதியோர் ஆகியோருக்கான சத்துணவுத் திட்டம் ஆகியவற்றிற்கு ஆண்டு ஒன்றுக்கு 645.76 கோடி ரூபாய் அளவிற்கு செலவிடப்படுவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். எனினும், இக்கட்டான இந்த நிதி நெருக்கடி நிலைமையிலும் பசிப் பிணியால் எவரும் வாடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த மதிய உணவுத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளேன்.

வறட்சியை சமாளிப்பதற்காக மாநில அரசால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இல்லாமல், எதிர்க்கட்சிகள் இந்த அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் இத்திட்டங்களைக் குறை கூறுகின்றன. மாநில அரசின் சார்பாக மைய அரசுடன் வாதாடி நமக்குள்ள காவிரி நீர் உரிமையை பெற்றுத் தருவதற்கும் இந்த வறட்சியைச் சமாளிப்பதற்கும் தேவைப்படும் நிதி உதவியை பெற்றுத் தருவதற்கும் அக்கறை காட்டாமல் மாநில அரசைத் தூற்றுவதையே எதிர்க்கட்சியினர் தங்களது தொழிலாகக் கொண்டுள்ளனர். அது மட்டுமல்ல, இயற்கை மரணங்களையும், பல்வேறு குடும்பப் பிரச்சினைகளின் காரணமாக நடைபெற்ற தற்கொலைகளையும், தீராத பட்டினியால் ஏற்பட்ட சாவு என்றும், காய்ந்த பயிரினைக் கண்டு மனம் வெதும்பி அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணம் என்றும் கூறி, தங்களது செய்தி தொடர்பு சாதனங்களைத் தவறாகப் பயன்படுத்தி விஷமத்தனமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மாமன்றத்தில் 28.1.2003 அன்று நான் பேசும் போது பயிர் கருகியதாலும் பட்டினியாலும் சிலர் இறந்து விட்டார்கள் என்ற எதிர்க்கட்சியினரின் தவறான குற்றச்சாட்டுக்கு பதில் கூறியுள்ளேன். எனவே அதைப்பற்றி மேலும் விளக்கங்கள் தேவையில்லை என கருதுகிறேன்.

ஆளுநர் உரையில் சென்னை தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இதற்கான ஆணை 24.1.2003 அன்று வெளியிடப் பட்டுள்ளது.

தற்போது நான்கு பேர் கொண்ட மத்திய அரசின் குழு தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தஞ்சை டெல்டா உள்ளிட்ட சில மாவட்டங்களை நேரில் பார்த்து விட்டு 31.1.2003 அன்று மாலை என்னை சந்திக்க உள்ளது. அக்குழுவினரிடம், சம்பா பயிர் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்கெனவே விடுத்த கோரிக்கைகளுடன் கூடுதலாக, புதிய அறிக்கை ஒன்றைத் தர உள்ளோம்.

சம்பா நெற் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000/- ரூபாய் வீதம் மொத்தம் 419.55 கோடி ரூபாயும், காவிரியில் நீர் வராத காரணத்தால் பயிரிடப்படாத நிலங்களுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம் 144.53 கோடி ரூபாயும், நடப்பாண்டு கூட்டுறவுக் கடன்களில் குறுகிய கால மற்றும் மத்திய கால கடன்களில் அசல் 240.54 கோடி ரூபாயும், வட்டி 408.09 கோடி ரூபாயும், தள்ளுபடி செய்யப்பட்டு அதற்கு ஈடான இழப்பீடும், உணவுக்கு வேலை திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ரொக்கமாகவும், 9 லட்சம் டன் அரிசியாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இழப்பீடாக 345 கோடி ரூபாயும், குடிநீர் திட்டங்களுக்காக 184.87 கோடி ரூபாயும், கால்நடை பராமரிப்புத் துறைக்கு, தீவனம், நோய் தடுப்பு மருந்துகள், குடிநீர் போன்ற வசதிகளுக்காக 18.48 கோடி ரூபாயும், மீனவர்களுக்கு நிவாரண உதவியாக 14.47 கோடி ரூபாயும்– ஆக மொத்தம் 2027.53 கோடி ரூபாயும் 9 லட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்க உள்ளேன்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், கடலூர், மற்றும் நாமக்கல் ஆகிய காவிரிப் பாசன மாவட்டங்களில் விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் பொருட்டு ஏற்கனவே குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள கட்டத்தில் 164.18 கோடி ரூபாய் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளன. அதே போன்று, 1.2.2003 அன்றிலிருந்து இந்தப் பகுதிகளில் 217.09 கோடி ரூபாய் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் துவக்கப்படும். போர்க்கால அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஊரக வளர்ச்சிப் பணிகள், வாய்க்கால்களை தூர் எடுத்தல், குளங்கள் அமைத்தல், சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களுக்கும் இதுபோன்ற திட்டம் ஒரு வாரத்தில் உருவாக்கப்படும்.

பட்டுப்போன தென்னை மரங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ஏற்கெனவே எக்டேர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்று நான் அறிவித்திருந்தேன். இந்த இழப்பீட்டுத் தொகையினை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் முழுவதும் பட்டுப் போன தென்னை மரம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதமும், பகுதி பட்டுப் போன தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதமும் நிவாரணம் வழங்க ஆணையிட்டுள்ளேன். இதற்கான செலவு சுமார் 30.5 கோடி ரூபாயாகும்.



**“இந்த அரசு அறிவிக்கும் அனைத்துத் திட்டங்கள் குறித்தும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வரவேற்கும் என்று நான் பலமுறை குறிப்பிட்டு இருக்கிறேன்.”**

தர்மபுரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கரூர் மாவட்டங்களில் குடிநீர் மேம்பாட்டிற்காக 10.98 கோடி ரூபாய் தற்போது ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன்.

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை (foot and mouth disease) குணப்படுத்துவதற்கும், கால்நடைகளின் பயன்பாட்டிற்காக 313 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும், கால்நடை தீவன வளர்ச்சிக்கும் மொத்தம் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன் என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

இப்போது ஒரு புதிய அறிவிப்பை நான் இங்கே அறிவிக்க இருக்கிறேன்.

இந்த அரசு அறிவிக்கும் அனைத்துத் திட்டங்கள் குறித்தும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வரவேற்கும் என்று நான் பலமுறை குறிப்பிட்டு இருக்கிறேன். இலவச் மதிய உணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெறுவோரில் சிலர் தாங்கள் தினம் தினம் சத்துணவு மையத்திற்கு வந்து உணவு பெறுவதில் சில சிரமங்கள் இருப்பதை எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும், ஒரு சில நாட்களில் வேலை கிடைக்கும் போது, வேலையைப் பாதியில் விட்டு விட்டு சத்துணவு மையத்திற்கு வந்து உணவு பெற்றுச் செல்ல முடியவில்லை என்றும், சத்துணவு மையம் அமைந்துள்ள இடமும், தாங்கள் வேலை செய்யும் இடமும் சில நேரங்களில் வெவ்வேறாக இருப்பதால் மதிய உணவு பெற இயல்வதில்லை என்றும் அவர்கள் குறை பட்டுள்ளார்கள். விவசாயிகள் மட்டுமல்லாமல் இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும், இந்த சிறப்பு மதிய உணவுத் திட்டத்தை மாற்றி மக்களின் வசதிக்காக அரிசியாகவே வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்தத் திட்டம் குறித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்போம் என்று நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, தற்போது விவசாயிகளின் கோரிக்கைகளையும், உங்களது கோரிக்கைகளையும் ஏற்று நாளை முதல் இத்திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது என்னும் செய்தியை இந்த மாமன்றத்தின் மூலமாக அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று வரை பதிவு செய்துள்ள பயனாளிகள் குடும்பத்தினர் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 30 கிலோ அரிசி என்ற அளவில் அருகிலுள்ள நியாய விலைக் கடையின் மூலம் அரிசியாக இலவசமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 30 கிலோ இலவச அரிசி, ஒரு தவணையில் 15 கிலோ அரிசி வீதம் இரண்டு தவணைகளில் வழங்கப்படும். அது மட்டுமல்லாமல், பயன் பெறும் பயனாளிகளின் குடும்பங்கள் இலவச அரிசி பெறுவதற்கு ஏதுவாக அரிசி கூப்பன்கள் உடனடியாக வழங்கப்படும் என்பதையும், அந்தக் கூப்பன்களைப் பெற்றுக் கொண்டு தாங்கள் ஏற்கெனவே குடும்ப அட்டை மூலம் அரிசி பெறும் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று கூப்பன்களைக் கொடுத்து அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எந்த எந்த வழிகளில் எல்லாம் இயலுமோ, அந்த அந்த வழிகளில் எல்லாம் விவசாயப் பெருமக்களுக்குத் துணை நின்று, அவர்களின் துயர் போக்க இயலுமோ, அந்த அந்த வழிகளை எல்லாம் கண்டு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது இந்த அரசு. இனியும் வழங்கும். இதற்கு இடையே குறுக்கு சால் ஓட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு இருக்கின்ற எதிர்க்கட்சியினருக்கு நான் கூறிக் கொள்ள விரும்புவது இது தான். புறநானூற்றிலே சொன்னபடி –

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்”

அதாவது, நல்லது எதனையும் நீங்கள் செய்ய முடியா விட்டாலும் பரவாயில்லை. தீமை செய்யாமலாவது இருங்கள். நல்லது செய்பவரைத் தடுக்காதீர்கள். நீங்கள் நாட்டுக்கு செய்கின்ற தொண்டு அதுவாக இருக்கட்டும்.

இன்று இன்னொரு பெரிய புதிய அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

மாமல்லபுரம். அருகே ஏறத்தாழ 5,000 ஏக்கர் பரப்பளவில் தமிழகத்தின் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தனித் தன்மை வாய்ந்த கட்டடக் கலைச் சிறப்போடு ஒரு “புதிய நிர்வாக நகரம்” – New Administrative City அமைக்கப்படும் என்று முன்னர் நான் அறிவித்திருந்தேன். அதன்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் – Chennai Metropolitan Development Authority - CMDA – மற்றும் மலேசிய நாட்டின் கட்டடத் தொழில் வளர்ச்சி வாரியம் – Construction Industry Development Board of Malaysia –ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் Memorandum of Understanding கடந்த 14.1.2003 அன்று கையெழுத்தானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

அடுத்து டாக்டர் குமாரதாஸ் என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கேட்டார். என்னதான் இருந்தாலும் எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இவ்வளவு அகம்பாவம் இருக்கக்கூடாது. எஸ்ஆர்பி அவர்களுக்கும் ஒரு அறிவுரை கூற விரும்புகிறேன்.

Talent is God given;
be humble.

Fame is man given;
be thankful.

Conceit is self given;
be careful.

திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது.
அடக்கத்தோடு இருங்கள்.

புகழ் என்பது மனிதர்களால் கொடுக்கப்பட்டது.
நன்றியோடு இருங்கள்.

அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்து
கொள்வது எச்சரிக்கையாக இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய பல உறுப்பினர்களும், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய 25 சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழகத்தில் நிலவுகின்ற வறட்சியைப் பற்றியும், வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் குறித்தும் இங்கே பேசினார்கள்.

2002–ஆம் ஆண்டு நமது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் சோதனையான ஆண்டு என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். பிப்ரவரி 2002 ஆம் ஆண்டு பருவம் தவறிப் பெய்த மழையின் காரணமாக தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் உள்ளடக்கிய டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் மிகுந்த சேதத்திற்கு உள்ளாகின. அதனைத் தொடர்ந்து தென் மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவ காலங்களிலும் மழை பொய்த்துவிட்டது. காவிரி வடிகால் பகுதியின் கடைமடை மாநிலமான தமிழகத்தை, தலைமடை மாநிலமான கர்நாடகம் இரக்கம் அற்ற முறையில் கடுமையாக நடத்தியது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் ஒத்துழைக்க மறுத்து தமிழகத்திற்கு காவிரி நீரில் உரிய பங்கை வழங்கத் தொடர்ந்து மறுத்து வந்தது கர்நாடக அரசு. அதன் காரணமாக காவிரிப் பாசன விவசாயிகள் மிகுந்த துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாயினர். பருவ மழை பொய்த்ததாலும், கர்நாடக அரசின் இத்தகைய இணக்கமற்ற போக்கினாலும் மாநிலம் முழுவதும் வறட்சி நிலை உருவாகி உள்ளது.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் இவ்வாறு இன்னல்களைச் சந்திக்கும் போதெல்லாம் தாயுள்ளம் கொண்ட இந்த அரசு அவர்களது துயரைத் துடைக்கப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. மாநில அரசின் நிதி நெருக்கடியையும் பொருட்படுத்தாது இன்னலுறும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் துயர் துடைக்கப் பல்வேறு நிவாரணப் பணிகளை மிகுந்த பொருட்செலவில் இந்த அரசு மேற்கொண்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பருவம் தவறிப் பெய்த மழையின் காரணமாக தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஏற்பட்ட சாலைகள், பாசன ஆதாரங்களின் சேதங்களை சீர் செய்யவும் பயிர் சேதத்திற்கு ஈடு செய்யவும், தமிழக அரசு 49 கோடி ரூபாய் நிவாரணத் தொகை வழங்கியது.

தமிழ்நாடு, கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கி, விவசாயம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதை ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டி உள்ளோம்.

தமிழ்நாட்டில், கடந்த 30 ஆண்டுகளில், 2002–ஆம் ஆண்டில் தான் மிகக் குறைந்த அளவு மழை பெய்துள்ளது.

வரலாறு காணாத இந்த வறட்சியைச் சமாளிக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

24.6.2002 அன்று நானே நேரடியாக தஞ்சாவூருக்கு சென்று விவசாயிகளின் இடர்பாடுகளை அறிந்து அவர்களின் துயர் துடைக்க 164.18 கோடி ரூபாயில் சிறப்பு நிவாரணத் திட்டம் ஒன்றை அறிவித்தேன். இத்திட்டத்தின் மூலம் வாய்க்கால்களை தூர் எடுத்தல், புதிய குளங்கள் ஏற்படுத்துதல், விவசாய களங்கள் அமைத்தல், ஊரக இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நிவாரணப் பணிகள் செயல்படுத்துவதை மேற்பார்வையிடுவதற்கும் ஒவ்வொரு வாரமும் பணிகளை ஆய்வு செய்வதற்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் தலைமையில் மாநில அளவில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் கண்காணிப்புடன், இத்திட்டம் சீரான முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசின் பங்காக ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட வேண்டிய பிரிமியத் தொகை 6.61 கோடி ரூபாயை அரசு செலுத்தியுள்ளது. இதனால் இந்த மூன்று மாவட்டங்களில் வாழும் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 13.83 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை பெற முடிந்தது.

மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலைமையை ஆய்வு செய்வதற்கு என்றே 30.7.2002 அன்று மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டினைக் கூட்டி விரிவான ஆலோசனை நடத்தினேன்.



இதனைத் தொடர்ந்து, கூட்டுறவுக் கடன் வசூலை தள்ளி வைக்க உடனடியாக ஆணையிட்டேன்.

5.8.2002 அன்று தமிழகத்தில் நிலவும் வறட்சி குறித்து மத்திய அரசிற்கு ஒரு விரிவான அறிக்கையை நாங்கள் அனுப்பினோம். 720 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரண உதவி வழங்கவும், வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 2 இலட்சம் டன் அரிசியும் வழங்க மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டோம்.

பாரதப் பிரதமர் அவர்களை 20.8.2002 அன்று எங்களது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்து விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யக் கேட்டுக் கொண்டது. மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று மத்தியக்குழு செப்டம்பர் திங்களில் மாநிலத்திற்கு வருகை புரிந்தது. நாம் எதிர்பார்த்ததை விட வறட்சி நிலைமை கடுமையானதாக மாறியதால் செப்டம்பர் திங்கள் 23ஆம் நாளன்று மத்தியக் குழு என்னை நேரடியாக சந்தித்த போது 1,434 கோடி ரூபாய் நிதி உதவியும், ஏற்கெனவே கேட்கப்பட்ட 2 இலட்சம் டன் அரிசியுடன் கூடுதலாக மேலும் 5.5 இலட்சம் டன் அரிசியும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினேன்.

மத்தியக் குழு உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் 16 மாவட்டங்களைப் பார்வையிட்டு 178.29 கோடி ரூபாய் வறட்சி நிவாரண உதவி வழங்க பரிந்துரை செய்தனர். மத்திய அரசிடம் இருந்து நிதி வரும் என்று எதிர்பார்த்து காத்திராமல், வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் பற்றாக் குறையை சமாளிக்க 2002 ஜூன் முதல் டிசம்பர் வரை 67.90 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியைக் கொண்டு 13,676 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ்,

- ஆழ்த் துளைக் கிணறுகள் தோண்டி, கைப் பம்புகள் நிறுவுதல்
- சிறிய மின் விசைப் பம்புகள் நிறுவுதல்
- கிணறுகளைத் தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்
- குடி நீர்க் குழாய்களை விரிவுபடுத்துதல்
- குடி நீர்க்குழாய்களை புதிதாக மாற்றியமைத்தல்

போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தவிர கிராம வேலைவாய்ப்புத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி , 11–ஆவது நிதிக்குழு, உள்ளாட்சி அமைப்புகளின் பொதுநிதி, சிறுசேமிப்பு ஊக்கத்தொகை போன்ற ஏனைய திட்டங்களின் கீழ் 883.76 கோடி ரூபாயில் 60,110 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு டிசம்பர் 2002–இல் தேசிய பேரிடர் அவசர நிதியில், அதாவது National Calamity Contingency Fundஇல் – இருந்து 228.30 கோடி ரூபாய் நிதி அனுமதித்துள்ளது. இத்தொகை மற்ற மாநிலங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையைவிட அதிகமானதாகும். ஆந்திர மாநிலத்திற்கு 174.61 கோடி ரூபாயும், கர்நாடக மாநிலத்திற்கு 221.46 கோடி ரூபாயும், ராஜஸ்தான் மாநிலத்திற்கு 227.68 கோடி ரூபாயும், ஒரிசா மாநிலத்திற்கு 120.18 கோடி ரூபாயும் மத்திய அரசு அனுமதித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட 228.30 கோடி ரூபாயில் இயற்கைச் சீற்ற நிவாரண நிதியில் அதாவது National Calamity Contingency Fund நம்மிடம் ஏற்கெனவே இருப்பிலுள்ள தொகையைக் கழித்துக் கொண்டு மத்திய அரசு 133.06 கோடி ரூபாய் நிதியை இது வரை விடுவித்துள்ளது.

நாடெங்கும் தீபாவளித் திருநாளை கொண்டாடும் வேளையில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதால் வேலை இன்றி வாடும் காவிரிப் பாசன விவசாயத் தொழிலாளர்களும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தீபாவளிப் பரிசு ஒன்றினை வழங்கினோம்.

இந்தப் பரிசுப் பையில் 10 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, இனிப்பு 250 கிராம், நெய் 100 கிராம், தேங்காய், வாழைக்காய், கத்தரிக்காய், சுரைக்காய் போன்ற காய்கறிகளும், பாசிப்பருப்பு, மஞ்சள், கடுகு மற்றும் மிளகாய் வத்தல் போன்ற பொருட்களுடன் 50/- ரூபாய் ரொக்கமும் சேர்த்து வழங்கப்பட்டது. ஒரு பரிசுப் பையின் மொத்த மதிப்பு 210/- ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 21 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இதனால் 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள் பயன் பெற்றன என்பதையும் இந்த மாநிலமே அறியும்.

இலவச மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே பலர் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

உச்ச நீதிமன்ற ஆணையையும், காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவையும், புறக்கணித்த கர்நாடக அரசின் தொடர் பிடிவாதத்தால் தமிழகத்திற்கு உரிய காவிரி நீர் கிடைக்கவில்லை. இதனாலும், பருவ மழை பொய்த்து விட்டதாலும் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் பசி பட்டினியால் வாடக்கூடாது என்ற எண்ணத்தில் அவர்கள் ஒரு வேளையேனும் பசியாற உண்பதற்காக நல்ல சத்துள்ள, சூடான, தரமான உணவு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மதிய உணவு வழங்கும் ஒரு திட்டத்தை 15.1.2003 முதல் சென்னை

பிரம்மாண்டமான இந்தத் திட்டம் பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிக்கின்ற பொறுப்பையும், விரிவான திட்ட அறிக்கை அளிக்கின்ற பொறுப்பையும் மலேசிய நாட்டின் கட்டடத் தொழில் வளர்ச்சி வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு, புதிய நிர்வாக நகரத்திற்கான விரிவான சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கையையும், அதற்குப் பின் விரிவான திட்ட அறிக்கையையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கே சில ஆண்டுகள் ஆகும் என்று தெரிகிறது. மேலும், திட்ட விவர அறிக்கையைப் பெற்று, மாபெரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தேவையான பல்லாயிரம் கோடி ரூபாய் அளவிலான நிதி ஆதாரங்களையும் நாம் கண்டறிந்து, அதன் பின்னர் இந்தத் திட்டம் செயலாக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு, மேலும் பல ஆண்டுகள் ஆகலாம் என்பதே யதார்த்த உண்மை. 15 ஆண்டுகள் ஆகலாம், 20 ஆண்டுகள் ஆகலாம். ஏன் அதற்கு மேல் கூட ஆகலாம்.

இவ்வாறு, புதிய நிர்வாக நகரம் என்பது நனவாக்கப்பட வேண்டியது நமது லட்சியக் கனவாக இருக்கின்ற அதே நேரத்தில், தற்போது சென்னையில், தலைமைச் செயலகம் இயங்கி வரும் கட்டடங்கள் நமக்குப் போதுமானவையாக இல்லை என்பதையும், இடநெருக்கடி நமக்கு ஒரு இடர்ப்பாடாகவே எப்போதும் இருக்கிறது என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை மொத்தம் 107.5 ஏக்கர் பரப்பளவு உள்ளது. அதில், சென்னை தலைமைச் செயலகம் அமைந்திருக்கின்ற இடப்பரப்பு வெறும் 3.9 ஏக்கர் மட்டுமே ஆகும். இதில், நடைபாதைகள், உணவுக் கூடங்கள், புல்வெளி ஆகியவையும் அடங்கும். மேலும், தலைமைச் செயலகத்தின் ஒரு பகுதியாகிய நாமக்கல் கவிஞர் மாளிகை 1974–ஆம் ஆண்டில் முந்தைய தி.மு.க. அரசால் 10 மாடிகளைக் கொண்டதாக கட்டப்பட்டது. 30 ஆண்டுகள் கூட ஆகாத நிலையில், இந்தக் கட்டடம் சிதிலம் அடைந்து, பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கிறது. இந்தக் கட்டடத்தின் வடிவமைப்பும், ஒரு தலைமைச் செயலகத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் கொண்டதாக இல்லை என்பதே உண்மை. கடந்த 25 ஆண்டுகளில் கூடுதலாக நியமிக்கப்பட்ட அரசு அலுவலர்களுக்குப் போதுமான இடவசதியும் இப்போது அந்த பத்து மாடிக் கட்டடத்தில் இல்லை. மாடிப்படி ஓரங்களில் கூட முக்கிய அலுவலர்களுக்கு அறைகள் அமைத்து அவற்றில் அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நான் அறிவேன்.

எனவே, புதிய நிர்வாக நகரம் அமைக்க ஆண்டுகள் பல ஆகும் என்ற நிலை ஒரு பக்கம்! இருக்கின்ற கட்டடமும் நமது தேவைக்குப் போதுமானதாக இல்லை என்பதோடு, இடிந்து விழுகின்ற நிலையில் இருப்பது ஒரு பக்கம்! இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே இருக்கின்ற நாம் உடனடியாக ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

ஆகவே, இந்த அம்சங்கள் அனைத்தையும் கவனத்தோடு ஆராய்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தை உடனடியாக மாற்ற வேண்டிய இந்தச் சூழ்நிலையில், சென்னை கடற்கரைச் சாலையிலேயே புதிய தலைமைச் செயலக வளாகத்தை அமைக்க எங்கள் அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ராணி மேரி கல்லூரி மற்றும் விவேகானந்தர் நினைவில்லம் ஆகியவற்றுக்கு இடையே இந்தப் புதிய தலைமைச் செயலகம் அமையும். புதிதாக உருவாகப் போகும் இந்தத் தலைமைச் செயலகம் பெங்களூரில் அமைந்துள்ள "விதான சவுதா" (Vidhana Soudha) கட்டடத்தை விட எழில் மிக்க கம்பீரமான கட்டடமாக அமைக்கப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய தலைமைச் செயலகக் கட்டடம் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

'தமிழகத்தில் பல்வேறு நகரங்களிலும், சிறு கிராமங்களிலும் கூட, சாலை ஓரங்களில் குப்பை கொட்டி வைக்கப்பட்டு ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கின்ற காட்சியை நாம் கண்டு வருகிறோம். தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும், இத்தகைய சுகாதார கேடு விளைவிக்கின்ற காட்சியினை காண முடிகிறது. எனவே, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் குப்பைகளை அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் ஆணையிட்டேன்.

தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரம் விரைவாக வளர்ந்து கொண்டிருக்கிறது. நகரம் வளர வளர, அதோடு சேர்ந்து அதனுடைய சுகாதாரப் பிரச்சினைகளும் வளர்ந்து வருகின்றன. குறிப்பாக, குப்பைகளை அகற்றுவது எப்படி? அவற்றைக் கொட்டுவது எங்கே? என்பன போன்ற பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றன. சென்னை மாநகரில் நாள்தோறும் சுமார் 3,000 மெட்ரிக் டன் எடையுள்ள குப்பை சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பை, வட சென்னைப் பகுதியில் கொடுங்கையூர், தென் சென்னையில் பெருங்குடி ஆகிய இரு இடங்களில், ஒவ்வொரு இடத்திலும் ஏறத்தாழ 1,500 மெட்ரிக் டன் எடையளவுக்குக் கொட்டப்பட்டு வருகிறது. இந்த இரு இடங்களிலும் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத் தான் குப்பைகள் கொட்ட இயலும்.

சென்னை மாநகரின் தற்போதைய மக்கள் தொகை 42 இலட்சம் ஆகும். இதே விகிதத்தில் வளர்ந்து கொண்டு போனால், கொட்டப்படுகின்ற குப்பையின் அளவும் மிக அதிகமாகவே வளர்ந்து கொண்டே போகும். எனவே, திடக் கழிவுகளைக் கொட்டி வைக்கும் வளாகங்கள் இன்னும் அதிக அளவில் தேவைப்படும். ஆனால், இந்த நிலையே தொடருமானால், இனிமேலும் குப்பை கொட்ட இடமே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விடும். அதற்குமுன் இந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை, நிரந்தரத் தீர்வைக் காண வேண்டியது நம்முடைய கடமையாகும்.



சென்னை மாநகரைப் பசுமையான நகரமாக, தூய்மையான நகரமாக மாற்றுவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநிலத் தலைநகரங்களுக்கு மத்தியில் சென்னை ஒரு முன்னோடித் தலைநகரமாக விளங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இந்தக் குறிக்கோளை அடைய தரமான நகர்ப்புற வசதிகளை நாம் சென்னை மாநகருக்கு அளித்தாக வேண்டும். முக்கியமாக, திடக் கழிவுகளை அகற்றுவதில் நாம் ஒரு முக்கிய முடிவை எடுத்தாக வேண்டி உள்ளது. நான் சற்று முன் குறிப்பிட்டதைப் போல, குப்பை கொட்டும் வளாகங்களின் பற்றாக்குறை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

ஆகவே, அரசு தீவிரமாகச் சிந்தித்து ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்துள்ளது. மாநகராட்சியின் திடக்கழிவுகளை அகற்றுகின்ற அதேநேரத்தில், அந்த திடக்கழிவுகளைப் பயன்படுத்தி அவற்றைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்திட ஒரு சீரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலிருந்து அகற்றப்படும் குப்பைகளைப் பயன்படுத்தி சுற்றுப்புறச் சூழல் கெடாமல் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றினை தமிழ்நாடு அரசு உருவாக்கி உள்ளது. அதன் அடிப்படையில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி சார்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் உலக அளவில் ஒப்பந்தப்புள்ளியை அதாவது Global Tender- களை கோரியது. அதில் திருவாளர்கள் ஈ.டி.எல். இண்டியா பி.லிட். என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளிக்கு அரசு 5.1.1999 அன்றே ஒப்புதல் அளித்தும், சென்னை மாநகராட்சியும் திருவாளர்கள் ஈ.டி.எல். நிறுவனமும் 23.2.2001இல் தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில்– MOU -வில் கையெழுத்திட்டன. ஆகவே இத்திட்டம் உடன் செயல்படுத்தப்படுவதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முந்தைய திமுக அரசு எடுக்கவில்லை.

இந்த நிலையில் இது குறித்து நான் 22.1.2003 அன்று, சென்னை மாநகராட்சி, மாசுக் கட்டுப்பாடு வாரியம், மின் துறை ஆகிய துறைத் தலைவர்களுடன் ஆய்வு செய்தேன். மேலும் ஈ.டி.எல். நிறுவனம் எத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இத்திட்டத்தினை நிறைவேற்ற உள்ளது என்பதையும் கேட்டறிந்தேன். குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் போது குப்பைகள் எரிக்கப்படாமல் புகையின்றி Pyrolysis என்னும் தொழில்நுட்பம் மூலம் வாயு தயாரிக்கப்பட்டு, அதாவது Gasification செய்து, அதன் உதவியுடன் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. எனவே, இந்த தொழில்நுட்பத்தால் புகை ஏற்பட வாய்ப்பில்லை. அதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படமாட்டாது என்பது தெரிய வருகிறது. எனவே, இத்திட்டம் சென்னை மாநகர மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தால் இதனை உடனே நிறைவேற்ற இந்த அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நேரத்தில் ஒரு செய்தியை நான் குறிப்பிட்டாக வேண்டும். இந்தத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் – Memorandum of Understanding – முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது என்றாலும் திட்டத்தை செயல்படுத்த திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இருந்தது. ஆனால், மக்களின் நலத்தையே முன் வைத்துச் செயல்படுகின்ற இந்த அரசு முந்தைய தி.மு.க. அரசின் காலத்தில் வகுக்கப்பட்டது என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை கை விட்டு விடாமல் இதற்கு உயிர் கொடுத்து செயல் படுத்த முன் வந்துள்ளது. வேற்றுமை பாராட்டுதல், ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்ளுதல், மற்றவர்களுக்குப் புகழ் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற மாச்சரியத்தோடு செயல்படுதல் ஆகிய குணாதிசயங்கள், தி.மு.க–விற்கே சொந்தமாக இருக்கட்டும். நாம் எப்போதும் மக்கள் நலனையே முன் வைத்துச் செயல் படுவோம் என்பது தான் என்னுடைய கொள்கை, இந்த அரசினுடைய கொள்கை

"சென்னை மாநகரை பசுமையான நகரமாக, தூய்மையான நகரமாக மாற்றுவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநிலத் தலைநகரங்களுக்கு மத்தியில் சென்னை ஒரு முன்னோடித் தலைநகரமாக விளங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்."

என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக இந்த மாநிலம் முழுவதற்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க, ஆஸ்திரேலிய நாட்டின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னை அருகே பெருங்குடியில் 14.85 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை இந்த அரசு அமைக்க முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். 'கட்டுதல்–சொந்தமாக்குதல்–இயக்குதல்' Build-Own-Operate என்ற அடிப்படையில் இந்த மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படும். இதனால் சென்னை நகரின் மின் தேவையையும் பூர்த்தி செய்ய இயலும். இத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் மின்சக்தியினை மின் வாரியம் கொள்முதல் செய்யும். இத்திட்டம் 24 மாதங்களுக்குள் செயல்வடிவம் பெற்று மின்உற்பத்தி துவங்கப்படும்.

இத்திட்டத்திற்கு ஏறத்தாழ 180 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படும். அந்தச் செலவினையும் ஈ.டி.எல். நிறுவனமே ஏற்றுக் கொள்ளும்.

இதற்குத் தேவையான இடம் 30 ஏக்கர்.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா தமிழ்ப் புத்தாண்டு தினமான 14.4.2003 அன்று நடைபெறும்.

அது மட்டுமல்லாமல், மின்சாரம் உற்பத்தி செய்த பிறகு, எஞ்சுகின்ற கழிவுப் பொருள்களை சாலைகள் அமைப்பதில் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

காவல் துறையின் வரலாற்றில், ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதில், ஒரு புதிய குறிப்பிடத்தக்க அம்சமாகவும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை முதன் முதலாக, 1992–ஆம் ஆண்டில், சென்னையில் நான் தொடங்கி வைத்தேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குக் கிடைத்த வரவேற்பு, வெற்றி, பாராட்டு, ஆகியவற்றின் ஊக்கத்தினால், அதிக எண்ணிக்கை யிலான, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இதன் எண்ணிக்கை, 1996–ஆம் ஆண்டுக்குள், 58 ஆக அதிகரித்தது.

ஆனால், அடுத்து அமைந்த தி.மு.க. ஆட்சியில், 1996 முதல் 2001 வரை, 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில், புதியதாக அனைத்து மகளிர் காவல் நிலையம், ஒன்று கூட தொடங்கப்படவில்லை என்பதோடு, ஏற்கனவே நான் அமைத்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அனைத்தும், சீர்கேட்டுக்கு ஆளாக்கப்பட்டு, எந்த நோக்கங்களுக்காக அவை தொடங்கப்பட்டனவோ, அந்த சீரிய நோக்கங்களைச், செயல்படுத்த இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

மறுபடியும், ஆட்சிப் பொறுப்பை, 2001 மே மாதத்தில் நான் ஏற்றுக்கொண்ட பிறகு, பெண்கள் நலன் காக்க, புதிய உத்வேகத்துடன் செயல்படும் வகையில், மேலும் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத், தொடங்க உத்தரவிட்டேன். அது மட்டுமல்லாமல், பெண்களின் அச்சத்தைப் போக்கி, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் களைவதற்காக, தமிழகத்தில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், செயல்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டேன்.

அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களில், ஏற்கனவே எனது ஆட்சிக் காலத்தில், செயல்பட்டுக் கொண்டிருந்த, 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கொண்டிருந்த, 58 உட்கோட்டங்கள் நீங்கலாக, மீதமுள்ள 130 காவல் உட்கோட்டங்கள் அனைத்திலும், ஓர் உட்கோட்டத்திற்கு ஒன்று வீதம், படிப்படியாக 3 ஆண்டுகளில், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்குவதற்கான, ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2001–2002 ஆம் ஆண்டில், 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. 2002–2003 ஆம் ஆண்டில், 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்க ஆணையிடப்பட்டு, அவற்றில் முதலாவதும் தமிழகத்தின் 109–ஆவதுமான, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, ஆண்டிபட்டியில் தொடங்கி வைத்து, அண்மையில் 27–1–2003 அன்று, தமிழகத்தில் ஒரே நேரத்தில், சென்னை தியாகராயர் நகரில் ஒரு நிலையமும், பிற 36 உட்கோட்டங்களில் 36 நிலையங்களும், ஆக, 37 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஒரே நாளில் தொடங்கி வைத்தேன். தற்போது சாத்தான்குளத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படவிருக்கின்ற, இரண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், பின்னர் தொடங்கி வைக்கப்படும். 2003–2004 ஆம் ஆண்டில், எஞ்சியுள்ள 40 காவல் நிலையங்கள், தொடங்கி வைக்கப்படும்.

தயக்கமின்றிப் பெண்கள் நேரில் சென்று, தங்கள் குறைகளைக் கூறி, உடனடி நிவாரணம் பெறும் வகையில், உலகமே பாராட்டும்படி, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

பாதிப்புக்கு ஆளான பெண், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, நேரில் அணுக முடியாத போது, 1091 என்ற தொலைபேசி எண்ணுடன், அவரோ அல்லது அவரைப் பற்றி, தகவல் அறிந்த வேறு நபர்களோ தொடர்பு கொண்டால், உடனே மகளிர் காவலர்கள், காவல் நிலையத்தில் இருந்து விரைந்து சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் வகையில், Women Helpline என்னும் சிறந்த ஏற்பாட்டையும், நான் உருவாக்கினேன். இது மட்டுமன்றி, குழந்தைகள் பாதிப்புக்கு ஆளாகும் போது, 1098 என்ற தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொண்டால், அவர்களுக்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மூலம், உடனடி உதவி கிடைக்கும் வகையில், Child Helpline என்னும் ஏற்பாட்டையும், செய்திருக்கின்றேன்.

மேலும், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும்

**“குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க, ஆஸ்திரேலிய நாட்டின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னை அருகே பெருங்குடியில் 14.85 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை இந்த அரசு அமைக்க முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.”**



குழந்தைகள், ஆகியோரின் புகார், தொலைபேசியில் கிடைத்தவுடன், மகளிர் ஆலோசனைக் குழு விரைந்து சென்று, நடவடிக்கை எடுப்பதற்காக, அனைத்து மகளிர் காவல் நிலையங்களின், நடமாடும் ஆலோசனைக் குழுவிற்கான, முதல் வாகனத்தை, அதாவது, Mobile Counseiling Unit—ஐ, 27.1.2003 அன்று சென்னை, தியாகராயர் நகர், அனைத்து மகளிர் காவல் நிலையத் தொடக்க விழாவில், காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறை பயன்பாட்டுக்கென வழங்கினேன். இந்த நடமாடும் ஆலோசனைக் குழு வாகனத்தில், தொலைக்காட்சிப் பெட்டி, ஒலிபெருக்கி, VCR, வீடியோ கேசட்டுகள், வான் செய்தி கருவிகள் (VHF Sets), ஜெனரேட்டர்கள், Halogen bulb-கள், விழிப்புணர்வு கருத்துப் பலகைகள், போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இருள் சூழ்ந்த இடத்திலும் கூட, இந்த வாகனத்தில் உள்ள கருவிகள் மூலம், வெளிச்சத்தை வழங்க முடியும். இத்தகைய 17 வாகனங்கள் அன்று ஒரே நேரத்தில் 17 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு, அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நவீனப்படுத்தி, பெண்களின் துயரங்களை தீர்த்து வைத்து, அவர்களுக்கு நம்பிக்கை வழங்குகின்ற வகையில், அவற்றுக்குப் புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் வழங்கி இருக்கிறேன் என்பதை, இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாளில் 24 மணி நேரமும், அல்லும் பகலும் தொடர்ந்து, கடமையாற்ற வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள், காவல் துறையினர். அவர்களது குறைகளை நேரில் கேட்டறிவதற்காக, அவர்களை சென்னை, தலைமைச் செயலகத்திற்கே வரவழைத்து, “காவலர் குறை தீர்க்கும்” கூட்டங்களுக்கு, ஏற்பாடு செய்தேன். இந்தியாவிலேயே இதுவரை எந்த முதல்வரும் செய்திராத சாதனை என்று, அதனைப் பலரும் பாராட்டுகின்றனர். அவ்வாறு குறை கேட்ட போது, தங்கள் சிறிய குழந்தைகளை, வீட்டிலேயே விட்டு விட்டுப், பணிக்குச் செல்வதால், ஏற்படுகின்ற துன்பத்தைப் பற்றி, பெண் காவலர்கள் என்னிடம் முறையிட்டார்கள். மக்களுக்குப் பணியாற்றுகின்ற கடமையில், எப்போதும் இருக்கின்ற காவலர்கள், குறிப்பாக, மகளிர் காவலர்கள், தங்கள் பணியை சிறப்புடன் செய்திட உதவும் வகையில், அவர்களுடைய குழந்தைகளைப் பேணுவதற்காக, “காவலர் குழந்தைக்ள் நலக் காப்பகம்”, என்னும் சிறந்த திட்டத்தைத் தொடங்க உத்தரவிட்டேன்.

இதற்கிணங்க, மாவட்டத்திற்கு ஒன்று வீதம், 29 மாவட்டங்களிலும், மாநகருக்கு ஒன்று வீதம், 6 மாநகரங்களிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கு 9ம், ஆக மொத்தம் தமிழகமெங்கும், காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்கள், 44 தொடங்கப்படும்.

இந்தக் குழந்தைகள் நலக் காப்பகங்களில், பெண் காவலர்கள், தங்களுடைய குழந்தைகளை நம்பிக்கையோடு விட்டு விட்டு, நாட்டுக்கு தாங்கள் செய்கின்ற கடமையை, நிம்மதியாகச் செய்யலாம். இந்த காப்பகங்களில், விளையாட்டு பொருள்களும், கல்வி புகட்டும் எளிய சாதனங்களும், குழந்தைகளுக்காக வைக்கப்பட்டிருக்கும்.

இந்தக் காப்பகங்களில், குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆரோக்கியமான உணவு வகைகள் வழங்கப்படும். இதற்குரிய செலவினத்தில், 50 சதவிகிதத் தொகை, குழந்தைகளின் பெற்றோரிடமிருந்து வசூலிக்கப்படும். இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை, உடனுக்குடன் அரசுக் கணக்கில், தவறாமல் வரவு வைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளேன்.

காப்பகங்களில் குழந்தைகளைப் பராமரிக்கும், ‘ஆயா’ வேலையில், காவல் துறை குடும்பங்களைச் சார்ந்த மகளிரே, ஈடுபடுத்தப்படுவார்கள். கருணை அடிப்படையில், பணியில் நியமிக்கப்படுவதற்கு என்று, காத்திருக்கும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த, விண்ணப்பதாரர்களிடையே இருந்து, இவர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, 1,500/– ரூபாய் தொகுப்பூதியமாக வழங்கப்படும். 10 குழந்தைகளுக்கு ஒரு ஆயா வீதம், 20 குழந்தைகளுக்கு, 2 ஆயாக்கள் நியமிக்கப்படுவார்கள்.

ஒரு பெண் உதவி ஆய்வாளர், இந்தக் குழந்தைகள் நலக் காப்பகத்தின் பொறுப்பாளராகச் செயல்பட்டு, அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிடுவார்.

இந்தத் திட்டத்தின்படி, சென்னை புதுப்பேட்டையில் உள்ள, ஆயுதப் படை வளாகத்தில் அமைந்துள்ள, சென்னை மாநகர காவலர் குழந்தைகள் நலக் காப்பகத்தை, 27.1.2003 அன்று நடைபெற்ற விழாவில், தொடங்கி வைத்தேன். மேலும், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோவை, ஆகிய 5 மாநகர, காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்களையும், அதே விழாவில் தொடங்கி வைத்தேன். மீதமுள்ள காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்கள் அனைத்தும், படிப்படியாக தொடங்கி வைக்கப்படும் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் பற்றி பல உறுப்பினர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆகவே அதற்கொரு விளக்கம் அளிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

கடந்த 1991ஆம் வருடம் முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்த போது சென்னை மாநகரின் குடிநீர்த் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. என்னைப் பெரிதும் பாதித்தது. பெருகி வரும் மக்கள் தொகை அடிக்கடி பருவ மழை, குறிப்பாக வடகிழக்குப் பருவமழை பொய்த்தல் ஆகியவை இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. எப்படியாவது சென்னை மாநகருக்கு இவ்வாறு ஏற்படுகின்ற குடிநீர்

பற்றாக்குறையை நிரந்தரமாகவும், முழுமையாகவும் தீர்க்க வேண்டும் என்பதை நான் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு அதற்கான தீர்வு குறித்து தீவிரமாக சிந்தனை செய்தேன். அதற்காகப் பல்வேறு திட்டங்களின் சாதக பாதகங்களை ஆராய்ந்து இறுதியில் 1993ஆம் ஆண்டு நான் “புதிய வீராணம் திட்ட”த்தை அறிவித்தேன். அப்போது இந்தத் திட்டத்தை உலக வங்கியின் உதவியோடு 464 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த எனது தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நிர்வாக அனுமதி வழங்கியது.

> “சென்னை மாநகருக்கு தேவைப்படும் குடிநீரைத் தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் முழுமையாகப் பெறவும், வரும் மாதங்களில் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கவும், தக்க முயற்சிகள் இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன”

இவ்வாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர் இத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு உரிய கடனுதவிக்காக இந்தத் திட்டம் உலக வங்கிக்கு பரிசீலனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு சாத்தியக் கூறு ஆய்வினை அதாவது Feasibility Study-ஐ 1994ஆம் ஆண்டில் TATA Consultancy Engineers என்ற தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்டது. அந்த நிறுவனம் வீராணம் ஏரியில் நீர்வரத்து விவரங்களை அடிப்படையாக வைத்து கிடைக்கின்ற நீர் அளவை நன்கு ஆராய்ந்தது. மேலும், அடுத்த 100 ஆண்டுகளுக்கான தேவையைக் கணக்கில் கொண்டு அந்தப் பகுதியின் விவசாயத்திற்கும், சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்கும் தேவைப்படக்கூடிய நீர் அளவை மதிப்பிட்டது. அத்தகைய ஆய்வுக்குப் பின்னர், அவ்வாறு கிடைக்கின்ற நீர் அளவு இந்த இரண்டு தேவைகளுக்கும் போதுமானதாக இருக்கும் என்று நன்கு, உறுதியாகத் தெரிந்த பின்னரே, வீராணம் ஏரி, வடவாறு வாய்க்கால் மற்றும் வீராணம் ஏரியின் பாசனக் கால்வாய்களை மேம்படுத்த உரிய பரிந்துரையை அந்த நிறுவனம் அரசுக்கு வழங்கியது. அது மட்டுமின்றி, உலக வங்கியும் தனது தொழில்நுட்பக் குழுக்களை அனுப்பி இந்தத் திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் துல்லியமாக ஆய்வு செய்தது. அதன் பின்னர் தான் வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் இந்தத் திட்டம் நிரந்தரமாக செயல்படுத்தப்படுவது சாத்தியமே என்று உலக வங்கியும் உறுதி செய்தது. இவ்வாறு உலக வங்கியே இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் பலன்களையும் மிகவும் தீவிரமாக ஆய்வு செய்த பின்னரே இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 1,638 கோடி ரூபாயை கடனாக வழங்க முன் வந்தது. அதன் பின்னர் எனது தலைமையிலான அன்றைய அ.இ.அ.தி.மு.க. அரசு ஆட்சியிலிருந்த போதே, 1995–இல் உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. பின்னர், 1996 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை, திருத்தப்பட்ட மதிப்பீடான 1,638 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான உலக அளவிலான ஒப்பந்தப் புள்ளிகள் அதாவது, Global Tenders கூட எங்கள் அரசால் அப்போது விடப்பட்டன. ஆனால், அதனை அடுத்து வந்த பொதுத் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், திரு கருணாநிதி முதலமைச்சராக பதவியேற்றவுடன், உலக வங்கியே முன் வந்து 1,638 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கிய பின்னர் கூட, ஒப்பந்தப் புள்ளிகள் கூட வரவேற்கப்பட்ட நிலையில், அந்தத் திட்டத்தை அப்படியே உதாசீனப்படுத்தி குப்பையில் போட்டுவிட்டார்.

அதற்குக் காரணம் என்ன தெரியுமா? சென்னை மாநகர மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, தொலைநோக்குப் பார்வையோடு, வெற்றிகரமாக செயல்படுத்தி முடிக்கப்படக் கூடிய “புதிய வீராணம் திட்ட”த்தை நான் கொண்டு வந்தேன் என்ற காழ்ப்புணர்ச்சி தான்! அது மட்டுமல்லாமல், “வீராணம்” என்ற பெயரைக் கேட்டாலே தமிழகத்திலேயே அந்தப் பெயரைக் கண்டு அச்சப்படக் கூடிய ஒருவர் உண்டு என்று சொன்னால் அவர் திரு கருணாநிதி மட்டும் தான்! நமக்கெல்லாம் வீராணம் என்று சொன்னால், எப்போதும் கடல் போன்று நீர் தேங்கி நிற்கக் கூடிய வீராணம் ஏரியும், அதன் நீண்ட கரைகளும் தான் நினைவுக்கு வரும். ஆனால் திரு கருணாநிதிக்கோ, “வீராணம்” என்ற சொல்லைக் கேட்டாலே Allergy தான்! திரு கருணாநிதி அன்றைய பழைய வீராணம் திட்டத்தில் நடத்திய ஊழல், சர்க்காரிய கமிஷன் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டு, அம்பலப்படுத்தப்பட்டதெல்லாம் நினைவுக்கு வரும். இதன் காரணமாகவோ என்னவோ, அவர் என் மீது கொண்ட பொறாமை உணர்ச்சியாலும் அவருக்கு இருந்த அச்ச உணர்வினாலும், இந்த நல்ல திட்டத்தைப் பாழ்படுத்தத் துணிந்தார் திரு கருணாநிதி.

காவிரி நதி நீர் தொடர்பான வழக்கினை உச்ச நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டு தமிழக மக்களுக்கு மாபெரும் துரோகத்தை இழைத்த திரு கருணாநிதி, மீண்டும் தான் முதலமைச்சராக இருந்த போது இந்தப் புதிய வீராணம் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தாமல் குறுகிய மனப்பான்மையோடு அதனை ரத்து செய்து, சென்னை மாநகர மக்களுக்கு ஒரு மாபெரும் அநீதியை, துரோகத்தை இழைத்துவிட்டார் என்று நான் அவர் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன்.

குறிப்பாக, உலக வங்கி தமிழகத்திற்கு 1,638 கோடி ரூபாய் கடனுதவி வழங்க முன் வந்ததே பெரிய விஷயம். அவ்வாறு உலக வங்கியே முன்வந்த போது சென்னை

(தொடர்ச்சி 49ஆம் பக்கம்)



**54**-வது இந்தியக் குடியரசு நாள் விழா கொண்டாட்டங்கள் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னைக் கடற்கரை, காமராஜர்சாலையில், மகாத்மாகாந்தி சிலை அருகே 26.1.2003 அன்று காலை 7.51 மணிக்கு தொடங்கியது.

காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் முன்னே அணிவகுத்துவர, விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையாளர்கள் பகுதிக்குச் சென்று பொதுமக்களுக்கு



# குடியரசு நாள் விழா

நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்து வர விழாவிற்கு வருகை தந்த மேதகு ஆளுநர் திரு.பெ.ஶ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள் பார்வையாளர்கள் பகுதியில் சுற்றி வந்து வாழ்த்துத் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களை அணி வணக்கம் ஏற்கும் மேடை அருகில் வரவேற்று ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் ஏ.எஸ்.ஜாம்வால்,AVSM., VSM., சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் டி.ஹரி, NM., சென்னை தாம்பரம் வான்படை அதிகாரி ஏர் கமோடர் எம்.பி.எஸ்.கில், VM., தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் டாக்டர் ஆர்.ராஜகோபாலன், இ.கா.ப., கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு.கே.நடராஜன், இ.கா.ப., சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு.கே.விஜயகுமார், இ.கா.ப., ஆகியோரை மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இதனையடுத்து காலை 8.00 மணிக்கு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அரசு ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்துவந்து, தேசியக் கொடி அருகே அணிவகுப்பு பாதை வழியாக மலர் தூவி சென்றது.

**அணிவகுப்பு**

தரைப்படை, வான்படை, கடற்படை, இராணுவ கூட்டுக் குழல் முரசிசை, கடற்படை ஊர்தி, வான்படை ஊர்தி, வான்படை கூட்டுக்குழல் முரசிசை, முன்னாள் படைவீரர்கள் பிரிவு, மத்திய ரிசர்வ் காவலர் படைப் பிரிவு கூட்டுக்குழல் முரசிசை, மத்திய ரிசர்வ் காவலர் படைப்பிரிவு, இரயில்வே பாதுகாப்புப்படை, தமிழ்நாடு காவலர் படை, சென்னை மாநகர இருபால் காவல்படை, சென்னை மாநகர காவல் கூட்டுக் குழல் முரசிசை, காவல் குதிரைப்படை, நீலகிரி மாவட்ட காவலர் படைப் பிரிவு, கடலோர பாதுகாப்புக் குழு, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, ரெஜிமெண்டல் மைய கூட்டுக்குழல் முரசிசை, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (பெண்கள்), துரித நடவடிக்கைக் காவல்படை, தமிழ்நாடு தீயணைப்புப் படை கூட்டுக்குழல் முரசிசை, தமிழ்நாடு தீயணைப்புப் படை, ஊர்க்காவல் படை, தேசிய மாணவர் படை முதுநிலைப்பிரிவு (தரைப்பிரிவு), தேசிய மாணவர் படை முதுநிலைப்பிரிவு (கடற்படை), தேசிய மாணவர் படை முதுநிலைப்பிரிவு (வான்படை), தேசிய மாணவர் படை முதுநிலைப்பிரிவு (பெண்கள்), சாலை காப்புச் சுற்றுக் காவல் படை (பெண்கள்), சாலை காப்புச் சுற்றுக் காவல் படை (ஆண்கள்), சாலை காப்புச் சுற்றுக் காவல் படை, கூட்டுக்குழல் முரசிசை, பாரத சாரண சாரணியர் படை ஆகியவை அணிவகுப்பில் இடம் பெற்றன.

**வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம்**

இதனையடுத்து, ஆளுநர் அவர்கள் முன்னிலையில் முதலமைச்சர் அவர்கள் வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கங்களையும், மத நல்லிணக்கத்திற்காக பாடுபட்ட திரு.கோட்டை அமீர் அவர்கள் பெயரிலான கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கத்தையும், கள்ளச் சாராயத்தைத் தடுக்கும் வகையில் ஆற்றிய சீரிய

பணிக்காக மாநில காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும மகாதமா காவல் பதக்கங்களையும் வழங்கினா.

இந்த ஆண்டு தீரச் செயல் புரிந்து, அண்ணா விருதினைப் பெறும் சென்னையைச் சேர்ந்த செல்வன ந.ஸ்ரீதர், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.கு.மகராஜன், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எம்.கே.முகம்மது பிலால் ஆகியோருக்கு ரூ.2,000 மதிப்புள்ள தங்கமுலாம் பூசிய அண்ணா விருப பதக்கமும், ரூ.10,000க்கான காசோலையும சான்றிதழும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டு, தமிழ்நாட்டில் மத நல்லிணக்கத்திற்காக சேவை செய்துவரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த திரு.பாலபிரஜாபதி அடிகளார் அவர்களைப் பாராட்டி ரூ.2,000 மதிப்பிலான கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கமும், ரூ.25,000க்கான காசோலையும், சான்றிதழும் வழங்கபபட்டன.



சென்னை பூக்கடை உதவி ஆணையர் திருதேகிருஷ்ண மூர்த்தி, மதுரை மாநகர் தல்லாகுளம் உதவி ஆணையர் திருமதி எ.செல்வி ஹேமா பிரமிளா, வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டை காவல் ஆய்வாளர் திரு. சீ.சீத்தாராமன், நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் காவல் ஆய்வாளர் திரு.இரா.சா.சீனிவாசன், விழுப்புரம் மாவட்ட உதவி ஆய்வாளர், திரு.எம்.ஜி.தேசன் ஆகிய ஐவருக்கு தலா ரூ.10,000 ரொக்கத் தொகையும், மகாத்மா காந்தி காவல் பதக்கமும் வழங்கப்பட்டன.

**ஆடல் பாடல் நிகழ்ச்சிகள்**

இதனைத் தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் பங்கு பெற்ற வண்ணமயமான ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கிராமிய நடனமும், சிறுவர் தோட்ட மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கும்மி நடனம் தமிழர் திருநாளான தைத் திருநாளை நினைவுப்படுத்தியது. லேடி வெலிங்டன் சீமாட்டி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் கோலாட்டம், பாலலோக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் ஆதிவாசி நடனம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் அவசியத்தை உணர்த்தியது.

சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம், காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி மாணவிகளின் பாரதிய நடனம், வேற்றுமையில் ஒற்றுமை என்ற உயரிய கருத்தை வெளிப்படுத்தியது. தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில அமைந்தது இராணி மேரி மகளிர்க் கல்லூரி மாணவிகளின தணடியா நடனம். கலை நிகழ்ச்சிகளில் பங்குபெறற அனைதது மாணவ–மாணவியர்களும் நிகழ்ச்சிகள் சிறப்பாக அமையும் வகையில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வகையிலும விழாவை சிறப்பித்தனர்.

**கிராமியக் கலை நிகழ்ச்சிகள்**

தொடர்ந்து கிராமிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தென்மணடல பண்பாட்டு மையம் சார்பில் கேரள மாநில கலைக்குழுவினரின் 'தியாட்டு, பஞ்சாப மாநில கலைக்குழுவினரின 'கிதா', ஆந்திர மாநில கலைக்குழுவினரின் 'பண்டரி பஜனா', செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில மதுரை மாவட்டக் கலைக்குழுவினரின் 'கரகம்'மயில் மற்றும் காளை ஆட்டம', திண்டுக்கல் மாவட்ட கலைககுழுவினரின் 'தப்படடை ஆட்டம்' ஆகியவை இடம் பெற்றன.

**அலங்கார ஊர்திகள்**

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு துறைகளின சார்பில அலங்கார ஊர்திகளின் அணிவகுபபுத் தொடங்கியது. தமிழக அரசு செயல்படுத்திவரும் நலத்திட்டங்கள், சாதனைகளை விளக்கும் 14 ஊர்திகள் இந்த அணிவ குப்பில் இடம் பெற்றன.



புதிய அண்ணா மறு மலர்ச்சித் திட்டம், இலவச சைக்கிள் திட்டம், மழைநீர் சேகரிப்பு, தரிசுநில மேம்பாடு, மகளிர் தொழில் முனைவோருக்காக 5 இடங்களில் தொழில் பூங்காக்கள், ஊட்டி டீ விற்பனையை அதிகரித்தல், அன்னதானத்திட்டம், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் அயல்நாடு சென்று பட்ட மேற்படிப்பு பயில கல்வி உதவித் தொகை திட்டம் உள்ளிட்டவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

அணிவகுத்து வந்த ஊர்திகளுக்கு பரிசுகளும் அறிவிக்கப்பட்டது. அணிவகுத்து வந்த ஊர்திகளில் முதல் பரிசை தோட்டக்கலைத் துறையும், இரண்டாம் பரிசை மக்கள் நல்வாழ்வுத்துறையும், மூன்றாம் பரிசை வேளாண்மைத்துறையும் வென்றது.

விழா நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் கண்டுகளித்து வாழ்த்து தெரிவித்தனர். ★



# 36 மகளிர் காவல் நிலையங்கள்

## மாண்புமிகு முதல்வர் திறந்துவைத்தார்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.1.2003 அன்று சென்னை தியாகராயநகர் மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும், தமிழகத்தின் பிற பகுதிகளில் அமைந்துள்ள 36 மகளிர் காவல் நிலையங்களையும் ஒருங்கே திறந்து வைத்தார்கள். மேலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் அமைகின்ற நடமாடும் ஆலோசனைக் குழுவிற்கான முதல் வாகனத்தை காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வழங்கினார்கள். பின்னர், சென்னை புதுப்பேட்டையில் ஆயுதப்படை வளாகத்தில் உள்ள சென்னை மாநகர காவலர்களுக்கான குழந்தைகள் நலக் காப்பகத்தையும், தமிழகத்தில் உள்ள பிற மாநகரக் காவல் ஆணையகரத்தில் பணிபுரியும் காவலர்களின் குழந்தைகளுக்கான நலக் காப்பகங்களையும் ஒருங்கே தொடங்கி வைத்தார்கள்.

இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான், மகளிருக்கு எதிரான குற்றங்களை முனைப்புடன் தடுப்பதற்காக, 1992–இல் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தித் துவக்கி வைத்தார்கள். உலக அளவில் பாராட்டப்படும் இத்தகைய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழகத்தில் இதுவரை 109 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.1.2003 அன்று தியாகராய நகர் பேருந்து நிலையத்திற்கு அருகில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும், இதே தருணத்தில், தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் செயல்பட உள்ள 36 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் ஒருங்கே தொடங்கி வைத்தார்கள். மாம்பலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த குத்துவிளக்கை ஏற்றி வைத்து அந்தக் காவல் நிலையத்தைச் சுற்றிப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் புத்தகத்தில் தனது கருத்துக் களையும், வாழ்த்துக்களையும் பதிவு செய்தார்கள்.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் தொலைபேசியில் புகார் அளித்தாலும் விரைந்து சென்று விசாரணை செய்யும் வகையில், புதியதொரு அணுகுமுறையை அறிமுகம் செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அதற்கேற்ற வகையில், மகளிர் காவலர்கள் தங்களது சிறிய குழந்தைகளை வீட்டிலே விட்டுவிட்டு வேலைக்குச் செல்வதால் பெரும் துயருக்கு ஆளாவதாக முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். பெண் காவலர்களின் இந்தத் துன்பத்தினைக் களைய, அவர்கள் வேலைக்குச் செல்கின்ற நேரத்தில் அவர்களது குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள குழந்தைகள் நலக் காப்பகங்கள் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அதன்படி சென்னை, புதுப்பேட்டையில் உள்ள சென்னை



ஆலோசனைக்குழு விரைந்துச் சென்று நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் “நடமாடும் ஆலோசனைக் குழு”விற்கான முதல் வாகனத்தை காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறைக்கு வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து தமிழ்நாட்டின் முதல் நடமாடும் ஆலோசனைக் குழுவின் வாகனத்திற்கான சாவியை, காஞ்சிபுரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.மாசானமுத்து அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்திய வரலாற்றிலேயே இல்லாத வகையில் காவலர்களுக்கென மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரடியாகக் குறைகளைக் கேட்டுத் தீர்த்து வைத்த நிகழ்ச்சியில், பெண் மாநகரக் காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் “சென்னை மாநகர காவலர் குழந்தைகள் நலக் காப்பகம்” மற்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து மாநகரக் காவல்துறை ஆணையர் அலுவலகங்களிலும் மாநகர் காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்களையும் தொடங்கி வைத்தார்கள். பின்பு, இக்காப்பகத்தைச் சுற்றிப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த குத்துவிளக்கை ஏற்றி வைத்து, குழந்தைகள் விளையாடுவதற்கு வைக்கப்பட்டிருந்த விளையாட்டுப் பொருட்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் புத்தகத்தில் தனது கருத்துக்களையும், வாழ்த்துக்களையும் பதிவு செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ரானேஷ், உள்துறை செயலாளர் திரு.சையது முனீர் ஹோடா, காவல்துறை தலைமை இயக்குநர் டாக்டர் ஆர்.ராஜகோபாலன், கூடுதல் காவல்துறை இயக்குநர் திருமதி. திலகவதி, சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு.கே.விஜயகுமார் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டனர். ★



# மக்கள் பாதுகாப்பே தலையாய பணி




“தமிழகக் காவல்துறை நடத்தும் “குற்றத்தடுப்பு மேலாண்மை ஒரு பன்முக அணுகுமுறை'' என்னும் தேசியக் கருத்தரங்கை தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சமுதாயத்தை மேன்மைப்படுத்த இடையூறாக உள்ள விஷயங்கள் குறித்து விவாதிக்கக் கருத்தரங்கு நடத்துவது வரவேற்கத்தக்கது. கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள்– காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்துவதற்கும் மேம்பாட்டிற்கும் அமைதி நிலவ வேண்டியது அவசியம் என்று நான் வலியுறுத்தினேன்.

அமைதி நிலவுவதற்கு குற்றமற்ற சமூக அமைப்பும், அச்சமற்ற சுதந்திரச் சூழலும் அவசியம். இந்தக் கருத்தரங்கு அமைதியான சமூக அமைப்பு ஏற்படுத்துவது என்ற நமது இலக்கை அடையத்

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
தலைமைச் செயலகத்தில்
“குற்றத் தடுப்பு மேலாண்மை – ஒரு
பன்முக அணுகு முறை'' என்ற
தலைப்பிலான தேசிய கருத்தரங்கை
9.1.2003 அன்று
தொடங்கி வைத்து ஆற்றிய

தேவையான பரிந்துரைகளை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய உலகம் தீவிரவாதம், வன்முறை, குற்றச் செயல்கள் நிறைந்து காணப்படுவதாக உள்ளது. தொடர் குண்டுவெடிப்பு, திட்டமிட்ட வன்முறை மற்றும் தீவிரவாதம் ஆகியன ஏதோ சில மூன்றாம் உலகைச்



சேர்ந்த ஏழை நாடுகள் மட்டும் தன்னந்தனியாக எதிர்த்து போராட வேண்டிய பிரச்சினையாக இல்லை. தீவிரவாதம் என்பது இன்று உலகம் முழுவதற்கும் ஒரு பொதுச் சவாலாக வளர்ந்துள்ளது.

உலகமயமாதலும், குற்ற நடவடிக்கைகளும் வெளியே தெரியாமல் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக உள்ளது. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் கொள்கைகளால் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. புதிய தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியால் உலகம் ஒரு சிறிய கிராமமாக சுருங்கி வருகிறது. இவை குற்றங்கள் நடப்பதற்கு புதிய வழியை ஏற்படுத்தி உள்ளன.

நாட்டின் எல்லைகளைக் கடந்து, உலக அளவில் நடைபெறும் குற்றங்களைத் தடுப்பதற்கு குற்றங்களைக் கண்டுபிடிக்கும் அமைப்புகளையும் முழுவதுமாக மாற்றியமைக்க வேண்டும். காவல்துறையில் உள்ள தொழில்நுட்பத்தைவிட குற்றவாளிகளிடம் உள்ள தொழில்நுட்பம் ஒரு படி சிறந்ததாக உள்ளது.

குற்றங்களைத் தடுக்க முன்னெச்சரிக்கை அவசியம்

தேச வளர்ச்சி முறையினால் சமூக – பொருளாதார அமைப்பும் மாற்றம் பெறுகிறது. இதற்கேற்றாற்போல் காவல்துறையின் பணிகளும், நடைமுறையும் மாற்றம் பெற வேண்டும். நவீன வகைக் குற்றங்கள் திட்டமிட்டு நடக்கின்றன. இந்தக் குற்றங்கள் நடந்தபின் நடவடிக்கை எடுப்பதைவிட, குற்றங்கள் நிகழாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றங்கள் நடக்காமல் தடுப்பது காவல்துறையின் பணி மட்டுமல்ல; இதில் அரசு சாரா அமைப்புகள், பெரிய நிறுவனங்கள் உட்பட பொதுமக்கள் ஒவ்வொருவரும் பங்கேற்க வேண்டும். இதில் அதிக அளவு பொதுமக்கள் பங்கேற்றால், குற்றங்கள் நடக்காமல் தடுக்க முடியும்.

எனவே, குடியிருப்போர் நலச் சங்கங்கள், சிறு, பெரிய வர்த்தக நிறுவனங்கள், நில உடைமையாளர்கள், சேவைத் தொழில் செய்வோர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இளைஞர்கள் ஆகியோர் காவல் துறைக்கு உதவியாக இருந்து குற்றங்கள் இல்லாத, பாதுகாப்பான சமூகம் அமைய மாநில அரசிற்கு உதவி செய்ய வேண்டும்.

காவல்துறை உயர் அதிகாரிகளின் வருடாந்திர மாநாடு சமீபத்தில் நடந்தது. இதில் தமிழகத்தில் 1994ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காவல்துறை நண்பர்கள் குழுவின் சேவைகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். தமிழகம் முழுவதும் மக்களோடு மக்களாக இருந்து சமுதாயக் காவல் பணி ஏற்படுத்தப்படும் என்று அறிவித்தேன்.

காவல்துறை தங்களின் புகார் மீது நடவடிக்கை எடுத்து, தங்களின் குறையைத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையுடன், பொதுமக்கள் காவல் நிலையங்களை அணுகும் முறையில் இருக்க வேண்டும். காவல்துறையில் உள்ள ஆண் காவலரோ, பெண் காவலரோ குற்றங்களைக் கண்டுபிடித்தால் மட்டும் போதாது. குற்றங்களை நடைபெறாமல் தடுக்க நான் என்ன செய்துள்ளேன் என்பதை, தனக்குள்ளேயே கேட்டுக் கொள்ள வேண்டும். காவல்துறையின் தலையாய பணி குற்றங்கள் நடைபெறாமல் தடுத்து குற்றங்களைக் கட்டுப்படுத்தி மக்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வைத் தோற்றுவிப்பதாகும்.

காவல்துறையினர் திறமை, அவர்களின் செயலில் மட்டுமல்லாது, சமுதாயத்தின் பங்களிப்பில் தான் வெளிப்படும். சமுதாயத்திற்குத் தேவைப்படும் முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு காவல்துறை செயல்படும் முறையை வகுக்க வேண்டும்.

பொதுமக்கள், குற்றங்களைத் திட்டமிடுவதிலும், நடவடிக்கை எடுப்பதிலும் பங்கு கொள்ள வேண்டும். குற்றங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகளை வீட்டிலிருந்தே எடுக்கப்பட வேண்டும். வீட்டில் உள்ளவர்களுக்குக் குற்றங்கள் நடக்காமல் இருக்க எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் சமுதாயக் காவல் பணி குறித்தும் எடுத்துக்கூறப்பட வேண்டும். அத்துடன் சுற்றி உள்ளவர்களைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு உதவும் தகவல்களை காவல் துறைக்குத் தெரிவிக்க வேண்டும்.



குற்றவாளிகளைப் பிடிக்க
மத்திய - மாநில உளவுத்துறை

இந்த நவீன உலகத்தில் பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து ஒன்றுக்கு மற்றொன்று உதவி புரிவதில்தான் குற்றங்களைத் தடுக்க முடியும். சிறைத்துறை, போக்குவரத்து, கல்வி, சமூகநலம், சமூகக் காவல்பணி போன்ற துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் குற்றங்களைத் தடுக்க முடியும். திட்டமிட்டு நிகழ்த்தும் குற்றங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில குற்றவாளிகள் சம்பந்தப்பட்டுள்ளனர். சில நேரங்களில் வெளிநாட்டு குற்றவாளிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். இந்தத் திட்டமிட்ட குற்றங்கள் நிகழ்த்தும் குழுக்களைக் கண்டுபிடிப்பதில் மத்திய, மாநில அரசுகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கையும், உளவுத்துறையும் இணைந்து செயல்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள், பெண்கள் வேலை செய்யும் இடங்களிலும் பொது இடங்களிலும் பாலியல் பலாத் காரம், வரதட்சணைக் கொடுமையில் மருமகள்கள் எரித்துக் கொல்லப்படுதல் போன்ற குற்றங்கள் நிகழ்வதற்கு சமூக நடவடிக்கைகளே காரணங்களாக உள்ளன. இதனால் தான் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க மாநிலம் முழுவதும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டேன்.

ஒவ்வொரு காவல் நிலையங்களிலும் மகளிர் காவல் பிரிவு நிறுவ வேண்டும் என்று உத்தரவிட்டேன். அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் வரும் புகார்களில் சம்பந்தப்பட்டவர்களை முதலில் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல புத்திமதிகள் கூறி சமாதானமாகப் போகுமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளை எடுத்துக் கூறி, பெண்கள் மீதான குற்றங்கள் நடக்காதவாறு தடுக்கப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றத்திற்கு சட்டம்

பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் நடக்காமல் தடுப்பதில் சமுதாயத்தின் பங்கும் இன்றியமையாதது. பாலியல் பலாத்காரங்கள் பற்றி உழைக்கும் பெண்களிடமும், மாணவிகளிடமும் எடுத்துக்கூற வேண்டும். இவர்களுக்கு இந்த பாலியல் பலாத்காரங்களைத் தடுப்பதற்குப் பயிற்சி அளித்து, இதை எதிர்கொள்ளும் மனவலிமையைப் பெற வைக்க வேண்டும். மகளிர் அமைப்புகள், அரசுசாரா நிறுவனங்கள், ஆசிரியைகள், மாணவிகள் ஆகியோர் காவல்துறையுடன் இணைந்து செயல்பட்டால் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க முடியும். இவைகள் மட்டுமே பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்துவிட முடியாது என்பதால் தான் இவ்வகை குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையும், அபராதமும் வழங்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.



தற்போது குற்றங்கள் நடைபெறும் முறையும், குற்றங்களும் பெரும் மாற்றம் பெற்றுள்ளது. இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதும், தடுப்பதும் மிகவும் சிக்கலாகிவருகிறது. இனதீவிரவாதமும், பழமை வாதமும், கலவரத்தையும், வெடிகுண்டையும் கொண்டு வந்துள்ளது. தொழில்மயமாதலும், பணமதிப்பு குறைவதாலும், போதை மருந்து கடத்தல் குற்றவாளி குழுக்களின் திட்டமிட்டக் குற்றங்களை அதிகரித்து வருகிறது. பொருளாதார தாராளமயமாக்கலால் அறிவு உழைப்புத் துறையினர் செய்யும் குற்றங்களும், ஊழல்களும் பெருகி வருகின்றன. தகவல் தொழில் நுட்பப் புரட்சி, கம்ப்யூட்டரில் வைரஸ் புகுத்தி இண்டர்நெட் வழியாகக் குற்றங்கள் புரிய வழி வகுத்துள்ளது.

இவை இந்தக் குற்றங்கள் எல்லாம் எப்படி தடுப்பது என்ற பெரும் கேள்வியை நம்முன் எழுப்பியுள்ளன.

நவீன குற்றங்களைத் தடுக்க பழைய முறையிலான கைரேகை எடுப்பது, காவலர் ரோந்து சுற்றுவது போன்றவைகளில் மட்டுமே தடுக்க முடியாது.

காவல்துறையில் தகவல் தொழில்நுட்பம்

நவீன குற்றவாளிகள் செல்போன், கம்ப்யூட்டரின் பாதுகாப்பை உடைத்து உள்ளே புகுந்து குற்றங்களைச்

செய்கின்றனர். இண்டர்நெட்டில் சாட்ரூம் வழியாக குற்றங்களைச் செய்கின்றனர். இந்நிலையில் குற்றங்களைத் தடுப்பதற்கு பழைய முறையிலேயே கைரேகை எடுப்பது, காவலர்கள் ரோந்து சுற்றுவது போன்ற முறைகளால் குற்றங்களைத் தடுக்க முடியாது.

இந்தக் குற்றங்களைத் தடுப்பது எப்படி ? என்ற கேள்வி எழுகிறது. இதற்குப் பதில் குற்றங்களைத் தடுப்பதற்கு பல துறைகள் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்துடன் குற்றங்களைத் தடுப்பதற்கு தொழில் நுட்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். குற்றங்களைத் தடுப்பதற்கு விஞ்ஞானத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கைரேகையை கம்ப்யூட்டர் ஸ்கேன் மூலம் எடுத்து தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் உடனே கிடைக்கும்படி செய்ய வேண்டும். கம்ப்யூட்டரில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கைரேகையை மற்ற கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

குற்றவாளிகள் கைரேகையைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையை குற்றம் புரிவோர் தெரிந்து கொண்டுள்ளனர். இதனால் கைரேகை போன்ற எந்த அடையாளங்களையும் விட்டுச் செல்லாமல் குற்றங்கள் புரிகின்றனர். இதனால் குற்றவாளிகள் தங்களை அறியாமலேயே விட்டுச் செல்லும் தலைமுடி போன்ற பொருட்களை வைத்து தடய அறிவியல் முறையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

மருந்துகள், மற்ற ரசாயனப் பொருட்களை வைத்து நவீன முறையில் குற்றங்களைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். காவல்துறையில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

குற்றவாளிகளை அடையாளம் காண கம்ப்யூட்டர்

இதன் மூலம் கண்காணிப்பு உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முக அமைப்பு, உதடு அமைப்பு போன்ற அங்க அடையாளங்களை உபயோகித்து கம்ப்யூட்டர் முறையில் குற்றவாளிகளை அடையாளம் காண வேண்டும். சாட்டிலைட் உதவியுடன் தகவல்களைப் பரிமாறிக் கொண்டு , குற்றங்கள் நடைபெறும் முறையைத் தெரிந்து கொண்டு, குற்றங்கள் நடப்பதைத் தடுக்க வேண்டும். நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செய்யும் குற்றங்களை, பழைய முறைகளைக் கையாளாமல் நவீன உத்திகளை உபயோகித்துக் கண்டுபிடிக்க வேண்டும்.



நமது காவல்துறை தொழில் நுட்பங்களை, அவ்வப்போது தனது உத்திகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தடய அறிவியலின் ஆராய்ச்சியில் நமது விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களும் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் காவல்துறையினருக்குப் பயிற்சி அளிக்கவும், காவல்துறையை நவீனப்படுத்தவும் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நமது சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளிக்கவும், குற்றங்கள் நிகழா வண்ணம் தடுக்கவும் காவல்துறைக்கு தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது.

குற்றம் நிகழாமல் தடுக்க நடவடிக்கை

நான் எனது உரையை முடிப்பதற்கு முன்பு குற்றத்தைத் தடுப்பது குறித்து வில்சன்,கீலிங் ஆகிய அறிஞர்கள் கூறிய பொன்மொழியை எடுத்துக் காட்ட விரும்புகின்றேன், இந்த அறிஞர்கள் 'மருத்துவர்கள் நோயாளிகளின் நோயை குணப்படுத்துவதைவிட, அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும்'.

அதுபோல் 'காவல் துறையினர் சமுதாயத்தில் உள்ளவர்களை ஜன்னல் கண்ணாடி உடைபடாமல் பார்த்துக் கொள்ளுவது போல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று கூறியுள்ளனர், இதில் ஜன்னல் கண்ணாடி உடைபடுதல் என்று குறிப்பிட்டிருப்பது ஆரோக்கியமான சமுதாயத்திற்கு அடையாளம் – குற்றம் நடக்காமல் தடுப்பது என்பதாகும். குற்றம் நடந்து முடிந்தவுடன் பெரிய அளவில் நடவடிக்கை எடுப்பதைவிட குற்றம் நிகழாமல் தடுக்க சிறிய அளவு நடவடிக்கை எடுப்பதே சிறந்தது.

இந்தக் கருத்தரங்கில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்கள், குற்றம் இல்லாத சமுதாயத்தை உருவாக்க உதவிகரமாக இருக்கும் என்று நம்புகின்றேன். பொதுமக்கள் பயமின்றி, அமைதியாக ஆக்கப்பூர்வமான வளர்ச்சி நடவடிக்கை எடுக்க உதவிகரமாக இருக்கும் என்றும் நம்புகிறேன். ★



# நீரிழிவு நோயை ஒழிக்க ஒரு மருந்தை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க வேண்டும்

## பெண் விஞ்ஞானிகள் கருத்தரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.1.2003 அன்று சென்னை தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற "பெண் விஞ்ஞானிகள், மகளிர் தொழில் முனைவோர் மற்றும் இந்தியாவின் உயிரிநுட்ப எதிர்காலம் பற்றிய தேசிய மாநாட்டை தொடக்கி வைத்து ஆற்றிய உரை :

பெண் விஞ்ஞானிகளுக்குப் புத்தாண்டு வாழ்த்து

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு உங்கள் அனைவருக்கும் வளமான, அமைதியான, வெற்றிகரமான, மகிழ்ச்சியான புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண் விஞ்ஞானிகள், மகளிர் தொழில் முனைவோர் மற்றும் இந்தியாவின் உயிரிநுட்ப எதிர்காலம் குறித்த தேசிய மாநாட்டைத் துவக்கி வைப்பதிலும், வெளிநாடுகளிலிருந்தும், இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து கலந்து கொண்டிருக்கும், தலைசிறந்த பெண் விஞ்ஞானிகளின் இந்தத் தனிச்சிறப்புமிக்க கூட்டத்தில், உங்கள் மத்தியில் தொடக்க உரையாற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

"நம்முடைய மதிப்புமிக்க இயற்கை வளத்தை எவ்வாறு செல்வமாக மாற்றுவது, இதனைக் கொண்டு வறுமையை முற்றிலும் ஒழித்துக் கட்டும் குறிக்கோளை அடைய ஓர் அர்த்தமுள்ளதாக இதனை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது" என அடிக்கடி என்னையே நான் கேட்டுக் கொள்வதுண்டு.

மனிதவள ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதிலிருந்தும், பொருளியல் வளத்தை அதிகமாக மதிப்பிடுவதிலிருந்தும், என்றைக்கு நாம் விடுபடப் போகிறோமோ, அதுவரை இந்த வறுமை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தக் கருத்தோட்டத்தில் தமிழ்நாட்டின் உயிரிநுட்ப எதிர்காலத்தை வடிவமைப்பதிலும், தற்போது நடைமுறையில் வடிவமைத்துக் கொண்டிருப்பதிலும் மேலும் தாங்கள் ஆற்றவேண்டிய பணி குறித்து விவாதிப்பதற்காக, மகளிர் தொழில் முனைவோர் மற்றும் பெண் விஞ்ஞானிகள் அடங்கிய இந்தக் கூட்டத்தைக் காலம் கருதி இன்று ஏற்பாடு செய்துள்ளதை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

வருங்காலத்தை வடிவமைப்பதில்
பெண் விஞ்ஞானிகள் பங்கு

நமது நாட்டின் உயிரிநுட்ப வருங்காலத்தை வடிவமைப்பதில் பெண் விஞ்ஞானிகள் எந்த வகையில்

ஆரம்பக் கட்டத்தில் அவர்களிடம் தோன்றும் நம்பிக்கை பிற்காலத்தில் தங்களது பணிக்காலத்தில் அவர்களை அதனை வெளிப்படுத்தாததற்கு என்ன காரணம், ஏன் இந்த இடைவெளி?

இந்த இடைவெளிக்குக் காரணம் அவர்கள் மீது சுமத்தப்படும் குடும்ப பாரம் தான்.

பால் இன வேற்றுமை வருமானத்தைப் பாதிக்கிறது என்பது வருந்தத்தக்க உண்மை. இது பணக்காரர் களையும், ஏழைகளையும் பாதிக்கிறது. ஆனால் வெவ்வேறு விதங்களில்.

பெண்கள் பணியிலும் சிறந்து விளங்க வேண்டும்

இந்தப் பால் இன வேற்றுமை உயிரியல் ரீதியாக முன்னரே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. அறிவியல் மற்றும் கல்வி சார்ந்த பணிகளின் பணியாளர்



கொள்கைகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். அவைகளில் பால் இன வேறுபாடுகள் குறித்து உயிர்ப்பு இருக்க வேண்டும். ஏனெனில் அப்போதுதான், வாழ்க்கையின் முற்பகுதியில் கல்வி அறிவு பெறுவதில் திறமை பெற்று விளங்கும் இப்பெண்கள், வெறும் புழுதியில் மலர்ந்த பூக்களாக மட்டும் இல்லாமல், பிற்காலப் பணிக்கால வாழ்க்கையிலும் அதனை அவர்கள் வெளிப்படுத்தும் விதத்திலும் சிறந்தவர் களாகவே இருக்க நாம் உறுதி செய்ய வேண்டும்.

நமது நாட்டின் எதிர்கால உயிரிநுட்ப வளர்ச்சியை வடிவமைப்பதில் பெண் விஞ்ஞானிகளுக்கும், மகளிர் தொழில் முனைவோர்களுக்கும் உள்ள பங்கைக் கவனமாகப் பரிசீலிக்க உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு முனையில் உங்களைப் போல் உயர் கல்வித் தகுதி பெற்று விளங்கும் மகளிர் உள்ளனர். மற்றொரு முனையில் படிப்பறிவற்ற, ஓரளவு படித்த கிராமத்துச் சகோதரிகள்.

தமிழில் தொழில் நுட்பத்தைக் கற்றுத்தர வேண்டும்

கிராமப்புறப் பெண்களுக்கு, வேலை செய்வதன் மூலம் கற்கலாம் என்கிற வழிமுறைப்படி சொல்லிக் கொடுத்தால், அந்தத் தொழில்நுட்பத்தை எளிதாகக் கற்றுத் தேர்ந்து, தங்களது நேரிடை வாழ்க்கையில் அதனை அவர்கள் பயன்படுத்துவார்கள். இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. அவர்கள் எழுத்தறிவற்றவர் களாக இருக்கலாம், ஓரளவு கற்றவர்களாக இருக்கலாம். ஆனால் இந்த முறையில் அவர்கள் தொழில்நுட்பப் பயிற்சியை நன்கு ஆளத் தெரிந்துக் கொள்கின்றனர்.

இதற்கு மிகவும் அடிப்படையாக இருப்பது, அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக, தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டும், மற்றும் செய்முறைப் பயிற்சி மூலமும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இருபால் வேற்றுமையைக் குறைக்க வேண்டும்

கணினித் தொழில்நுட்ப அடிப்படையிலும், உயிரிநுட்பத் தொழிலடிப்படையிலும், கிராமப்புற எழுத்தறிவற்ற, ஓரளவு படித்த மகளிர்க்குப் பயிற்சிக் கொடுப்பதன் மூலம், இருபால் இனவேற்றுமையை நம்மால் குறைக்க முடியும். இதன் மூலம், இதனை ஓர் இயக்கமாக நடத்திச் செல்வதன் மூலம், சமூகத்தில் பால் இன வேற்றுமையற்ற ஒரு நிலையை, ஒரு சகாப்தத்தை நாம் கொண்டுவர முடியும்.

மனித குலத்தை வசதியாக வைத்துள்ள பல்வேறு தொழில்நுட்ப அறிவுகள், மேலும் பயன்படும் அளவுக்கு, அதனைக் கிராமப்புற மக்களுக்கும் எடுத்துச் சென்று கொடுக்க வேண்டும். இதற்குத் தேவைப்படும் மகளிர் தொழில்நுட்ப அறிஞர்களைப் பணியில் அமர்த்த எனது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

இவர்கள் மூலம் பொதுநன்மைக்குரிய தேவையான உள் கட்டமைப்பு ஏற்படுத்தி இப்புதிய தொழில்நுட்ப அறிவை வணிக நோக்கில் தர இயலும்.

இந்தியாவிலேயே, முதன் முதலாக, தமிழ்நாட்டில் அதுவும் சென்னையில் தான் "பெண்களுக்கான உயிர்நுட்ப தொழில்பூங்கா" அமைக்கப்பட்டுள்ளது. இது எனக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது.

இதில் முன்னோடிகளாக ஈடுபட்டு வளர்ச்சி கண்டு இங்கே, கண்காட்சியிலும், அதனை மெய்ப்பித்து விளக்கிக் காட்டப்பட்டுள்ளதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

திண்டுக்கல்லில் தொழில் பூங்கா

திண்டுக்கல் மாவட்டத்தில் "சுற்றுச்சூழல் பாதிக்காத தொழில்முனைவுப் பூங்கா" அமைக்கும் திட்டம் உள்ளது. விரைவில் இது செயல்படத் துவங்கும்.



இதனால், தோட்டப்பயிர்த் துறையிலும், மூலிகைத் துறையிலும், உணவுப் பதப்படுத்தலிலும், மறுசுழற்சி சக்தி உருவாக்குதல் போன்ற நுட்பத்துறையிலும், பெண்கள் ஈடுபட்டு, புதிய தொழில்முனைவோராக வளர அதிக வாய்ப்புகள் ஏற்படும்.

தமிழகத்தின் எல்லாக் குறிப்பிடத் தகுந்த நகரங் களிலும், பேரூர்களிலும், "உணவுப் பூங்காக்களை"த் தொடக்கிச் செயல்படுத்தும் திட்டம் எனது அரசில் உள்ளது. இதனால் கிராமங்களும், நகரங்களும் பரஸ்பரம் பயன்படும் வகையில் இது அமைந்திருக்கும். கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களை, நகர்ப்புறவாசிகள் – நுகர்வோர்கள் இருவரிடையே இது ஓர் இணைப்பாக இருக்கும்.

காய்கறிகளையும், பழங்களையும் உற்பத்திச் செய்வதில் உலகிலேயே, நமது நாடு 2–ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறது. விவசாயிகள் விளைவிப்பதில் 10 சதவீதத்தைத் தான் நாம் பதப்படுத்திப் பயன்படுத்து கிறோம். இதில் அதிக அளவு வீணாக்கப்படுகிறது என்பது தான் உண்மை.

வெண்மைப் புரட்சியைப் பற்றி உங்களுக்கு இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். இவ்வெண்மைப் புரட்சியில், பால் உற்பத்தி, பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து செயல்பட்டதால் வெற்றிபெற முடிந்தது.

அதே முறையை இதிலும் பயன்படுத்தினால் எளிதில் கெடக்கூடிய காய், கனிகளைப் பாதுகாத்து, பயன்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வறுமையை ஒழித்துக் கட்டுவதிலும் உறுதி**

வறுமையை ஒழித்துக்கட்டுவதிலும், அனைத்துத் துறைகளிலும் அனைத்து வளர்ச்சியும் ஏற்படவும், தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்துவதில் அரசு உறுதி கொண்டுள்ளது.

ரூ.62.50 கோடியில் "டிட்கோ", "வாழ்க்கை அறிவியல் மையம்" திட்டத்திற்கு, அமெரிக்க, கார்நெல் பல்கலைக்கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் 25.8.2001–இல் என முன்பாகச் செய்து கொள்ளப்பட்டது. இந்த வகையில் நாட்டிலேயே முதலாவதான இத்திட்டம், டிசம்பர் 2003–இல் நிறைவு பெற்றுத் தொடக்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டின் துரித வளர்ச்சிக்கு, உயர்வகை தொழில்நுட்ப் அறிவைப் பயன்படுத்துவதில், எனது அரசு கொண்டுள்ள அக்கறைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இந்தப் பிரமிப்பான முயற்சியில் உங்களையும் பங்கு கொண்டு, உதவிட இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**முன்னோடியாகத் திகழ வேண்டும்**

பெண் விஞ்ஞானிகள் என்கிற முறையில் பலவழிகளில் நீங்கள் உதவிட முடியும். முதலாவதாக, அறிவியலையும், தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி, ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு, ஆரம்பக் கல்வி, ஆடை நெய்தல், உறைவிடம் உருவாக்குதல், ஊட்டச்சத்து, குடிநீர் ஆகிய அடிப்படை மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நீங்கள் முன்கை எடுத்துச் செல்லலாம்.

இரண்டாவதாக, எழுத்தறிவற்ற, ஓரளவு படித்த கிராமப்புறச் சகோதரிகளுக்கு சந்தை சார்ந்த திறமைகளை வளர்த்துக்கொள்ள நீங்கள் உதவி செய்யலாம். இதனால் அவர்களது உழைப்புக்கும், உழைக்கும் நேரத்திற்கும், கூடிய மதிப்பைச் சேர்க்க முடியும்.

மூன்றாவதாக, பொதுநன்மைக்கும், வணிக இலாபத்திற்கும், தீங்கு ஏற்படாத, ஒன்றை ஒன்று ஆதரிக்கிற வகையில், ஒரு புதிய அறிவியல் சார்ந்த அறநெறியை நீங்கள் காட்ட வேண்டும்.

தொழில்நுட்ப அறிவின் பயன்பாடு, நோக்கம் எட்டாத மக்களையும் எட்ட வேண்டும் என்பதையும் இந்த அறநெறிக்குள் அடங்குவதை நீங்கள் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

தொழில்நுட்ப அறிவு இருபுறமும் கூர்மையுள்ள கத்தி போன்றது.

2002–ஆம் ஆண்டில், நம்மையெல்லாம் சற்றே நிலைகுலைய வைத்த வகையில், 31 வயது பெண்ணின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட திசுக்களிலிருந்து, ஈவ் என்கிற குளோனிங் குழந்தை பிறந்துள்ளதை நாம் அறிவோம்.

**அறிவியலைத் தவறாகப் பயன்படுத்த வேண்டாம்**

மரபணுப் பொறியியல்படி உருவாகியுள்ள இந்தக் குளோனிங் குழந்தை, அறிவியலைத் தவ்றாகப் பயன்படுத்துவதைக் காட்டுகிறது. இது கண்டிக்கத்தக்கது. மேலும், வெறுப்பூட்டுவதாகவும் உள்ளது.

மரபணு ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்துவதை உயிரிநுட்ப பயங்கரவாதம் எனக்கூறலாம். இதனால் புதுவகையிலான, பெரியம்மை போன்ற நோய்கள் தான் பரவும். மனித இனத்தை அழிக்கும் இதுபோன்ற செயல் தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன்.

வேறொரு கோணத்தில் பார்த்தால், உயிரியல் மூலக்கூறு பற்றிய மரபணுவை நல்ல பல குறிப்பிட்ட செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். இதன்மூலம், விலங்கு மற்றும் மனித இன நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு மருந்துகளையும் உருவாக்கி உதவி செய்ய முடியும்.

கடல் முகத்துவாரங்களில் காணப்படும் சதுப்புநிலை மாங்குரோவ் காடுகளில் உப்பு நீரில் வளரும் மரங்களை ஆதாரமாகக் கொண்டு அதைப்போலவே, உப்புச்சத்தைக் கிரகிக்காமல், நெல் மற்றும் பருப்பு வகை தானியங்களை, உருவாக்கும் முயற்சியில், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை ஈடுபட்டுள்ளது. இது ஒரு புரட்சிகர நடைமுறையாகும். தமிழ்நாட்டில், எங்கெல்லாம் உப்புநீர் நிலத்தடியில் உள்ளதோ, அங்கே, வேளாண்மை

உதவி செய்ய இயலும் என்பதை விவாதிக்க, நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து மகளிர் விஞ்ஞானிகளையும், மகளிர் தொழில் முனைவோரையும் இங்கே வரவழைத்து இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ள, இந்த அரிய வகையான முயற்சிக்காக, பெண்களுக்கான, 1.பொன்விழா உயிரிநுட்பப் பூங்காவையும், 2. மகளிர் மேம்பாட்டிற்கான தமிழ்நாடு நிறுவனத்தையும், 3. எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தையும், நான் உண்மையிலேயே பாராட்டியே ஆகவேண்டும்.



நம்முடைய நாடு, ஒரு பெருமளவிலான பன்முக உயிரிநுட்ப வளத்தைப் பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு பல்வேறு வகைப்பட்ட இயற்கைத் தாவரங்களையும், பூக்களையும் பரந்த அளவில் தன்னகத்தே கொண்டதாக விளங்குகிறது. இருந்தாலும், இவ்வளவு பன்முக உயிரிநுட்ப வளங்களை, பெருமளவில் கொண்டிருந்தும், வறுமையும், வேலையின்மையும் நாட்டின் நாலா பக்கங்களிலும் பரவித்தான் உள்ளன.

ஒருங்கிணைந்து வாழ்ந்தால் எதிர்காலம் பிரகாசம்

இந்த நிலை ஒரு புரியாத புதிராக, விசித்திர விளையாட்டாகத்தான் உண்மையில் உள்ளது. காரணம் இங்கே வளமிகுந்த இயற்கையும், வறுமை மிகுந்த மக்களும் இணைந்தே வாழ்கிறார்கள்.

உயிரியல் என்பது உயிர் வாழும் இனங்களைப் பற்றிய அறிவியலாகும். நாம் வாழும் இந்த பூமியாகிய கோளில் உள்ள உயிர்களின் எதிர்காலத்தைப் பற்றியும் இது குறிக்கும். நாம் இந்த பூமியில் இயற்கையுடன் ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்பதையும், நாம் ஒவ்வொருவரும் அதேபோன்று ஒருங்கிணைந்து வாழவேண்டும் என்பதையும் சரியாகப் புரிந்து கொண்டால், எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

இயற்கையோடு இயைந்த வாழ்வுதான் நமது இந்தியப் பண்பாட்டின் தத்துவத்தின் அடிப்படையாக இருக்கிறது. அனைத்து வகையான உயிரினங்களும் புனிதமானவை என நாம் கருதுகிறோம்.

அந்த ஒருங்கிணைந்த உருவாக்கத்திற்கு, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பயன்களை நாம் சமமாகப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நம்முடைய முன்னேற்ற முயற்சிகள், சமூக உள் இணைப்பிலுள்ளது. சமூகப் புறந்தள்ளுதலில் இல்லை என்கிற கொள்கையின் அடிப்படையில் இருக்க வேண்டும். மேலும் இந்த முயற்சியில் பாலின பேதம் பாராட்டாமல் இருபால் இனத்தவரும் சமமாகப் பாவிப்பது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

உலகப் பெண்கள் மாநாடு 1995-ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்றது. அதுபோலவே, பெய்ஜிங் பிளஸ் 5 பற்றி மறு ஆய்வு ஐ.நா.வில் 2000-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இனியும் காலம் தாழ்த்தக் கூடாது

"மகளிர் சார்ந்த வறுமையின் வளர்ச்சி" என்று வர்ணிக்கப்படுகிற இந்தப் போக்கு மாற்றப்படுவதற்கான முயற்சியில் நாம் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது என இரு அமைப்புகளும் சந்தேகத்துக்கிடமின்றி இதனைத் தெரிவித்துள்ளன.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் கிராமங்களில் வாழும் மிகப்பெரும்பான்மையான பெண்களைச் சென்றடையவில்லை.

உதாரணமாக, வேளாண்மையில் ஈடுபடும் பெண்களுக்குக் கொடுக்கப்படும் வேலைகள் யாவும், சோர்வு உண்டாக்குவதாகவும், கடின உழைப்பைக் கொடுப்பதாகவுமே தொடர்ந்து இருந்து வருகிறது. இருந்தும் அவர்களுக்குப் போதிய ஊதியம் கிடைப்பதில்லை.

பெண்களின் வேலைப் பளுவைக் குறைக்க, தொழில்நுட்ப அறிவு

வீட்டைப் பராமரிப்பதிலும், குழந்தையை வளர்ப்பதிலும் பிற பொருளாதார நடவடிக்கைகளிலும், அவர்கள் ஈடுபட வேண்டியுள்ளது. அவர்களது சக்தியும், நேரமும் இந்த அனைத்து வேலைப் பளுவையும் சார்ந்ததாக உள்ளது.

பெண்கள் அனைவருமே அதிக வேலைப்பளுவை சுமக்கின்றனர், அதே நேரம் குறைவான சம்பளம் பெறுகின்றனர். ஏன் அநேக தடவைகளில் மிகவும் குறைந்த கூலியையே அவர்கள் பெறுகின்றனர்.

அதனால்தான், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கிராமப்புற பெண்களின் தினசரி வாழ்க்கையில் நீண்ட மணி நேரம் வேலை செய்வதைக் குறைக்க உதவி செய்யும், தொழில்நுட்ப அறிவை அறிமுகப்படுத்துவதில் முக்கியத்துவம் கொடுத்து வருவதை நான் வரவேற்கிறேன். இவ்வமைப்பு அவர்களுக்கு வருமான உயர்வுக்கான ஆதாரத்தையும் வளர்த்து வருகிறது.

இதனால் அவர்கள் முற்றிலும் பயிற்சி பெறாத பணியாளர் என்பதிலிருந்து ஓரளவு பயிற்சி பெற்ற பணியாளர் நிலைக்கு அவர்களை உருவாக்குகிறது.

இந்த நிலை மாற்றத்தினால் அவர்களது வருமானம் மேலும் உயர்வடைகிறது. இதனால் வறுமை அகலுகிறது. அதோடு இந்நிலை நமது குறிக்கோளாக வேளாண்மையில் மதிப்பு கூடுதல், தரம் மற்றும் உற்பத்தி ஆகியவற்றை எய்தவும் உதவி செய்கிறது.

எடை குறைந்த குழந்தை -
சத்துக் குறைவே காரணம்

அக்கறையுடன் பார்க்க வேண்டிய இன்னொரு துறையும் உள்ளது. தாய்மார்களுக்கு எடைகுறைந்த குழந்தைகள் பிறப்பது மிகவும் அதிக அளவில் உள்ளன. மகப்பேறு காலத்திலும், கருவுற்ற காலத்திலும் கருவுக்கும், தாய்க்கும் சத்துக்குறைந்த உணவு கிடைப்பதே இதற்குக் காரணம்.

உடல் எடை குறைந்த குழந்தை பிறப்பிலேயே மூளை வளர்ச்சிக் குறைவோடு பிறக்கும் ஊனத்தைப் பெற்றிருக்கிறது. பிறந்த பச்சிளம் குழந்தை என்ன தவறு செய்தது?

முழுமையான உடல் வளர்ச்சிக்குத் தேவையான முழு ஊட்டச்சத்து அதற்கு மறுக்கப்பட்டதால் தானே அந்தக் குழந்தை ஊனமாகப் பிறந்தது? தனது உள்ளார்ந்த மரபு வழி சக்தியை வளர்த்துக் கொள்ள எல்லா உரிமையையும் அந்தக் குழந்தை பெற்றிருக்கிறது தானே!

ஊட்டச்சத்து மையம் அமைக்க வேண்டும்

மனையியல் பட்டதாரிகளை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் ஊட்டச்சத்து சிகிச்சை மையங்களையும், பள்ளி வளாக ஊட்டச்சத்து தோட்டங்களையும் ஆங்காங்கே ஏற்படுத்தி அமைக்கவேண்டும் என்பதுதான்.

இவ்வாறு அமைப்பதால் பரவலாகக் காணப்படும் வைட்டமின் ஏ.சி. மற்றும் இரும்புச்சத்துக் குறைபாடு ஆகியவை தடுக்கப்படும். இதற்குத் தேவையான தோட்டப்பயிர்கள் விளைவிப்பதால் அக்குறைபாடுகள் தானாகவே நீங்கும் என்பதை இதன் மூலம் வெளிப்படுத்தலாம்.

உள்நாட்டு உணவுக்காகவும் மற்றும் உள்ளூர் சந்தை வெளியூர் சந்தைக்காகவும் வீட்டு நுகர்வுக்காகவும் தமிழ்நாட்டில் தோட்டப் பயிரை வளர்க்கும் ஒரு புரட்சியை ஏற்படுத்த எனது அரசு தீர்மானித்துள்ளது.

தரிசு நில மேம்பாடு மற்றும் நீர்நிலை ஆதாரநிலை மேம்பாட்டுத் திட்டங்கள், தமிழ்நாட்டில் என்னால் தொடக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் 50 இலட்சம் ஏக்கரில் 5 ஆண்டுகால அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இதனால் விவசாயம் சார்ந்த காடுகள் வளர்ச்சியும், பருப்பு வகைகள் வேளாண்மையும் மேற்கொள்ளப்படும். குடும்பங்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துப் பாதுகாப்பை இவைகள் வழங்கும். இதனால் புரோட்டின் சத்து இல்லாத ஊட்டச்சத்துக் குறைவு முற்றிலும் துடைத்தெறியப்படும். இதனை முற்றிலும் ஒழிக்க மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும். வறுமையும் இதற்குத் தடையாக உள்ளது. எனவே இதற்குக் கொஞ்ச காலம் பிடிக்கும்.

இப்படிப்பட்ட தொடர்ந்த முயற்சியினால், நுண் ஊட்டச்சத்துக் குறைந்தமையால் மறைந்திருக்கும் பசியை நாம் விரட்டியடிக்க முடியும். இதையும் 3 அல்லது 4 ஆண்டு கால கட்டத்தில் நிறைவேற்றிட முடியும்.

பள்ளித் தேர்வுகளிலும், பல்கலைக் கழகத் தேர்வுகளிலும், பெருமளவில் பெண்கள் வெற்றி



பெறுகின்றனர். ஆனால் அறிவியல் மற்றும் கல்வித் துறைகளில் அவர்கள் வகிக்கும் பங்கு மிகவும் குறைந்த சதவீதமாகவே உள்ளது.

பொறியியல், விவசாயம், மருத்துவம் ஆகிய தொழிற்படிப்புகளில் நடைபெறும் தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுப்பதும், பதக்கம் மற்றும் சான்று பெறுவதும் அதிக அளவில் பெண்களே என்பதை நாம் பார்க்கின்றோம்.

பெண்கள் திறமையைக் காட்டாததற்கு
என்ன காரணம்?

உயர் மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சி பெறும் பெண்கள், பின்னாளில் தங்கள் பணி வாழ்க்கையில் ஏன் இந்தத் திறமையைக் காட்டுவதில்லை? இதுதான் நம்முன் உள்ள கேள்வி.

வளர்ச்சிக்கும், தானிய உற்பத்திக்கும் இது மிகப் பெரிய வழிவகுக்கும்.

**வறட்சிப் பகுதியிலும் வேளாண் உற்பத்தி**

இதைப்போலவே, தண்ணீர் இல்லாத வறட்சிப் பகுதிகளிலும், வறட்சியை எதிர்த்து வளரும் வேளாண் உற்பத்தியும் செய்ய இயலும் என்பதை நான் தெரிந்து கொண்டுள்ளேன்.

ஒவ்வொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பிலும் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. தொழில்நுட்ப வளர்ச்சி ஒவ்வொன்றையும், அறநெறிப்பார்வைக்கு உட்படுத்த வேண்டும். அதனைச் செய்ய இயலாவிட்டால் மனித இனத்திற்குப் பேரழிவுதான் கிடைக்கும்.

அறிவியல் சோதனைகளில் ஈடுபடும் விஞ்ஞானிகள் தாங்களாகவே அறநெறிகளை தங்கள் சோதனைகளில் கடைபிடிக்க வேண்டும்.

இந்தக் கட்டத்தில், இந்தியப் பெண் விஞ்ஞானிகள் தங்கள் நாட்டின் 5 ஆயிரம் ஆண்டு காலப் பாரம்பரிய ஆன்மீக அறிவைப் பயன்படுத்திக் கொண்டு தேவையான ஆலோசனையை வழங்கலாம்.

இந்தியப் பண்பாட்டையும், ஆன்மீக மதிப்பையும், எப்போதும் உயர்வாகக் கடைப்பிடித்து வரும் இந்தியப் பெண்கள் வழியில் வந்த நீங்களும், "அறிவியலுக்கு ஆன்மீக முகத்தை" வடிவமைத்துத் தரும் முயற்சியில் முன்கை எடுத்துத் தேவையான ஆலோசனை உதவிகள் வழங்கிட வேண்டும். இதை நீங்கள் ஒரு உறுதிப்பாட்டுடன் செய்வீர்களானால், நாளையே, இம்முயற்சி, ஓர் உலகளாவிய இயக்கமாக உருமாறும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

**நீரிழிவு நோய்க்குப் புதிய மருந்து**

உயிரி – தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி, மனித இன்சுலின் திரவத்தை வெற்றிகரமாக, உற்பத்தி செய்ய இயலும் என, டாக்டர் கிரன் ஷா, தன்னுடைய சிறப்பு உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தியப் பெண் விஞ்ஞானிகளாகிய உங்களுக்கு, எனது வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீரிழிவு நோய்க்கு ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்க உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எய்ட்சுக்கு அடுத்ததாக, மனித இனத்தை அதிக அளவு பாதிக்கும் நோய், குறிப்பாக இந்தியாவில் நீரிழிவு நோய் தான். எய்ட்ஸ் நோயைப் பொறுத்தவரையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து, தொடாமலும், தொட முடியாமலும் தொடராத வகையிலும் தன்னை எய்ட்ஸிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இயலும்.

நீரிழிவு நோயைப் பொறுத்தவரையில் இது உலகமெங்கும் பரவியுள்ளது. இது இளைஞர்களையும், சிறுவர்களையும் கூட விட்டு வைப்பதில்லை.

இன்றைய நிலையில், 2 அல்லது 3 வயது குழந்தைகள் கூட, நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

ஆரம்ப காலத்தில் 2–ஆம் வகை நீரிழிவு நோய் முதியவர்களை மட்டுமே தாக்கும் நோயாக இருந்தது. 40 வயதுக்கு மேல்தான் இந்த நோய் வரும் என நம்பப்பட்டு வந்தது. குறிப்பாக மன அழுத்தத்தினால் இது வருவதாகக் கருதப்பட்டது.

ஆனால் இன்றோ இந்நோய் 3 வயது 2 வயது குழந்தைகளுக்கும் இருப்பதைப் பார்க்கிறோம். இது எப்படி நிகழ்கிறது, ஏன் ஏற்படுகிறது என்பதற்கு விளக்கம் தெரியாத நிலையில் விஞ்ஞானிகள் இருந்து வருகின்றனர். இன்சுலின் இந்த வியாதியைக் கட்டுப்படுத்தும். ஆனால் நோயை அறவே ஒழிக்காது.

நீரிழிவு நோயை முற்றாக ஒழிக்கும் ஒரு மருந்தை உருவாக்கும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் அக்கறையுடன் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய நிலையில் நீரிழிவு நோய்க்குத் தீர்வே இல்லை என மருத்துவ உலகம் நம்புகிறது. இப்படித்தான் 50 ஆண்டுகளுக்கு முன்பு, உயிரி தொழில்நுட்பம் என்கிற ஒரு வார்த்தையை யாரும் கேட்டதில்லை என டாக்டர் ஷா தெரிவித்தார்.

உயிரி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பிரமிக்கத்தக்க கண்டுபிடிப்புகள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.

**உறுதியுடன் முயன்றால் முடியாதது இல்லை**

உறுதியுடனும் ஈடுபாட்டுடனும் முயன்றால் முடியாதது இல்லை என்கிற உணர்வுடன் நாம் கடமையாற்றினால் எதுவுமே முடியாத ஒன்றல்ல. நீங்கள் இம்முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த முயற்சியில் இந்தியப் பெண் விஞ்ஞானிகள் அனைத்து வெற்றிகளையும் அடைய வேண்டும் என நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டை, வாய்ப்புகள் நிறைந்த ஒரு மாநிலமாக, புதியவற்றைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு நம்பிக்கை வளர்க்கும் ஒரு மாநிலமாக விஞ்ஞானிகளுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் ஒரு நம்பிக்கை அளிக்கும் மாநிலமாக உருவாக்க நான் விரும்புகிறேன்.

**சிறந்த எதிர்காலம் அமைந்திட வாழ்த்துக்கள்**

நமது நாட்டிற்கு ஒரு சிறந்த உயிரிநுட்ப எதிர்காலம் அமைந்திட அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் உள்ள நல்லவற்றைப்பயன்படுத்தும் தொடர்ந்த முயற்சியில் நீங்கள் வெற்றிபெற எனது வாழ்த்துக்கள். உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்பு வாய்ந்த முக்கியத்துவமிக்க நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தமைக்காக டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கும், பிற ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். •



## நாமக்கல் மாவட்டத்தில்

# மழை நீர் சேகரிப்பு

உலகத்திலுள்ள ஜீவராசிகள், செடிகள், மரங்கள் உயிர் வாழ்வதற்கு இயற்கையன்னை அளித்துள்ள பரிசுதான் தண்ணீர் என்றால் அது மிகையாகாது. இந்த தண்ணீரின் முக்கியத்துவம் பற்றி தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறும் போது, "இந்த வானத்திலிருந்து ஒரு துளி நீர் விழவில்லையென்றால் இந்த உலகத்தில் ஒரு புல் கூட முளைப்பது அரிது" என்று கூறுகின்றார். நமது பூமியில் தண்ணீர் மட்டும் மூன்றில் 2 பங்கு உள்ளது. இந்த தண்ணீர் கடலிலிருந்து நீராவியாக மாறி, மேகமாக வலம் வந்து, மழையாகப் பொழிந்து, அருவியாக ஓடி, ஓரளவு மண்ணில் புகுந்து நிலத்தடி நீரை உயர்த்துகின்றது. பேரளவு ஆறாக ஓடி கடலில் கலக்கின்றது. மீண்டும் நீராவியாக மாறி வானத்தையடைகின்றது. இதைத்தான் தண்ணீரின் சுழற்சி என்பார்கள். இப்படி கடலில் வீணாகக் கலக்கும் நீரை நிலத்தடியில் சேமிப்பது தான் மழைநீர் சேகரிப்பு.



நகரங்களில் அடுக்குமாடி வீடுகளில் கான்கிரிட் தளங்கள் அமைக்கப்படுவதால் மழை காலத்தில் பெய்கின்ற மழை நீர் அந்த இடத்திலேயே மண்ணில் ஊடுருவ முடியாமல் சாக்கடையில் கலந்து வெளியேறிவிடுகிறது.

கிராமப்பகுதிகளில் விழுகின்ற தண்ணீர் மிகச் சிறிதளவு மட்டுமே மண்ணில் சேர்கிறது. அதிகப்படியான நீர் சாலைகளில் ஓடி வெளியேறுகிறது. இந்த மழை நீர் சில நேரங்களில் வெள்ளமாக உருவெடுத்து பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இவ்வாறு நகரத்திலும், கிராமப் பகுதிகளிலும் வெளியே வீணாகச் செல்லுகின்ற நீரை வெள்ளமாக உருவெடுக்கின்ற நீரை சேமித்து நிலத்தடியில் செலுத்துவதும், அதன் பயனாக நிலத்தடியில் தண்ணீர் மட்டத்தை உயர்த்துவதும் தான் நமது அரசின் குறிக்கோள்.

இதற்காக தெளிவாகத் திட்டமிட்டு குறைந்த செலவில் பல்வேறு விதமான மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உத்திகளை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது நமது அரசு.

இந்த பல்வேறு முறைகளில் ஒன்றுதான் வீடுகளின் மேற்பரப்பில் பொழிகின்ற மழை நீரை சேமிக்கும் உத்தியாகும். மொட்டை மாடியிலிருந்து வரும் மழை நீரை வடிகுழாய் மூலமாக தரை மட்டத்தின் கீழே செங்கல் ஜல்லி நிரப்பிய (2அடி X 2அடி X 3 அடி) தொட்டி மூலம் வடிகட்டி கிணற்றில் சேருமாறு செய்யலாம். தனி வீடுகளிலும், அடுக்குமாடி வீடுகளிலும் கிணறுகள் இருந்தால் மொட்டை மாடி குழாய்களை இணைத்துத் தொட்டியில் விழும் நீர் சுத்தமாகவே இருக்கும் என்பதால் இதை நாம் அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்தலாம். இந்த வடிகட்டும் தொட்டி அமைக்க ஆகும் செலவு ரூ.1,200/– ஆகும்.

கிணறுகள் இல்லாதவர்கள் குழியை அமைத்து நிலத்தடியில் செலுத்தும் வகைகளில் மணல், செங்கல், ஜல்லி முதலியவற்றை பயன்படுத்த வேண்டும். இதற்குச்

செலவினம் ரூ.2,500/- ஆகும். இதேபோன்று, சுற்றுச்சுவரையொட்டி கூழாங்கல் படுக்கையை பெரிய அளவில் ரூ.5,000/-க்குள் அமைக்கலாம். பெரியத் திருமண மண்டபங்களிலும், சினிமா அரங்குகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கியும், கிராமப்பகுதிகளில் கசிவு நீர்க்குட்டைகள், தடுப்பு அணைகள் முதலியவற்றையும் அமைக்கலாம்.

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை மக்களிடையே வலியுறுத்தி, விளக்கியதன் பேரில் நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றது. நகரப்பகுதிகளில் நகராட்சிப் பொறியாளர்களின் துணை கொண்டு வீடுகளில் சிறப்பான வகையில் மழைநீர் சேகரிப்புச் செய்ய பலர் முன் வந்து செய்துள்ளார்கள். கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதியிலும் பல்வேறு துறைகளின் உதவியுடன் நிறையப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் கிராமங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 5,778 தனியார் வீடுகள் மற்றும் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,480 அரசுக் கட்டிடங்களில் இந்த அமைப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளின் மூலம் ஆழ்துளைக் கிணறுகள் மட்டும் 2,688 அமைக்கப்பட்டுள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை, வனத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மண் அரிப்பைத் தடுத்து தண்ணீரைச் சேமிக்கும் வகையில் 730 இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. கோவில்கள், குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் 104 எண்ணிக்கைகள் செம்மைப்படுத்தப்பட்டு, மழைநீர் சேகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு 11.5 கோடி லிட்டர் மழைநீர் சேகரிக்க முடியும். மேலும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நூற்பாலை, சேகோ தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகள், தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகள் போன்றவற்றிலும், மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திடத் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**- எஸ்.நடராஜன்**
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நாமக்கல் மாவட்டம்.*

## வெளி மாநிலத்தவர் பயனடையும் இரயில் - ரோடு சுற்றுலா

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாபெரும் ஒரு இயக்கத்தை படைத்துள்ளது. இது நாள் வரை வெளி மாநில சுற்றுலாப் பயணிகள் அவர்களாகவே நமது மாநிலத்திற்கு வந்து அவர்களது சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள். அப்படி அவர்கள் வரும்பொழுது பல இன்னல்களுக்கு ஆளாவது உண்டு. அதாவது முதலில் மொழிப் பிரச்சினை, தங்கும் இடப் பிரச்சினை, ஊர்ப் பிரச்சினை இது போல் பல. இவற்றை எல்லாம் மனதில் கொண்டு தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கொல்கத்தா, மும்பாய், டெல்லி, போன்ற இடங்களிலிருந்து இரயிலில் பயணமுன் பதிவு செய்து கொடுத்து, அவர்கள் சென்னை வந்திறங்குகிற சுற்றுலாப் பயணிகளை சொகுசுப் பேருந்தில் ஏற்றி தமிழ்நாட்டில் உள்ள முக்கிய இடங்களைக் காண்பித்து, தங்க இடம் கொடுத்து, உணவு கொடுத்து அவர்களுக்கு மீண்டும் அவர்கள் தத்தம் ஊர்களுக்கு செல்ல இரயிலில் முன் பதிவு செய்து மகிழ்வுடன் வழி அனுப்பி வைக்கப்படுகின்றனர். இந்தத் திட்டம் அனைத்து மாநில சுற்றுலாப் பயணிகளிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி எண் : 25384444

Internet URL :
**http :// www. tamilnadu tourism org.**
E.mail : **ttdc @ md3. vsnl. net. in.**

★ ★ ★



(32ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர மக்களைப் பாதிக்கின்ற வகையில் அரசியல் காரணங்களுக்காக திரு. கருணாநிதி அதனை உதாசீனப்படுத்தியது எந்த வகையில் நியாயம்? அப்போதே நான் தொடக்கி வைத்த, திட்டத்தை, Global Tenders நிலைக்குக் கொண்டு வந்திருந்த புதிய வீராணம் திட்டத்தை, தொடர்ந்து திரு கருணாநிதி செயல்படுத்தியிருந்தால், சுமார் ஒன்றரை வருட காலத்தில் அதாவது 1997 ஆம் ஆண்டின் இறுதியில், அந்தத் திட்டத்தை முடித்து இருக்கலாம். 1998- லிருந்து தண்ணீர் வர தொடங்கியிருக்கும். சென்னை மாநகரின் குடிநீர் பற்றாக்குறையும் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் அதை திரு கருணாநிதி செய்யாத காரணத்தால், அப்போதே தீர்க்கப்பட்டிருக்கக் கூடிய சென்னை மாநகரக் குடிநீர்ப் பிரச்சினை தற்போதும் நிலவி வருகிறது. அரும்பாடுபட்டு, பகீரதப் பிரயத்தனம் செய்து நான் உலக வங்கி உதவியோடு கொண்டு வந்த புதிய வீராணம் திட்டத்தை பாழ்படுத்தி திரு கருணாநிதி செய்த மாபெரும் தவறினால், மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அதற்காகப் புதியதோர் முயற்சியை தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய நல்ல திட்டத்தை எந்த ஒரு பொறுப்புள்ள முதலமைச்சராவது இவ்வாறு பாழ்படுத்த துணிவாரா ? என்னால் தொடங்கப்பட்ட திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக அந்தத் திட்டத்தின் பயன் தொழில்நுட்ப ரீதியாக வல்லுநர்களால் உறுதி செய்யப்பட்ட பின்னர் கூட அவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு திரு கருணாநிதி அந்த திட்டத்தை சிதைத்துவிட்ட காரணத்தால், 5 ஆண்டுகள் வீணாக்கப்பட்டு, பெரிய இடைவெளிக்குப் பின்னர், எங்களது அரசு பதவியேற்ற பிறகு, இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மறுபடியும் புதிய முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும், சென்னை வாழ் மக்களின் நலன் கருதி, அவர்கள் ஆண்டுதோறும் பட்டுக்கொண்டிருக்கும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறைத் துன்பம் நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், நான் மீண்டும் சென்னை பெருநகர குடிநீர் பெருக்கத் திட்டம் - I என்ற திட்டத்தை 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிட்டு, அதனை வருகின்ற 2.2.2003 அன்று அதாவது நாளை மறுநாள் கடலூரில் நடைபெற இருக்கின்ற அரசு விழாவில் தொடக்கி வைக்க உள்ளேன்.

ஆனால் திரு கருணாநிதி தான் முதலமைச்சராக இருந்த போது என்ன செய்தார்? புதிய வீராணம் திட்டம் வேண்டாம் என்றார். ஆந்திர மாநிலத்திலிருந்து சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருகிறேன் என்றார். அதைத் தான் ஒழுங்காகக் கொண்டு வந்தாரா? அதுவும் இல்லை. இப்போது சென்னை நகரில் குடிநீர் நிலைமை எப்படி உள்ளது? திரு கருணாநிதியின் பொறுப்பற்ற செயலால் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது.

ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்கு ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலேயே போதுமான தண்ணீர் இல்லை. ஆந்திர மாநிலத்திலும் பருவமழை பொய்த்துவிட்டதால், இந்த ஆண்டு அங்கேயும் வறட்சி, பெரிய அளவில் நிலவி வருகிறது. அது மட்டுமன்றி அலமாட்டி அணையிலிருந்து ஆந்திர மாநிலத்திற்கு உரிய தண்ணீரை கர்நாடக மாநிலம் தர மறுக்கின்றது. ஆக, அவர்களுக்கே சிரமமான நிலை இருக்கும் போது ஆந்திர மாநிலம் இந்த ஆண்டில் நமக்கு தண்ணீர் கொடுக்க சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. திரு கருணாநிதி தன் குறுகிய மனப்பான்மையாலும் பொது நோக்கற்ற செய்கையினாலும் புதிய வீராணம் திட்டத்தைப் பாழ்படுத்தினார். கிருஷ்ணா நதி நீரும் ஆந்திர மாநிலத்தில் இருந்து முழுமையாகக் கிடைப்பது தற்போது ஆந்திர மாநிலத்திலுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையான சூழ்நிலையில் சிரமமாக உள்ளது.

பொறுப்புள்ள ஒரு அரசாங்கம் என்று சொன்னால், அது பொதுமக்களைப் பெரிய அளவில் பாதிக்கின்ற பிரச்சினைகளில் பல தீர்வுகளைத் தொலைநோக்குப் பார்வையோடு தேடிக் கண்டுபிடித்து ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். நான் அன்றைய தினம் 1991 முதல் 1996 வரை முதலமைச்சராக இருந்த போது ஒரு பக்கம் தெலுங்கு கங்கைத் திட்டத்தையும் செயல்படுத்திக் கொண்டு இருந்தோம். மறுபக்கம், அதையே நம்பிக்கொண்டிருக்காமல் புதிய வீராணம் திட்டத்தையும் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தேன். ஒரு திட்டத்தில் குறை ஏற்பட்டால், மற்றொன்று கை கொடுக்கும் என்னும் தொலைநோக்குப் பார்வையோடு ஒட்டுமொத்தமாக சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினை அடியோடு தீர்க்கப்பட, சென்னை மாநகர மக்களுக்கு அன்றாடம் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கைகளை எல்லாம் இதய சுத்தியோடு நான் எடுத்தேன். ஆனால் திரு கருணாநிதியோ தன்னுடைய மலிவான அரசியல் போக்கினாலும், மக்கள் விரோதப் போக்கினாலும் இரண்டு திட்டங்களையும் கோட்டை விட்டார். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் வருவதைக் கெடுத்து விட்டார். இன்றைக்கு என்ன நிலைமை? வீராணத்திலிருந்தும் தண்ணீர் வரவில்லை. கிருஷ்ணா நதி நீரும் வரவில்லை. அதன் விளைவு, இன்று சென்னை மாநகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை ஏற்பட்டுள்ளதற்கு திரு கருணாநிதி தான் காரணம் என்பதை சென்னை வாழ் மக்கள் நன்கு அறிவர்.

தற்போது எங்கள் அரசு செயல்படுத்தவுள்ள 720 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை பெருநகர் குடிநீர் பெருக்கத் திட்டம் - I சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 2.45 டிஎம்சி அடி தண்ணீர் வழங்கும். தற்போது கூட இந்தப் புதிய வீராணம் திட்டம் சாத்தியமானது அல்ல என்று சில எதிர்க்கட்சியினர் குறைகூறி வருகின்றனர். பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் திரு கணேசன் இந்தத் திட்டத்தின் சாத்தியக் கூறுகள்

பற்றி சில ஐயங்களைத் தெரிவித்தார். இந்த ஐயங்களை போக்கும் வகையில் ஒரு சில முக்கிய தொழில்நுட்ப ஆய்வு முடிவுகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1994 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை 9 ஆண்டுகள் பதிவாகியிருந்த நீர்வரத்துக் குறிப்புகளையும் ஆய்வு செய்ததில் ஏற்கனவே TATA Consultancy Engineers எடுத்த முடிவு இந்த 9 ஆண்டுகளுக்கும் பொருந்தும் என தெரிகிறது. எனவே 1965 முதல் 2002 வரை 38 ஆண்டுகளின் நீர்வரத்து விவரங்களை ஆய்வு செய்ததில் வீராணம் ஏரி மற்றும் கால்வாய்களை மேம்படுத்தும் பணிகள் முடிவுற்ற பின்னர் விவசாயத்திற்கும் சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கும் போதிய நீரைப் பெற முடியும் எனத் தெரிய வந்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சமர்ப்பித்த ஒரு கருத்துருவின்படி அன்றைய நிலையில் பாசனத் தேவை மற்றும் சென்னை குடிநீர் தேவைக்கும் குறைவாகவே நீர் இருக்கும் என கூறியுள்ளதாக இந்த சபையில் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சமர்ப்பித்த கருத்துருவினை ஆய்ந்து பார்த்தபோது அவர்களின் கணக்கின்படி சராசரியாக ஆண்டொன்றிற்கு கிடைக்கும் நீர் விவசாயத்திற்கும் சென்னைக்கு எடுக்கும் நீரையும் சேர்த்து போதுமானதாக இருக்கும் எனத் தெரிய வருகிறது.

இவை மட்டுமன்றி, இவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னர் தான் இந்தத் திட்டம் செயல்படுத்தத் தேவையான 720 கோடி ரூபாய் திட்டச் செலவினை அரசுப் பங்குத் தொகையாக 239 கோடியே 36 இலட்சம் ரூபாய் போக மீதம் தேவைப்படும் 480 கோடி ரூபாய் கடனுதவியை LIC, HUDCO, Corporation Bank மற்றும் TUFIDCO போன்ற நிதி நிறுவனங்கள் அளிக்க முன் வந்து இருக்கின்றன. இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்படும் என்று உறுதி செய்துகொண்டதன் பின்னர் தானே, இந்த நிதி நிறுவனங்கள் எல்லாம் கடன் உதவிகளை அளிக்க முன் வந்து இருக்கின்றன ? அவர்கள் தொழில்நுட்ப ரீதியாக உறுதி செய்துகொள்ளாமல் கோடிக்கணக்கான ரூபாய்களை கடனாக வழங்க எப்படி முன் வருவார்கள் என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அன்றைய தினம், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், இத்திட்டத்திற்காக உலக வங்கி, 1,638 கோடி ரூபாய் கடனாக வழங்க முன்வந்தும், இன்றையதினம் இந்த நிதி நிறுவனங்கள் எல்லாம் 720 கோடி ரூபாய் கடன் வழங்க முன் வந்திருப்பதுமே இந்தத் திட்டம் சாத்தியமானது தான் என்பதற்கான சான்றுகள் ஆகும். வேறென்ன சான்று தேவை ?

வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு ஆண்டு ஒன்றுக்கு 2.45 டிஎம்சி அடி தண்ணீர் கொண்டு செல்லப்படுவதால் வீராணம் ஏரியின் மூலம் பயன்பெறும் பாசனப் பகுதிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதை ஏற்கெனவே இங்கே விளக்கமாக கூறியிருக்கின்றேன். அதை தற்போது நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறை தீர்வதோடு, வீராணம் ஏரி சார்ந்த பாசன வாய்க்கால்களும் பயன்பெற்றிடும் வகையில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வீராணம் ஏரியின் பாசனப் பகுதிகளைப் பாதுகாத்திட 110.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள 1996ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவ்வாறு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டதால் ஏரியின் கொள்ளளவு 930 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடி என அதிகரிக்கப்பட்டுள்ளது. வீராணம் ஏரிக்கு காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டு வரும் வடவாறு கால்வாயில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பயனாக இதில் நீர்வரத்து வினாடிக்கு 1,400 கன அடி என்பதிலிருந்து வினாடிக்கு 2,300 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஏரியினைத் துார்வாரி அதன் கரையின் உயரம் 2 அடி உயர்த்தப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையின் மூலம் இதுவரை 54 கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது. மேலும் மீதம் உள்ள ஏரி மற்றும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளை நிறைவு செய்யவும் பாசனப் பரப்பிலுள்ள நீர் வழிகளை மேம்படுத்தவும் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு இந்தப் பணிகளையும் ஜுன் 2004–க்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்ட பின்னர், விவசாயத்திற்கு என்று கிடைக்கும் நீரின் அளவு, எந்த ஒரு ஆண்டிலும் இதற்கு முன்னர் கிடைத்த நீரின் அளவை விட ஒரு டி.எம்.சி. அடி அளவிற்குக் கூடுதலாக கிடைக்கக் கூடிய நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

காவிரி தொழில்நுட்ப மையத்தின் தலைவர் மற்றும் நீர் ஆதாரங்களுக்கான தமிழ்நாடு அரசின் ஆலோசகர், 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, சென்னை நகர குடிநீர்த் தேவைக்கு தினமும் 180 மில்லியன் லிட்டர் உறுதியளிக்க எந்தவித சிரமமும் இல்லை என்று தனது கருத்தினைத் தெரிவித்துள்ளார். மேலும், வீராணம் ஏரியின் நீர் மட்டத்தை ஒவ்வொரு மாதமும் பாசனத்திற்குத் தேவையான அளவிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டு, பாசனத் தேவையினை முழுமையாகப் பாதுகாக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இதன் மூலம் கிடைக்கும் ஒரு லிட்டர் நீரின் விலை சுமார் 1.8



பைசா அதாவது 1,000 லிட்டரின் விலை 18 ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. இது மாற்றுத் திட்டங்களான காவிரி ஆற்றில் ஜேடர்பாளையத்திலிருந்து குடிநீர் எடுக்கப்படுவது, மற்றும் உவர்ப்பு நீர் மற்றும் கடல் நீரை குடிநீராக்குவது ஆகிய திட்டங்களுக்கான விலையைவிட குறைவான விலையே ஆகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொண்டு வருகின்ற திட்டம் பற்றி சில விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக அப்போதைய தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அவர்களுக்கும், ஆந்திர மாநிலத்தின் அன்றைய முதலமைச்சராக இருந்த திரு என்.டி.ராமராவ் அவர்களுக்கும் இடையே 18.4.1983 அன்று ஓர் ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி சென்னை குடிநீர்த் தேவைக்காக ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து ஆண்டுதோறும் 15 டி.எம்.சி. அடி நீரை கால்வாய்களின் மூலம் கொண்டு வந்து இடையில் ஏற்படும் நீர் விரயமான 3 டி.எம்.சி. அடி நீரை கழித்துக் கொண்ட பிறகு, ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 மாதங்களுக்கு 8 டி.எம்.சி. அடி நீர், அதனை அடுத்து ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4 டி.எம்.சி. அடி நீர் என்ற விகிதத்தில் மொத்தம் 12 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழ்நாட்டு எல்லையில் ஆந்திர அரசு அளிக்க வேண்டும்.

1994 ஆம் ஆண்டின் விலைப் பட்டியல்படி இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு 2191 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாட்டின் பங்கு 522 கோடி ரூபாய் ஆகும். இதுவரை தமிழ்நாடு 512 கோடி ரூபாயை செலுத்தியிருக்கிறது. இவ்வாறு மொத்தம் செலுத்தப்பட்ட 512 கோடி ரூபாயில் 330 கோடி ரூபாயினை 1991 முதல் 1996 வரை இருந்த எனது தலைமையிலான அரசு வழங்கியது மட்டுமன்றி, இது தொடர்பான பணிகளை துரிதப்படுத்தவும் செய்தோம்.

திட்ட மதிப்பீடாக தமிழ்நாடு செலுத்த வேண்டிய பங்கு மட்டுமன்றி, 189 கோடி ரூபாயை ஆந்திர மாநிலத்தின் எல்லைப் பகுதியையும், பூண்டியையும் இணைக்கின்ற இணைப்புக் கால்வாய், பூண்டி–செங்குன்றம் இணைப்புக் கால்வாய் மற்றும் செம்பரம்பாக்கம் இணைப்புக் கால்வாய் ஆகியவற்றை ஆழப்படுத்துகின்ற பணிக்காகவும், பூண்டி செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை உயர்த்த அதன் கரைகளை உயர்த்தும் பணிக்காகவும் தமிழ்நாடு ஏற்கெனவே செலவழித்துள்ளது.

கடந்த 25.12.2002 அன்று நான் ஆந்திர மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு அவர்களை சந்தித்து

> **“இன்று வரை பதிவு செய்துள்ள பயனாளிகள் குடும்பத்தினர் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 30 கிலோ அரிசி என்ற அளவில் அருகிலுள்ள நியாய விலைக் கடையின் மூலம் அரிசியாக இலவசமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 30 கிலோ இலவச அரிசி, ஒரு தவணையில் 15 கிலோ அரிசி வீதம் இரண்டு தவணைகளில் வழங்கப்படும்.”**

தெலுங்கு–கங்கை திட்டத்தில் ஆந்திரப் பிரதேச அரசினால் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்ற எஞ்சி இருக்கின்ற பணிகளை விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்து உரைத்தேன். குறிப்பாக,

1. சோமசீலா நீர்த்தேக்கத்தின் முழுக் கொள்ளளவு 78 டிஎம்சி அடி. நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள 11 கிராமங்களில் உள்ள மக்களை வேறு இடத்தில் குடியமர்த்தும் பணிகளும், அவர்களுக்கான புனரமைப்புப் பணிகளும் முடிக்கப்படாமல் இருப்பதால், தற்போது இந்த நீர்த்தேக்கத்தில் 37 டிஎம்சி அடி நீர் மட்டுமே தேக்கி வைக்க முடிகிறது. இதனால் கடந்த சில ஆண்டுகளில் இருமுறை வெள்ளம் வந்தும் தண்ணீரை சேமிக்க முடியாமல் கடலுக்கு வீணாகச் சென்றது. இதனைச் சுட்டிக்காட்டி, சோமசீலா நீர்த்தேக்கத்தில் அதன் முழுக் கொள்ளளவு வரை நீரைத் தேக்கி வைக்கும்பொருட்டு இந்தப் பணிகளை விரைவில் முடித்திட வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

2. கண்டலேறு நீர்த்தேக்கத்தில் அதன் முழுக் கொள்ளளவான 59 டிஎம்சி அடி நீர் வரையில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்வதற்காக அந்த நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் மேற்பகுதியில் உள்ள இரண்டு சாலைகளை மாற்றி அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியத்தை ஆந்திர மாநில முதலமைச்சரிடம் வலியுறுத்திக் கூறினேன்.

3. தெலுங்கு கங்கை கால்வாய் மூலம் பெண்ணாறுக்கு நீர் வரும் சென்னமுக்கபள்ளி கால்வாய் இணைப்பில் மீதமுள்ள 13.81 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் தோண்டும் பணி உடனடியாக முடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் மற்றும் சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு வெள்ள நீரை எடுத்துச் செல்லும் கால்வாய் மற்றும் கண்டலேறு –

பூண்டி கால்வாய்கள் ஆகியவற்றில் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணிகளை விரைந்து உடனடியாக முடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

4. வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, தற்பொழுது சென்னை மாநகருக்கு குடிநீர் அளிக்கும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீர் இருப்பு மார்ச் 2003 வரைக்கும் மட்டுமே போதுமானதாக உள்ளதால், ஏப்ரல் 2003 முதல் சென்னை மாநகருக்குப் போதுமான குடிநீரை அளிக்கவும் ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களின் உதவியை நான் கோரினேன்.

அதைத் தொடர்ந்து இத்திட்டப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுவை உடனடியாகக் கூட்ட வேண்டும் என நான் கேட்டுக் கொண்டேன். ஆந்திர முதல்வரும் அதனை ஏற்றுக் கொண்டார். அதன்படி, ஒருங்கிணைப்புக் குழு தனது 39ஆவது கூட்டத்தை 10.1.2003 அன்று ஹைதராபாத் நகரில் கூட்டியது. அந்தக் கூட்டத்தில் இரு மாநில தலைமைச் செயலாளர்களும், இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் பற்றி விவாதித்தார்கள். அந்தக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. சென்னமுக்கபள்ளி கால்வாய் தோண்டுவதில் 13.81 கி.மீ. இடைப்பட்ட தூரத்திற்கு இருந்து வந்த அனைத்து சட்ட இடையூறுகளும் நீங்கிவிட்டன. இப்பணி மார்ச் 2005 க்குள் முடிவடையும். இதற்கிடையில் சென்னமுக்கபள்ளி கால்வாயில் 24.9–ஆம் கி.மீ.ல் உள்ள ரெகுலேட்டர் வழியாக பெண்ணாற்றை வந்தடையும் வக்கிலேறு ஓடைக்கு தண்ணீர் விடுவிக்கப்படும்.

2. சோமசீலா நீர்த்தேக்கத்தில் நீரில் மூழ்கும் பகுதியில் உள்ள நிலங்களை கையகப்படுத்துதல், புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் அந்த அணையின் முழுக் கொள்ளளவான 78 டிஎம்சி அடியில், 60 டிஎம்சி அடி வரையில் நீரைத் தேக்கி வைக்கும் வகையில் பணிகள் ஆகியவை வருகின்ற ஜூன் மாதத்தில் முடிவடையும்.

3. கண்டலேறு நீர்த்தேக்கத்தின் மேற்பகுதியில் உயர்மட்ட contour–ல் தற்பொழுதுள்ள இரண்டு சாலைகளை மாற்றி அமைக்கும் பணி வருகின்ற ஜூன் மாதத்தில் முடிவடையும். இதன் மூலம் தற்பொழுது தேக்கி வைக்கப்படும் 16 டிஎம்சி அடியிலிருந்து, 30 டிஎம்சி அடி வரை கூடுதலாக நீரை அடுத்த பருவ காலத்தில் தேக்கி வைக்க முடியும். இந்தப் பருவ காலத்திற்குள் தேவையான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விடும். கண்டலேறு–பூண்டி கால்வாயில் பாதிப்படையும் பகுதிகள் அனைத்தையும் சீரமைத்து லைனிங் செய்யும் பணி வருகின்ற ஜூலை மாதத்தில் முடிவடையும்.

சென்னை நகரின் குடிநீர் இருப்பு மிகவும் குறைவான நிலையை எட்டியுள்ளதால், கூடிய விரைவில் ஸ்ரீசைலம் மற்றும் சோமசீலாவிலிருந்து கண்டலேறுவுக்கு நீரை வழங்குமாறு ஆந்திர பிரதேச தலைமைச் செயலாளரை, தமிழக தலைமைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு, சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குடிநீரை தெலுங்குகங்கை திட்டத்தின் மூலம் முழுமையாகப் பெறவும், வரும் மாதங்களில் தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், தக்க முயற்சிகள் இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு மதிப்பு கூட்டு வரி, அதாவது VAT அறிமுகத்தால் நிதி நிலைமையில் ஏற்படும் விளைவுகள் பற்றி நான் இங்கே சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

21.12.2002 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பங்கேற்று மாநில நிதி ஆதாரங்களைப் பற்றி சில வாதங்களை எடுத்துரைத்தேன். மதிப்புக் கூட்டு வரி முறையை ஏப்ரல் 1, 2003–இல் இருந்து செயல்படுத்தும் பொழுது பல மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்று நான் சுட்டிக் காட்டினேன். அதற்கு ஈடாக 100 சதவிகித நஷ்ட ஈட்டினை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும், தொடர்ந்து இதனை மூன்று ஆண்டுகளுக்கு வழங்க வேண்டும் என்றும் கூறி இருந்தேன். அத்துடன் மத்திய அரசு விற்பனை வரியை– Central Sales Tax -ஐ, மாற்றுவதாக இருந்தால் அதற்கு நிரந்தரமான 100 சதவிகித நஷ்டஈடு வழங்கக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தேன். அந்தக் கூட்டத்தின் இறுதியில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்படுத்தும் பொழுது, முதல் ஆண்டிற்கு 100 சதவிகித நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். ஆனால் அந்தக் கூட்டத்தில் மத்திய விற்பனை வரியை மாற்றியமைப்பது பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக 17.1.2003 அன்று புது டில்லியில் நடந்த மாநில நிதி அமைச்சர்களின் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது மதிப்புக் கூட்டு வரி 1.4.2003–இல் இருந்து செயல்படுத்தப்படும் போது முதல் ஆண்டுக்கு 100 சதவிகித நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படும் என்றும், இது படிப்படியாகக் குறைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மத்திய விற்பனை வரியைக் கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து இதற்கான நஷ்டஈட்டுத் தொகை அதே முறையில் அதாவது முதல் ஆண்டுக்கு 100 சதவிகிதமும், அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கூட்டத்திலேயே மத்திய விற்பனை வரியை மாற்றும் கட்டத்தில் மாநிலங்களுக்கு நிரந்தர வருவாய் இழப்பு ஏற்படும் என்பதால் மதிப்புக் கூட்டு வரியை நடைமுறைப்படுத்திய பின்னர் மத்திய விற்பனை வரியை நீக்குவது பற்றி பரிசீலிக்கலாம் என்று இவ்வரசு வலியுறுத்தியது. மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்படுத்தும் பொழுது படிப்படியாக அதனால் ஏற்படக் கூடிய வருவாய் கூடும் என்பதால் அது மூன்று ஆண்டுகளில் ஏற்படக்கூடிய இழப்பினை ஈடு செய்யும் என்று நம்புகின்றோம். ஆனால் மத்திய விற்பனை வரியைப் பொறுத்தவரை அதனால் ஏற்படக் கூடிய இழப்பு ஒரு நிரந்தர இழப்பாக இருக்கின்றது. ஏனென்றால் மதிப்புக் கூட்டு வரி முறையில் கிடைக்கக் கூடிய கூடுதல் வருவாய் இதில் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே தான் மத்திய விற்பனை வரியை மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்படுத்தும் நேரத்தில் விட்டுக் கொடுக்க வேண்டாம் என்பது எங்கள் கருத்து. அவ்வாறு செய்வதாக இருந்தால் அதற்கு நிரந்தரமாக 100 சதவிகித நஷ்டஈட்டுத் தொகையை வழங்கும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் எங்கள் நிலை. இதனை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மேலும் பரிசீலிப்பதாக கூறியுள்ளார்.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதாவது அனைத்து மாநிலங்களும் மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்றுக்கொண்டு அதனைச் செயல்படுத்த ஒரு தீவிர முயற்சி செய்து வரும் நேரத்தில் மத்திய விற்பனை வரியை அறவே நீக்க வேண்டும் என்றும் அதற்குப் போதுமான நிரந்தர நஷ்டஈட்டுத் தொகை வழங்கக் கூடிய முறை ஏற்படுத்தாமல் இருப்பதன் மூலம் பல மாநிலங்களுக்கு மிகச் சங்கடமான நிதிநிலை உருவாக்கப்படும் என்றும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன். மதிப்புக் கூட்டு வரி முறையை ஏற்படுத்தும் கட்டத்தில் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் மத்திய விற்பனை வரியையும் நீக்குவதனால் மேலும் ஒரு வருவாய் இழப்பு ஏற்படக் கூடிய ஒரு அபாயகரமான நிலை உருவாகியுள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மத்திய விற்பனை வரியை நீக்குவது என்ற முடிவை சற்றுப் பொறுத்து எடுத்துக் கொள்ளலாம் என்றும் அல்லது இதற்கு ஒரு நிரந்தர 100 சதவிகித நஷ்டஈட்டுத் தொகை வழங்கும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும், இதனைத் தவிர்த்து ஒரு அரைகுறையான நஷ்டஈட்டு முறையை ஏற்படுத்துவதனால் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல் குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, மேற்கு வங்காளம் போன்ற பல மாநிலங்களுக்கும் பெரும் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய ஒரு அபாயகரமான நிலை இருக்கிறது என்பதை இம்மாமன்றத்திற்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இது குறித்து மத்திய அரசு ஒரு சாதகமான முடிவினை எடுக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து மத்திய அரசின் கடன் மாற்றி அமைக்கும் திட்டம் பற்றி (Debt Swap) சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

18.10.2002 அன்று புதுடில்லியில் மாநிலங்களிலுள்ள நிதி நிலையை பரிசீலிக்க மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பங்கேற்று நான் உரையாற்றும் பொழுது மாநிலங்களின் கடன் பளு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது என்றும், வட்டிப் பளு அதைவிட கிடுகிடுவென உயர்ந்துகொண்டே இருக்கின்றது என்றும், இதனால் மாநிலங்களால் எந்த வளர்ச்சிப் பணியையும் எடுத்து செயல்படுத்த இயலவில்லை என்றும் குறிப்பிட்டு இருந்தேன். அத்துடன் 11–ஆவது நிதிக்குழு மாநிலங்களுக்கு கடன் நிவாரணம் வழங்கத் தவறி விட்டது என்பதையும் சுட்டிகாட்டி இருந்தேன்.

மாநிலங்களின் வட்டிப் பளுவை குறைக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு கொண்டு வந்த கடன் மாற்றி அமைக்கும் திட்டத்தை Debt Swap திட்டத்தை வரவேற்கும் நேரத்தில், இதனை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று குறிப்பிட்டு இருந்தேன், இந்தக் கடன் மாற்றி அமைக்கும் திட்டத்திற்கு மாநிலங்கள் பெறக்கூடிய சிறுசேமிப்பு கடனில் 20 சதவிகிதத்தை திருப்பி வழங்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது தான் இதற்கு முக்கியக் காரணம். இவ்வாறு 20 சதவிகித சிறுசேமிப்புக் கடனை திருப்பிக் கொடுப்பதனால் மாநிலங்களுக்கு திடீரென்று மேலும் நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதோடு அன்றாடச் செலவினங்களுக்கே பெருத்த அளவில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்து இருந்தேன். I had pointed out that the State will face a serious liquidity crisis.

21.12.2002 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் மாநிலங்களுக்கு பயன் அளிக்கும் வகையில் கடன் நிவாரண திட்டமும் கடன் மாற்றி அமைக்கும் திட்டமும் அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தேன்.

ஆனால் அதன் பிறகு மத்திய அரசு இந்தக் கடன் மாற்றி அமைக்கும் திட்டத்தை வேகமாக செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு பகுதி வெளிச் சந்தையில் இருந்து புதிய கடன் பெற்றுக்கொள்ளவும், மற்றொரு பகுதி 20 சதவிகித சிறுசேமிப்புக் கடனில் இருந்து திருப்பி வழங்குதல் என்ற ஒரு முறையை வலியுறுத்தி, இதற்கு மாநிலங்கள் தங்களுடைய விருப்பத்தினை உடனே தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. 20 சதவிகித சிறுசேமிப்புக் கடனை நடப்பாண்டில் மறுபடியும் செலுத்துவதால் ஏற்கெனவே உள்ள நிதிப் பற்றாக்குறை மேலும் கடுமையாக மோசமடைய வாய்ப்பு இருக்கின்றது. எனினும் வரக்கூடிய ஆண்டுகளில் வட்டிப் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பெரும்பாலான மாநிலங்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே இதனை நாமும் ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்மானித்துள்ளோம்.

ஆனால் 28.1.2003 அன்று பத்திரிகைகளில் மத்திய அரசு அவர்களுடைய கடன் பளுவை குறைப்பதற்கு ஏறத்தாழ 13,600 கோடி ரூபாய் அளவிற்கு வெளிச் சந்தையில் இருந்து புதிய கடனாகப் பெற்று உலக வங்கி,

ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடனை முன்கூட்டியே செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்தி வந்துள்ளது. மத்திய அரசு தங்களுடைய வட்டி பளுவை குறைப்பதற்கு முழு அளவில் வெளிச் சந்தையில் இருந்து கடன் எழுப்பும் போது, மாநில அரசுகளுக்கு மட்டும் இந்த முறையை ஏன் பின்பற்றவில்லை என்ற வினா எழும்பியுள்ளது. மாநிலங்களுக்கு மட்டும் 20 சதவிகித சிறுசேமிப்புக் கடன் முன் கூட்டியே செலுத்த வேண்டும் என்ற ஒரு நிபந்தனை விதிப்பது நியாயமாகத் தென்படவில்லை. எனவே மாநிலங்களும் கடன் மாற்றி அமைக்கும் திட்டத்திற்கு முழுமையாக வெளிச் சந்தையில் இருந்து கடன் எழுப்பலாம் என்ற முறையைப் பின்பற்றலாம். எனவே, மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள கடன் மாற்று திட்டத்தினை ஏற்றுக் கொண்டு இருந்தாலும், நம்முடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து முழு அளவில் வெளிச்சந்தையில் இருந்து புதிய கடன் எழுப்ப வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என அறிவித்தீர்களே அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள்.

ஊரகப் பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வெளிச் சந்தையில் உள்ள வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு வேளாண் சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடன் என் தலைமையிலான அரசு புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் இதுவரை 182 வளர்ச்சி வட்டாரங்களில் 227.41 கோடி ரூபாய் செலவில் செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இத் திட்டத்தின் கீழ் இப்போது வங்கிகள் வாயிலாக 12 திட்டங்களும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – Tamil Nadu Industrial Investment Corporation - TIIC - மூலமாக 6 திட்டங்களும் செயல்படுத்த இப்போது அனுமதியை வழங்கி உள்ளன என்பதை இந்த அவையில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் புதிய திட்டத்தின் வாயிலாக வெளிச்சந்தையில் விற்பனை ஆகக் கூடிய உற்பத்திப் பொருட்களை கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியப் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டு ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து அப்பகுதி மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்த அரசின் சீரிய நோக்கம் ஆகும். இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இப்போது போற்றத்தகுந்த வகையில் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தக் கட்டப் பணிகளுக்காக வங்கிகளும், தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் இத்திட்டங்களுக் கான கடன் அனுமதியை வழங்குவதன் பொருட்டு அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெகு விரைவில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வங்கியின் அனுமதியைப் பெற்று தொழில் தொடங்கும் திட்டங்கள் செயல் வடிவம் பெறுவதற்காக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் இந்த அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றி பேசிய உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தீர்களே தவிர அது செயல்படுவதாக தெரியவில்லை என்று கூறினார்கள்.

தமிழக மக்களின் வருவாயை 2010 ஆம் ஆண்டுக்குள் இரண்டு மடங்காக உயர்த்தும் நோக்கத்துடன் என்னுடைய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் மானாவாரிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மேம்படுத்தி, வேளாண் உற்பத்தி மற்றும் வருவாயைப் பெருக்கும் வண்ணம் வேளாண் சார்ந்த வனம், தோட்டப்பயிர் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்துத் தரிசு நிலங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் திட்டத்தினை தலையாய முயற்சியாக மேற்கொண்டுள்ளோம்.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இரு பிரிவுகளாகச் செயல்படுத்தப்படுகிறது:

(1) நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மக்கள் பங்கேற்புடன் விவசாயிகளின் பட்டா நிலங்களை மேம்படுத்துதல் அதாவது Participatory Watershed Management.

(2) கூட்டாண்மை, சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக அரசு தரிசு நிலங்களை மேம்படுத்துதல் அதாவது - Leasing of Government Wastelands for Development by Corporate Sector / Small Companies / Co-operatives.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், தேனி, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் இதுவரை 20,529 எக்டேர், அதாவது, 51,323 ஏக்கர் நிலப்பரப்பில் வீரியவகை ஒட்டு மாங்கனி, நெல்லி, சப்போட்டா, சொர்க மரம் என்கிற சைமரூபா, புளி, வேம்பு, மூங்கில் மற்றும் சவுக்கு மரங்கள் நடப்பட்டுள்ளன. இதற்கென அரசு 25 ரூபாய் கோடி ஒதுக்கீடு செய்து, பணிகள் நடைபெற்று வருகின்றன. இரு பருவ மழைகளும் பொய்த்துவிட்ட



தருணத்தில் தற்போது மேலும் முடுக்கிவிட இயலாத நிலை உள்ளது. எனவே வரும் பருவ மழைக் காலத்தில் இப்பணி மேலும் தீவிரப்படுத்தப்படும். விவசாயிகள் தங்களது தரிசு நிலங்களில் இத்தகைய மரக்கன்றுகள் பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இரண்டாவது செயல் திட்டமாக அரசின் பொறுப்பிலுள்ள பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாத தரிசு நிலங்கள் குறித்து, 423 விண்ணப்பங்கள் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு அதில் 224 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டன. 3,689 விண்ணப்பங்கள் சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 1373 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

இதுவரை நாமக்கல், கரூர், திருச்சி, விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 7 மாவட்டங்களில் 8 கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ஏற்றுமதித் தரம் வாய்ந்த பழச்சாறு, ஜாம், மூலிகைகள், மருந்து வகைகள், அழகு சாதனப் பொருட்கள், காகிதக் கூழ் மூலப் பொருள் தயாரித்தல் போன்ற திட்டங்களுக்கென 2,044 ஏக்கர்கள், அவர்களின் செயல் திட்டத்திற்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல் மாவட்டங்களில் அமைந்துள்ள பொருளாதாரத்தில் தற்சார்பு பெற்றுள்ள சுயஉதவிக் குழுக்கள் ஒரு கூட்டமைப்பாக அமைந்து அதாவது Federation of Self-Help Groups for Wasteland Development அமைத்து அவற்றின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, 20 ஏக்கருக்கும் குறைவாக உள்ள தரிசு நிலப்பகுதிகளை மேம்படுத்த இந்த விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையிலான குழுக்களின் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு செ.கு தமிழரசன் பேசும் போது இந்த சுயஉதவிக் குழுக்களுக்கு சில நிலங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு சுயஉதவிக் குழுக்களுக்கும் இந்த நிலங்களை இந்தத் திட்டத்தின் மூலம் வழங்க முடியாது. ஒவ்வொன்றாக கொடுத்தால் அதை மேம்படுத்தும் சக்தி அவர்களுக்கு இருக்காது. அந்தக் குழுக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே Federation அமைத்தால், ஒருங்கிணைந்து அமைத்தால் விண்ணப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்படும்.

கேரள அரசு பவானி ஆற்றில் தனது மாநிலப் பகுதியில் முக்கலி என்ற இடத்தில் தண்ணீரைத் தனது பகுதிக்குத் திருப்புவதற்காக ஒரு தடுப்பணை கட்ட முயற்சி செய்தது. இதனை உடனடியாக அறிந்து அத்திட்டத்தினை செயலாக்குவதை தடுத்து நிறுத்தி வைக்குமாறு கேரள முதல்வருக்கு 24.12.2002 அன்று கடிதம் எழுதினேன். அதே நாளில் மத்திய அரசின் நீர்வள ஆதாரத் துறைக்கும் இப்பணியை நிறுத்தி வைக்க கேரள அரசுக்கு அறிவுறுத்துமாறு கோரி கடிதம் எழுதப்பட்டது. 6.1.2003 அன்று கேரள அரசு இத்தடுப்பு அணையை கட்டுவதற்கு தடை உத்தரவை பிறப்பிக்குமாறு காவிரி நடுவர் மன்றத்தில் ஒரு பல்வகை மனுவையும் தாக்கல் செய்துள்ளோம்.

இந்நிலையில், மத்திய அரசின் வனத் துறை இத்திட்டத்திற்காக ஏற்கெனவே, கேரள மாநில வனப்பகுதி நிலத்தில் வேலை செய்வதற்காகக் கொடுத்து இருந்த அனுமதியை நிறுத்தி வைத்து, இத்திட்ட கட்டுமானப் பணியை மேற்கொண்டு தொடர வேண்டாம் என்று கேரள அரசுக்கு 28.1.2003 அன்று கடிதம் எழுதி உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில் கேரள அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஏற்கெனவே காவிரி நடுவர் மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கிற்கு எந்தவித குந்தகமும் ஏற்படா வண்ணம், கேரள அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாமா என்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்துள்ளேன். அதன் அடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களின் துயரினை நீக்கி, அவர்தம் நலனைப் பேணிக் காக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

முந்தைய தி.மு.க. அரசு, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி மற்றும் சேலைகளை கோ–ஆப்டெக்ஸ் மூலம் முறையாக கொள்முதல் செய்யாத காரணத்தால், நெசவாளர்கள் சொல்லொணாத்துயருக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். மேலும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1998 ஆம் ஆண்டிலிருந்து வட்டி மானிய நிலுவைத் தொகையையும், முதியோர் குடும்ப ஓய்வூதியத்தையும் வழங்கவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்படாத உற்பத்தியின் விளைவாக 230 கோடி ரூபாய் அளவிற்கு சரக்கு தேக்கம் ஏற்பட்டு, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டன. இதனைச் சீர் செய்ய இந்த அரசு பொறுப்பேற்ற உடன் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய சென்ற ஆண்டில் 30 சதவீத தள்ளுபடி மானியம் வழங்கி ஆணை பிறப்பித்தோம். அதே போல், நடப்பாண்டிலும் பருத்தி ரகங்களுக்கு 30 சதவீத தள்ளுபடி மானியம் வழங்கி ஆணையிட்டுள்ளோம். நான் எடுத்த இந்த சிறப்பு நடவடிக்கையால் தேங்கிக் கிடந்த துணிகள் 73 கோடி ரூபாய் அளவில் விற்பனையாகி உள்ளன. இலவச வேட்டி சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சுமார் 25,000 கைத்தறி நெசவாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் வகையில் அவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 20 கிலோ அரிசி இந்த அரசால் மொத்தம் மூன்று முறை இலவசமாக வழங்கப்பட்டது.

இந்த அரசு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வேட்டி சேலைகளை

கோ–ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்வதற்கு 25 கோடிரூபாய் ஒப்பளிப்பு செய்து, அதன் மூலம் 18 இலட்சம் சேலைகள் மற்றும் 9 இலட்சம் வேட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டன.

கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் இருந்த 45 இலட்சம் வேட்டிகள் மற்றும் 45 லட்சம் சேலைகளில் முதியோர் ஒய்வூதியம் பெறுவோருக்கு 20 இலட்சம் சேலைகளையும் 4 லட்சம் வேட்டிகளையும் இலவசமாக வழங்க உத்தர விட்டுள்ளேன். எஞ்சியுள்ள சேலைகளையும், வேட்டிகளையும் மற்றும் தற்போது கொள்முதல் செய்யப்படும் சேலைகளையும், வேட்டிகளையும் நியாய விலைக் கடைகள் மூலமும் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் மலிவு விலையில் விற்பனை செய்ய ஆணை பிறப்பித்தேன். இத்திட்டத்தின் கீழ் சுமார் 43 /லட்சம் சேலைகளும் 37 இலட்சம் வேட்டிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு 28.19 கோடி ரூபாய் ஆகும்.

1998 ஆம் ஆண்டிலிருந்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த வட்டி மானிய நிலுவைத் தொகைக்காகவும், முதியோர் ஒய்வூதியத்திற்காகவும் 30 கோடி ரூபாய் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளேன்.

இலவச வேட்டி சேலை திட்டத்தின் கீழ் ஈடுபட்டு வந்த 25,000 கைத்தறிகளில் 15,000 தறிகளை மலிவு விலை வேட்டி சேலை உற்பத்திக்கும், 6,000 தறிகளை முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கான இலவச வேட்டி சேலை திட்டத்திற்கும், 4,000 தறிகளை இலவச சீருடை திட்டத்தின் கீழ் துணிகளை உற்பத்தி செய்வதற்கும் ஆணையிட்டு அதன் மூலம் அவர்களுக்கு தொய்வின்றி தொடர்ந்து வேலை கிடைக்க ஏற்பாடு செய்துள்ளேன்.

மலிவு விலை வேட்டி சேலை திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 47.41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலிவு விலை வேட்டி சேலை மக்களிடம் வரவேற்பை பெறும் வகையிலும், விற்பனையை உயர்த்தும் வகையிலும், தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம், நெசவாளர் சேவா மையம் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் கணினி மையம் ஆகியவை இணைந்து, சேலைகளுக்காக 150 புதிய வடிவமைப்புகளும், வேட்டிகளுக்காக 11 புதிய வடிவமைப்புகளும் உருவாக்கி, இந்தப் புதிய வடிவமைப்புகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி சேலைகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. பாலியஸ்டர் நூல் கலந்த சேலை மற்றும் வேட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை நீண்டதொரு பதில் உரையை அளித்திருக்கிறேன். எதிர்க்கட்சி தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அவையில் இல்லாவிட்டாலும், வெளியில் இருந்து இந்த உரையைக் கேட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். 2001இல் இந்த அரசு பொறுப்பேற்ற போது எவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்தது. எத்தனை சோதனைகளைச் சந்தித்தது என்பதைப்பற்றியெல்லாம் ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலும் பேசியிருக்கிறேன். வெளியிலேயேயும் விளக்கம் கொடுத்திருக்கிறேன். இன்னும் அந்தச் சோதனைகள் தீர்ந்தபாடில்லை. இன்னும் நிதி நெருக்கடி தீர்ந்தபாடில்லை. இன்னும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் ஒய்ந்தபாடில்லை. இவ்வளவுக்கும் மத்தியிலே மக்களுக்காக இந்த அளவு சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்று சொன்னால், Faith and Strength.

ஒரு பழமொழி உண்டு. "Faith and strength help you go through tough times". Faith என்றால் நம்பிக்கை. Strength என்றால் சக்தி–வலிமை. இந்த நம்பிக்கையும் சக்தியும் இருந்தால், அவைதான் கடுமையான சோதனைக் காலங்களைக் கடக்க நமக்கு பேருதவியாக இருக்கின்றன என்பது பழமொழி. நம்பிக்கை என்றால் எந்த வகையான நம்பிக்கை. ஒன்று இந்த சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும் என்று, அதற்கு ஆண்டவன் துணைபுரிய வேண்டும் என்று ஆண்டவன் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கை ஒருவகை. இன்னொன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வாக்களித்திருக்கிறோம். அம்மாவை நம்பி ஒட்டு போட்டு இருக்கிறோம். எத்தகைய சோதனைகள் வந்தாலும் அம்மா அவைகளை எல்லாம் தீர்த்து வைப்பார்கள் என்று மக்கள் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை.

இப்போதிருக்கின்ற நெருக்கடிகள், சோதனைகள் இவற்றை எல்லாம் பார்க்கின்ற போது ஆண்டவன் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைதான் நம்மை இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறது என்று சொல்ல வேண்டிருக்கிறது. அதே நேரத்தில் நமக்கு இந்த பிரச்சினைகளை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கு வலிமை–சக்தி எங்கிருந்து வருகிறது என்று சொன்னால் மக்கள் நம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களே, அதுதான் நமக்கு வலியூட்டும் சக்தி. ஆகவே இந்த நம்பிக்கையையும், இந்த வலிமையையும் வைத்துக் கொண்டு மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையை தொய்வின்றி இந்த அரசு செய்து வருகிறது. ஆகவே இப்போதாவது எதிர்க் கட்சியினர் மனம் மாறி, திருந்தி, வருந்தி, யதார்த்த நிலையை உணர்ந்து, இந்த அரசு எதைச் செய்தாலும், எந்த சுய நல நோக்கோடும் செய்யவில்லை, மக்களுக்காகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, ஏற்றுக் கொண்டு இனிமேலாவது மக்கள் நலப்பணிகளில் இந்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படி ஒத்துழைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு எனக்குள்ளது என்று தெரிவித்துக் கொண்டு, அப்படி ஒத்துழைக்கவில்லை என்றால் எங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை, நஷ்டம் அவர்களுக்குத்தான் என்று தெரிவித்துக் கொண்டு எனது உரையை நிறைவு செய்து அமைகிறேன். ★



# சென்னை – பொது மருத்துவமனையின் சில சிறப்பு அம்சங்கள்




இந்தியாவில் புதுடில்லி, அகமதாபாத், லக்னோ, சென்னை ஆகிய நான்கு இடங்களில் நஞ்சு இயல் தகவல் மற்றும் மருத்துவ மையங்கள் இயங்குகின்றன.

"சென்னையில் பொதுமருத்துவமனையின் ஒரு பகுதியாக இந்த நஞ்சு இயல் மையம் செயல்பட்டு வருகிறது. இது தென்னிந்தியாவிலேயே முதல் மையமாக இருந்து வருகிறது. இதற்கு உலக சுகாதார மையம் (WHO) பல்வேறு உதவிகளை அவ்வப்போது செய்துவருகிறது.

இந்த மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களி லிருந்து பெருவாரியான மக்கள் இங்கே வந்து போவது ஒரு பெருமைக்குரிய விஷயம்" இந்தத் தகவலை சென்னை மருத்துவமனையின் தலைமை மருத்துவர் திருமதி. விஜயலஷ்மி தெரிவித்தார்.

1975ஆம் ஆண்டு அரசு பொது மருத்துவமனையில் தீவிர மருத்துவச் சிகிச்சைப் பிரிவு (IMCU) துவங்கப்பட்டது. இந்த மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் 30% நஞ்சு சம்மந்தமாக சிகிச்சைப் பெற்றவர்களாவர்.

5.12.2001ஆம் ஆண்டு மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு.செம்மலை அவர்களால் இந்த நஞ்சு இயல் தகவல் மற்றும் மருத்துவ மையம் தனிப்பிரிவாக துவக்கி வைக்கப்பட்டு, நஞ்சு தகவல், கட்டுப்பாடு மற்றும் பரிசோதனை ஆகியவற்றில் சிறந்த மையமாக செயல்பட்டு வருகிறது. இது தொடர்ந்து IMCUவின் ஓர்

# ஐந்து கிலோ எடையுள்ள கட்டியை நீக்கி சென்னை மருத்துவர் சாதனை



*சென்னை கோடம்பாக்கத்தில் வசித்து வருபவர் திரு.லட்சுமி நரசிம்மன். வயது 35. இவருக்கு கடந்த இரண்டு மாதங்களாக இருமலும், காய்ச்சலும் ஏற்பட்டிருக்கிறது. மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் மூச்சு விட முடியாமல் அவதிப்பட்டிருக்கிறார்.*

*சேப்பாக்கத்தில் உள்ள காசநோய் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்தனர். ஆனால் அங்கு இவருக்கு எந்த விதமான நோய் ஏற்பட்டுள்ளது என்று தெரியவில்லை. இதையடுத்து எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன் செய்து பார்க்கப்பட்டது.*

*அப்போதும் என்ன வியாதி என்று தெரியவில்லை. இறுதியாக சென்னை அரசு பொது மருத்துவமனையில் 9.1.03 அன்று சேர்க்கப்பட்டார்.*




*அங்கு மீண்டும் சி.டி.ஸ்கேன் ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டன. அப்போது இவரது இருதயத்திற்கும், நுரையீரலுக்கும் இடையே கட்டி (தைமோலைபோமா) ஒன்று உருவாகி அது சுமார் 20 ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து கொண்டே வந்திருப்பது கண்டறியப்பட்டது. மேலும் நுரையீரலையும், இருதயத்தையும் ஐந்து கிலோ எடையும், 13 அங்குலம் நீளமும் உள்ள இந்தக் கட்டி அழுத்தி வந்திருப்பதும் கண்டறியப்பட்டது.*

*இதையடுத்து அரசு பொதுமருத்துவமனை டீன் டாக்டர் பி. விஜயலட்சுமியின் மேற்பார்வையில், டாக்டர்கள் ராஜன் சந்தோஷம், சுகுமாறன், நாகராஜன் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் கொண்ட குழு 23.1.2003 காலை 20 நிமிடத்தில் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்து, கட்டியை வெளியே எடுத்துள்ளது. லட்சுமி நரசிம்மன் உயிருக்கு எவ்வித ஆபத்தும் இல்லை எனவும் டாக்டர்கள் உத்தரவாதம் அளித்துள்ளனர். லட்சுமி நரசிம்மன் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.*

அங்கமாகவும், ஆனால் நஞ்சு மருத்துவத்தில் தனித்துவம் பெற்று விளங்குகிறது.

இந்த மருத்துவமனை உலக சுகாதார மையத்தின் கோட்பாடுகளுக்கு இணங்க நஞ்சு இயல் தகவல் மற்றும் மருத்துவ மையம் மூன்று பிரிவுகளாக செயல்படுகிறது.

அவை :

1. நஞ்சு தகவல் பிரிவு
2. நஞ்சு கட்டுப்பாட்டு பிரிவு மற்றும்
3. நஞ்சு ரசாயன பரிசோதனை பிரிவு ஆகியவையாகும்.

**உலக சுகாதார மையத்தின் கோட்பாடுகளுக்கேற்ப நஞ்சு தகவல் மற்றும் கட்டுப்பாடு மையம் கீழ்க்கண்டவாறு செயல்பட வேண்டுதல் அவசியம்**

1. வாரத்தில் ஏழுநாட்களிலும் 24 மணி நேரமும் நஞ்சுத் தன்மையைப் பற்றி மருத்துவர்கள்



*ஆவடி, கடலூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், வேலூர் ஆகிய ஊர்களில் விஷச்சாராயம் சாப்பிட்டு பின் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த போது இந்த மருத்துவ மையத்தின் மருத்துவர்கள் நவீன சிகிச்சை மற்றும் மருந்துகளை பயன்படுத்தி பல்வேறு உயிர்களை காப்பாற்றி பாராட்டுதலை பெற்றனர்.*

பொதுமக்கள் முதலியவர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கப் பட வேண்டும். நஞ்சு இயல் சிகிச்சை தேர்ந்த மருத்துவ நிபுணர்கள் 24மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும்.

2. விடைகள் நேரடியாகவோ, தொலைபேசியிலோ அல்லது தொலைநகல் மற்றும் இ–மெயில் மூலமோ அளிக்கப்பட வேண்டும்.

3. ரசாயன விபத்துக்களின் போது அவசர ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.

4. தாவர இயல், விலங்கியல், நச்சியல் சுற்றுச்சூழல் பற்றிய நிறுவனங்களோடு ஒத்துழைத்து நஞ்சு மையத்திற்கான தகவல்களை சேகரித்தல் வேண்டும்.

5. பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நிறுவனங் களுக்குச் சென்று நஞ்சு இயல் பற்றி சொற்பொழிவுகளும் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.

6. பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் நிறுவனங்களின் பெயர் மற்றும் ரசாயனத்தின் பெயர், லேபிளுடன் விற்பனை செய்வதை அமல் செய்வதற்காக விவசாயத்துறையோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

7. விஷத்தினால் ஏற்படும் விபத்துக்களுக்கு மருத்துவம் செய்தல், அதனால் ஏற்படும் அச்சத்தைப் போக்குதல் முதலியன பற்றி நாளேடு வார இதழ், தகவல் ஒலி,ஒளிபரப்பு சாதனங்கள் மூலம் விளக்குதல்.

8. அனைத்து நவீன இயந்திரங்கள் மற்றும் மருந்துகளுடன் ஒரு நவீன ரசாயன பரிசோதனை மையம் இருக்க வேண்டும். அதில் தேர்ச்சி பெற்ற ரசாயன ஆய்வாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த மையம் இன்று உலக சுகாதார நிறுவனம் காட்டிய வழிகாட்டி முறைகளின் படி தனது செயலைத் தொடங்கி விட்டது.

உலக சுகாதார நிறுவனத்தின் அதன் சுவிட்சர்லாந்து தலைமையகத்திலிருந்து வந்த ஆலோசகர் ஜான் ஹெயின்ஸ் இருமுறை நமது நச்சுக் கட்டுப்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்தார். அவர் இந்த மருத்துவ மையத்தின் செயல்பாடுகளைப் பாராட்டியதோடு மருத்துவ கல்வி இயக்குநர், தமிழக அரசின் சுகாதார துறையின் செயலர் மற்றும் தலைமை மருத்துவர் ஆகியோருடன் விரிவான கலந்துரையாடல் நிகழ்த்தினார்.இந்த மையத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவர்"INTOX"என்ற நஞ்சு தகவல் மென் பொருள் ஒன்றை மையத்திற்கு பரிசாகத் தந்தார்.

*ஒரு தொழிற்சாலையில் வேலைப் பார்த்து வந்த இளைஞருக்கு தலை நரம்பில் பல கோளாறுகள் ஏறப்பட்டு அந்த இளைஞர் பல்வேறு இடங்களிலும் சிகிச்சை பெற்றுப் பலன் கிடைக்கவில்லை. நிலைமை நாளுக்கு நாள் மோசமாகியது. இந்த நிலையில் யாரோ சொன்ன பரிந்துரையின் பெயரில் அரசு பொது மருத்துவமனையின் இந்த பிரிவுக்கு சிகிச்சை பெற வந்தார். பாதிக்கப்பட்ட இளைஞனின் உடல் நிலை அவன் பணியாற்றியவேலை மற்றும் இடங்களை கேட்டறிந்து விரிவான ஆய்வுகள் நடத்தப்பட்டன. இறுதியில் அவன் வேலை பார்த்த இடத்தில் இருந்த நச்சு புகைகள் அவன் உடலில் புகுந்து பாதிப்பை உண்டாக்கியது என்பது கண்டுப்பிடிக்கப்பட்டது. மருத்துவர்களின் ஆலோசனைப்படி அந்த வேலையில் இருந்து வேறு வேலைக்கு மாற்றப்பட்டு மையத்தின் பரிந்துரைப்படி மருந்துகள் உட்கொண்டதினால் உயிர்பிழைத்தார். இல்லாதுபோனால் அவர் உயிர் பிழைப்பதே அரிதாகியிருக்கும்! இதற்காக அந்த இளைஞனின் பெற்றோர்கள் இந்த மருத்துவ மையத்திற்கு மனதார நன்றி தெரிவித்தார்கள்.*

அத்தோடு 2002ஆம் ஆண்டு ஜனவரியில் உலக சுகாதார நிறுவனத்தின் புதுடெல்லி தலைமை அலுவலகத்திலிருந்து 2000 அமெரிக்க டாலர் மதிப்புடைய 'MICRO MEDEX POISINDEX ' என்ற கணினி மென்பொருள் இலவசமாக ஓராண்டுக்கு வழங்கப்பட்டது. இதில் உலகத்தின் சகல நச்சுக்களும் அவற்றின் சிகிச்சைப்பற்றியும் தகவல் உள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் பன்னாட்டு இணைய தளம் www. intox.org லும் 'Yellow tox' என்னும் பன்னாட்டு நஞ்சு மைய அகராதியிலும் நமது நஞ்சு மையத்தின் செயல்பாடு இடம் பெற்றுள்ளன.

தகவல் மையத்திற்கு தனிஅறை, கணினி, பிரிண்டர் மற்றும் தொலைபேசி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் தொலைபேசி எண்:25363208 மற்றும் 2536313 Ext108 பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம். இதன் இ–மெயில் விலாசம் ghpictn@vsnl.net

நஞ்சு தகவல் மையத்திற்கு ஒரு Website ஐ நன்கொடையாக e-commsolutions என்ற நிறுவனம் அளித்துள்ளது. இதில் பொதுமக்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவர்களுக்கும் பரவலாக உபயோகப் படுத்தப்படும் ரசாயனங்களும் நஞ்சுகளும் அதனால் உண்டாகும் விஷத் தன்மையை முறிக்கும் சிகிச்சைகளும் விளக்கப்பட்டுள்ளன. இந்த வெப் சைட்டின் விலாசம் www.chennaipic.com இது தமிழக அரசின் tnhealthorg.org என்ற இணைய தளத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது.

தற்போது அமெரிக்காவில் உள்ள இதுபோன்ற மையங்களில் பல்வேறு சாதனங்கள் மூலம் நாளொன்றுக்கு 700 கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறதாக கூறப்படுகிறது.

சென்னை பொது மருத்துவமனையில் இந்த மையம் இது போன்ற பெருமளவு பணிகளை மேற்கொள்ளும் காலம் எதிர்காலத்தில் வருமென்று தலைமை மருத்துவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் சில விவரங்களைக் கூறினார்: "இந்த மருத்துவ மையத்தில் வடசென்னை மற்றும் ஆந்திர மாநிலப்பகுதி மக்களுக்காக கட்டுவிரியன், நாகப் பாம்புக்கடி மற்றும் பூச்சிக்கொல்லி நஞ்சினால் உண்டாகும் மூச்சுத் திணறல், மயக்கம், கை கால் இழுப்பு, மின்கசிவு விபத்து இவற்றுக்கு செயற்கை சுவாச மருத்துவம் மற்றும் ஆக்ஸிஜன் ஏற்றுதல் ஆகியவை இங்கு செய்யப் படுகின்றன".

**நஞ்சு ரசாயன பரிசோதனை**

இந்த மருத்துவ மையம் சாந்தோம் பகுதியிலுள்ள தடய அறிவியல் ஆய்வுக்கூடத்தின் இயக்குநர். பேராசிரியர். தாமோதரன் அவருடன் இணைந்து செயல்பட்டுவருகிறது. அவர் இந்த மையத்தின் பணியாளர்களுக்கு TCL (Thin Layer Chromato graphy) என்ற நச்சுப்பொருள் கண்டுபிடிக்கும் கருவியின் எளிய நுட்பங்களிலும் நஞ்சுப்பொருள் கலந்த மாதிரிகளையும்.ரத்தம், சிறுநீர், மற்றும் கழிவுகளின் மாதிரிகளை ஆய்ந்து கண்டறியும் உத்திகளிலும் பயிற்சி அளிப்பதாக உறுதியளித்துள்ளார்.

"இந்த மருத்துவ மையம் உலக தரத்தில் உலக தரத்திற்கு இணையாக எதிர்காலத்தில் வர வேண்டும் என்பதற்காக இந்த மையத்திலுள்ள எல்லா மருத்துவர்களும் மற்றும் எல்லா பணியாளர்களும் சமூக பிரஞ்ஞையுடன் செயல்படுகிறது மகிழ்ச்சியும் மன நிறைவும் அளிப்பதாக இருக்கிறது" என்று மருத்துவமனை முதல்வர் திருமதி. விஜயலஷ்மி குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"Auramine Yellow மற்றும் Malachite green என்பது ரசாயனப் பொருள் கலந்த பொடி. இது பெரும்பாலும் கோவை, சேலம், ஈரோடு, போன்ற மாவட்டங்களில் சாதாரண பெட்டி கடைகளிலே கிடைக்கும். இது சாணத்திற்கு பதிலாக வாசல் மெழுகுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இது கொடிய நச்சுத் தன்மை உடையது. இதை உட்கொண்டு உயிரைப் போக்கிக்கொள்பவர்கள் இந்த இடங்களில் அதிகப் படியாக உள்ளனர் என்ற தகவல் கண்டறியப்பட்டு அதன் விற்பனை தற்போது தடைச் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொடிய விஷத் தன்மையுள்ள மருந்துகள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் ரசாயனம் கலந்த பொருட்கள் மீது கண்டிப்பாக 'விஷம்' என்ற குறிப்புடன் கூடிய லேபில், அந்த பொருள் வைக்கப்பட்டுள்ள பாட்டில் அல்லது டப்பா அல்லது கவரின் மீது கட்டாயம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். அதை உட்கொண்டால் அந்த நஞ்சுத்தன்மை முறிக்கக்கூடிய மாற்று மருந்தும் (Antidote) அதில் குறிப்பிடப்பட்டிருந்தால், மருத்துவருக்கு நஞ்சு உட்கொண்ட நபரை பரிசோதிக்காமல் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள எளிதாகும்".

*தொகுப்பு:* டி.ஆர். ஜெயஸ்ரீ
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்

• • •



ஈரோடு மாவட்டம்

# தாளவாடி மலைப்பகுதியில் மக்கள் பணி!

சந்தன காற்றும், மூலிகை காற்றும் கலந்து மணம் கமழும் மூலிகை தென்றலாய் வீசும், அடர்ந்த காடுகள், வன விலங்குகள், பயந்து நடமாடும் மனிதர்கள், காவல்துறையின் கண்காணிப்புடன் ஊட்டி செல்லும் ரயில் போல நகர்ந்து செல்லும் பேருந்துகள் இவற்றின் மத்தியிலும் தாளவாடி மலைப்பகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி, மலைவாழ் மக்களுக்கு தவறாது தொடர்கிறது வளர்ச்சிப் பணிகள்.

ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டது தாளவாடி ஊராட்சி ஒன்றியம். இந்த ஒன்றியம் இக்காலூர், பையன்னபுரம், கேர்மாளம், ஆசனூர், நெய்தாளபுரம், மல்லன்குழி, தலமலை, தாளவாடி, திகினாரை, திங்களூர் போன்ற முக்கிய ஊராட்சிகளையும் உள்ளடக்கிய மலைக் கிராமங்களில் சுமார் 60 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இந்தக் கிராமங்களில் பெரும்பாலும் மலைவாழ் மக்களே உள்ளனர். தமிழும், கன்னடமும் பேசும் மக்களே அதிகம் வாழ்கின்றனர். இவர்கள் விவசாயத் தொழிலையும், மாடு, ஆடு வளர்ப்பதையுமே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர் இவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும், அப்பகுதிகளுக்குச் சாலை, பள்ளிக் கட்டடம் போன்ற வளர்ச்சிப்பணிகளை நிறைவேற்றுவதிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டு தனிக்கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த ஒன்றியத்தில் 2000-01-இல் 127 பணிகள் ரூ.86 இலட்சம் மதிப்பிலும், 2001-02-இல் 126 பணிகள் ரூ.75 இலட்சம் மதிப்பிலும் பணிகள் நடைபெற்றுள்ளது. 2002-03-இல் 305 பணிகள் ரூ.89 இலட்சம் மதிப்பிலும் நடைபெற்று வருகிறது. மேலும் 2001-02-இல் ரூ.7.50 இலட்சம் மதிப்பில் 1,500 தனியார் இல்லக் கழிப்பிடங்கள் கட்டும் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. 2002-03-இல் ரூ.6.50 இலட்சம் மதிப்பில் 1,300 கழிப்பிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

ஆசனூர் ஊராட்சியில் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி மாணவியர் விடுதி கட்ட ரூ.18 இலட்சமும், உண்டு உறைவிடப்பள்ளியில் ஆசிரியர் குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.8 இலட்சமும் ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.

மலைப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைத்திட மாவட்ட ஆட்சித்தலைவரின் பெரும் முயற்சியால் நடமாடும் நியாய விலைக் கடை மூலம் மலைப்பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதோடு அப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் சிறப்பு மனுநீதிநாள் முகாம் நடத்தப் பட்டு அப்பகுதி மக்களிடம் குறைகள் தொடர்பான மனுக் களைப் பெற்றுத் தீர்வுக் காணப்பட்டு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.



மலைப்பகுதி மக்களுக்கும் சட்ட விழிப்புணர்வு வேண்டும் என்பதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பெரு முயற்சியோடு இலவச சட்ட ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட

சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 314 குடிசைத் தொழில் பதிவுகளும், 201 கைத்திறன் தொழில் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1075 நிரந்தர சிறு தொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் அதிபர்களுக்குண்டான இடர்களை நீக்கும் பொருட்டு, அவர்கள் ஆரம்பிக்கும் தொழிலகங்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்திடம் இருந்து பெற வேண்டிய அனுமதிகள் அத்தனையும் மற்றும் மின் இணைப்பு ஆகியவையும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட ஒருமுனைத் தீர்வுக்குழுக் கூட்டம் கூடி அவர்களின் இடர்களை நீக்கி விரைவில் பெற்றுத் தருகிறது.

மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 900 தகுதியுள்ள பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 7 நாள் பயிற்சி உதவித் தொகையுடன் அளித்து தொழில் முனைவோர்களாக தயார்படுத்திச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயிற்சி முடித்தவர்களில் 42 பேருக்கு வங்கியின் மூலம் கடன் ஏற்பாடுச் செய்து தொழில் ஆரம்பிக்க எல்லா உதவிகளையும் செய்யப்பட்டுள்ளது.

பாரதப்பிரதமரின் 'ரோஜ்கார் யோஜனா' திட்டத்தின் கீழ் சுயதொழில் துவங்க ரூ.2 இலட்சம் வரையில் வங்கிகள் வாயிலாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. உற்பத்தித் தொழில், சேவைத் தொழில், வியாபாரம் ஆகியவைகளுக்கு இத்திட்டத்தின் வாயிலாக கடன் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 474 பேருக்குத் தொழில் தொடங்க வங்கிகள் மூலம் ரூ.176.73 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு வகைகளிலும் தருமபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் பெற்று வேலை வாய்ப்புக்களை வழங்கி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியையும் ஊக்குவித்து மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயலாற்றி வருகிறது. தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டில் முதனிலை நோக்கி முன்னேறும் மாவட்டமாக உள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

- **தா. மனோகரன்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தருமபுரி மாவட்டம்.*

## பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு

பிளஸ் 2 பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் உயரிய மதிப்பெண்கள் பெற்று தொடர்ந்து தொழில் படிப்பு (மருத்துவம், பொறியியல், விவசாயம் மற்றும் கால்நடை மருத்துவம் போன்றவை) பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்குப் பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசாக 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் 2 மாணவர்களுக்கும், 2 மாணவிகளுக்கும் ஆண்டுக்கு தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மாணவ-மாணவியர்கள் ஒரே மதிப்பெண் பெற்றிருந்தால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படாமல் கூடுதலாக வழங்கப்படும்.

ஆண்டுதோறும் தேர்வுத்துறையில் இருந்து பெறப்பட்ட தேர்ச்சிப் பட்டியலின்படி முதன்மை மதிப்பெண்கள் பெற்ற மாணவ-மாணவியர்கள் அவர்கள் படித்த பள்ளி மூலம் விவரம் அறிந்து அவர்கள் தொடரும் படிப்பு, கல்லூரி, சாதி ஆகியவற்றை விசாரித்து அறிக்கைப் பெற்றபின் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நல அலுவலரால் பரிசுத் தொகை மாணவ-மாணவிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இது தொடர்பான விவரங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

*நன்றி:*
தினத்தந்தி



# மலைகளின் அரசி உதகையில் பரவசமூட்டும் தாவரவியல் பூங்கா

1845-ஆம் ஆண்டு நீலகிரியில் வசித்து வந்த ஐரோப்பிய மக்கள் தங்களுக்கு வேண்டிய மலைக் காய்கறிகளைக் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய விரும்பி, இப்பூங்காவைத் தேர்ந்தெடுத்தனர். பின்பு 1847-ஆம் அண்டு அவ்வமயம் சென்னை மாநிலத்தில் ஆளுநராக இருந்த மேதகு மார்க்யூஸ் டிவிஸ்டேல் என்பவரின் முயற்சியால் உதகையில் பூங்கா ஒன்றை அமைத்ததுடன் ஒரு தோட்டக்கலை சங்கத்தையும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டு நிதி திரட்டப்பட்டது. இச்சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி 1848-ஆம் ஆண்டு டபிள்யு.சி. மெக்ஐவர் அவர்களை இப்பூந்தோட்டத்தில் கண்காணிப்பாளராக சென்னை அரசு தனது செலவில் நியமித்தது. அவர் பதவி ஏற்ற காலத்தில் இப்பொழுது நாம் காணும் புல்தரைப் பகுதியில் காய்கறித் தோட்டம் அமைக்கப்பட்டிருந்தது. தோட்டத்தின் மேற்பகுதிகளில் காற்றும் செல்ல அஞ்சும் அடர்த்தியான சோலைகளும், குளங்களும் நிறைந்த சதுப்பு நிலங்களையும் கொண்ட தொடர்ச்சியான பள்ளத்தாக்கும் இருந்தது.லண்டனிலுள்ள ராயல் தாவரவியல் பூங்காவில் தோட்டக்கலையில் தேர்ச்சிப் பெற்றிருந்த திரு.மெக்ஐவர், சதுப்பு நிலங்களையும், பள்ளத்தாக்குகளையும் சீரமைத்து மலர் பாத்திகள் அமைக்க ஏதுவாக படிமட்டங்கள் அமைத்தும், நடைபாதைகளைச் சீரமைத்தும், புல் மைதானங்களைத் தக்க இடங்களில் அமைத்தும் இப்பூங்காவை இயற்கை எழிலோடு கூடிய அமைப்பிற்கு ஊன்றுகோலாக விளங்கினார். இதற்கு இவர் எடுத்துக்கொண்ட காலம் பத்து ஆண்டுகளாகும். பிறகு வந்த காப்பாட்சியாளர்களால் பலவித முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு கிழக்கு ஆசியாவிலேயே இது ஒரு தலைசிறந்த பூங்காவாக விளங்குகிறது. இப்பூங்கா இயற்கையமைப்புக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட அழகிய பூங்காவாகும்.

இப்பூங்கா 22 ஹெக்டேர் பரப்பில் இயற்கை எழிலோடு கூடிய சூழ்நிலையில் கடல் மட்டத்திலிருந்து 2,400 முதல் 2,500 மீட்டர் வரை உயரத்தில்





அமர்வு நீதிபதி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கலந்துகொண்டு சட்டமுறைகள் குறித்து எடுத்துக் கூறினர். அப்பகுதி மக்களுக்கும், சட்டமுறைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள ஓர் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டது.

அப்பகுதி மக்களுக்கு முறையான மருத்துவ பரிசோதனை வேண்டும் என்பதற்காக 7.10.2002 அன்று சிறப்பு மருத்துவ முகாம் ஆசனூரில் நடத்தப்பட்டது. இந்த முகாமில் புற்றுநோய், சர்க்கரை வியாதி, இருதய நோய், முதலிய நோய்களுக்குச் சிறப்பு மருத்துவ நிபுணர்களால் பரிசோதனை செய்யப்பட்டது. இம்முகாமில் 1524 நோயாளிகள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். முகாமில் ஸ்கேன், ஈ.சி.ஜி. மற்றும் ஆய்வக வசதிகளும், எய்ட்ஸ் கட்டுப்பாடு விழிப்புணர்வு கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. இம்முகாமில் 30 மருத்துவர்களும், 80க்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்களும் கலந்து கொண்டு சிகிச்சைஅளித்தனர். மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மலைப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி கிடைத்திடும் வகையில், குதியாலத்தூர் மலைப் பகுதியில் 2.10.02 முதல் நடமாடும் மருத்துவக்குழு செயல்பட்டு அப்பகுதி மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைச் செய்து வருகிறது.

இவ்வாறாக மலைப்பகுதி மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைத்திட வேண்டும் என்பதற்காக ஒன்றியப் பகுதியில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தி வருகிறார். 6.11.2002 அன்று ஆசனூர், கீழ்மாவள்ளம், கோட்டடை, தாளவாடி போன்ற மலைப்பகுதிகளில் ரூ.71.26 இலட்சம் மதிப்பில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை நேரில் பார்வை யிட்டு பணிகளைத் துரிதப்படுத்தினார். அதோடு அங்குள்ள மக்களுக்கு நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகிக்கப் படும் பொருட்கள் கிடைத்திட வழிவகுக்கும் வகையில் நியாயவிலைக் கடைகளிலும், சத்துணவு மையத்திலும் ஆய்வுகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேற் கொண்டார்.

தாளவாடி மலைப்பகுதியில் பாமர மக்களின் துயர் துடைக்கவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும், பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகப் படுத்தவும், போக்குவரத்துக்குக் கிராமச்சாலைகளை அமைத்துக் கொடுப்பதிலும், மாவட்ட நிர்வாகம் தீவிர முயற்சி எடுத்து மலைவாழ் மக்கள் முன்னேற்ற மடையத் தொடர்ந்து வளர்ச்சிப்பணிகளை நிறைவேற்றி வருகிறது.

*- எம்.ஆர்.லிங்கம்,*
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்*
*ஈரோடு மாவட்டம்.*



# தமிழகத் தொழில் வளர்ச்சியில் தருமபுரி மாவட்டம்

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களையும் தீட்டிச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அரசு அறிவித்துள்ள புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா ரூ.1 கோடி செலவில் இயற்கை வளங்களை ஆதாரமாகக் கொண்டு வேளாண்சார் தொழில்களை ஊக்குவிக்கவும், ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலேயே தருமபுரி மாவட்டத்தில்தான் அதிக அளவிலான ஏறத்தாழ 6,000 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் 12 இலட்சம் மகளிர் உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவினருக்கு கைத்தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் செய்திட பயிற்சியும், உதவியும் செய்யப்பட்டு அதனடிப்படையில் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு அவர்கள் அனைவரும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளதோடு ஏறத்தாழ ரூ.100 கோடி அளவிற்கு பணத்தைச் சேமித்துள்ளனர். இது மகத்தான சாதனையாகும்.

தரிசு நிலங்களை மேம்பாடு செய்திடும் சிறந்த திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதையடுத்து, அதற்கான ஆக்கப்பூர்வமான செயல்களில் தருமபுரி மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. அதற்காக இம்மாவட்டத்தில் 84 எக்டேர் தரிசு நிலங்கள் இருப்பதைக் கண்டறிந்து, அதனை மேம்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட சங்கத்திடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தரிசுநிலங்கள் மேம்பாடு அடைவதோடு வேலை வாய்ப்புகளும் அதிகரிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி குறிப்பாக ஓசூர் பகுதியில் 10,000 சிறு தொழிற் சாலைகளும், 89 நடுத்தர தொழிற்சாலைகளும், 21 பெரிய தொழிற்சாலைகளும், 13 தொழிற் கூட்டுறவு அமைப்புகளும், 3000 குடிசைத் தொழில்களும், 3200 கைவினைப் பொருட்கள் உற்பத்தி நிலையங்களும் உள்ளன.

விவசாயம், கனிம உற்பத்தி, தீப்பெட்டி தயாரித்தல், மின் அணு கருவிகள், கைக் கடிகாரங்கள், 2 மற்றும் 4 சக்கர வாகன உற்பத்தி, மலர் கொத்து தயாரிக்கும் பணி, மாம்பழக்கூழ் தயாரித்தல், வாகன உதிரி பாகங்கள், நூற்பாலைகள் உள்ளிட்ட பல்வேறு தொழில் மற்றும் தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் திறம்பட செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் அதிக அளவில் மாம்பழங்கள் தருமபுரி மாவட்டத்தில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 37,364 எக்டேர் பரப்பில் தித்திக்கும் சுவை கொண்ட 35 வகை மாம்பழங்களும் உற்பத்தி செய்யப்பட்டு இந்தியா முழுமையும் குறிப்பாக வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மேலும் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன.

மலர் உற்பத்தி இம்மாவட்டத்தில் அதிகம் உள்ளதால் மலர் ஏற்றுமதி மையம் ரூ.24 கோடி செலவில் ஓசூர் அருகே அமுதகொண்டப்பள்ளி மற்றும் பேரிகை ஆகிய இடங்களில் அமைத்திட ஆய்வு செய்யப்பட்டு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் உதவியுடன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

பிரசித்திப்பெற்ற கிரானைட் கற்கள் உற்பத்தி தொழில்களும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பாலக்கோடு மற்றும் அரூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது.

இவை தவிர தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுமக்களையும், தொழில்முனை வோர்களையும் கூட்டி அலுவலர்கள் உதவியுடன் தொழில் தொடங்குவது தொடர்பாக ஊக்குவிப்பு முகாம் கூட்டங்கள் இம்மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் நடப்பாண்டில் 625 தற்காலிக சிறு தொழில்

பொலிவுடன் விளங்குகிறது. இதன் சராசரி மழையளவு 140 செ.மீ. ஆகும். நவம்பர் முதல் பிப்ரவரி வரை குளிர் காலங்களாகும்.

**பூங்காவின் சிறப்பு மிக்க அம்சங்கள்**

ஆரம்ப காலத்தில் இப்பூங்காதான் பல பயிர்களை இம்மாவட்டத்திற்கு அறிமுகம் செய்து வைத்தது. உருளைக்கிழங்கு, மித வெட்ப மண்டல காய்கறிகள், பழங்கள், மலைப்பயிர்களான சின்கோனா, யூக்கலிப்டஸ் ஆகியவை இதில் அடங்கும். இவை அனைத்தும் முதன் முதலில் இப்பூங்காவில் ஆராய்ச்சி செய்யப்பட்டு, அதன் பின்னர் நீலகிரி விவசாயிகள் பயிரிடுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்பின் இப்பூங்கா வேளாண்மைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. பல வகைப்பயிர்களுக்குத் தனியாக வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டதால் இப்பூங்கா அழகுச் செடிகளுக்கென ஒதுக்கப்பட்டது.

இப்பூங்காவில் 2,000த்திற்கும் மேற்பட்ட செடிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் 117 இயற்கை வரிசைகள். இவ்வகைகள் தாவரவியல் நிபுணர்களுக்கும் தாவரவியல் மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

இப்பூங்கா நீலகிரி மாவட்டத்திற்கு முதலில் தோட்டக்கலை வளர்ச்சிக்கு ஒரு தொடக்க மையமாக இருந்தது.

இப்பூங்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட அலங்காரச் செடிகளை மேலும் உற்பத்தி செய்ய பராமரிக்கப்படுகிறது.

இப்பூங்காவில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரகங்கள் பராமரிக்கப்பட்டு வருவதால் இந்நாட்டின் அனைத்து பகுதியிலுள்ள தாவரவியல் மாணவர்களுக்கு இப்பூங்கா மையமாக விளங்கி வருகின்றது. பூங்காவில் உள்ள தாவர இனங்கள் சகோதரத் துறைக்கும், கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் ஆராய்ச்சிக்காக வழங்கி வருகிறது. இப்பூங்காவில் வளர்க்கப்படும் செடிகள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் விதைகள் இப்பகுதியில் உள்ளவர்களுக்கும், சமவெளிப்பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. இப்பூங்காவில் உள்ள மேலாளர்கள் தனியாரால் பராமரிக்கப்படும் பூந்தோட்டங்களுக்குத் தொழில் நுட்ப அறிவுரைகள் வழங்குகிறார்கள். புதிய பூங்காவை அமைப்பதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் தேவையான உதவிகளைச் செய்து வருகிறார்கள். 1975–ஆம் ஆண்டில் அல்பைன் பூங்காவும், 1984–ஆம் ஆண்டில் ஜப்பானியப் பூங்காவும் புதிதாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. 1993–94ஆம் ஆண்டு பார்வையாளர்களுக்கென புதிய கண்ணாடி மாளிகையும், அலங்கார நுழைவுவாயிலும் அமைக்கப்பட்டுள்ளன. 1994–95ஆம் ஆண்டில் இப்பூங்கா மேலும் அழகுபடுத்தப்பட்டது. 1995ஆம் ஆண்டில் திசு வளர்ப்புக் கூடம் அமைத்து அலங்காரச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாதிரி மலர் மையம் அமைக்கப்பட்டு நவீன மலர் சாகுபடி முறையில் தொழில்நுட்பப் பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**பூங்காவில் தாவரவளம்**

இப்பூங்காவில் உள்ள தாவரங்கள் இதர தாவரவியல் பூங்காக்களிலிருந்தும் மற்றும் இயற்கைச் சூழ்நிலையில் வளர்கின்ற இனங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு 2,000க்கும் மேற்பட்ட தாவர இனங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. குளிர்மண்டலம் மற்றும் மிதவெப்ப மண்டல தாவர இனங்கள் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவது இப்பூங்காவின் முக்கிய அம்சமாகும்.

ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலிருந்து தருவித்து பராமரிக்கப்பட்டு வரும் பலவிதமான தாவர இனங்களும் இப்பூங்காவிற்குச் சிறப்பைச் சேர்க்கின்றன. குளிர் மண்டல தாவர இனங்களைச் சேர்ந்த மிக உன்னதமான மரங்கள், அழகான புதர்ச்செடிகள், பலவண்ண லில்லி மற்றும் கிழங்கு வகைச்செடிகள், மனதை மயக்கும் ஆர்க்கிடுகள், ஆவலைத்தூண்டும் சப்பாத்திக்கள்ளி வகைகள் பரவசமூட்டும் பெரணி வகைகள், கண்ணைக் கவரும் கண்ணாடி மாளிகைச் செடிகள் மற்றும் பல வண்ண ஆண்டு மலர்ச் செடிகளையும் தன்னகத்தே கொண்டு இப்பூங்கா ஒரு கருவூலமாக விளங்குகிறது.

**மரங்கள்**

இப்பூங்காவில் உள்ள 150 வகையான மரங்கள் இதன் அழகுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. மிகப் பிரம்மாண்டமான மற்றும் உன்னதமான ஊசியிலைத் தாவர இனங்களுக்கு இப்பூங்கா மிகவும் பிரசித்தி பெற்றது. சைப்ரஸ் வகை மரங்கள், பைன், அரக்கேரியா,அகத்திஸ், ரொபஸ்டா, தேவதார், விட்ரிங்டோனியா, கிரிப்டோமேரியா, டேக்சோடியம், பீகசஸ், போடோகார்பஸ் போன்ற மரங்கள் இவற்றில் அடங்கும்.



இப்பூங்கா பூவில்லா மரங்களின் இருப்பிடமாக இருப்பதோடல்லாமல் பலவகையான பூ பூக்கும் மரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சொரி மரங்கள், சோப்புபட்டை மரம், ஸ்டிராபெரி மரம், யூக்கலிப்டஸ், பிசிபோலியோ, ஹைம்மனோஸ்போரம், பிளேவம், மைக்கேலியா, ரோடோடென்ரான், மேக்னோலியா, யூஜினியா போன்றவை இதில் சிறப்பானவையாகும். பீச், பிரிச், மேப்பிள் மற்றும் ஓக் வகைகள் இதர முக்கிய மரங்களாகும். பனை வகையைச் சேர்ந்த டிரசினா, போனிக்ஸ், கிமராப்ஸ், கார்டிலைன், ரொப்போலாஸ்டைலிஸ் மற்றும் மியூசா என்சிட்டா எனப்படும் வாழையும் பூங்காவிலுள்ள அழகு மரங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இப்பூங்கா வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலவகை மரங்களின் இருப்பிடமாக இருப்பதோடல்லாமல், நீலகிரியைத் தாயகமாகக் கொண்ட செண்பகப்பூ, விக்கிமரம், பில்லி மரம், யூஜினியா மரம், டில்யோ சோமா, போஸ்ப் பேனிக்குலேட்டா போன்ற மரங்களையும் தன்னகத்தே கொண்டு பொலிவுடன் விளங்குகிறது.

**மலர்க்காட்சி**

மலர்க்காட்சி இல்லாமல் எந்தப் பருவமும் இங்கு முடிவதில்லை. உதகையில் புகழ்மிக்க மலர்க்காட்சி ஒவ்வொரு வருடமும் மே மாதம் மூன்றாவது வாரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இம்மலர்க்காட்சியில் கலந்து கொள்ளும் பூந்தோட்டங்கள் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த பூந்தோட்டங்களுக்கு வெகுமதியும், கோப்பைகளும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் இம்மலர்க்காட்சியைக் கண்டுகளிக்கின்றனர். நாள் ஒன்றுக்கு 3,000 முதல் 10,000 வரை இப்பூங்காவைக் கண்டுகளிக்கப் பார்வையாளர்கள் வருகிறார்கள்.

1895 ஆம் ஆண்டு முதல்நடைபெற்று வரும் இம்மலர் கண்காட்சி 1980 ஆம் ஆண்டு வரை நீலகிரி அக்ரி ஹார்டிகல்ச்சுரல் சொசைட்டி மூலம் நடத்தப்பட்டு வந்தது. பின்பு தமிழக அரசால் நியமிக்கப்படும் மாவட்டஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

**- பீ.முத்தையா,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நீலகிரி மாவட்டம்.*

## நூதன முறையில் வீடு கட்டும் திட்டம்! புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு புதுமை!

மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களை நூதன முறைகளைப் பயன்படுத்தி செயலாக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட உள்ள வீடுகள் நூதனக் கட்டுமான முறைகளைக் கடைபிடித்து அனுமதிக்கப்பட்ட வீடுகளைக் கட்ட முடிவு செய்யப்பட்டு அதற்கு முன்மாதிரி முயற்சியாக திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் மேலாத்தூர் ஊராட்சிக்கு 2002–03–ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 25 வீடுகள் உள்ளூரில் கிடைக்கும் குளத்து மண்ணைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சுடப்படாத பெரிய அளவிலான செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டு வருகின்றன.

இத்தகைய செங்கற்கள் தயாரிக்க உள்ளூரில் கிடைக்கும் மண், 5% சிமெண்ட் இரண்டையும் சேர்த்து சிறிது தண்ணீர் கலந்து கையால் இயக்கப்படும் எந்திரம் மூலம் நன்றாக அழுத்தி வெளியில் எடுத்த பின்பு பாதுகாப்பாக 15 நாட்கள் தண்ணீர் தெளித்து பின்னர் செங்கற்களைப் பயன்படுத்தலாம். எந்திரம் மூலம் தயாரிக்கப்படுவதாலும், நன்றாகத் தண்ணீர் தெளித்து உலர வைப்பதாலும் சுட வைத்த செங்கல்லைவிட தரமாகவும், உறுதியாகவும், நல்ல வடிவமைப்புடனும், 2½ மடங்கு பெரிய அளவிலும் கிடைக்கிறது. அத்துடன் விலையும் மிகக் குறைவாக உள்ளது.



மேலாத்தூர் ஊராட்சியின் தலைவராக இருக்கும் திரு.சரவணன் என்பவர் ஒரு எந்திரப் பொறியியல் பட்டதாரி. இவர் இந்த நூதனக் கட்டுமான முறையில் வீடு கட்டும் திட்டத்தினைச் செயல்படுத்த முழு முயற்சி எடுத்து பயனாளிகளுக்கு ஊக்கம் அளித்துள்ளார். அவர் பயனாளிகளைப் பாண்டிச்சேரியிலிருக்கும் ஆரோவில் நகருக்கு அழைத்துச் சென்று நூதன முறையில் செங்கல் தயார் செய்வதையும் அதற்கான எந்திரத்தையும் இத்தகைய கற்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட கட்டடங்களையும் பார்வையிடச் செய்தார். இந்த முறையினால் கட்டுமானச் செலவு குறைவதோடு சுற்றுச் சூழல் மாசுபடுவது குறைகின்றது. இதன் மூலம் கிராம மக்களுக்கு, சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகி பொருளாதாரம் மேம்பாடு அடைய வழி ஏற்படுகிறது.

பொதுவாக கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் சுட்டசெங்கற்கள், இரும்புக் கம்பிகள் மற்றும் சிமெண்ட் ஆகியவற்றின் விலை அதிகம் என்பதுடன் வீடுகள் கட்டுவதற்கு வெளியிடங்களிலிருந்தே இவற்றினை வாங்க வேண்டியுள்ளதால், கட்டுமானச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது.

7 நபர்கள் அடங்கிய சுய உதவிக்குழு உறுப்பினர்கள் நாள் ஒன்றுக்கு 700 செங்கற்களை இந்த நூதன முறையில் தயாரிக்கின்றனர். இதற்கான எந்திரங்கள் இரண்டு வடிவங்களில்( சிறியது மற்றும் பெரிய அளவான செங்கல் தயாரிக்க) கிடைக்கிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டப்படுகின்ற கூட்டுக் குடியிருப்புகளில் ஒரு வீட்டிற்கு சுட்டசெங்கற்ச ள் 6,000 தேவைப்படும். ஆனால் நூதன முறையில் தயாரிக்கப்படும் சுடப்படாத இந்த செங்கற்கள் 1,400 மட்டும் இருந்தால் போதுமானது. இவற்றைப் பயன்படுத்தி 20 மீட்டர் உயரத்திற்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.



25 வீடுகளுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.32,000/– வீதம் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8 இலட்சம் நூதன முறையில் கட்டப்படுவதன் மூலம் சேமிப்புத் தொகை ரூ.2.40 இலட்சம் ஆகும். இந்த சோதனை முயற்சி மிகப் பெரிய வெற்றியாக உருவெடுத்துள்ளது. தற்போது நூதன முறையில் 20,000 செங்கற்கள் தயார் செய்யப் பட்டுள்ளன. இந்தக் கற்களைப் பயன்படுத்துவதன் மூலம் சுவற்றுக்கு மேற்பூச்சு பூச வேண்டிய அவசியமில்லை.மேலும், சுவற்றுக்கு சிமெண்ட் மணல் கலந்த கலவைக்குப் பதிலாக மண் கலவையே போதுமானது. இத்தகைய கட்டுமான யுக்தியைப் பயன்படுத்தி வீடுகள் கட்டும் திட்டத்தினை இரண்டாவது கட்டமாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்திட புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. மேலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியத் தலைவர்களுக்கும், ஊராட்சித் தலைவர்களுக்கும் இந்த நூதன கட்டுமான முறையினைப் பயன்படுத்துதல் தொடர்பான பயிற்சி வழங்கிடவும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்திட அழைத்துச் செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளது. அனைவருக்கும் பயனளிக்கும் இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் பரவச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

- துரை. தாமரைச் செல்வம்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை

• • •

## சகிப்புத் தன்மையை வளர்க்கும் வெப்சைட்

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் சகிப்புத் தன்மை இல்லாத பிறரால் துன்புற்றிருக்க நேர்ந்திருக்கும். பள்ளிக்கூடத்தில் உள்ள இரண்டு குழந்தைகளாக இருந்தாலும் அல்லது இரண்டு இனங்களுக்கு இடையேயானாலும் நாடுகளுக்கு இடையேயானாலும் சகிப்புத் தன்மை அவசியம் தேவைப்படுகிறது.

இனம், மொழி, மதம், நாடு என்று மனிதன் பல்வேறு கோணங்களில் பிரிந்து பிறந்துள்ளான். சகிப்புத் தன்மை இல்லாமல் மனிதன் கொடுமையை அனுபவிக்க நேரும் போது ஏற்படக்கூடிய துன்பங்கள், அதிலிருந்து மீள்வதற்க்கான வழிகள் என்று ஏராளமான தகவல்களைக் கொண்டுள்ள தளம் : http://www.tolerance.org/

உலகம் முழுவதும் உள்ள மக்கள் சகிப்புத் தன்மை வளர்ப்பதற்கான ஒரு இடமாகவும் இத்தளம் விளங்குகிறது. இங்கு அவர்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

பிற இன, மத, நாட்டு மக்களின் கலாச்சாரம் மற்றும் அவர்கள் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்வதன் மூலம் ஏற்படும் விழிப்புணர்வு நம்மிடையே நற்பண்புகளை உருவாக்குவதாக இத்தளம் கூறுகிறது.

வெறுப்பிலிருந்து விருப்புக்கு மாற இத்தளம் யோசனை கூறுகிறது. பொதுவாக பொதுமக்கள் உரிமைக்கு இத்தளம் பெருமளவில் பங்காற்றுகிறது.

இத்தளம் மாணவர்கள், பெரியோர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் என்று அனைத்துத் தரப்பினராலும் விரும்பி செல்லக்கூடியதாக உள்ளது.

நன்றி : தினமலர்

# மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபக் கலைக் கூடம் சீரமைப்பு!



தமிழகத்தின் தொன்மைவாய்ந்த கலாச்சார சிறப்பையும், மதுரையின் வரலாற்றையும் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் வகையில் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபக் கலைக்கூடம் சீரமைக்கப்பட்டுள்ளது.

ரூ.15 இலட்சம் செலவில் முதல்முறையாக சீரமைக்கப்பட்டுள்ள இம்மண்டபத்தில் புராதன சிறப்புமிக்க ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் இடம் பெற்றுள்ளது.

முழுநிலவு ஒளியில் சிற்பங்களையும், கலைப்பொருட் களையும் பார்ப்பதைப் போன்று கண்களுக்குக் குளிர்ச்சியான பிரகாசமான ஒளி அலங்கார அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத் திலுள்ள 984 தூண்களும், இத் தூண்களில் இடம் பெற்றுள்ள சிற்பங்களும் பளிச்சென்று தெரியும் வகையில் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. தனித்தனியே கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ள பஞ்சலோகச் சிலைகள், விக்ரகங்கள் ஆகியவற்றின் கலைநயம் இந்த ஒளி வெள்ளத்தில் பிரகாசிப்பது கண் கொள்ளாக் காட்சியாக உள்ளது.

அருளைப் பாலிக்கின்ற கருணை முகங்களோடு கூடிய தெய்வங்கள், தெய்வங்களை வணங்கி நிற்கும் மாமன்னர்கள், சித்தர்கள், புலவர்கள், தவ முனிவர்கள், சிங்கங்கள், யாளிகள், யானைகள், குதிரைகள், போர்வீரர்கள், ஆரணங்குகள் என கணக்கிலடங்காக் கலைப் பொக்கிஷங்கள் அணிவகுத்துக் காட்சி தருகிறது.

அழகின் வடிவமான ஓவியங்கள், படங்கள் முதலானவை கண்ணாடி மாடங்களில் பாதுகாப்போடு இடம் பெற்றுள்ளன.

இம்மண்டபத்திற்கே சிகரம் வைத்தாற்போல, நடராஜர் வடிவில் சிவபெருமான் தமது தேவியுடன் நடுநாயகமாக நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்தியாவின் 99 நகரங்களில் உள்ள கோவில்களின் தோற்றம், மீனாட்சியம்மன் திருக்கோயிலின் மாதிரித் தோற்றம், விதானத் தோற்றம், விநாயகர், முருகன், ரதி, மன்மதன்,குறவர், குறத்தி என்று ஏராளமான கலைப் பொக்கிஷங்கள் நிறைந்துள்ளன.

பாண்டிய மன்னர்கள், இராணிமங்கம்மாள், திருமலைநாயக்கர் போன்ற மாமன்னர்கள் பயன்படுத்திய பொருட்கள், வரலாற்றின் கடந்தகால சுவடுகளை நினைவூட்டும் வகையில் இடம் பெற்றுள்ளது.

கலை நுணுக்கம் மிகுந்த சிற்பங்களும், பொருட்களும், நீண்ட காலத்திற்கு முன் உருவாக்கப்பட்டிருந்தாலும், இப்போது தான் உருவாக்கப்பட்டது போல மெருகேற்றப்பட்டுள்ளது.



இவ்வாறு சீரமைக்கப்பட்ட ஆயிரங்கால் மண்டபத்தினை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர்.கா.காளிமுத்து அவர்கள் 17.11.2002 அன்று திறந்துவைத்தார். மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.சி.இராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி வளர்மதி ஜெபராஜ், திரு.வி.ஆர்.இராஜாங்கம், திரு. எஸ்.எம்.சீனிவேல், திரு பி. பொன்னம்பலம், திரு எல். சந்தானம், திரு. என்.நன்மாறன், மாவட்ட ஊராட்சித் தலைவர், திரு. மா. இளங்கோவன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சேது. இராமச்சந்திரன், அறநிலையத்துறை செயலாளர் திரு. பி.எ. ராமையா, சிறப்பு ஆணையர் திரு. பெ.எ.கௌரி சங்கர், இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் திரு. பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்டத்தின் முக்கிய கோயில் தலமான மீனாட்சியம்மன் கோவிலைக் காணவரும் ஆயிரக்கணக்கானோர் தினம் தோறும் இந்த ஆயிரங்கால் மண்டபத்தினையும் கண்டு மகிழ்ந்து செல்கின்றனர்.

**எஸ். நாகராசன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.



தஞ்சாவூர் மாவட்டத்தில்

# உள்நாட்டு மீன் வளர்ப்பில் ஒரு புரட்சி

காவிரி நதி பாய்ந்து வளம் கொழிக்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் கிராமந்தோறும் குளங்கள், ஏரிகள், ஆற்றுப்படுகைகள் என்று உள்நாட்டு நீர் நிலைகளுக்கு ஏற்ப மீன் பிடித்தல் என்பது ஒரு தொழிலாக இருந்து வந்துள்ளது. காவிரியில் நீர்வரத்து குறைந்து முறைபாசனம் அறிமுகப்படுத்தியதாலும், காவிரியில் ரசாயனக் கழிவுகள் சேர்ந்ததாலும் ஆற்று நீரில் இயற்கையாக உற்பத்தியாகும் மீன்வளம் நாளுக்கு நாள் குறைந்து உள்நாட்டு நீர் நிலைகளிலும் மீன்வளம் குறையத் தொடங்கியது. இச்சூழலில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு "மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை" தமிழ் நாட்டில் முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டு மீன் உற்பத்தியில் தமிழ்நாடு ஒரு புரட்சிக்கு வழிவகை செய்தது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,645 ஹெக்டேர் பரப்பில் ஊராட்சிக் குளங்களும், 350 ஹெக்டேர் பரப்பில் அரசுடைமையாக்கப்பட்ட குளங்களும், 600 ஹெக்டேர் பரப்பில் பொதுப்பணித்துறையின் நீர்ப்பாசன ஏரிகளும் உள்ளன. பல்வேறு காரணங்களினால் நீர்பரப்பின் அளவு பாதி அளவிற்குக் குறைந்து விட்ட நிலையில் 500 ஹெக்டேர் நீர்ப்பரப்பை மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை தேர்வு செய்து அதற்கு அந்தந்த கிராமத்து இளைஞர்களை மீன் வளர்ப்போராகத் தேர்வு செய்து அவர்களுக்கு கலப்பின மீன்வளர்ப்பு, மீன்குஞ்சு உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி அளித்து "மீன்பிடித்தல்" என்ற தொழிலுக்குப் பதிலாக "மீன்வளர்த்தல்'' என்ற முறையை செயல்படுத்தியது. இதன் பலனாக ஹெக்டேர் ஒன்றுக்கு 350 கிலோ மீன் உற்பத்தி என்ற நிலைக்கு மாறாக ஹெக்டேர் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி 1,200 கிலோ அளவிற்கு உயர்ந்துள்ளது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை உறுப்பினர்கள் அதிகபட்சமாக 5,000 கிலோ வரை உற்பத்தி செய்து சாதனை படைத்து வருகின்றனர்.

**மீன் குஞ்சு உற்பத்தி**

இயற்கையாக உருவாகி வரும் மீன்குஞ்சு வரத்து குறைந்து விட்ட நிலையில் செயற்கையான முறையில் தூண்டுதல் முறையில் இந்திய பெருங்கெண்டை ரகங்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை இனங்களை தஞ்சாவூரில் உள்ள அரசு மீன்குஞ்சு உற்பத்தி மையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 158 இலட்சம் நுண் மீன்குஞ்சு உற்பத்தி செய்து மீன் வளர்ப்போருக்கு விற்பனை செய்து வருகிறது. இதனால் சுமார் 1,600 டன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. மீன் வளர்ப் போர் மேம்பாட்டு முகமையால் பயிற்றுவிக்கப்பட்ட மீன்வளர்ப் போர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 14 இடங்களில் தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் அமைத்து அவற்றின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து விரலிகளாக வளர்ந்து, நுண்மீன் குஞ்சுகளாக தமிழ்நாட்டின் பல்வேறு



நாகர்கோவில்) ஆலோசனையுடன் பல்லுயிரினப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. 5 ஏக்கர் நிலப்பரப்பளவில் மான்பூங்கா அமைக்கப்பட்டு பேச்சிப்பாறையிலிருந்து 7 புள்ளி மான்கள் பூங்காவினுள் விடப்பட்டுள்ளன.

ராம்கோ சிமெண்ட் நிறுவனத்தின் உதவியுடன் கோட்டையில் உள்ள வற்றாத குளத்தில் நீரூற்ற, அதனைச் சுற்றி அழகான புல்தரைகள், பூஞ்செடிகள், நடைபாதை, ஓய்வுபெறப் பூங்கா நாற்காலிகள் ஆகியவை தோட்டக்கலை நிபுணர் திரு.ஈஸ்வரன் அவர்களின் ஆலோசனைப்படி அமைக்கப் பட்டுள்ளது.



இப்பல்லுயிரினப் பூங்கா 27.11.2002 அன்று திறந்துவைக்கப்பட்டது.

இவ்விழாவில் தலைமையுரையாற்றும் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சுகன் தீப்சிங்பேடி, இ.ஆ.ப. அவர்கள், ''உதயகிரி கோட்டையினுள் உள்ள வனப்பகுதி இயற்கையாகவே மிகவும் அழகாக உள்ளது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கவும், தரிசு நிலங்களை மேம்படுத்தவும், பசுமைப்படுத்தும் பணி மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளதிற்கேற்ப மாவட்ட நிர்வாகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



உதயகிரி கோட்டை மேம்பாடும் அவற்றில் ஒன்று. இப்பகுதியில் 46 அரியவகை மரங்கள், 36 அரியவகை பறவைகள் உள்ளன. மேலும் பல அரியவகை பறவைகளுடன் பறவைகள் சரணாலயம் அமைக்கவும், குழந்தைகள் பூங்கா, வனவிலங்குகள் குறித்த ஒலி, ஒளி, அரியவகை தாவர பூங்கா ஆகியவையும் உருவாக்கப்பட உள்ளன. மான்பூங்கா பராமரிப்பு வனத்துறையின் கீழ் உள்ள சுய உதவி மகளிர் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டள்ளது என்றார்.

பத்மனாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.இராஜேந்திரபிரசாத் அவர்கள் சிறப்புரை யாற்றும் போது, ''உதயகிரிக்கோட்டையில் விவசாயக் கல்லூரி மற்றும் பல்வேறு கல்லூரிகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மாவட்ட ஆட்சியரின் முயற்சியால் மாவட்ட வன அலுவலரின் ஒத்துழைப்புடன் பல்லுயிரினப் பூங்காவாக மாற்றப் பட்டுள்ளது. இப்பூங்காவை விரிவு படுத்த தேவையான அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைகளுக் கிணங்க மேற்கொள்வேன்'' எனக் கூறினார்.

விழாவில் மாவட்ட வன அலுவலர் திரு.ஐ.அன்வர்தன் அவர்கள், பத்மனாப புரம் நகராட்சித் தலைவர் திருமதி. தீபா சுனில் அவர்கள், துணைத்தலைவர் திரு.ஜகபர் சாதிக் அவர்கள், குமாரபுரம் பேரூராட்சித் தலைவர் திரு.ஜங்கின்சன் அவர்கள், திருவிதாக்கோடு ஊராட்சித்தலைவர் திரு.புகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**– எஸ்.எம்.பஷீர்**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நாகர்கோவில்.*

• • •



**தே**னி மாவட்டத்தில் 80 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 2 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், 4 நகரக் கூட்டுறவு வங்கிகள், 4 கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 22 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 2 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 11 பிரதமக் கூட்டுறவுப் பண்டக சாலைகளுடன் மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 10 கிளைகளும் இயங்கி வருகின்றன.

குறுகிய காலப் பயிர்க்கடன் வழங்குதல் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டுக்கு ரூ.22.55 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.7.73 கோடியும்,

மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க்கடன் பெறும் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் ரசாயன உரங்கள் வழங்குதல் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்கு ரூ.9.00 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.3.10 கோடி வழங்கப்படும்.

வேளாண் விளைபொருட்கள் விற்பனைத் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்கு ரூ.1.65 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.0.35 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நுகர்பொருட்கள் விற்பனைத் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்குக் கட்டுப்பாட்டுப் பொருட்கள் விற்பனை செய்திட ரூ.30 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.18.80 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது. கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்திட ரூ.10 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.1.49 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

# தேனி மாவட்டத்தில் திட்ட வளர்ச்சிப் பணிகள்!

மத்திய காலக்கடன் வழங்குதல் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்கு ரூ.1.00 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய 0.37 கோடியும்,

நீண்ட காலக்கடன் வழங்குதல் திட்டத்தின் கீழ், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் ரூ.5.80 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.1.14 கோடியும்,

நகைக்கடன் வழங்குதல் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்கு ரூ.70 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, அக்டோபர் 2002 முடிய ரூ.37.63 கோடியும்,

பண்ணை சாராக் கடன் வழங்குதல் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்கு ரூ.1.12 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.0.21 கோடியும்,

தொழில்நுட்ப வல்லுநர்கட்குக் கடன் வழங்குதல் திட்டத்தின் கீழ் 2002–2003–ஆம் ஆண்டிற்கு ரூ.2.02 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அக்டோபர் 2002 முடிய ரூ.1.18 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம்மாவட்டத்தில் உள்ள 12 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தலா ரூ.1.63 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.19.56 இலட்சம் மதிப்புள்ள பாதுகாப்புக் கதவுடன் கூடிய உறுதியான அறை அமைக்கப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி**

தேனி மாவட்டத்தில் 17 கூட்டுறவுக் கட்டடச் சங்கங்களும், 5 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும் மதுரை துணைப்பதிவாளர் (வீட்டு வசதி) கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இவைகள் மூலம் 11,000 உறுப்பினர்களுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.30 கோடி வீடு கட்டும் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து வட்டக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் வழியாக நலிவுற்ற பிரிவினருக்கு அரசு மானியத்துடன் கூடிய 16 வகையான கடன் திட்டங்கள் மூலம் 500

பகுதிகளுக்கும் விற்பனை செய்து, தமிழ்நாட்டில் 15,000 டன் மீன் உற்பத்தி செய்வதற்கு தஞ்சாவூர் மீன் வளர்ப்போர் வழிவகை காட்டுகின்றனர். அதாவது தஞ்சாவூர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின்மூலம் 45 கோடி ரூபாய் மதிப்புள்ள மீன் உற்பத்திக்கு வழிகாட்டியுள்ளது.



தமிழ்நாட்டின் மான்செஸ்டர் கோயம்புத்தூர் என்று சொல்வது போல் தஞ்சாவூர் மாவட்டம் நெற் களஞ்சியம் மட்டுமின்றி மீன்குஞ்சு உற்பத்தியிலும் தமிழ்நாட்டின் கல்கத்தா என்று தஞ்சாவூர் மாவட்டத்தை அழைக்கலாம்.

மீன் வளர்ப்பு ஒரு லாபகரமான தொழில் என உணரத் தொடங்கிய தஞ்சாவூர் விவசாயிகள் பலரும் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் ஆலோசனை பெற்று அதன் பரிந்துரையின் பேரில் வங்கிகளில் கடன் வாங்கி தங்கள் விளை நிலத்தில் பள்ளமாகவுள்ள பகுதியை மீன்வளர்ப்புக் குளமாக மாற்றி மீன்வளர்த்து அதிக வருமானம் ஈட்டி வருகின்றனர்.



தமிழக அரசின் பண்ணைக் குட்டை திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.1.27 கோடி மதிப்பில் 479 குட்டைகள் தமிழக அரசின் சார்பில் முழுமானியத்துடன் நீர் சேமிப்பிற்கு உதவும் வகையிலும் மீன்வளர்ப்பிற்குப் பயன்படும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு முகமையின் மூலம் இக்குட்டைகளில் மீன்வளர்க்க பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ரூ.10 ஆயிரம் வரை உபரி வருமானம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் பர்வதராஜகுல உள்நாட்டு மீனவர் சங்கத்திற்கு மீன்பாசி குத்தகையாக ரூ.4 இலட்சத்து 24 ஆயிரத்து 737–ம், மரவக்காடு உள்நாட்டு மீனவர் சங்கத்திற்கு ரூ.6 ஆயிரத்து 281–ம், பாபநாசம் உள்நாட்டு மீனவர் சங்கத்திற்கு ரூ.54 ஆயிரத்து 87–ம், கும்பகோணம், திருவிடைமருதூர் தாலுக்கா உள்நாட்டு மீனவர் சங்கத்திற்கு ரூ.1 இலட்சத்து 30 ஆயிரத்து 75–ம் கிடைத்துள்ளது.

**கே.பி. நல்லதம்பி,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.



## உதயகிரி கோட்டையில்
# பல்லுயிரினப் பூங்கா திறப்பு

“நீலத்திரை கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி” என தவக்கோலத்தில் அருள் பாலிக்கும் அன்னையை அழகுற பாடினார் அமரகவி பாரதியார்.

அன்னையின் திருப்பெயரால் அமைந்த கன்னியாகுமரி மாவட்டம், கடல்வளம், மலை வளம், நில வளம், ஆகியவற்றை ஒருங்கே பெற்றது. இயற்கையெழில் கொஞ்சும் கன்னியாகுமரி மூவேந்தர்கள் கையில் மாறி மாறியிருந்தது என்கிறது வரலாறு. ஆர்க்காடு நவாப்போடு திருவிதாங்கூர் அரசர் செய்துகொண்ட ஒப்பந்தப்படி கல்குளம், விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய 4 தாலுகாக்களும் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்தின் தென்திருவிதாங்கூர் பகுதியாக இருந்தது. இப்பகுதி 1956 நவம்பர் 1–ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டமாக தமிழகத்துடன் இணைந்தது.



குமரி கண்டத்தை ஆண்ட மன்னர்கள் பலராயினும் இன்றும் அழியாச் செல்வங்களாக விளங்குபவை அவர்களால் கட்டப்பட்ட கோயில்களும், அரண்மனைகளும், கோட்டைகளும் ஆகும். வேணாட்டு மன்னரின் காலத்தில் கட்டப்பட்ட பத்மனாபபுரம் அரண்மனை, மார்த்தாண்டவர்மா மகாராஜாவால் படைவீரர்கள் தங்குவதற்காக கட்டப்பட்ட வட்டக்கோட்டை, படைக்கலன் தயாரிக்க கட்டப்பட்ட உதயகிரி கோட்டை ஆகியவை இன்றும் அழியாச் சின்னங்களாக திகழ்கின்றன.

நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட புலியூர்க்குறிச்சியில் உதயகிரி கோட்டை – திருவாங்கூர் சமஸ்தானத்தை ஆண்ட மன்னர்களின் முக்கிய படைக்கல நிலையமாக திகழ்ந்தது. மலைப் பகுதியில், சுமார் 90 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்ட இக் கோட்டை கி.பி. 1600–இல் புதுப்பிக்கப்பட்டது எனவும் இராஜ ராஜசோழ மன்னரால் சிதைக்கப்பட்டது எனவும் கூறுவர். வேணாட்டு மன்னர் மார்த்தாண்ட வர்மா மகாராஜாவினால் (1741–44) ஜெனரல் டெலினாய் மேற்பார்வையில் உதயகிரிக் கோட்டை திரும்பக் கட்டப்பட்டது.

பாரதத்தை ஆண்ட மன்னர்களை கிள்ளுக் கீரைகளாக நினைந்த டச்சுப் படைகளை 1741ஆம் ஆண்டு ஜூன் 31–ஆம் தேதி குளச்சலில் நடைபெற்ற போரில் மார்த்தாண்டவர்மா தோற்கடித்தார். அப்போது சிறைப்பிடிக்கப்பட்ட 24 கைதிகளில் டெலினாய் என்ற தளபதி, திருவிதாங்கூர் மன்னரின் நம்பிக்கைக்கு உரியவராகி, மன்னரின் தளபதியாகத் திகழ்ந்தார். டெலினாய் திருவிதாங்கூர் சமஸ்தான படைவீரர்களுக்கு ஐரோப்பிய பாணியில் பயிற்சியும் அளித்தார். அவரது கல்லறை கோட்டையின் ஒரு பகுதியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பிரமாண்டமான கோட்டைச் சுவர்கள் மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சரித்திரப் புகழ்பெற்ற கோட்டையில் உள்ள அடர்ந்த வனப்பகுதியை கண்கவரும் பகுதியாக மாற்ற வனத்துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொண்ட குமரி மாவட்ட ஆட்சித்தலைவர், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையிலும், வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில் பல்லுயிரினப் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டு, அதற் கென சிறுசேமிப்பு ஊக்குவிப்பு நிதியிலிருந்து ரூ.5.25 இலட்சம் ஒதுக்கீடு செய்தார்.

மலேசியாவில் சாரவேக் வன விலங்கு சரணாலயம் அமைப்பதில் பங்கு கொண்ட பறவைகள் விஞ்ஞானி டாக்டர் ராபர்ட் கிரப் அவர்களின் (இயக்குநர், ஐ.ஆர்.என்.இ.,

உறுப்பினர்களுக்கு ரூ.4 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது. வீட்டுவசதிக் கடன்கள் அனைவருக்கும் கிடைக்குமாறு நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு இச்சங்கங்கள் கடன் வழங்கி வருகின்றன.

இவ்வாண்டு நலிவுற்ற பிரிவினருக்கு 300 கடன்கள் வழங்க கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இலக்கினை அடைய நடவடிக்கைத் தொடரப்பட்டு வருகின்றன.

சுற்றுப்புறச்சூழல் பராமரித்தல் மற்றும் நீர்வளத்தைப் பராமரித்தலின் அடிப்படையில் புதிதாக கட்டப்படும் வீடுகளுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும் என வீட்டு வசதி சங்கங்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு மகளிர் வளர்ச்சிக்கென பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிவித்து அவற்றினைக் கூட்டுறவுத் துறை மூலம் செயல்படுத்தி வருகின்றது.

தேனி மாவட்டத்திலுள்ள மகளிர்க்கு "சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின்" மூலம் 254 பெண்களுக்கு ரூ.5.06 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஏழைத் தாய்மார்களுக்கு உதவும் பொருட்டு "கர்ப்பிணிப் பெண்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தின்" மூலம் 493 பெண்களுக்குத் தலா ரூ.2,000/ – வீதம் ரூ.9.86 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாத வருமானம் பெறும் மகளிர்க்கும், மேலும் மகளிருக்கான தொழில் முனைவோர் கடன்களும் பல்வேறு சுயஉதவிக் குழுக்கள் மூலம் பல்வகையான கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் 369 முழுநேர நியாய விலைக் கடைகளும், 24 பகுதிநேர நியாய விலைக்கடைகளும், 13 மகளிர் நியாய விலைக் கடைகளும், 2 தனியார் நடத்தும் நியாய விலைக் கடைகளும் ஆக 408 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இவைகளில் 3,02,094 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

நீலகிரித் தேயிலை உற்பத்தியாளர்களின் துயர் துடைக்கும் வகையில் ஊட்டி தேயிலை விற்பனையில் பிரதி மாதம் சுமார் 6,000 கிலோ அளவிற்கு விற்பனை செய்து தமிழகத்தில் தேனி மாவட்டம் இரண்டாவது இடத்திலுள்ளது.

1.4.2002 முதல் 31.10.2002 வரை தேனி மாவட்டத்தில் 34,424 கிலோ தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அயோடின் குறைவினால் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் பொருட்டு அயோடின் கலந்த உப்பு விற்பனையில் பிரதி மாதம் சுமார் 96,000 கிலோ அளவிற்கு விற்பனை செய்து தேனி மாவட்டம் தமிழகத்தில் எட்டாவது இடத்திலுள்ளது.

1.4.2002 முதல் 31.10.2002 வரை தேனி மாவட்டத்தில் 540 டன் உப்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மலிவு விலை கைத்தறி சேலை மற்றும் வேட்டி விற்பனைத் திட்டத்தில் ஆகஸ்ட் 2002 முதல் அக்டோபர் 2002 வரை 31,583 சேலைகளும், 27,728 வேட்டிகளும் விற்பனை செய்து தேனி மாவட்டம் சிறப்பிடம் பெற்றுள்ளது.

**உ.ல. இரவீந்திரன்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

சாலை ஓரத்தில் மரம் நடுவோம்!
சரித்திரத்தில் இடம் பெறுவோம்!

மானுடம் மகிழ்வுடன் வாழ
மழை நீரைச் சேமிப்போம்!

மரங்களை அறுக்காதீர்கள்!
மனிதர்களை வெறுக்காதீர்கள்!!

எடுத்துச் செல்ல எதுவுமில்லை!
கொடுத்துச் செல்வோம் கண்களிரண்டை!!



# ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவிகளுக்கு அரசு சார்பில் இலவச சைக்கிள்கள்

*கடலூர் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருஸ்துவ ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு (2002–2003) கடலூர் மாவட்டத்திற்கு 1840 சைக்கிள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளன.*

*இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சைக்கிள்களின் மொத்த மதிப்பு ரூ.29 இலட்சத்து 44 ஆயிரம் ஆகும். ஒரு சைக்கிளின் மதிப்பு ரூ.1600 ஆகும்.*

*கடலூர் மாவட்டம், நெல்லிக் குப்பம் டேனிஷ் மிஷன் மேல்நிலைப் பள்ளியில் 9.11.2002 அன்று மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சி.தங்கசுவாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்று 11 ஆம் வகுப்பு பயிலும் 166 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கினார். அப்போது மாண்புமிகு அமைச்சர் பேசும் போது:*

*"11–ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு வழங்கப்படுகின்ற சைக்கிள் அவர்களுக்கு பேருதவியாக இருக்கும். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகள் பாதியிலேயே ஏழ்மையின் காரணமாகத் தங்களது படிப்பினைத் தொடர இயலாத ஒரு நிலை ஏற்பட்டது. இதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் தொடர்ந்து பயில வேண்டும் என்பதற்காக இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்.*

*11–ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகள் இந்த சைக்கிள்களைப் பெற்றதன் மூலம் தங்களது கல்லூரிப் படிப்பினையும் தொடர்ந்து படித்திட ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவிகள் தொடர்ந்து பயன்பெற்று வருகின்றனர். மாணவிகள் தங்களுடைய சொத்தாக இந்த சைக்கிளைப் பாவித்து, தொடர்ந்து கல்வி பயின்று வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும்" எனத் தெரிவித்தார்.*



*விருத்தாசலம் வட்டம், நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட வேப்பூர் ஊராட்சியில் 16.11.2002 அன்று மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.தங்கசுவாமி, இ.ஆ.ப. அவர்கள் பங்கேற்று 166 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கினார். அதே போன்று மங்களூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சியர் 130 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கினார்.*

*29.11.2002 அன்று குமராட்சி ஒன்றிய வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 161 மாணவிகளுக்கும், காட்டுமன்னார்கோயில் ஒன்றிய வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 145 மாணவிகளுக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் அவர்களால் இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டது.*

*இவ்விழாக்களில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.இராமு, மங்களூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.திருமாவளவன், காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ப.வள்ளல் பெருமான் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*

*இதுவரை இம்மாவட்டத்தில் 768 இலவச சைக்கிள்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு 12 இலட்சத்து 28 ஆயிரத்து 800 ரூபாயாகும்.*

*சைக்கிளைப் பெற்றுக் கொண்ட மாணவிகள் அவைகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் எடுத்துச் சென்றனர். பல மைல்கள் நடந்து படித்து வந்த எங்களுடைய நிலைமையினை நன்கு அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களுக்கு இந்த சைக்கிள்களை இலவசமாக வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் எங்களுக்குத் தன்னம்பிக்கையும், ஊக்கமும் பிறந்துள்ளது. முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள இந்த சைக்கிளைப் பயன்படுத்தி நன்முறையில் பயின்று வாழ்க்கையில் வெற்றி பெறுவோம். எங்களுக்கு இந்த உதவியினை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று நன்றிப்பெருக்குடன் மாணவிகள் கூறினார்.*

**- என்.பாலையா,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*கடலூர் மாவட்டம்.*

## மிக எளிய முறையில் திருப்பதி சுற்றுலா

**தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திங்கள் முதல் வெள்ளி வரை திருப்பதி சுற்றுலா நடத்தி வருகிறது. இந்தச் சுற்றுலாவின் சிறப்பு அம்சம் என்னவென்றால் திருப்பதி ஏழுமலையானின் தரிசனம் 3 மணி நேரத்திற்குள் கிடைத்துவிடுகிறது. இதற்கான கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.500/–, சிறுவர்களுக்கு 400/–மட்டுமே. இந்தக் கட்டணம் குளு குளு வசதி செய்யப்பட்ட சொகுசுப் பேருந்தில் செல்லவும், காலை சிற்றுண்டி, மதிய உணவுடன் குறைந்த நேரத்தில் சுலபமாக 'லட்டு'டன் தரிசனம் செய்வதற்கும் வசூலிக்கப்படுகிறது. குறைந்த கட்டணத்தில் ஒரு நாளிலேயே திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்து வருவதற்கு இது ஒரு நல்ல சுற்றுலா ஏற்பாட்டுத் திட்டம். இந்த சுற்றுலா காலை 6 மணியளவில் சென்னை வாலாஜா சாலையிலிருந்து (சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகம்) புறப்பட்டு இரவு 10.30 மணிக்கு சென்னை வந்து சேரும், இதற்கான முன்பதிவை குறைந்தது 7 நாள்களுக்கு முன்பாகச் செய்யவேண்டும்.**

**தொடர்பு கொள்ள வேண்டிய**
**தொலைபேசி எண்கள் :**
**25384444 / 25381567 (சென்னை)**



# சேலம் மாவட்டத்தில் 'தாட்கோ'வின் தடையில்லாப் பணிகள்

"எஃகு மாவட்டம், மாங்கனி மாவட்டம், குன்று சூழ் மாவட்டம்" எனப் பெயர் பெற்று வரலாற்றுச் சிறப்புடையது சேலம் மாவட்டமாகும். பாசனத்திற்கு மேட்டூர் அணையையும், இயற்கையின் எழிலுக்கு ஏற்காடு மலையையும், கல்விக்குப் பெரியார் பல்கலைக் கழகத்தையும் தன்னகத்தே கொண்டு 'பசுமை விருது' பெற்ற மாவட்டம் என்ற பெருமையோடு திகழ்வது சேலம் மாவட்டமாகும்.

இம்மாவட்டத்தின் வளர்ச்சிப்பணிகள் தங்கு தடங்கலின்றி செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்காகத் தமிழக அரசால் உருவாக்கப்பட்ட தாட்கோ நிறுவனம் ஆரம்பகாலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டும் பணியை செய்து வந்தது. காலத்திற்கு ஏற்றவாறு திட்டங்களை மாற்றி அமைத்துச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தாட்கோ நிறுவனம் வெள்ளி விழா ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 2001–02–ஆம் நிதியாண்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

### விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள்

திட்டத்தின் கீழ் 150 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத் தொகையாக ரூ.22.50 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் டயர் வண்டியுடன் கூடிய மாடுகள், உழவு மாடு, ஆயில் இன்ஜின்கள், நெற்கதிர் அடிக்கும் இயந்திரம் மற்றும் பவர் டில்லர் ஆகியவைகளுக்காக விவசாயம் சார்ந்த திட்டத்தில் இதுவரை 326 நபர்களுக்கு மானியம் ரூ.34.57 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### தொழில் பணி வர்த்தகத் திட்டம்

தொழில் பணி வர்த்தகத் திட்டத்தில் 30 சதவீத மானியத்துடன் கூடிய சிறுவணிகத் தொழில்களுக்குக் கடன் அளிக்கப்படுகிறது. இம்மாவட்டத்திற்கு 70 நபர்களுக்கு ரூ.8.40 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 186 நபர்களுக்கு ரூ.31.30 இலட்சம் மானியம் அனுமதி அளிக்கப்பட்டு கடன் வழங்கப்பட்டுள்ளது.

### தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு)

இத்திட்டத்தின் கீழ் 145 நபர்களுக்கு மாவட்ட ஆட்சியராலும், திட்ட அலுவலராலும் தேர்வு செய்ய நிதி ஒதுக்கீடு ரூ.36.25 இலட்சம் மானியமும், ரூ.43.50 இலட்சம் விளிம்புத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் இதுவரை மாவட்ட ஆட்சியரால் 12 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்திற்கு மேலுள்ள திட்டங்களுக்கு ரூ.3 இலட்சம் மானியமும், ரூ.7.30 இலட்சம் விளிம்புத் தொகையும் அனுமதிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

திட்ட அலுவலரால் 154 நபர்களுக்கு ரூ.1 இலட்சத் திற்கு கீழுள்ள திட்டங்களுக்கு ரூ.25.66 இலட்சம் மானியமும், ரூ.15.79 இலட்சம் விளிம்புத் தொகையும் அனுமதிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

### தொழிற்கல்வி பயிற்சி

இந்த மாவட்டத்தில் இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்குத் தொழிற்கல்வி



தமிழரசு
R.N.I.No.21446/70
RGN.No.TN/PMG(CCR)836/03-05.












மார்ச் 2003

பயிற்சி பெற ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 110 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் நபர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு உதவித் தொகை ரூ.400/–ம், பயிற்சி மூலப்பொருள் ரூ.100/–ம், பயிற்சி நிறுவனத் தொகை ரூ.200/– வீதம் ஆக மொத்தம் ரூ.9.20 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி 19.12.2001 முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சேலம் சண்முகா மெடிக்கல் ரிசர்ச் மூலம் 28 நபர்களுக்குச் செவிலியர் பயிற்சிக்கும், 24 நபர்கள் லேப் டெக்னீசியன் பயிற்சிக்கும், 2 நபர்கள் எக்ஸ்ரே ஆபரேட்டர் பயிற்சிக்கும், சேலம் புஷ்பம் மகப்பேறு மருத்துவமனை மூலம் 11 நபர்களுக்கு லேப் டெக்னீசியன் பயிற்சிக்கும், ஆத்தூர் சாரதா ஐ.டி.ஐ. நிறுவனம் மூலம் 10 நபர்களுக்கு எலக்ட்ரீஷியன் பயிற்சிக்கும், 5 நபர்கள் மோட்டார் மெக்கானிக் பயிற்சிக்கும், கொளத்தூர் தமிழ்நாடு தொழிற்பயிற்சி மையம் மூலம் 11 நபர்களுக்கு மோட்டார் மெக்கானிக் பயிற்சிக்கும், 19 நபர்கள் எலக்ட்ரிக்கல் பயிற்சிக்கும் ஆக 110 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கணினிப் பயிற்சி ( ஒரு ஆண்டு காலம்)

இந்தத் திட்டத்தின் கீழ் படித்த இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டதாரிகளுக்கு ஓர் ஆண்டு கணினிப் பயிற்சிக்காக 73 நபர்களுக்கு ரூ.3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பயிற்சி 20.3.2002 முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சேலத்தில் 24 நபர்களுக்கும், ஆத்தூரில் 18 நபர்களுக்கும், மேட்டூரில் 14 நபர்களுக்கும், ஓமலூரில் 9 நபர்களுக்கும், எடப்பாடியில் 8 நபர்களுக்கும் ஆக மொத்தம் 73 நபர்கள் கணினிப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

இந்தத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு மொத்தம் 1,070 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமும், அனைத்து வட்டார அளவில் மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலர் மூலமும் மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி முடிக்கப்பட்டுச் சான்றிதழ்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

இந்தத் திட்டத்தின் கீழ் இந்து மலைவாழ் மக்களுக்கு 30 நபர்களுக்கு மானியம் ரூ.10.80 இலட்சமும், விளிம்புத் தொகையாக ரூ.4.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 28 நபர்களுக்கு ரூ.10.64 இலட்சம் மானியம் மற்றும் ரூ.4.18 இலட்சம் விளிம்புத் தொகை, வங்கிக் கடனுடன் செலவு செய்யப்பட்டுள்ளது.

என்.எஸ்.கே.எப்.டி.சி.

துப்புரவுப் பணியாளர்கள் சார்ந்த குடும்பங்களுக்குத் தனி நபர்களுக்குத் தொழில் கடன்கள் வழங்க இம்மாவட்டத்திற்கு மொத்தம் 63 நபர்களுக்கு ரூ.8.44 இலட்சம் மானியமும், ரூ.5.76 இலட்சம் விளிம்புத் தொகையும், பருவக்கடன் ரூ.14.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.28.80 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 58 நபர்களுக்கு ரூ.7.84 இலட்சம் மானியமும், ரூ.5.35 இலட்சம் விளிம்புத் தொகையும், பருவக்கடன் ரூ.13.59 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.26.78 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படும் திட்டங்கள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு அத்திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடையும் வண்ணம் மாவட்ட நிர்வாகத்தால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தீவிர நடவடிக்கைகளில் 'தாட்கோ' நிறுவனம் தனது முழு ஒத்துழைப்பையும் நல்கி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைய தனது பணியினை செவ்வனே செயலாற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

– மு. நா. கிருட்டிணசாமி,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சேலம் மாவட்டம்.*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364908 தொலையச்சு : 25368926




| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |





## இந்த இதழில்...


★ காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ........ 2
★ கடலூரில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ........ 9
★ காவிரி நதிநீர் ஆணையம் ........ 17
★ தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா ........ 22
★ முதலமைச்சர்கள் மாநாடு ........ 28
★ ருக்மிணி தேவி அருண்டேல் நூற்றாண்டு விழா ........ 35
★ ஈரோட்டில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ........ 37
★ வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் உரை ........ 43
★ போலியோ இல்லாத தமிழ்நாடு ........ 49
★ திருநெல்வேலி நகர மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.12 கோடி அனுமதி ........ 53
★ தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் புதிய அலுவலகக் கட்டடம் திறப்பு விழா ........ 57
★ விழுப்புரம் மாவட்ட ஆதிதிராவிடர் மக்களுக்கு ரூ.3.15 கோடி தமிழக அரசு மானியம் ........ 58
★ திருவண்ணாமலை மாவட்டத்தில், அயராது செயல்படுத்தப்படும் அனைவருக்கும் கல்வி இயக்கம் ........ 60
★ கூட்டுறவு இயக்கத்துக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தரும் ஊக்கம் ........ 62
★ உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (கவிதை) ........ 65
★ விண்ணைக் கடந்த வீராங்கனை ........ 66
★ கடலூர் மாவட்டத்தில் அனைவரும் பாராட்டும் அன்னதானத் திட்டம் ........ 68
★ சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மதுரை திருமலை நாயக்கர் மகால் ........ 70
★ முழு சுகாதாரத்தை முனைப்பாகச் செயல்படுத்தும் ஈரோடு மாவட்டம் ........ 71
★ கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்கப்பட்ட புதிய பாலம் மற்றும் குடிநீர்த்தொட்டி 73
★ தேனி மாவட்டத்தில் மகளிர் குழுக்களின் சிறப்பான செயல்பாடு ........ 75
★ சேலம் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகள் ........ 78
★ தருமபுரி மாவட்டத்தில் பால்மோ ரோஸ் உற்பத்தி ........ 80



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2034
மாசி – பங்குனி
மார்ச் 2003
மலர் : 34 இதழ் 17 & 18
விலை ரூ.10


முதல் பக்க அட்டையில்...
தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா

இரண்டாம் பக்க அட்டையில்...
காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

கடைசிப் பக்க அட்டையில்...
ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

# மக்கள் பிரச்சினைகளை மக்கள் மன்றத்தில் பேசுகிறேன்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட புகழ் மிக்க வரலாற்றைக் கொண்ட இந்தக் காஞ்சி மாநகரத்திற்கு வந்து சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு விழாவில் உங்களை எல்லாம் கண்டு உங்களோடு என்னுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"உலகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் மிக உன்னதமானது காஞ்சி மாநகரம்" என்று இலக்கியங்களில் போற்றப்படுவது காஞ்சி நகரம். எல்லா மதங்களுக்கும் தக்க இடமளித்து அவற்றைப் பாதுகாக்கும் தாயாக பழங் காலத்திலிருந்தே விளங்கி வருகின்றது காஞ்சி நகரம். வைணவ சமயம், சைவ சமயம், சமண சமயம், பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம் ஆகிய சமயங்கள் ஒரே இடத்தில் செழித்து வளர முடியும் என்பதை உலகத்திற்கு காட்டி வருகின்ற ஒரே நகரம் என்று காஞ்சிபுரத்தை சொன்னால் அது மிகை ஆகாது என்று நினைக்கிறேன்.

நகர அமைப்பிலும் பழங்காலத்திலேயே மிகச் சிறந்து விளங்கியது காஞ்சிபுரம் என்று பிற நாட்டிலிருந்து காஞ்சிபுரத்துக்கு வருகை தந்த பயணிகளின் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து நாம் அறிய முடிகிறது. வடமொழியில் அதாவது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு இருக்கிற ஒரு வாசகம் காஞ்சிபுரத்தின் சிறப்பை விளக்குகிறது. "நகரேஷு காஞ்சி" என்ற அந்த வாசகம் நகரங்களில் தலை சிறந்ததாக காஞ்சிபுரம் விளங்கியதைக் கூறுகின்றது. அசோக மன்னர் எழுப்பிய ஒரு ஸ்தூபி காஞ்சிபுரத்தில் இருந்ததாக சீன நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த யுவான் சுவாங் என்னும் யாத்திரிகர் குறிப்பிட்டு இருக்கிறார்.

நகர அமைப்பு சிறப்பில் மட்டுமல்லாமல் கலையிலும் சிறந்து விளங்குகிறது காஞ்சிபுரம். சிற்பச் சிறப்பும், கட்டடச் சிறப்பும் மிக்க 108 கோவில்கள் ஒரே ஊரில் உள்ளன என்றால் அந்த ஊர் காஞ்சிபுரம் மட்டுமாகவே இருக்க முடியும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,112 கோவில்கள் இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. உலகமே வியக்கும் சிற்பக் கலையின் அற்புதத்தை நாம் மாமல்லபுரத்தில் பார்க்கிறோம்.

இந்தியாவின் மிக அழகிய பறவைகளின் சரணாலயமாகத் திகழும் தேசிய சரணாலயம் வேடந்தாங்கல். ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து வந்து அழகிய





பறவைகள் அடைக்கலம் அடையும் வேடந்தாங்கல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தான் அமைந்திருக்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமை தருகின்ற செய்தி ஆகும். பாஸ்போர்ட் இல்லாமல் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்லும் பறவைகளைப் பார்க்கும் போது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் சங்கப் புலவரின் தத்துவம் இந்தப் பறவைகளுக்கு மட்டும் தான் சொந்தமோ, மனித குலத்துக்கு இது சொந்தமாகாதோ என்ற ஏக்கம் தான் நம் நெஞ்சத்திலே எழுகிறது. உலகம் முழுவதும் மனித குலம் ஒன்று அங்கு வேற்றுமையே இல்லை என்ற நிலைமை வருகிற போது நாம் எல்லாம் பாஸ்போர்ட் இல்லாமலே, விசா இல்லாமலே வெளிநாடு போகலாம். ஆனால் இன்றைய நிலைமை என்ன ? போட்டி , பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி ஆகியவையே இன்றைக்கு இயல்பாக இருப்பதால், தமிழக மக்களின் நலனைப் பற்றி கூடி ஆலோசிக்கின்ற சட்டப் பேரவைக்கு வருகின்ற பல்வேறு கட்சிப் பறவைகள் நடுவே, ஒரு சில அரசியல் பறவைகள் திசை மாறிய பறவைகளாய் போய்க் கொண்டிருக்கின்ற விபரீதத்தை இன்று நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

தொன்மைச் சிறப்பு கலைச் சிறப்பு இயற்கை எழில் சிறப்பு – இப்படி எத்தனையோ சிறப்புக்களைப் பெற்றிருக்கின்ற இந்தக் காஞ்சி மண்ணுக்கும், நம்முடைய கழகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை இங்கே இருக்கின்ற ஒவ்வொருவரும் ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் உடனே புரியும். எந்தப் பெருமகனின் பெயரை நமது இயக்கத்தின் பெயரிலேயே வைத்திருக்கிறோமோ – எந்தத் திருமகனின் திரு உருவத்தை நமது கழகக் கொடி தாங்கிக் கொண்டிருக்கிறதோ – அந்தப் பெருமகன் அந்தத் திருமகன், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பெருமைக்குரிய மண் இந்த மண். இதை நினைத்துப் பார்க்கும் போது காஞ்சிக்கும் நம்முடைய கழகத்திற்கும் உள்ள தொடர்பு எவ்வளவு வலிமையானது, எவ்வளவு பெருமையானது எவ்வளவு அருமையானது என்பதை நினைத்துப் பார்த்து நாம் பெருமிதம் அடைகிறோம்.

**இந்த மண் நமது சொந்த மண்**

அது மட்டுமா ? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் நமது அற்புத இயக்கத்தை தொடங்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் வாழ்ந்ததும் இந்த மண் தானே ? பாரி வள்ளலுக்கு ஒரு பரம்பு மலை – நமது புரட்சித் தலைவருக்கு ஒரு பரங்கிமலை. அந்தப் பரங்கிமலை வள்ளல் வாழ்ந்ததும் இந்தக் காஞ்சி மாவட்டத்தில் தான் என்பதை நினைக்கின்ற போது இந்த மண் நமது சொந்த மண் என்ற உணர்வு தான் நமக்கெல்லாம் ஏற்படுகிறது.

"கல்வி சிறந்த தமிழ்நாடு" என்று பாரதியார் பாடினார். நாம் "கல்வி சிறந்த காஞ்சி மாவட்டம்" என்று மகிழ்ச்சியோடு கூறலாம். ஏனென்றால் , காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 129 கல்லூரிகள் உள்ளன.

மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் இந்த இனிய விழாவிலே , இன்றைய தினம் மொத்தம் 446 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசுத் திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும் , பல திட்டங்களுக்கு அடிக்கற்களை நாட்டியதிலும் , பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்

திட்ட உதவிகளை வழங்குவதிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

### காஞ்சி என்றாலே பட்டு

முடிவுற்ற பணிகளின் கீழ் மொத்தம் 67 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு துறைகளைச் சார்ந்த கட்டடங்களையும், சாலைகளையும் ,பாலங்களையும் , குடிநீர் திட்டங்களையும் இந்த விழாவில் திறந்து வைத்துள்ளேன். காஞ்சி என்றாலே பட்டு , பட்டு என்றாலே காஞ்சி என்று சொல்லக் கூடிய அளவுக்கு உலகப் புகழ் பெற்ற காஞ்சிப்பட்டுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் கைத்தறித் துறையினால் அமைக்கப்பட்டுள்ள 2 கோடி ரூபாய் மதிப்புடைய புதிய பட்டு விற்பனை வளாகம் இந்த விழாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நெடுஞ் சாலைத் துறையினால் கட்டி முடிக்கப்பட்டுள்ள மொத்தம் 12 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஏனாத்தூர் உத்திரமேரூர் – காஞ்சிபுரம் சாலை ,பல்லாவரம் – குன்றத்தூர் சாலை ஆகியவற்றில் உள்ள 3 பாலங்களையும் நான் இன்று திறந்து வைத்துள்ளேன். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பல்லாவரம் ,செங்கல்பட்டு, ஆலந்தூர் ,மதுராந்தகம் ,தாம்பரம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகளில் மொத்தம் 36 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சுகாதார வளாகங்கள் , பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், நவீன கழிப்பறைகள் , மற்றும் ஆலந்தூர் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாடு திட்டத்தில் 34 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பூமிக்கு அடியிலான கழிவு நீர்க் கால்வாய் அமைப்பினை இன்றைய தினம் திறந்து வைத்ததில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

இந்த மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்கின்ற வகையில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஊரகப் பகுதியைப் பொறுத்தவரையில் 42 பணிகள் மொத்தம் 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – குன்றத்தூர் , பீர்க்கங்கரணை ,மாடம்பாக்கம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் 4 குடிநீர் வழங்கல் பணிகள் 8 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் நிறைவு செய்யப்பட்டு , இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. பொதுவாகவே , அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளை எங்களுடைய அரசு போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றி வருகின்றது. அந்த வகையில் , இந்த மாவட்டத்திலும் நிறைய குடிநீர் வழங்கல் பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

மேலும் ,இதே விழாவிலேயே ஒரு கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களையும் – இந்த மாவட்டத்தின் பல்வேறு பேரூராட்சிகளில் 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடங்களையும் – கல்வித் துறையினால் 3 இடங்களில் 13.5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பு அறைகளையும் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்புடைய தொகுப்பு வீடுகள் – பொது விநியோகக் கடைகள் – வெள்ளத் தடுப்புச் சுவர்கள் – பள்ளிக் கட்டடங்கள் – மதிய உணவுக் கூடங்கள் –





ஆதிதிராவிடர் நலப் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றையும் இன்றைய தினம் இந்த விழாவிலே திறந்து வைத்து இந்த மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்ததில் உங்கள் அன்பு சகோதரியாகிய நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

### புதிய திட்டங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று 2 முக்கிய புதிய திட்டங்களை துவக்கி வைத்ததில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக ,கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு சுகாதார வசதி என்பது மிகவும் தேவையானது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. கிராமப் புறங்களிலும் , நகர்ப் புறங்களிலும் உள்ள பெண்களுக்காக “மகளிருக்கான சுகாதார மையங்களை” எங்கள் அரசு மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உருவாக்கி வருகின்றது. அந்த வகையில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக “முழு சுகாதாரத் திட்டம்” என்ற 20 கோடி ரூபாய் மதிப்பிலான மாவட்டம் எங்கும் கழிப்பறைகள் அமைக்கும் திட்டத்தை இங்கே துவக்கி வைத்துள்ளேன். அதே போன்று ,காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதுமுள்ள கிராம மக்களுக்கு குடிநீர் வசதி வழங்குகின்ற வகையில் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 40 கோடி ரூபாய் மதிப்பிலான குடிநீர் வழங்கல் திட்டத்தையும் இன்று துவக்கி வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கிராம அளவில் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்கள் மக்களை சென்றடைய வேண்டும் என்ற எனது விருப்பத்தின் அடிப்படையில் ராசி (RASI) அதாவது – Rural Access to Services through Internet என்ற கணினி இணைய மையத்தை இன்று காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக இந்த இனிய விழாவில் துவக்கி வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் ஒவ்வொரு கிராம மற்றும் நகர பகுதியிலும் ஒரு கணினி இணைய மையம் ஏற்படுத்தப்படும். இந்த மையங்கள் மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு ,மக்கள் அனைவர்க்கும் கல்வி ,வேளாண்மை ,தொழில் நுட்பம் ,மக்கள் நலம் ஆகிய துறைகள் சார்ந்த தகவல்களும் ,அரசுத் திட்டங்கள் பற்றிய தகவல்களும் சென்று அடைய உதவும். இன்று காஞ்சி மாவட்டத்தில் 25 ராசி மையங்கள் என்னால் துவக்கி வைக்கப்படுவதன் மூலம் கிராம மக்களுக்கும் பெரிய அளவில் 'தகவல் தொழில் நுட்பவியல் புரட்சி' சென்றடைய உள்ளது என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

### துணை மின் நிலையம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக இன்றைய தினம் மொத்தம் 301 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக இன்றைய தினம் மொத்தம் 272 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் திருக்கழுக்குன்றம், சாலவாக்கம், மேலக் கோட்டையூர், மடிப்பாக்கம், கொட்டிவாக்கம், இரும்புலியூர் நீர்வளூர் – சிறுவெடை ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. பொதுவாகவே பொருளாதாரம் செழித்திட தங்கு தடையில்லாத, சீரான, மின்சார விநியோகம் மிகவும் இன்றியமையாதது. இதைக் கருத்தில் கொண்டு தான் மேலக் கோட்டையூரில் 233 கோடி ரூபாயில் 400 KV திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையத்திற்கும் – சாலவாக்கம், மடிப்பாக்கம், கொட்டிவாக்கம், இரும்புலியூர் ஆகிய இடங்களில் தலா 33KV திறன் கொண்ட துணை மின் நிலையங்களுக்கும் – நீர்வளூர் – சிறுவெடை கிராமத்தில் 110 KV திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையத்திற்கும் அடிக்கற்கள் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவை மட்டுமன்றி, கல்வித் துறையின் சார்பாக மொத்தம் 2 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் 63 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், 45 பள்ளி கழிவறைகள் மற்றும் வட்டார மையங்கள் ஆகியவற்றிற்கும் – தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் பல்வேறு நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் மொத்தம் 10 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காகவும் – பொதுப் பணித் துறையின் சார்பில் அரசு மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை அறைகள் கொண்ட கட்டடங்கள், அறுவை சிகிச்சைப் பிரிவுகள், உயர் நிலைப் பள்ளி கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள், மாணவியர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றிற்காக 9 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 25 இலட்சம் ரூபாய் செலவில், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி மன்றத்திற்கான அலுவலக கட்டடத்திற்கும் – மாவட்டம் முழுவதும் 28 இடங்களில் 43 இலட்சம் ரூபாய் செலவில் அங்கன்வாடி கட்டடங்களுக்கும் – 83 இலட்சம் ரூபாய் செலவில், கோவளம், செங்கல்பட்டு, சித்தாலபாக்கம், தேனம்பாக்கம், தாமல், ஆகிய இடங்களில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் வணிக வளாகங்களுக்கும் – காஞ்சிபுரத்தில் அமைய உள்ள மாவட்ட வணிக வளாகத்திற்கும், அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிகுந்த மனத் திருப்தியை அடைகின்றேன்.

### மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய லட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத் தான், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை முதன் முதலாக நான் 1992–இல் தொடங்கிய போது ஆரம்பத்தில் அந்தக் குழுக்களில் உள்ள மகளிருக்கு கடன் வழங்க வங்கிகள்

பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால், இன்றைய தினம் இந்தச் சூழ்நிலை தலைகீழாக மாறியுள்ளது. தமிழகமெங்கும் உள்ள இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம், பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து, இன்றைக்கு வங்கிகளே தங்களிடம் அந்த சேமிப்பு நிதியை வைப்பு நிதியாக செலுத்தி வைக்குமாறு கோருவதற்காக, இந்த மகளிரைத் தேடிச் செல்லும் நிலைமை உருவாகி இருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 இலட்சத்து 19 ஆயிரத்து 583 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம், 19 இலட்சத்து 77 ஆயிரத்து 274 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து தற்போது 255.49 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்று அறிகிறேன். இன்று இந்த மாவட்ட அரசு விழாவில் கூட மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு கடைகளை வைத்திருப்பதை நான் பார்க்கிறேன். நான்கூட இங்கே வைத்திருக்கின்ற ஒரு கடைக்குச் சென்றேன். அப்போது மகளிர் சுய உதவி குழு செய்திருந்த ஒரு பொம்மையை 450 ரூபாய் கொடுத்து இன்றைக்கு வாங்கி இருக்கிறேன். இந்த சீரிய வளர்ச்சிக்கு காரணமான மாவட்ட ஆட்சித் தலைவர் உள்பட அனைவரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன்.

இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தில் சேர மென்மேலும் பெண்கள் அதிக அளவில் முன் வர வேண்டும் என்பதே எனது பேரவா.



## மழைநீர் சேகரிப்பு

தமிழ்நாட்டில் அவ்வப்போது பருவமழை தவறுவதால் குடிநீர்த் தேவைக்கு நாம் அல்லல் படுகின்றோம். இந்த அவல நிலையை மாற்றி , வான் தந்த மழை நீரை முறையோடு சேமித்து நாம் வாழ்வதோடு ,நமது சந்ததியினரும் மழைநீரின் அவசியம் பற்றி உணர்ந்து வாழ நாம் இப்போதே அதற்கு , அடித்தளம் போட்டாக வேண்டும். மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுத்து முறையாக சேமித்து , பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல்நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும். குடிநீர் ஆதாரமும் பெருகும்.

கால்நடைகளானாலும் சரி, மனிதர்களானலும் சரி, அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுகின்ற தண்ணீரை நாம் வீணாக்கக் கூடாது. இதற்காக, தொலை நோக்கு சிந்தனையுடன் உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதத் திட்டம் தான் "மழைநீர் சேகரிப்புத் திட்டம்".

நீர் வளம் பெருகினால் ,நில வளம் பெருகும். நில வளம் பெருகினால் ,உலகம் செழிக்கும் ,என்ற அடிப்படையில் தான் இதனை மக்கள் இயக்கமாக ஆக்க நான் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். அனைத்து கட்டடங்களிலும் , குடிசைகள் என்றாலும் , அடுக்குமாடி குடியிருப்புகள் என்றாலும் ,அரசுக் கட்டடங்கள் என்றாலும் ,அங்கெல்லாம் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த அரசு வலியுறுத்தி வருகிறது. அரசின் இந்த ஏற்பாட்டினால் இதுவரை , 42,627–க்கும் மேலான அரசு கட்டடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை , மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நானே அதை செயல்படுத்துவதில் முன் உதாரணமாக முன்னின்று எனது வீட்டிலேயே இதனைத் தொடங்கியுள்ளேன் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே நீங்களும் உங்கள் இல்லங்களில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு எங்கள் அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. குறிப்பாக ,சென்னையை சுற்றியுள்ள தாம்பரம் ,ஸ்ரீபெரும்புதூர் மற்றும் செங்கல்பட்டு வட்டங்களிலுள்ள பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றிய கட்டுப் பாட்டிலுள்ள பயனற்ற ஏரிகளை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். இது மட்டுமின்றி , செங்கல்பட்டு நகராட்சியில் இருந்து வெளி வரும் கழிவு நீர் கொளவாய் ஏரியில் கலப்பதால் பாலாறு மாசுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தி கொளவாய் ஏரியை தூய்மைப்படுத்தி ,அதிலிருந்து சுத்தமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் சென்னை நகரத்திற்கு விநியோகம் செய்வதற்குரிய திட்டத்திற்கு இந்த அரசு விரைவில் ஒப்புதல் அளிக்க உள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை உங்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் காஞ்சி மாவட்டம் ஏரிகளின் மாவட்டம். இந்த மாவட்டத்திலுள்ள 1,942 ஏரிகளும் , 4,000–த்திற்கும் மேலான குளம் குட்டைகளும் நமது முன்னோர்களின் மழை நீர் சேமிப்பு கொள்கைக்கு ஆதாரம். விவசாயிகள் நலம் இந்த அரசின் நலம் என நான் உறுதியாக நம்புகிறேன். ஏரிகள் மேம்பாட்டின் மூலம் விவசாயம் செழிக்கும் என்ற நோக்குடன் உலக வங்கி உதவியுடன் 40 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ,இந்த மாவட்டத்தில் 253 ஏரிகளை செப்பனிடும் பணிகள் திறம்பட நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஏரிகளை மேம்பாடு அடையச் செய்வதுடன் கசிவு நீர்க் குட்டைகளில் நீர் ஆதாரத்தைப் பெருக்கி இவற்றோடு மழை நீர் சேகரிப்பையும் தீவிரமாக கடைபிடித்தால் ,காஞ்சிபுரம் மாவட்டத்தில் தண்ணீர் பஞ்சமே இல்லை என்ற நிலையை நாம் ஏற்படுத்த முடியும். இதே போன்ற முயற்சிகள் தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுமானால் ,தண்ணீரின் தேவைகளுக்கு நாம் நதிகளை நம்பி இருக்க வேண்டிய அவசியமே ஏற்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*"வான் தரும் மழை நீர் சேமிப்போம்*
*வாழ்வுக்கு வளம் சேர்ப்போம்"*

## தொழில் வளர்ச்சி

நவீன யுகத்தின் ஆலயங்களாக ஆலைகளும் , தொழிற்சாலைகளும் விளங்கிக் கொண்டு இருக்கின்றன. தமிழகத்தில் ஒரு பொருளாதாரப் புரட்சி ஏற்படவேண்டும் என்றால் ,தொழில் வளர்ச்சி கட்டாயம் தேவை. எனவே தான் , தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும் , ஊக்கமும் அளிப்பதற்கு தமிழக அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இது போன்று , அனைத்து ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளையும் நான் எடுத்து வருகிறேன்.

இதன் விளைவாக மாபெரும் தொழில் நிறுவனங்கள் தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

- ★ 'Xansa' என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தினரால் 235 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னையை அடுத்த சிறுசேரியில் மென்பொருள் தயாரிக்கும் மையம்.
- ★ அமெரிக்காவின் 'Cornell' பல்கலைக்கழகத்துடன் 62 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் உயிர் தொழில் நுட்பப் பூங்கா.
- ★ சிங்கப்பூர் 'Ascendas' நிறுவனத்துடன் 450 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னையில் இரண்டாவது தகவல் தொழில் நுட்ப வளாகம்.
- ★ TISCO என்ற டாடா ஸ்டீல் நிறுவனத்துடன் இணைந்து சுமார் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் ஒருங்கிணைந்த டைட்டேனியம் டையாக்சைடு திட்டம் – Integrated Titanium Dioxide Project.

போன்ற பல்வேறு தொழில்களுக்கு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் , தமிழ்நாடு மின்சார வாரியமும் , தேசிய அனல் மின் கழகமும் சம அளவிலான பங்களிப்புடன் கூட்டு முயற்சியில் வடசென்னையில் ,ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ,1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்து , தமிழக மின் தொகுப்புக்கு அதனை வழங்குவதற்கு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் சென்னை நகருக்குத் தங்கு தடையற்ற மின்சாரம் சீராக கிடைக்க உள்ளது. மின் உற்பத்தித் துறையில் ,மத்திய மின் உற்பத்தி நிறுவனமான தேசிய அனல் மின் கழகத்திற்கும் மாநிலத்திற்கு சொந்தமான மின் வாரியத்திற்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள முதல் கூட்டு முயற்சித் திட்டம் இதுவே ஆகும்.

இது மட்டும் அல்லாமல் செங்கல்பட்டை அடுத்த முட்டுக்காடு கிராமத்தில் கடல் வாழ் உயிர் தொழில் நுட்ப பூங்கா – தருமபுரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம் ஆகியவற்றிற்கான பணிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மேலும், உலக வங்கியின் உள் அலுவலகம் அமைப்பதற்காக 153 நாடுகளில் ஆய்வு செய்யப்பட்டு, இறுதியில் இந்தியாவில் அதை அமைப்பது என்ற முடிவு உலக வங்கியினால் எடுக்கப்பட்டு, இந்தியாவிலும் உங்கள் அன்புச் சகோதரி ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டில் தான் அதனை அமைப்பது என்று தீர்மானித்து சென்னையை உலக வங்கி தேர்வு செய்தது. 15.3.2002 அன்று அந்த அலுவலகத்தை நான் திறந்து வைத்தேன்.

மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது என்பதையும் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியில் தேங்கிக் கிடந்த தொழில் வளர்ச்சி நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் வளர்ச்சி பெற்று ,தற்போது அன்னிய முதலீட்டைக் கவருவதில் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தைப் பெற்று ,இப்போது முதலிடம் நோக்கி வீறுநடை போட்டு வருகிறது என்ற பெருமைக்குரிய செய்தியையும் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.



இருங்காட்டுக் கோட்டை ஹூண்டாய் கார் தொழிற்சாலை, மறைமலை நகர் ஃபோர்டு கார் தொழிற்சாலை, போலரிஸ், பழைய சீவரம் எஸ்.வி. சுகர் மில், திருப்போரூர் ஸ்ரீராம் ஸ்பேர் பார்ட்ஸ் தொழிற்சாலை, ஆகியவை காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இது போன்று மென்மேலும் தொழிற்சாலைகள் நிறைய அமையப் பெற்று காஞ்சிபுரம் மாவட்டம் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டிலேயே தலை சிறந்த மாவட்டமாக விளங்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

**நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

இந்தச் சீர்மிகு விழாவில் இன்றைய தினம் காஞ்சிபுரம் மாவட்ட மக்களின் பலதரப்பட்ட பிரிவினரையும் சென்று அடையும் வண்ணம் மொத்தம் 5 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்புடைய நலத்திட்ட உதவிகள், 25,489 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளன. அவற்றில் குறிப்பாக காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பாக 5,625 பயனாளிகளுக்கு மகளிருக்கான கடன், சுய உதவி குழுக்களுக்கான கடன், வேலை செய்யும் பெண்களுக்கான கடன், மழை நீர் சேகரிப்பு அமைக்க கடன் ஆகியவற்றையும் – வனத்துறையின் சார்பாக 32 குழுக்கள் கொண்ட 562 பயனாளிகளுக்கு கடன் உதவியும் – வருவாய்த் துறையின் சார்பாக 502 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்களும் – சமூக நலத்துறையின் சார்பாக 35 பேருக்குத் தையல் இயந்திரங்களும் – இரண்டு பெண் குழந்தை கொண்டவர்களுக்கான நலத் திட்டத்தில் 100 பேருக்கும் – 5,695 பெண்களுக்கு, மகளிர் சுய உதவி குழுக்களுக்கான சுய உதவியும் – 1,362 பெண்களுக்கு இதே திட்டத்தின் கீழ் பொருளாதார கடனும் – 2,205 பெண்களுக்கு NABARD திட்டத்தின் கீழ் நேரடி கடனும் வழங்கப்பட உள்ளன என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரம் குறைவாக இருப்பதால் இந்த மேடையில் 15 பேருக்கு மட்டும், இந்த உதவிகளை என் கையால் நானே வழங்குகிறேன். இங்கே திரளாக வந்துள்ள மற்ற அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், உரிய நலத்திட்ட உதவிகளை இப்போதே இதே பந்தலில் வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு வழங்குகின்ற இந்த உதவிகள் எல்லாம் ஓரளவுக்குத் தான் உங்களுக்குத் துணை புரியும் என்று இருந்தாலும், சிறு துளி பெரு வெள்ளம் என்ற தத்துவத்திற்கு ஏற்ப இவற்றை அடிப்படையாக வைத்து உங்கள் உழைப்பு என்ற மூலதனத்தைப் பயன்படுத்தி உங்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களும், வளங்களும் பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

என் அன்புக்குரிய காஞ்சி மாவட்ட மக்களே! இந்த இனிய விழாவிலே உங்களை எல்லாம் சந்திப்பதற்கும், உங்களோடு சேர்ந்து சிந்திப்பதற்கும் இன்று கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த விழாவை சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

*– (காஞ்சிபுரத்தில் 8– 2–2003 அன்று நடைபெற்ற அரசு விழாவில்* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்கள் ஆற்றிய உரை)*

★ ★ ★



# எனது சிந்தனை முழுவதும் மக்களுக்கு நன்மை செய்து கிடப்பதே

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

வரலாற்றுச் சிறப்புமிக்க கடலூர் நகரில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கடலூர் மாவட்ட அரசு விழாவில் பங்கேற்று உங்களை எல்லாம் காண்பதிலும் உங்களிடையே எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.



பல்வேறு சிறப்புகளைக் கொண்ட கடலூர் மாவட்டம் முற்காலத்தில் தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. தமிழ் மொழியில், ஒரு அருமையான முதுமொழி உண்டு. சேர, சோழ, பாண்டிய மற்றும் தொண்டை நாடுகளுக்கு உள்ள சிறப்புகளைப் பற்றிய பழைய கவிதை அது.

"சோழ நாடு சோறுடைத்து,
பாண்டிய நாடு முத்துடைத்து,
சேர நாடு தந்தம் உடைத்து,
தொண்டை நாடு சான்றோர் உடைத்து"
என்பதே அந்த முதுமொழி.

"சான்றோர் உடைத்து" என்பது, எவ்வளவு அர்த்தமுள்ள வாசகம் என்பதை நான் நினைத்துப் பார்த்து வியப்படைகிறேன். சான்றோர் பலர் தோன்றிய மண் இந்த மண்.

"நாமார்க்கும் குடி அல்லோம் என்றும் யார்க்கும் பணிவோம் அல்லோம்" என்று 1,500 ஆண்டுகளுக்கு முன்பு முழக்கமிட்ட அப்பர் அடிகள் என்னும் திருநாவுக்கரசர் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்.

"பித்தா பிறை சூடி" என்று, சிவபெருமானை பாடிய சுந்தரமூர்த்திநாயனாரும் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அண்மைக் காலத்தில் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பாடிய வள்ளலார் திரு அவதாரம் செய்த புண்ணிய பூமி இது.



கோயில் என்றால் சைவர்களைப் பொறுத்த வரையில் அது சிதம்பரம் தான். அந்தச் சிதம்பரம் நடராஜப் பெருமானது, திருக்கோயில் அமைந்திருக்கும் மாவட்டம் கடலூர் மாவட்டம் தான் என்பது எத்தனைப் பெரிய சிறப்பு.

வைணவத் திருத்தலங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருவந்திபுரம் இந்தக் கடலூரிலேயே அமைந்திருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தின் தலைநகராக சென்னை இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் தலைநகராகவே அன்றைய கடலூர் நகர்

விளங்கியது. கடல் வளம், மீன் வளம், கனி வளம், முந்திரி, பலா என வேளாண் வளம், மற்றும் தொழில் வளம் ஆகியவை நிறைந்திருக்கின்ற கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து அரசு நலத் திட்ட விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடலூர் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் இந்த மாவட்டத்து மக்களின் மேம்பாட்டிற்காகவும் ஏறத்தாழ 855 கோடி ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை நான் இன்றைய தினம் கொண்டு வந்திருக்கின்றேன். சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குகின்ற 720 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-I என்ற பெரியதோர் வளர்ச்சித் திட்டமும் இதில் அடங்கும். கடலூர் மாவட்டத்தில் நடக்கின்ற அரசு விழாவிலேயே இத்திட்டத்தையும் தொடங்கி வைப்பதற்கு, நான் வருகை தந்திருக்கின்றேன்.

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குகின்ற இந்த திட்டத்தினை கடலூர் அரசு விழாவில் ஏன் துவக்கி வைக்க வேண்டும் என்ற கேள்வி, இந்த மாவட்டத்து மக்களின் மனங்களில் எழுந்துள்ளது என்பதை நான் நன்கு அறிவேன். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடி மனிதாபிமானத்தின் உன்னத வடிவமாகவும் மற்றவர் படும் துன்பத்தைக் கண்டு இரங்குகின்ற இரக்க உணர்ச்சியின் தனிப் பெரும் சின்னமாகவும் விளங்கிய வள்ளலார் பிறந்த புண்ணிய பூமியில் அமைந்திருக்கின்ற வீராணம் ஏரியின் தண்ணீர் தான் சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்க்க உதவிடப் போகிறது என்ற உண்மையின் அடிப்படையில் தான் சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டத்தினை கடலூர் மாவட்டத்தில் அரசு விழாவில் துவக்கி வைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு போவது தகாது என்றால் அடுத்த மாநிலமாகிய கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு எப்படி நாம் தண்ணீர் கேட்க முடியும் ?*

இன்னொரு கருத்தையும் என் அன்பிற்குரிய கடலூர் மாவட்டப் பெருமக்களாகிய உங்கள் முன் வைப்பது என் கடமை என்று கருதுகிறேன். கடலூர் மாவட்டத்தில் இருக்கும், வீராணம் நீரை சென்னையில் இருக்கும் மக்களுக்கு, எப்படிக் கொண்டு போகலாம் என்று வினா எழுப்புகிறவர்களும் உண்டு. அவர்களை நோக்கி நான் கேட்கின்ற ஒரே கேள்வி –

தமிழகத்தின் தலைநகருக்கு குடிநீர் வழங்க அதே தமிழகத்தில் இருக்கின்ற அதுவும் சென்னைக்கு கொஞ்சம் அருகிலேயே இருக்கின்ற கடலூர் மாவட்டத்திலிருந்து அதாவது, வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு போவது தகாது என்றால் அடுத்த மாநிலமாகிய கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு எப்படி நாம் தண்ணீர் கேட்க முடியும்? இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று எதிர்க் கட்சியினர் தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு விவசாயிகள் மத்தியில் எப்படியேனும் அதிருப்தியை உருவாக்கி அவர்களை திசை திருப்ப வேண்டும் என்று முயற்சித்து வருகிறார்கள் என்பது, எனக்கு நன்கு தெரியும். அதே நேரத்தில் கடலூர் மாவட்ட விவசாயிகளின் ஐயத்தையும் அச்சத்தையும் தீர்த்து வைப்பது எனது தலையாய கடமை என்பதையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன்.

மழைக் காலங்களில் சேகரிக்கப்படும் மழை நீர் மட்டுமல்லாமல் கொள்ளிடம் நிரம்பி வழியும் காலங்களில் அந்த உபரி நீர் வீராணம் ஏரிக்குத் திருப்பி விடப்படுகிறது. மழை பொய்த்து சென்னை நகருக்கான நீர் ஆதாரங்கள் வறண்டு விடுகின்ற காலங்களில் சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்க நெய்வேலியில் இருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இதற்காக, அரசுக்கு மிகப் பெரிய செலவு, ஏற்பட்டு வருகிறது. இத்தகைய தேவையற்ற செலவைத் தவிர்க்கவும் வீராணம் ஏரியின் உபரி நீர் சென்னை மாநகரின் குடிநீர் பற்றாக்குறையை சரி செய்ய பெரிதும் உதவும் என்ற எண்ணத்திலும் தான் இந்தத் திட்டம் 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீராணம் ஏரியின் நீர் வரத்துக்கு ஆதாரமான வடவாறு வாய்க்காலின் முழு நீளமான 22 கிலோ மீட்டர் நீளத்திற்கு தளம் மற்றும் வாய்க்காலின் இரு பக்கங்கள் ஆகியவற்றிற்கு, முழுவதுமாக Lining செய்து நீர் வரத்தினை மேம்படுத்துதல், தூர் அடைந்துள்ள வீராணம் ஏரியின் முழு நீர் மட்டத்தினை 45.5 அடியிலிருந்து 47.5 அடியாக உயர்த்தி அதன் கொள்ளளவினை 930 மில்லியன் கன அடியிலிருந்து முழு அளவான 1465 மில்லியன் கன அடிக்கு கொண்டு வருதல், ஏரியின் கரையை பலப்படுத்தி அலைதாங்கி சுவர் கட்டுதல்; எதிர்வாய்க்கரை அமைத்தல்; உபரி நீர் போக்கிகளை மேம்படுத்துதல்; அதன் 58 கிளை வாய்க்கால்களையும் நவீனப்படுத்துதல் போன்ற இந்தப் பணிகள் எல்லாம் கடலூர் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு



வருகின்றன. 111 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இந்த மேம்பாட்டுப் பணித் திட்டம் துரிதமாக நிறைவேற்றப்பட்டு இது வரை 54.4 கோடி ரூபாய் அளவிற்கு, பணிகள் முடிவடைந்துள்ளன. இவை தவிர சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளையும் 2004–ஆம் ஆண்டு, ஜூன் மாதத்திற்குள் முடித்திட நான் ஆணையிட்டு உள்ளேன். இந்த வீராணம் ஏரி மேம்பாட்டுப் பணிகளினால் வீராணம் ஏரியின் ஆயக்கட்டு நிலமான 44,856 ஏக்கர் பரப்பளவுள்ள மொத்த பாசனப் பரப்பிற்கும் நிலையான உறுதியான பாசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதே உண்மை. எனது அன்பிற்குரிய கடலூர் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் இதில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டிய அவசியம் கொஞ்சம் கூட இல்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு, மேம்பாட்டுப் பணிகளின் வாயிலாக வீராணம் ஏரியின் கொள்ளளவு உயர்த்தப்படுவதன் மூலம் கிடைக்கின்ற உபரி நீரிலிருந்து தான் சென்னை மாநகருக்கு தினசரி 180 மில்லியன் லிட்டர் அதாவது வருடத்திற்கு 2.45 டிஎம்சி அடி தண்ணீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. வீராணம் ஏரியின் கொள்ளளவை உயர்த்தி அதன் மூலம் கிடைக்கும் உபரி நீரிலிருந்து ஒரு பகுதியை மட்டும் சென்னை நகருக்கு குடிநீர் வழங்க எடுத்துச் செல்வதால் வீராணம் ஏரியின் ஆயக்கட்டு பாசனதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.



வீராணம் ஏரியின் முழு நீர் மட்ட அளவு தற்போதுள்ள 45.5 அடியிலிருந்து 47.5 அடியாக உயர்த்தப்படுகிறது என்பதை நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டினேன். இதில், 39 அடி நீர் மட்ட அளவுக்கு மேலிருந்து தான் சென்னை நகருக்கு குடிநீர் எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. வீராணம் கிளை வாய்க்கால் மதகுகளின் தரை மட்ட அளவு 27.6 அடியிலிருந்து, 39.8 அடி வரை இருப்பதாலும் பாசன காலங்களில் வீராணம் ஏரியின் நீர் மட்ட அளவு சராசரியாக

**"வீராணம் ஏரியின் கொள்ளளவை உயர்த்தி அதன் மூலம் கிடைக்கும் உபரி நீரிலிருந்து ஒரு பகுதியை மட்டும் சென்னை நகருக்கு குடி நீர் வழங்க எடுத்துச் செல்வதால் வீராணம் ஏரியின் ஆயக்கட்டு பாசனதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது."**

44 அடிக்கு மேல், பராமரிக்கப்படுவதாலும் 39 அடி மட்டத்திற்கு மேல் உள்ள நீரை மட்டும் சென்னை நகருக்கு குடிநீர் வழங்க எடுத்துச் செல்வதால் வீராணம் ஏரியின் வாய்க்கால் பாசனம் எந்த விதத்திலும் பாதிக்காது என்பதே தொழில் நுட்ப ரீதியான உண்மை. உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், உங்களிடமிருந்து எந்த உண்மையையும் மறைக்கவும் இல்லை, ஒளிக்கவும் இல்லை என்பதைக் கூறி சென்னை மாநகர் மக்களின் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க நீங்கள் நீட்டியுள்ள உதவிக் கரங்களுக்கு சென்னை மாநகர் வாழ் மக்கள் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் பெரும் இயக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற மகளிர் சுய உதவிக் குழுக்கள் பற்றி எனக்கு முன்னால் பேசிய பலரும் குறிப்பிட்டார்கள். கடந்த 1992ஆம் ஆண்டில் இந்த சுய உதவிக் குழுக்கள் மிக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. பெண்கள் இன்னும் பெரிய அளவில் இந்த சுய உதவிக்குழுக்களை அமைக்க முன்வர வேண்டும் என்பதே என்னுடைய பேரவா.

அன்று இட்ட விதை இன்று பரந்து விரிந்து ஆலமரமாய் பல இலட்சக்கணக்கான பெண்களுக்கு நிழல் தரும் பழ மரமாய் உருவாகி இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில் தற்போது 1இலட்சத்து 19 ஆயிரத்து 583 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம் 19 இலட்சத்து 77 ஆயிரத்து 274 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள். குழு அளவிலான, அவர்களது சேமிப்பு வளர்ந்து, தற்போது 255.49 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவிற்கு உயர்ந்துள்ளது. பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பெண்கள் தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும். ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்று சொன்னால், நீங்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும். பெண்கள் எதற்குமே வேறொருவரை எதிர்பார்த்து இருக்கக் கூடாது. ஒரு பெண் திருமணம் செய்து கொண்டால் எதற்காக திருமணம் செய்து கொள்ள வேண்டும். குடும்பம் நடத்துவதற்காக, பிள்ளை குட்டிகளை பெற்றுக் கொள்வதற்காக வேண்டுமானால் திருமணம் செய்து கொள்ளலாமே தவிர நம்மை காப்பாற்ற இன்னொருவரின் தயவு தேவை. ஒரு ஆணின் தயவு தேவை என்பதற்காகப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

கொண்டிருக்கிறோம். என் வீட்டில் கூட நான் மழை நீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தி இருக்கின்றேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனைக் கட்டடங்களிலும், அரசுக் கட்டடங்களானாலும் சரி, தனியார் கட்டடங்களானாலும் சரி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் அமைத்தாக வேண்டும் என்று ஒரு சட்டத்தையே கொண்டு வந்திருக்கிறேன். இதை நீங்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். மழை பெய்தால் அந்த மழை நீரை நீங்கள் சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

இம் மழை நீர் சேகரிப்பால் காலங்காலமாக வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது பெய்த மழை நீரைப் பயன்படுத்தி ஊருணிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்ட மக்கள் வறட்சிக்காக வெளிமாநிலங்களுக்கும் வெளிமாவட்டங்களுக்கும் செல்லும் நிலை மாறி அங்கேயே விவசாயத் தொழில் புரிந்து அதனால் மகிழ்ச்சியில் திளைத்து வருகின்றனர். இது இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

நீங்கள் உங்கள் சொந்தக் காலில் நிற்கப் பழகி கொள்ள வேண்டும். அதற்காகத் தான், இந்த சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதை நீங்கள் பெரிய அளவில் நல்ல முறையில், பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

*நீங்கள் உங்கள் சொந்தக் காலில் நிற்க பழகி கொள்ள வேண்டும். அதற்காகத் தான், இந்த சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதை நீங்கள் பெரிய அளவில் நல்ல முறையில், பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

பருவ மழை அடிக்கடி தமிழ்நாட்டில் பொய்த்து விடுகிறது. வரவேண்டிய தண்ணீர் வரவில்லை. போதிய அளவில் வரவில்லை, இதனால் நம் குடிநீர் தேவைகளுக்குக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதனால் நீர் ஆதாரங்கள் எல்லாம் வறண்டு போய் விடுகின்றன. ஒரு அரசு, வறட்சி ஏற்படுகின்ற போது, நீர் ஆதாரங்கள் வறண்டு விடுகின்ற போது நிதியை ஒதுக்கலாம். வேறு உதவிகளை ஒரு அரசு செய்யலாம். ஆனால், தண்ணீரைக் கொண்டு வா என்று சொன்னால் அரசு எங்கே போகும். எப்படித் தண்ணீரை உருவாக்க முடியும். எங்கிருந்து தண்ணீரைக் கொண்டு வர முடியும். அதனால் மக்கள் இதை உணர்ந்து, நமக்கு கிடைக்கின்ற ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட வீணாக்கக் கூடாது. இதற்காகத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் மழை நீர் சேகரிப்பை ஒரு பெரும் இயக்கமாக, மக்கள் இயக்கமாகவே இன்றைக்கு வளர்த்துக் கொண்டிருக்கிறோம். நடத்திக்

உபயோகத்தில் இல்லாத குவாரிகளில், கல் குவாரிகளில் மழை நீர் சேகரிக்கப்பட வேண்டும் என்ற சீரிய திட்டத்தையும் அறிமுகப் படுத்தியுள்ளேன்.

மழை நீர் சேகரிப்பை நான் ஏற்கெனவே சொன்னது போல் எனது வீட்டில் நான் ஏற்கெனவே தொடங்கியதை போல், உங்களது இல்லங்களிலும் நீங்கள் இதை தொடங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். குடிசை வீடானாலும், அடுக்கு மாடி கட்டடங்கள் ஆனாலும் எத்தகைய இடத்திலும் மழை நீரைச் சேகரித்து வைத்துக் கொள்ளலாம். இது ஒரு நாடு தழுவிய இயக்கமாக மாற வேண்டுமென்பதே என்னுடைய அவா. நீங்கள் இதுவரைசெய்யவில்லை என்றால் உங்கள் இல்லங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அருகில் உள்ள பஞ்சாயத்து அலுவலகத்திற்கோ, பேரூராட்சி அலுவலகத்திற்கோ நீங்கள் செல்வீர்களானால் அரசு அதிகாரிகள் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லித் தருவார்கள். அதற்கான ஏற்பாட்டையும் உங்களுக்கு செய்து தருவார்கள்.



நமது தண்ணீர்த் தேவைக்கு ஒரு பரிகாரத்தை நம் வீட்டிலேயே காண நாம் எல்லோரும் மழை நீர் சேகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியப் பெண்களுக்கு தங்களது வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது தெரியும். பாரம்பரியமாக ஒவ்வொரு தாயும் தன் மகளுக்கு வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படி ? அழகாக வைத்துக் கொள்வது எப்படி ? என்பதை இளமையிலேயே கற்றுக் கொடுப்பதைப் பார்க்கிறோம்.



ஆனால், தங்களது வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்கின்ற பெண்கள் தங்கள் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். வீட்டை நன்றாக கூட்டிப் பெருக்கி குப்பையை என்ன செய்கிறீர்கள், தெருவிலேயே கொட்டுகிறீர்கள். பின்பு அந்த தெருவைச் சுத்தப்படுத்துவது யார் ? சுற்றுப்புறத் தூய்மையே நமது ஆரோக்கியத்திற்கு அடிப்படை. தெருக்கள் சுத்தமாக இருந்தால் தான் இந்த நாடு சுத்தமாக இருக்க முடியும். எனவே நமது சுற்றுப்புறத்தை நாம் சுத்தமாக வைக்க வேண்டும். நமது தெருக்களை நாம் சுத்தமாக வைக்க வேண்டும். நமது ஊரை நாம் சுத்தமாக வைக்க வேண்டும். மாநில நெடுஞ்சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலைகளையும் சுத்தமாக வைக்க வேண்டும்.

கழிப்பிடங்களைப் பயன்படுத்துவதைப் பற்றி நமது மக்கள் சிந்திப்பதே இல்லை. குழந்தைகளைப் பற்றியோ – கூற வேண்டியதே இல்லை. தெருக்கள் இதற்காகவே இருக்கின்றன என்பதாகவே நினைத்துக் கொண்டு அவர்கள் செயல்படுகிறார்கள்.

இந்த நிலை மாற வேண்டும் – முற்றிலும் மாற வேண்டும்! அத்தோடு உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற பிளாஸ்டிக் பொருட்களை நாம் புறக்கணிக்க வேண்டும். தாய்மார்கள் இந்த விஷயத்தில் மிகுந்த அக்கறையோடு நடந்து கொள்ள வேண்டும்.

தூய்மை, அழகு, ஆரோக்கியம், இவற்றோடு நமது சுற்றுப்புறங்கள் விளங்குவதற்கு உதவுமாறு நான் தமிழக மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சீர்மிகு விழாவில் மொத்தம் 93.98 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 20,620 பல்வேறு திட்டப் பணிகளை திறந்து வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பாக 56.32 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். குறிப்பாக ஊரக வளர்ச்சித் துறையினால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 171 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் – 7.67 கோடி ரூபாய் மதிப்பிலான 2,362 நலிந்தோருக்கான புதிய வீடுகள் – 3 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்ட குளங்களை ஆழப்படுத்தும் பணிகள், ஆகியவை இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்களின் பயன்பாட்டுக்காக பல்வேறு கட்டுமானப் பணிகளும் அடிப்படை வசதிகளும் இந்தத் திட்டங்களின் வாயிலாக அவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக கடலூர் கிராமக் குடிநீர் திட்டக் கோட்டத்தில் மொத்தம் 89 கிராமங்களில் பகுதி சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ள 6 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளையும் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சிக்குப் பயன் தருகின்ற 55 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தையும் திறந்து வைத்துள்ளேன்.

இன்றைய தினம் விருத்தாசலம் வட்டத்தில் உள்ள வேப்பூர் மற்றும்14 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம், 2 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் –விருத்தாசலம் நகராட்சியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 55.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் திறந்து வைக்கப்பட்டு உள்ளன. இவை எல்லாம், அப்பகுதி வாழ் மக்களின் தண்ணீர் தாகத்தை பெரிதும் தீர்த்து வைக்கும் என்பதை அறிந்து நான் பெருமகிழ்வு கொள்கிறேன்.

அதே போன்று, சிதம்பரம் மற்றும் புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள் – ஸ்ரீநெடுஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் – வேப்பூர் பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் தீ அணைப்பு நிலையக் கட்டடங்கள் ஆகியவை 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டு உள்ளன.

நல்ல சாலை வசதிகள் பாலங்கள் ஆகியவை மாவட்டத்தின் பொருளாதாரத்தை பெரிதும் மேம்படுத்தும். அந்த வகையில், இன்றைய தினம் கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் திறந்து வைக்கப்பட்டு உள்ள விருத்தாச்சலம் – பாலக்கொல்லை மற்றும் கடலூர் – திருக்கோவிலூர் சாலைகளில் புதுப்பிக்கப்பட்ட 2 பாலங்கள் – தென்னம் பாக்கம் சாலையில் உயர்மட்ட பாலம் – கீழ்குமார மங்கலத்தில் உள்ள தரைப் பாலம் ஆகியவற்றையும் – பரவனாற்றின் குறுக்கே 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தையும் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவை மட்டுமின்றி நெடுஞ்சாலை கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த மாவட்டத்தில் மொத்தம் 20 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 4 பாலங்களும் – வெள்ளாற்றின் குறுக்கே தரைப் பாலம் ஒன்றும் இன்றைய தினம் திறக்கப்பட்டு கடலூர் மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப் பட்டு இருக்கின்றன.

கிராமப்புறங்களில் போதிய கழிப்பிட வசதி இல்லாத நிலையில் பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள் என்பதை அறிந்து எங்கள் அரசு செயல்படுத்தி வருகிற ஊரக மகளிர் சுகாதாரத் திட்டத்தின் கீழ் 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பில் 227 பணிகள் முடிக்கப்பட்டு அவற்றை திறந்து வைத்ததிலும் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சுகாதார திட்டத்தின் கீழ் மகளிருக்கான 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 30 மகளிர் சுகாதார வளாகங்களை திறந்து வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



மேலும் கிராமிய சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 7 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 60 கிலோ மீட்டர் நீளமுள்ள 34 சாலைகளையும் – 3 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் NABARD திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 36 கிலோ மீட்டர் நீளமுள்ள 16 சாலைகளையும் இந்த மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்கு இன்றைக்கு அர்ப்பணித்து உள்ளேன்.

இது மட்டுமன்றி இந்த மாவட்டத்தின் கிராமப்புறங்களில் மொத்தம் 298 கிலோ மீட்டர் நீளமுள்ள 19 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தார் சாலைகளையும் சிமெண்ட் சாலைகளையும் மெட்டல் சாலைகளையும் பல்வேறு திட்டங்களின் கீழ் இன்றைய தினம் திறந்து வைத்துள்ளேன். 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட ஸ்ரீமுஷ்ணம் மற்றும் சேத்தியாதோப்பு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளையும் – 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, சிதம்பரம் தொழிற்பயிற்சி நிறுவன ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான விடுதி – தர்மநல்லூரில் ஆதிதிராவிடர் நல மாணவியருக்கான விடுதி ஆகியவற்றையும் இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன்.

ஆக இந்த மாவட்டத்தின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் மொத்தம் 93 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு திட்டப் பணிகளை இந்த பிரம்மாண்டமான விழாவில் திறந்து வைத்ததில் நான் பேருவகை அடைகிறேன்.

இன்றைய தினம் மொத்தம் 27.69 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 1199 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு மாவட்டத்தின் துரித வளர்ச்சிக்கு பல்வேறு கட்டுமானப் பணிகள் மிகவும் அவசியம், என்பதை உணர்ந்து இங்கே பல்வேறு அடிப்படை கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. பரங்கிப் பேட்டை குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி 1 கோடியே 66 இலட்சம் ரூபாயில் செயல்படுத்தப்பட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.



அக்கரவேலங்குடி வையூர் – காட்டுக் கூடலூர் சாலை, பூலாமேடு சாலை, மெய்யாத்தூர் – தெம்மூர் சாலை, திருநாரையூர் சாலை, சிதம்பரம் சிவபுரி – கவரப்பட்டு சாலை, நடராஜபுரம் சாலை, தேவனாம்பட்டிணம் சாலை, தூக்கணாம்பாக்கம் – கீழ்குமார மங்கலம் சாலை, மற்றும் தென்னம்பாக்கம் சாலைகளில் பாலம் புதுப்பித்தல் மற்றும் உயர்மட்ட பாலங்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக 6 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

மேலும், பேரம்பட்டு கிராமத்தில் பழைய கொள்ளிடம் ஆற்றில் 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள அணைக்கட்டுப் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.



புதுச்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை அறை, எக்ஸ்ரே அறை, மற்றும் 30 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டு, 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – கீரப்பாளையத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதி 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – கடலூர், பெண்ணாடத்தில் 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் மாணவிகள் விடுதிகளும்; ஸ்ரீமுஷ்ணம், கருவேப்பிலங் குறிச்சி, நெல்லிக்குப்பத்தில் 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளும்; மொத்தம் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு, இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 35 இடங்களில் அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் கீழ் உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, ஆகிய பள்ளி கட்டடங்கள் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கும் – 46 பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் 9.2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்து வதற்காகவும் – 52 பள்ளிகளில் 7.8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தவும் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. மாநில நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை, சிமெண்ட் சாலை, மெட்டல் சாலை ஆகிய 48 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருப்பாதிரிபுலியூர் மார்க்கெட் காலனியில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டவும் – ஊரகப் பகுதியில் 1 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 64 ஒருங்கிணைந்த, மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டவும் அடிக்கற்கள் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவை மட்டுமன்றி 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 80 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகங்கள் கட்டவும், அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டத்தில் உள்ள 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 4 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மாணவ மாணவிகளுக்கான தங்கும் விடுதி போன்ற அத்தியாவசியமான 423 பணிகளுக்கு இன்று அடிக்கற்கள் நாட்டியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தும் நலிந்தோரையும், ஏழை எளியோரையும், மகளிர், முதியோர், சிறார் ஆகியோரையும் விரைந்து சென்றடைய வேண்டும் என்பதில் எனது தலைமையிலான இந்த அரசுக்கு எப்போதுமே தீவிர ஆர்வம் உண்டு. இதனை உறுதிப்படுத்துகின்ற வகையில் இன்றைய தினம் இந்த அரசு விழாவில் மொத்தம் 18,162 பயனாளிகளுக்கு 13 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக, இவ்விழாவில், 3957 பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகளும் – 318 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகையும் – 507 பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும் வழங்கப்படுகின்றன. 100 பயனாளிகளுக்கு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதி உதவியும் 160 சுய உதவிக்

*அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தும் நலிந்தோரையும், ஏழை எளியோரையும், மகளிர், முதியோர், சிறார் ஆகியோரையும் விரைந்து சென்றடைய வேண்டும் என்பதில் எனது தலைமையிலான இந்த அரசுக்கு எப்போதுமே தீவிர ஆர்வம் உண்டு.*

குழுக்களுக்கு சுழல் நிதியும் 22 சுய உதவிக் குழுக்களுக்கு குழுக் கடனும், 25 பெண்களுக்குத் தையல் எந்திரங்களும், 10 கலப்புத் திருமணத் தம்பதியருக்கு உதவித் தொகையும், 139 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இலவச சமையல் எரிவாயு வழங்க உதவியும் வழங்கப்படுகின்றன. சீரமைக்கப்பட்ட சிறுவணிகக் கடன் திட்டத்தின் மூலம் 300 பெண்களுக்கு கடன் உதவியும் – பணியாற்றும் பெண்களுக்கான கடன் திட்டத்தில் 17 பேருக்கு கடன் உதவியும் – 25 மகளிருக்கு மகப்பேறு கடன் உதவியும் – சுய உதவிக் குழுக்களுக்கான கடன் திட்டத்தில் 50 குழுக்களுக்கு கடன் உதவியும் – பண்ணை சாராக் கடன் உதவித் திட்டத்தில் 13 நபர்களுக்கு கடன் உதவியும் – ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டத்தில் மூன்று சக்கரவண்டி – பார்வையற்றோர் திருமண நிதியுதவி – காதொலி கருவி ஆகியவை 26 பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம், நானே பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலே கொடுக்க வேண்டும் என்று விரும்பினாலும் நேரம் குறைவாகவே உள்ள காரணத்தால் 15 பயனாளிகளுக்கு மட்டும் இந்த உதவிகளை நானே வழங்குகிறேன். இதர பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும் இங்கே வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும் இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை மனநிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெற்று பயனாளிகள் அனைவரும் தங்கள் வாழ்க்கையை உண்மை, உழைப்பு, உயர்வு, ஆகியவற்றின் வாயிலாக வளப்படுத்தி கொள்ள வேண்டும் என்று கூறி உங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் வளமும் செழுமையும் ஒருங்கே சேர்ந்திட வேண்டும், என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆபிரகாம் லிங்கன் அப்போது ஜனாதிபதியாக இருந்தார். சிக்கல் மிகுந்த அந்த வேளையில் ஒரு கிழவி ஆபிரகாம் லிங்கனை அணுகி அவருக்கு ஆறுதல் கூறுவதாக நினைத்து ஒன்றைச் சொன்னாள்.

"ஜனாதிபதி அவர்களே, எதற்கும் கவலைப்படாதீர்கள் கடவுள் நம் பக்கம் இருக்கிறார், அவர் நம்மைக் காப்பாற்றுவார்" என்று, அந்தப் பாட்டி சொன்னதும், ஆபிரகாம் லிங்கன் சொன்னாராம் – "அம்மா, உங்கள் அன்பு மொழிக்கு நன்றி. நம்மை காப்பாற்றுவார் கடவுள் என்று, எனக்கு நன்றாகத் தெரியும். அது அவருடைய கடமை. ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கடவுள் நம் பக்கம் இருக்கிறாரா என்பதை விட கடவுளின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பது தான் எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது" என்று அன்றைய தினம் ஆபிரகாம் லிங்கன் சொன்னாராம்.

அதை போல என்னுடைய சிந்தனை ஒன்றையும் எல்லோருக்கும் சொல்லிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது.

என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன, என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறேன்.

அதனால் தான் என் அன்புக்குரிய மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் என் பக்கம் இருக்கிறீர்கள்.

இந்த விழாவை, சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைப்பதற்குப் பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அனைத்து அரசுத் துறை பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

*– கடலூரில் 2 – 2–2003 அன்று*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தும்,*
*பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ஆற்றிய உரை.*

❖ ❖ ❖



# காவிரி நதிநீர் ஆணையம்

10–2–2003 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற
காவிரி நதிநீர் ஆணையத்தின் ஆறாவது கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

**கா**விரி நதி நீர் ஆணையத்தின் இந்த ஆறாம் கூட்டம், இருமுறை தள்ளி வைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு விவசாயிகளுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் நடைபெறுகிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே! காவிரி டெல்டா விவசாயிகள் ஏற்கெனவே தங்களின் குறுவைப் பயிரை இழந்து விட்டுள்ளனர் என்பதையும், சம்பா பயிரும் வேகமாகக் கருகி வருகின்றது என்பதையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். காவிரி டெல்டா பகுதி, பெரும்பாலும், தென்மேற்குப் பருவமழையால் காவிரி நதி கொண்டு வரும் தண்ணீரையே பல நூற்றாண்டுகளாக சார்ந்துள்ளது. எங்களுடைய இலட்சக்கணக்கான விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வு, நினைவுக்கெட்டா நெடுங்காலம் முதல் காவிரி நதியோடு பின்னிப் பிணைந்துள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க, காவிரி நதி ஏதோ, எங்களது மாநிலத்திற்கு அன்னியமானது என்பது போல், வடகிழக்கு பருவமழைக்கு மட்டுமே எங்களுடைய விவசாயிகள் தங்களது வாழ்வைத் தத்தம் செய்து விட வேண்டும் என்னும் கர்நாடகத்தின் பிடிவாதத்தையும், வக்கிரமான போக்கையும் எப்படி எங்களால் எதிர்கொள்ள முடியும் ?

## கொடூரமான மனநிலை

மேல் பரப்பு மாநிலமான கர்நாடகத்தின் தேவை முழுவதும் நிறைவு செய்யப்படாதவரை கீழ்பரப்பு மாநிலமான தமிழ்நாட்டிற்கு நீர் எதுவும் வழங்க இயலாது என்று ஒரு தலைப்பட்சமாக முடிவு செய்து, அதனை வெளிப்படையாக அறிவித்து வந்துள்ள கர்நாடக மாநிலத்தின் பிடிவாதமான போக்கிலிருந்து எங்களை விடுவிக்குமாறு, நாங்கள் காவிரி நதி நீர் ஆணையத்தையும் உச்ச நீதிமன்றத்தையும் தொடர்ந்து அணுகி வேண்டினோம்; கெஞ்சினோம்; ஆட்சேபித்தோம். இந்த இடர்ப்பாடான ஆண்டில் கூட தென்மேற்குப் பருவ மழையிலிருந்து அம்மாநிலம் பெறக்கூடிய நீர் அனைத்தையும் நிறுத்தி வைத்துக்கொண்டு,



அம்மாநிலத்திலுள்ள பாசனப் பகுதிகளுக்கு நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் அளித்து, வழக்கமாக பாசனத்திற்கு எடுக்கக் கூடிய நீரின் அளவுக்கு மேல் அதிகமாக நீரை எடுத்துக்கொண்டு, காவிரி டெல்டா விவசாயிகள் அடுத்தடுத்து தங்களுடைய பயிர்களை இழந்துவிட்டு வருகின்ற நிலையில்கூட, தன்னுடைய முழு அளவுப் பயிர்களையும் வளர்ப்பதற்கு முயன்று வரும் கர்நாடக அரசின் நடவடிக்கைகள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு கொடூரமான மனநிலையைக் காட்டுகிறது.

### வாடிய பயிரும், கருகிய நிலமும்

கர்நாடக மாநிலத்தின் நான்கு முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்து 2002 ஜூன் முதல் 2003 ஜனவரி கடைசி வரையில் அம்மாநிலத்தின் விவசாயத்திற்காக எடுக்கப்பட்ட நீரின் அளவு சுமார் 122 டி.எம்.சி. அடி என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையில் கணக்கில் எடுத்துக்கொண்ட 6 ஆண்டுகால சராசரிப்படி கர்நாடகா பாசனத்திற்காக பயன்படுத்தும் நீரின் அளவு 88.22 டி.எம்.சி. அடி மட்டுமேயாகும். இத்தகைய தண்ணீர் தட்டுப்பாட்டுக் காலத்தில் கூட கர்நாடகத்திற்கு தண்ணீர், அதன் தேவையை முற்றிலுமாக நிறைவேற்றும் அளவுக்கு கிடைத்தது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. பொதுவாக கர்நாடக மாநிலத்தின் பயிர் பருவ காலம் ஜூன் முதல் அக்டோபர் வரை ஆகும். அவ்வாறிருக்க, 2002 டிசம்பர் இறுதிவரையில் கர்நாடகா பாசனத்திற்காக தண்ணீர் எடுத்து வந்தது. ஆனால் அவர்களிடம் தற்போதுள்ள நீரின் அளவு, அவர்களுடைய தொடர்ந்து நீர் தேவைப்படும் பயிர்களுக்கும், குடிநீருக்கும் தேவையாக உள்ளது என்று கூறி வருகின்றனர். அதே நேரத்தில் காவிரி டெல்டா விவசாயிகள், கர்நாடகத்தால் திணிக்கப்பட்ட செயற்கையான வறட்சியால் உழன்று வருகின்றனர். வாடிய பயிரும், கருகிய நிலமும், நா வறட்சியும் காவிரி டெல்டா விவசாயிகளைக் கடனிலும், விரக்தியிலும் தள்ளியுள்ளன.

இயற்கையாக அமைந்துள்ள புவியியல் அமைப்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, மேல் பரப்பு மாநிலமான கர்நாடகம்,

*காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு கர்நாடகம் கட்டுப்படும் என்ற நம்பிக்கையில் 2002 செப்டம்பர் வரை காத்திருந்தோம். இந்த ஆணையை கர்நாடகம் தொடர்ந்து மதிக்க மறுத்ததால், நாங்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.*

தங்களது பருவப் பயிர்கள், தொடர்ந்து நீர் தேவைப்படும் பயிர்கள் மற்றும் குடிநீர்த்தேவைகளுக்கான நீர்முழுவதையும் எடுத்துக் கொண்டு, கீழ் பரப்பு மாநிலமான தமிழ்நாடு பொய்த்துவிடக் கூடிய, நம்பத்தக்கது அல்லாத, வடகிழக்குப் பருவ மழையை மட்டுமே நம்பியிருக்க வேண்டும் என்பதுவா இடர்பங்கீடு ? சாகுபடிப் பயிர்கள், தொடர்ந்து நீர் தேவைப்படும் பயிர்கள், குடிநீர்த் தேவை ஆகியவை கர்நாடக விவசாயிகளுக்கு மட்டும் உரித்தானதா ?

### உச்ச நீதிமன்றம்

இதுவரை நடந்த தொடர் நிகழ்வுகளைக் கவனிக்குமாறு நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் குறைவாக இருந்ததால் இந்நீர்த்தேக்கத்தில் இருந்து 2002 ஜூன் மாதத்தில் தண்ணீர் திறந்துவிட இயலவில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு கர்நாடகம் கட்டுப்படும் என்ற நம்பிக்கையில் 2002 செப்டம்பர் வரை காத்திருந்தோம். இந்த ஆணையை கர்நாடகம் தொடர்ந்து மதிக்க மறுத்ததால், நாங்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்பிரச்சினைக்கு காவிரி நதிநீர் ஆணையம் தீர்வு காணும் வரையில் கர்நாடகம் நாள் ஒன்றுக்கு 1.25 டி.எம்.சி. அடி தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் 3.9.2002 அன்று பிறப்பித்த ஆணையை, கர்நாடகம் காலம் கடத்தும் போக்கை கையாண்டு மதிக்கவில்லை. காவிரி நதிநீர் ஆணையம் 8–9–2002 அன்று நடைபெற்ற அதன் 5ஆவது கூட்டத்தில் கர்நாடகம் 2002 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் வார சராசரி அடிப்படையில் நாளொன்றுக்கு 9,000 கன அடி வீதம் நீரைத் திறந்துவிட வேண்டும் என்று முடிவு செய்தது. இது உச்ச நீதிமன்றத்தின் ஆணையை விடக் குறைவானதாக இருந்தாலும் கூட, பிரதமரின் முடிவிற்கு இசைந்தோம். இருந்தாலும், கர்நாடகத்தின் பிடிவாதம், கால தாமதப் போக்கு, வஞ்சனை ஆகியவை இந்த முடிவை



பயனற்றதாக்கி விட்டன. எனவே, நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர உச்சநீதிமன்றத்தை மீண்டும் அணுக வேண்டிய நிலைக்கு தமிழ்நாடு தள்ளப்பட்டது. இருப்பினும், காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. ஆகவே, நீர்ப் பற்றாக்குறையால் கடுமையாக பாதிக்கப்பட்ட டெல்டா பகுதிகள் வறண்ட மாநிலமாக மாறிவிட்டன. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 1.10.2002 மற்றும் 2.10.2002 ஆகிய நாட்களில் மேட்டூர் அணையைப் பார்வையிட்டு, டெல்டா பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட காவிரி கண்காணிப்புக் குழு, விவசாயிகள் சாகுபடி தொடங்க இயலாத நிலையில் இருந்ததைக் கவனத்தில் எடுத்துக்கொண்டதுடன் 2002 அக்டோபர் இறுதிக்குள் சம்பா பயிரை நடவு செய்ய மொத்தம் சுமார் 63 டி.எம்.சி. அடி தண்ணீர் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்தது. மத்திய நீர் குழுமம் உருவாக்கிய இடர்பாடு – கோட்பாட்டைப் பின்பற்றினாலும் கூட, 31–12–2002 அன்றுள்ள நிலவரப்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் கிடைக்க வேண்டிய நீரில் ஏற்பட்ட பற்றாக்குறையானது 60.22 டி.எம்.சி அடி என்று மதிப்பிட்டுள்ளது. இருப்பினும் கர்நாடகம் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளையும் காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவையும் உதாசீனப்படுத்தி தமிழ்நாட்டிற்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய நீரைத் தொடர்ந்து தடுத்ததனால் மத்திய அரசின் நீர் ஆதாரங்கள் அமைச்சகம் கணக்கிட்டவாறு 2002ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இறுதியில் உள்ள நிலவரப்படி 18.692 டி.எம்.சி. அடி அளவிற்கு நீர் குறைவாகப் பெறப்பட்டுள்ளது.

2002 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், எங்கள் பயிர்களுக்குத் தண்ணீர் மிகவும் தேவைப்பட்ட போது, உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளையும், காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவுகளையும் மதித்து, கர்நாடகம் மட்டும் 18.692 டி.எம்.சி. நீரை வழங்கியிருக்குமேயானால், நாங்கள் இந்த அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டோம்.

பிரதமர் அவர்களே! எங்கள் மாநிலத்தில் மோசமான நிதி நிலை இருந்தபோதிலும், தென் மேற்கு, வட கிழக்குப் பருவ மழை முற்றிலும் பொய்த்ததால் மிகவும் பாதிக்கப்பட்ட எங்களுடைய விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரின் வேதனையைப் போக்குவதற்கு எங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். 24–06–2002 அன்றே டெல்டா பகுதிகளிலுள்ள விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்காக நான் அறிவித்த ரூ.164.18 கோடி இடருதவியைத் தொடர்ந்து, 31–01–2003 அன்று காவிரி டெல்டா மாநிலங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் ரூ.217 கோடி அளவிற்கு, வேலைக்கு உணவு என்ற மாபெரும் திட்டத்தை நான் அறிவித்தேன். மாநிலம் முழுவதிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பசியால் வாடக்கூடாது என்பதற்காக 15.1.2003லிருந்து அவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் தன்னிகரற்ற திட்டத்தை நான் அறிவித்தேன். சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற

*சென்னை மாவட்டம் நீங்கலாக தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் வறட்சி பாதித்த பகுதிகளாக எனது அரசு அறிவித்துள்ளது. இந்திய அரசிடமிருந்து ரூ.2,094.23 கோடி ரூபாயையும், 9 இலட்சம் டன் உணவு தானியங்களையும் கூடுதல் உதவியாக நாங்கள் கோரியுள்ளோம்.*

வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோர் பயனடையும் வகையில், குடும்பம் ஒன்றுக்கு மாதமொன்றுக்கு 30 கிலோ அரிசி வழங்குவதற்காக மாற்றியமைக்கப்பட்ட திட்டம் ஒன்று தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது.

### இழப்புகள்

சென்னை மாவட்டம் நீங்கலாக தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் வறட்சி பாதித்த பகுதிகளாக எனது அரசு அறிவித்துள்ளது. இந்திய அரசிடமிருந்து ரூ.2,094.23 கோடி ரூபாயையும், 9 இலட்சம் டன் உணவு தானியங்களையும் கூடுதல் உதவியாக நாங்கள் கோரியுள்ளோம். பிரதமர் அவர்களே, சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த மைய ஆய்வுக்குழு எங்களுடைய விவசாயிகள் சந்தித்து வரும் கடுமையான நிலைமையைத் தங்களுடைய அறிக்கையில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறேன். குறுவைப் பயிர் முழுவதுமாக அழிந்துபோய் விட்டது, சம்பா பயிர் அழிந்து போகக்கூடிய அபாய நிலையில் உள்ளது. மாநிலம் எங்கணும் 11 இலட்சம் தென்னை மரங்கள் அழிந்து விட்டன மற்றும் 28 இலட்சம் தென்னை மரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மாநிலம் எங்கணும் பயிர்களின் உற்பத்தி இழப்பு ரூ.5,387.84 கோடி என்று கணக்கிடப்

பட்டுள்ளது. மேலும் 2,736 இலட்சம் மனித வேலை நாள் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பயிர்களைக் காப்பாற்றுவதற்கு, உடனடியாக நீரை விடுவிப்பது தொடர்பாக, காவிரி நதி நீர் ஆணையத்தாலும் மாண்புமிகு பிரதமர் அவர்களாலும், உச்ச நீதிமன்ற உத்தரவுகளும், எடுக்கப்பட்ட முடிவுகளும் ஏற்க மறுக்கப்பட்டு, தாமதப்பட்டு, பகுதி நிறைவேற்றப்பட்டு, பிறகு புறக்கணிக்கப்பட்டது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டெல்டா விவசாயிகளால் 8 இலட்சம் ஏக்கர்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் முற்றிலும் கருகி விடும் நிலையில் இருக்கையில், உச்ச நீதிமன்றத்திற்கும், காவிரி நதிநீர் ஆணையத்திற்குமிடையே அலைக்கழிப்பிற்கு உள்ளாவது தமிழ்நாட்டின் தலைவிதியானது. டெல்டா பகுதிகளில் குறுவை மற்றும் சம்பா பயிர்கள் பயிரிடப்படக்கூடிய பரப்பளவு குறைந்து போயுள்ளதால், தமிழ்நாடு ரூ.1,080கோடி இழப்பிற்கு ஏற்கெனவே உள்ளாகியுள்ளது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அத்தோடு நில்லாமல், தற்போது வளர்ந்துள்ள நிலையிலுள்ள சம்பாப் பயிர்களுக்கும் இழப்பு ஏற்பட்டு, மேலும் ரூபாய் 1,280 கோடி இழப்பு ஏற்படக்கூடும் என்று அஞ்சுகிறோம். ஆக மொத்தம் ரூபாய் 2,360 கோடி இழப்பிற்கு இது வழி கோலக்கூடும். இலட்சக்கணக்கில் எங்களுடைய விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பேரிழப்பிற்கு ஆளாகி தேசிய அளவில் பேரழிவையும், பட்டினியையும் எதிர்நோக்கியுள்ளனர்.

மாண்புமிகு பிரதமர் அவர்களே, 2003 ஜனவரி 13ஆம் தேதியன்று கர்நாடக முதலமைச்சரையும் என்னையும் தனித்தனியே சந்தித்த பின்பு, கர்நாடகம் நாள் ஒன்றுக்கு 1,200 கனஅடி தண்ணீரை விடுவிக்க சம்மதித்துள்ளது என்று நீங்கள் கூறியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பயிர்களுக்கு குறைந்தது ஒரு முறையாவது தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்ற எனது கோரிக்கையை தாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டீர்கள். உங்களது உத்தரவின் பேரில் அதேநாளில் அதிகாரிகள் அளவில் நடைபெற்ற கூட்டத்தில் தற்போதுள்ள நடப்புப் பயிரின் ஒரு பகுதியைக் காப்பாற்ற மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு நாள் ஒன்றுக்கு 4,500 கன அடி என்ற வீதம் ஒரு வாரத்திற்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசு இசைவளித்தது. கர்நாடக முதல்வருக்கு தாங்கள் எழுதிய கடிதத்திற்குப் பின்னர், கர்நாடக அரசு 2003 ஜனவரி 18ஆம் தேதியன்று 2,500 கன அடி தண்ணீரை மட்டும் விடுவித்தது. 2003 ஜனவரி 20 ஆம் தேதியன்று அதனை 4,000 கன அடியாக உயர்த்தியது. பின்னர் 2003 ஜனவரி 24ஆம் தேதியன்று 1,500 கனஅடியாக அதனைக் குறைத்துவிட்டது. அதற்குப் பின்பு 2003 ஜனவரி 25ஆம் தேதியிலிருந்து கபினி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடுவது முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. கிருஷ்ண ராஜசாகரிலிருந்து விடுவிக்கப்படும் நீர் சராசரியாக 500 கனஅடி என்ற அளவில் குறைக்கப்பட்டது. கர்நாடக முதல்வர், மனித நேய அடிப்படையில் தண்ணீர் திறந்து விடுவதாக அளித்த வாக்குறுதியின் நிலைமை இதுதான். இதற்கிடையில் மேட்டூரில் 3.24 டி.எம்.சி. அளவு மட்டுமே தண்ணீர் கிடைத்ததால், 27-1-2003 முதற்கொண்டு 5 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டது. எனவே, கருகும் பயிர்களைக் காப்பாற்ற அறவே இயலாத நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

7-2-2003 அன்று மேட்டூர் நீர்த்தேக்கத்திலுள்ள தண்ணீரின் அளவு 6.365 டி.எம்.சி அளவு ஆகும். தண்ணீர் திறந்துவிட இயலாத அளவான 5 டி.எம்.சி. அளவு நீரை பாசனத்திற்காக திறந்துவிட இயலாது 2002 செப்டம்பரிலிருந்து 2003 ஜனவரி இறுதிவரை உச்சநீதிமன்றம், காவிரி நதிநீர் ஆணையம் ஆகியவற்றின் உத்தரவுகளுக்கிணங்க, மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு பெறப்பட்ட நீரின் பற்றாக்குறை அளவு 16.5 டி.எம்.சி. அடி என மைய அரசின் நீர் வள ஆதாரங்கள் அமைச்சகத்தால் கணக்கிடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம், 6-2-2003 அன்று கர்நாடக மாநிலம், அதனுடைய அணைக் கட்டுகளிலிருந்து போதுமான அளவு தண்ணீரை 7-2-2003 முதல் திறந்துவிட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 4,500 கன அடி அதாவது ஏறக்குறைய 0.4 டி.எம்.சி. அடி அளவில் மேட்டூருக்கு தண்ணீர் வரத்தினை உறுதி செய்வதற்கு ஆணையிட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். இருப்பினும், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி, கர்நாடகம் இந்த அளவிலான தண்ணீரைத் திறந்து விட்டாலும், அது 7-02-2003 முதல் இந்தக் கூட்ட நாள் வரை 1.6 டிஎம்.சி அடி அளவே பெற இயலும். இது மேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீர் இருப்பை 7.97 டி.எம்.சி. அடிக்குத்தான் உயர்த்தும்.

ஐயா, மாதக்கணக்கில் உச்சநீதி மன்றத்திற்கும், காவிரி நதிநீர் ஆணையத்திற்குமிடையே அலைக்கழிக்கப் பட்ட பின்பு, தற்போதுள்ள நெருக்கடியான நிலையில் நடப்புப் பயிருக்கு ஒரு முறை தண்ணீர் பாய்வதற்கும், குடிநீர்த் தேவைகளுக்காகவும், கர்நாடகத்தின் நீர்த்தேக்கத்திலிருந்து குறைந்தபட்சமாக 10 டி.எம்.சி. அடி அளவு தண்ணீரையாவது



> “தற்போதுள்ள நெருக்கடியான நிலையில்
> நடப்புப் பயிருக்கு ஒரு முறை தண்ணீர் பாய்வதற்கும்,
> குடிநீர்த் தேவைகளுக்காகவும்,
> கர்நாடகத்தின் நீர்த்தேக்கத்திலிருந்து
> குறைந்தபட்சமாக 10 டி.எம்.சி. அடி அளவு
> தண்ணீரையாவது விடுவித்தல் வேண்டும்.”

விடுவித்தல் வேண்டும் என்னும் மாண்புமிகு பிரதமர் அவர்களின் உறுதியான உத்தரவு தமிழ்நாட்டுக்குத் தேவை. 6-02-2003 அன்றைய நிலவரப்படி கர்நாடகா நீர்த்தேக்கங்களில் பயன்படுத்தப்படக் கூடிய நீர் இருப்பு 12.86 டி.எம்.சி. அடி ஆகும். வரும் மாதங்களில் ஆறுகளில் வரப்பெறும் நீர்வரத்துக்களின் மூலம் அதன் நீர்த்தேக்கங்களுக்கு 10 டி.எம்.சி அடி நீர் பெற இயலும். எனவே தனது குடிநீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய நல்ல நிலையில் கர்நாடகா உள்ளது. அவ்வாறு இருக்கையில் காலத்தாழ்வு இன்றியும், வஞ்சனை இன்றியும் ஏன் தண்ணீர் விடுவிக்கப்படக்கூடாது? காவிரி நதிநீர் ஆணையம் கர்நாடகா தண்ணீரை உடனடியாகத் திறந்துவிடுவதை உறுதி செய்ய ஒரு வழிமுறையை நிர்ணயிக்க வேண்டும். காவிரி நதி ஆணையத்தின் முந்தையக் கூட்டங்கள் ஏமாற்றத்துடனும், முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலையிலும் முடிவடைந்துள்ளதால், நாங்கள் மனச்சோர்வுற்று பலனற்ற நிலையில் இந்த ஆணையத்திற்கும், உச்ச நீதி மன்றத்திற்கும் அலைக்கழிக்கப்படும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். கவலையுடனும் மனமுடைந்த நிலைமையிலுமுள்ள தமிழக விவசாயிகள் ஏற்கெனவே பட்டினியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு இந்த மாண்புமிகு அமைப்பின் விவாதங்கள் மீது நம்பிக்கையற்ற நிலையில், தற்போது தாங்கள் தண்ணீர் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் தங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

எங்களுடைய நடப்புப் பயிர்களைக் காப்பாற்ற 10 டி.எம்.சி. அடி நீரை திறந்துவிடச் செய்ய மாண்புமிகு பிரதமராகிய நீங்கள் நிச்சயமாகவும், உறுதியாகவும் ஆணையிட வேண்டும் என்று தங்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நீரை திறந்துவிடுவதில் மேலும் காலதாமதம் செய்யப்படுமாயின், அது இந்த கடுமையான வறட்சி நிலையைத் தேசியப் பேரழிவாக ஆக்கி விடும். ●



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை தலைமைச் செயலகத்தில் 27-02-2003 அன்று அமெரிக்காவில் உள்ள இந்திய வர்த்தக கான்சலின் [illegible] இயக்குநர் டாக்டர் மைக்கேல் டி. கிளார்க் அவர்கள் சந்தித்துப் பேசி

# தமிழக காவல்துறையை உலகிலேயே சிறந்த காவல்துறையாக ஆக்குவதே எனது இலக்கு!

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
அவர்களின் உரை!

இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு முதலமைச்சரின் பதக்கங்களை வழங்கி காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, சிறைத் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஊர்க்காவல் படை ஆகியவற்றில் பணியாற்றும் போது வீரச் செயல்கள் புரிந்ததற்காகவும் கடமை தவறாது பணியாற்றியதற்காகவும் முதலமைச்சரின் பதக்கங் களையும் குடியரசுத் தலைவரின் பதக்கங்களையும் பெற்று அமர்ந்திருக்கும் காவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுக்களையும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீர தீரச் செயல்களுக்காகவும் தன்னிகரற்ற சேவைக்காகவும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்படும் விழா 1969 ஆம் ஆண்டு முதல் ஆண்டாண்டு காலமாக நடந்து வந்தது. ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இருந்த முந்தைய தி.மு.க. அரசு 1998 ஆம் ஆண்டிற்கு பிறகு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவையே நடத்தாத காரணத்தால் 2001 ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின் அவற்றை எல்லாம் வழங்க வேண்டியிருந்தது. திரு கருணாநிதியே முதலமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும் இருந்தும் கூட இந்த விழாவை 3 ஆண்டுகள் நடத்தவே இல்லை. எனவே 1999, 2000 மற்றும் 2001 ஆகிய 3 ஆண்டுகளுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்களை 9.7.2002 அன்று நடைபெற்ற சென்னை விழாவில் நான் வழங்கினேன். ஆனால், 1999 ஆம் ஆண்டு முதல் 2001 வரை வழங்கப்பட்டு இருக்க வேண்டிய வீர தீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவர் பதக்கங்களும் தன்னிகரற்ற சேவைக்காக வழங்கப்படுகின்ற குடியரசுத் தலைவர் பதக்கங்களும் வழங்கப்படாமலேயே இருந்தன. தற்போது, இந்த





விழாவில், 2002 ஆம் ஆண்டுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்களோடு கடந்த 4 ஆண்டுகளாக வழங்கப்பட்டிருக்க வேண்டிய குடியரசுத் தலைவர் பதக்கங்களையும் நான் வழங்கி உள்ளேன்.



இந்தியாவிலேயே தமிழக காவல்துறை தான் தலை சிறந்தது என்பது நாடும் ஏடும் உலகமும் ஒப்புக் கொண்ட ஒரு உண்மை. ஆனால், 1996 – முதல் 2001 வரை, முந்தைய தி.மு.க. ஆட்சியில் இந்த சிறப்புக்களை எல்லாம் பெற்ற அதே காவல் துறை எப்படி எல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டது, எப்படி எல்லாம் இழிவுபடுத்திப் பேசப்பட்டது ஏளனம் செய்யப்பட்டது எப்படி எல்லாம் அதைப் பற்றி ஏகடியம் பேசினார்கள் என்பதெல்லாம் உங்கள் அனைவருக்கும் தெரியும். காவல் துறையின் ஈரல் கெட்டு விட்டதாம். அவர்கள் மாபெரும் மருத்துவர்கள் அல்லவா! அதனால் தான் உடனே தெரிந்து கொண்டு விட்டார்கள் போலும். உலகமே பாராட்டும் தமிழகக் காவல் துறையை, அவர்கள் பாராட்ட முடியவில்லை என்றாலும் பழிக்காமலாவது இருந்திருக்கலாம்.

காவல் துறையினர் ஆற்றும் கடமை மிகவும் கடினமானது. அதனால் தான், அவர்களை மென்மேலும் ஊக்குவிக்க, இந்தப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. மூன்று ஆண்டு காலம், இந்தப் பதக்கம் வழங்கும் விழாவையே, ஒரு மாநில அரசு நடத்தவில்லை என்றால், முந்தைய திமுக அரசு, காவல் துறையை எவ்வளவு துச்சமாக மதித்தது என்பதை, இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

"கண்ணன் அவன் தூங்கி விட்டால்
காசினியே தூங்கி விடும்"

என்று ஒரு பாடல் உண்டு. அந்த வாசகத்தை கொஞ்சம் மாற்றி நான் ஒரு புது வாசகம் சொல்ல விரும்புகிறேன்.

"காவலர்கள் தூங்கி விட்டால்
காசினியே தூங்கி விடும்"

என்று சொல்வேன்.

இது தான் உண்மை என்று தெரிந்திருந்தும், அவர்கள் வசை பாடுவது ஏன் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நல்லவற்றைப் பாராட்ட பண்பு வேண்டும். ஆனால் அவர்களிடம் பாராட்டும் பண்பு இல்லை. அன்றும் இல்லை; இன்றும் இல்லை. ஆனால், குறை கூறும் இயல்பு மட்டும், அவர்களுக்கு என்றும் உண்டு.

காவல் துறையின் ஈரல் கெட்டுவிட்டது என்று சொன்னவர்களுக்கு இதயம் கெட்டுப் போய் விட்டது என்ற செய்தியைக் காவலர்களும் அறிவார்கள், பொது மக்களும் அறிவார்கள்.

> ஆண் ஆதிக்கம் நிறைந்த இந்த நாட்டில் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க வேண்டும் என்பதில் நான் எவ்வளவு தூரம் ஈடுபாட்டோடு இருக்கிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். பெண்களுக்கு நல்ல கல்வியும் அரசுத் துறையில் ஒதுக்கீடும் வழங்கப்பட்டே தீர வேண்டும் என நான் விடாப் பிடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறேன்.

## வீரதீரச்செயல்

கடந்த ஆட்சியின் போது தென் மாவட்டங்கள் அனைத்தும் சாதிச் சண்டைகளால் பற்றி எரிந்தன. கோவை மாவட்டமும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் மத மோதல்களாலும் கொலைச் சம்பவங்களாலும் குண்டு வெடிப்புச் சம்பவங்களாலும் சிக்குண்டு சின்னா பின்னமாகியிருந்தன. தீவிரவாதிகள் தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி எங்கும் சென்று வரும் சூழ்நிலை இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களும் பெண்களும், பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் இருந்தனர். இவை அனைத்தும் சென்ற முறை நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது அதாவது 1991 முதல் 1996 வரை இல்லை. நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் கடந்த 2 ஆண்டுகளாகவும் இல்லை.



இதற்கு என்ன காரணம் என்று நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தெளிவான சிந்தனை தீர்க்கமான முடிவு குறுக்கீடு இல்லாத செயல்பாடு போன்றவை காவல் துறையினருக்கு அளிக்கப்பட்ட காரணத்தால் கெட்டுப் போன ஈரலாகக் கூறப்பட்ட தமிழகக் காவல் துறை இன்று ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவையே நடுங்க வைத்த தீவிரவாதி இமாம் அலி ஏ.கே.47 உடன் ஒளிந்திருக்கும் இடத்தை கண்டுபிடித்து அவனைச் சுற்றி வளைத்து தங்கள் இன்னுயிரைப் பணயமாக வைத்து "என் உயிர் பெரிதல்ல, என் கடமை தான் பெரிது" என்ற வீர தீரச் செயல் புரிந்து, அவனை வீழ்த்திய தமிழகக் காவல் துறையை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

## பெண் கமாண்டோ படை

ஆண் ஆதிக்கம் நிறைந்த இந்த நாட்டில் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க வேண்டும் என்பதில் நான் எவ்வளவு தூரம் ஈடுபாட்டோடு இருக்கிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். பெண்களுக்கு நல்ல கல்வியும் அரசுத் துறையில் ஒதுக்கீடும் வழங்கப்பட்டே தீர வேண்டும் என நான் விடாப் பிடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறேன்.

பெண்கள் காவல் துறையில் வேலை பார்க்க முடியுமா ? அவர்கள் மென்மையானவர்கள் அல்லவா ? வன்மை மிக்க பணிகளுக்கு ஈடு கொடுக்க மென்மை மிக்க பெண்களால் முடியுமா ? என்றெல்லாம் கேட்டவர்கள் உண்டு. அந்தத் தவறான கண்ணோட்டங்கள் எல்லாம் இன்றைக்குத் தகர்த்து எறியப்பட்டு இருக்கின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு முழு அளவிலான பெண் கமாண்டோ படையை உருவாக்கி இருக்கிறோம். இந்தப் பெண் கமாண்டோக்கள் தங்களால் எவற்றை எல்லாம் செய்ய முடியும் என்று நிருபித்துக் காட்டி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துப் பெருமைப் படுகிறேன்.

ஒவ்வொரு நாள் காலையும் 24 கிமீ எங்களால் ஓட முடியும். ஒரு இரவில் 38 கிமீ ஓட்டமும் நடையுமாக வந்து உடல் திறனைக் காட்ட முடியும். நாங்களே வாகனங்களை ஓட்டிக் கொண்டு ரோந்துப் பணிக்குச் செல்ல முடியும். இடர்ப்பாடுகள் ஏற்பட்டால் துப்பாக்கி சூடு நடத்தி குற்றவாளிகளைப் பிடிக்க முடியும். அதுவும் சாதாரண துப்பாக்கி அல்ல, அது ஏ.கே. 47 ஆக இருந்தாலும் SLR துப்பாக்கியாக இருந்தாலும் அதி நவீன இயந்திரத் துப்பாக்கியாக இருந்தாலும், கண் இமைக்கும் நேரத்தில் எங்கள் கண்களைக் கட்டிக் கொண்டு கூட சுட முடியும் என்று, இன்று பறை சாற்றியுள்ள பெண் கமாண்டோக்களை உருவாக்கியதில், எனது தலைமையில் இயங்கும் தமிழக அரசு தான் வழிகாட்டி என்பதையும் எனது வழிகாட்டுதலில் இயங்கும் தமிழக காவல் துறை தான் முன்னோடி என்பதையும் இந்த விழாவிலே பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

## தமிழகம் முன்னோடி

அது மட்டுமல்ல. இந்தியாவில் அதிக அளவிலான பெண் காவலர்களைத் தேர்வு செய்ததில் தமிழகம் தான் முன்னோடி. அதிகமான பெண் காவல் அதிகாரிகளைக் கொண்டதிலும் தமிழகம் தான் முன்னோடி.



அனைத்து வேலைகளையும் ஒருங்கிணைந்து பெண்களே நடத்தக் கூடிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கியதிலும் தமிழகமே முன்னோடி. வெடி குண்டுகளைக் கண்டு பிடித்து அவற்றைச் செயலிழக்கச் செய்யும் ஒரு சிறப்புப் பிரிவை ஏற்படுத்தி இருப்பதில் அனைத்து மாநிலங்களிலும் தமிழகம் தான் முன்னோடி. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பான துப்பறியும் நாய்ப் படையை மிக அதிகமான அளவில் வைத்திருப்பதும் இந்தியாவில் தமிழகம் மட்டுமே என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழக காவல் துறை, இந்திய அளவில் முதல் இடத்தை வகிக்கின்ற காவல் துறை என்ற சிறப்பைப் பெற வேண்டும் என்பதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஏற்கெனவே 1991 முதல் 1996 வரை எனது ஆட்சி நடைபெற்ற போது இத்தகைய சிறப்பைப் பெற்று இருந்த தமிழக காவல் துறை மீண்டும் முந்தைய தி.மு.க. ஆட்சியில் அனைத்து வகைகளிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டது. குறிப்பாக காவலர்களுக்கான நலத் திட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை என்பதோடு அவர்களுக்கு ஏற்படுகின்ற, பல்வேறு குறைகளைக் களைகின்ற புதிய நலத் திட்டங்கள் எவையும் அறிவிக்கப்படவும் இல்லை. ஆனால் நான் முதல் அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் கடந்த 2001ஆம் ஆண்டு நடைபெற்ற காவல் துறைக்கான மானியக் கோரிக்கை மற்றும் அதனை அடுத்து 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கை ஆகியவற்றின் மீது நடைபெற்ற விவாதங்களுக்கு பதில் அளித்த போது பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து அவற்றை எல்லாம் தற்போது செயல்படுத்தி வருகிறேன் என்பதை இந்த நல்ல நேரத்தில் உங்களுக்கு எல்லாம் நினைவுபடுத்த விரும்புகிறேன். பொதுவாக காவலர்கள் அவர்கள் ஆண் காவலர்களானாலும் சரி பெண் காவலர்களானாலும் சரி மிகச் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்காக எண்ணற்ற சலுகைகளையும் நலத் திட்டங்களையும் இந்த அரசு அளித்து செயல்படுத்தி வருகின்றது. அவை அனைத்தையும் நான் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும் என்று சொன்னால் அதற்கு அதிக நேரம் பிடிக்கும் என்ற காரணத்தினாலே அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

*"மகளிரை காக்கும் கரங்கள்" என்ற அமைப்பு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதே போன்று சிறார்களுக்கு எதிரான குற்றங்களைக் களைவதற்கு Child Help Line அதாவது "குழந்தைகளுக்கான உதவி மையங்கள்", அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் அமைத்திடவும் எனது அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

## மகளிர் காவல்நிலையங்கள்

முந்தைய தி.மு.க. ஆட்சியில் என்னால் உருவாக்கப்பட்டது என்ற காரணத்தினால் உதாசீனம் செய்யப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு புத்துயிர் கொடுத்து தமிழகத்தில் உள்ள 188 காவல் துறை உட்கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைக்க எனது அரசு உத்தரவிட்டு அவற்றில் மொத்தம் இது வரை 146 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழகம் எங்கும் திறக்கப்பட்டு உள்ளன என்பதையும் அவற்றில் கடந்த மாதம் 27.1.2003 தேதியன்று நான் சென்னை தியாகராய நகரில் அனைத்து மகளிர் காவல் நிலையம் உட்பட 37 காவல் நிலையங்களைத் திறந்து வைத்தேன் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமன்றி தமிழகத்தில் உள்ள மொத்தம் 1217 காவல் நிலையங்களிலும் ஒரு பெண் உதவி ஆய்வாளர் மற்றும் 2 பெண் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு அவற்றை 2 ஆண்டு காலத்திற்குள் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இவை மட்டுமன்றி பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைக் களைவதற்காக Women Help Line அதாவது, "மகளிரை காக்கும் கரங்கள்" என்ற அமைப்பு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதே போன்று சிறார்களுக்கு எதிரான குற்றங்களைக் களைவதற்கு Child Help Line அதாவது "குழந்தைகளுக்கான உதவி மையங்கள்", அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் அமைத்திடவும் எனது அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## காவலர் குடியிருப்புகள்

தமிழக காவல் துறை நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதில் எனது அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. காவல் துறையில் உள்ள பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளான கட்டடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், கணினிகள், போன்றவற்றை எல்லாம் Modernisation of Police Force என்ற காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ கடந்த இரண்டு ஆண்டுகளில்

மொத்தம் 272.40 கோடி ரூபாய் மதிப்பில் எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது.

## காவலர் நலநிதி

காவலர்களுக்கான குடியிருப்பு வசதி இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சதவிகித அடிப்படையில், மிக அதிகம். அதாவது, All India Police Housing Satisfaction, 31 சதவிகிதம் என்று உள்ள நிலையில், தமிழகத்தில் மட்டும் தான் 39 சதவிகிதம் என்ற அளவில் Police Housing Satisfaction அதிகமாக உள்ளது என்பதை இந்த நல்ல நேரத்தில் குறிப்பிட்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் எங்கள் ஆட்சியில் மீண்டும் இயக்கப்பட்டதன் வாயிலாக காவலர்களுக்கு வீட்டு வசதி செய்து தருகின்ற பணி மென்மேலும் சிறப்படைந்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்களுக்கான நலத் திட்டங்கள் பலவற்றை நான் அறிமுகப்படுத்தி உள்ளேன். அவற்றில், குறிப்பாக Tamil Nadu Police Benevolent Fund அதாவது, தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு மானியம், 25 லட்சம் ரூபாயில் இருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. நடப்பு ஆண்டில் கூடுதலாக 1056 ஊர்க் காவலர் பதவிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மிகை நேரப் பணி ஊதியம் 50/– ரூபாயில் இருந்து 100/– ரூபாயாக உயர்த்தி ஆணையிடப்பட்டது; அது சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை பணியாளர்களுக்கும் பொருந்தும் என உத்தரவிடப்பட்டது. சென்னை மாநகரக் காவல் துறை, ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்களுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டது. இதுவும் சென்னையில் பணியாற்றுகின்ற சிறைத் துறை, மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையினருக்கும் பொருந்துமாறு உத்தரவிடப்பட்டது. இப்படி எனது அரசு காவலர்கள் நலன் காக்க எடுத்துள்ள எண்ணற்ற நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். இருப்பினும் இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி இதனை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

## காவலர் குறைதீர்ப்பு

கடந்த 2002ஆம் ஆண்டு தமிழ் நாட்டில், காவல் துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை சிறைத் துறை ஆகியவற்றின் அனைத்து நிலைகளிலும் பணியாற்றுகின்ற ஆண் காவலர்கள் மற்றும் பெண் காவலர்கள் ஆகியோரின் குறைகளைக் களைவதற்காக "காவல் துறை குறை தீர்க்கும் நாள்" என்று



இந்தியாவிலேயே வேறு எங்கும் எந்த முதல் அமைச்சரும் இதுவரை செய்யாத ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டு காவலர்களை நானே 5 நாட்கள் நேரில் சந்தித்து அவர்களிடம் மொத்தம் 10519 மனுக்களைப் பெற்றுக் கொண்டேன். அவற்றில் 8506 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது என்பதையும், எஞ்சியவை பரிசீலனையில் உள்ளன என்பதையும் மிகுந்த மன நிறைவுடன் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காவலர்கள் என்றால் அவர்கள் இயந்திரங்கள் அல்ல அவர்களுக்கும் குடும்பமும், குடும்பப் பொறுப்பும் இருக்கிறது. அவர்களுக்கும் தமது பணியில் பல்வேறு குறைகள் இருக்கின்றன என்பதை மனதில் கொண்டு அவற்றையெல்லாம் என்னால் முடிந்தவரை களைய இந்த மிகப் பெரிய "காவலர் குறை தீர்க்கும் நாள்" நிகழ்ச்சியை 5 நாட்களுக்கு தொடர்ந்து நடத்தி வெற்றிகரமாக முடித்தேன். எங்கள் அரசு காவலர்கள் பால் கொண்டு உள்ள அக்கறையையும் பரிவையும் இந்தச் சாதனை எடுத்துக் காட்டுகின்றது என்றால் அது மிகையாகாது என்பதை இந்த நோத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே போன்று அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கான நடமாடும் ஆலோசனைக் குழுவிற்கான "Mobile Counselling Unit" என்ற சிறப்பு வாகனத்தையும், வழங்கிச் சிறப்பித்து



*"காவலர்கள் என்றால் அவர்கள் இயந்திரங்கள் அல்ல, அவர்களுக்கும் குடும்பமும், குடும்பப் பொறுப்பும் இருக்கிறது. அவர்களுக்கும் தமது பணியில் பல்வேறு குறைகள் இருக்கின்றன என்பதை மனதில் கொண்டு அவற்றையெல்லாம் என்னால் முடிந்தவரை களைய இந்த மிகப் பெரிய "காவலர் குறை தீர்க்கும் நாள்" நிகழ்ச்சியை 5 நாட்களுக்கு தொடர்ந்து நடத்தி வெற்றிகரமாக முடித்தேன்."*

வருவது எங்கள் அரசு தான் என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகக் காவல் துறையை நவீன மயமாக்குகின்ற இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து எடுத்து வருவது ஏன் என்று கேட்டால் அதற்கு ஓர் காரணம் இருக்கிறது. தற்போது எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்ற இந்தப் பல்வேறு புதிய திட்டங்கள் வாயிலாகத் தமிழகக் காவல் துறை "இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை" என்ற சிறப்பை மீளப் பெற்று விட்டது என்பதோடு நான் திருப்தி அடைந்து விடவில்லை. தமிழகக் காவல் துறை உலகிலேயே மிகச் சிறந்த காவல் துறை என்று அனைத்து நாடுகளும் போற்றும் வண்ணம் உங்கள் அனைவரின் காவல் பணியும் செயல் திறனும் கடமை உணர்வும் உயர்ந்திட வேண்டும். அந்தச் சிறப்பை அடைந்திட இந்த அரசு என்னென்ன வகையில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் உங்களுக்கு வழங்க வேண்டும் என்பதே எனது லட்சியம் என்பதை இந்த நேரத்திலே நான் உங்கள் அனைவரிடமும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே முதல் நிலை பெற்ற மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குவதே என் குறிக்கோள். அந்தக் குறிக்கோளை அடையத் தேவை – பொருளாதார முன்னேற்றம்! அந்தப் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கு அடிப்படைத் தேவை – அமைதியான சூழ்நிலை! அந்த அமைதியான சூழ்நிலையை அடைவதற்குத் தேவை – உங்களது ஊக்கம் உழைப்பு உள்ளத்தின் உறுதிப்பாடு!

என்னுடைய இந்தக் கனவை நனவாக்க வேண்டியது உங்களது பொறுப்பு. உங்களது நலனைக் காப்பது என்னுடைய கடமை என்று தெரிவித்துக் கொண்டு, பதக்கம் பெற்ற காவலர்கள் அனைவருக்கும் இந்த விழா சிறப்புற அமையக் காரணமான அனைவருக்கும், காவலர்களின் குடும்பத்தினருக்கும் பெருந்திரளாகக் கலந்து கொண்டிருக்கிற பொது மக்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

*–14.2.2003 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை*



தமிழகத்தில் மலர் மற்றும் மாம்பழம் ஏற்றுமதிக்கான வர்த்தக மண்டலங்கள் அமைக்க வகை செய்யும் ஒப்பந்தம் தமிழக அரசுக்கும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்துக்கும் இடையே தலைமைச்செயலகத்தில் 6–2–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

## நக்சலைட் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கக் குழுக்கள்

தருமபுரி மாவட்டத்தில் மக்களை நக்சலைட்டுகளின் பிடியில் இருந்து விடுவிக்க எனது அரசு சில சிறப்புத் திட்டங்களைக் குறிப்பிட்ட நடவடிக்கைத் திட்டத்துடன் கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டங்கள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் அமல்படுத்தப்படும். மேலும் நக்சலைட் தீவிரவாதத்தால் ஏற்படும் அழிவுகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கிராமம் தோறும் மக்கள் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

காவல்துறை நண்பர் குழுக்கள் மற்றும் கிராம குழுக்கள் அனைத்தும் செயல்படத் துவங்கிவிட்டன. மக்களின் உள்ளூர் தாவாக்களை உடனடியாகத் தீர்த்து வைக்க மக்கள் நீதிமன்றங்கள் (லோக் அதாலத்துடன்) உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் தொழில்துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், மழைநீர் சேமிப்பு அமைப்புகள், பாதிக்கப்பட்ட கிராமங்களையும், நகரங்களையும் இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைப்பது போன்ற வளர்ச்சி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாவட்டத்தின் சிறுபான்மை மற்றும் ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த படித்த வேலை இல்லாத இளைஞர்களையும், எழுத்தறிவில்லாத இளைஞர்களையும் தீவிரவாதிகள் குறிவைத்து அவர்களின் தீவிரவாத நடவடிக்கைக்கு ஈடுபடுத்து கிறார்கள் என்பதையும் அது கண்டுபிடித்தது.

எனவே இத்தகைய சீரழிவு சக்திகளின் பிடியில் சிக்காமல் இளைஞர்களைப் பாதுகாப்பதற்காக மாநில அரசு சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி வருகின்றது. இதன் மூலம் இளைஞர்களின் தொழில்திறமையை வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்பினை அரசு உதவி பெறும் திட்டங்கள் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கவும் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வெளிநாட்டு நிதியுதவியுடன் மற்றவர்களை அந்நியப்படுத்தும் இந்துமத அடிப்படைவாதம் மட்டுமின்றி, இஸ்லாம், கிறித்தவ மத அடிப்படை வாதத்தை முன்வைத்து செயல்படும் விஷமிகள் சிலர் பலம் பெற்று வருவது குறித்தும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. மேலும் சாதாரண மக்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் நடைபெறும் போது அது அந்தப் பகுதியில் அமைதியைக் குலைக்கப் பெரும் காரணமாகிவிடுகிறது என்பதையும் அரசு அறிந்துள்ளது.

இந்தப் பகுதிகளில் மதமாற்றம் நடைபெறவில்லை என்றால் மாநிலத்தில் பெரும்பாலும் மத நல்லிணக்கத்தோடு அமைதியான சூழலே நிலவும். எனவே மத அடிப்படைவாத சக்திகள் மதத்தைப் பயன்படுத்திப் பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் தடுக்கவும் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், தமிழ்நாடு அரசு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் 2002 என்ற சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

## கடற்படைக்கு கண்ணாடி இழைப் படகு வேண்டும்

தமிழ்நாடு நீண்ட கடற்கரையைக் கொண்டது. இந்த நீளமான கடற்கரை ஊடுருவல்களுக்கு வாய்ப்பளிப்பதாக உள்ளது. கடற்கரைப் பாதுகாப்பிற்காக தமிழ்நாடு காவல்படையில் அர்ப்பணிப்பு உணர்வு கூடிய படை உள்ளது. இந்தக் கடற்கரையைப் பயன்படுத்தி எல்.டி.டி.ஈ.யினர் ஊடுருவாமல் எல்லா வகையிலும் தடுக்கத் தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு கடற்படையும், கடலோரக் காவல்படையும் மிகப் பெரிய அளவில் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

எனவே எங்கள் பகுதியில் எல்.டி.டி.ஈ.யினர் ஊடுருவாமல் தடுக்கத் தாழ்வான நீர்ப்பகுதிகளிலும் விரைந்து செல்லக்கூடிய தட்டையான அடித்தளத்தைக் கொண்ட கண்ணாடி இழை அதிவேகப் படகுகளைக் கடற்படைக்கும், கடலோரக் காவல் படைக்கும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தமிழ்நாட்டின் கடலோரக் காவல்படை மற்றும் கடற்படைக்கும் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டும். அதன்மூலம் கடற்படையினர் தற்போதைய தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அவர்களின் துணைத் துருப்புகள் நவீனப்படுத்த அதன் கடலோரக் காவல் பாதுகாப்புப் படை மற்றும் கடல் போலீஸ் படை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை ஏற்கெனவே மத்திய அரசிடம் கொடுத்துள்ளது. எங்களது இந்தத் திட்டத்தினை மத்திய அரசு எங்களுக்குச் சாதகமாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மேலும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை எல்லைக்குள் தெரியாமல் இழுத்துச் செல்லப்படும் போது இலங்கை அதிகாரிகள் அவர்களைக் கைது செய்வதும் துன்புறுத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தப்பிரச்சினையும் நான் மேற்குறிப்பிட்டப் பிரச்சினையோடு தொடர்புடைய பிரச்சினைதான். தற்போது இலங்கை அரசு வடக்குக் கடல் பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்க விதித்திருந்த கட்டுப்பாடுகளை எல்லாம் நீக்கிவிட்டது. இதனால் எல்.டி.டி.ஈ.யினர் தமிழ்நாட்டு மீனவர்களைக் கடத்திச் செல்வதும் துன்புறுத்துவதும் அதிகரித்துவிட்டன.

## இலங்கையுடன் பேச்சு வார்த்தை

எனவே பல நூற்றாண்டுகளாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்து வந்துள்ள வழக்கத்தை மீண்டும் ஏற்படுத்த மத்திய அரசு விரைவில் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று இந்தத் தருணத்தில் வலியுறுத்துகிறேன்.

> ***பல நூற்றாண்டுகளாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்து வந்துள்ள வழக்கத்தை மீண்டும் ஏற்படுத்த மத்திய அரசு விரைவில் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று இந்தத் தருணத்தில் வலியுறுத்துகிறேன்***

இந்திய மீனவர்களின் இந்தப் பாரம்பரியமான உரிமையை மீட்டுத்தர வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது. எங்களது இந்தக் கோரிக்கையின் மேல் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் திறமையான காவல் என்பது ஒரு முக்கியமான தேவையாகும். கடந்த மே 2001–இல் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டங்களை அமல்படுத்த முன்னுரிமை அளித்தேன். அதனால் இந்தத் திட்டங்கள் முழு வீச்சில் நடைபெறத் துவங்கின.

இன்றைய கால கட்டத்தின் சவால்களாக எழுந்துள்ள தீவிரவாதம், பயங்கரவாதம், மத அடிப்படைவாதம் ஆகியவற்றைத் திறமையோடு எதிர்கொள்ளக் காவல்துறை முழுமையான திறமையான நவீன ஆயுதங்களுடன் தகவல் தொடர்பு மற்றும் துணைக் காவல்துறை வசதிகளுடன் முழு வீச்சில் செயல்பட, காவல் துறையை நவீனப்படுத்த ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தைத் துவக்கினேன்.இதற்கான மொத்த ஆண்டுச் செலவாக ரூ.136.20 கோடியில் மாநில அரசு 50 சதவீதத்தை ஏற்றுக் கொண்டு அதனைக் கடந்த 2001–2002–இல் முழுமையாகப் பயன்படுத்தியது.

## தமிழக காவல்படை திறமை மிக்கதாகத் திகழ உறுதி

தற்போது இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு அகில இந்திய அளவில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் தமிழ்நாடு காவல்படை விரைவில் அகில இந்திய அளவில் திறமை மிக்க முதல் காவல்படையாகத் திகழும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

காவல்துறையை நவீனமயப்படுத்தும் மாநிலத்தின் திட்ட ஒப்புதல்களையும் அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திற்குள் இறுதிப்படுத்த வேண்டும். அதன் மூலம் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்த முடியும் என்ற ஆலோசனையை இந்தத் தருணத்தில் நான் முன் வைக்க விரும்புகிறேன்.

## ஆண்டுக்கான நிதி உச்சவரம்பை முழு மானியமாக்குக

தற்போது நவீனமயமாக்கலுக்காக மத்திய அரசு அளிக்கும் ஆண்டுக்கான நிதி உச்சவரம்பை ஐம்பது சதவீதம் என்று வரையறுத்துக் கொண்டுள்ளது. மத்திய அரசு இந்த ஐம்பது சதவீதத்தின் ஒரு பகுதியை மானியமாகவும் மறு பகுதியை வட்டியுடன் கூடிய நீண்ட காலக் கடனாகவும் பிரித்துக் கொடுக்கிறது. மாநிலத்தின் நிதி நெருக்கடியினால் பல மாநில அரசுகள் அவர்கள் கொடுக்க வேண்டிய ஐம்பது சதவீதத் தொகையை ஈடுகட்ட பெரிதும் சிரமப்படுகின்றன. எனவே, மத்திய அரசு கொடுக்கும் ஐம்பது சதவீத நிதியை முழுவதும் மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## காவல்துறையை நவீனப்படுத்த 75% ஈட்டுத்தொகை

மேலும், காவல்துறையை நவீனமயப்படுத்தும் திட்டத்தில் நல்ல வளர்ச்சியையும், சாதனையையும் எட்டிய

# முதலமைச்சர்கள் மாநாடு

*8-2-2003 அன்று புது டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* ***செல்வி ஜெ ஜெயலலிதா*** *அவர்களின் சார்பில் கலந்து கொண்ட சட்ட அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் உரையை வாசித்தார். அவ்வுரையின் முழுவிவரம் வருமாறு :*

மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்டியிருக்கும் இந்த உள்நாட்டுப் பாதுகாப்புக் குறித்த முதலமைச்சர்கள் மாநாடு, பயங்கரவாதத்தின் சதி நிழலும், மத அடிப்படை வாதமும் நாட்டின் பல பகுதிகளைச் சூழ்ந்திருக்கும் நெருக்கடியான வேளையில் கூட்டப் பட்டிருக்கிறது. எல்லை தாண்டிய பயங்கரவாதம் நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பைப் பழிவாங்கிவிட்டது.

இந்தக் காலத்தில் சர்வதேச போதைப் பொருள் கடத்தல்காரர்களின் உள்நாட்டு சங்கிலிக் கன்னிகள், நகர்ப்புற திட்டமிட்ட குற்றங்கள், தீவிரவாத மற்றும் பிரிவினைவாதிகளின் ஊடுருவல்கள், மத அடிப்படைவாதிகளின் தீவிரவாத நடவடிக்கைகள் ஆகியவை வேகமாக வளர்ந்துள்ளதை நாட்டின் உளவுத்துறை பதிவு செய்துள்ளது.



## பாதுகாப்பு குறித்து பரிசீலனை

இந்தியாவின் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட பாடப்புத்தக உண்மையான வேற்றுமையில் ஒற்றுமையும், நாட்டின் ஒருமைப்பாடும், சுதந்திரமும் சுதந்திர இந்தியாவின் எந்தக் காலகட்டத்திலும் இன்றுள்ளது போல் நெருக்கடிக்கு உட்பட்டதில்லை. அப்போது ஜாதி, மதம், மொழிப் பிரச்சினைகளில் நாட்டின் பல பகுதிகளில் பலமான கருத்து வேறுபாடுகள் நிலவியது. எனினும் இப்போது எல்லை தாண்டிய பயங்கரவாதம் வளர்ந்துவிட்ட நிலையில், இது பிரிவினைவாதத்தையும், மிகப்பெரிய அளவில் வன்முறையையும், மத அடிப்படைவாதத்தையும் நாட்டின் எளிய மக்களிடம் விதைத்துவிட்டது.

இதனால் நம் நாட்டின் வேற்றுமை என்பதே நம்மிடம் பிரிவை ஏற்படுத்திவிடும் அளவிற்கு உள்நாட்டுப் பாதுகாப்பு சூழ்நிலை உருக்குலைந்து விட்டது.

உள்நாட்டு வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் ஊடுருவல்களால் நாட்டின் பாதுகாப்பு சூழல் வேகமாக மாறிவருகிறது. இந்தத் தருணத்தில் தற்போது உள்ள உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிப்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

## உறுதியோடு ஆதரித்தோம்

எல்லை தாண்டிய பயங்கர வாதத்தின் ஆபத்துக்கள் குறித்தும், அதனை எதிர்த்து உலக அளவில் போராட வேண்டிய அவசியத்தையும் இந்தியா நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது. ஆனால் கடந்த செப்டம்பர் 11 பேரழிவிற்குப் பிறகு அமெரிக்காவால் எடுக்கப்பட்ட முன் முயற்சியினால்தான் உலகம் முழுவதும்பயங்கரவாதத்தை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் முக்கியத்துவம் பெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புச் சூழலுக்கு மிகப் பெரிய அபாயத்தை ஏற்படுத்தி உள்ள எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்த பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக அரங்கில் இந்திய அரசு எடுத்துள்ள நிலைபாட்டை நான் பலமாக ஆதரிக்கிறேன்.



> *"உள்நாட்டு வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் ஊடுருவல்களால் நாட்டின் பாதுகாப்பு சூழல் வேகமாக மாறிவருகிறது. இந்தத் தருணத்தில் தற்போது உள்ள உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிப்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்."*

இந்தக் காரணத்திற்காகத்தான் இந்திய அரசு பொடா சட்டத்தைச் சட்டமாக்க முடிவு செய்த போது நாங்கள் அதனை உறுதியோடு ஆதரித்தோம். மேலும் தமிழ்நாட்டிற்கு எல்.டி.டி.இ., தமிழ்நாடு விடுதலைப்படை, தமிழர் மீட்சிப்படை, போன்ற அமைப்புகளினால் அச்சுறுத்தல் இருந்து வருவதை மத்திய, மாநில உளவு அமைப்புகள் பதிவு செய்துள்ளன. இதனால் பொடா சட்டத்தின் பிரிவுகள் கொடுத்துள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழர் மீட்சிப்படை, அல்உம்மா, அகில இந்திய ஜிஹாத் கமிட்டி, தமிழர் தேசிய இயக்கம் போன்ற அமைப்புகளைத் தடை செய்துள்ளோம்.

கோவை தொடர் குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட அல்உம்மா பாஷாவுக்கு எதிரான வழக்கில் தமிழக அரசு எடுத்துக்கொண்ட தொடர்ச்சியான முயற்சியால்தான் அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டு, வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. இந்த வழக்கில் நீதிமன்றம் முக்கிய குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்துள்ளது. சிறையில் இருந்து தப்பிய பயங்கரக் குற்றவாளி இமாம் அலியை அசாத்திய தைரியத்துடன் பெங்களூரில் அவனுடைய இருப்பிடத்தில் அதிரடியாய் நுழைந்து மடக்கியதில் அவன் கொல்லப்பட்டான். கடந்த 24.9.2002-இல் நடைபெற்ற இந்தச் சம்பவம் தமிழக போலீசாரின் துணிச்சலான நடவடிக்கைக்கு மேலும் ஒரு சான்றாகும்.

தமிழகத்தில் கடந்த 1991-1996 வரை நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் பயங்கரவாத குழுக்களும், மத அடிப்படைவாத சக்திகளும் கட்டுப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர். தமிழ்நாட்டில் எல்.டி.டி.ஈ.யின் நடவடிக்கைகள் முழுவதுமாக ஒடுக்கப்பட்டு இருந்தது. எனினும் அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்த தி.மு.க. ஆட்சி காலத்தில் இந்த சக்திகள் மீண்டும் தலைதூக்கின.

மாநிலத்தில் சதிவேலைகளில் ஈடுபட்டன. கடந்த 2001-இல் மீண்டும் எனது அரசு பொறுப்பேற்றபின் எடுத்த தயவு தாட்சண்யமற்ற உறுதியான நடவடிக்கைகளால் தீவிரவாத சக்திகளின் வன்முறைகளும், மதஅடிப் படைவாத சக்திகளின் தீவிரவாத நடவடிக்கைகளும் மொழிவெறி சக்திகளின் நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்பட்டன.

ராஜீவ்காந்தியின் படுகொலைக்குக் காரணமான எல்.டி.டி.ஈ. அமைப்பை எனது இடைவிடாத முயற்சியால் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் 1967-இன் கீழ் தடை செய்யப்பட்டது. மீண்டும் அந்த அமைப்பு பொடா சட்டம் 2002-இன் கீழும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் இருந்த எல்.டி.டி.ஈ. ஆதரவாளர்கள் தமிழர் மீட்சிப் படை (டி.என்.ஆர்.டி.) தமிழ்நாடு விடுதலைப் படை (டி.என்.எல்.எப்) என்ற புதிய பெயர்களில் அமைப்புகளைத் துவக்கி அவர்களின் தீவிரவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். இதனால் தமிழக அரசு இந்த அமைப்புகளைக் கிரிமினல் சட்டம் (திருத்தப்பட்டது) 1908இன் கீழ் தடைசெய்தது. என்னுடைய தலையீட்டால்தான் மத்திய அரசும் இந்த அமைப்புகளைப் பொடா சட்டம் 2002இன் கீழ் தடைசெய்தது.

மாநில அரசின் இத்தகைய நடவடிக்கைகளாலும் சமூக நீதியை நிலை நிறுத்தவும் வேகமான வளர்ச்சியை ஏற்படுத்தவும் எடுத்துக்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளாலும் இரண்டாண்டு காலமாக மாநிலத்தில் எந்த ஒரு எளிய ஜாதி மோதலும், மத மோதலும் ஏற்படவில்லை.

மாநில அரசு தொடர்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் பிரதான பயங்கரவாத அமைப்புகளையும் அதன் நடவடிக்கைகளையும் தடை செய்ததால் இந்த அமைப்புகளின் தலைவர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

இந்தத் துணைக் குழுக்களையும் பிடித்து கட்டுப்படுத்தும் முயற்சி தொடர்கிறது. தமிழ்நாட்டின் தருமபுரி மாவட்டத்தில் சமீபத்தில் ஆந்திர மாநிலத்தில் இருந்து செயல்படும் நக்சலைட் குழுவான மக்கள் யுத்தக் குழுவின் (பி.டபிள்யு.ஜி) சதி நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழ்நாடு காவல்துறை உடனடியாக அதிரடி நடவடிக்கையில் இறங்கியது. போலீசாரின் வெற்றிகரமான தேடுதல் வேட்டையில் இந்த அமைப்பின் பெரும்பாலான தீவிர உறுப்பினர்களும் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து முயற்சி செய்தார்கள். ஏழை மக்களை ஈவு இரக்கமற்ற முறையில் சுரண்டும் இந்த முயற்சியை முறியடிக்க தமிழ்நாடு அரசின் லாட்டரி உட்பட எல்லா மாநில லாட்டரிகளையும் தடைசெய்ய நான் உத்தரவிட்டேன். தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான சாதாரண மக்களை இந்த மோசடி நடவடிக்கையில் இருந்து பாதுகாக்கவே இந்த தைரியமான முடிவை மேற்கொண்டேன்.

இப்போது உள்நாட்டுப் பாதுகாப்பு மேலாண்மை குறித்து அமைச்சர்கள் குழு கொடுத்திருக்கும் பரிந்துரைகளை பார்ப்போம். தற்போது தேசிய அளவில் இருக்கும் சி.பி.ஐ. மற்றும் மாநிலங்கள் அளவில் இருக்கும் சி.ஐ.டி. பிரிவுகள் மாநிலங்களுக்கு இடையிலேயும் அகில இந்திய அளவிலும் நடைபெறும் பெரிய குற்றங்களைக் கண்டுபிடிக்கப் போதுமானதாக இருக்கிறது. இதற்காகப் புதிய அமைப்பு எதையும் உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை.

மேலும் இந்தத் தேவைக்காக மத்திய உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுடன் மத்திய அரசால் நிதியுதவி செய்யப்படும் திட்டங்களுக்கு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை. தற்போது உள்ள ஏற்பாட்டிலேயே சம்பந்தப்பட்ட அரசுகளின் பொறுப்புகள் திட்டவட்டமாக தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. மாநில காவல் படையின் செயல்பாட்டை பலகீனப்படுத்தும் பிரச்சினைகளை கலையவும் அதற்கான காரணங்களை நீக்கவும், நம்மிடம் இருக்கிற கண்காணிப்பு அமைப்பு மூலமாகவே தவறு செய்யும், ஊழல் புரியும் காவல்துறை அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

*ஏழை மக்களை ஈவு இரக்கமற்ற முறையில் சுரண்டும் இந்த முயற்சியை முறியடிக்க தமிழ்நாடு அரசின் லாட்டரி உட்பட எல்லா மாநில லாட்டரிகளையும் தடை செய்ய நான் உத்தரவிட்டேன். தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான சாதாரண மக்களை இந்த மோசடி நடவடிக்கையில் இருந்து பாதுகாக்கவே இந்த தைரியமான முடிவை மேற்கொண்டேன்.*

### மல்டி ஏஜென்சி சென்டர்

ரகசிய தகவல்கள் மாநில புலனாய்வுத்துறை மற்றும் ஐ.பி. ஆகியவை இடையே தொடர்ச்சியான சாதாரண கூட்டங்களில் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இந்தத் தகவல்கள் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு சென்னைக்கும் தரப்படுகிறது. இந்த வழிமுறை புலனாய்வு குறித்த கூட்டு நடவடிக்கை குழு கொடுத்த ஆலோசனையின் பேரிலே நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு புலனாய்வுத் துறை ஐ.ஜி.தான் மத்திய அரசின் மல்டி ஏஜென்சி சென்டருடனும் தகவல் பரிமாறும் முக்கிய அதிகாரி ஆவார். தற்போது இந்த மல்டி ஏஜென்சி சென்டரின் துணைக்கிளை ஒன்று தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தற்போது ஐ.எஸ்.ஐ. ஊடுருவல் மற்றும் நடவடிக்கைகள் குறித்து எந்த குறிப்பிட்ட தகவலும் இல்லை. எனினும் இதற்காக ஒரு சிறப்பு பிரிவு மாநிலக் குற்றப்புலானய்வு துறையின் கீழ் பாதுகாப்புப் பிரிவில் எற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு ஐ.எஸ்.ஐ நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கும். இதுபோன்ற மேலும் மூன்று பிரிவுகள் சென்னை, மதுரை, கோவை காவல்துறை ஆணையர்களின் நேரடி கண்காணிப்பில் துவங்கப்பட்டுள்ளது.

கம்ப்யூட்டர் இன்டர்நெட்டின் மூலம் குற்றங்கள் இழைக்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க உதவியாக சிறப்புப் படை பிரிவு ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக எனது உரையை முடிக்கும் முன் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். குற்றங்களும், குற்றவாளிகளும், தீவிரவாதிகளும், தீவிரவாதமும், மதவாதமும், பழமைவாதமும் நமது நாட்டில் பெருகி வருகின்றன. நமது காவல்துறையும் உளவு அமைப்புகளும் இவற்றை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும்.

அமைதி மற்றும் பொது ஒழுங்கைப் பராமரிப்பதில் மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கை களுக்கு எங்கள் முழு ஒத்துழைப்பை உறுதி செய்கிறோம். அதேபோன்று மத்திய அரசும் காவல்துறையை நவீனப்படுத்தவும், பலப்படுத்தவும் நமது நாட்டைச் சீர்குலைக்க முயலும் அடிப்படைவாதிகள், தீவிரவாதிகள், போராளிகள் குழுக்களின் செயல்பாடுகளைத் திறமையாகவும், கடுமையாகவும் ஒடுக்க காவல்துறைக்குத் தேவையான கட்டமைப்பு உபகரணங்கள், ஆயுதங்கள் போன்றவற்றை வழங்கி மாநில அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* * *



# ருக்மிணிதேவி அருண்டேல்

# நூற்றாண்டு விழா



இந்திய நாட்டின் கலை மற்றும் பண்பாட்டுத்துறையின் சிறந்த வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்த பெருமக்கள் சிலரே. அவர்களுள் தனிச்சிறப்புடைய பெரும்பணி புரிந்தவர் திருமதி. ருக்மிணிதேவி அருண்டேல் ஆவார். 1904–ஆம் ஆண்டு பிப்ரவரி 29ஆம் நாள், படித்த பாரம்பரியம் மிக்க கலைக் குடும்பத்தில் ருக்மிணி தேவி பிறந்தார்.

பிரம்மஞான சபை நடவடிக்கைகளில் ஈடுபாடுடைய அவர் தந்தையாரின் உதவியால், அச்சபையினை உருவாக்கியவர்களுள் ஒருவரான பிஷப்லெட் பீட்டர் அவர்களின் நட்பினைப் பெற்றார். அக்காலத்தில் சிறந்த கல்வியாளராக விளங்கிய டாக்டர் ஜி.எஸ். அருண்டேல் என்ற ஆங்கிலேயரை ருக்மிணி தேவி காதலித்து 1920 ஆம் ஆண்டில் திருமணம் புரிந்து கொண்டார். அக்காலத்து ஆச்சாரம் மிகுந்த பிராமணக் குடும்பத்தில் பிறந்த ருக்மிணி தேவி சாதித் தடைகளை உடைத்தெறிந்து, தம் இனத்தாரின் எதிர்ப்பையும் மீறி தைரியமாக ஆங்கிலேயருடன் குடும்பம் நடத்தினார்.

பிரம்மஞான சபையின் தலைவியாக இருந்த டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரின் பிரம்மஞானம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு உதவிய தம் கணவர் அருண்டேல் மூலமாக, ருக்மிணி தேவி, அன்னிபெசன்ட் அம்மையாரின் வழிகாட்டுதலால் ஒரு புதிய கலாச்சார இயக்கத்தை உருவாக்க முனைந்தார்.

திருமதி. ருக்மிணி தேவி பிரம்மஞான சங்கத்தின் பணிகளை ஏற்றுப் பலமுறை வெளிநாடுகளுக்கு பயணம் சென்றார். 1926ஆம் ஆண்டு இரஷ்ய நாட்டு பாலே நடனக் கலைஞர் அன்னாபாவ்லோவாவின் நடன நிகழ்ச்சியை ஆஸ்திரேலியாவில் கண்டு மகிழ்ந்தார்.

இயல்பாகவே, நடனக் கலையில் ஆர்வம் கொண்ட ருக்மிணி தேவி பாவ்லோவாவின் உதவியாளர் கிளியோ நோர்ட்டி அம்மையாரிடம் பாலே நடனத்தைக் கற்றுக் கொண்டார்.

1932 ஆம் ஆண்டு நம் நாட்டுக்கே உரிய பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்றை முதன் முதலாகக் கண்டு, அவர் மிகவும் வியப்படைந்தார். "அழகும், இசையும், தாளமும், பாவமும் இணைந்த இந்த நாட்டியக் கலை தமிழ்நாட்டில் தனியே ஒதுக்கப்பட்ட சில பெண்களுக்கு மட்டுமே உரியது என்றும், அக்கலையைப் பயில்வதும் பார்ப்பதும் தாழ்ந்த செயல் என்றும் கருதி இருந்தனர். மலிவான உணர்வைத் தூண்டுவதாக கருதப்பட்டு புறக்கணிக்கப்பட்ட நடனக் கலையின் சிறப்பைப் பரப்புவதும் அழிந்து வரும் அக்கலையை வாழ்விப்பதும் என் கடமை என உணர்ந்தேன். இதற்காக என்னுடன் ஈடுபாட்டுடன் பணிபுரியும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்க கருதினேன்" என்று கூறிய திருமதி. ருக்மிணி தேவி தாமே நடனக் கலையை பயின்று ஒரு பொதுமேடையில் பலரையும் வரவழைத்து நாட்டியமாடினார். அக்கலையை இழிவாகக் கருதிய சமுதாயத்தினர் நாட்டியக் கலையின் சிறப்பினை உணரத் தொடங்கினர்.

திருமதி. ருக்மிணி தேவியின் ஆழ்ந்த ஈடுபாட்டின் விளைவாக, 1935ஆம் ஆண்டு அடையாறு, பிரம்மஞான சபையில், பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த பார்வையாளர் முன் நம் பரதக் கலைச் சிறப்பினை உணர்த்தும் வகையில் தாமே அற்புதமாக நடனமாடினார். பரத நாட்டியக் கலை அன்று முதல் புத்துயிரும் பெருமையும் பெற்றது.

1936ஆம் ஆண்டு "கலாச்சேத்ரா"என்ற நிறுவனம், அடையாற்றில் உருவாயிற்று. இந்திய நாட்டின் பாரம்பரியக் கலைகளின் சிறப்பை உலகெங்கும் பரப்புவதையும் இளைய தலைமுறையினருக்கு

மாநிலங்களுக்கு மத்திய அரசு அதன் திட்ட ஒதுக்கீட்டின் ஈட்டுத் தொகையை 75 சதவீதமாக அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரும் 2002–2003–ஆம் ஆண்டில் எங்கள் மாநிலத்தில் ரூ.68.50 கோடிக்கான மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் நிலுவையில் உள்ளன. இந்த விஷயத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, 2002–2003–ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இந்தத் தொகையையும் சேர்த்து கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

> பெண்களுக்கு அதிகாரம் கிடைப்பது, அவர்களை சுரண்டாத ஒரு சுதந்திரமான சமூகச் சூழலை ஏற்படுத்துவது அவர்களுக்கு குற்றங்களில் இருந்து முழுப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு குற்றவியல் நீதிமுறையை ஏற்படுத்துவது ஆகியவை என் மனதோடு ஒன்றிய விஷயங்களாகும்.

நாங்கள் இப்போது காவல்துறையின் அணுகு முறையும், மாற்றங்களையும் கொண்டுவரும் மிகப்பெரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். இதற்காகக் குற்றப்புலனாய்வு, பயங்கரவாத நடவடிக்கைகள், பாலியல் சமத்துவம் குறித்த விழிப்புணர்வு ஆகிய பிரிவுகளில் மிகப்பெரிய அளவில் பல கட்டப் பயிற்சிகளைத் துவக்கியுள்ளோம்.

இந்தத் தருணத்தில் ஒன்றை நினைவுக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். கடந்த 1994–ஆம் ஆண்டு நான் முதல் முறையாக முதலமைச்சராக இருந்த போது, தமிழ்நாட்டில் நாங்கள் துவங்கிய காவல்துறை நண்பர்கள் திட்டம் தற்போது உலக அளவில் அங்கீகாரத்தை வென்றுள்ளது. இந்த விஷயத்தில் தமிழ்நாட்டின் உயர்போலீஸ் அதிகாரிகள் சர்வதேச விருதுகளை வென்றுள்ளனர். தமிழ்நாட்டில் அர்ப்பணிப்புடனான ரோந்துப்பணி மற்றும் போலீஸ் நண்பர்கள் இயக்கமும் உருவாகியிருக்கிறது என்பதை நினைவு கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## ஆசியாவிலேயே முதன்முறையாக காவல்பயிற்சிக் கல்லூரி

ஆசியாவில் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் குடிமக்களுக்கான காவல் பயிற்சிக் கல்லூரியைத் துவக்க நான் வழிகாட்டியுள்ளேன். சிறை சீர்திருத்த கமிஷன்களால் கொடுக்கப்பட்ட பல்வேறு பரிந்துரைகளில் நிறைவேற்றும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல முன் முயற்சிகளை எடுத்துள்ளது. கைதிகளின் வாழ்நிலையை மேம்படுத்தவும், அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும், சிறையில் பாதுகாப்புச்சூழலை மேம்படுத்தவும், தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண் குற்றவாளிகளுக்காக நவீன மருத்துவ வசதிகள், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், 11 சிறைச்சாலைகளையும், 62 நீதிமன்ற வளாகங்களோடு இணைக்கும் வீடியோ கான்பிரன்ஸ் திட்டத்தையும் தமிழக அரசு துவங்கியுள்ளது. இதன் மூலம் சிறையில் அடைக்கப்பட்ட கைதி வீடியோ மூலமாக வாதிட்டுப் பயன்பெற முடியும். இந்தத் திட்டம் ஜனாதிபதியின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

பெண்களுக்கு அதிகாரம் கிடைப்பது, அவர்களை சுரண்டாத ஒரு சுதந்திரமான சமூகச் சூழலை ஏற்படுத்துவது அவர்களுக்கு குற்றங்களில் இருந்து முழு பாதுகாப்பு அளிக்கும் ஒரு குற்றவியல் நீதிமுறையை ஏற்படுத்துவது ஆகியவை என் மனதோடு ஒன்றிய விஷயங்களாகும். இந்தத் திசையை நோக்கி மாநிலத்தின் காவல் நிலையங்களை முழுமையாக மாற்றியமைக்கவும் அவற்றைப் பெண்கள் பிரச்சினைகளைக் கனிவோடு அணுகும் காவல் நிலையங்களாக மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 1992–இல் நான் முதலமைச்சராக இருந்தபோது அகில இந்திய அளவில் முதல் பெண்கள் காவல் நிலையத்தை துவக்கி வைத்தேன். 1996 வரையில் மாநிலம் முழுவதும் 58 மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக இந்தத் திட்டம் 2001–இல் மீண்டும் துவக்கப்பட்டது. அப்போது 130 மகளிர் காவல் நிலையங்களை மாநிலம் முழுவதும் மூன்று கட்டங்களில் துவக்க உத்தரவிட்டேன். தமிழ்நாட்டிலுள்ள 188 காவல் கோட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு மகளிர் காவல் நிலையம் துவக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி செய்யும்.

## மக்களின் நண்பர்

அடுத்த ஆண்டு மட்டும் 42 மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட உள்ளன. காவல் என்பது மனிதாபிமானம் உள்ள, இரக்கமுள்ள பாதுகாவலர், மக்களின் நண்பர். குறிப்பாகப் பெண்களின் நண்பர் என்ற கருத்து இந்த மகளிர் காவல் நிலையங்களில் இருந்து துவங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய குறிக்கோள்.

தமிழ்நாட்டில் காவல்படையின் ஆண், பெண் சமத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த மிகப் பெரிய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் காவல் துறையினர், குழந்தை உரிமைகள், நகர்ப்புறச் சிறுவர்கள் மற்றும் அவர்களின் அழுத்தம் நீக்குதல் குறித்த மேலாண்மை ஆகிய விஷயங்களில் சிறந்த பயிற்சியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மகளிர் காவல் நிலையங்களில் குழந்தைப் பராமரிப்பு மையங்களும் துவங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பெண் காவல்படையினர் அவர்களது பணியில் முழு நம்பிக்கையுடன் ஈடுபட முடியும்.

108 மகளிர் காவல் நிலையங்களில் கட்டணம் இல்லாத பெண்கள் உதவி தொலைபேசி இணைப்புகளும், 78 காவல் நிலையங்களில் குழந்தை மீட்புக்கான அவசர தொலைபேசி இணைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

மிகப் பெரிய அளவில் தொண்டு நிறுவனங்கள், சமூக சேவகர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பட்டியலிடப்பட்டு பெண்கள் காவல் நிலையங்களுக்கு உதவ, வழிகாட்ட வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு

மேலும் வரதட்சணை வழக்குகள் மற்றும் பணியிடத்தில் நடைபெறும் பாலியல் வன்முறைகள் போன்ற பிரச்சினைகளில் உடனடியாக வழக்குப் பதிவு செய்யவும் பெண் காவல் அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் பெண்கள் மீதான வன்முறை தடுப்புச் சட்டம் 2002 என்ற புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கையாளவும் குற்றவாளிகளுக்குக் கடுமையான சிறை தண்டனையும், அபராதம் விதிக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

பெண் இறப்பு மற்றும் அடக்குமுறையால் தற்கொலை ஆகிய பிரச்சினையில் குற்றமற்றவர் என்பதை நிருபிக்கும் பொறுப்பு குற்றவாளி மீது இந்த சட்டத்தில் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் இந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

காவல் துறையினரிடம் தன்னம்பிக்கையை உறுதிப்படுத்தவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பணியில் அவர்கள் முழு மனதுடன் ஈடுபாட்டுடன் செயல்படுவதை உறுதிபடுத்திடவும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க மாநில அரசு முன்னுரிமை அளித்துள்ளது. அவர்களது குறைகளைக் கேட்க நானே குறை தீர்க்கும் கூட்டத்தைக் கூட்டினேன். இந்தக் கூட்டங்கள் 5 நாட்கள் நடைபெற்றன. எல்லா காவல் மண்டலங்களிலும் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த சிறப்பு நடவடிக்கை இந்தியாவில் எங்கும் நடைபெறாத தனிச்சிறப்புமிக்க நடவடிக்கையாகும். காவலர்களுடன் அவர்களது பிரச்சினை குறித்து நேரடித் தொடர்பு கொண்ட இந்த நடவடிக்கையை தொடர்ந்து அவர்களது பிரச்சினைகளை நானே நேரடியாக தீர்த்து வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

மத்திய அரசால் கொண்டுவரப்பட இருக்கும் நாட்டு குடிமக்களுக்கான பல்நோக்கு தேசிய அடையாள அட்டை திட்டம் வரவேற்கத்தக்க ஒன்று. தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருவாடானை தாலுகா இந்தத் திட்டத்திற்கான முன்னோடித் தாலுகாவாக தேர்ந்தெடுக்கப்பட்டு முதலில் இந்தத் திட்டம் அங்கே அமல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் பிறப்பு, இறப்பு பதிவு பாராட்டத்தக்க வகையில் நடைபெறுகிறது. மேலும் மாநிலத்தின் தாலுகா அலுவலகங்களின் கணினிமயமாக்கும் திட்டம் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது இந்த தேசிய அடையாள அட்டை திட்டத்தை அமல்படுத்துவதில் மாநிலத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இத்திட்டத்திற்கான எல்லா அடித்தள வேலைகளும் பூர்த்தி அடைந்துள்ளன.

## தைரியமான முடிவை மேற்கொண்டேன்

சட்டவிரோத லாட்டரிகளால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் சீரழிந்தது எல்லாரும் அறிந்த ஒன்று. பல லாட்டரிகள் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டவை என்ற பெயரில் நடத்தப்படுகின்றன. உண்மையில் இவையெல்லாம் பல மோசடிகளை செய்பவை. தமிழ்நாட்டில் இதனால் ஏழை மக்கள் கடுமையாக சுரண்டப்பட்டார்கள். இந்த சட்டவிரோத லாட்டரிகளை ஒழுங்குபடுத்த மத்திய சட்டத்தைப் பயன்படுத்தி அரசு எடுத்த முயற்சிகளை இந்த லாட்டரியை நடத்துபவர்கள் நீதிமன்றம் மூலம் தடுத்து நிறுத்த

இந்தியக் கலைகளில் பயிற்சி அளிப்பதையும் இந்தியக் கலாச்சார மரபின் சிந்தனைகளை நாட்டிய நாடகங்களின் மூலம் எல்லாருக்கும் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டு "கலாச்சேத்ரா" வளர்ச்சி பெற்றது.

வங்கக் கடலின் கரையில், நிழல் தரும் சோலைகள் சூழ்ந்த அடையாறு பகுதியில் அமைந்துள்ள "கலாச்சேத்ரா" வளாகம் இன்று ருக்மிணி தேவியின் நினைவை நமக்கு உண்டாக்கும் நினைவாலயமாக விளங்குகிறது.

இந்திய நாட்டின் பல மாநிலங்களிலிருந்தும் உலகின் பல நாடுகளிலிருந்தும் பரம்பரை பெருமைமிக்க இந்தியக் கலைகளில் பயிற்சி பெறுவதற்காக அடையாறு கலாச்சேத்ராவை நோக்கி பற்பல இளைய தலைமுறையினர் வந்து தங்கியுள்ளனர். அங்கு மர நிழலிலும், கூரைக் கொட்டகைகளிலும் இந்திய நாட்டின் உயர்ந்த கலைகள் கற்பிக்கப்படுகின்றன.

பெரிய பெரிய கட்டடங்களை உருவாக்குவதை விட, கலைப்பயிற்சி உடைய மனிதர்களை உருவாக்குவதே இந்நிலையத்தின் குறிக்கோள். இதில் பயின்ற கலைஞர்கள் உலகெங்கும் உள்ள பெரிய கலை, கல்வி நிறுவனங்களில் பெரும் பணி புரிந்து "கலாச்சேத்ரா"வின் புகழைப் பரப்புகின்றனர். அவரது தொண்டினைப் பாராட்டி 1956–ஆம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு "பத்மபூஷன்" விருது வழங்கியது. திருமதி. ருக்மிணி தேவி அம்மையார் கலைகளில் வைத்திருந்த ஈடுபாட்டுடன் மென்மையான விலங்குகளின் மீதும் ஈடுபாடு கொண்டார். மிருகங்களை வதைக்கும் கொடியவர்களை எதிர்ப்பதும், விலங்குகளின் மீது பாசம் கொண்டு நேசிப்பதும் அவரது வழக்கமாயிற்று.

மிருக வளர்ப்பு, மிருக வதைத் தடுப்புச் சங்கங்களில் ருக்மிணி தேவி காட்டிய ஆர்வத்தை அறிந்து, 1958ஆம் ஆண்டு இங்கிலாந்து மிருக வதைத் தடுப்புச் சங்கத்தினர் "இராணி விக்டோரியா வெள்ளிப் பதக்கம்" அளித்து பெருமைப்படுத்தினர். அவர் மாநிலங்கள் மேலவை உறுப்பினராக இருந்தபோது, மிருக வதைத் தடுப்புக்காக ஒரு வாரியம் அமைத்து மிருகங்களை ஆதரித்து வளர்க்கும் வகையில் சட்டம் நிறைவேறப் பாடுபட்டார். அவர் மரக்கறி உணவை மட்டுமே உண்டு வாழ்ந்ததுடன் மரக்கறி உணவு உண்ணும் வழக்கத்தை நாடெங்கும் பரப்ப பெருமுயற்சி எடுத்தார்.



இளம் வயதில் ருக்மிணிதேவி

"திஹேக்" நகரின்கண் அமைந்துள்ள பன்னாட்டு விலங்கு பராமரிப்புச் சங்கங்களின் கூட்டமைப்பு தம் பாராட்டுக்குரியோர் பட்டியலில் ருக்மிணி தேவியின் பெயரையும் இணைத்துப் பெருமை செய்தது. இந்தியப் பாராளுமன்றம், ருக்மிணி தேவி நிறுவிய "கலாச்சேத்ரா"வின் நிகழ்கால கலை மற்றும் கலாச்சாரத் தொண்டின் சிறப்பைக் கருதி 1933ஆம் ஆண்டு கலாச்சேத்ரா சட்டத்தின் படி, அந்நிறுவனத்தை "தேசிய சிறப்புடைய நிறுவனமாக " அங்கீகாரம் செய்தது.

ஆற்றல் முழுவதையும், பயன்படுத்தி மனித குலத்தின் கலை பாரம்பரிய வளர்ச்சிக்கு உதவிய தனி மனிதர் திருமதி. ருக்மிணி தேவி, என்றாலும் அவர் நினைவைப் போற்றும் நிரந்தரமான கலை நிறுவனமாக – அவர் உருவாக்கி வளர்த்த கலாச்சேத்ரா கலை மையம் – இன்று அவருடைய பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை நோக்கி வீறு நடைபோடுகிறது.

திருமதி. ருக்மிணி தேவி அருண்டேலின் நூற்றாண்டு விழா மார்ச் மாதம் முதல் தொடங்கி இந்த ஆண்டு முழுவதும் விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. இந்த நூற்றாண்டை ஒட்டி சிறப்பான பரத நாட்டிய நிகழ்ச்சிகளும், கருத்தரங்குகளும் நடைபெற உள்ளன. இதில் இந்தியா முழுவதிலும் இருந்து இசைக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்க இருக்கிறார்கள். திருமதி. ருக்மிணி தேவி அருண்டேலின் படைப்புகள் மற்றும் அவர் இயல், இசை, நாடகக் கலைக்கு ஆற்றிய பணிகளின் விவரங்கள், "ஆசியப் பயணம்" என்ற பெயரில் வியட்நாம் மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கு அந்த நாட்டு மக்களிடையே எடுத்து வைக்கப்பட இருக்கிறது. மேலும் நூற்றாண்டு விழாவின் நிறைவு விழா இந்த ஆண்டு இறுதிவாக்கில் புதுடில்லியில் நடைபெற உள்ளது. அப்போது மாநாடும், மாபெரும் திருவிழாவும் நடைபெறுகிறது. இந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1–3–2003 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் துணை ஜனாதிபதி மேதகு பைராம் சிங் ஷெகாவத், கலாச்சேத்ரா நிறுவனத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மேதகு ஆளுநர் பெ.ஸ்ரீ.ராமமோகன் ராவ் அவர்கள், தமிழக நிதியமைச்சர் திரு. பொன்னையன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

பெண்குலத்தின் பொன்விளக்காக விளங்கும் திருமதி. ருக்மிணி தேவி அருண்டேலின் நூறாண்டு வாழ்வு இந்த ஆண்டின் "பெண்கள் நாளில் நினைந்து போற்றுதற்குரியதேயாகும்". ✶





# மக்களின் நலனே நமது இலட்சியம்

## மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

கொங்கு மண்டலத்தின் மையமாக விளங்கும் ஈரோட்டில் இன்று நடைபெறுகின்ற இந்த அரசு விழாவில் பல்வேறு திட்டப் பணிகளைத் திறந்து வைக்கவும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் பல்வேறு துறைகளின் சார்பாக வழங்கப்படும் நலத் திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கவும் உங்களை எல்லாம் கண்டு உங்களிடம் என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் கிடைத்துள்ள இந்த வாய்ப்பு குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஈரோட்டிலே தோன்றி உலகப் புரட்சிச் சிந்தனையாளர்கள் வரிசையில் ஒருவராக உயர்ந்து விளங்கியவர் தந்தை பெரியார்! அவர்களது சொந்த ஊர் இந்த ஊர் என்பதை நினைத்துப் பார்க்கும்போது எத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஊருக்கு வந்திருக்கின்றோம் என்கிற பெருமித உணர்வு நமக்குள் ஏற்படுகிறது.

*"தொண்டு செய்து பழுத்த பழம்*
*தூய தாடி மார்பில் விழும்"*

என்று, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் பாடப்பட்ட தந்தை பெரியார் அவர்கள், தமிழினத்தை உயர்த்துவதற்காக மேற்கொண்ட பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

விடுதலைப் போரில் ஈடுபட்ட மாவீரர்களையும் தமிழ் அறிஞர்களையும் கலை வித்தகர்களையும் கொண்ட மாவட்டம் ஈரோடு மாவட்டம். தீரன் சின்னமலை பிறந்த மண் இந்த மண். பேர் தான் சின்னமலை. புகழிலோ இமயமலை என்று சொல்லத் தக்க அளவுக்கு வீரத்தால் ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் தீரன் சின்னமலை. அவரைப் பற்றிய சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

கொங்கு நாட்டு வரிப்பணத்தை எடுத்துக் கொண்டு சங்ககிரிக் கோட்டை அதிகாரியிடம் கொடுப்பதற்காக சென்று கொண்டிருந்தார் ஒரு வரி வசூல் அதிகாரி. அவரை வழி மறித்து "எங்கள் மண்ணில் வரி வசூலிக்க நீங்கள் யார் ?" என்று கேட்டுப் பணப்பையை பறித்துக் கொண்டாராம் தீரன் சின்னமலை.

"பணப் பையை உன்னிடம் பறி கொடுத்து விட்டு நான் மேலதிகாரியிடம் என்ன பதில் சொல்லுவது ?" என்று அந்த வரி வசூல் அதிகாரி கேட்டபோது தீரன் சின்னமலை சொன்னாராம்:–

*"சென்னிமலைக்கும், சிவன் மலைக்கும் நடுவில் உள்ள சின்னமலை வாங்கிக் கொண்டான் என்று சொல்!"*

இவ்வாறு இலக்கிய நயத்தோடு விடுதலை முழக்கம் இட்டவர் தீரன் சின்னமலை.

இப்படிப்பட்ட வீரத்திலும் தீரத்திலும் மிக்க மக்கள் பிறந்த மாவட்டம் ஈரோடு மாவட்டம் ஆகும். இந்த மரபின்

ஆண்டு ஒன்றுக்கு 83.39 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்பதைத் தெரிவித்து ஈரோடு மாவட்டத்திற்கு முழுமையாகப் பயன் அளிக்கும் இந்தத் திட்டம் 2005 – 2006 –ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு, அதனை நானே துவக்கி வைப்பேன் என்பதையும், இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஈரோடு மேட்டுக்கடையில் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திற்கும் இன்றைய தினம் என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈரோடு வாழ் மக்களுக்கு பயன் தரக் கூடிய இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் மொத்தம் 58 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு குடிநீர் திட்டங்களுக்கு நான் அடிக்கற்களை நாட்டியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊரகப் பகுதிகளிலும் சரி, நகரப் பகுதிகளிலும் சரி சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு எங்கள் அரசு மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கிறது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் நெடுஞ்சாலைத் துறையினால் அமைக்கப்பட உள்ள பெருந்துறை – காங்கேயம் சாலையில் 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகின்ற பாலம் – திருப்பூர் – விஜயமங்கலம் சாலையில் 7 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் ஊத்துக்குளியில் அமைக்கப்பட உள்ள ரயில்வே மேம்பாலம் – பெருந்துறை – காங்கேயம் சாலையில் 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில், ஈங்கூரில் அமைக்கப்பட உள்ள ரயில்வே மேம்பாலம் ஆகியவற்றிற்கு இன்றைய தினம் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தில் கொளத்துப் பாளையம் ஊராட்சியில் 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குரங்கன்பள்ளம் ஓடையின் குறுக்கே ஏறத்தாழ 5,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி கிடைக்கும் வகையில் தடுப்பணை கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. காங்கேயம், நம்பியூர், பவானிசாகர், மற்றும் சென்னம்பட்டி ஆகிய இடங்களில் 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 4 ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 பேரூராட்சிகளில் 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 38 மகளிர் பொதுக் கழிவறைகள் கட்ட இந்த விழாவிலே அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி மாவட்டம் முழுவதும் 2 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் 45 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கவும் – 40 இலட்சம் ரூபாய் செலவில் குன்னத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் மற்றும் எக்ஸ்ரே வசதி கொண்ட மேம்படுத்தப் பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 55 இலட்சம் ரூபாய் செலவில் அர்ச்சகர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு இன்று என்னால் அடிக்கற்கள் நாட்டப் பட்டுள்ளன. ஆக இன்றைய தினம் மொத்தம் 280 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு கட்டமைப்புப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### மழைநீர் சேகரிப்பு

முதலாவதாக மழை நீர் சேகரிப்பு. பூமிக்கு அடியிலே உள்ள நிலத்தடி நீர் குறைந்து கொண்டே வருகின்றது. பருவ மழையும் அவ்வப்போது பொய்த்து விடுகிறது. நதிகளும் வறண்டு கொண்டே இருக்கின்றன. அப்படியே நதிகளில் தண்ணீர் இருந்தாலும் அந்த தண்ணீரை பங்கிட்டுக் கொள்வதில் நிறைய பிரச்சினைகள். இப்படி தண்ணீரின் தேவை ஒரு பக்கம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. ஆனால் தண்ணீர் கிடைப்பதோ குறைந்து கொண்டே போகிறது. ஆனால், இயற்கை அன்னை எப்போதும் நம்மை



வஞ்சிப்பது இல்லை. பருவ மழையின் போது பெய்கின்ற மழை நீரை நாம் அனைவரும், நமது இல்லங்களில் நாம் பணி புரிகின்ற கட்டடங்களில், குளம், குட்டைகள், ஏரிகள், ஆகியவற்றில் எல்லாம் சேகரித்து வைக்க வேண்டும். எனது வீட்டில் கூட மழை நீரை சேமிக்கும் அமைப்பை நான் ஏற்படுத்தி இருக்கிறேன். மழை நீர் வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடி கடலில் வீணாகக் கலப்பதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. இருக்கின்ற ஏரிகளை எல்லாம் தூர் வாரி நிறைய மழை நீரை சேமிக்க வேண்டும். குளம், குட்டைகள், ஏரிகள் மூலம், ஆங்காங்கே தண்ணீரைச் சேகரிக்க வேண்டும். இப்படிச் செய்தால் நிலத்தடி நீர் பெருகும். நிலத்தடி நீர் பெருகினால், தண்ணீரின் மட்டம் உயரும். இதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் தமது விளை நிலங்களில் நல்ல முறையில் விவசாயம் செய்யலாம். அதன் மூலம் நமது நாட்டின் பொருளாதாரம் செழிக்கும்.

*"வரப்பு உயர நீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயரக் குடி உயரும்*
*குடி உயரக் கோன் உயர்வான்"*

என்று அன்றே நீரின் பெருமை பற்றி ஔவையார் சொல்லி இருக்கிறார். அதற்கேற்ப இங்கே பெருந்திரளாகக் கூடியிருக்கின்ற உங்கள் அனைவரையும் – மழை நீரைச் சேமியுங்கள், அதன் மூலம், நமது பொருளாதாரத்தை வளப்படுத்த உதவிடுங்கள் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

தமிழகத்தில் நான் கடந்த முறை 1991இல் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றவுடன் 1992இல் மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தமிழ்நாட்டில் அமைக்க ஏற்பாடு செய்தேன். அன்று நான் ஊன்றியது, சிறு விதை தான். ஆனால், இன்று தமிழ்நாட்டில் மொத்தம் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 583 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம் 19 இலட்சத்து 77 ஆயிரத்து 274 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது 255.49 கோடி ரூபாய் சேமிப்புடன் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி பெரிய ஆல விருட்சமாக இந்த இயக்கம் வளர்ந்து உள்ளது. இந்த இயக்கம் இத்தோடு நின்று விடக் கூடாது. தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகப் பெருமளவில் சேர வேண்டும் – சேர்ந்து பொருளாதார முன்னேற்றம், சமுதாய முன்னேற்றத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சேமிப்பினைக் கூட்டி சிறு தொழிலில் ஈடுபட்டு பொருளை ஈட்ட வேண்டும். அதன் மூலம் உங்களது வீட்டையும் தமிழகத்தையும் வளப்படுத்த உழைக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்களில் இதுவரை சேராமல் உள்ள அனைத்து பெண்களும் மென்மேலும் சேர்ந்து பொருளாதார ரீதியில் பயன் பெற முன்வர வேண்டும் என்பதே எனது பேரவா.

பெண்கள் சுய உதவிக்குழுக்களில் சேர்ந்தால் நீங்கள் யாரையும் தேடிச் சென்று போக வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் உங்களைத் தேடி வருவார்கள். ஆரம்பத்தில் இந்த சுய உதவிக் குழுக்களை நான் ஏற்படுத்தியபோது அந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்த மகளிருக்கு கடன் வழங்க வங்கிகள் எல்லாம் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால் இன்றைக்கு நிலைமையே தலைகீழாக மாறியிருக்கிறது. இன்றைக்கு இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் கோடிக் கணக்கான ரூபாய்கள் சேமிப்பாக இருப்பதைப் பார்த்து, இந்த வங்கிகளே அவர்களைத் தேடிச் சென்று உங்களிடம் இருக்கின்ற சேமிப்பு நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள் என்று கோருவதற்காக மகளிரைத் தேடி அவர்கள் பின்னால் செல்கிறார்கள். ஆகவே தமிழகத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து சொந்த கால்களில் நின்றால் இந்த உலகமே உங்கள் காலடிகளில் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவிலே இன்றைய தினம் மொத்தம் 21,904 பயனாளிகளுக்கு 13 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிலே பல துறைகளின் சார்பாக ஆயிரக் கணக்கான நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்ற போதிலும் அவற்றில் முக்கியமான சிலவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையின் கீழ் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்புடைய விதைகள், பழக் கன்றுகள், எண்ணெய் வித்துக்கள், விநியோக மானியம் போன்றவை மொத்தம் 1,000 பேருக்கும் – ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 4,662 மகளிருக்கு 2 கோடியே 76 இலட்சம் ரூபாய் கடன் உதவியும் – தமிழ்நாடு மகளிர் மேம்பாடு திட்டத்தின் கீழ்

மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 11,095 பெண்களுக்கு 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் – மாவட்ட தொழில் மையத்தின் சார்பாக 725 பேருக்கு 3 கோடியே 38 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடன் உதவியும் – கூட்டுறவுத் துறையின் சார்பாக 3,375 பேருக்கு 2 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதியில் தொழில் துவங்க கடன் உதவியும் வழங்கப்படுகின்றது.

இவை மட்டுமின்றி, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 151 பெற்றோர்களுக்கு 46 இலட்சம் நிதி உதவியும் – 100 பேருக்கு, 1 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தையல் இயந்திரங்களும் – 270 பேருக்கு

அரசு வழங்க இருக்கின்ற இந்த நலத் திட்ட உதவிகளை எல்லாம் பெற்றுக் கொண்டு இங்கே கூடி இருக்கின்ற பயனாளிகள் ஒவ்வொருவரும் தாங்கள் ஏற்கெனவே ஈடுபட்டு வருகின்ற தொழிலை அரசின் உதவியோடு நல்ல முறையில் அபிவிருத்தி செய்து தமது வாழ்க்கையில் நல்ல வளர்ச்சியை பெற வேண்டும் என்று அன்போடு வாழ்த்தி மகிழ்கிறேன் .

என் அன்புக்குரிய ஈரோடு மாவட்ட மக்களே! இந்த இனிய விழாவிலே உங்களை எல்லாம் சந்திப்பதற்கும் எனது கருத்துக்களை உங்களிடையே எடுத்துக் கூறுவதற்கும் இன்று கிடைத்த நல்வாய்ப்பை எண்ணி நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.



வருவாய்த் துறை சார்பாக வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்படுகின்றன என்பதை எண்ணி நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன். இந்த இனிய விழாவில் இங்கே பெருந்திரளாக ஆர்வத்தோடு கூடி இருக்கின்ற 21,904 பயனாளிகளுக்கும் நானே, அவர்களுக்கு உரிய உதவிகளை வழங்கி மகிழ வேண்டும் என விரும்பினாலும் நேரம் குறைவாக இருப்பதால் இந்த விழா மேடையில் 15 பேருக்கு மட்டும் எனது கரங்களாலேயே உதவிகளை வழங்க இருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் இதே பந்தலில் அரசு அதிகாரிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உரிய உதவிகளை சேர்ப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவை, சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக் களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

– 12.02.2003 அன்று
...ல் நடைபெற்ற அரசு வி...
...மிகு தமிழக முதலமை...
... ஜெ ஜெயலலிதா அ...
ஆற்றிய உரை.





# அடித்தளத்து மக்களின் மேம்பாட்டுக்காக திருவள்ளுவர் பல்கலைக்கழகம்!

வேலூரில், 4–2–2003 அன்று
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
வளர்ச்சித் திட்டப் பணிகள்,
புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும்
புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழாவில்
ஆற்றிய உரை.

"சீர்மிகு வேலூரில் நடைபெறும் இந்தச் சிறப்புமிகு விழாவில் கலந்து கொண்டு எனது அன்புக்குரிய மக்களாகிய உங்கள் அனைவரையும் காண்பதிலும், கண்டு சில எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பண்டைய தமிழகத்தில் தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவட்டம் வேலூர்!

1857–ஆம் ஆண்டு பராக்பூரில் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்தை முதல் சுதந்திரப் போராட்டம் என்று சரித்திர ஆசிரியர்கள் பாராட்டுகிறார்கள். ஆனால், அதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே, வேலூரில் ஒரு சிப்பாய்க் கலகம் நடைபெற்றது. 1806–ஆம் ஆண்டு, வேலூர் கோட்டையில் நடைபெற்ற அந்தச் சிப்பாய்க் கலகத்தில் வேலூர் நகர ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆகவே, நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலேயர்களை விரட்டி அடிக்க வித்திட்ட "சிப்பாய்க் கலகம்" முதன் முதலாக நடைபெற்றது, வேலூரில் தான் என்ற வரலாற்றுத் தகவல் நமக்கு எல்லாம் பெருமை அளிக்கக் கூடிய ஒன்று.

அது மட்டுமல்லாமல் 1947 ஆகஸ்ட் 15–ஆம் நாள் டெல்லி செங்கோட்டையில் பட்டொளி வீசிப் பறந்த மூவண்ணக் கொடியை நெய்தும் செய்தும் அளித்த மாவட்டம், வேலூர் மாவட்டம் தான். குடியாத்தம் HINDUSTHAN FABRICS என்ற நிறுவனத்தால் தான் அது நெய்யப்பட்டிருந்தது.

## வேலூர் - வீரமும் வெற்றியும்

அந்த வீர வரலாற்றைத் தொடரும் வகையில் இந்தியத் திருநாட்டை நாளும் காத்திடும் முப்படைகளுக்கும், வீரர்களை விரும்பித் தரும் தாய்மார்கள் நிரம்பிய மாவட்டம் வேலூர்.

வேலூர் என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது வேல் "வெல்" என்ற சொல்லில் இருந்து உருவானது தான் "வேல்" என்று சொல்லுவார்கள். ஆகவே, வேலூர் என்றால் வேலும் வேல் என்றால் வெற்றியும், வெற்றி என்றால் வீரமும், நமக்குத்



தொடர்ச்சியாக இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு ஏராளமான வீரர்களை ஈரோடு வழங்கியிருக்கிறது.

கைத்தறி நெசவிலும் விசைத்தறி நெசவிலும் சிறந்து விளங்குவது இந்த மாவட்டம். துணி சந்தையில் ஈரோடு இந்தியாவிலேயே ஐந்தாம் இடம் வகிக்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமை தரத்தக்க செய்தியாகும். பவானி ஜமக்காளமும், சென்னிமலை படுக்கை விரிப்பும் அதாவது பெட்ஷீட்டும், ஈரோட்டு மஞ்சளும், இந்தியா முழுவதும் புகழ் பெற்று விளங்குகின்றன.

71 பெரிய தொழிற்சாலைகளையும் 1,816 சிறிய தொழிற்சாலைகளையும் 5,020 குடிசைத் தொழில்களையும் கொண்ட ஈரோடு மாவட்டம் தொழில் வளத்திலும் சிறந்து விளங்குகிறது என்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடை கிறேன். கோவை மாவட்டத்திலிருந்து பிரிந்து 17.9.1979 முதல் தனி மாவட்டம் ஆக தனிப் புகழ் பெற்று விளங்கும் ஈரோடு மாவட்டம் பல்வேறு துறைகளில் தமிழகத்திற்கே முன்னோடி மாவட்டமாகத் திகழ்ந்து வருவது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

தமிழகத்தில் நெல்லைத் தமிழும், செட்டி நாட்டுத் தமிழும், மதுரைத் தமிழும், தஞ்சைத் தமிழும், தனித் தன்மை பெற்று விளங்குவது போல கொங்குத் தமிழும், தனக்கே உரிய தனித் தன்மையோடு விளங்குகின்றது. இவற்றை எல்லாம் வட்டார வழக்கு மொழிகள் Local Dialects என்று அழைப்பார்கள். இந்த வண்ணத் தமிழ் வகையிலே, மரியாதைத் தமிழ் என்று அழைக்கத் தக்க தமிழ் கொங்குத் தமிழ் தான் என்பதை நான் கூறவும் வேண்டுமா! ஏனுங்க.

கொங்கு என்றால் தமிழில் தேன் என்று பொருள். கொங்குத் தமிழ் என்றால் தேன்தமிழ். தேன் தமிழ் இனிக்கத்தானே செய்யும்! ஏனுங்க.

கொங்கு மக்கள் மரியாதை தெரிந்த மக்கள். அத்தகைய மக்களைச் சந்திக்க வெறுங் கையோடு வரக் கூடாது என்று கை நிறையத் திட்டங்களோடு ஈரோடு மாவட்டத்துக்கு இன்று நான் வந்திருக்கிறேன்.

முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்

இந்த இனிய விழாவில் ஈரோடு மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 424 கோடியே, 65 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகளை உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பாக இன்றைய தினம் மொத்தம் 128 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 11,066 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைகள் ஒவ்வொன்றும், தமக்கு அளிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி உள்ளதை அடுத்து இன்று இந்த இனிய விழாவிலே அவற்றை எல்லாம் திறந்து வைத்துள்ளேன். இந்த மாவட்டத்து மக்களின் குடிதண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இன்றைய தினம் மொத்தம் 29 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் இங்கே என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அடுத்து, ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 6,479 தொகுப்பு வீடுகள் – 1.02 கோடி ரூபாய் மதிப்புடைய 171 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் – கிராமிய சாலைகள் அபிவிருத்தித் திட்டம், NABARD திட்டம், மாநில நிதிக் குழு திட்டம், ஆகியவற்றின் கீழ் முடிக்கப்பட்டுள்ள பல்வேறு சாலைப் பணிகள் ஆகியவை உள்ளிட்ட மொத்தம் 66 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 10,480 முடிவுற்ற பணிகள் இந்த விழாவிலே என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் மொத்தம் 6 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 6 பாலங்கள் – 16.8 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஊரகச் சாலைகள் ஆகியவற்றை இன்றைய தினம் இந்த விழாவில் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கோபிசெட்டிபாளையத்தில் தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்காக 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 40 வீடுகளை இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன்.

3 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு துறைகளின் கீழ், மொத்தம் 68 கட்டடங்கள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவன் மற்றும் மாணவியர் தங்கும் விடுதிகள் – பல்வேறு பேரூராட்சிகளிலும் 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மகளிர் சுகாதார வளாகங்கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், வணிக வளாகங்கள், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவை இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நகராட்சிகளைப் பொறுத்த வரையில் குறிப்பாக ஈரோடு நகராட்சி மத்தியப் பேருந்து நிலையத்தில் பயணிகளின்





வசதிக்காக புதிய வணிக வளாகம் மற்றும் பயணிகள் தங்கும் இடம் மற்றும் பேருந்து நிலையத்தின் அனைத்துப் பகுதிகளிலும் concrete–உடன் கூடிய சிமெண்ட் தளம் ஆகியவை நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அதே போன்று கோபிசெட்டிபாளையத்திலும் நகராட்சி பேருந்து நிலையத்தில் concrete – உடன் கூடிய சிமெண்ட் தளம் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றையும் இந்த மாவட்டத்தில் மொத்தம் உள்ள 5 நகராட்சிகளிலும் 6 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகளையும், இந்த விழாவிலே திறந்து வைத்ததில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் மொத்தம் 4 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு புதிய கூடுதல் மருத்துவ வசதிகளான நவீன துணிகள் சலவையகம், அறுவை சிகிச்சைப் பிரிவுக்கான குளிர்பதன வசதி, மருந்துகள் வைப்பதற்கான புதிய கிடங்கு (Godown), கூடுதல் படுக்கை வசதிகள், புதிய சித்த மருத்துவப் பிரிவுகள், புதிய வெளி நோயாளிகள் பிரிவு ஆகியவை இந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளில் இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் இந்தச் சீர்மிகு விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மனத் திருப்தி அடைகிறேன்.

மேலும், தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் பயன்கள் மாவட்ட மற்றும் ஊரக கிராமப்புற மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற லட்சிய நோக்கில் ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 10 சார்பதிவாளர் அலுவலகங்களை இணைக்கும் 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள Reginet சேவை மையம் என்னால் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்திலேயே சென்னைக்கு அடுத்து இந்த வாய்ப்பு இந்த மாவட்டத்திற்குத்தான் கிடைத்து உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இன்று உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இம்மையத்தில் கணினிமயமாக்கப்பட்ட 10 சார் பதிவாளர் அலுவலகங்களின் வில்லங்கச் சான்றுகளையும் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கணினிமய மாக்கப்பட்ட 10 சார் பதிவாளர் அலுவலகங்களில் ஏதாவது ஓர் அலுவலகத்தில் இருந்தும் ஏனைய 9 சார் பதிவாளர் அலுவலகங்களின் வில்லங்க சான்றுகளையும் பெற வசதி செய்யப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி காங்கேயத்தில் வசிக்கும் ஒருவருக்கு அந்தியூர் சார் பதிவாளர் அலுவலக எல்லைக்குள் சொத்து இருந்தால் மேற்படி சொத்துக்கு வில்லங்க சான்று பெற அந்தியூர் சார்பதிவாளர் அலுவலகம் செல்லாமலேயே காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகத்திலேயே வில்லங்க சான்று பெறலாம் அல்லது Reginet சேவை மையத்திலோ அல்லது ஏனைய 9 அலுவலகங்களில் ஏதாவது ஒன்றிலோ வில்லங்க சான்று பெறலாம்.

அடிக்கல் நாட்டுதல்

ஈரோடு மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக இன்றைய தினம் மொத்தம் 280 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மொத்தம் 348 கட்டமைப்புப் பணிகளுக்கு என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே இவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துக் கூற முடியாவிட்டாலும் இவற்றில் ஒரு சில முக்கியத் திட்டங்களைப் பற்றி, நான் விளக்கிக் கூற விரும்புகின்றேன்.

முதலாவதாகப் பவானி ஆற்றின் குறுக்கே வெண்டிபாளையத்தில் பவானி கட்டளைக் கால்வாய்–II, என்ற 30 மெகாவாட் திறன் கொண்ட நீர் மின் திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைய தினம் அடிக்கல் நாட்டி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே மின்சார உற்பத்தியை மேம்படுத்தி அதன் மூலம் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டு தமிழகத்தில் ஒட்டு மொத்த பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்துவதை எனது முக்கியமான கடமையாக நான் கருதுகிறேன். அந்த வகையில் இந்தப் புதிய பவானி கட்டளைக் கால்வாய், நீர் மின் திட்டம்–II,

தொடர்ந்து நினைவுக்கு வருகின்றன. இந்த வேலூர் மாவட்டம், வீரம் செறிந்த மண்! வீரர்கள் பலர் பிறந்த மண்! அந்த வீரம், இந்த மண்ணில், இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக வேலூர் பகுதி இந்திய ராணுவத்திற்கு, வீரர்களை நிறைய கொடுத்துக் கொண்டே இருக்கிறது.



எல்லை காக்கப் போராடும் நமது வீரர்களின் நலத்திலும், அவர்களின் குடும்பங்களின் நலத்திலும் நான் பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சியாக இருந்த போதே கார்க்கில் போரில் உயிர் நீத்த தமிழகத்தைச் சேர்ந்த, 13 ராணுவ வீரர்கள் குடும்பத்தினருக்கு, 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அறக்கட்டளை யிலிருந்து நான் வழங்கினேன். அதைப் போலவே, நான் முதலமைச்சரான பின்னரும், ராணுவ வீரர்கள் மரணமடைந்தால் அவர்களுக்குச் சிறப்புச் செய்வதிலும் அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி செய்வதிலும், மற்றவர்களைக் காட்டிலும் நான் முன்னணியிலேயே இருக்கிறேன் என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் ஒருவர் மரணமடைந்தால், 5 லட்சம் ரூபாய் தொகையை உடனடியாக அவருடைய குடும்பத்துக்கு வழங்க, நான் உத்தரவிட்டு அவ்வாறு இந்த அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் வீர மரணம் அடைந்த ராணுவ வீரரின் இல்லத்திற்குச் சென்று நேரில் இறுதி மரியாதை செலுத்த அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளருக்கும், உத்தரவிட்டு உள்ளேன். மரணமடைந்த வீரருக்கு அஞ்சலி செலுத்த என் சார்பில் அமைச்சர் ஒருவரையும், நான் அனுப்பி வைக்கிறேன். இவை மட்டுமின்றி, அந்த வீரரின் வாரிசுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும், அரசு ஆணை உடனுக்குடன் வழங்கப் படுவதையும், நான் உறுதி செய்துள்ளேன்.

நாட்டுப் பற்றில் நாடு காக்கும் வீரர்களின் நலனைப் போற்றுவதில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எப்போதும் யாரைக் காட்டிலும் முன் நிற்கிறேன், என்பதை வேலூர் மக்களாகிய உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதில் மன நிறைவு அடைகிறேன்.

வண்ணமிகு இவ்விழாவில் உங்கள் அனைவரையும் காண்பதற்காகவும், எனது கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காகவும், வேலூர் நகருக்கு வந்துள்ள நான் வெறும் கையோடு வரவில்லை. என்னோடு மொத்தம், 133 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்டங்களை உங்கள் அனைவரின் பயன்பாட்டிற்காகவும் கொண்டு வந்திருக்கிறேன்.

பொதுவாகவே, அரசின் எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அதன் பயன் அதிவிரைவாக, சிந்தாமல், சிதறாமல், மக்களைச் சென்று அடைய வேண்டும் என்பதில் நான் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன். இது போன்று, மாவட்ட தலைநகரங்களுக்கு வந்திருந்து அங்கே பல்லாயிரக் கணக்கில் கூடியிருக்கும் உங்களை எல்லாம் நேரில் சந்தித்து, பல்வேறு திட்டங்களும், அவற்றின் பயன்க்ளும், உங்களை நேரடியாக சென்று அடைவதை காண்கின்ற போது, எனக்கு மக்கள் ஆட்சித் தத்துவத்தின் மகத்துவம் புரிகின்றது. எங்கள் மீது நம்பிக்கை வைத்துத் தமிழ்நாட்டைக் கட்டி கர்க்கும் ம்ாபெரும் பொறுப்பை என்னிடம் வழங்கியதற்காக நான் செலுத்துகின்ற கைம்மாறு இதுவே என்றும் நான் கருதுகிறேன்.



ஆனால், தமிழகத்தின் பொதுப் பிரச்சினை களுக்கு ஒரு தீர்வு காண்பதற்கு அரசு முயற்சி செய்கிற போது அந்தப் பொதுவான மக்கள் பிரச்சினைகளில் கூட, சிலர் அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது வேதனையான ஒரு விஷயமாகும். ஒற்றுமை இல்லாத எந்த சமுதாயமும், வெற்றி பெற முடியாது.





இந்தியா அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்ததற்கே இந்த ஒற்றுமை இல்லாத தன்மை தான் காரணம். இந்த நேரத்தில், இந்திய சரித்திரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

பாபர் இந்தியா மீது படை எடுத்து வந்தார். சிந்து நதியின் அந்தக் கரையில் பாபருடைய படைகளும், இந்தக் கரையில் இந்தியப் படைகளும், முகாம் இட்டு இருந்தன. ராத்திரி நேரம் இந்தியாவை எப்படி வெற்றி கொள்வது என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே, பாபர் உலவிக் கொண்டிருந்தார். எதிர்க் கரையைப் பார்த்துக் கொண்டே, உலவி கொண்டிருந்த பாபர், திடீர் என்று நடப்பதை நிறுத்தி விட்டு, அங்கே நடப்பதை பார்த்தார்.

கொஞ்ச நேரம் கழித்துப் பக்கத்தில் இருந்த ஒரு படைத் தளபதியை அழைத்து, "எதிர்க் கரையில் ஆங்காங்கே, தனித்தனியாக விளக்குகள் எரிகிறதே? என்ன காரணம்?" என்று பாபர் கேட்டார். அதற்கு அந்தப் படைத் தளபதி, "இந்தியப் படைகளுக்கு இப்போது, இரவு சாப்பாட்டு வேளை. இந்தியாவில், ஒரு ஜாதியினர் சமைத்த சாப்பாட்டை, இன்னொரு ஜாதியினர் சாப்பிட மாட்டார்கள். அதனால், தனித் தனியாக ஜாதிவாரியாக, படை வீரர்கள் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்," என்று பதில் சொன்னாராம்.

இந்த பதிலைக் கேட்ட உடன் பாபர் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். "இந்தியாவைப் பிடித்து விட்டோம்!" என்று முழக்கம் இட்டார்.

"இன்னும் சிந்து நதியைக் கடக்கவே இல்லையே? அதற்குள் இந்தியாவைப் பிடித்து விட்டோம் என்று எப்படி சொல்லலாம்?" என்ற சந்தேகத்தைத் தயங்கித் தயங்கி படை தளபதி கேட்டார். அதற்கு பாபர் பதில் சொன்னார்:– "படை வீரர்கள் கூட ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட மாட்டார்கள். அவர்களுக்குள் உணவு உண்பதில் கூட வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால், அந்த தேசத்தை சுலபமாக வென்று விடலாம்" என்று பாபர் சொன்னாராம்.

இந்தியர் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய சரித்திர நிகழ்ச்சி இது. பின்னர் என்ன நடந்தது என்பதை இந்திய வரலாறு கூறுகிறது. பாபர் இந்தியாவை வென்றார். நாட்டை அடிமைப்படுத்தினார். முகலாய சாம்ராஜ்யத்தை அமைத்தார். அந்த முகலாய சாம்ராஜ்யம் பல நூற்றாண்டுகளுக்கு இந்தியாவை ஆண்டது. அதனை அடுத்து ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆக்கிரமித்து, அவர்களும் நம்மை அடிமைப்படுத்தி, சில நூற்றாண்டுகளுக்கு ஆண்டனர். சுதந்திரப் போராட்ட வீரர்களின் - வீராங்கனைகளின் தியாகத்தால் ஆங்கிலேயர்களை விரட்டி அடித்து, 1947–இல் தான் நம் நாடு சுதந்திரம் பெற்றது.

நம்மை அன்னியர் தோற்கடித்ததற்கும், அடிமைப்படுத்தியதற்கும், நம்முடைய ஒற்றுமை இல்லாமை தான் காரணம்.

அந்த நிலைமை தான் இன்றைய தமிழகத்திலும் நீடிக்கிறது. மக்களின் பொது நலம் குறித்த பிரச்சினைகளில் கூட, நம்மால் ஒற்றுமையாகச் செயல்பட முடியவில்லை என்றால் நாம் எதைத் தான் சாதிக்கப் போகிறோம்?

எதிர்க்கட்சிகள் எதையும் அரசியல் கண் கொண்டு பார்ப்பதையே, வழக்கமாகக் கொண்டு இருக்கின்றன. அரசு எதைச் செய்தாலும், அதை எதிர்ப்பதையே எதிர்க்கட்சிகள் வழக்கமாகக் கொண்டிருந்தால் மக்களுக்கு எப்படி நன்மை செய்ய முடியும்? இருப்பினும், இத்தகைய இடர்பாடுகளை எல்லாம் மீறி, நிதிப் பற்றாக்குறை போன்ற சிக்கல்களை எல்லாம் மக்கள் சக்தியோடு, திறமையாகக் கையாண்டு எனது தலைமையிலான உங்கள் அரசு மக்கள் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது. பல சாதனைகளைப் புரிந்தும் வருகிறது.

## மழைநீர் சேகரிப்பு மற்றும் மரம் வளர்ப்பு

கால்நடைகளானாலும் சரி, மனிதர்களானாலும் சரி, அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுகின்ற தண்ணீரை நாம் வீணாக்கக் கூடாது. இதற்காக, தொலை நோக்கு சிந்தனையுடன் உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதத்திட்டம் தான், "மழைநீர் சேகரிப்புத் திட்டம்".

அவ்வப்போது பருவமழை தவறுவதால் குடிநீர் தேவைக்கு நாம் அல்லல் படுகின்றோம். இந்த அவல நிலையை மாற்றி, வான் தந்த மழை நீரை முறையோடு சேமித்து நாம் வாழ்வதோடு, நமது சந்ததியினரும் மழை நீரின் அவசியம் பற்றி உணர்ந்து வாழ நாம் இப்போதே அதற்கு, அடித்தளம் போட்டாக வேண்டும். மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுத்து முறையாக சேமித்து, பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும். குடிநீர் ஆதாரமும் பெருகும்.

நீர் வளம் பெருகினால், நில வளம் பெருகும். நில வளம் பெருகினால், உலகம் செழிக்கும், என்ற அடிப்படையில் தான்

இதனை மக்கள் இயக்கமாக ஆக்க நான் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். அனைத்துக் கட்டடங்களிலும் குடிசைகள் என்றாலும், அடுக்குமாடி குடியிருப்புகள் என்றாலும், அரசு கட்டடங்கள் என்றாலும், அங்கெல்லாம் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த அரசு வலியுறுத்தி வருகிறது. அரசின் இந்த ஏற்பாட்டினால் இதுவரை, 42,627–க்கும் மேலான அரசு கட்டடங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நானே, அதை செயல்படுத்துவதில் முன் உதாரணமாக முன்னின்று எனது வீட்டிலேயே இதனைத் தொடங்கியுள்ளேன் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

## மரங்கள் வளர்ப்போம்

மழை பெய்யும் போது மழை நீர் சேகரிப்பது என்பது ஒரு புறம் இருக்க, நல்ல மழை பொழிய வேண்டும் என்றால், அதற்கு எது ஆதாரம் என்பதையும், நாம் புரிந்து கொள்ள வேண்டும். மரங்களே மழைக்கு ஆதாரம். எனவே,

"மரங்களை வளர்ப்போம்!
மழையினைப் பெறுவோம்".

இந்த நேரத்தில் மரங்கள் வளர்ப்பது எவ்வளவு முக்கியம் என்பது பற்றி ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வருகிறது.

இந்தியாவின் இணையற்ற விஞ்ஞானியாக விளங்கியவர், டாக்டர் ஹோமி பாபா (Homi Bhaba) அவர்கள்.

அணுசக்தி விஞ்ஞானியாக விளங்கிய அவர், ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த ஊக்கத்தால் அணுசக்தி ஆராய்ச்சி மையத்தைத் தோற்றுவித்தார். இன்றைக்கும் அது பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையம் – Bhaba Atomic Research Centre, என்ற பெயராலேயே, டிராம்பேயில் சிறப்பாக இயங்கி கொண்டிருக்கிறது.

டிராம்பேயில் அணுசக்தி மையத்தை மட்டுமல்லாமல், அதனைச் சுற்றியிருக்கும் நிலப்பரப்பையும் அழகுபடுத்தியவர் ஹோமிபாபா அவர்கள் தான்.

அந்த ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்படும் போது ஒரு சம்பவம் நடந்தது. ஆராய்ச்சி மையத்திற்குள் ஒரு முக்கியமான இடத்தில், சாலை போடுவதற்கு ஒரு மாமரம் தடையாக இருந்தது. அந்த மாமரத்தை வெட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கட்டடம் கட்டும் பொறுப்பில் இருந்த, என்ஜினியர் சொல்லிவிட்டார்.

இதைக் கேட்டு Homi Bhaba அவர்கள் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. 100 ஆண்டுக்கும் மேலாக இருக்கும் அந்த மாமரத்தை வெட்டக் கூடாது என்று உறுதியாகச் சொன்னது மட்டுமல்லாமல், அந்த மாமரத்தை வெட்டாமல் எவ்வாறு சாலை அமைப்பது என்பது பற்றிச் சிந்தித்து, திட்டமிட்டு, அதற்கான வரைபடத்தை அணுசக்தி விஞ்ஞானி பாபா அவர்களே, வரைந்து கொடுத்தார். இன்றைக்கும் அந்த மாமரம், டிராம்பே அணுசக்தி நிலையத்தில், கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது.



அது அணுசக்தி விஞ்ஞானி பாபாவின் அன்பின் அடையாளம். ஒரு மரம் எவ்வளவு முக்கியம் என்பதை நமக்கு உணர்த்தும் வரலாற்று நிகழ்ச்சி இது!

மாமேதைகள் கூட மரங்களைக் காக்க மாபெரும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆனால் மரங்களின் மதிப்பை உணராமல் அவற்றை வெட்டி வீழ்த்திக் கொண்டிருக்கும் அவலமும், நம் நாட்டில் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கிறது.

மரங்கள், மனித குலத்துக்குச் செய்யும் நன்மைகள், அற்புதமானவை.

அந்த மரம், செடி, கொடிகளைக் காப்பது, நமது மாபெரும் கடமை.

எனவே, நம்மைக் காக்கும் மரங்களை நாம் காப்போம் என்று உறுதியெடுத்துக் கொள்வோம்.



## மகளிர் சுயஉதவிக்குழுக்கள்

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 இலட்சத்து 19 ஆயிரத்து 583 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம், 19 இலட்சத்து 77 ஆயிரத்து 274 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து தற்போது 255.49 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது.

இன்னும் அதிக அளவில் பெண்கள் இத்தகைய சுய உதவிக் குழுக்களை அமைக்க முன் வர வேண்டும் என்பதே எனது பேரவா.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்றுத் தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய லட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத் தான், இத்தகைய மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை முதன் முதலாக நான் 1992–இல் தொடங்கிய போது ஆரம்பத்தில் அந்தக் குழுக்களில் உள்ள மகளிருக்கு கடன் வழங்க வங்கிகள் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால், இன்றைய தினம் இந்தச் சூழ்நிலை தலைகீழாக மாறியுள்ளது. தமிழகமெங்கும் உள்ள இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம், பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து, இன்றைக்கு வங்கிகளே தங்களிடம் அந்தச் சேமிப்பு நிதியை வைப்பு நிதியாக செலுத்தி வைக்குமாறு கோருவதற்காக, இந்த மகளிரைத் தேடிச் செல்லும் நிலைமை இன்றைக்கு உருவாகி இருக்கிறது.

இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தில் சேர மென்மேலும் பெண்கள் அதிக அளவில் முன் வர வேண்டும் என்பதே எனது பேரவா.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்ற சிறப்பினைப் பெற்றது நமது தமிழ்நாடு. அந்த வள்ளுவப் பெருமான், நமக்குத் தந்த திருமறை, உலகப் பொதுமறையாம் திருக்குறள். திருக்குறள் ஒரு நாட்டுக்கு, ஒரு மொழிக்கு, ஓர் இனத்துக்கு மட்டும் சொந்தமானது அல்ல. அது உலகம் முழுமைக்கும் சொந்தமானது.

"பிறப்பால் எல்லாரும் சமம்" என்பது தான், திருவள்ளுவரின் சீரிய சிந்தனை என்பதை நாம் அறிவோம்.

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்று தான் அற்புதமான முறையில் மக்களின் சமத்துவத்தை திருவள்ளுவர், திருக்குறளில் கூறி இருக்கிறார். திருவள்ளுவருக்குப் பின், இடைக் காலத்தில் ஏற்பட்ட சாதி பேதங்களை நீக்கி ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த அரசு – உங்கள் அன்புச் சகோதரியின் அரசு – பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற தலித்துகள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆகியோரின் நிலையை உயர்த்த, பொருளாதார உதவிகள் வழங்குவதோடு மட்டும் நின்று விடாமல் அவர்களுடைய பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்கான தீர்வுகளை, ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வி வழிமுறைகள் வாயிலாகக் கண்டறிவதற்கு வேலூரில் திருவள்ளுவர் பெயரால் ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்க நான் ஏற்பாடு செய்தேன். இந்தத் திருவள்ளுவர் பல்கலைக்



கழகம் மற்ற பல்கலைக்கழகங்களைப் போல் பட்டங்களை வழங்குவதற்காக மட்டும் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்ல. சமூகத்தின் கீழ்த்தளத்தில் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவும், அந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் தீர்வுகளை வழங்குவதற் காகவும் உருவாக்கப்பட்டதே திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மகளிர் நலனுக்காக எப்படி கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டதோ, அப்படி தலித்துகள் மற்றும் அடித்தளத்து மக்களின் மேம்பாட்டுக்குத் துணை புரிவதற்காக உருவாக்கப்பட்டதே வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக் கழகம் ஆகும்.

முதன் முதலாக இப்படி ஒரு பல்கலைக்கழகத்தை அடித்தளத்து மக்களுக்காகவே அமைத்திருப்பது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் என்பதை மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இன்றைய தினம் மொத்தம் 65 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, பல்வேறு துறைகளைச் சார்ந்த, 2629 முடிவுற்ற திட்டப் பணிகளைத் துவக்கி வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக, நிறைவு செய்யப்பட்ட 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 7 பாலங்களையும் – 1 கோடியே 34 இலட்சம் மதிப்புடைய 10.4 கி.மீ. நீளமுடைய 3 சாலைகளையும், இங்கே திறந்து வைத்துள்ளேன். மேலும், ஊரக வளர்ச்சித் துறையினால் "கிராமியச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்" கீழ் அமைக்கப்பட்டுள்ள, மொத்தம் 6 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 66 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளையும் இங்கே திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

## குடிநீர் விநியோகத்தில் தீவிரம்

பொதுப்பணித் துறையின் கட்டடப் பிரிவின் சார்பாக, கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, மாவட்டத்தின் பல பகுதிகளில் அமைந்துள்ள 16 கட்டடங்கள் இன்றைய தினம் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில், குறிப்பாக, 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொதுப்பணித்துறைக்கென்றே கட்டப்பட்டுள்ள, அலுவலக

வளாகத்தை திறந்து வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 ஆதிதிராவிடர் மாணவ–மாணவியருக்கான விடுதிகள் – 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டு கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை உதவி மையம் ஆகியவற்றையும் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மகளிருக்கான 234 சுகாதார வளாகங்கள் உள்ளிட்ட, 11 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் மிகவும் முக்கியமான குடிநீர் விநியோகத்தைப் பொறுத்த வரையில், எங்களது அரசு, தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றது என்பதற்கு இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ள ஊரக மற்றும் நகரப் பகுதிகளைச் சார்ந்த, மொத்தம், 35 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 902 கிராம மற்றும் நகர குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளே சான்றாகும். குறிப்பாக, பேரணாம்பட்டு பேரூராட்சி, திருப்பத்தூர் நகராட்சி, அல்லாபுரம் மற்றும் தொரப்பாடி பேரூராட்சிகள், வாணியம்பாடி நகராட்சி, ஆகிய பகுதிகளில் நிறைவு செய்யப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் நிச்சயமாக இப்பகுதி வாழ் மக்களுடைய தாகத்தை முழுமையாகத் தீர்த்து வைக்கும் என்பதை எண்ணி நான் மிக்க மனநிறைவு அடைகிறேன்.

### மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம்

இந்த இனிய விழாவிலே, மொத்தம் 61 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைய உள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த மொத்தம் 36 முக்கியமான திட்டப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, வேலூர் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவ கல்லூரிக்காக பென்னாத்தூரில் அமைக்கப்பட உள்ள 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை – திருப்பத்தூர் – குடியாத்தம் நகரங்களில், 40 இலட்சம் ரூபாய் செலவில் 2 தீயணைப்பு நிலையங்கள் – அத்திதாங்கல், கரிக்கல்தாங்கல் சாலையில், 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள மேம்பாலம் – குடியாத்தம் பேருந்து நிலையத்திலும், வேலூர் நகரிலும், 85 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள புதிய வணிக வளாகங்கள் ஆகியவற்றுக்கான அடிக்கற்கள், இந்த விழாவில் நாட்டப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, குடியாத்தம் வட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே 32 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள நீர்த்தேக்கத் திட்டம் – வாணியம்பாடி வட்டத்தில் வெலக்கல் – காணார் ஆற்றின் குறுக்கே 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள நீர்த்தேக்க திட்டம், ஆகிய இரண்டு திட்டங்களுக்கும் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக, மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம், குடியாத்தம் வட்டத்திற்கு 2,780 ஏக்கர் கூடுதல் பாசன வசதியையும், 2,350 டன்கள் கூடுதல் உணவு உற்பத்தியும் கிடைத்திட வழி வகை செய்யும். அதே போன்று, வெலக்கல் – காணார் நீர்த்தேக்கத் திட்டத்தினால், வாணியம்பாடி வட்டத்திற்கு 1200 ஏக்கர், கூடுதல் பாசன வசதி வழங்குகின்ற அதே நேரத்தில், ஏறத்தாழ 650 டன்கள், கூடுதல் உணவு உற்பத்தியையும் உறுதி செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மொத்தம் 13 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் சாத்தூர் மற்றும் 12 வழியோரக் குடியிருப்புகள், ஆம்பூர் நகராட்சி, ஒடுக்கத்தூர் பேரூராட்சி, ஜோலார்பேட்டை பேரூராட்சி, ராணிப்பேட்டை நகராட்சி, மற்றும் மேல்விஷாரம் பேரூராட்சி, ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட உள்ள கூட்டுக் குடிநீர் திட்டம், குடிநீர் அபிவிருத்தித் திட்டம், மற்றும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஆகியவற்றுக்கான அடிக்கற்களை இங்கே நாட்டியதில் நான் உண்மையிலேயே மன நிறைவு அடைகிறேன்.



இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ள இந்தத் திட்டங்கள் எல்லாம் பல்வேறு துறைகளினால் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்யப்பட்டு இந்த மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்காக விரைவில் வழங்கப்படும். அவற்றையும், நானே மீண்டும் இங்கே வந்திருந்து உங்களுக்கு அர்ப்பணித்து மகிழ்வேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### நலத்திட்ட உதவிகள்

இந்த சீர்மிகு விழாவில், இன்றைய தினம் வேலூர் மாவட்ட மக்களின் அனைத்துப் பிரிவினரையும் சென்று அடையும் வண்ணம் 6 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, பல்வேறு அரசுத் துறைகளின் நலத்திட்ட உதவிகள் மொத்தம் 17,164 பயனாளிகளுக்கு, வழங்கப்பட உள்ளன. குறிப்பாக, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 18 பேருக்கும், சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதாரக் கடனுதவி திட்டத்தின் கீழ் 4,770 பேருக்கும், மற்றும் இலவச தையல் இயந்திரங்கள் 51 பேருக்கும், 32 பேருக்கு மூன்று சக்கர வண்டிகள், 2,266 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், 31 பேருக்கு சலவைப் பெட்டிகள், மற்றும் 8,057 விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, நெல் மற்றும் சிறு தானிய விதைகள், உரம் வழங்குதல் ஆகிய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் பேருவகை அடைகின்றேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை, இன்றைய தினம், நானே உங்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரம் குறைவாகவே இருக்கின்ற காரணத்தால், 15 பயனாளிகளுக்கு மட்டும் இந்த உதவிகளை நானே வழங்குகிறேன். இங்கேத் திரளாக குழுமியுள்ள இதரப் பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், உரிய நலத்திட்ட உதவிகளை இப்போதே, இந்த விழாவிலேயே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெற்று, பயனாளிகள் அனைவரும் தமது வாழ்க்கைத் தரத்தை மென்மேலும் உயர்த்திக் கொள்ள "கடின உழைப்பு" என்ற தாரக மந்திரத்தைக் கடைபிடித்து வளங்கள் பலவும் பெற்றிட வேண்டும் என்று உங்கள் அனைவரையும், வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்த விழாவைச் சீரும், சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்". •

# போலியோ இல்லாத தமிழ்நாடு

மக்களின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமானது சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகளே. நோயற்ற சமுதாயமே ஒரு நாட்டை வளமாக்க முடியும். அவ்வகையில் நோய் வருமுன் காப்பதே முக்கியமாகும். அதேசமயம் நோய் பாதிப்பு ஏற்படுமானால் தரமான சிகிச்சை அவசியமாகிறது. இந்த இரண்டையும் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல நல்ல திட்டங்களை, குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்காக உருவாக்கி செயல் படுத்த ஆணையிட்டுள்ளார்கள். கடந்த ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் சுமார் 13 இலட்சம் கருவுற்ற தாய்மார்களுக்கும் 12 இலட்சம் குழந்தைகளுக்கும் இலவசமாகத் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பயனாகக் குழந்தைகளை அச்சுறுத்தும் கொடிய நோய்களான தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், காசநோய், ரணஜன்னி, தட்டம்மை ஆகிய நோய்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டன. இது போன்ற மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு, நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ் நாட்டில் தாய் சேய் நலத்திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்துள்ளார்கள். மேலும் முதலமைச்சரின் 18 அம்ச திட்டத்தில் தடுப்பூசித் திட்டத்தையும் ஒரு அங்கமாக இணைத்து முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. முக்கியமாக இளஞ்சிறார்களை ஊனமடையச் செய்யும் போலியோ நோயை அறவே ஒழிப்பதற்காக தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

### போலியோ நோய் - சில உண்மைகள் :

உலகளவில் 8 நாடுகளைத் தவிர ஏறக்குறைய எல்லா நாடுகளும் போலியோவை ஒழித்துவிட்டன. அந்த 8 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது போலியோ நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகளில் 80 சதவிகிதத்தினர் இந்தியாவில் பாதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பத்தாண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் 5,000 குழந்தைகள் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டனர். ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தரமான முறையில் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டதாலும், ஒவ்வொரு ஆண்டும் பல்ஸ் போலியோ முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாலும், போலியோ நோய் தமிழ்நாட்டில் முற்றிலும் குறைக்கப்பட்டு விட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எந்தக் குழந்தையும் போலியோவினால் பாதிக்கப் படவில்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

### போலியோ நோய் எவ்வாறு பரவுகிறது?

போலியோ என்ற வைரஸ் நுண் கிருமிகள் குழந்தைகளைப் பாதிக்கச் செய்து அவர்களின் கால்களை



நிரந்தரமாக ஊனமடையச் செய்கின்றன. போலியோ நுண் கிருமிகள் அசுத்தமான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்கள் மூலம் குழந்தைகளிடையே பரவுகின்றன. மேலும் ஊனமடைந்த குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து முற்றிலும் சரி செய்வது இயலாத காரியம். அதே சமயம் அதற்கான செலவும் அதிகமாகும். ஆகவே நோய் வருமுன் காப்பதே முக்கியமாகும்.

## போலியோ நோய் ஒழிப்புக்கான வழிமுறைகள்

பிறந்த குழந்தைக்கு கீழ்க்கண்ட தேசியத் தடுப்பூசி அட்டவணைப்படி போலியோ தடுப்பு மருந்து மற்றும் பிற தடுப்பு மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

| நோய் | தடுப்பு ஊசி தடுப்பு மருந்து | தவணைகள் | எப்போது கொடுக்க வேண்டும் | தடுப்பூசி/ தடுப்பு மருந்தின் அளவு | இரு தவணைகளுக்கு இடையேயான இடைவெளி | கொடுக்கும் முறை |
|---|---|---|---|---|---|---|
| குழந்தை ரண ஜன்னி நோய் | TT | 2* | தாய் கருவுற்ற போது | 0.5 ml | 4 வாரம் | (IM) தசைவழியாக |
| காசநோய் | BCG | 1** | பிறந்தவுடன் | 0.1 ml | --- | தோல்வழியாக (Intradermal) |
| போலியோ | OPV | 1***<br>3 | பிறந்தவுடன்<br>6 வாரம்<br>10 வாரம்<br>14 வாரம் | 2 சொட்டுகள் | 4 வாரம் | வாய் வழியாக (ORAL) |
| தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல் மற்றும் ரண ஜன்னிநோய் | DPT | 3 | 6 வாரம்<br>10 வாரம்<br>14 வாரம் | 0.5 ml | 4 வாரம் | (IM) தசை வழியாக |
| ஹெப்படைடிஸ் பி | HBV | 3 | 6 வாரம்<br>10 வாரம்<br>14 வாரம் | 0.5 ml | 4 வாரம் | (IM) தசை வழியாக |
| தட்டம்மை (Measles) | தட்டம்மை தடுப்பூசி | 1*** | 9 மாதங்கள் | 0.5 ml | --- | (SC) தோலின்கீழ் |
| தொண்டை அடைப்பான்<br>கக்குவான் இருமல்<br>ரணஜன்னி<br>போலியோ | DPT<br><br><br>OPV | 1**** | 18–24 மாதங்கள் | 0.5 ml<br><br><br>2 சொட்டுகள் | --- | (IM) தசை வழியாக<br><br><br>வாய் வழியாக |
| தொண்டை அடைப்பான் ரணஜன்னி நோய் | DT | 1 | 5 வருடம் | 0.5 ml | --- | (IM) தசை வழியாக |
| ரணஜன்னி நோய் | TT | 1 | 10 வருடம்<br>15 வருடம் | 0.5 ml | --- | (IM) தசை வழியாக |

* ஏற்கெனவே தடுப்பூசி போடப்பட்டிருந்தால் ஒருமுறை தடுப்பூசி போட்டால் போதும்.

** குழந்தை மருத்துவமனையில் பிறந்திருந்தால், டிஸ்சார்ஜ் ஆவதற்குமுன் BCG தடுப்பூசி போடவேண்டும்.

*** குழந்தை மருத்துவமனையில் பிறந்திருந்தால், குழந்தை பிறந்தவுடன் ஒரு முறை OPV கொடுக்கவேண்டும். இது 'O' போலியோ என்று கூறப்படும்.

**** மூன்றாவது தவணைக்குப் பிறகு ஒருமுறை ஊக்குவிப்புத் தவணை கொடுக்கவேண்டும்.

போலியோ நோய் ஒழிப்பு என்றால் போலியோ நோய் உண்டாக்கும் வைரஸ் நுண் கிருமிகளை மனித உடலிலும் சுற்றுப்புறத்திலும் இல்லாமல் நீக்கிவிடுவது.





போலியோ சொட்டு மருந்து கொடுப்பது மற்றும் நோய் கண்காணிப்பு ஆகிய இரண்டு அடிப்படைப் பணிகள் மூலம் மட்டுமே போலியோ நோயை ஒழிக்க முடியும்.

போலியோ ஒழிப்பில் முழுமை பெற வேண்டுமானால் போலியோ நோயை உண்டாக்கும் வைரஸ் நுண் கிருமிகளை சுற்றுப்புறத்திலிருந்து ஒழிக்க வேண்டும். தொடர்ந்து சில ஆண்டுகள் பல்ஸ் போலியோ முகாம்கள் நடத்துவதன் மூலம் போலியோ நோயை இந்த நாட்டிலிருந்து ஒழிக்கமுடியும்.

தமிழ்நாட்டில் இதுவரை ஏழு சிறப்பு முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகாமிலும் 65 முதல் 73 இலட்சம் வரையிலான 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### போலியோ சொட்டு மருந்து முகாம்கள் பற்றிய சில விளக்கங்கள்

ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் முகாமின் போது தவறாமல் சொட்டு மருந்து கொடுக்க வேண்டும். ஏனெனில் போலியோக் கிருமிகள் பெரும்பாலும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளையே அதிகமாகத் தாக்குகிறது. ஏற்கெனவே முழுமையான போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும், முகாம் நாட்களில் ஒவ்வொரு முறையும் மீண்டும் போலியோ சொட்டு மருந்து கொடுப்பது மிகவும் அவசியம் ஆகும். ஏனெனில் அந்தக் குழந்தைகளிலும் சிலரின் குடல்களில் போலியோ நோயை உண்டாக்கும் நுண்கிருமிகள் தங்கி இருக்கவும் மற்றும் நோய் பரப்பவும் வாய்ப்புண்டு. ஆகவே எல்லா குழந்தைகளுக்கும் ஒரே சமயத்தில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம், போலியோ நோய் உண்டாக்கும் நுண் கிருமிகள் அனைத்து குழந்தைகளின் குடலில் இருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டு, சுற்றுப்புற வெப்பத்தால் அழிந்துபோகச் சாதகமாகிறது.

மேலும் குழந்தைகளுக்கு முறையாக அந்தந்த மாதங்களில் கொடுக்கப்படும் தடுப்பூசி மருந்துகள் உரிய காலங்களில் தவறாமல் கொடுக்கப்பட வேண்டும். அவைகளை எக்காரணம் கொண்டும் நிறுத்தக்கூடாது.

கடந்த ஜனவரி மாதம் 5 மற்றும் பிப்ரவரி 9 தேதிகளில் நடைபெற்ற சிறப்பு முகாம்களின் போது 5 வயதிற்குட்பட்ட சுமார் 74 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். பொதுமக்களின் நலன் கருதி தமிழ்நாடு முழுவதும் சுமார் 40,000–க்கும் மேற்பட்ட சொட்டு மருந்து சிறப்பு மையங்கள் கிராமப்புறங்களிலும், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் முக்கியப் பொது இடங்களிலும், தனியார் மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட்டு சொட்டு மருந்துகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பொது சுகாதாரத்துறையோடு சத்துணவுத்துறை, சமூகநலத் துறை, ஊரக வளர்ச்சித்துறை, கல்வித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் மக்கள் பிரதிநிதிகளும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தந்த பகுதிகளில் நடைபெற்ற முகாம்களில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். மேலும் முகாமின்போது பொது சுகாதாரத்துறையைச் சேர்ந்த கிராமச் செவிலியர்களும், மற்ற பணியாளர்களும், பள்ளி ஆசிரியர்கள், சத்துணவுப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சி மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பணியாளர்கள், ரோட்டரி போன்ற தன்னார்வ அமைப்புக்கள் என பல்வேறு அரசுத்துறை மற்றும் அரசுசாரா அமைப்புகள் பெரும் அளவில் ஈடுபட்டனர். அவர்களுக்கு இந்த அரசு பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. இதில் ரோட்டரி சங்கங்களின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு சுகாதாரம் மற்றும் கல்வித்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை அவர்கள் சென்னை எழும்பூரில் உள்ள குழந்தை நல மருத்துவமனையில் ஜனவரி 5ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து முகாமை துவக்கிவைத்து குழந்தைகளுக்கு சொட்டு மருந்து முகாமை வெற்றி பெறச் செய்தார்கள்.

அதேநாளில் கோயம்பேடு பேருந்து வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நடமாடும் சொட்டு மருந்து முகாமில் கலந்துகொண்டு பேருந்தினுள் பயணிக்கும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுத்து பொதுமக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். மேலும் மதுரவாயல், போரூர், நெற்குன்றம், திருவேற்காடு, பூந்தமல்லி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற சொட்டு மருந்து முகாம்களிலும் மாண்புமிகு அமைச்சர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இதுபோன்று மாவட்டத் தலைநகரங்களிலும் மற்ற பகுதிகளிலும் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு போலியோ சிறப்பு முகாம்களை வெற்றியடையச் செய்துள்ளார்கள்.

பொதுமக்களுக்கு போலியோ சொட்டு மருந்தின் அவசியம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சுவரொட்டிகள், பேனர்கள் மற்றும் பல வகையான விளம்பரப் பொருட்கள் மிகப் பெரிய அளவில் தயார் செய்யப்பட்டு எல்லா மையங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டன. இது தவிர பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும் விளம்பரங்கள் செய்யப்பட்டன. பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதியிலுள்ள 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுக்க உதவிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

முகாம் நாளன்று தனியார் மருத்துவர்களும் தங்களிடம் வரும் வாடிக்கையாளர் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார்கள்.

சொட்டு மருந்து போடப்படும் ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் இடதுகை சுண்டுவிரலில் அடையாள 'மை' வைக்கப்பட்டு, பின்னர் விடுபட்ட குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

மேலும் முகாம் நாளின்போது, மையத்திற்கு வர இயலாத குழந்தைகளைக் கண்டறிந்து இரண்டாம் மூன்றாம் நாட்கள் அவர்கள் வீட்டிற்குச் சென்று சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது. விடுபட்ட குழந்தைகளைக் கண்டறிவதற்காக அந்தந்தப் பகுதியில் உள்ள எல்லா வீடுகளும் பார்வையிடப்பட்டு, ஒவ்வொரு வீட்டிலும் குறியீடு செய்யப்பட்டு, எந்தக் குழந்தையும் விடுபடவில்லை என்பதை உறுதி செய்யப்பட்டது.

### சிறப்பு அம்சங்கள்

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது.
2. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை.
3. ஓரிரு நாட்களுக்கு முன்பு சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் கொடுக்க வேண்டும்.
4. முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.
5. வயிற்றுப்போக்கு, சளி போன்ற சிறுசிறு உபாதைகள் உள்ள குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டும்.
6. முகாம் நாட்களில் வேறு ஊர்களுக்கு பயணம் செய்ய வேண்டியிருந்தால், பேருந்து நிலையம், ரயில் நிலையம் ஆகிய இடங்களில் நடைபெறும் முகாமில் சொட்டு மருந்து போட்டுக் கொள்ளலாம்.
7. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
8. ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைக்கு சொட்டு மருந்து கொடுத்தால் மட்டும் போதாது. அருகாமையிலுள்ள அனைத்து குழந்தைகளும் சொட்டு மருந்து பெற உதவ வேண்டும்.
9. எந்த ஒரு காரணத்திற்காகவும் முகாம் நாட்களில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து போட்டுக் கொள்ளாமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
10. முதல் தவணை சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் கண்டிப்பாக இரண்டாம் தவணையும் சொட்டு மருந்து கொடுக்க வேண்டும்.
11. நாட்டில் போலியோவை உண்டாக்கும் வைரஸ் இருக்கும் வரை ஒவ்வொரு குழந்தைக்கும் நோய்த் தொற்று ஏற்படுவதற்கான அபாயம் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆகவே எல்லாத் தரப்பு மக்களும் ஐந்து வயதிற்குட்பட்ட தங்கள் குழந்தைகளுக்கு ஒவ்வொரு முகாம் நாட்களிலும் சொட்டு மருந்து போட்டுக் கொள்வது அவசியம்.

உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்களில் இன்னும் போலியோ நோய்ப் பாதிப்பு இருந்து கொண்டுள்ளதால், உலக சுகாதார நிறுவனம் போலியோ சிறப்பு முகாம்களை தொடர்ந்து சில ஆண்டுகள் நடத்த அறிவுரை வழங்கியுள்ளது. ஆகவே வருங்காலங்களிலும் பொதுமக்கள் தங்கள் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுத்து போலியோ நோயை நாட்டைவிட்டு ஒழிக்க உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**போலியோ நோயை ஒழிப்போம்!**

**ஊனமில்லாத இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவோம்!!**



# திருநெல்வேலி நகர மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.12 கோடி அனுமதி

மாண்புமிகு மின்துறை மற்றும் தொழில்துறை அமைச்சர்
திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தகவல்

தமிழக மின்சார வாரியம், மின்உற்பத்தி, மின்பகிர்மானம் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் முதன்மையானதாகத் திகழ்ந்து வருகின்றது. எங்கும் கணினி மயம்; எதிலும் கணினி மயம் எனத் திகழும் காலம் இது. இக்கால கட்டத்தில் தமிழ்நாடு மின்வாரியம் தனது சேவைகளை மின்பயனீட்டாளர்களுக்கு அதாவது மக்களுக்குச் சென்று சேரும் வகையில் மின்கட்டணம் செலுத்துவதைக் கணினி மயமாக்க முடிவு செய்தது. அதன்படி சென்னையில் இத்திட்டம் சில பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனை அடுத்து தமிழகத்தில் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நெல்லை நகர் மற்றும் பழையபேட்டை பிரிவுகளுக்கு இத்திட்டம் இன்று நடைமுறைப்படுத்தப் படுகின்றது. சுமார் 20,000 மின்பயனீட்டாளர்கள் இத்திட்டத்தால் பயனடைகின்றார்கள். இதனைத் தொடர்ந்து வண்ணாரப்பேட்டை பிரிவிற்கும் இத்திட்டம் இன்று அமலாக்கப்படுகின்றது.

மேலும் கணினி வழி மின்கட்டணம் செலுத்தும் இத்திட்டமானது நெல்லை மாநகர் முழுவதும் விரிவாக்கப்பட உள்ளது.

### *இத்திட்டத்தினால் பொதுமக்கள் பெறும் நன்மைகள்*

1. கணினி வழி மின்கட்டணம் செலுத்துவதால் மிக குறைந்த நேரத்தில், சிறியோர் முதல் பெரியோர் வரை எளிதில் பணம் கட்டலாம்.
2. வயது முதிர்ந்தோருக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் சிறப்புக் கவுண்டர்கள் உருவாக்கப்படவுள்ளது.
3. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு திருநெல்வேலி மாநகரில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படவுள்ளது. ஓர் இடத்திலுள்ள மின் இணைப்பிற்கு எந்த ஒரு மையத்திலும் மின்கட்டணம் செலுத்தலாம்.
4. சுமார் 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள இத்திட்டத்தின் பயன் நெல்லைநகர்ப்புற மக்களுக்குச் சென்றடையும், மற்றும் பேட்டை பகுதியில் வாழும் மக்களுக்கும் உடனே சென்றடையும்.
5. தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களும் இதுபோன்று கணினி வழி மின்கட்டண முறையில் இணைக்கப்படவுள்ளன. இவ்விணைப்பு செயலாக்கப்

மேலும் தெங்கம்புதூரில் ரூ.2.7 கோடி மதிப்பீட்டில் புதிய 110/11 KV துணை மின்நிலையம் நிறுவ அனுமதிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்படும் நிலையில் உள்ளது.

மார்த்தாண்டத்தில் ரூ.2.7 கோடி மதிப்பீட்டில் புதிய 110/11 KV துணை மின்நிலையத்தில் மற்றொரு 110/11 KV துணை மின்நிலையம் நிறுவ அனுமதிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

செண்பகராமன் புதூரில் தற்போது இயங்கிவரும் 230/11 KV துணை மின்நிலையம் ரூ.3.3 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு விரைவில் பணி ஆரம்பிக்கப் படவுள்ளது.

நாகர்கோவில் நகரில் உள்ள அனைத்துப் பிரிவு அலுவலகங்களிலும் தோவாளையில் உள்ள பிரிவு அலுவலகங்களிலும் கணினி மின்கட்டண வசூல் மையங்கள் முறையே ரூ.74 இலட்சம், 7 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாகர்கோவில் நகரில் நடமாடும் மின்தடை நீக்கும் மையங்கள் ரூ.8 இலட்சம் செலவில் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில், தற்பொழுது சுமார் 1,25,000 மின்இணைப்புகள் மூலம் வீடுகளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் மற்றும் ஏனைய பயனீட்டாளர்களுக்கும் மின்வசதி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி 12 மின்வாரியப் பிரிவு அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் மூலம் சரி செய்யப் படுகிறது.

பொதுமக்கள் நேரில் பதிவு செய்யும் புகாரின் பெயரிலும், மாநகராட்சிப் பகுதியில் தொலைபேசிகள் மூலம் தெரிவிக்கப்படும் புகார்களின் அடிப்படையிலும் மேற்படி மின்தடைகள் சரிசெய்யப்படுகிறது.

சில நேரங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளிலும், இரவு நேரங்களிலும் மின்தடைகளை நீக்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

மின்தடையை நீக்குவதில் ஏற்படும் காலதாமதத்தை வெகுவாகக் குறைத்திட, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின் பெயரில் சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் இயங்கிவரும் நடமாடும் மின்தடை நீக்கும் மையங்களைப் போன்று திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் உருவாக்கிட ஆணை இட்டார்கள். அதன்படி நெல்லை மாநகராட்சி பகுதியில் நடமாடும் மின்தடை நீக்கும் மையம் சுமார் ரூ.2 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி 2 நடமாடும் மின்தடை நீக்கும் மையம் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

1. நெல்லை சந்திப்பு (கொக்கிரகுளம்)
2. சமாதானபுரம்

மேற்படி மின்தடை நீக்கும் மையங்களில் இரண்டு ஊர்திகளில் பணியாட்கள் மற்றும் உபகரணங்களுடன் தயார் நிலையில் 24 மணிநேரமும் நிறுத்தப்பட்டுள்ளது. ஊர்திகளில் கம்பியில்லாத் தொலைத்தொடர்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தற்பொழுது இயங்கிவரும் மின்தடை நீக்கும் மைய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டு மின்தடைப் புகார்களையும், நெல்லை மாநகராட்சிப் பகுதியில் இயங்கும் 12 பிரிவு அலுவலகங்களில் நேரில் தெரிவிக்கும் புகார்களையும் உடனுக்குடன் மேற்படி நடமாடும் மின்தடை நீக்கும் ஊர்திக்கு கம்பியில்லாத் தொலைத்தொடர்பு வசதி மூலம் தகவல் தெரிவித்து உடனுக்குடன் மின்தடை நீக்கப்படும்.

மேலும் உயரழுத்த மின்தொடர் மற்றும் தாழ்வழுத்த மின்தொடர் அமைப்புகளில் ஏற்படும் மின்தடைகளை உடனுக்குடன் சரிசெய்ய மேற்படி ஊர்திகள் பயன்படுத்தி தடையில்லா மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

இத்திட்டம் 24 மணிநேரமும் செயல்படுவதால் இரவு நேரங்களில் மின்தடை நீக்கும் பணிகள் துரிதப்படுத்தப் படும், என்று அமைச்சர் அவர்கள் கூறினார்.

*– சிவ.சு.சரவணன்*
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

❖ ❖ ❖



# தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் புதிய அலுவலகக் கட்டடம் திறப்பு விழா



தமிழ்நாடு காவல்துறையினரின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடியிருப்பு வசதிகளை காவலர்களுக்கு அமைத்துத் தரவேண்டும் என்ற தமிழக அரசின் நோக்கத்துக்கு செயலாக்கம் தரும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல புதிய காவலர் குடியிருப்புகளை உருவாக்கி வருகிறார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் புத்துயிர் அளிக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திற்கு, கழகத்தின் சிறப்பு அலுவலகக் கட்டடம் இல்லாததை அறிந்து, புதிய அலுவலகக் கட்டடம் கட்ட ஆணையிட்டார்.

அதன்படி, சென்னை– 132, ஈ.வெ.ரா. சாலை, கீழ்ப்பாக்கம், ஜி3 காவல்நிலையம் அருகே, ரூ.1.50 கோடி மதிப்பில், 15,000 ச.அடி. பரப்பளவில் மூன்று அடுக்கு மாடிகளைக் கொண்ட தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் புதிய அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.2003 அன்று திறந்துவைத்தார்.

மேலும், இந்த இனிய விழாவில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் www.tnphc.com என்ற இணைய தள முகவரியையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கிவைத்துச் சிறப்பித்தார்கள்.

இணையதளத்தில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் திட்டப்பணிகள், காவலர் குடியிருப்புக் கட்டடங்கள்,



மழைநீர் சேகரிப்பு ஆகியவை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

பட்டவுடன் தமிழகத்திலுள்ள ஒரு நகரத்தில் உள்ள மின் இணைப்பிற்கான மின்கட்டணத்தை வேறு எந்த நகரத்திலும் கட்டலாம் என்ற வசதி ஏற்படுத்தப்படுகின்றது.




6. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் வீட்டிலிருந்தே கணினி வழி, இன்டர்நெட் மின்கட்டணம் செலுத்தும் முறை (Online payment) அறிமுகப்படுத்தப்படும். மேலும் இதே மையத்தில் தொலைபேசிக் கட்டணம், மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகள் போன்றவற்றை இதே மையத்தில் பொதுமக்கள் செலுத்தலாம். இதன் மூலம் ஒரே குடையின்கீழ் பொதுமக்கள் தங்களின் பணிகளை முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். இம்மையங்கள் முழுவதும் கணினி மயமாக்கப்பட்டிருப்பதால் விரைவான சேவை நடைபெறும்.

இந்தப் பல்துறை சேவை திறப்பு விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசும்போது,

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி பல அரிய திட்டங்கள் தமிழகத்திலும், குறிப்பாக நெல்லை மாநகரிலும் செயல்படுத்தப் படவுள்ளது.



1. நகர்ப்பகுதிகளில் ஏற்படும் மின்தடைகளை உடனுக்குடன் சில நிமிடங்களில் சரிசெய்வதற்கு, 24 மணிநேரமும் செயல்படும் நடமாடும் மின்தடை நீக்கும் மையங்கள் நிறுவப்பெற உள்ளன. இத்திட்டத்தின் மதிப்பு சுமார் 27 இலட்சம் ரூபாய் ஆகும். அதிநவீன கருவிகளுடன் செயல்படும் இத்தகைய மையம் சென்னையை அடுத்து நெல்லையில் அமையவுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.



2. நெல்லை மாநகரத்திற்கே மகுடம் அமைத்தாற்போல "திருநெல்வேலி நகர மேம்பாட்டுத் திட்டம்'' சுமார் 12 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நெல்லை மாநகரில் மின் அபிவிருத்திக்கான அனைத்து அம்சங்களும் இதில் அடங்கியுள்ளன. இத்திட்டத்தின்படி நெல்லை பொருட்காட்சித்திடலில் 33/11 KV துணை மின் நிலையமும், மேலப்பாளையத்தில் ஒரு துணை மின்நிலையமும் நிறுவப்பெற உள்ளது. இத்திட்டத்தின்படி பாளையங்கோட்டை துணை மின்நிலையத்தில் கூடுதல் மின்மாற்றி நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் நெல்லை, பாளை பகுதிகளில் சீரான முறையில் தங்குதடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. தாழையூத்து துணை மின்நிலையத்திலும் கூடுதல் மின்மாற்றிகள் நிறுவப்பெற உள்ளன. நெல்லை மாநகரத்திற்கு தேவையான அனைத்து மேம்பாடு மற்றும் வளர்ச்சிப்பணிகள் விரைவில் செயலாக்கப் படுகின்றன.



3. நெல்லை மாவட்டம் தென்காசி அருகில் உள்ள கொடிக் குறிச்சியில் சுமார் 35 கோடி ரூபாய் செலவில் மிகப்பெரிய 230 KV துணை மின்நிலையம் அமைக்கும் பணியின் ஆரம்ப கட்ட வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன. இதன் மூலம் நெல்லை மாவட்டத்திற்கு சீரான தங்குதடையில்லாத மின்விநியோகம் செய்யப்படும். நெல்லை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி மேலும் பெருகும்.

"நெல்லை மாவட்டத்தில் சிவகிரியை அடுத்த விஸ்வநாதபேரியில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் புதிய 110/11 KV துணை மின்நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேலும் மாவட்டத்தின் மேற்குப்பகுதியின் மின் தேவையை கருத்தில் கொண்டு ரூ.36 கோடி செலவில் புதிய 230/11 KV துணை மின்நிலையம் அமைக்கும் பணி தென்காசியை அடுத்த கொடிக்குறிச்சியில் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் குரும்பூர் மற்றும் ஸ்ரீவெங்கடேசபுரம் ஆகிய ஊர்களில் தலா ரூ.1.4 கோடி செலவில் 33/11 KV துணை மின்நிலையங்கள் நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.

மேலும் ரூ.3.8 கோடி மதிப்பீட்டில் மின்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவில்பட்டியில் உள்ள அனைத்துப் பிரிவு அலுவலகங்களிலும் கணினி மூலம் மின்கட்டணம் செலுத்தும் வசதி ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் அழகாபுரியில் ரூ.4.6 கோடி மதிப்பீட்டில் புதிய 110/11 KV துணை மின்நிலையம் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இதுதவிர பாளையம்பட்டி, புல்வாய்கரை ஆகிய ஊர்களில் முறையே ரூ.2.1 கோடி மதிப்பீட்டில் 33/11 KV துணை மின்நிலையங்கள் நிறுவ அனுமதிக்கப்பட்டு விரைவில் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மற்றும் மின்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.5.5 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்தில் மீனாட்சிபுரத்தில் ரூ.3.6 கோடி மதிப்பீட்டில் புதிய துணை மின்நிலையம் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

விழுப்புரம் மாவட்ட

# ஆதிதிராவிடர் மக்களுக்கு ரூ.3.15 கோடி தமிழக அரசு மானியம்

**2002–2003** ஆம் நிதியாண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு உதவிட தமிழக அரசு மானியமாக வழங்க ரூ.3.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இத்தொகையில் ரூ.94.50 இலட்சம் ஆதிதிராவிடர் மக்களுக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்திற்கும், ரூ.165.38 இலட்சம் ஆதிதிராவிடர் இனப் பெண்கள் வாழ்வினை ஒளிமயமாக்கிட பெண்கள் குழுத்திட்டத்திற்கும் ரூ.55.12 இலட்சம் தனிநபர் கடன் திட்டங்களான விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டத்திற்கும், விவசாயம் இல்லாத தனி நபர் கடன் திட்டத்திற்கும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களில், பயனாளிகள் குறிப்பிட்டுள்ள தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கடனுதவிகள் வழங்கப்படும்.

மேலும் இத்திட்டங்களை மாவட்டத்திலுள்ள 22 ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் தொகை அடிப்படையில் பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியுடையவர்களைத் தேர்வு செய்து ஆதிதிராவிடர் ஏழை எளிய மக்கள் பயனடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தனி நபர் திட்டத்தில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கு, (உழவுமாடு வாங்க, நிலச்சீர்திருத்தம் செய்ய, கிணறு ஆழப்படுத்த, டயர்வண்டி மாடு வாங்க, ஆயில் எஞ்சின், பவர்டில்லர் வாங்க) கடன் வழங்கப்படும். தனிநபர் திட்டத்தில் விவசாயம் அல்லாத தனித்தொழில் முனைவோர்க்கு (செங்கல் சூளை, மளிகைகடை, கட்பீஸ்சென்டர் அமைக்கவும், ஆட்டோ, கார், வேன் வாங்கவும்) கடனுதவி அளிக்கப்படும்.

மகளிர் குழுத்திட்டத்தில் பட்டுவளர்ப்பு, காளான்வளர்ப்பு, நிலம் வாங்கும் திட்டம், செங்கல் சூளை, மலர் சாகுபடி, வாகனக்கடன், கறவைமாடு போன்ற இனங்களில் கடன் வழங்கப்படும். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிவழங்க ரூ.33.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ரூ.25,000/– சுழல்நிதியாக மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலர் பரிந்துரையின்படி ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்படும். சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் படித்து வேலையில்லாமல் வறுமையில் வாடும் ஆதிதிராவிடர் மாணவ மாணவிகளுக்கு, செவிலியர், இரத்தப் பரிசோதனை, சமையல்கலை, ஓட்டுநர், குளிர் சாதனப்பெட்டி பழுதுபார்த்தல், அழகுக்கலை, பிட்டர் போன்ற இனங்களில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி உதவித் தொகையாக மாதம் ரூ.400/– வழங்கப்படும்.

**பால் உற்பத்தியில் சாதனை படைக்கும் விழுப்புரம் மாவட்டம்!**



வெண்மைப் புரட்சியில் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மகத்தான சாதனை படைத்துக்கொண்டு வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களின் துணைத் தொழிலான பால்பண்ணைத் தொழிலை ஊக்கப்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஏதுவாக வழிமுறைகளையும், செயல்பாட்டினையும் சீரிய முறையில் அவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இவ்வொன்றியம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் கலப்பினக் கறவைகளினால் அதிக அளவு





பாலினை உற்பத்தி செய்து, பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து வருகிறார்கள். மேலும் செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் கலப்புத் தீவனம் வழங்குவது போன்ற நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இன்று வறுமையை விரட்டி வாழ்க்கையில் மேம்பாடு கண்டு வருகிறார்கள்.

1983–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சீரிய முறையில் முனைப்புடன் செயலாற்றி இன்றைய தினம் நாள் ஒன்றுக்கு 607 கூட்டுறவு சங்கங்களிலிருந்து 38 பால் சேகர வழித் தடங்களின் மூலம் சராசரியாக 1,43,000 லிட்டர் பால் கொள்முதல் செய்துவருகிறது. இவ்வொன்றியம் தற்சமயம் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. உள்ளூர் விற்பனைக்கு 40,000 லிட்டர் எடுத்துக்கொண்டது போக மீதமுள்ள சுமார் 1,00,000 லிட்டர் சென்னை நகருக்கு தினசரி அனுப்பி வைக்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவராக உள்ள திரு.அ.முகமது அஸ்லம்,இ.ஆ.ப. அவர்கள் தனி அலுவலராகச் செயல்பட்டு வருகிறார். அதன்பின் விழுப்புரம் ஆவின் நிர்வாகம் முடுக்கிவிடப்பட்டு தற்சமயம் மிகத்திறம்பட செயல்பட்டு வருகிறது. கடந்த 2000–ஆம் ஆண்டு வரை நஷ்டத்தில் இயங்கிவந்த விழுப்புரம் ஆவின் 2001 டிசம்பர் முதல் தொடர்ந்து லாபத்தில் இயங்கி வருகிறது. முந்தைய ஆட்சியில் 7 வாரங்கள் வரை பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்ததை மாற்றி, தற்சமயம் 15 நாட்களுக்குள் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இவ்வொன்றிய பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு ஒன்றிய கால்நடை மருத்துவர்களின் மூலம் இலவச சிகிச்சையினை அவர்களின் கிராமங்களுக்கே சென்று அளித்து வருகிறது. இவ்வொன்றியத்தில் நடைபெற்று வரும் பயிற்சி நிலையத்தின் மூலம் திருச்சி, தஞ்சை மற்றும் பாண்டி மாநில மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் (STEP) மகளிர் சுய உதவிக்குழு, உதவிக்குழுக்களின் மூலம் செயல்படும் பிரதம கூட்டுறவுச் சங்கப் பயனாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வொன்றியத்தின் மூலம் அரசினால் கொடுக்கப்படும் கறவை மாட்டு கடன் மற்றும் மானியமும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிட மதம் மாறிய கிருஸ்தவர்களுக்கு விழுப்புரம் ஆவின் மூலம் கறவை மாட்டுக்கடன் 50 சதவீத மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர் நலக் கழகத்தின் உதவியுடன் இம்மாவட்ட பிற்படுத்தப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு 7 சதவீத வட்டியுடன் கூடிய கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

**2002–2003** நிதியாண்டில் விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களில் நன்முறையில் செயலில் உள்ள, குழு உறுப்பினர்களுடன் தகுதியானவர்களை தெரிவு செய்து மகளிருக்கான எட்டு பிரதமக் கூட்டுறவு மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைத்து சுமார் 560 பயனாளர்களுக்குப் பால் பண்ணைத் தொழிலில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உதவி வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்துவதற்காக ரூ.34.116 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக மத்திய அரசின் பங்களிப்பாக 90 சதவீதம் மானிய உதவி பெற்று நடைமுறைபடுத்தப்பட உள்ளது.

விழுப்புரம் ஆவின் நுகர்வோர்களிடையே தொடர்ந்து பல நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தி அவர்களின் தேவைக்கேற்ப சுத்தமான தரமான பதப்படுத்தப்பட்ட ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்து நுகர்வோர்களின் நலனில் அக்கறை செலுத்துவதுடன் உள்ளூர் விற்பனையினையும் அதிகரித்து வருகிறது.

மேலும் இவ்வொன்றியத்தின் பொருளாதார நிலை மேம்பட மத்திய அரசின் 9ஆவது ஐந்தாண்டுகால திட்டத்தின்படி ஒன்றியத்தினைப் புனரமைக்க தேசிய பால் வள வாரியத்தின் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் பரிந்துரைகளுக்குப்பட்டு இந்திய அரசு மற்றும் தமிழக அரசு ரூ.400 இலட்சம் மானிய உதவியாக ஒன்றியப் புனர்வாழ்வுத் திட்டத்தில் வழங்க உள்ளது.

- பா.நாராயணமூர்த்தி,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.

# கூட்டுறவு இயக்கத்துக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தரும் ஊக்கம்!

– மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
**திரு. ஓ. பன்னீர் செல்வம்** பெருமிதம்!

தேனி மாவட்டத்தில் நடந்த 49ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

சமுதாய நலனில் ஈடுபாடு கொண்டவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, ஏழை, எளிய மக்களின் துயர் துடைப்பில் ஈடுஇணையற்ற சாதனைகளைச் செய்து வரும் இயக்கம் கூட்டுறவு இயக்கமாகும்.

கூட்டு வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் இணைந்து பாடுபட வேண்டும். மக்களின் கூட்டுறவு முயற்சியில் கூட்டு ஒத்துழைப்பில் தான் உற்பத்தி, கூட்டு விற்பனை, கூட்டு விநியோகம், கூட்டுநுகர்வு ஆகியவற்றுக்கு வழிகோலுகின்றன. இந்தத் தத்துவத்தைக் கூட்டுறவு என்னும் சொற்றொடரில் குறிப்பிடுகிறோம்.

இந்தியாவில் தமிழகத்திலுள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திரூர் என்ற கிராமத்தில் 1904இல் தொடங்கப்பட்ட கிராமக் கூட்டுறவு சங்கம் இன்றைக்கு மாநிலத்தின் குறிப்பாக வேளாண்மைக் குடும்பங்கள் நிறைந்த கிராமங்களில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. இந்த இயக்கம் இன்று வளர்ச்சியடைந்து எண்ணற்ற நன்மைகளை ஏழை, எளிய, சமுதாய மக்களின் வளர்ச்சிக்காக செயல்படுத்தி வருகிறது. இந்த இயக்கம் இன்றைக்கு நெறிப்படுத்தப்பட்டு தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு அரிசி ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள், மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விற்பனைச் சங்க்ங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், ஊரக வளர்ச்சி வங்கிகள், கூட்டுறவு நகர வங்கிகள், கூட்டுறவுப் பண்டக சாலைகள் மற்றும் இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் என 11,159 கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக சிறப்பான வளர்ச்சி பெற்று பல்வேறு துறைகளில் நல்ல பல சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

மக்கள் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டு ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பைக் கூட்டுறவு இயக்கத்திற்குக் கொடுப்பதன் மூலம் நிறைந்த பொருளாதார வளர்ச்சியினைப் பெற இயலும். "கூட்டு வாழ்க்கையின் மூலம் ஏற்றதோர் சமுதாயத்தை அமைக்க" வேண்டுமென தந்தை பெரியார் அவர்களும், "ஒரு கைத் தட்டினால் ஓசை எழா", "இரு கைகளும் இணைந்து ஒலி எழுப்புகின்ற வகையில் கூட்டுறவே ஏற்புடையது" என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் கூறி உள்ள சொற்கோவைகள் நம் உள்ளங்களில் நின்று நிழலாடுகின்றன. இவை கூட்டுறவு இயக்கத்தின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றன.

பண்டித ஜவகர்லால்நேரு அவர்களின் பிறந்த தினமான ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு வார விழா நவம்பர் திங்கள் 14 முதல் 20ஆம் தேதி வரை கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு கொண்டாடப்படுகின்ற 49ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை உள்ளடக்கி தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

கூட்டுறவு வாரவிழா கொண்டாடும் இந்நன்னாளில் கீழ்க்காணும் நலத்திட்டங்கள் 2002–2003ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதாரத்தில் முதுகெலும்பாக உள்ள வேளாண்மை தொழில் வளர்ச்சிக்கு 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.1,360 கோடி அளவிற்கு குறுகிய காலக் கடன் வழங்க இவ்வரசு குறியீடு நிர்ணயம் செய்து, கடந்த செப்டம்பர் திங்கள் வரை ரூ.588.72 கோடி அளவிற்கு குறுகிய காலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மத்தியக் காலக் கடனாக ரூ.115 கோடி கடனுதவி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் திங்கள் வரை ரூ.32.43 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.



விவசாயிகள் கிணறு வெட்டுதல், பம்ப் செட் அமைத்தல், மாந்தோட்டம் அமைத்தல், டிராக்டர்கள் வாங்குதல் போன்ற பல்வேறு விவசாய முன்னேற்றத்திற்கான நீண்ட காலக் கடன்களுக்கு வேளாண்மைக் கூட்டுறவு ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு ரூ. 250 கோடி அளவிற்கு நீண்ட காலக் கடன் வழங்க இவ்வரசு குறியீடு நிர்ணயம் செய்து செப்டம்பர் திங்கள் வரை ரூ.39.72 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டு உள்ளது.

சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் மூலம் தங்கள் வருமானத்தைப் பெருக்கி பொருளாதார வளர்ச்சியினைக் காண பண்ணை சாராக் கடனாக ரூ.230 கோடி வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு கடந்த செப்டம்பர் திங்கள் 2002 வரை ரூ.45.44கோடி அளவிற்குப் பண்ணைசாராக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வேளாண் விளைப் பொருள் ஈட்டுக் கடனுதவியாக ரூ.35 கோடி வாங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் தங்கள் உடனடித் தேவைக்கென நகையீட்டுக் கடன்கள் பெற மத்திய, மாநில கூட்டுறவு வங்கிகளில் பல்வேறு கிளைகள் வழியாக ரூ.5,200 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் திங்கள் வரை ரூ.2,270.33 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

சீரமைக்கப்பட்ட சேமிப்புடன் கூடிய மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின் மூலம் கடந்த செப்டம்பர் திங்கள் வரை ரூ.10.74 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிர் கடன் திட்டத்தின் கீழ் நபர் ஒன்றுக்கு 20,000 வரை 4,326 நபர்களுக்கு ரூ.7.90 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப் பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.5 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டதில் 263 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.2.51 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான மகளிர் பேறு காலக் கடன் திட்டத்தின் கீழ் நபர் ஒன்றுக்கு ரூ.2,000 வீதம் 2,520 கர்ப்பிணி மகளிருக்கு 50 இலட்சம் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருங்குடி மக்களின் கடன் சுமையைத் தீர்க்கும் பொருட்டு விவசாயக் கடன்களுக்கு வட்டிச் சலுகையினை அறிவித்தார்கள். இச்சலுகைத் திட்டத்தின் மூலம் 6,11,193 விவசாயிகளுக்கு ரூ.226.56 கோடி வட்டிச் சலுகையாக வழங்கப்பட்டுள்ளது.



## திருவண்ணாமலை மாவட்டத்தில்

# அயராது செயல்படுத்தப்படும் "அனைவருக்கும் கல்வி இயக்கம்"

வரலாற்றுச் சிறப்புமிக்க புராதனக் கோவில்களில் இமயத்தின் சிகரத்தை எட்டக்கூடிய அண்ணா–மலையாரின் அற்புதங்கள் அருளிய திருவண்ணாமலை மாவட்டத்தில் "அனைவருக்கும் கல்வி இயக்கம்" தொடங்கப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

இந்திய அரசியல் சாசனத்தின் 45ஆவது பிரிவின்படி 14 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டு அதனை நிறைவேற்றுகின்ற வகையில் மைய மற்றும் மாநில அரசுகள் "அனைவருக்கும் கல்வி இயக்கம்"திட்டத்தினைச் செய்லபடுத்தி வருகின்றன. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற உன்னத நிலையை அடைய, மக்கள் இயக்கமாக மாற்றி, அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் திட்டமே "அனைவருக்கும் கல்வி இயக்கம்" ஆகும்.

திட்ட கால அளவில், 5 முதல் 14 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குதல், சமுதாய நீதியை நிலைநாட்ட பள்ளி நிர்வாகத்தில் கிராம மக்கள் மற்றும் சமூகத்தினர் இணைந்து பள்ளியின் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றுதல், அரசு அளிக்கும் நிதி ஆதாரங்களை முழுமையாகப் பள்ளி செயல்பாட்டிற்குப் பயன் படுத்துவதை கிராம கல்விக்குழு உறுதி செய்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும்.

அனைவருக்கும் கல்வி இயக்கம், வெற்றிகரமாக செயல்படுத்தவும், செயல்பாடுகளைக் கண் காணிக்கவும் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவிலான கல்விக்குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பள்ளியின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதும் மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க ஆசிரியர்களுக்கு உதவுவதும், பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அரசின் உதவியுடன் ஆசிரியர்களோடு கிராம மக்கள் ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் மாபெரும் மக்கள் இயக்கமான அனைவருக்கும் கல்வி இயக்கம் வழி வகை செய்கிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் 18 வட்டார வள மைய (BRC) மேற்பார்வையாளர்கள், 44 ஆசிரியர் பயிற்றுனர்கள், 61 வள மைய பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை உள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றது.

### நிதி ஒதுக்கீடு

திருவண்ணாமலை மாவட்டம் அனைவருக்கும் கல்வி இயக்கம் (S.S.A.) திட்டத்தின் மூலம் பள்ளிகளின் வளர்ச்சி செயல்பாடுகளுக்காக ரூ.608.27 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசும் தமிழக அரசும் ஒதுக்கியுள்ளன.

### புதிய தொடக்க, நடுநிலைப்பள்ளிகள்

2002–2003–ஆம் ஆண்டில் நமது மாவட்டத்தில் 27 தொடக்கப்பள்ளிகளும் 66 நடுநிலைப்பள்ளிகளும் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் 93 ஆசிரிய ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குரிய ஊதியம் வழங்க இக்கல்வியாண்டில் 68.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

புதியதாகத் தொடங்கப்பட்ட 27 தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.10,000/– வீதமும், புதியதாக நிலை உயர்த்தப்பட்ட 66 நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ.50,000/– வீதமும், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வாங்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

### வகுப்பறைக் கட்டடங்கள், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி

2002–2003–ஆம் கல்வியாண்டில் கிராமக் கல்விக் குழு மூலம் 42 பள்ளிகளில் இரண்டு வகுப்பறை கட்டடங்களும், 16 பள்ளிகளில் மூன்று வகுப்பறைக் கட்டடங்களும் 79 பள்ளிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரவும், 77 பள்ளிகளில் மாணவிகளுக்கான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதற்காகவும் ரூ.234.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதியதாகத் தொடங்கப் பட்ட பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட முன்னுரிமை வழங்கப்படுகிறது.



### பள்ளி மேம்பாட்டு நிதி

பள்ளிகளின் குறைந்த பட்சத் தேவைகளைக் கண்டறிந்து அவற்றைப் பூர்த்திச் செய்ய ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளிக்கும் மேம்பாட்டு நிதியாக ரூ.2,000/– வீதம் 1,766 பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இந்தப் பள்ளிகளின் பராமரிப்புச் செலவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம் வழங்கப்படுகின்றது.

### கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகள்

1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இனிமையாகவும், கவர்ச்சிகரமாகவும் கற்பிக்கவும், குழந்தைகளின் 'தாமே கற்றல் முறை'யில் ஆர்வத்தை அதிகரிக்கவும், வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகளோடு ஆசிரியர்கள் செல்ல ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.500/– வீதம் ஆண்டு தோறும் 7,442 இடைநிலை ஆசிரிய ஆசிரியைகளுக்குத் துணைக்கருவிகள் தயாரிக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர்களுக்கான பயிற்சி

மாவட்டத்தில் பணிபுரியும் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்துப் பாட ஆசிரியர்களுக்கும் எளியமுறையில் கற்பிக்கவும், நல்ல கற்றல் அடைவுகள் ஏற்படவும் 2002–2003–ஆம் கல்வியாண்டில் பயிற்சி அளிப்பதற்காக ரூ.14.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வகுப்பறை நிகழ்வுகள்

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள வகுப்பறை நிகழ்வுகளை ஆய்வு செய்யவும் மதிப்பீடு செய்யவும் இதன்மூலம் வகுப்பறை நிகழ்வுகளை மேம்படுத்தவதற்காக ரூ.15.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கல்விக் காப்புறுதித் திட்டம்
**(Education Guarantee Scheme)**

பள்ளிகளில் சேரமுடியாத குழந்தைகளுக்கும், இடையில் நின்றுவிட்ட மாணவர்களுக்கும் அருகில் பள்ளி இல்லாத இடங்களில் கல்விக் காப்புறுதித் திட்டம் நடைபெற்று வருகின்றது. ஜவ்வாது மலை ஒன்றியத்தில் 15 மையங்களும், செங்கம் ஒன்றியத்தில் 3 மையங்களும், தண்டராம்பட்டு ஒன்றியத்தில் நரிக்குறவர் காலனி உட்பட 2 மையங்களும் ஆக மொத்தம் 20 பகல் நேர மாற்றுப் பள்ளிகள் கல்விக்காப்புறுதித் திட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.4.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.மேலும், 400 மாற்றுப் பள்ளி மையங்கள் இப்பொழுது தொடங்கப்படுகின்றன.

### பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம்
**(Cluster Resource Centre)**

மாவட்டத்தில் 210 பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் அப்பகுதியைச் சேர்ந்த பாட ஆசிரியர்கள் மாதம் ஒரு சனிக்கிழமையில் (விடுமுறை நாள்) கூடி கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை மேம்படுத்துவது குறித்து கலந்தாய்ந்து பயன்பெற்று வருகின்றனர். மேலும் இம்மையங்களில் கிராமக் கல்விக்குழு உறுப்பினர்கள் மற்றும் களப்பணியாளர் களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர். இதற்காக ரூ.8.183 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கிராமக் கல்விக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி

அனைத்துப் பள்ளிகளிலும் கிராமக் கல்விக்குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கல்விக்குழு உறுப்பினர்கள் ஆசிரியர்களோடு ஒருங்கிணைந்து பள்ளியின் வளர்ச்சியில் பங்கு பெறுவதற்காக குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க 9.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறப்பாக கவனிக்கப்பட வேண்டியவர்கள்

நமது மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் மேம்பாட்டிற்காகவும், பெண் குழந்தை களின் கல்விக்காகவும், இயலாக் குழந்தைகளின் ஒருங்கிணைந்த கல்வி வளர்ச்சிக் காகவும் புதிய அணுகுமுறையில் ஆய்வு செய்து அவர்கள் மேம்பாடு அடைய ரூ.46 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இயலாக் குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சிகள்

நமது மாவட்டத்தில் இயலாக் குழந்தைகளைக் கண்டறியவும், அவர்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் அவர்களின் சிறப்பு கற்பித்தலுக்காகவும் ரூ.11.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருண்ணாமலை மாவட்டத்தில் சர்வ சிக்ஷா அபியான் (S.S.A.) என்னும் "அனைவருக்கும் கல்வி இயக்கம்'' சிறப்பாக செயல்படவும், பள்ளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிகளுக்காகவும், ஆசிரியர்கள் தங்கள் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளவும், மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கவும், களப் பணியாளர்கள், கல்வி அலுவலர்கள், பொதுமக்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ மாணவியர் ஒருங்கிணைந்து செயல்பட்டு 100 சதவீத இலக்கினை அடையப் பாடுபடுவோம்.

இம்மாவட்டத்தில் 8,223 குழந்தைகளே இன்னும் பள்ளிக்கு செல்லாத நிலையில் இருப்பவர்கள். அவர்களுக்கு சிறப்புப் பள்ளிகள் மூலம் கல்வி வழங்கப்பட்டு படிக்காதவர்களே மாவட்டத்தில் இல்லை என்ற நிலை உருவாக்கப்படும்.

**– எம். கலைமணி,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

அண்மையில் கூட்டுறவு வங்கிகளில் ஒரே தவணையில் கடன் தீர்வுத் திட்டத்தில் குறுகிய காலக் கடனில் 9,692 நபர்களும் ரூ.2.56 கோடியும், நீண்ட காலக் கடனில் 12,933 நபர்களும் ரூ.4.98 கோடியும் விவசாயம் அல்லாத கடன்களில் 9,588 நபர்களும் 54 இலட்சம் சலுகையாகப் பெற்று பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நீலகிரியில் தேயிலை சிறு விவசாயிகளின் துயர் துடைக்க உற்பத்தி செய்யும் விவசாயிகள் நலனைக் கருதி மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட சிறப்புத் திட்டத்தில் கடந்த செப்டம்பர் திங்கள் வரை 2,824 மெட்ரிக் டன் அளவிற்கு ஊட்டி தேயிலை கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்து மாபெரும் சாதனை செய்யப்பட்டுள்ளது.

ஏழை,எளிய நெசவாளர் குடும்பங்களின் துயரத்தினைத் துடைக்க அவர்களது வாழ்வில் புத்தொளி பரவச் செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள வேட்டி மற்றும் சேலைகளை மலிவு விலையில் விற்பனை செய்யும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட திட்டத்தின் பயனாக செப்டம்பர் 2002 வரை 7,39,220 வேட்டிகளும், 7,62,911 சேலைகளும் ரூ.5.27 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டு நெசவாளர்களின் துயர்துடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகளிர் மேம்பாடு அடைய தமிழகமெங்கும் 4,553 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,932 மகளிர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு கடந்த செப்டம்பர் திங்கள் வரை ரூ.16.51 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டு மகளிர் நலன் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பேணப்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் வருவாயை முதன்மையாகக் கொள்ளாமல் தேவைப்படும் அனைத்து குடும்பங்களுக்கும் மிகக்குறைந்த விலையில் உணவுப் பொருள்களையும், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களையும் தங்குதடையின்றி வழங்க ரூ.1,240 கோடி அளவிற்கு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்ற பின் அவர்களது தலைமையில் இயங்கி வரும் இந்த அரசு அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு கிடைக்க ரூ.2,460 கோடி அளவுக்கு கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் நுகர்பொருள் விற்பனைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நுகர்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மலைவாழ் பழங்குடியினர் நலன் காத்திட தற்பொழுது தமிழகத்தில் 19 மலைவாழ் மக்கள் பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 2002–2003ம் ஆண்டிற்கு 22.22 கோடி ரூபாய் நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

படித்த பட்டதாரி இளைஞர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெற்று கூட்டுறவு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றிட 9 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் நிறுவனங்களாக செயல்பட்டு வருகிறது. மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சியும் உள்ளடக்கி கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் பயிற்சி இந்தக் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வார விழா நன்னாளில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி அதன் சிறந்த செயல்பாட்டிற்கான முதல் பரிசினையும், மத்தியக்கூட்டுறவு வங்கிகளின் அளவில் சிறந்த வங்கியாக திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தேர்வு செய்து அதற்காக பரிசுகளையும் டெல்லியிலுள்ள நபார்டு வங்கி வழங்கி கௌரவித்துள்ளது என்பது நமது கூட்டுறவு இயக்கத்திற்கே மாபெரும் சாதனையாகும்.

ஏழை எளிய மக்களின் வாழ்வு செழிக்கவும், இல்லாமை இல்லாத நிலை கண்டிடவும் கூட்டுறவு இயக்கம் பெரிதும் உதவி வருகின்றது. இவ்வரசு செய்து வரும் ஆக்கப்பூர்வமான அனைத்து திட்டங்களும் விவசாயப் பெருங்குடி மக்களையும், பொது மக்களையும் உடனடியாகச் சென்றடைந்து அதன் மூலம் அவர்கள் பயன்பெற கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. மக்களின் பொதுவான எண்ணமே கூட்டுறவு அணுகுமுறையில் அமைய கூட்டுறவுச் சிந்தனைகளை எண்ணத்தின் வண்ணச் சோலைகளாக்கி சமூக வளர்ச்சிக்கு ஏற்றதோர் பாதை காண நாம் அனைவரும் இவ்வியக்கத்திற்கு துணை நிற்போம்.

*- உல. ரவீந்திரன்*
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தேனி மாவட்டம்.*

* * *






# "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!"

டாக்டர் கரு. நாகராசன்

உண்டியைத் தந்தவர் உயிரினைத் தந்தார்க்கு
ஒப்பாவார் என்றிட்டார் சாத்தனார் - அதன்
உயர்வினை மேகலையில் சாற்றினார் - புகழ்
எண்டிசை ஓங்கவே ஆண்டநல் வேந்தரும்
ஏழைகள் பசிமாற்றும் தொண்டு - செய்தே
இறவாத புகழ்பெற்ற துண்டு!

பள்ளிக்குச் சென்றிடும் பாலகர் நெஞ்சினில்
பால்வார்க்க எண்ணினார் ஒருவர் - ஏழை
பசிமாற்றிக் கல்விதந்த தலைவர் - அந்த
வள்ளலின் வாரிசாய் வண்டமிழ் நாட்டினை
வாழ்விக்கும் அம்மாவின் ஆட்சி - எளியோர்
வாழ்வெல்லாம் வளம்பொங்கும் மாட்சி!

அரும்பசி தூண்டவே ஆலயம் செல்லுவோர்
அகப்பசி தூண்டவே வாடினார் - யாரும்
அளிப்பாரா உணவென்று தேடினார் - அன்று
வருந்திய பக்தர்தம் முகமெலாம் மலரவே
வழங்குகிறார் அன்னதானம் தினமும் - தாயை
வாழ்த்திடுது அருளாளர் மனமும்!

வான்பொய்த்த காரணத்தால் வளம்பொய்த்த உழவர்கள்தம்
வறுமைத்தீ அணைக்கின்ற நீராய் - அம்மா
வாஞ்சையுடன் அரிசிதந்தார் நேராய் - இங்கு
தேன்துளியும் கசக்குமெனச் சிறுமதியோர் கூறிடலாம்,
தெய்வத்தாய் எண்ணமெலாம் வெல்லும் - தமிழ்த்
தேசத்தின் சிறப்பைஅவை சொல்லும்!

# கடலூர் மாவட்டத்தில் அனைவரும் பாராட்டும் அன்னதானத் திட்டம்

திருக்கோயில்களுக்கு சாமி தரிசனம் வேண்டி வரும் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கோடு மாண்புமிகு தமிழக முதல்வரால் கொண்டு வரப்பெற்ற திட்டம் தான் அன்னதானத் திட்டம். இதன்படி, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தின் கீழ் வரும் தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, கடலூர் மாவட்டத்தில் ஐந்து திருக்கோயில்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அருள்மிகு பாடலேசுவரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்

கடலூர் நகர், திருப்பாதிரிப் புலியூரில் உள்ள அருள்மிகு பாடலேசுவரர் திருக்கோயில் சைவத் திருத்தலங்களில் பிரசித்திப் பெற்ற திருக்கோவிலாகும். அப்பர், சம்பந்தர் ஆகியோரால் பாடல்பெற்ற திருத்தலமாகும். இத்திருக்கோயிலில் அரசின் அன்னதானத் திட்டம் துவங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தொய்வின்றி சிறப்பாக நடைபெற நன்கொடைகள் வழங்குவதற்கான துறைத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.தங்கசுவாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், கடலூரில் நடைபெற்றது. இத்திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு 31.12.2002 வரை ரூ.4,82,171/– ரொக்கமும், அன்னதான உண்டியல் மூலம் ரூ.1,37,299 வருமானம் வரப்பெற்றுள்ளது. இதுவரை 17,252 ஆண்களும், 14,164 பெண்களும் ஆக மொத்தம் 31,416 பேர் உணவு சாப்பிட்டுள்ளனர். அன்னதானத் திட்டத்திற்காக இதுவரை ரூ.2,66,188 செலவிடப் பட்டுள்ளது.



## அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயில், திருவகீந்திரபுரம்:

திருவகீந்திரபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயில் நடுநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகும். ஆதிசேஷன் நிர்மாணித்தத் திருத்தலம் ஆதலால், திருவகீந்திரபுரம் என்று பெயர் ஏற்பட்டது. கருடன் விரஜாத் தீர்த்தத்தையும், ஆதிசேஷன் பாதாளக் கங்கைத் தீர்த்தத்தையும் கொண்டு வந்து பரமனுக்குச் சமர்ப்பித்தத் திருத்தலம். மணவாள மாமுனிகள், திருமங்கை ஆழ்வார் ஆகியோரால் மங்களா சாசனம் பெற்ற திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் அரசின் அன்னதானத் திட்டம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு எம்.சி. சம்பத் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தொய்வின்றி சிறப்பாக நடைபெற நன்கொடைகள் வழங்குவதற்கான துறை தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தங்கசுவாமி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கடலூரில் நடைபெற்றது. இத்திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு 31.12.2002 வரை ரூ.4,99,732/– ரொக்கமும், 1,071 கிலோ அரிசியும் நன்கொடையாக வரப்பெற்றுள்ளது. அன்னதான உண்டியல் மூலம் ரூ.4,96,638 வருமானம் வரப்பெற்றுள்ளது. இதுவரை 19,978 ஆண்களும், 15,469 பெண்களும் ஆக மொத்தம் 35,447 பேர் உணவு சாப்பிட்டுள்ளனர். அன்னதானத் திட்டத்திற்காக இதுவரை ரூ.3,36,347 செலவிடப்பட்டுள்ளது.



## அருள்மிகு விருத்தகீரிஸ்வரர் திருக்கோயில், விருத்தாசலம்

' விருத்தாசலம் அருள்மிகு விருத்தகீரிஸ்வரர் திருக்கோயில் சைவத் திருத்தலங்களில் பழமை வாய்ந்த பிரசித்திப் பெற்ற திருக்கோயிலாகும். மலைகளிலே பழமையான மலையின் மீது அமைந்துள்ள திருக்கோயிலாதலால் சுவாமியை பழமலை நாதர் என்றும் அழைப்பார்கள். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரால் பாடல் பெற்ற திருத்தலமான இத்திருக் கோயில் அரசின் அன்னதானத் திட்டம் துவங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயில் அன்னதானத் திட்டம் தொய்வின்றிச் சிறப்பாக நடைபெற நன்கொடைகள் வழங்குவதற்கான துறைத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.தங்கசுவாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விருத்தாச்சலம் வட்டம், மணவாள நல்லூரில் நடைபெற்றது. இத்திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு 31.12.2002 வரை ரூ.85,505 நன்கொடையாக வரப்பெற்றுள்ளது. அன்னதான உண்டியல் மூலம் ரூ.24,204 வருமானம் வரப்பெற்று உள்ளது. இதுவரை 8,582 ஆண்களும், 5,715 பெண்களும் ஆக மொத்தம் 14,297 பேர் உணவு சாப்பிட்டுள்ளனர். அன்னதானத் திட்டத்திற்காக இதுவரை ரூ.1,16,546 செலவிடப்பட்டுள்ளது.

## அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர், விருத்தாசலம் வட்டம்.

விருத்தாச்சலம் வட்டம், மணவாள நல்லூர் கிராமம் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், திருமுருகன் கோயில் கொண்டுள்ள பிரார்த்தனைத் திருத்தலங்களில் மிகப் புகழ் பெற்ற திருக்கோயிலாகும். குடும்பத்தின் கடைசிப் பிள்ளையை குட்டி என்றும், கொளஞ்சி என்றும் அழைக்கும் தமிழ் மரபிற்கேற்ப, சிவகுடும்பத்தில் இளைய குமாரரான முருகனுக்கு இங்கு கொளஞ்சியப்பர் என திருநாமம் சூட்டப்பட்டு வழிபடப்படுகிறது. இத்திருத்தலத்தில் கொளஞ்சியப்பர் உருவத் திருமேனியும் அல்லாமல் கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனியும் அல்லாமல், உருவமும் – அருவமும் கலந்த அருவுருவத் திருமேனிக் கொண்டு ஒரு படத்தின் வடிவில் காட்சி தருகிறார். இத்திருக்கோயிலில் அரசின் அன்னதானத் திட்டம் துவங்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தொய்வின்றி சிறப்பாக நடைபெற நன்கொடைகள் வழங்குவதற்கான துறைத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.தங்கசுவாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், மேற்படி திருக்கோயில் வளாகத்தில் நடைபெற்றது. இத்திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு 31.12.2002 வரை ரூ.71,808 நன்கொடையாக வரப்பெற்றுள்ளது. இதுவரை 8,694 ஆண்களும், 7,102 பெண்களும் ஆக மொத்தம் 15,796 பேர் உணவு சாப்பிட்டுள்ளனர்.

## அருள்மிகு வீரஆஞ்சநேய சுவாமி திருக்கோயில் திருப்பாதிரிப்புலியூர்

கடலூர் நகர், திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வீர ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில் ஒரு பிரசித்தி பெற்ற திருக்கோயிலாகும். கடலூர் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களால் அரசின் அன்னதானத் திட்டம், தொடங்கி வைக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தொய்வின்றிச் சிறப்பாக நடைபெற நன்கொடைகள் வழங்குவதற்கான துறை தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.தங்கசுவாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மேற்படித் திருக்கோயில் வளாகத்தில் நடைபெற்றது. இத்திருக்கோயில் அன்னதான திட்டத்திற்கு 31.12.2002 வரை ரூ.1,43,480 ரொக்கமும், 75 கிலோ அரிசியும் நன்கொடையாக வரப்பெற்றுள்ளது. அன்னதான உண்டியல் மூலம் ரூ.18,857 வருமானம் வரப்பெற்றுள்ளது. அன்னதான உண்டியல் மூலம் ரூ.40,128 வருமானம் வரபெற்றுள்ளது. இதுவரை 4,251 ஆண்களும், 2,770 பெண்களும் ஆக மொத்தம் 7,021 பேர் உணவு சாப்பிட்டுள்ளனர்.

அரசு அறிவித்த மிகச்சீரிய திட்டங்களில் ஒன்றான அன்னதானத் திட்டம், கடலூர் மாவட்டத்தில் மேற்கண்ட ஐந்து திருக்கோயில்களிலும் நன்கொடையாளர்களின் பங்களிப்புடன், அனைத்துத் தரப்பினரும் பாராட்டும் வகையில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

- என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.

* * *



# விண்ணைக் கடந்த வீராங்கனை

இந்திய வரைப்படத்தில் ஒரு சிறுபுள்ளியாக விளங்கியது, ஹரியானா மாநிலத்தின் கர்னால் என்ற ஊர்... திடீரென்று அந்த ஊரின் பெயர் உலகப் புகழ் பெறுகிறது. அந்த ஊரில் பிறந்த பெண்ணின் பெயரை இன்பத்தோடு உச்சரித்து வியந்து பாராட்டிய உலகம் அதே நேரத்தில் துன்பக்கடலிலும் வீழ்ந்து துடித்தது.

உலகின் இதயத் துடிப்பை ஒரு நிமிடம் நிற்க வைத்த அந்தப் பெண்மணியின் பெயர் தான் கல்பனா சாவ்லா.

கர்னால் என்ற ஊரில் வளமான குடும்பத்தில் 1962 ஆம் ஆண்டில் பிறந்த கல்பனா சாவ்லா குடும்பத்தின் கடைசிப் பெண் குழந்தை ! "மாண்ட்டு" என்று குடும்பத்தால் செல்லமாக அழைக்கப்பெற்ற அச்சிறுமி தாகூர் பால் நிகேதன் சீனியர் செகண்டரி பள்ளியில் எட்டாம் வகுப்பில் படித்தார். அப்போது விண்ணில் உயர்ந்து பறக்கும் விமானத்தைப் பார்த்து, " நானும் அதைப்போல ஆகாயத்தில் பறந்து நட்சத்திரங்களை கையில் பிடிப்பேன்... நிலவில் இறங்கி நடப்பேன் !" என்று தன் தோழியரிடம் கூறிய கல்பனா சாவ்லா அதே எண்ணத்துடன் தன் பள்ளிப் படிப்பையும், 1982—இல் பொறியியல் கல்லூரியில் பட்டப் படிப்பையும் முடித்தார். பின்னர் அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக் கழகத்தில் 1988—இல் வானியல் பாடத்தில் "முனைவர்" பட்டம் பெற்றார். அதே ஆண்டில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா"வில் சேர்ந்தார்.

"வானில் பறப்பேன், விண்மீன்களை நெருங்கிப்போய் நிலாவுடன் உலாவுவேன்" என்றெல்லாம் அவர் கண்ட கனவு நனவாகியது. 1997 ஆம் ஆண்டில் அமெரிக்கா விண்வெளியில் செலுத்திய "கொலம்பியா" என்ற விண்வெளி ஓடத்தில் அவர் முதன் முதலாகப் பயணம் செய்து இந்தியப் பெண் இனத்துக்குப் பெருமையும், எழுச்சியும் சேர்த்தார். ஆசியக் கண்டத்திலேயே விண்வெளியில் பாய்ந்து ஆராய்ச்சி செய்த முதல் பெண் !" என்ற பெருமையை அவர் பெற்றார். எண்ணியதை எண்ணியப்படியே எய்திய திண்ணிய மனம் படைத்த அவர் இரண்டாவது முறையாக கடந்த ஜனவரி 16ஆம் தேதி அதே கொலம்பியா விண்வெளி ஓடத்தில் பயணம் செய்தார்.

விண்ணில் தன் 16ஆம் நாள் ஆராய்ச்சிப் பயணத்தை வெற்றிக்கரமாக முடித்தார் கல்பனா. விண்வெளி ஆராய்ச்சிக்கு வேண்டிய தகவல்களை எல்லாம் கொலம்பியா ஓடத்தின் "ரோபோ" இயக்கும் பணிபுரிந்த கல்பனா சாவ்லா, "நாசா" நிறுவனத்துக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார்.

கடந்த பிப்ரவரி முதல் நாள்... இந்திய நேரப்படி மாலை 6.38க்கு கொலாம்பியா ஓடம் பூமிக்குத் திரும்ப அனுமதி பெற்றது. 6.45க்கு பூமியை நோக்கிப் புறப்படுகிறது ஓடம். பூமியிலிருந்து பல இலட்சம் கிலோ மீட்டர் தொலைவிலிருந்து தன் வெற்றிப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய கொலாம்பியா ஓடத்தின் வெப்பத்தை அளவிடும் கருவிகள் செயலிழப்பதாக 7.23க்கு பூமியிலிருந்து எச்சரிக்கைச் செய்தி அனுப்பப்படுகிறது. இரவு 8.59க்கு மூன்று இலட்சம் அடி தொலைவில் பூமியை நெருங்கும் அந்த ஓடத்தின் டயர்களில் காற்றமுத்தம் குறைவதைக் கண்டு "நாசா" நிலையம் அவசரச் செய்தி அனுப்புகிறது. பூமிக்குத் திரும்ப இன்னும் 16 நிமிடங்களே இருக்கின்றன. ஓடம் விரைவில் திரும்பும் என்ற மகிழ்ச்சியில் உலகமே எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. ஆனால்...

எதிர்பாராத விதமாக இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் அடி உயரத்தில் கொலம்பியா ஓடம் வெடித்துச் சிதறியது...

அதை அறிந்த இந்தியாவின் இதயம் வெடித்தது...

பெண்ணினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய கல்பனா சாவ்லா விண்வெளியிலேயே விடைபெற்று நட்சத்திரங்களுடன் கை குலுக்கப் போய்விட்டார். உலகமே அதிர்ச்சியில் செயலிழந்தது.

இந்தியப் பெண் குலமே கல்பனா சாவ்லாவின் சாதனையைக் கண்டு எழுச்சிப் பெற்றது. உலகம் எங்கிலும் அவருடைய நினைவில் அஞ்சலியும், வீர வணக்கமும் செய்கின்றனர்.

கல்பனா தான் படித்த பள்ளியிலிருந்து ஆண்டுக்கு 2 மாணவிகளை நாசாவுக்கு அழைத்து வந்து அறிவியல் நேர்முகப்பாடம் நடத்துவார். இது வரை 10 மாணவிகள் அவரிடம் பயிற்சி பெற்றுள்ளனர். தங்கள் அறிவியல் ஆசிரியையை, ஆராய்ச்சி விஞ்ஞானியை வரவேற்க எண்ணி, அவர் பயின்ற பள்ளி, கல்லூரி, "நாசா" நிலையம் ஆகியவை பெரிய விழாக்களுக்கு ஏற்பாடு செய்திருந்தன. நம் கண்களில் கண்ணீரை நிறைத்து, இதயத்தில் சுமையை ஏற்றி இப்போது கல்பனா நம் எண்ணத்தில் நிறைந்து விட்டார்.

• • •

---

**பெண்மைக்குப் பெருமை சேர்த்த கல்பனா சாவ்லா, சாதனையின் சிகரத்தில் உயர்ந்து விண்ணிலேயே விரைந்து மறைந்ததைக் கேள்வியுற்ற உலகத் தலைவர்கள் அதிர்ச்சி அடைந்து அஞ்சலி செலுத்தினர்.**

**நம் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா, "நாம் கண்ணீரைத் துடைத்துக் கொள்வோம். சாதனைச் செய்த அந்த வீரப்பெண்மணியின் ஊக்கத்தையும், முயற்சியையும்" நாம் பின்பற்றுவோம் என்று கூறி, இனி ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பில் சுதந்திர தின விழாவில் அந்த விண்வெளி வீராங்கனை நினைவாக, " தைரியம் மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது" ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் தங்கப் பதக்கத்துடன் வழங்கப்படும் என்று அறிவித்தார்.**

---

*இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி விண்ணில் செலுத்திய "மெட்சாட்" என்ற செயற்கைக் கோளுக்கு "கல்பனா – I" என்ற பெயரைச் சூட்டியது. விண்ணில் பறந்து கொண்டேயிருக்கும் ஆசையுடன் வாழ்ந்த கல்பனா சாவ்லா, இப்போது "கல்பனா – I" என்ற பெயருடன் பறந்துக் கொண்டிருக்கும் செயற்கைக் கோளில் இணைந்து பறந்து கொண்டிருக்கிறார் என்ற ஆறுதலை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நமக்குத் தந்தது.*

*கல்பனா சாவ்லா பிறந்த ஹரியானா மாநிலத்தில் இந்த ஆண்டு முதல் மெட்ரிக் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிக்கு "கல்பனா சாவ்லா தங்கப்பதக்கம்" பரிசாக வழங்கப்படும் என்று அந்த மாநில முதல்வர் அறிவித்துள்ளார்.*

*ஹரியானா பொறியியல் கல்லூரியில் ஒவ்வோர் ஆண்டுப் படிப்பிலும் முதல் மதிப்பெண் பெறும் 4 மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.*

*அவர் படித்த பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் ஆண்டு தோறும் வான் – பொறியியலில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிக்கு "கல்பனா சாவ்லா பரிசு" வழங்கப்படுகிறது.*

*ஹரியானா மாநிலத்தின் அம்பாலா, சிர்ஸா, பரிதாபாத் நகரங்களில் உள்ள மகளிர் பாலிடெக்னிக்குகளுக்கு "கல்பனா சாவ்லா" பெயரிடப்படுகிறது.*

*விண்ணில் பறந்து நம் எண்ணத்தில் நிறைந்த அந்த இந்தியப் பெண்மணியின் நினைவு, அவர் பெயரில் அமைந்த கல்விக் கூடங்களில் படிப்போருக்கு ஊக்கம் தரும், "அவர் பெயரில் வழங்கப்படும் பரிசுகளையும், பதக்கங்களையும் பெறுவோர் புதிய உள்ளக் கிளர்ச்சி பெற்று உயர்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக "பெண் சிசுவைக் கருவிலேயே அழிக்கும் கொடிய பழக்கத்தை வேரோடு அழிப்போம்" என்ற தமிழக முதல்வரின் திட்டம், கல்பனா சாவ்லாவின் தியாகத்தால் – புதிய வேகத்துடன் ஹரியானா மாநிலத்தில் செயல்படுத்தப்படும் என்று அந்த மாநில அரசு அறிவித்துள்ளது.*

மாவட்டத்தில் சுகாதாரம் வலியுறுத்தப்பட்டு, செயல்படுத்தப் பட்டு வருகிறது.



இம்மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 343 ஊராட்சிகளிலும் தனியார் வீடுகளில் 91,820 கழிப்பிடங்கள் அமைக்க மத்திய, மாநில அரசுகள் ரூ.573.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 41,135 கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது . மேலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகம் அமைத்திட வளாகம் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் 171 சுகாதார வளாகம் கட்ட ரூ. 3.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 61 சுகாதார வளாகம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன. முழு சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ள இடங்களில் தண்ணீர் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

மேலும் இம்மாவட்டத்திற்கு சாக்கடை, கழிவுநீர், குப்பைகள் அகற்றுவதற்கு ரூ.31.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான இடங்களில் பாதாளச் சாக்கடை கட்டவும் பணிகள் நடைபெற்று வருகிறது. பள்ளிகளில் கழிப்பிடம் அமைக்க ஒரு பள்ளிக்கு ரூ.20 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 142 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 396 பள்ளிகளில் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஊரக சுகாதார அங்காடி இம்மாவட்டத்தில் 35இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் அமைக்கவுள்ளதில் இதுவரை 9 இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் தனியார் இல்ல கழிப்பிடங்கள் 30,607ம், மகளிர் சுகாதார வளாகம் 21 ம், 396 பள்ளிகளில் கழிப்பிட வசதியும், 9 ஊரக சுகாதார அங்காடியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் முழு சுகாதார முனைப்பு இயக்கமாக அனைத்து வீடுகளிலும் சுகாதாரக் கழிப்பறைகள், பெண்களுக்கான கழிப்பறை வளாகங்கள், பள்ளிகள் அனைத்திலும் சுகாதாரக் கழிப்பறைகள், கிராமச் சுகாதாரப் பொருட்களின் அங்காடிகள் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. சுகாதாரம் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள், சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றது. இம்மாவட்டத்தில் 1,000 இடங்களில் சுவர் விளம்பரம் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் சுகாதாரம் குறித்து ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

சுகாதாரத் திட்டப் பணியாளர்கள் பாமர மக்களிடம் சென்று நவீனக் கழிப்பிடங்களை உபயோகிக்கும் முறைகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் விளக்கிக் கூறி விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊரகப் பகுதிகளிலும் பொதுமக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரத்துடன் கழிப்பிட வசதி, வடிகால் அமைத்து சுகாதாரத்தைக் காத்தல் போன்ற அனைத்து சுகாதாரப் பணிகளையும் விரைவாகச் செயல்படுத்திட அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து முழு சுகாதாரம் உள்ள ஒரு மாவட்டமாக உருவாக்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு செயலாற்றி வருகிறார்.

**- எம். ஆர். லிங்கம்,**
*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*
*ஈரோடு மாவட்டம்.*



## கரூர் மாவட்டம்
# கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்கப்பட்ட புதிய பாலம் மற்றும் குடிநீர்த் தொட்டி

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி, மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டம் கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்ட இரண்டு குடிநீர் திட்டம் மற்றும் ஒரு சிறுபாலம் கட்டும் பணி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

கடவூர் ஊராட்சி ஒன்றியம் வரவணை ஊராட்சியைச் சேர்ந்த ஒடுகம்பட்டி என்ற குக்கிராமம் 600 பேர் கொண்ட ஒரு சிற்றூராகும். காணியாளம்பட்டியில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இச்சிற்றூர் அதிகமான எண்ணிக்கையில் கூலித் தொழிலாளர்களைக் கொண்டது. இந்தக் கிராமத்தில் சென்ற ஆண்டு வரை 2 கைப்பம்புடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறு மட்டுமே இருந்தது. தினசரி அதிகாலையில் எழுந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கரூருக்கும் இதர இடங்களுக்கும் கூலி வேலைக்குச் செல்லும் மக்களுக்கு, இருக்கும் இரண்டு கைப்பம்புகளில் அனைவரும் குறுகிய நேரத்தில் தண்ணீர் அடிப்பது சிரமமாக இருந்தது. இத்திட்டம் நிறைவேற்றப்படும் வரை தண்ணீர்ப் பிரச்சினை அன்றாடம் இருந்து வந்தது.

இவர்களின் தண்ணீர்ப் பிரச்சினையை அறிந்த கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.சின்னசாமி அவர்கள் இவர்களின் தேவையை அறிந்து தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அனுமதி வழங்கினார்.

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி இப்பணி 2001–2002–ஆம் ஆண்டில் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

இன்று 4 பொது விநியோகக் குழாய்கள் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 முதல் 15 காலன் குடிநீர் குறித்த நேரத்தில் மிக எளிதாகப் பெற்று வரும் இக்கிராமத்தில் ஏழை எளிய மக்களின் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

இன்று இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தண்ணீர் வழங்கப்படும் நிகழ்வு இந்த ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒரு பன்னீர் வழங்கும் நிகழ்வாக மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

கடவூர் ஊராட்சி ஒன்றியம் வரவணையிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவிலும், ஒடுகம்பட்டியிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிலும், பொன்னன் தோட்டம் அருகில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்பாலம் கட்டுவதற்கு முன், இந்த ஓடையில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதால், வரவணையில் உள்ள சுமார் 150 கூலித் தொழிலாளர்கள் ஒடுகம்பட்டியில் உள்ள தோட்டங்களுக்கும், ஒடுகம்பட்டியில் உள்ள சுமார் 200 கூலித் தொழிலாளர்கள் வரவணைப் பகுதியில் உள்ள தோட்டங்களுக்கும் சென்று கூலி வேலை செய்ய மிகவும் சிரமப்பட்டார்கள். மேலும் விவசாயிகள் வண்டி வாகனங்கள் மூலம் தோட்டங்களிலிருந்து தானியங்களை தமது இருப்பிடங்களுக்கு எடுத்துச் செல்ல 20 கி.மீ. சுற்றி வர வேண்டியிருந்தது.



# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் – மதுரை திருமலைநாயக்கர் மகால்

மதுரை மாநகரின் மத்தியில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் மகால் 1636ஆம் ஆண்டில் மன்னர் திருமலை நாயக்கர் அவர்களால் கட்டப்பட்டதாகும். இத்தாலிய நாட்டின் கட்டடக்கலை வல்லுநர்களின் உதவியோடு அமைக்கப்பட்ட இம்மகால் தான் மன்னர் திருமலைநாயக்கர் அவர்களின் அரண்மனையாகத் திகழ்ந்தது.



திருமலைநாயக்கர் அரண்மனை சொர்க்க விலாஸ், ரெங்கவிலாஸ் என இரண்டு முக்கிய பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. மன்னர் குடும்பம் தங்கும் அறைகளும், பொழுது போக்கு அரங்குகளும், சிறு அறைகள், ராணிகள் தங்கும் அந்தப்புரங்கள், நீச்சல்குளம், தோட்டம் அனைத்தும் அரண் மனை வளாகத்திலேயே அமைந்திருந்தது.

மன்னர் திருமலைநாயக்கர் பிரசித்திபெற்ற பண்டிகைகளாக நவராத்திரி, சித்திரைத் திருவிழா, மாசிவிழா போன்ற பண்டிகைகளை இந்த அரண்மனையில் தான் கொண்டாடி யுள்ளார். தினம்தோறும் அரண்மனையில் நாட்டியம் மற்றும் இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த அரிய மாளிகையின் வளாகம் தற்போதைய தோற்றத்தைவிட நான்கு மடங்கு பெரியதாக இருந்தது. மன்னர் திருமலைநாயக்கரின் பேரன் சொக்கநாத நாயக்கரால் இந்த அரண்மனையிலிருந்த மதிப்புமிக்க பொருட்கள் வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதன் காரணமாக அரண்மனை தன் பொலிவினை இழந்தது.

பின்னர் 1822ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியின் போது மன்னர் நிப்பர் அவர்களால் திருமலைநாயக்கர் அரண்மனை மாவட்ட நிர்வாகத்திற்காகப் பயன்படுத்தப் பட்டது.

பின்னர் இந்த அரண்மனை "நினைவுச்சின்னமாக'' அறிவிக்கப்பட்டு தற்போது தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வகத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தின் சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகத் திகழும் இந்த அரண்மனையைக் கண்டுகளிக்க தினம்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தினம்தோறும் காலை 9 மணி முதல் 1 மணி வரையிலும், பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரையிலும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். பார்வையாளர் கட்டணமாக ரூ.1/– மட்டும் வசூலிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாடு அரசால் 1981–ஆம் ஆண்டு முதல் திருமலை நாயக்கர் மகாலில் மன்னர் திருமலைநாயக்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சிலப்பதிகாரத்திலிருந்து சில காட்சிகளையும் விளக்கும் வகையில் ஒலி/ஒளிக்காட்சி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1984–ஆம் ஆண்டு முதல் சுற்றுலாத்துறையின் மூலம் இந்த ஒலி/ஒளிக்காட்சி அமைப்பு பராமரிக்கப்பட்டு தினம்தோறும் மாலையில் இரண்டு காட்சிகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நடத்தப்படுகிறது. இந்த ஒலி,ஒளிக்காட்சிக்கு நுழைவு கட்டணமாகப் பெரியவர்களுக்கு ரூ.10/–ம், சிறியவர்களுக்கு ரூ.5/–ம் வசூலிக்கப்படுகிறது.

தொன்மை வாய்ந்த பழங்காலச் சின்னமாகவும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகவும் திகழும் மன்னர் திருமலை நாயக்கர் மகால் மதுரை மாவட்டத்தின் திலகமாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

- எஸ்.நாகராசன்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.



# முழு சுகாதாரத்தை முனைப்பாகச் செயல்படுத்தும் ஈரோடு மாவட்டம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கேற்ப நோய் இல்லாமல் வாழ சுற்றுப்புறச் சுகாதாரம் மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு மனிதனும்



அன்றாட வாழ்வில் தன்னை சுகாதாரமாக வைத்துக் கொண்டால் அதுவே அவனுடைய ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கும். தனிப்பட்ட மனிதன் சுகாதாரத்துடன் வாழ்ந்தால் அது சமுதாயத்தையும் தூய்மைப்படுத்தும். ஏனென்றால் சுகாதாரம் மேம்படும் போது தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம். உடல் நோயின்றி இருந்தால் மனமும், செயல்பாடும் சிறந்து விளங்கும். சுகாதாரத்தின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு ஈரோடு மாவட்ட பொது மக்கள் சுகாதாரத்துடன் வாழ மாவட்ட ஆட்சியர் திரு. கா. பாலச்சந்திரன்.இ.ஆ.ப., அவர்கள் முழு சுகாதாரத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதில் பல்வேறு வழிகளில் முனைப்புடன் செயல்படுத்துகிறார். மாவட்டம், முழு சுகாதாரம் அடைய குடிநீரை சுத்தப்படுத்திக் காய்ச்சிக் குடித்தல், கழிவுநீரை அகற்றுதல், குப்பைகளை நவீன முறையைக் கையாண்டு சுழற்சி முறையில் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல், தனிமனிதன் சுத்தம் பேணுதல், வீட்டுச் சுகாதாரம், உணவு சுத்தம், கிராமச் சுகாதாரம் போன்ற பல்வேறு வழிகளில்





இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு தமது தொகுதி மக்களின் நலனில் அக்கரை கொண்ட கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சின்னசாமி அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம் கட்ட பரிந்துரை செய்தார்.

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி இப்பணி 2001–2002–ஆம் ஆண்டில் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினால் வரவணையில் உள்ள சுமார் 150 கூலித் தொழிலாளர்களுக்கும், ஒடுகம்பட்டியில் உள்ள சுமார் 200 கூலித் தொழிலாளர்களுக்கும் சிரமமின்றி அப்பகுதிகளில் உள்ள தோட்டங்களுக்குச் சென்று வரவும், விவசாயிகள் வண்டி வாகனங்களில் தானியங்களை தமது இல்லங்களுக்கு மிக எளிதாகக் கொண்டுச் செல்லவும் மேலும் பொது மக்களுக்கும் நல்ல பயனளிப்பதால் இந்நிகழ்வு இப்பகுதி ஏழை எளிய மக்களின் வாழ்வில் வசந்தம் வீசும் நிகழ்வாக மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

**அ. சந்திரசேகரன்**

*செய்தி– மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.*

## மகளிர் தினம் உருவானது எப்படி?

1909 ஆம் ஆண்டு மார்ச்சு 8ஆம் நாள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நெசவுத்தொழில் மற்றும் உடை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த மகளிர் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வலியுறுத்தி தெருவுக்கு வந்து போராடினார்கள். சுமார் 30 ஆயிரம் பெண்கள் இடைவிடாது 13 வாரங்கள் போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டம் வெற்றி பெற்று வேலை நேரம் 8 மணியாகக் குறைக்கப்பட்டு ஊதியமும் உயர்த்தப்பட்டது.

இப்போராட்டம் துவங்கிய மார்ச்சு 8ஆம் நாளை மகளிர் தினமாக அறிவிக்கலாம் என்ற கிளாரா ஜெட்கின் என்பவரின் யோசனை ஏற்கப்பட்டு **அகில உலக உழைக்கும் மகளிர் தினம்** உருவானது. 1975க்குப் பின்னர் தான் இந்நாளை பெண்கள் தினமாக ஐக்கிய நாடுகள் அவை ஏற்றுக் கொண்டது.



# தேனி மாவட்டத்தில் மகளிர் குழுக்களின் சிறப்பான செயல்பாடு!



தேனி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பத்து தொண்டு நிறுவனங்கள் மூலமாக அமைக்கப்பட்ட 2119 சுயஉதவிக் குழுக்களில் 34,381 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 18 முதல் 60 வயது வரை உள்ள திருமணமான வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 14,390 தாழ்த்தப்பட்ட மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர்.

தேனி மாவட்டத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களில் மொத்த சேமிப்பு ரூ.399.91 இலட்சம். அவர்கள் தங்களுக்காக உறுப்பினர்களின் தேவைக்கேற்ப குறைந்த வட்டியில் சிறு கடன்கள் கொடுத்து வசூல் செய்து வருகின்றனர். மொத்த சிறு கடன்களின் எண்ணிக்கை 11,5876. இவற்றின் மதிப்பு ரூ.1,677.74 இலட்சம்.

மகளிர் திட்டத்தில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்குப் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.25,000 வீதம் சுழற்சி நிதியாக 255 குழுக்களுக்கு ரூ.63.75இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொழில் செய்வதற்காகத் தொழிற்கடன் 105 குழுக்களுக்கு ரூ.153.99 இலட்சம் வழங்கப்பட்டு, தேனி மாவட்டத்தில் நோட்புக் தயாரித்தல், தென்னை நார் மூலமாகக் கயிறு திரித்தல் மற்றும் கால் மிதியடி தயாரித்தல், இலவம் பஞ்சு மூலம் மெத்தை, தலையணை தயாரித்தல், சலவைப் பவுடர் தயாரித்தல், குளியல் சோப்புத் தயாரித்தல், கிளீனிங் பவுடர் தயாரித்தல், சொட்டு நீலம் தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல், மூலிகைப் பொடிகள் தயாரித்தல், தேங்காய் எண்ணெய் தயாரித்தல், டிராக்டர் வாடகைக்கு விடுதல், மினி பஸ் இயக்குதல், புளி கொட்டரை அமைத்து பயன்படுத்துதல், பாத்திரங்கள், சேர் வாடகைக்கு விடுதல் பல்பொருள் அங்காடிகள் வைத்து நடத்துதல், பால்பண்ணை நடத்துதல், கறவை மாடு மற்றும் கன்று வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மினி ரைஸ்மில் போன்ற பல்வேறு தொழில்களை திறம்பட நடத்தி வருகின்றனர். ஜூன் 2002 வரை வழங்கப்பட்ட தொழில் கடன் மற்றும் சுழற்சி நிதியில் இதுவரை 81 இலட்சம் ரூபாய் சுயஉதவிக் குழுவினர் வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தியுள்ளனர்.

மகளிர் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான உறுப்பினர் பயிற்சி 4 பாடங்கள், ஊக்குனர் பிரதிநிதி பயிற்சி 3 பாடங்கள், பகுதிக் கூட்டமைப்பு பயிற்சி 3 பாடங்கள் வழங்கப்படுகிறது. மேலும், தமிழக அரசின் புதிய திட்டமான 5 ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 2001–2002–இல் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 2,209 மகளிருக்கும், 2002–2003–இல் இதுவரை 1,461 மகளிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த 62 மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 29 நெசவாளர் மகளிருக்கு (தையல் தொழிலில்) வாழ்க்கைத் தொழில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

16.9.2002 அன்று மேல்மங்களத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட



## சேலம் மாவட்டத்தில்
## பொது விநியோகத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகள்

சேலம் மாவட்டத்தில் செயல்படும் 1,231 நியாயவிலைக்கடைகளுக்கு 4 முதன்மைச் சங்கங்கள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வு செய்யப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இக்கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 7,88,486. இக்கடைகள் மூலம் ஏப்ரல் 2002 முதல் நவம்பர் 2002 முடிய ரூ.51.13 கோடி அளவிற்குக் கட்டுப்பாட்டுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் நியாயவிலைக் கடைகள்**

இம்மாவட்டத்தில் ஓமலூர் மற்றும் மேட்டூர் வட்டங்களில் 4 மகளிர் அமைப்புகளாலும், 6 தனிநபர் மகளிராலும் மொத்தம் 11 நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்**

இம்மாவட்டத்தில் 15 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன இவைகளுடன் 92,875 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, மாதம் ஒன்றுக்கு சுமார் 570 சி.லி மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**கூப்பன் மூலம் அரிசி வழங்கும் முறை**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அரிசியினைக் கூப்பன் மூலம் 1.7.2002 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டதால் 1,06,922 போலி குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

**ஊட்டி தேயிலைத் தூள் விற்பனை**

தேயிலை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளின் நலன் கருதி, நியாயவிலைக் கடைகள் மூலம் தேயிலைத்தூள் விற்பனை செய்ய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் ஏப்ரல் 2002 முதல் நவம்பர் 2002 முடிய நியாயவிலைக் கடைகள் மூலம் ஊட்டி தேயிலைத் தூள் 99,403 கிலோ விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறியீட்டில் விற்பனை அளவு 102% ஆகும். 2002–03ஆம் ஆண்டில் அனைத்து மாதங்களிலும் மாதாந்திரக் குறியீடு எய்தப்பட்டுள்ளது.

**அரசு உப்பு விற்பனை**

பொதுமக்களின் நலன் கருதி, நியாயவிலைக் கடைகள் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை செய்ய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் ஏப்ரல் 2002 முதல் நவம்பர் 2002 முடிய நியாயவிலைக் கடைகள் மூலம் 509 மெ.டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறியீட்டில் விற்பனை அளவு 68% ஆகும். இத்திட்ட முன்னேற்றத்தில் சேலம் மாவட்டம் மாநிலத்தில் ஆறாவது இடத்தில் உள்ளது.

**காதிப் பொருட்கள் விற்பனை**

கிராமத் தொழில் கைவினைஞர்களின் நலன் கருதி, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் காதிப் பொருட்கள் நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஜூலை 2002 முதல் நவம்பர் 2002 முடிய 12.60 இலட்சம் அளவிற்குப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறியீட்டில் விற்பனை அளவு 12.5% இத்திட்டத்தில் சேலம் மாவட்டம் மாநிலத்தில் முதலிடத்தில் வகிக்கிறது.

**மலிவு விலை வேட்டி, சேலை விற்பனை**

கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, நியாயவிலைக் கடைகள் மூலம் வேட்டி, சேலை விற்பனை செய்ய அரசு முடிவெடுத்ததன்படி, இம்மாவட்டத்தில் 6.8.2002 முதல் விற்பனை துவக்கப்பட்டு, நவம்பர் 2002 முடிய 91,177 சேலைகளும், 84,828 வேட்டிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ 57.92 இலட்சம் ஆகும். இதனால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 3.25% விளிம்புத் தொகையாக ரூ.1,88,237/– மற்றும் டிரங்க் பெட்டிக்கான தொகை ரூ.1,81,950 /– கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூ.54.22 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை:**

அனைத்து நியாயவிலைக் கடைகளும் தன்னாற்றல் பெற்றவையாகச் செயல்படவேண்டும் என்றும், அனைத்துப் பொருட்களும் கிராமப்புறத்தில் உள்ள பொது மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், கட்டுப்பாடற்ற பொருட்கள் நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2002–03ஆம் ஆண்டிற்கான குறியீடு ரூ.4,500 இலட்சத்தில் விகிதாசாரக் குறியீடான தொகை ரூ.3,000 இலட்சத்தில் 30.11.2002 வரை ரூ 3,987 இலட்சம் எய்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேலம் மாவட்டம் மாநிலத்தில் முதலிடம் வகிக்கிறது. நவம்பர் 2001இல் லாபத்தில் செயல்பட்ட 689 நியாயவிலைக் கடைகள், இவ்விற்பனையால் 30.11.2002இல் 943 நியாயவிலைக் கடைகள் லாபத்தில் செயல்பட்டு வருகிறது.

மூ.நா. கிருட்டிணசாமி,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

### அரசு ஆணையின் சுருக்கம்
### பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஏ) துறை

**அரசு ஆணை (நிலை) எண் : 104 . நாள் 15.06.2001**

நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ள இயலும் வகையில், பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கும் ஒவ்வொரு அலுவலகமும் அந்தத் திட்டங்கள் குறித்த விதிகள் மற்றும் விதிமுறைகளை வெளியிடுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்களிடமிருந்து / அரசு அலுவலர்களிடமிருந்து வரப்பெறும் குறைதீர்க்கும் மனுக்கள் மீது கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு (ஒவ்வொரு அலுவலகமும்) உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

அ) மனுக்கள், வரப்பெற்றமை குறித்து, அவை வரப்பெற்ற நாளிலிருந்து ஐந்து நாட்களுக்குள் ஒப்புகை அளிக்கப்பட வேண்டும்.

ஆ) மனுக்கள் மீது, எந்த வகையிலேனும் 90 (தொண்ணூறு) நாட்களுக்குள் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

இ) மாவட்ட ஆட்சியர்கள் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் அனுசரிப்பதைப் போன்று ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் (அல்லது திங்கட்கிழமை அரசு விடுமுறை நாளாக இருப்பின், அதற்கு அடுத்த வேலை நாளில்) "கோப்புகள் முடிக்கும் வாரம்" நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு மனு மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவு குறித்து மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

ஈ) நிலுவையாக உள்ள மனுக்கள் (இனங்கள்) குறித்து நுணுக்கமாக ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு அரசுச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உ) அவ்வப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கையை நாளது வரையில் கணினி இணையத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட பதிவு செய்ய வேண்டும்.

முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 2002–2003, 2003–2004–ஆம் ஆண்டில் தேனி மாவட்டத்தில் 2000 புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைத்திடவும், இவை இதுநாள் வரை குழுக்கள் அமைக்காத குடியிருப்புகள், தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புகள், மலைவாழ் மக்கள் வாழும் குடியிருப்புகளில் அமைத்திடவும், 2,000 மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கவும், அனைத்துக் குழு உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் பயிற்சியும், 4,000 மகளிருக்கு ஊக்குநர் பிரதிநிதி பயிற்சியும், அளிக்கப்பட உள்ளது. தகுதியுடைய அனைத்து சுயஉதவிக் குழுக்களுக்கும் கடன் இணைப்புப் பெற்றுத் தரவும், 1,600 மகளிருக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சி வழங்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.




இத்திட்டத்தின் கீழ் இதுவரை 188 புதிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்கள் இல்லாத பகுதியில் குடியிருக்கும் மகளிர் 12 முதல் 20 பேர் வரை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பெண்கள் குழுக்களாகத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைத்துச் செயல்பட்டு வருகிறது.

மேலும் புதிதாகத் திருமணமான, சுயஉதவிக்குழு உறுப்பினர் அல்லது உறுப்பினர் மகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புப் பெற்றுத்தர 2001–2002–ஆம் ஆண்டிற்கு 94 குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 46 பயனாளிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிக முக்கியத்துவம் கொடுத்து வருவதற்கு இம்மாவட்டத்திலுள்ள பொது மக்கள் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

- உல. இரவீந்திரன்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.



*கலாச்சேத்ரா சார்பில் நடைபெற்ற ருக்மிணி தேவி அருண்டேல் நூற்றாண்டு விழாவில் குடியரசு துணைத் தலைவர் உயர்திரு. பைரான்சிங் ஷெகாவத் அவர்களும், முன்னாள் குடியரசுத் தலைவரும் கலாச்சேத்ரா பவுண்டேஷன் தலைவருமான திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும், மேதகு தமிழக ஆளுநர் திரு. பெஜீ. ராமமோகன்ராவ் அவர்களும், தமிழக நிதி அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களும் கலந்து கொண்டனர். (1–3–2003)*



Kindly contact for all your requirements in
**Iron, Steel, Hardware items and cement**

**C.R.S. MANNADIAR & BROTHER**
(Established in 1942)
**N.H.Road - Coimbatore - 641 001.**

Grams : "Vigilance"

**Wholesale and Retail**

Office : 2396160
Shop : 2393444
2390537
Godown : 2553079
Residence : 2555745
2555945

***Dealers in :***

- M.S. Rounds
- Tor Steel Rods
- R.S.Joists
- M.S.Channels
- M.S. Angles
- M.S. Flats
- M.S. Plates
- M.S. Sheets
- C.R.Sheets
- G.I. Plain & Corrugated Sheets
- Barbed Wire
- G.I.Wire
- Welded Mesh
- Wiremesh
- Chainlink Fencing
- Aluminium Sheets & Fittings
- Hardboards
- Tarpaulins
- All other Building Materials.

*"Buyers Satisfaction is our motto"*

## ரயில் பயணத்தில்...

மூத்த குடிமக்கள் பயணக் கட்டணச் சலுகை பெறுவது எப்படி?



ரயில் பயணத்தில் சலுகைக் கட்டணம் பெற வயது வரம்பு 60 ஆகும். இது ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தும். அனைத்து வகுப்புப் பயணத்துக்கும் 30% கட்டணச் சலுகையைப் பெறலாம். பயணச் சீட்டுக் கேட்புப் படிவம் பூர்த்தி செய்து கொடுக்கும்போது அதில் வயதைக் குறிப்பிட்டு, சலுகைக் கட்டண வேண்டுகோள் எழுதித் தந்தால் போதுமானது. வயதுச் சான்றுக்காக – ரயிலில் பயணம் செய்யும்போது ஓட்டுநர் உரிமம், பள்ளிச் சான்றிதழ், பாஸ்போர்ட் ஆகிய ஏதேனும் ஒன்றின் நகலை பயணச்சீட்டுப் பரிசோதகரிடம் கட்டாயம் காட்ட வேண்டும்.

பயணச்சீட்டு வாங்கச் செல்லும்போது வயதுச் சான்று காட்டவேண்டிய அவசியமில்லை.

## பொன்மொழிகள்

- பெண்கள் முன்னேற்றத்திற்கு கல்வியறிவு, அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை.
- "தனிமரம் தோப்பு ஆகாது" என்ற பழமொழிக்கிணங்க, பெண்கள் ஒன்று சேர்ந்தால் அவர்களின் பலம் பன்மடங்கு ஆகும்.
- பெண்மை, தாய்மை, இறைமை என்ற மூன்று நிலைகளிலும் பெண்களை மதித்துப் போற்றினால்தான் இந்த உலகம் பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்க முடியும்.

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

226200



JL
V2111m, N70-A
12×14

## தருமபுரி மாவட்டத்தில் பால்மோரோஸ் பயிர் உற்பத்தி!



தருமபுரி மாவட்டம், அரூர் அருகே சென்ட் தயாரிப்பதற்குத் தேவைப்படும் "பால்மோரோஸ்" எண்ணெய்ப் பயிரை விவசாயிகள் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்து வறட்சியிலும் ஒரு புரட்சி செய்து வருகின்றனர்.

தருமபுரி மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலவுவதால் இங்கு விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடிதண்ணீர்கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அரூர் பகுதியில் உள்ள கோட்டப்பட்டி, நரிப்பள்ளி, பையர்நாயக்கன்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயிகள் இந்த வறட்சியிலும் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் "பால்மோரோஸ்" எண்ணெய்ப் பயிர்களை விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்தப் பயிருக்கு தண்ணீர் குறைவாக இருந்தால்போதும், வறட்சியிலும் வளரும். நெல் பயிரை போன்று தோற்றமுடைய இப்பயிர் நெல் நடவு செய்வதைப் போலவே நாற்றுவிட்டு மூன்று மாதம் கழித்து நடவு செய்கிறார்கள்.

இது மூன்று மாதங்கள் கழித்து அறுவடைக்கு வரும், அறுவடைக்குப் பிறகு மீண்டும் அதே பயிர் தழைத்துவரும். அடுத்து இரண்டு மாதங்களிலேயே பலன் தரக்கூடிய வகையில் செழித்து வளரும். மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து பலன் தரக்கூடிய வாசனை மிகுந்தது இந்த "பால்மோரோஸ்" பயிர் வகையாகும்.

இந்தப் பயிரை இரசாயன முறைப்படி பெரிய கொப்பரையில் தண்ணீர் நிரப்பி ஊறவைத்து காய்ச்சவேண்டும். இதிலிருந்து வரும் ஆவியைக் குளிரவைத்து பால்மோரோஸ் என்ற வாசனையுடைய ஆயிலை வெளிமாநிலங்களுக்குக் கொண்டுசென்று ஒரு கிலோ ரூ.475 என விற்பனை செய்து வருகின்றனர்.

ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வரை உற்பத்தி செய்யப்படும். இதை கோவா, கர்நாடகா, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் மதுரை, தென்காசி, பவானி போன்ற இடங்களுக்குக் கொண்டு சென்று ரூ.475 என்று விற்பதுடன் அவர்கள் மேலும் பில்டர் செய்து ஒரு கிலோ ரூ.900 வரை விலை வைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இந்த பால்மோரோஸ் ஆயிலிலிருந்து வாசனைப் பொருட்கள், சென்ட், ஊதுபத்தி போன்ற பலவகை வாசனை திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

தா. மனோகரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ச. நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com


உங்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்

10வது மாத சந்தா இலவசம்

மேலும்

அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்

ரூ. 12,500/- மதிப்புள்ள பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கண்ணி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com Visit us at: www.tn.gov.com

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை


